[illegible]
[illegible]

# [illegible]

# [illegible] 7

[illegible]

[illegible]

# கிறிஸ்துவின் வாழ்வு, 7

## டேவிட் ரோப்பர்

### ஓப்பீடு

91. ரோமச் சிலுவையில் ஆறுமணி நேரங்கள்
(மத். 27:35-56: மாற். 15:24-41: லூக். 23:34-49:
யோவா. 19:23-30)
92. கல்வாரியின் அற்புதங்கள்
(மத்.27:45, 50-54: மாற். 15:33, 37-39:
லூக். 23:44-48: யோவா. 19:28, 30)
93. வரலாற்றில் மிகவும் முக்கியமான மூன்று நாட்கள்
(மத். 27:55-66: 28:1-8: மாற். 15:40-47: 16:1-9:
லூக்.2349-56: 24:1-11, 22-24:
யோவா. 19:3-42: 20:1)
94. விசுவாசிக்கப் போராடுதல்
(மத். 28:9-15: மாற்.16:9-13: லூக்.24:12-35:
யோவா. 20:1-18: 1கொரி.15:5)
95. “உங்களை நம்பச் செய்ய எது தேவை?”
(மாற். 16:14: லூக். 24:36-43: யோவா. 20:19-31: 21:1-24:
அப்.1:3: 1கொரி. 15:5)
96. சென்று வருகிறேன் - மற்றும் ஹலோ!
(மத். 28:16-20: மாற். 16:15-20: லூக். 24:44-53:
யோவா. 20:30, 31:21:25: அப்.1:3-12: 20:35:
1கொரி. 15:6,7)
97. “மகிமையில் எடுத்துக் கொள்ளப்படுதல்”
(மாற். 16:19, லூக். 24:50-53: அப். 1:9-12
98. ராஜா வருகின்றார்!
(அப். 1:10, 11)
படிப்பு உதவிகள்
99. இயேசு சிலுவையில் மரிக்கவேண்டியிருந்தது ஏன்?
100. பிரசங்க குறிப்புகள்: “நீங்கள் அங்கிருந்தீர்கள்?”
101. இயேசு எந்த நாளில் மரித்தார்?
102. சிலுவையின் அருகில் பெண்கள்
பிரசங்கக் குறிப்புகள்: “அவர்….
103. அடக்கம்பண்ணப்பட்டார்”
104. இயேசுவின் உயிர்த்தெழுந்த உடல்
105. உயிர்த்தெழுதல் எதை அறிவிக்கிறது?
106. இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின்போது
எருசலேம்

**படிப்பு உதவிகள், 2**

107. மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?
(லூக்கா 16:19-31)

108. நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?

**படிப்பு உதவிகள், 3**

109. "நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல"
110. மனந்திரும்புங்கள் அல்லது கெட்டுப்போங்கள்!
(லூக்கா 13:1-5)

# ஒப்பீடு

I. *அவரது ஊழியத்திற்கு முன்னதாகக் கிறிஸ்துவின் வாழ்வு.*
   A. *லூக்காவின் முன்னுரை மற்றும் அர்ப்பணிப்பு (லூக்கா 1:1-4).*
   B. *யோவானின் அறிமுகம் (யோவா. 1:1-18).*
   C. *மத்தேயு கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (மத். 1:1-17).*
   D. *லூக்கா கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (லூக். 3:23-38).*
   E. *யோவான் ஸ்நானன் பிறப்பு பற்றி சகரியாவுக்கு தூதனின் அறிவிப்பு (லூக். 1:5-25).*
   F. *இயேசுவின் பிறப்பு பற்றி மரியாளுக்குத் தூதனின் அறிவிப்பு (லூக். 1:26-38).*
   G. *(கர்ப்பவதியாயிருந்த இயேசுவின் தாயார்) மரியாள், (கர்ப்பவதியாயிருந்த யோவான் ஸ்நானனின் தாயார்) எலிசபெத்தைச் சந்தித்தல் (லூக். 1:39-56).*
   H. *யோவான் ஸ்நானனின் பிறப்பும், அவரது தொடக்க கால வாழ்வும் (லூக். 1:57-80).*
   I. *இயேசுவின் வருகை பற்றி யோசேப்புக்கு அறிவிப்பு (மத். 1:18-25).*
   J. *இயேசுவின் பிறப்பு (லூக். 2:1-7).*
   K. *இயேசுவின் பிறப்பு மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்படுதல் (லூக். 2:8-20).*
   L. *இயேசுவுக்கு விருத்தசேதனம் மற்றும் பெயரிடுதல்; தேவாலய ஆராதனை (லூக். 2:21-39).*
   M. *கிழக்கிலிருந்து ஞானிகளால் இயேசு சந்திக்கப்படுதல் (மத். 2:1-12).*
   N. *எகிப்துக்கு ஓடிப்போகுதலும் பெத்லகேமில் ஆண் குழந்தைகள் கொல்லப்படுதலும் (மத். 2:13-18).*
   O. *குழந்தை இயேசு எகிப்தில் இருந்து நாசரேத்தூருக்குக் கொண்டு வரப்படுதல் (மத். 2:19-23; லூக். 2:39ஆ வைக் காணவும்).*
   P. *இயேசு நாசரேத்தூரில் வாழ்தல்; அவரது பன்னிரெண்டு வயதில் எருசலேமுக்கு ஒரு பயணம் (லூக். 2:40-52).*

II. *யோவான் ஸ்நானனின் ஊழியம் ஆரம்பித்தல்.*
   A. *யோவானின் ஊழியம் (மத். 3:1-6; மாற். 1:1-6; லூக். 3:1-6).*
   B. *யோவானின் செய்தி (மத். 3:7-12; மாற். 1:7, 8; லூக். 3:7-18).*

III. *இயேசுவின் ஊழியம் ஆரம்பித்தல்.*

A. *யோர்தான் நதியில் யோவானிடம் இயேசு ஞானஸ்நானம் பெறுதல் (மத். 3:13-17; மாற். 1:9-11; லூக். 3:21, 22; யோவா. 1:31-34).*

B. *வனாந்தரத்தில் இயேசு சோதிக்கப்படுதல் (மத். 4:1-11; மாற். 1:12, 13; லூக். 4:1-13).*

C. *இயேசுவைப் பற்றி யோவானின் சாட்சியம் (யோவா. 1:19-34).*

D. *(யூதேயாவில்) இயேசுவின் முதல் சீஷர்கள் (யோவா. 1:35-51).*

E. *(கலிலேயாவின் கானாவூரில்) இயேசுவின் முதல் அற்புதம் (யோவா. 2:1-11).*

F. *(கலிலேயாவின்) கப்பர்நகூமில் இயேசு முதலில் தங்குதல் (யோவா. 2:12).*

IV. *முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை.*

A. *இயேசுவின் ஊழிய காலத்தில் வந்த முதல் பஸ்கா.*

1. *தேவாலயத்தைச் சுத்திகரித்தல் (யோவா. 2:13-25).*
2. *நிக்கொதேமுவுக்குப் போதித்தல் (யோவா. 3:1-21).*

B. *யூதேயாவில் முதல் ஊழியம் (மற்றும் யோவானாலும் மேலும் சாட்சி கொடுக்கப்படுதல்) (யோவா. 3:22-36).*

C. *யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு மாறுதல்.*

1. *கடந்து செல்லுதலுக்கான காரணங்கள் (மத். 4:12; மாற். 1:14; லூக். 3:19, 20; யோவா. 4:1-3).*
2. *சமாரியாவில் நடந்த சம்பவம் (யோவா. 4:4-42).*
3. *கலிலேயா வந்து சேருதல் (லூக். 4:14; யோவா. 4:43-45).*

D. *கலிலேயாவில் இயேசுவின் போதனை பற்றிய ஒரு பொதுவான விவரம் (மத். 4:17; மாற். 1:14, 15; லூக். 4:14, 15).*

E. *கானாவூரில் இரண்டாவது அற்புதம் (யோவா. 4:46-54).*

F. *கலிலேயாவின் கப்பர்நகூமுக்கு மாறுதல் (மத். 4:13-16).*

G. *நான்கு மீனவர்களை அழைத்தல் (மத். 4:18-22; மாற். 1:16-20; லூக். 5:1-11).*

H. *கப்பர்நகூமில்: ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவிபிடித்த ஒருவரைக் குணமாக்குதல் (மாற். 1:21-28; லூக். 4:31-37).*

I. *கப்பர்நகூமில்: பேதுருவின் மாமியும் மற்றவர்களும் குணமாக்கப்படுதல் (மத். 8:14-17; மாற். 1:29-34; லூக். 4:38-41).*

J. *கலிலேயாவில்; இயேசுவின் முதல் போதனை மற்றும் குணமாக்குதலின் பயணம் (மத். 4:23-25; மாற். 1:35-39; லூக். 4:42-44).*

K. *கலிலேயாவில்: ஒரு தொழுநோயாளியைக் குணமாக்குதல் - மற்றும் அதன் விளைவாக உணர்வெழுச்சி ஏற்படுதல் (மத். 8:2-4; மாற். 1:40-45; லூக். 5:12-16).*
L. *கப்பர்நகூமுக்குத் திரும்புதல்: திமிர்வாதம் கொண்ட ஒருவரைக் குணமாக்குதல் (மத். 9:2-8; மாற். 2:1-12; லூக். 5:17-26).*
M. *கப்பர்நகூமுக்கு அருகில்: மத்தேயுவை அழைத்தல் (மத். 9:9; மாற். 2:13, 14; லூக். 5:27, 28).*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை.*
A. *இயேசு, சப்பாணியாயிருந்த ஒரு மனிதரை ஓய்வுநாளில் குணமாக்கி அச்செயலைத் தற்காத்தார் (யோவா. 5:1-47).*
B. *இயேசு, ஓய்வுநாளில் கதிர்கொய்த தமது சீஷர்களைத் தற்காத்தார் (மத். 12:1-8; மாற். 2:23-28; லூக். 6:1-5).*
C. *இயேசு, சூம்பின கையுடைய ஒரு மனிதரை ஓய்வுநாளில் குணமாக்கி தற்காத்தார் (மத். 12:9-14; மாற். 3:1-6; லூக். 6:6-11).*
D. *இயேசு, கலிலேயாக் கடலுக்கு அப்பால் திரளான கூட்டத்தாரைக் குணமாக்கினார் (மத். 12:15-21; மாற். 3:7-12).*
E. *ஜெபத்திற்குப் பின்பு இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார் (மத். 10:2-4; மாற். 3:13-19; லூக். 6:12-16).*
F. *மலைப் பிரசங்கம்.*
1. *அறிமுகக் கூற்றுக்கள் (மத். 5:1, 2; லூக். 6:17-20).*
2. *பாக்கிய வசனங்கள்: மேசியாவின் பிரஜைகளுக்கான வாக்குத்தத்தங்கள் (மத். 5:3-12; லூக். 6:20-26).*
3. *மேசியாவின் பிரஜைகளினுடைய செல்வாக்கு (மற்றும் பொறுப்புகள்) (மத். 5:13-16).*
4. *மேசியாத்துவ பழைய ஏற்பாட்டு போதனைக்கும் - மற்றும் பழைய ஏற்பாட்டு போதனை பற்றி மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களுக்குள்ள உறவு (மத். 5:17-48; லூக். 6:27-30, 32-36).*
5. *மதரீதியான செயல்கள் காட்சிக்காக அல்ல ஆனால் இருதயத்தில் இருந்தே வருவதாயிருக்க வேண்டும் (மத். 6:1-18).*
6. *பரலோக பொக்கிஷங்களின் பாதுகாப்பானது பூமிக்கு உரிய பெருங்கவலைகளுடன் நேர்மாறாக ஒப்பிடப்பட்டது (மத். 6:19-34).*
7. *தீர்க்கப்படுதல் பற்றிய போதனை (மத். 7:1-6; லூக். 6:37-42).*
8. *ஜெபத்தைப் பற்றிய போதனை (மத். 7:7-11).*

9. *பொன் விதி (மத். 7:12; லூக். 6:31).*
10. *இரண்டு வழிகள் - மற்றும் கள்ளத் தீர்க்கதரிசிகள் (மத். 7:13-23; லூக். 6:43-45).*
11. *முடிவுரையும் பயன்பாடும் (கட்டுபவர்கள் இரண்டு பேர்) (மத். 7:24-29; லூக். 6:46-49).*

G. *நூற்றுக்கு அதிபதியொருவரின் வேலையாள் குணமாகுதல் (மத். 8:1, 5-13; லூக். 7:1-10).*

H. *ஒரு விதவையின் மகன் உயிருடன் எழுப்பப்படுதல் (லூக். 7:11-17).*

I. *யோவான் ஸ்நானனுக்குப் பதில் அளித்தல் (மத். 11:2-30; லூக். 7:18-35).*

J. *இயேசுவின் பாதங்கள் அபிஷேகம் செய்யப்படுதல் (லூக். 7:36-50).*

K. *கலிலேயாவில் இரண்டாவது பயணம் (லூக். 8:1-3).*

L. *தேவதூஷணக் குற்றம் சாட்டப்படுதல்கள் (மத். 12:22-37; மாற். 3:20-30; லூக். 11:14-23).*

M. *அடையாளம் தேடுபவர்கள் (மத். 12:38-45; லூக். 11:16, 24-26, 29-36).*

N. *இயேசுவின் குடும்பம் (மத். 12:46-50; மாற். 3:31-35; லூக். 8:19-21; 11:27, 28).*

O. *உவமைகளின் முதல் மாபெரும் தொகுப்பு.*
1. *நிகழ்வுவேளையும் அமைவும் (மத். 13:1-3; மாற். 4:1, 2; லூக். 8:4).*
2. *விதைப்பவன் உவமையும் விளக்கமும் (மத். 13:3-23; மாற். 4:3-25; லூக். 8:5-18).*
3. *மறைவான வளர்ச்சியின் உவமை (மாற். 4:26-29).*
4. *களைகளின் உவமை (மத். 13:24-30).*
5. *கடுகு விதை, புளித்தமா ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:31-35; மாற். 4:30-34).*
6. *களைகளின் உவமை விளக்கப்படுதல் (மத். 13:36-43).*
7. *பொக்கிஷம், முத்து ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:44-46).*
8. *மீன்பிடி வலையின் உவமை (மத். 13:47-53).*

P. *புயலை அமர்த்துதல் (மத். 8:18, 23-27; மாற். 4:35-41; லூக். 8:22-25).*

Q. *அசுத்த ஆவி பிடித்த இருவரைக் குணமாக்குதல் (மத். 8:28-34; 9:1; மாற். 5:1-21; லூக். 8:26-40).*

R. *பாவிகளுடன் உண்ணுதல் (மற்றும் உபவாசித்தல் பற்றிய உரை) (மத். 9:10-17; மாற். 2:15-22; லூக். 5:29-39).*

S. *யாவீருவின் மகளை உயிர்ப்பித்தல் (மற்றும் பெரும்பாடு உள்ள ஒரு பெண்ணைக் குணமாக்குதல்) (மத். 9:18-26; மாற். 5:22-43; லூக். 8:41-56).*

T. *பார்வையற்றவரையும் அசுத்த ஆவி பிடித்தவரையும் குணமாக்குதல் (மற்றும் விமர்சிக்கப்படுதல்) (மத். 9:27-34).*
U. *நாசரேத்தூருக்கு வருதல் (மற்றும் புறக்கணிக்கப்படுதல்) (மத். 13:54-58; மாற். 6:1-6; லூக். 4:16-31).*
V. *கலிலேயாவுக்கு இயேசுவின் மூன்றாம் பயணம் (மற்றும் பன்னிருவருக்கு அறிவுறுத்துதல்) (மத். 9:35-38; 10:1-42; 11:1; மாற். 6:6-13; லூக். 9:1-6).*
W. *இயேசுவின்மீது ஏரோதுவின் ஆர்வம் (மற்றும் யோவான் ஸ்நானனின் மரணம் பற்றிய விவரம்) (மத். 14:1-12அ; மாற். 6:14-29; லூக். 9:7-9).*
X. *ஏரோதுவின் ஆளுகைப் பகுதியில் இருந்து இயேசு விலகிச் செல்லுதல் (மற்றும் திரும்பி வருதல்).*
   1. *பன்னிருவர் திரும்பி வருதலும் கலிலேயாக் கடலின் கிழக்குக் கரைப் பகுதிக்குப் போய் ஓய்வெடுத்தலும் (மத். 14:12ஆ, 13; மாற். 6:30-32; லூக். 9:10; யோவா. 6:1).*
   2. *ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (மத். 14:13-21; மாற். 6:33-44; லூக். 9:11-17; யோவா. 6:2-14).*
   3. *தண்ணீரின்மீது நடத்தல் (மத். 14:22-36; மாற். 6:45-56; யோவா. 6:15-21அ).*
Y. *ஜீவ அப்பம் பற்றி இயேசுவின் உரை (மற்றும் பேதுருவின் அறிக்கை) (யோவா. 6:21ஆ-71).*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை.*
A. *மூன்றாவது பஸ்கா (யோவா. 6:4; 7:1ஐக் காணவும்).*
B. *பாரம்பரியத்தை மதிக்கவில்லை என்று கடிந்து கொள்ளப்படுதல் (மத். 15:1-20; மாற். 7:1-23).*
C. *ஏரோதுவின் எல்லைப் பகுதியிலிருந்து விலகிச் செல்லுதல் (மத். 15:21; மாற். 7:24).*
D. *பெனிக்கியா (அல்லது கானானிய) பெண் ஒருத்தியின் மகளைக் குணமாக்குதல் (மத். 15:22-28; மாற். 7:25-30).*
E. *ஏரோதுவின் எல்லையைத் தவிர்த்தல் (மத். 15:29; மாற். 7:31).*
F. *காது கேளாதவர் உட்படப் பலரைக் குணமாக்குதல் (மத். 15:30, 31; மாற். 7:32-37).*
G. *நான்காயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (மத். 15:32-39அ; மாற். 8:1-9).*
H. *ஏரோதுவின் எல்லைப் பகுதியில் இருந்து இன்னொரு விலகிச் செல்லுதல்.*
   1. *கலிலேயாவில்: இயேசுவின் விரோதிகளால் இன்னொரு தாக்குதல் - அதைத் தொடர்ந்து*

இன்னொரு பின்வாங்குதல் (மத். 15:39ஆ-16:12; மாற். 8:10-21).

2. பெத்சாயிதாவில்: பார்வையற்ற ஒரு மனிதர் குணமாக்கப்படுதல் (மாற். 8:22-26).
3. பிலிப்புச் செசரியாவின் அருகில்: நல்ல அறிக்கை (மத். 16:13-20; மாற். 8:27-30; லூக். 9:18-21).
4. பிலிப்புச் செசரியாவின் அருகில்: இயேசுவின் மரணம் முன்னுரைக்கப் பட்டது (மத். 16:21-28; மாற். 8:31-38; லூக். 9:22-27).
5. பிலிப்புச் செசரியாவின் அருகில் (எர்மோன் மலைமீது?): மறுரூபமாகுதல் (மத். 17:1-13; மாற். 9:2-13; லூக். 9:28-36).
6. அசுத்த ஆவிபிடித்த ஒரு பையனைக் குணமாக்குதல் (மத். 17:14-21; மாற். 9:14-29; லூக். 9:37-43).
7. கலிலேயாவுக்குத் திரும்புதல் (இயேசுவின் மரணம் மீண்டும் முன்னுரைக்கப்பட்டது) (மத். 17:22, 23; மாற். 9:30-32; லூக். 9:43-45).

I. தேவாலய வரியைப் பற்றிய கேள்வி (மத். 17:24-27).

J. சிறுபிள்ளையைப் போலிருத்தலின் அவசியத்தைப் பற்றிப் போதித்தல் (மத். 18:1-14; மாற். 9:33-50; லூக். 9:46-50).

K. கலிலேயாவில் கடைசி போதனை: சகோதரர்களுக்கு இடையில் பிரச்சனைகள் (மத். 18:15-35).

L. யூதேயாவுக்கு ஊழியம் திருப்பப்படுதல் (யோவா. 7:1; மத். 19:1 ஆகியவற்றைக் காணவும்).

1. இயேசு தமது சகோதரர்களால் கூடாரங்களின் பண்டிகைக்குச் செல்லும்படி வற்புறுத்தப்படுதல் (யோவா. 7:2-9).
2. இயேசு எருசலேமுக்கு அந்தரங்கமாகச் செல்லுதல் (லூக். 9:51-56; யோவா. 7:10).
3. வழியில்: சீஷத்துவம் பற்றிப் போதித்தல் (லூக். 9:57-62; மத். 8:19-22ஐக் காணவும்).

M. எருசலேமில்: கூடாரங்களின் பண்டிகை.

1. பண்டிகையின் நடுவில்: தேவாலயத்தில் போதித்தல் (யோவா. 7:11-36).
2. பண்டிகையின் கடைசி நாளில்: ஜீவத் தண்ணீர் பற்றிப் போதித்தல் (யோவா. 7:37-52).
3. பண்டிகைக்குப் பின்பு: கூடுதல் போதனை.
   a. விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு பெண் (யோவா. 7:53-8:11).
   b. வெளிச்சம் மற்றும் இருள் பற்றிய போதனை (யோவா. 8:12-59).
   c. உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய பார்வையற்ற

*தன்மைகள் பற்றிய போதனை (யோவா. 9:1-41).*

d. *நல்ல மேய்ப்பன் மற்றும் கூலியாட்கள் பற்றிய போதனை (யோவா. 10:1-21).*

N. *யூதேயாவில் பிந்திய கால ஊழியம்.*

1. *இயேசுவும் எழுபது பேர்களும் (லூக். 10:1-24).*
2. *இயேசுவும் ஒரு நியாய சாஸ்திரியும் (நல்ல சமாரியனின் உவமை) (லூக். 10:25-37).*
3. *இயேசு, மரியாள் மற்றும் மார்த்தாள் (லூக். 10:38-42).*
4. *இயேசுவும் அவரது சீஷர்களும் (ஜெபத்தின்மீதான போதனை) (லூக். 11:1-13).*
5. *இயேசுவும் ஒரு பரிசேயரும் (லூக். 11:37-54).*
6. *இயேசுவும் திரளான கூட்டத்தாரும் (லூக். 12:1, 13, 54; 13:1 ஆகிய வசனங்களைக் காணவும்).*
   a. *மாய்மாலம் பற்றிய போதனை (லூக். 12:1-12).*
   b. *பொருள்முதல்வாதம் பற்றி போதனை (லூக். 12:13-34).*
   c. *விழித்திருத்தல் பற்றிய போதனை (லூக். 12:35-48).*
   d. *வரவிருந்த துன்பம் பற்றிய போதனை (லூக். 12:49-59).*
   e. *மனந்திரும்புதல் பற்றிய போதனை (லூக். 13:1-9).*
7. *இயேசுவும் வியாதிப்பட்டிருந்த ஒரு பெண்ணும் (ஓய்வுநாள் பற்றி வாக்குவாதம்) (லூக். 13:10-21).*

O. *பிரதிஷ்டையின் பண்டிகை (லூக். 13:22; யோவா. 10:22).*

1. *அவரது விரோதிகளுடன் முரண்பாடு தொடருதல் (யோவா. 10:23-30).*
2. *அவரைக் கொலை செய்யும் முயற்சிகள் தொடருதல் (லூக். 10:31-39).*

P. *பெரேயாவில் ஊழியம்.*

1. *"யோர்தானுக்கு அப்பால்" இயேசுவின் ஊழியம் (மத். 19:1, 2; மாற். 10:1; யோவா. 10:40-42; ஐக் காணவும்).*
2. *இயேசு கேள்வி கேட்கப்பட்டு எச்சரிக்கப்படுதல் (லூக். 13:23-35).*
3. *இயேசு, பரிசேயர் ஒருவரின் வீட்டிற்கு அழைக்கப்படுதல் - மற்றும் விருந்துகள் பற்றி ஏற்புடைய மூன்று பாடங்கள் (லூக். 14:1-24).*
   a. *தாழ்மையின் பாடம் (லூக். 14:7-11).*
   b. *சுயநலமின்மையின் பாடம் (லூக். 14:12-14).*
   c. *மாபெரும் விருந்து பற்றிய உவமை (லூக். 14:16-24).*
4. *இயேசு திரளான கூட்டத்தாரால் பின்பற்றப்படுதல் - மற்றும் முக்கியமான ஒரு பாடம் (லூக். 14:25-35).*

5. இயேசு, ஆயக்காரர்களாலும் பாவிகளாலும் பின்பற்றப்படுதல் - மற்றும் ஒரு பாடத்தைப் போதிக்க மனதைத் தொடும் மூன்று கதைகள்/உவமைகள் (லூக். 15:1-32).
    a. காணாமற் போன ஆடு (லூக். 15:3-7).
    b. காணாமற் போன காசு (லூக். 15:8-10).
    c. காணாமற் போன மகன் (லூக். 15:11-32).
6. இயேசு தமது சீஷர்களின் துணையுடன் செல்லுதல் - மற்றும் அநீதியான உக்கிராணக்காரன் பற்றிய உவமையிலிருந்து வலிவார்ந்த ஒரு பாடம் (லூக். 16:1-13).
7. இயேசு பரிசேயர்களால் கவனிக்கப்படுதல் - மற்றும் லாசரு, ஐசுவரியவான் "உவமையில்" இருந்து தெளிவான ஒரு பாடம் (லூக். 16:14-31).
8. பலவகைப் போதனைகள் (லூக். 17:1-10).

Q. பெத்தானியாவுக்கு.
1. லாசருவை எழுப்புதல் (யோவா. 11:1-46).
2. சனதெரீனின் கட்டளை (யோவா. 11:47-53).

R. பலஸ்தீனத்தில் கடைசிப் பயணம்.
1. எப்பிராயீமில் ஓய்வு (யோவா. 11:54).
2. சமாரியா கலிலேயா ஊடாக (லூக். 17:11ஆ).

S. எருசலேமுக்குக் கடைசிப் பயணம் (லூக். 17:11அ).
1. பத்து தொழுநோயாளிகளைக் குணமாக்குதல் (லூக். 17:12-19).
2. இராஜ்யத்தைப் பற்றிப் போதித்தல் (லூக். 17:20-37).
3. ஜெபம் பற்றிய உவமைகள்.
    a. விடாமுயற்சியான விதவையின் உவமை (லூக். 18:1-8).
    b. பரிசேயன் மற்றும் ஆயக்காரனின் உவமை (லூக். 18:9-14).
4. திருமணமுறவு பற்றிய கேள்விகள் - மற்றும் திருமணம் பற்றிய போதனை (மத். 19:3-12; மாற். 10:2-12).
5. பிள்ளைகள் பற்றிய தவறான புரிந்து கொள்ளுதல் - மற்றும் பிள்ளையைப் போலிருத்தல் பற்றிய போதனை (மத். 19:13-15; மாற். 10:13-16; லூக். 18:15-17).
6. நித்திய ஜீவனைப் பற்றிய ஒரு கேள்வி - மற்றும் செல்வங்கள்மீதான போதனை (செல்வந்தனான இளம் அதிகாரியைப் பற்றிய கதை) (மத். 19:16-26; மாற். 10:17-27; லூக். 18:18-27).
7. பலன்கள் பற்றிய கேள்வி - மற்றும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் பற்றிய போதனை (மத். 19:27-30; மாற். 10:28-31; லூக். 18:28-30), திராட்ச தோட்டத்தில்

வேலையாட்களைப் பற்றிய உவமையும் அடங்கும் (மத். 20:1-16).

8. வரவிருந்த அவரது மரணம் பற்றி சீஷர்களுக்கு அவரது முன்னெச்சரிக்கை (மத். 20:17-19; மாற். 10:32-34; லூக். 18:31-34).
9. ஊழியத்துவம் பற்றி அவரது சீஷர்களுக்குப் போதித்தல் (மத். 20:20-28; மாற். 10:35-45).
10. பர்த்திமேயுவையும் அவரது கூட்டாளியையும் பார்வையின்மையிலிருந்து குணமாக்குதல் (மத். 20:29-34; மாற். 10:46-52; லூக். 18:35-43).
11. சகேயுவை பொருளாசையிலிருந்து இரட்சித்தல் (லூக். 19:1-10).
12. தமது சீஷர்களைத் திருத்துதல் - மினாக்கள் (அல்லது "இராத்தல்களின்") உவமை (லூக். 19:11-27).

VII. இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம்.

A. வெள்ளிக்கிழமை பிற்பகல்: பெத்தானியாவுக்கு வருதல் (யோவா. 11:55-12:1).
B. சனிக்கிழமை மாலை: பெத்தானியாவில் ஒரு விருந்து (மத். 26:6-13; மாற். 14:3-9; யோவா. 12:2-11).
C. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்: எருசலேமுக்குள் வெற்றிப் பிரவேசம் (மத். 21:1-11; மாற். 11:1-11; லூக். 19:29-44; யோவா. 12:12-19).
D. திங்கட்கிழமை: அத்திமரத்தை சபித்தல், தேவாலயத்தைச் சுத்திகரித்தல், பார்வையற்றவரையும் கால் ஊனமானவரையும் குணமாக்குதல் (மத். 21:12-19; மாற். 11:12-19; லூக். 19:45-48; 21:37, 38).
E. செவ்வாய்க்கிழமை: "கேள்விகளின் பெரியநாள்."
   1. அறிமுகம்: காய்ந்துபோன அத்திமரம் (மத். 21:20-22; மாற். 11:20-26).
   2. அதிகாரத்துவம் பற்றிய கேள்வி:
      a. கேள்வியும் இயேசுவின் பதிலும் (மத். 21:23-27; மாற். 11:27-33; லூக். 20:1-8).
      b. அவரது பதிலில் ஒரு பகுதி: மூன்று உவமைகள்.
         (1) இரண்டு மகன்கள் பற்றிய உவமை (மத். 21:28-32).
         (2) பொல்லாத குத்தகைக்காரர்கள் பற்றிய உவமை (மத். 21:33-46; மாற். 12:1-12; லூக். 20:9-19).
         (3) அரசர் மகனின் திருமண விருந்து பற்றிய உவமை (மத். 22:1-14).
   3. கேள்விகளின் வரிசைத் தொடர்:

a. *வரிசெலுத்துதல் பற்றிப் பரிசேயர்களும் ஏரோதியர்களும் கேள்வி கேட்டல் (மத். 22:15-22; மாற். 12:13-17; லூக். 20:20-26).*
b. *உயிர்த்தெழுதல் பற்றிச் சதுசேயர்கள் கேள்வி கேட்டல் (மத். 22:23-33; மாற். 12:18-27; லூக். 20:27-39).*
c. *பிரதான கட்டளையைப் பற்றி ஒரு நியாயசாஸ்திரி கேள்வி கேட்டல் (மத். 22:34-40; மாற். 12:28-34; லூக். 20:40).*
d. *"கிறிஸ்து" வைப் பற்றி இயேசு கேட்கின்றார் (மத். 22:41-46; மாற். 12:35-37; லூக். 20:41-44).*

4. *வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள்மீது கிறிஸ்துவின் சாபம் (மத். 23:1-39; மாற். 12:38-40; லூக். 20:45-47).*
5. *ஒரு விதவையின் காணிக்கை (மாற். 12:41-44; லூக். 21:1-4).*
6. *திரளான கூட்டத்தாருக்கு ஒரு உரை.*
   a. *இயேசு புறஜாதியாரால் தேடப்படுதல் (யோவா. 12:20-22).*
   b. *இயேசுவுக்கு வரவிருந்த மரணம் - யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்ற இருதிறத்தாருக்குமானது (யோவா. 12:23-36).*
   c. *இயேசு யூதர்களால் புறக்கணிக்கப்படுதல் (யோவா. 12:37-50).*
7. *எருசலேமின் அழிவு மற்றும் இரண்டாம் வருகை பற்றி அப்போஸ்தலர்களுக்கு உரை.*
   a. *விளக்கங்களும் வினாக்களும் (மத். 24:1-3; மாற். 13:1-4; லூக். 21:5-7).*
   b. *எருசலேமின் அழிவு பற்றிய போதனை.*
      (1) *எருசலேமின் அழிவுடன் தொடர்பற்ற நிகழ்ச்சிகள் (மத். 24:4-14; மாற். 13:5-15; லூக். 21:8-19).*
      (2) *எருசலேமின் அழிவுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகள் (மத். 24:15-35; மாற். 13:14-31; லூக். 21:20-36).*
   c. *இரண்டாம் வருகை பற்றிய போதனை.*
      (1) *பொதுவான போதனை.*
         (a) *இரண்டாவது வருகை அறிவிக்கப்படாததாக இருத்தல் (மக். 24:36-41; மாற். 13:32).*
         (b) *தயாராக நிலைத்திருத்தலின் அவசியம் (மத். 24:42-51; மாற். 13:33-37).*
      (2) *உவமைகளும் தொடர்பான போதனையும்:*

(a) *பத்துக் கன்னிகைகள் (மத். 25:1-13).*

(b) *தாலந்துகள் (மத். 25:14-30).*

(c) *செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் (மத். 25:31-46).*

F. *புதன்கிழமை: புயலுக்கு முன் அமைதி.*

1. *இயேசு: ஆயத்தமாகுதல் (மத். 26:1, 2; யோவா. 13:1).*
2. *சனதெரீன்: சூழ்ச்சி செய்தல் (மத். 26:3-5; மாற். 14:1, 2; லூக். 22:1, 2).*
3. *யூதாஸ்: காட்டிக்கொடுத்தல் (மத். 26:14-16; மாற். 14:10, 11; லூக். 22:3-6).*

G. *வியாழக்கிழமை: பஸ்காவுக்கு ஆயத்தம் செய்தல் (மத். 26:17-19; மாற். 14:12-16; லூக். 22:7-13).*

H. *வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள்.*

1. *கடைசி இராப்போஜனம்.*
   a. *பஸ்கா ஆசரிக்கப்படுதல் (மத். 26:20; மாற். 14:17, 18; லூக். 22:14-18).*
   b. *வாக்குவாதம் கடிந்துகொள்ளப்படுதல் (லூக். 22:24-30).*
   c. *தாழ்மை செயல்விளக்கப்படுத்தப்படுதல் (யோவா. 13:2-20).*
   d. *காட்டிக்கொடுத்தல்/மறுதலித்தல் ஆகியவை முன்னுரைக்கப்படுதல் (மத். 26:21-25, 31-35; மாற். 14:18-21, 27-31; லூக். 22:21-23, 31-38; யோவா. 13:21-38).*
   e. *கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்படுதல் (மத். 26:26-29; மாற். 14:22-25; லூக். 22:19, 20; 1 கொரி. 11:23-26).*
   f. *அப்போஸ்தலர்கள் உற்சாகப்படுத்தப்படுதல் மற்றும் எச்சரிக்கப்படுதல் (யோவா. 14:1-16:33).*
   g. *பிதாவிடம் மன்றாடுதல் (யோவா. 17:1-26).*
2. *கெத்செமனே தோட்டம் (மத். 26:30, 36-46; மாற். 14:26, 32-42; லூக். 22:39-46; யோவா. 18:1).*
3. *காட்டிக் கொடுக்கப்படுதல் மற்றும் கைதாகுதல் (மத். 26:47-56; மாற். 14:43-52; லூக். 22:47-53; யோவா. 18:2-11).*
4. *யூதர்களால் "விசாரிக்கப்படுதல்" (முதல் மற்றும் இரண்டாம் நிலைகள்):*
   a. *முதல் நிலை: அன்னாவினால் சோதிக்கப்படுதல் (யோவா. 18:12-14, 19-23).*
   b. *இரண்டாம் நிலை: காய்பா மற்றும் சனதெரீன் சங்கத்தாரால் ஆக்கினைத் தீர்ப்பிடப்படுதல் (மத். 26:57, 59-68; மாற். 14:53, 55-65; லூக். 22:54அ,*

*63-65; யோவா. 18:24).*

5. *பேதுருவினால் மறுதலிக்கப்படுதல் (மத். 26:58, 69-75; மாற். 14:54, 66-72; லூக். 22:54ஆ-62; யோவா. 18:15-18, 25-27).*
6. *யூதர்களால் "விசாரிக்கப்படுதல்" (மூன்றாம் நிலை): சனதெரீன் சங்கத்தாரால் தண்டனை விதிக்கப்படுதல் (மத். 27:1, 2; மாற். 15:1; லூக். 22:66-23:1; யோவா. 18:28).*
7. *ரோமர்களால் விசாரிக்கப்படுதல்:*
   a. *முதல் நிலை: பிலாத்துவுக்கு முன்பாக (குற்றம் அறியாதவராகக் காணப்படுதல்) (மத். 27:11-14; மாற். 15:2-5; லூக். 23:2-7; யோவா. 18:28-38).*
   b. *இரண்டாம் நிலை: ஏரோது அந்திப்பாவுக்கு முன்பாக (குற்றம் இல்லாதவராகக் காணப்படுதல்) (லூக். 23:8-12).*
   c. *மூன்றாம் நிலை: பிலாத்துவுக்கு முன்பாக (மரண தண்டனை விதிக்கப்படுதல்) (மத். 27:15-31அ; மாற். 15:6-20அ; லூக். 23:13-25; யோவா. 18:39-19:16).*
8. *யூதாஸின் மரணம்: தற்கொலை (மத். 27:3-10; அப். 1:18, 19).*
9. *இயேசுவின் மரணம்: சிலுவையில் அறையப்படுதல்.*
   a. *சிலுவைக்குப் பயணம் (மத். 27:31ஆ-34; மாற். 15:20ஆ-22; லூக். 23:26-33; யோவா. 19:17).*
   b. *சிலுவையில் முதல் மூன்று மணி நேரங்கள் (தொடங்கினது) (மத். 27:3-10, 31ஆ-35, 37-39; மாற். 15:20ஆ-29; லூக். 23:26-33, 38; யோவா. 19:17-22; அப். 1:18, 19).*
   c. *சிலுவையில் முதல் மூன்று மணி நேரங்கள் (தொடர்ச்சி) (மத். 27:35, 36, 39-44; மாற். 15:24, 29-32; லூக். 23:34-37, 39-43; யோவா. 19:23-27).*
   d. *சிலுவையில் கடைசி மூன்று மணி நேரங்கள் (மத். 27:45-56; மாற். 15:33-41; லூக். 23:44-49; யோவா. 19:28-30).*
10. *இயேசுவின் சரீரம் அடக்கம் செய்யப்படுதல்.*
    a. *அவரது மரணம் கண்ணோக்கப்பட்டது (மத். 27:55, 56; மாற். 15:40, 41; லூக். 23:49).*
    b. *அவரது மரணம் உறுதிப்படுத்தப்பட்டது (யோவா. 19:31-37).*
    c. *அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது (மத். 27:57-60; மாற். 15:42-46; லூக். 23:50-54; யோவா. 19:38-42).*

d. *அவரது அடக்கம் கண்ணோக்கப்பட்டது (மத். 27:61; மாற். 15:47; லூக். 23:55, 56அ).*

I. *சனிக்கிழமை: இயேசுவின் மரணத்திற்கு அடுத்த நாள்.*

1. *அவரது சீஷர்கள்: பயந்திருத்தல் (லூக். 23:56ஆ; யோவா. 20:19அ-வைக் காணவும்).*
2. *அவரது விரோதிகள்: பரபரப்பாயிருத்தல் (மத். 27:62-66).*

VIII. *இயேசுவின் உயிர்த்தெழுதல், தரிசனங்கள் மற்றும் பரத்துக்கேறுதல்.*

A. *ஞாயிற்றுக்கிழமை: இயேசு உயிர்த்தெழுந்த நாள்.*

1. *வெறுமையான கல்லறை.*
   a. *பெண்களும் வெறுமையான கல்லறையும் (மத். 28:1-8; மாற். 16:1-9; லூக். 24:1-11; லூக். 24:22-24; யோவா. 20:1ஐக் காணவும்).*
   b. *இரண்டு அப்போஸ்தலர்களும் வெறுமையான கல்லறையும் (லூக். 24:12; யோவா. 20:1-10; லூக். 24:24ஐக் காணவும்).*
2. *முதல் தரிசனம்: மகதலேனா மரியாளுக்கு (மாற். 16:9-11; யோவா. 20:11-18; லூக். 24:10ஐக் காணவும்).*
3. *இரண்டாம் தரிசனம்: மற்ற பெண்களுக்கு (மத். 28:9-11அ; வ. 1, 5-8ஐக் காணவும்).*
4. *ஒரு அறிக்கையும் ஒரு பொய்யும் (மத். 28:11-15).*
5. *மூன்றாம் தரிசனம்: பேதுருவுக்கு (1 கொரி. 15:5; லூக். 24:34ஐக் காணவும்).*
6. *நான்காம் தரிசனம்: கிலெயோப்பாவுக்கும் இன்னொருவருக்கும் (மாற். 16:12, 13; லூக். 24:13-35).*
7. *ஐந்தாம் தரிசனம்: அப்போஸ்தலர்களுக்கு (தோமா இன்றி) (மாற். 16:14; லூக். 24:36-43; யோவா. 20:19-25).*

B. *நாற்பது நாட்கள் (அப். 1:3ஐக் காணவும்).*

1. *ஆறாம் தரிசனம்: ஒரு வாரங்கழித்து யூதேயாவில் அப்போஸ்தலர்களுக்கு (தோமா உட்பட) (யோவா. 20:26-31; 1 கொரி. 15:5).*
2. *ஏழாம் தரிசனம்: நாற்பது நாட்களில் ஏதோ ஒரு வேளையில் கலிலேயாவில் குறைந்தது ஏழு சீஷர்களுக்கு (யோவா. 21:1-24).*
3. *எட்டாவது தரிசனம்: கலிலேயாவில் இருந்த ஒரு மலையில், அப்போஸ்தலர்களுக்கு (மற்றும் ஐந்நூறு சீஷர்களுக்கு) (மத். 28:16, 17; 1 கொரி. 15:6).*
4. *மலையின்மீது பிரதான கட்டளை (மத். 28:18-20; மாற். 16:15-18; லூக். 24:46-48ஐக் காணவும்).*

5. *ஒன்பதாவது தரிசனம்: (அறியப்படாத இடமொன்றில்) யாக்கோபுவுக்கு (1 கொரி. 15:7அ).*
6. *கடைசி தரிசனங்கள்: யூதேயாவில் எருசலேமுக்கு அருகில் எல்லா அப்போஸ்தலர்களுக்கும் (லூக். 24:44-49; அப். 1:3-8; 1 கொரி. 15:7ஆ).*
7. *ஒலிவ மலையில் இருந்து பரத்துக்கேறுதல் (மாற். 16:19; லூக். 24:50-53; அப். 1:9-12).*

C. *தொகுப்புக் கூற்றுக்கள்:*
1. *கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய தொகுப்புக் கூற்றுக்கள் (யோவா. 20:30, 31; 21:25; அப். 20:35ஐக் காணவும்).*
2. *தொடர்ந்த நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்புக் கூற்றுக்கள் (மாற். 16:20; லூக். 24:52, 53; அப். 1:12ஐக் காணவும்).*

# ரோமச் சிலுவையில் ஆறுமணி நேரங்கள்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #40*

VII. *இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).*
- H. *வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள் (தொடர்ச்சி).*
  - *9. இயேசுவின் மரணம்: சிலுவையில் அறையப்படுதல் (தொடர்ச்சி).*
    - c. *சிலுவையில் முதல் மூன்று மணி நேரங்கள் (தொடர்ச்சி) (மத். 27:35, 36, 39-44; மாற். 15:24, 29-32; லூக். 23:34-37, 39-43; யோவா. 19:23-27).*
    - d. *சிலுவையில் கடைசி மூன்று மணி நேரங்கள் (மத். 27:45-56; மாற். 15:33-41; லூக். 23:44-49; யோவா. 19:28-30).*

### அறிமுகம்

*இது, இயேசுவின் மரணத்தை மையம்கொண்ட இரு பகுதிப் பாடத்தின் இரண்டாவது பகுதியாக உள்ளது. கிறிஸ்துவின் உடல்ரீதியான துன்பத்தை நாம் நன்கு புரிந்துகொள்வதற்கு உதவும்படி, சிலுவையில் அறையப்படுதல் பற்றிய சில குறிப்புகள் அவசியமாகின்றன.*

*சிலுவையில் அறையப்படுதல் என்பது, "மிகக் கொடூரமான, மிகவும் சித்திரவதை செய்கிற, மிகவும் சிறுமைப்படுத்துகிற, மற்றும் மிகவும் பயங்கர மான மரணதண்டனையின் வகையாகப் பழங்காலத்தில் இருந்தது" என்று ஜான் ஃபிராங்க்ளின் கார்ட்டர் அவர்கள் விவரித்தார்.[1] சிலுவையில் அறையப்படுதல் என்பது பெர்சியர்கள், எகிப்தியர்கள், பாபிலோனியர்கள், பெனிக்கியர்கள் மற்றும் பிறரால் பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப் பட்டிருந்தது. இருப்பினும் ரோமர்கள், "இதை, அதிகபட்சம் வேதனை மற்றும் பாடுகளுடன் தாமதமான மரணத்தை உண்டாக்குகிற வகையில் வாதனை மற்றும் தண்டனை ஆகியவற்றின் உருவாக வடிவமைத்து முழுமைப்படுத்தினர்."[2]*

*சித்திரவதையின்/மரணதண்டனையின் இந்த வடிவத்தினுடைய "நிபுணத்துவம்" என்பது, குற்றவாளி சிலுவையில் ஆணியடிக்கப்பட்டிருப் பார், அவரது இன்றியமையாத எந்த உறுப்பும் பாதிக்கப்பட்டிராது.*

இவ்விதமாக மரணம் மெதுவாக வந்தது. குற்றவாளி சிலுவையில் மூன்று அல்லது நான்கு நாட்கள் வரையிலும்கூட உயிருடன் இருக்கக் கூடும். இறந்துகொண்டிருக்கும் மனிதனின் காயங்களைச் சிலவேளைகளில் பூச்சிகளும் பறவைகளும் வந்து தாக்கும். அந்த வேளைகள் எல்லாவற்றிலும், குற்றவாளி வேதனையால் துடித்து, காய்ச்சலினால் எரிந்து, தாகத்தினால் வதைக்கப்படுவார் - கடைசியில் மரணம் என்பது வரவேற்கப்படுகிற ஒரு நிம்மதியாக வரும் வரையிலும் இது தொடரும்.

*Journal of the American Medical Association,*[3] என்ற பத்திரிக்கையின் ஆராய்ச்சிக் கட்டுரையொன்றில் கூறப்பட்டுள்ளபடி, "[சிலுவையில் அறையப்படுதலில்] மரணத்திற்குப் பங்களிக்கும் காரணங்கள் எண்ணற்றவையாக இருந்தன." முதலாவது, "உயிர்பிழைத்திருக்கும் கால அளவு என்பது ... சவுக்கடியின் கடுமையுடன் தொடர்புடையதாக ... காணப்பட்டுள்ளது." பின்பு, சிலுவையில் அறையப்படுதலில், மணிக்கட்டில் ஆணிகளினால் நரம்புகளுக்கு ஏற்படும் சேதமானது "இரு கைகளிலும் அக்கினி போன்ற கடுமையான வேதனையை உண்டாக்கும்." இதே விஷயமானது, நேராய் நிற்கும் மரத்தூணில் பாதங்கள் ஆணியடிக்கப்படும் போது அவற்றிற்கு உண்மையாகும். இரத்தம் மெதுவாக ஆனால் நிலையாக இழக்கப்படுதல் என்பதும் இருக்கும். இவை யாவையும், சிலுவையில் தொங்கும் ஒருவரைப் பலவீனப்படுத்துவதற்காக வடிவமைக்கப் பட்டிருந்தன.

இருப்பினும், "சாதாரண சுவாசத்தில், குறிப்பாக மூச்சை வெளியிடுத லில் ஏற்படும் குறிப்பிடத்தக்க இடையூறுதான் ... சிலுவையில் அறையப் படுதலில் [வலிமையைக் குறைக்கும்] பிரதானச் செயல்விளைவாக இருந்தது.[4]" வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், குற்றவாளிக்கு மூச்சுவிடுதல் என்பது ஏறக்குறைய இயலாத விஷயமாகவே இருக்கும். "போதுமான அளவுக்கு மூச்சை வெளிவிடுவதற்கு [ஆணியடிக்கப்பட்ட] பாதங்கள்[5] மீது உந்தித்தள்ளி உடலை மேல்நோக்கி உயர்த்துதல் மற்றும் முழங்கைகளைத் தளர்த்துதலும் தோள்களை [இழுத்தலும்] தேவைப்படும்." இது கடுமையான வேதனையையும் தசை சுண்டப்படுதலையும் உண்டாக்கும். "இதன் விளைவாக, மூச்சிழுத்து விடுவதற்கான ஒவ்வொரு முயற்சியும் [பெரும் அளவில்] வேதனையையும் களைப்பையும் உண்டாக்கு வதாகும்." குற்றவாளியின் மூர்ச்சையானது "கடைசியில் asphyxia என்ற நிலைக்கு வழிநடத்தும்" இது உயிர்வளிக் குறைவினால் ஏற்படும் மரணத்தை விளைவிக்கும்.

ரோமர்களின் சிலுவையில் இயேசுவின் ஆறுமணி நேரங்களை நாம் ஆய்வு செய்கையில், அவர் கடந்து சென்ற பெரும் வேதனையைச் சிந்தையில் வைத்துக்கொண்டிருங்கள். மேலும், பேசுதல் என்பது மூச்சை வெளிவிடும் நடவடிக்கையாய் இருந்தபடியால், பேசுவதற்கு அவர் கொடுக்க வேண்டியிருந்த விலையையும் கற்பனை செய்து பாருங்கள்.

## முதல் மூன்று மணி நேரங்கள் (மத். 27:35, 36, 39-44; மாற். 15:24, 29-32; லூக். 23:34-37, 39-43; யோவா. 19:23-27)

*சிலுவையில் கிறிஸ்துவின் ஆறுமணி நேரங்கள் இயல்பாகவே, மூன்று மணி நேரங்கள் கொண்ட இரண்டு வேளையாகப் பிரிபடுகின்றன: வெளிச்சத்தின் மூன்று மணி நேரங்கள் (மாற். 15:25, 33) மற்றும் இருளின் மூன்று மணி நேரங்கள் (மாற். 15:33).[6] முதல் வேளையானது காலை சுமார் 9:00 மணியில் இருந்து நண்பகல் வரையிலுமானதாக இருந்தது.*

**போர்ச்சேவகர்கள் சீட்டுப்போட்டனர்**

இயேசு சிலுவையில் அறையப்பட்ட நிகழ்ச்சியுடன் நமது முந்திய பாடம் முடிவடைந்தது. மரணதண்டனை நிறைவேற்றுவதற்கு நான்கு போர்ச்சேவகர்கள் நியமிக்கப்பட்டனர் (யோவா. 19:23ஐக் காணவும்). இந்தக் கடமையைச் செய்ய நியமிக்கப்பட்டவர்களுக்குக் குற்றவாளிகளின் உடலில் இருந்து உரியப்பட்ட உடைகள் தரப்பட்டன. போர்ச்சேவகர்கள் இயேசுவின் மேலுடைகளை ஏறக்குறைய சமமான நான்கு குவியல்களாகத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர் (யோவா. 19:23அ). அவரது மேல் அங்கி, அவரது தலைப் பாகை, கச்சை,[7] மற்றும் காலணிகள் ஆகியவை அவரது மேலுடைகளில் உள்ளடங்கி இருக்கும்.

இருப்பினும், உடையின் ஒரு பொருளைப் பொறுத்தமட்டில் [அவரது "அங்கி" (யோவா. 19:23)] அவர்கள் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தனர். KJV வேதாகமத்தில் இது, "coat" என்றுள்ளது, மற்றும் NIV வேதாகமத்தில் இது, "undergarment" என்றுள்ளது. இவ்விடத்தில் உள்ள கிரேக்க வார்த்தையானது, "தோலுக்கு அடுத்து அணியப்பட்ட உடை" என்று அர்த்தப்படுகிறது. அந்த உடையானது, "தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்த[தால்]" (யோவா. 19:23இ) போர் வீரர்கள் திகைப்படைந்தனர். அப்படிப்பட்ட உடைகள் பெரும் பாலும் இரண்டு அல்லது மூன்று துணித் துண்டுகள் சேர்த்து வடிவமைக் கப்பட்டிருக்கும். "ஒரே துண்டாக நெய்யப்பட்டதாக" இருத்தல் என்பது அதை அதிக மதிப்புடையதாக்கும்.[8] அதை நான்கு துண்டுகளாகக் கிழித்தல் என்பது அதன் மதிப்பை அழிப்பதாக இருக்கும்.

அந்த ரோமப் போர்ச்சேவகர்கள், "இதை நாம் கிழியாமல், யாருக்கு வருமோ என்று இதைக்குறித்துச் சீட்டுப்போடுவோம்" என்று பேசிக் கொண்டனர் (யோவா. 19:24அ; மத். 27:35; மாற். 15:24; லூக். 23:34ஐக் காணவும்). அவர்கள் உடைக்காக வகை பிரித்து சீட்டுப்போடுகையில், அவர்களை அறியாமலேயே மேசியாவை பற்றிய ஒரு தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார்கள்: "என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப்போட்டார்கள்" (யோவா. 19:24ஆ; சங். 22:18ஐக் காணவும்).

அவைகளைப் பிரித்துக் கொண்டபின், சேவகர்கள் உட்கார்ந்து, "அவரைக் காவல்காத்துக்கொண்டிருந்தார்கள்" (மாத். 27:36). அவர்கள்

இயேசுவை "காவல் காப்பதற்கு" பொறுப்பாளிகளாய் இருந்தனர் (மத். 27:54ஐக் காணவும்) - இது அவரைப் பாதுகாப்பதற்காக அல்ல, ஆனால் அவர் மரிப்பதற்கு முன்பு அவரது நண்பர்கள் அவரைச் சிலுவையில் இருந்து நீக்கிப் போடுவதைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்தது.[9] சிலுவையில் மரணம் என்பது நீண்ட நேரம் ஆகும் என்பதால், அவர்கள் அதிக நேரம் காத்திருக்க வேண்டும் என்று எதிர்பார்த்திருப்பார்கள்.

**ஜனக்கும்பல் அவமானப்படுத்தினர்**

[பிறரின்] துன்பத்தைப் பற்றிச் சிலர் ஏக்கம் மிகுந்த பிரியம் கொண்டுள்ளனர். ஜனக்கூட்டம் ஒன்று "நின்று பார்த்துக் கொண்டிருந்[தது]" (லூக். 23:35அ). அங்கு, பாதை வழியே நடந்து சென்ற வர்களும் வினோதப் பிரியம் கொண்டிருந்தனர், இவர்கள் அநேகமாக, அந்த நாளின் கொண்டாட்டங்களுக்காக நகருக்குள் சென்று கொண்டிருந்த திருப்பயணிகளாக இருக்கலாம். "அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி:[10] 'ஆ! ஆ! தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே,[11] உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவையிலிருந்திறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள்' " (மாற். 15:29, 30). அவர்கள் இயேசுவுக்கு, "நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா" என்று அறைகூவல் விடுத்தனர் (மத். 27:40ஆ).[12]

இந்தக் குத்தலான ஏளனப்பேச்சுக்களை அநேகமாக, யூத உயர் அதிகார வர்க்கத்தினர் வழிநடத்தி இருக்கலாம். இந்த மனிதர்கள் ஆனந்தப் பரவசத்தில் இருந்திருப்பார்கள்; அவர்கள் தங்களுக்குத் தொந்தரவாக இருந்த விரோதியை வெற்றிகரமாக நீக்கிப்போட்டிருந்ததாக நினைத்தனர். "அதிகாரிகள்" - "பிரதான ஆசாரியர்களும், வேத பாரகர்களும்" (மாற். 15:31அ) அவரை இகழ்ந்து சிரித்தனர்:

> இவன் மற்றவர்களை இரட்சித்தான்; இவன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ளட்டும் (லூக். 23:35ஆ).
>
> தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் (மத். 27:43).

இயேசுவின் தலைக்குமேல் பொருத்தப்பட்டிருந்த மேல்விலாசத்தைச் சுட்டிக்காண்பித்து, அவர்கள் "இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்" என்று ஏளனம் செய்தனர் (மத். 27:42ஆ).[13] அவர்கள் வெற்றிகரமாக, "மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை" என்று அறிவித்தனர் (மாற். 15:31ஆ; மத். 27:42அ). ஒரு விளக்கவுரையாளர் பின்வரும் கவனித்தலை ஏற்படுத்தினார்: "தெரியாத்தனமாக [இந்தத் தலைவர்கள்], வேதவாக்கியங்கள் யாவற்றிலும்

ஆழமிக்க சத்தியங்களில் ஒன்றை உச்சரித்தனர்."[14] அவர்கள் "தாங்கள் கனவு கண்டிருந்ததைக் காட்டிலும் ஆழமான சத்தியத்தை உரைத்தனர்: அவர் மற்றவர்களை இரட்சிப்பாரென்றால், தம்மையே அவர் எவ்வாறு இரட்சிக்கக்கூடும்?"[15]

இந்த வேடிக்கைப் பொழுதுபோக்கைப் போர்ச்சேவகர்கள் வரவேற்றனர். அவர்களும், "அவரிடத்தில் சேர்ந்து, அவருக்குக் காடியைக் கொடுத்து: 'நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக்கொள்' என்று அவரைப் பரியாசம் பண்ணினார்கள்" (லூக். 23:36, 37). இயேசுவுடன் பாடுபட்டவர்கள் - இரண்டு கள்வர்கள் - கூட இதில் சேர்ந்து கொண்டனர். விதிப்படி, சிலுவையில் அறையப்பட்டவர்கள் கூட்டத்தாரிடமிருந்து அவமானங்களைப் பெற்றுக்கொண்டிருந்தனர்; ஆனால் இந்த வேளையில், கவனமானது மையத்தில் இருந்த சிலுவையின்மீது செலுத்தப்பட்டது. இரண்டு குற்றவாளிகளும் ஒரே திசையில் தங்கள் கோபத்தையும் விரக்தியையும் செலுத்தினர் (மத். 27:44; மாற். 15:32ஆ).

### கர்த்தர் ஜெபித்தார்

இந்த விரோத வெள்ளத்திற்கு இயேசு எவ்வாறு பதில் அளித்தார்? அவர் தம்மைத் துன்புறுத்தியவர்களை அழிப்பதற்குப் பன்னிரண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதர்களை (மத். 26:53)க் கீழே அழைத்தாரா? இல்லை, அவர் ஜெபித்தார்! அவர் தமது சீஷர்களுக்கு அவர்களைத் துன்புறுத்துபவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று போதித்திருந்தார் (மத். 5:44). இப்போது அவர் "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே"[16] என்று ஜெபிக்கையில் (லூக். 23:34அ), தாம் போதித்ததை அவர் நடைமுறைப்படுத்தினார்.

### ஒரு கள்ளன் வேண்டுகோள் விடுத்தார்

முதல் மூன்று மணிநேரங்களின்போது ஒளிமிக்க ஒரு இடம் இருந்தது: கள்வர்களில் ஒருவனது இருதயமானது அவன் கண்ட காட்சியால் செயல் தாக்கம் அடைந்தது. தொடக்கத்தில் இரு குற்றவாளிகளுமே கர்த்தரைத் திட்டினார்கள் (மத். 27:44; மாற். 15:32); இருப்பினும், நேரம் கடந்தபோது, அவர்களில் ஒருவன், கிறிஸ்துவின் கண்ணியமான மேன்மை வாய்ந்த ஆவியினால் தொடப்பட்டான்.[17] அவன் அநேகமாக, சிலுவையில் அறையப் பட்டு இறந்து கொண்டிருக்கும் மனிதர்கள் தங்களைச் சுற்றியிருந்தவர்களை சபிப்பதைக் கண்டிருக்கலாம், ஆனால் அவர்கள் தங்களை வாதித்தவர் களுக்காக ஜெபிப்பதை கண்டிருக்கமாட்டான்.

ஒரு கள்ளன், ''நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்'' என்று கூறி அவர்மீது வசவுகளைத் தொடர்ந்து தூற்றினான் (லூக். 23:39). இன்னொருவன் இயேசுவைத் தற்காத்தான்: "நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிற தில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்த வைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே" (லூக். 23:40, 41).

*அவன் தனது தலையைக் கர்த்தரை நோக்கித் திருப்பி, "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்றான் (லூக். 23:42). அவன் இயேசுவின் ராஜ்யத்தைப் பற்றி எவ்வாறு அறிந்தான்? அவன், கிறிஸ்து ராஜ்யத்தைப் பற்றிப் போதித்ததைக் கேட்டிருந்தானா? இயேசுவின் தற்போதைய நடத்தையானது, அவரது தலையின்மீதுள்ள மேல்விலாசம் உண்மையாக இருக்கவேண்டும் என்று அவன் நம்பி இணங்கச் செய்ததா? நமக்குக் கூறப்படவில்லை. ராஜ்யத்தைப் பற்றிய கள்ளனின் அறிவு வரையறைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும், ஆனால் குறைந்தபட்சமாக அவன், இயேசு யூதர்களின் ராஜாவாக (எதிர்பார்த்திருந்த மேசியாவாக) இருந்தார் என்பதையும், மற்றும் - அவர் சிலுவையில் மரித்துக்கொண்டிருந்தார் என்ற உண்மை இருந்தபோதிலும் - அவர் தமது இராஜ்யத்தை அமைப்பார் என்பதையும் புரிந்துகொண்டிருந் தான்! அந்த வேளையில், மரித்துக் கொண்டிருந்த இந்தக் கள்ளன் கிறிஸ்துவின் சீஷர்களைக் காட்டிலும் அதிகமான விசுவாசத்தைச் செயல் விளக்கப்படுத்தினான்.[18]*

*மனஸ்தாபப்பட்ட இந்தக் கள்ளனிடத்தில், "இன்றைக்கு நீ என்னு டனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லு கிறேன்" (லூக். 23:43) என்று இயேசு கூறுகையில் அவர், "இறுதி வரையிலும் தமது பெயருக்கும் ஊழியத்திற்கும் உண்மை வாய்ந்தவராகவே இருந்தார்."[19] இந்த சந்தர்ப்பப் பொருளில், "பரதீசு" என்பது மரித்த நீதிமான்கள் நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருக்கும் காணப்படாத உலகத்தின் ஒரு பகுதியைக் குறிப்பதாக உள்ளது.[20] மனஸ்தாபப்பட்ட கள்ளனுக்கு கிறிஸ்து - சிலுவையில் இருந்தல்ல, ஆனால் பாவத்தின் குற்ற உணர்வி லிருந்து - இரட்சிப்பை வாக்களித்தார். அவர் அவனுக்கு - இந்த வாழ்வில் அல்ல, ஆனால் அடுத்த வாழ்வில் - விடுதலையைக் கொடுத்தார்.[21]*

**நண்பர்கள் புலம்பினர்**

*சிலுவையின் அருகில் இருந்த சிலர் வெறுப்பினால் அல்ல, ஆனால் துக்கத்தினால் பட்சிக்கப்பட்டிருந்தனர். சிலுவையின் அருகில் நின்றிருந்த வர்களில் இயேசுவின் தாயாரும் இருந்தார் (யோவா. 19:25ஆ) சற்று நேரம் நீங்கள் உங்களை, மரிக்கின்ற தனது மகனைக் கண்ணீரினூடாகக் கண்ட மரியாளின் இடத்தில் வைத்துப் பாருங்கள். அவளிடத்தில் சிமியோன், "... உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப் போகும்" (லூக். 2:35) என்று எச்சரித்திருந்தார்; இப்போது அந்தக் கொடுமையான வாளானது சுழன்று அவளது இருதயத்தினுள் திரும்பிற்று.*

*மரியாளுடன் மற்ற பெண்களும் இருந்தனர். அவர்களை யோவான், "அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும்" என்று அடையாளப்படுத்தினார் (யோவா. 19:25இ). சிலுவை யின் அருகில் நின்றிருந்த பெண்கள் பற்றிய யோவானின் பட்டியல், மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோரின் பட்டியல்களுடன் ஒப்பிடப்படுகை யில் (மத். 27:56; மாற். 15:40), (தாயாகிய) மரியாளின் சகோதரி சலோமி - யாக்கோபு யோவான் ஆகியோரின் தாயும் செபதேயுவின் மனைவியுமா*

யிருந்தவள் - என்பதாகத் தோன்றுகிறது.[22] முந்திய வரலாறு ஒன்றில் நாம் சலோமியைப் பற்றி வாசித்தோம் (மத். 20:20, 21).

யோவானின் பட்டியலில் உள்ள "கிலெயோப்பாவின் மனைவி மரியாள்" என்ற பெண் அநேகமாக, மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோரின் பட்டியலில் உள்ள, "சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாள்" என்ற அதே பெண்ணாகவே இருக்கலாம். மகதலேனா மரியாள் இம்மூன்று பட்டியல்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றாள். நமது படிப்புகளில் முன்பு நாம் இவளை எதிர்கொண்டிருந்தோம் (லூக். 8:2, 3), மற்றும் இவ்வரலாறு வளருகையில் இவள் மீண்டும் குறிப்பிடப்படுவாள்.

இயேசுவுக்கு "அறிமுகமாயிருந்த" மற்றவர்களும் சிலுவையின் அருகில் இருந்தனர் (லூக். 23:49; மாற். 15:41 ஆ-வைக் காணவும்). அப்போஸ்தலர்கள் யாவருமோ அல்லது ஒரு சிலரோ, தூரத்தில் இருந்து கவனித்துக்கொண்டு இருந்திருக்கலாம். குறைந்தபட்சம், அப்போஸ்தலரான யோவான் அங்கிருந்தார் (யோவா. 19:26[23]ஐக் காணவும்).

**இயேசு வழங்கினார்**

எடுத்துரைக்கப்பட முடியாத வேதனையை இயேசு அனுபவித்துக் கொண்டிருந்தபோதிலும், அவர் தமது தாயின் நலம் பற்றி அக்கறை கொண்டிருந்தார்.[24] அவளது வருத்தத்தைக் கண்டபோது, அவரது இருதயத்தில் துக்கம் நிறைந்திருக்க வேண்டும். அருகில் நின்றுகொண்டிருந்த யோவானைக் கண்டு, அவர் "ஸ்திரீயே,[25] அதோ, உன் மகன் என்றார். பின்பு சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார்!" (யோவா. 19:26, 27அ). இவ்வாறு இயேசு தமது தாயின் பராமரிப்புக்கு வேண்டியவற்றை வழங்கினார்.[26]

"அந்நேரமுதல் அந்தச் சீஷன் [யோவான்] அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்" (யோவா. 19:27ஆ). ஒருவேளை, பரிவிரக்கத்தினால் அவர் [யோவான்] உடனடியாக[27] அவளை கொல்கொதாவில் இருந்து வெளியே வழிநடத்திச் சென்றிருக்கலாம் மற்றும் பண்டிகையின்போது தமது குடும்பம் தங்கியிருந்த இடத்திற்கு அவளை அவர் அழைத்துச் சென்றிருக்கலாம். அவர் அதைச் செய்திருந்தால், மரியாள் தமது மகனின் துன்பங்கள் சிலவற்றில் இருந்து சற்றே காக்கப்பட்டவளாக முரட்டுத் தனமான கும்பலில் இருந்து பாதுகாக்கப்பட்டவளாக இருந்திருக்கலாம்.

## கடைசி மூன்று மணி நேரங்கள் (மத். 27:45-56; மாற். 15:33-41; லூக். 23:44-49; யோவா. 19:28-30)

**இரகசியம்**

"அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி நேரமாயிருந்தது" (லூக். 23:44) - அதாவது, சூரியன் தனது வெம்மையுடன் ஒளிவீசும் நண்பகல் வேளையா

*யிருந்தது. "... பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று. சூரியன் இருளடைந்தது" (லூக். 23:44ஆ, 45அ). இந்த அந்தகாரம் திடீரென்று ஏற்பட்டதா? இந்த நிகழ்வானது யூதேயாவில் மட்டும் நடைபெற்றதா அல்லது பலஸ்தீனம் முழுவதிலுமோ அல்லது அதற்கும் அப்பால் உள்ள பகுதிகளிலும் நடைபெற்றதா என்று நாம் அறிவதில்லை. "பூமியெங்கும்" என்ற சொற்றொடர் இந்தப் பகுதிகளில் எதை வேண்டுமானாலும் குறிப்பிடக்கூடும். இந்த அசாதாரணமான நிகழ்வு பற்றி ரோமாபுரிப் பதிவேடுகள் அறிக்கையிட்டிருப்பதால் அப்படி இருக்கவும் சாத்தியம் உள்ளது.[28]*

*இந்த அந்தகாரமானது ஒரு கிரகணம் என்று அழைக்கப்பட்டுள்ளது, ஆனால் பஸ்கா பண்டிகையின்போது, சூரிய கிரகணம் ஏற்படச் சாத்தியக்கூறு இல்லாதிருந்தது. "[இந்தப் பண்டிகை] ஆசரிப்பு முழுநிலவு நாளன்று நடைபெற வேண்டியிருந்தது (யாத். 12:6)"[29] - மற்றும் முழுநிலவுக் காலவேளையில் சூரிய கிரகணம் ஏற்பட முடியாது.[30] மேகம்மூடிய வானம் என்பதும் இந்த நிகழ்ச்சியை விளக்கப் போதுமானதாயிராது. இந்த அந்தகாரம் இயற்கைக்கு மேலான நிகழ்ச்சி என்று நம்புவதற்குக் காரணங்கள் உள்ளன. (1) லூக்கா, இந்த அந்தகாரத்தை தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்த நிகழ்ச்சியுடன் பிணைத்தார் (லூக். 23:44, 45), அது சந்தேகமின்றி ஒரு அற்புதமாகவே இருந்தது.[31] (2) இருள் நீக்கப்பட்ட நிகழ்ச்சி, இயேசுவின் மரணத்துடன் ஒன்றித்து நடந்தது என்ற உண்மையானது தெய்வீக இடையீடு ஒன்றைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.*

*"ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும்" (லூக். 23:44இ) - அதாவது பிற்பகல் 3:00 மணி வரைக்கும் பூமியின்மீது அந்தகாரம் மூன்று மணிநேரத்திற்கு தாமதித்திருந்தது. இந்த அந்தகாரத்தை ஏற்படுத்தியதற்கு தேவன் கொண்டிருந்த காரணம் என்ன என்று நாம் நிச்சயமாய்க் கூற இயலாது, ஆனால் ஜான் கார்ட்டர் அவர்களின் பின்வரும் விளக்கவுரையானது அநேகமாக இலக்கிற்கு அருகில் தாக்குவதாயிருக்கலாம்:*

> *... இருளின் திரையொன்று, பாடுபடும் இரட்சகரை, ஏளனம் செய்து வதைப்பவர்கள் மற்றும் துன்புறும் நண்பர்கள் ஆகியோரிடமிருந்து மறைத்தது என்பது பொருத்தமானதாக இருந்தது. சொல்லப்போனால், சக்கந்தமும் ஏளனமும், பூமியை இருள் மூடியபின்பு குறைந்தொழிந்தது என்பதில் சந்தேகமில்லை; இயேசு அமைதியில் பாடுபடும்படிக்கு விடப்பட்டார். இருளான அந்த மணி நேரங்களில் தேவன் நம் எல்லாருடைய அக்கிரமங்களையும் அவர்மீது சுமத்தினார் (ஏசா. 53:6), அவர் "தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையிலே சுமந்தார்" (1 பேது. 2:24), அவர் "நமக்காகப் பாவமானார்" (2 கொரி. 5:21), தேவன் அவரை "அவருடைய இரத்தத்தினாலே ... கிருபாதார பலியாக ஏற்படுத்தினார்" (ரோமர் 3:25) என்பது உறுதி. அவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு "ஜீவ ஒளியை" கொடுக்கும்படிக்கு (யோவா. 8:12) அவர் ஏதோ சில வகையில் "புறம்பான இருளை" (மத். 8:12) அனுபவித்தார்.[32]*

***அர்த்தம்***

*அந்தகாரத்தின் மணி நேரங்கள் முடிவை நெருங்குகையில், விரைவான*

தொடர்வரிசையில் நான்கு முறைகள் கிறிஸ்து பேசினார். முதலாவது, "ஏறக்குறைய ஒன்பதாம் மணிவேளையில்," அவர் தாம் சகித்த பயங்கரமான பாடுகளைப் பிரதிபலிக்கின்ற பெருங்கவலை நிறைந்த சொற்றொடரை உச்சரித்தார்: "ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி?" (மத். 27:46அ). இவைகள், "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று அர்த்தப்பட்ட (மத். 27:46ஆ) எபிரெயு மற்றும் அரமாயிக் வார்த்தைகளாயிருந்தன.[33] இந்தக் கேள்வியானது, நமது பாவங்களுக்கான தண்டத்தைச் செலுத்துவதற்கு, இயேசு - சற்று நேரம் - தேவனால் கைவிடப்பட்டிருந்தார் என்பதை உறுதிப் படுத்துகிறது.

ஒரு கேள்வி எழும்புகிறது: "ஆனால் கிறிஸ்து தமது மரணத்தின் நோக்கத்தைப் புரிந்துகொண்டிருக்கவில்லையா? - அப்படி அவர் புரிந்து கொண்டிருந்தால், அவர் தேவனிடம், 'ஏன் என்னைக் கைவிட்டீர்?' " என்று கேட்டது எதனால்? இயேசு சங்கீதம் 22:1ல் இருந்து மேற்கோள் காண்பித்து சங்கீதக்காரரின் சொல்லாக்கத்தைத் தக்க வைத்தார் என்பதே மிகச் சிறந்த விளக்கமாக உள்ளது. கர்த்தருடைய கூற்றானது, சந்தேகத்தின் அறிவிப்பாக இருக்கவில்லை, ஆனால் அது விசுவாசத்தின் உறுதிப்பாடாக இருந்தது. சங்கீதத்தை மேற்கோள் காண்பித்ததன் மூலம் அவர், தமது மரணமானது ஒரு துரதிரஷ்டவசமான துன்பமாயிராமல், தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றின் நிறைவேற்றமாக இருந்தது என்று உறுதிப்படுத்தினார் (சங். 22:6-8, 12-18ஐக் காணவும்).

இயேசு கதறியபோது, அவர் கூறியது என்ன என்று சிலர் புரிந்து கொள்ளாதிருந்தனர். ஒருவேளை அவரது வார்த்தைகள் மூச்சுவிடும் முயற்சியில் குழறியிருக்கலாம்; அவர் பேசியபோது, ஒருவேளை அவர்களின் சிந்தனைகள் வேறு எங்காவது இருந்திருக்கலாம்; ஒருவேளை சிலர் (என்னைப் போல்) வயதானவர்களாயிருந்து, அவர்களின் கேட்கும் தன்மை யானது (என்னுடையதைப் போல்) விரும்பத்தக்க சிலவற்றை விட்டிருக்க லாம். காரணம் எதுவாயிருந்தாலும், கிறிஸ்து, "ஏலீ" ("என் தேவனே") என்று கூறியபோது, அவர் "எலியா" என்று கூறியதாகச் சிலர் நினைத்தனர் (இது "யேகோவா என் தேவன்" என்று அர்த்தப்படுகிறது). அவர்கள், "இவன் எலியாவைக் கூப்பிடுகிறான்" என்று முடிவுசெய்தனர் (மத். 27:47). மேசியாத்துவ காலத்தில் எலியா தோன்றுவார் என்று வேதபாரகர்கள் போதித்தனர் (மத். 17:10). சிலர் இந்தக் கூற்றினால் ஈர்க்கப்பட்டவர்களாகி, "பொறு, எலியா இவனை இரட்சிக்க வருவானோ, பார்ப்போம்" என்றனர் (மத். 27:49; மாற். 15:36).

அவர்களின் தவறான புரிந்துகொள்ளுதலைத் திருத்துவதற்குக் கர்த்தர் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. மாறாக, "எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து,[34] வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக:[35] தாகமா யிருக்கிறேன் என்றார்" (யோவா. 19:28). கடற்காளான் ஒன்று காடியில் தோய்க்கப்பட்டு, ஈசோப்புத் தண்டில்[36] மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டப்பட்டது (யோவா. 19:29; மாற். 15:36அ-வைக் காணவும்). முன்னதாக, இயேசு அந்தப் பானத்தை [ஏற்க] மறுத்திருந்தார்; இப்போது அவர் அதை ஏற்றுக்கொண்டார் (மத். 27:34; மாற். 15:23; யோவா. 19:30அ).

அவரது பாடுகள் ஏறக்குறைய முடியும் தறுவாயில் இருந்தபடியால், மயக்கம் தரும் அந்த பானத்தை வலிமறக்கடிக்கும் அதன் குணத்திற்காகக் குடிப்பதில் காரணம் எதுவும் இருந்திராது. ஒருவேளை, தாகத்தினால் துவண்டுபோன துடன் கூடுதலாக, அவர் பின்தொடரவிருந்த தமது கதறுதல்களுக்காகத் தமது தொண்டையை நனைத்துக் கொள்வதற்கு விரும்பியிருக்கலாம்.

"இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி" (யோவா. 19:30அ). அவரது பாடுகள் ஏறக்குறைய முடிந்திருந்தன, ஆனால் அவரது வார்த்தைகள் அதைக் காட்டிலும் அதிகமான மறைவுக் கருத்துக்களைக் கொண்டிருந்தன. அவர் செய்யும்படி, தேவன் அவரிடத்தில் ஒப்புவித்திருந்த ஊழியத்தை அவர் முடித்திருந்தார் (யோவா. 17:4[37]ஐக் காணவும்). B. S. டீன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> "முடிந்தது"; முடிந்தது, பூமியில் வாழ்ந்தவற்றிலேயே மாண்புமிக்க வாழ்வானது இறுதியாக்கப்பட்டு மாத்திரம் இருந்ததில்லை; முடிந்தது, மனிதனை மீட்கும் ஊழியம்; முடிந்தது, இது முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் கண்ட கனவுகள், பழைய உடன்படிக்கையின் அடையாளங்கள் மற்றும் தீர்க்கதரிசனங்கள் யாவற்றையும் விட ஒரு மேன்மையான வழியில் நிறைவேறியது.[38]

கிறிஸ்துவின் வார்த்தைகள், "வெற்றியின் கூக்குரலாக ... நிறைவேற்றத்தின் கூக்குரலாக ... ஆம், நிம்மதியின் கூக்குரலாக இருந்தது. இப்பொழுது இயேசு தமது முட்களுக்கு ஒரு கிரீடத்தை, தமது நிர்வாணத்திற்கு ஒரு உடையை, தமது கனவீனத்திற்கு ஒரு மகிமையை, தமது காயங்களுக்கு ஒரு ஆராதனையை மாற்றாகப் பெற்றுக்கொள்ள முடியும்" என்று சார்லஸ் ஸ்வின்டால் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.[39]

பின்பு கிறிஸ்து, "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்[40] என்று மகா சத்தமாய்க்[41] கூப்பிட்டுச் சொன்னார்" (லூக். 23:46அ). "இப்படிச் சொல்லி" (லூக். 23:46ஆ), "அவர் தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்" (யோவா. 19:30ஆ). கர்த்தர் "வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து" (1 கொரி. 15:3) தமது "ஜீவனை விட்டார்" (லூக். 23:46இ; மாற். 15:37).

இயேசு ஏன் இவ்வளவு விரைவாக மரித்தார் என்பதைப் பற்றி மனிதர்கள் யூகம் செய்துள்ளனர்,[42] ஆனால் இவ்வசனங்கள் நமக்கு உட்கண்ணோட்டத்தைத் தருகின்றன: அவர் மரிப்பதற்குத் தம்மையே சுயவிருப்பத்துடன் ஒப்புக்கொடுத்தார். மனிதர்கள் அவரது ஜீவனை அவரிடத்திலிருந்து எடுக்கவில்லை; நம் எல்லாருக்காவும், அவரே அதை ஒப்புக்கொடுத்தார் (யோவா. 10:17, 18).[43]

#### அற்புதங்கள்

இயேசு மரித்த வேளையில் மாபெரும் பூமியதிர்ச்சி ஏற்பட்டது (மத். 27:54ஐக் காணவும்): "... பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தன" (மத். 27:51). தரை பிளக்கையில், பாறையில் குடையப்பட்டிருந்த "கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய

*சரீரங்களும் எழுந்திருந்தது" (மத். 27:52அ). மத்தேயு, "அவர் உயிர்த்தெழுந்த பின்பு, இவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப்பட்டுப் பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள்" என்றும் கூடுதலாகக் குறிப்பிட்டதால் (மத். 27:52அ, 53), பரிசுத்தவான்கள் உயிர்ப்பிக்கப்பட்ட நிகழ்ச்சியானது சில நாட்களுக்குப் பின்பு நடைபெற்றிருக்கும் என்பது உறுதி.*

*பூமி அதிர்ந்து கொண்டிருக்கையில், நகரத்தில் "தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது" (மத். 27:51அ; மாற். 15:38; லூக். 23:45ஐக் காணவும்). இந்த அசாதாரணமான, கவனத்தை ஈர்க்கும் நிகழ்ச்சியானது, "பூமி அதிர்ந்த" நிகழ்ச்சி நடைபெற்றிருந்தது என்பதை அறிவித்தது![44]*

*கொல்கொதாவில் இருந்தவர்கள் இவற்றில் - அந்தகாரம் மற்றும் பூமியதிர்ச்சி என்ற - இரண்டு அற்புதங்களைப் பற்றி மாத்திரம் அறிந்திருப் பார்கள், ஆனால் இதுவும், சிலுவையில் இயேசு நடந்த வகையும் அவர்கள் மீது ஒரு வல்லமை நிறைந்த செயல்தாக்கத்தைக் கொண்டிருந்தது. "அவருக்கு எதிரே நின்ற நூற்றுக்கு அதிபதி அவர் இப்படிக் கூப்பிட்டு ஜீவனை விட்டதைக் கண்டபோது" (மாற். 15:39அ). பின்பு அவரும் போர்ச்சேவகர்களும், "பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து" (மத். 27:54அ). நூற்றுக்கு அதிபதி "மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான் என்று சொல்லி, தேவனை மகிமைப் படுத்தினா[ர்]" (லூக். 23:47). மீண்டும் அவர், "மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன்" என்று அறிவித்தார் (மாற். 15:39ஆ). அவனோடே கூட காவல் காத்திருந்தவர்களும் சேர்ந்துகொண்டார்கள்: "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்!" என்றார்கள் (மத். 27:54ஆ).[45]*

*இந்த அற்புதங்கள் அங்கிருந்த மற்றவர்களின் மனதையும் ஈர்த்தன. அவர்கள் அநேகமாக, அந்தகாரம் ஏற்பட்டிருந்ததினால் அமைதியாயிருந் திருக்கலாம். இப்பொழுது, "இந்தக் காட்சியைப் பார்க்கும்படி கூடி வந்திருந்த ஜனங்களெல்லாரும் சம்பவித்தவைகளைப் பார்த்தபொழுது, தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு [தங்கள் இல்லங்களுக்குத்] திரும்பிப் போனார்கள்" (லூக். 23:48) - இது கிழக்கு நாடுகளில் துக்கத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு வகையாக இருந்தது (ஏசா. 32:12; நாகூம் 2:7; லூக். 18:13). நடந்த யாவையும், ஒரு சில வாரங்களுக்குப் பின்னதாகப் பேதுருவின் பிரசங்கத்திற்கு நிச்சயமாகவே அவர்களை ஆயத்தப்படுத்த உதவியிருக்கும் (அப். 2:14, 23, 36, 37ஐக் காணவும்).*

## *முடிவுரை*

*இயேசு, தேவனுடைய குமாரனாக இருந்தார்; ஆகையால், அவரது மரணம் நமது புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்று நாம் எதிர்பார்த்திருப்போம். தேவனுடைய சொந்தக்குமாரன் ஒரு சிலுவையில் மரித்ததை நாம் கண்டிருக்கின்றோம்! எவ்வளவு வியக்கத் தக்கது! நமது மீட்புக்காக அவர் மரித்தார் என்று வேதவாக்கியங்கள் நமக்குக்*

கூறுகின்றன (1 கொரி. 15:3). இந்த அற்புதமான சத்தியத்தில் நாம் அகம் மகிழ்வோமாக!

குறிப்புகள்

[1]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 326. [2]William D. Edwards, Wesley J. Gabel, and Floyd E. Hosmer, "On the Physical Death of Jesus Christ," *Journal of the American Medical Association* (21 March 1986): 1458. [3]Ibid., 1460-61. [4]"மூச்சு விடுதல்" என்பது சுவாசத்தை வெளிவிடும் செயல்முறையாக உள்ளது. [5]குற்றவாளி மூச்சுவிடுவதற்காக, ஆணியடிக்கப்பட்ட தனது பாதத்திலிருந்து தன்னை மேல்நோக்கித் தள்ளுதலின் அவசியமானது, குற்றவாளியின் மரணத்தைத் துரிதப்படுத்துவதற்கு அவரது கால்களை முறிக்கவேண்டியது ஏன் என்பதை விளக்குகிறது (யோவா. 19:31-33). இப்புத்தகத்தின் பிற்பகுதியில் காணப்படும் யோவான் 19:31-33க்கான குறிப்புகளைக் காணவும். [6]இந்த இரு பிரிவுகளுக்குள் நிகழ்ச்சிகளின் மிகச்சரியான முறைமையை நாம் உறுதிப்படுத்த இயலாது; இந்த எடுத்துரைப்பில் பின்பற்றப்படுகிற வரிசை முறைமை ஒரு சாத்தியக்கூறாக உள்ளது. [7]கச்சை என்பது துணியினாலோ அல்லது தோலினாலோ ஆனதாயிருக்கக்கூடும், இது வேதாகமத்தின் ஆங்கில மொழிபெயர்ப்புகளில் பெரும்பாலும் "girdle" (circle) the body [உடலைச் சுற்றிக் கட்டப்படும் கச்சை] எனப்படுகிறது. நான் வாழ்கின்ற இடத்தில், பெரும்பாலானவர்கள், "girdle" என்பதை கட்டுப்படுத்துகிற ஒரு உள்ளாடை என்று நினைக்கின்றனர் எனவே நான் "belt" என்ற வார்த்தையைப் பயன் படுத்துகின்றேன். [8]இது அடிக்கடி, "கர்த்தர் உடைமையாகக் கொண்டிருந்த ஒரே ஒரு மதிப்பு மிக்க பொருள்" என்று அழைக்கப்பட்டுள்ளது. இது ஒருவேளை அவரது தாசர் ஒருவரிடமிருந்து பெற்ற கொடையாக இருந்திருக்கலாம். [9]போர்ச்சேவகர்கள், இரண்டு கள்வர்களின் உடைமைகளையும் தங்களுக்குள் பிரித்துக்கொண்டு, அவர்களின் நண்பர்கள் அவர்களைச் சிலுவையில் இருந்து எடுத்துவிட முயற்சி செய்வதைத் தடுப்பதற்காக அவர்களையும் காவல் செய்து கொண்டிருக்கலாம் - ஆனால் இந்த வரலாற்றில் இயேசுவின் மீதே வலியுறுத்தம் கொடுக்கப்படுகிறது. [10]தலையைத் துலுக்குதல் அல்லது அசைத்தல் என்பது ஏளனத்தை வெளிப்படுத்துதலின் குறிப்பிட்ட ஒரு வகையாக உள்ளது (சங். 22:7; 109:25; ஏசா. 37:22; எரே. 18:16). ஒவ்வொரு கலாச்சாரமும், விரோத உணர்வைச் சுட்டிக்காண்பிக்கிற சைகைகளைக் கொண்டுள்ளது.

[11]தேவாலயத்தைத் திரும்பவும் கட்டுதல் பற்றிய இயேசுவின் முந்திய வார்த்தைகள் (யோவா. 2:19) மக்களின் மனங்களில் பதிந்திருந்தன என்பது தெளிவு, ஆனால் அந்தக் கூற்றானது தவறாக மேற்கோள் காண்பிக்கப்பட்டு, தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருந்தது. [12]இயேசு தம்மையே காத்துக்கொண்டு சிலுவையில் இருந்து இறங்கி வந்தாரென்றால், மனிதகுலம் இரட்சிக்கப்பட முடியாது என்பதை இந்த மக்கள் புரிந்து கொண்டிருக்கவில்லை. அவர் தேவனுடைய குமாரனாக இருந்ததால், தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு ஒப்புக்கொடுத்து சிலுவையிலேயே இருந்தார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. [13]ஒரு சில நாட்களில் இயேசு, சிலுவையில் இருந்து இறங்கிவருதல் என்பதைக் காட்டிலும் - கல்லறையில் இருந்து வெளிவருதல் என்ற - பெரிய அற்புதத்தை நிகழ்த்தவிருந்தார், ஆனால் இதுவும்கூட, கடின இருதயங்கொண்டிருந்த யூதத்துவத் தலைவர்களிடத்தில் விசுவாசத்தை உண்டாக்காது. இயேசு சிலுவையில் இருந்து

இறங்கி வராதிருத்தல் என்பது நிறைவாகப் பல லட்சக்கணக்கான மக்களிடத்தில் விசுவாசத்தை உண்டாக்கும் என்பதை அவர்களால் முன்கண்ணோக்க முடியாதிருந்தது (யோவா. 12:32ஐக் காணவும்). [14]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 214. [15]B. S. டீன் அவர்களின், “வேதாகம வரலாற்றின் வரைக்குறிப்பு” என்ற புத்தகத்தில் காணவும். [16]சிலுவையில் இயேசு கூறிய ஏழு “வாக்கியங்களில்” இது முதலாவதானதாக உள்ளது. இது அநேகமாக நிகழ்ச்சிகளின் வரிசையில் முன்னதாகக் கூறப்பட்டிருக்கலாம். இயேசு தம்மை வதைத்தவர்களுக்காக ஜெபித்திருந்தாலும், அவர்கள் தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி தேவனுடைய சித்தத்தைச் செய்யாத வரைக்கும் (அப். 2:22, 23, 36-38) மன்னிக்கப்படக் கூடாதிருந்தனர். [17]இரண்டு கள்வர்களுமே இயேசுவை அவமானப்படுத்தினார்கள் என்று மத்தேயுவும் மாற்குவும் சுட்டிக்காட்டிய வேளையில், அவ்விருவரில் ஒருவன் கர்த்தர் சார்பாக நின்றான் என்று லூக்கா கூறினார். இந்த இரு கள்ளர்களில் ஒருவன் முதலில் கிறிஸ்துவை அவமானப்படுத்தி, பின்பு தனது மனதை மாற்றிக்கொண்டான் என்பதே இவ்விரு விவரங்களையும் ஒப்புரவாக்குவதற்கான எளிய வழிமுறையாக உள்ளது. குறிப்பிட்ட இந்தக் கள்ளன் தொடக்கத்தில் அவமானப்படுத்தியது என்பது அரைமனதுடன் செய்யப்பட்டிருக்கச் சாத்தியக்கூறுள்ளது. [18]கள்வனின் வரலாறானது சிலுவையின் இந்தப் பக்கத்தில் இரட்சிக்கப் படுவதற்குச் செய்யவேண்டியவைகளின் உதாரணமாக இருப்பதில்லை, ஆனால் இது நாம் கிறிஸ்துவுக்காக எவ்வாறு பேசவேண்டும் என்பதைச் செயல்விளக்கப் படுத்துகிறது. இந்தக் கள்ளனின் வரலாறு பற்றி அதிகமான தகவல்களுக்கு, இனி வெளிவரவிருக்கும் ‘‘கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்’’ என்ற துணைப்பாடப் புத்தகத்தில், “சிலுவையில் கள்ளன்” என்ற இரண்டு பிரசங்கங்களில் காணவும். [19]Dean, 29. [20]பாதாளத்தின் இந்தப் பகுதியானது லூக்கா 16:22ல் “ஆபிரகாமின் மடி” என்று அழைக்கப்பட்டுள்ளது. இயேசு மரித்தபோது பாதாளத்திற்கு (காணப்படாத உலகத்திற்கு)ச் சென்றார் என்று பேதுரு கூறியதால் (அப். 2:31), லூக்கா 23ன் “பரதீசு” என்பது காணப்படாத உலகத்தில் உள்ளது என்று நாம் அறிகின்றோம். மேலும் நாம், லூக்கா 23ன் “பரதீசு” என்பது தேவன் இருக்கின்ற பரலோகம் அல்ல என்றும் அறிகின்றோம். அந்த நாளில் இயேசு பரதீசுக்குச் சென்றார், ஆனால் அதற்குச் சில நாட்களுக்குப் பின்பு, அவர் தாம் இன்னமும் பிதாவினிடத்திற்கு ஏறிச் செல்லவில்லை என்பதாகக் கூறினார் (யோவா. 20:17).

[21]இயேசு பூமியில் இருந்தபோது, மன்னிப்பு அளித்தலைத் தாம் விரும்பியவாறு விரிவாக்க வல்லமை கொண்டிருந்தார் (மாற். 2:10ஐக் காணவும்). அந்த வல்லமையை அவர் ஒரு சில வேளைகளில் செயல்படுத்தினார்; இது அந்த வேளைகளில் ஒன்றாக இருந்தது. [22]“சிலுவையின் அருகில் பெண்கள்” என்ற இனிவரும் துணைப்பாடத்தை இப்புத்தகத்தில் வாசிக்கவும். [23]மீண்டும் ஒருமுறை, யோவான் தம்மையே இவ்விடத்தில் “அவர் [இயேசு] மிகவும் அன்பு செய்த சீஷன்” என்று குறிப்பிட்டுக் கொள்வதாக யூகிக்கப்படுகிறது. [24]அவர் மரியாளின் முதற்பேறான மகனாக இருந்தார், அவள்மீது தமக்கு விசேஷித்த பொறுப்பு இருந்ததாக உணர்ந்திருப்பார். அவளைக் கவனித்துக் கொள்வதற்கென்று இயேசு ஏற்பாடுகள் செய்தார் என்ற உண்மையானது, யோசேப்பு சற்றுக்காலம் முன்னதாக இறந்துபோயிருப்பார் என்று சுட்டிக் காண்பித்தலாக உள்ளது. [25]முன்பே குறிப்பிட்டபடி, ஒருவர் தமது தாயை “ஸ்திரீயே” என்று அழைப்பது அந்த சமுதாயத்தில் அவமானப் படுத்தும் செயலாக இருந்ததில்லை. NIVயில், “Dear Woman” [“அன்பான பெண்ணே”] என்றுள்ளது. [26]இந்த வேளையில், இயேசுவின் சகோதரர்கள் அவர்மீது விசுவாசம் கொண்டிராதபடியால், அவர் தமது தாயை அவர்களிடத்தில் ஒப்புவிக்காமல்

*இருந்திருக்கலாம் (யோவா. 7:5). அவர்கள் சிலுவையின் அருகில் இருக்கவில்லை என்பது ஏறக்குறைய நிச்சயமானதாக இருந்தது. உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவர்கள் விசுவாசிகளானார்கள் (அப். 1:14). யோவான் ஒரு உறவினராயிருந்தால் (''சிலுவையின் அருகில் பெண்கள்'' என்ற இனிவரும் துணைப்பாடத்தை இப்புத்தகத்தில் காணவும்) அது, இயேசு ஏன் தமது தாயைப் பராமரித்தல் என்பதை அவரிடத்தில் ஒப்புவித்தார் என்பதை விளக்குவதற்கு உதவும். ஏவுதல் பெற்றிராத ஒரு பாரம்பரியத்தின்படி, மரியாள் தமது வாழ்வின் எஞ்சிய நாட்கள் முழுவதிலும் யோவானுடன் வசித்து வந்தாள். இன்னொரு ஏவுதல் பெற்றிராத பாரம்பரியத்தின்படி, அந்த ஏற்பாடு தற்காலிகமானதாக மாத்திரம் இருந்தது மற்றும் அவள் தனது கடைசி நாட்களில் எருசலேமில் வாழ்ந்து வந்தாள். [27]இயேசு மரித்தவேளை வரும்வரையிலும் சிலுவையின் அருகில் நின்றிருந்த பெண்களில் மரியாள் பட்டியலிடப்படாதிருந்தாள் (மத். 27:56; மாற். 15:40), இது யோவான் அவளை அழைத்துச் சென்றிருந்தார் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. யோவான் அவளை அழைத்துச் சென்றிருந்தால், அவர் இயேசுவின் மரணத்தைக் காண்பதற்குத் தாம் மாத்திரம் அந்தக் காட்சிக்குத் திரும்பி வந்திருக்கலாம் (யோவா. 19:35ஐக் காணவும்). [28]சிலுவையைச் சுற்றிச் சூழ்ந்திருந்த அந்தகாரம் மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட பிற நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு, இப்புத்தகத்தில் "கல்வாரியின் அற்புதங்கள்" என்ற இனிவரும் பாடத்தில் காணவும். [29]*M. R. Wilson, "Passover," *International Standard Bible encyclopedia*, gen. ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 3:676. *யாத்திராகமம் 12:6ம் வசனமானது, சந்திரன் பூரணமாய்த் தெரியக்கூடிய நாளான, மாதத்தின் பதினான்காம் தேதியைக் குறிப்பிடுகிறது. [30]பூரண சந்திரன் என்பது, சூரியனும் சந்திரனும் பூமியின் எதிரெதிர்த் திசையில் இருப்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது (ஆகையால் சந்திரன், சூரியனில் இருந்து ஒளியைப் பிரதிபலிக்கும் தனது இயல்பின் உச்சக்கட்டத்தில் இருக்கும்). சந்திரன், பூமிக்கும் சூரியனுக்கும் நடுவில் வரும்போதுதான் சூரியக்கிரணம் ஏற்படுகிறது - இது சந்திரனும் சூரியனும் பூமியின் எதிரெதிர்த் திசையில் இருக்கும்போது சாத்தியமற்ற செயலாக உள்ளது.*

*[31]இப்புத்தகத்தில் "கல்வாரியின் அற்புதங்கள்" என்ற இனிவரும் பாடத்தில் காணவும். [32]*Carter, 329. *[33]"ஏலீ" என்பது எபிரெய மொழிச் சொல்லாக இருந்தது, "லாமா சபக்தானி" என்பது அரமாயிக் மொழிச் சொல்லாக இருந்தது. மாற்கு சுவிசேஷ விவரமானது, முதல் வார்த்தைக்கும்கூட அரமாயிக் மொழிச் சொல்லான ''எலோயீ'' என்பதைப் பயன்படுத்துகிறது (மாற். 15:34). இவ்விரு தரவழைப்புகளுக்கும் இடையில் சிறிதளவே வேறுபாடு உள்ளது. [34]கர்த்தர் பூமிக்கு வந்ததின் விசேஷித்த பணிப்பொறுப்பை அவர் நிறைவேற்றியிருந்தார்: அவர் ''நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்'' (1 பேது. 2:24). [35]''வேதவாக்கியங்கள் நிறைவேறும்படியாக'' என்ற வார்த்தைகளை வைத்த செயலானது, ''நான் தாகமாயிருக்கிறேன்'' என்ற இயேசுவின் கூற்று பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களை நிறைவேற்றியதைச் சுட்டிக்காட்டுவதற்கானதாக உள்ளது. விஷயம் இதுவாக இருந்தால், இவ்வசனங்கள் சங்கீதம் 22:15ஆ அல்லது 69:21ஐக் குறிப்பிடலாம். ''வேதவாக்கியங்கள் நிறைவேறும்படியாக'' என்பது சிலுவையில் இயேசுவின் அனுபவம் யாவற்றையும் குறிப்பிடுவதாகவும் இருக்கலாம். [36]ஈசோப்பு என்பது நீலநிற மலர்களைக் கொண்ட ஒரு தாவரமாகும். இதன் தண்டுகள் இரண்டு அல்லது மூன்று அடிகள் உயரம் வரை வளரக்கூடும். [37]யோவான் 17:4ல் "செய்து முடித்தேன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையும் யோவான் 19:30ல் "முடிந்தது" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையும் ஒரே வேர் வார்த்தையிலிருந்து வந்தவையாக உள்ளன. [38]*Dean, 29. இயேசு பழைய

ஏற்பாட்டை "நிறைவேற்றினார்" (மத். 5:17, 18ஐக் காணவும்). ஒரு கருத்தில், அவர் பழைய உடன்படிக்கையைத் தமது சிலுவையில் ஆணியடித்தார் (கொலோ. 2:14ஐக் காணவும்), இதனால் அவர் தமது புதிய உடன்படிக்கை அல்லது ஏற்பாட்டின் வெளிப்படுத்துதலுக்கு வழியை ஆயத்தம் செய்தார் (எபி. 9:15-17ஐக் காணவும்). [39]Charles R. Swindoll, *Jesus, Our Lord* (Fullerton, Calif.: Insight for Living, 1987), 27. [40]இயேசு மீண்டுமாக பழைய ஏற்பாட்டின் சொல்லாக்கத்தைப் பயன்படுத்தியிருக்கலாம் (சங். 31:5). அப்படியென்றால், அவர் அதை சங்கீதம் 31ன் எழுத்தாளரை விட அதிக செயல்தாக்கமான வகையில் பயன்படுத்தினார்.

[41]அவரது உடல் இருந்த நிலைமையில், அவர் மகா சத்தமாய்க் கூப்பிட முடிந்தது என்ற உண்மையானது தன்னிலேயே திகைப்புக்குரியதாக உள்ளது. [42]இந்தப் பாடத்தின் தொடக்கத்தில், விதிப்படி சிலுவையில் மனிதர்கள் சில நாட்களுக்குக்கூட மரணமடைவதில் தாமதித்திருந்தனர் என்று வலியுறுத்தப் பட்டது. நமது அடுத்த பாடம், இயேசு ஏற்கனவே மரித்திருந்தார் என்பதில் வியப்படைந்த ஒருவரைப் பற்றிக் குறிப்பிடும் (மாற். 15:44). [43]இந்தப் பாடமும் இதற்கு அடுத்த பாடமும், இயேசுவின் மரணத்திற்குப் பங்களித்த சாத்தியக்கூறான காரணிகள் பற்றிக் கலந்துரையாடுகின்றன, ஆனால் அவர் ஏற்படுத்திய முடிவு என்பது திறவுகோல் காரணியாக இருந்திருக்க வேண்டும். இந்தக் கண்ணோட்டத்தின் கருத்தைச் சிலர், இது தற்கொலை போன்றதாகவே அதிகமாய் ஒலிக்கிறது என்று கூறி மறுக்கின்றனர். இயேசு தம்மையே கொலை செய்து கொள்ளவில்லை என்பதை நான் துரிதமாய் கூற அனுமதியுங்கள்; அவர் யூதர்களாலும் ரோமர்களாலும் "மரணத்திற்கு உட்படுத்தப்பட்டார்" என்று வேதாகமம் தெளிவாய்க் கூறுகிறது (அப். 2:23; 3:15; 5:30; 10:39). அதே வேளையில், அவர் தமது சரீரத்தின்மீது கட்டுப்பாடுகள் சிலவற்றைத் தக்கவைத்துக் கொண்டிருந்தார். எனது சகோதரர் காய் அவர்கள், தற்கொலை மற்றும் தியாகமான மரணம் ஆகிய இரண்டிற்கும் இடையில் வேறுபாடு உள்ளதென்று சுட்டிக்காண்பித்தார். தியாகமான மரணத்தைப் பொறுத்தமட்டில், அவர் [காய்], சக போர்வீரர் ஒருவரைக் காப்பதற்கு எறிகுண்டின்மீது விழுந்து மூடிக்கொண்ட இன்னொரு போர்வீரரின் உதாரணத்தைக் கொடுத்தார் (Personal correspondence, 3 April 2002). [44]இந்த அற்புதங்களின் அடையாளத்துவமான தனிச்சிறப்புகளுக்கு, இப்புத்தகத்தில் "கல்வாரியின் அற்புதங்கள்" என்ற இனிவரும் பாடத்தில் காணவும். [45]மூலவசனத்தில், மத்தேயு 27:54 அல்லது மாற்கு 15:39ல் திட்டவட்ட சுட்டுச்சொல் (the) காணப்படுவதில்லை, ஆனால் இந்தச் சொற்றொடரை "*a* son of God" என்று மொழிபெயர்த்தல் தவறானதாக உள்ளது. போர்ச்சேவகர்கள், "உண்மையில் இவர் தேவனுடைய குமாரனாயிருந்தார்!" என்றே கூறினார்கள்.

*92*

# கல்வாரியின் அற்புதங்கள்[1]

## மத். 27:45, 46, 50-54; மாற். 15:33, 37-39; லூக். 23:44-48; யோவா. 19:28, 30

## ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*எவரெஸ்டு மலையிலிருந்து காணக்கூடிய தொலைவில், உலகின் மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்த மலைச்சிகரங்கள் சில உள்ளன - ஆனால் எவரெஸ்டு சிகரத்தின்[2] உயரத்தின் காரணமாக, நம்மில் பெரும்பான்மை யானவர்கள், மற்ற மலைகளைப் பற்றி ஒருக்காலும் கேள்விப்பட்டதில்லை. எவரெஸ்ட் சிகரத்தின் கெம்பீரம், எஞ்சியுள்ளவற்றை மறைத்துவிடுகிறது. இதே போன்ற வகையில், இயேசுவின் சிலுவையைச் சுற்றிலும் குறிப்பிடத் தக்க பல அற்புதங்கள் திரளாய்க் குவிந்துள்ளன: சூரியன் அந்தகாரமடைதல், பலமான பூமியதிர்ச்சி, தேவாலயத்துத் திரைச்சீலை கிழிந்து போகுதல், மற்றும் கல்லறைகள் திறக்கப்பட்டு மரித்த பரிசுத்தவான்கள் உயிரோடு எழுப்பப்படுதல். இருப்பினும், கிறிஸ்துவின் மரணத்தினுடைய தனித்துவச் சிறப்பினிமித்தம், நம்மில் பலர் இந்த வியத்தகு நிகழ்ச்சிகளுக்கு பழக்க மற்றவர்களாக இருக்கின்றோம்.*

*இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்த நிகழ்வுகள், "கல்வாரியின் அடிவாரங் கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளன. சரியான வகையில் புரிந்துகொள்ளப் படும்போது, இவை ஒவ்வொன்றும் இயேசுவின் பலியை/தியாகத்தை மேன்மைப்படுத்துகின்றன. வில்லியம் நிக்கொல்ஸன் அவர்கள், "இயேசு கிறிஸ்துவின் மரணத்தைச் சுற்றி மூடி அதைப் பற்றிப் பிடித்துள்ள அடையாளங்களின் வரிசைத் தொடரானது நித்திய மீட்பு என்ற ஒரே அர்த்தம் கொண்டுள்ளது" என்று கூறினார்.[3] நாம் "கல்வாரியின் அற்புதங் களை"க் கண்ணோக்குகையில், நமது பாடமானது நாம் ஒவ்வொருவரும், இயேசு நமக்குச் செய்துள்ளவற்றை மதிப்பதில் நமக்கு உதவ வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன்.*

### *அந்தகாரம்: ஒரு தெய்வீக முன்எச்சரிக்கை* (Portent)[4] *(மத். 27:45, 46; மாற். 15:33; லூக். 23:44, 45அ)*

**நடந்தது என்ன**

கொல்கொதாவின் காட்சியை உங்கள் மனதில் சித்தரித்துக் கொள்ளுங்

கள். காலை 9:00 மணி முதல் நண்பகல் வரையிலும் செயல்பாடு இருந்தது. இயேசு தமது விரோதிகளுக்காக ஜெபித்தல், தமது தாயைப் பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளுதல், கள்ளனை இரட்சித்தல், மற்றும் மூச்சுவிடப் போராடுதல் ஆகியவற்றில் வேலைமும்முரமாய் இருந்தார். அவரது விரோதி கள், அவரது உடைக்காகச் சீட்டுப் போடுதல் மற்றும் அவரது முகத்திற் கெதிராக அவரை அவமானப்படுத்துதல் ஆகியவற்றில் வேலைமும்முரமாய் இருந்தனர். அழுதுகொண்டிருந்த பெண்கள், கிறிஸ்துவின் தாயை அவ்விடம் விட்டு கூட்டிச் சென்ற அப்போஸ்தலர் போன்ற மற்றவர்களும் வேலைமும்முரமாய் இருந்தனர். பின்பு - திடீரென்று - காட்சியை இருள் மூடுகையில் செயல்பாடு இல்லாது ஒழிந்தது: "அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி நேரமாயிருந்தது; ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று, சூரியன் இருளடைந்தது" (லூக். 23:44, 45அ; மத். 27:45; மாற். 15:33ஐக் காணவும்).

இந்த அந்தகாரத்தைப் பற்றி நாம் அறியாததவை அதிகமாக உள்ளது. அது எவ்வளவு முழுமையானது என்று நம்மால் உறுதிப்படுத்த இயலாது - இருப்பினும், ஒரு மனிதன் தன் முகத்திற்கு முன்னால் இருக்கும் கையைக் காண இயலாத அளவுக்கு அது அவ்வளவு கறுப்பாய் இருந்தது என்று எனது மனதில் நான் சித்தரிக்கின்றேன். அது எவ்வளவு தொலைவு வரையிலும் இருந்தது என்று நம்மால் உறுதிப்படுத்த இயலாது; அது அவ்விடத்தில் மாத்திரம் இருந்திருக்கலாம், அல்லது யூதேயாவுக்கு அப்பாலும் பரவியிருந் திருக்கலாம். தொடக்க காலத்தில் இருந்த கிறிஸ்தவ மற்றும் கிறிஸ்தவமற்ற, ஏவுதல் பெற்றிராத எழுத்துக்கள், இந்தக் கோட்பாடு/நிகழ்ச்சி அவிசுவாசி கள் அறிந்ததாக இருந்தது என்றும் ரோமாபுரியின் வரலாற்றுக் குறிப்பில் பதிவுசெய்யப்பட்டிருக்கவும் கூடும் என்றும் சுட்டிக்காண்பிக்கின்றன.[5]

குறைந்தபட்சம் நாம் இதை அறிய இயலும்: இந்த அந்தகாரம் என்பது இயற்கையான நிகழ்ச்சியாக இருந்ததில்லை. தேவ நம்பிக்கையற்றவர்கள் இதை ஒரு சூரிய கிரகணம் என்று விளக்கப்படுத்த முயற்சி செய்துள்ளனர், ஆனால் பஸ்கா பண்டிகையின்போது யூதேயாவில் சூரியகிரகணம் நடைபெறுதல் என்பது சாத்தியமற்றதாக இருந்தது.[6] மற்றவர்கள் இதை மேகமூட்டமான ஒரு ஆகாயம் அல்லது மணல் புயல் என்று கருதி விலக்கிப் போட்டுள்ளனர், ஆனால் சுவிசேஷ எழுத்தாளர்களின் விவரங்கள், அப்படிப்பட்ட ஒரு சாதாரண நிகழ்வின்மீது இப்படிப்பட்ட ஒரு வலியுறுத்தத்தை ஏற்படுத்தினர் என்பது பொருத்தமற்றதாக உள்ளது. இந்த அந்தகாரம் என்பது இயற்கைக்கு அப்பாற்பட்டது என்று நம்புவதற்கு - இது தோன்றிய நேரம்[7] மற்றும் சிலுவையைச் சுற்றிலும் இருந்தவர்களிடத்தில் இது விளைவித்த செயல்தாக்கம் ஆகியவை உட்பட - பல காரணங்கள் உள்ளன.[8]

### இது அர்த்தப்படுத்தியது என்ன?

இந்த அந்தகாரமானது ஒரு தெய்வீக முன்எச்சரிக்கையாக இருந்தது என்று நான் நம்புகின்றேன்: தேவன் மனிதர்களின் சூழ்ச்சிகளினால் தடைப்படுத்தப் பட்டிருந்தது இல்லை, ஆனால் தமது நித்திய

நோக்கத்தின்படியே செயல்பட்டார் என்பதற்கான ஒரு அடையாளமாக இருந்தது. வானத்திலிருந்து ஒரு அடையாளம் வேண்டும் என்று மக்கள் கேட்டார்கள் (மத். 16:1; மாற். 8:11; லூக். 11:16); அவர்கள் எதிர்பார்த்திராத ஒன்றை அவர்கள் பெற்றுக்கொண்டனர். அந்தகாரம் என்பது பாடுபடுதலின் அடையாளமாக இருந்தது: இது, இயேசு நமக்காக மரிக்கையில் அவர் கடந்து செல்ல வேண்டிய பெருந்துன்பமாக இருந்தது (1 கொரி. 15:3).[9] இது போராட்டத்தின் அடையாளமாக இருந்தது: கிறிஸ்துவுக்கும் பொல்லாங்கின் சக்திகளுக்கும் இடையிலான ஒரு உச்சகட்ட யுத்தமாக இருந்தது (ஆதி. 3:15; லூக். 22:53; எபி. 2:14). இது பிரிதலின் அடையாளமாக இருந்தது: இயேசு நமது பாவங்களுக்காக நிறைவான தண்டத்தைச் செலுத்துகையில், அவர் தமது பிதாவினால் கைவிடப்பட்டார் (மத். 27:46ஐக் காணவும்).

காலங்களின் மாபெரும் இரகசியத்தின்மீது தேவன் கறுமையின் மூடுதிரையொன்றை இழுத்துவிட்டார்: கோடிக்கணக்கான மக்களின் பாவங்களுக்காக, ஒரே ஒரு மனிதன் எவ்வாறு மரிக்க முடிந்தது என்பதே அந்த இரகசியமாக இருந்தது. இயேசுவின் மாபெரும் பாடுகளின் வேளையானது அமைதியின் வேளையாக - அவர் நமக்காகச் செய்தது என்ன என்பதை நாம் முழுமையாகப் புரிந்துகொள்வதற்கான நமது திறமையினால் கடைசியில் நாம் அமைதிப்படுத்தப்பட்ட வேளையாகக்கூட - இருந்தது.

## பூமியதிர்ச்சி: தெய்வீக வல்லமை (மத். 27:46, 50, 51ஆ, இ, 54அ; லூக். 23:46; யோவா. 19:28, 30)

இருளாயிருந்த மூன்றுமணி நேரம் முடிவதற்கு அருகான வேளையில், இயேசு "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கதறினார் (மத். 27:46). விரைவான வரிசைத் தொடரில் இன்னும் மூன்று வாக்கியங்கள் அவரது உதடுகளிலிருந்து வந்தன: "தாகமாயிருக்கிறேன்" (யோவா. 19:28); "முடிந்தது!" (யோவா. 19:30); மற்றும் "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக். 23:46). பின்பு அவர் "மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்" (மத். 27:50). அவர் இவ்வாறு செய்தபோது, திகைப்புக்குரிய பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**நடந்தது என்ன**

முதலாவது ஒரு பூமியதிர்ச்சி ஏற்பட்டது (மத். 27:54ஐக் காணவும்); பூமியானது குலுங்கத் தொடங்கிற்று (மத். 27:51ஆ). பூமியின் உறுதித்தன்மையானது ["terra firma"[10]] இனியும் உறுதியாய் இராது போகும்போது "திடமான" பூமி என்பது அவ்வளவு திடமின்றிப் போகும் போது ஏற்படும் பூமியதிர்ச்சியைப் போல் பயப்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகள் ஒரு சில மாத்திரமே உள்ளன. இந்த பூமியதிர்ச்சி ரிக்டர் அளவுகோலில்[11]

*எவ்வாறு அளவிடப்பட்டிருக்கும் என்பதை நான் அறிவதில்லை, ஆனால் அது பாறைகளைப் பிளக்கக்கூடிய (மத். 27:51இ) மற்றும் கன்மலைகளில் வெட்டப்பட்டிருந்த கல்லறைகளைத் திறக்கச் செய்யக்கூடிய (மத். 27:52அ) அளவுக்கு அதிக வன்மையானதாக இருந்தது.*

*இந்த பூமியதிர்ச்சியானது ஒரு பெரிய பாறையானது இன்னொரு பாறையின்மீது மோதக்காரணமாயிருந்த, பூமியின் உள்ளாக ஏற்பட்ட அழுத்த உயர்வினால் மாத்திரம் நடைபெற்றிருந்ததில்லை.*[12] *இந்த நிகழ்ச்சியின் காலவேளை மற்றும் செயல்விளைவுகள் ஆகியவற்றில் தேவனுடைய கரம் காணப்படுகிறது. பூமியதிர்ச்சியானது இயேசுவின் மரண வேளையுடனும் (மத். 27:50, 51) தேவாலயத்தின் திரைச்சீலை கிழியப் படுதலுடனும் (மத். 27:51), மற்றும் குறிப்பிட்ட சில கல்லறைகள் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்ட வகையில் திறவுண்டதுடனும் (மத். 27:51, 52) ஏக காலத்தில் நடைபெற்றது. இதை அனுபவித்தவர்களின்மீது இது கொண்டிருந்த செயல்விளைவிலும் தேவனுடைய நோக்கம் தெளிவாகியுள்ளது (மத். 27:54).*

***இது அர்த்தப்படுத்தியது என்ன***

*பூமியதிர்ச்சி என்பது தெய்வீக வல்லமையின் செயல்விளக்கமாக இருந்தது. சீனாய் மலையின்மீது நியாயப்பிரமாணம் தரப்பட்டபோது, "மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது" (யாத். 19:18). இப்போது, அந்தப் பிரமாணத்தை இயேசு நிறைவேற்றி [தீர்த்து] வைத்தபோது,*[13] *பூமி மீண்டும் அதிர்ந்தது. பூமியதிர்ச்சியானது இயற்கையின்மீது செயல்தாக்கம் செய்வதற்குத் தேவனுடைய வல்லமையைச் செயல்விளக்கப்படுத்திற்று, ஆனால் இது அதைவிட அதிகமானதைக் காண்பித்தது. இது, இருதயத்தைத் தொடுவதற்கான அவருடைய வல்லமையையும் உறுதிப்படுத்திற்று: "நூற்றுக்கு அதிபதியும், அவனோடே கூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும் பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: 'மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்' என்றார்கள்!" (மத். 27:54). இது கிறிஸ்துவின் மரணத்துடன் ஏக காலத்தில் நடைபெற்ற வகையில், இது பாவத்தை அழிப்பதற்கான தேவனுடைய வல்லமையின் அடையாளமாகவும் இருந்திருக்கலாம்.*

## *திரைச்சீலை கிழிபடுதல்: ஒரு தெய்வீக நோக்கம் (மத். 27:50, 51அ; மாற். 15:37, 38; லூக். 23:45ஆ)*

***நடந்தது என்ன***

*மூன்றாவது அற்புதத்தைக் காண்பதற்கு, நாம் கொல்கொதாவை விட்டுப் புறப்பட்டு, தெற்கு நோக்கி நகர வாயிலுக்குள் சென்று, தேவாலயப் பகுதிக்குச் செல்ல வேண்டும். இயேசு தமது கடைசி வாக்கியத்தைக் கூறி, அந்தப் பகுதியில் பூமியதிர்ச்சி ஏற்பட்டபோது, தேவாலயத்தின் உட்புறத்*

தில் முன் எப்போதும் நடைபெற்றிராத ஒன்று நடந்தேறிற்று: "... தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது" (மத். 27:51அ; மாற். 15:38; லூக். 23:45ஆ-வைக் காணவும்[14]).

வழக்கத்திற்கு மாறான இந்த நிகழ்ச்சியின் தனிச்சிறப்பைப் புரிந்து கொள்வதற்கு, நாம் இதன் காட்சி அமைவையும் பின்பு இந்த நிகழ்ச்சியை யுமே கூட மனக்கண்களால் காணவேண்டியது அவசியமாக உள்ளது. இயேசு மாலை ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்தில், அதாவது மாலை 3:00 மணியளவில் மரித்தார் (மத். 27:46; அப். 3:1ஐக் காணவும்). அந்த வேளையில், ஆண்களும் பெண்களுமாக, விசுவாசமுள்ள யூதர்கள், பெண்களின் மண்டபத்தில் ஒன்றுகூடினர். அவர்கள் ஜெபிக்கையில், ஒரு ஆசாரியர், தூபவர்க்கம் காட்டுவதற்காகத் தேவாலயத்தினுள் சென்றார்.

நீங்கள், அந்த நாளில் பரிசுத்த ஸ்தலத்தினுள் சென்று தூபவர்க்கம் காட்டும் சிலாக்கியம் பெற்ற ஆசாரியராக இருந்ததாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இது உங்கள் வாழ்வில் ஒருமுறை மாத்திரம் கிடைக்கக் கூடிய பேறாக இருக்கலாம். நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தினுள் பிரவேசிக்கும் போது உங்கள் நாடி விரைவாய்த் துடிக்கிறது. உங்களுக்கு நேராக, மகாபரிசுத்த ஸ்தலத்தை மூடிமறைக்கும் திரையின் முன்னால் தூபவர்க்கம் காட்டும் ஒரு சிறு பீடம் உள்ளது.[15] மகாபரிசுத்த ஸ்தலம் என்பது அதன் பெயரே கருத்துத் தெரிவிக்கிறபடி, பூமியில் உங்களுக்கு மிகவும் பரிசுத்த மான இடமாக உள்ளது. (அந்த பரிசுத்த இடத்தினுள் செல்வதற்குப் பிரதான ஆசாரியருக்கு மாத்திரம், அதுவும் ஆண்டிற்கு ஒருமுறை பாவ நிவிர்த்தி பண்டிகையின்போது மாத்திரம் அனுமதியளிக்கப்பட்டது; எபி. 9:7; யாத். 30:10; லேவி. 16:29-34ஐக் காணவும்.)

நீங்கள் பொன்னால் ஆன பீடத்தை நோக்கி முன்செல்லுகையில், அதற்குப் பின்னால் இருந்த 30 அடிகள் நீளமும் 30 அடிகள் அகலமும் கொண்ட (9மீட்டர்களுக்கு 9மீட்டர்கள்), கனத்த திரை[16] உங்கள் மனதை ஈர்க்காமல் இருக்க முடியாது. ஆசரிப்புக் கூடாரத்திற்கு இவ்விதமான திரையொன்றை ஏற்படுத்த வேண்டும் என்று மோசேக்கு அறிவுறுத்தப் பட்டிருந்தது:

> "இளநீல நூலும் இரத்தாம்பர நூலும் சிவப்பு நூலும் திரித்த மெல்லிய பஞ்சு நூலுமான இவற்றால் ஒரு திரைச்சீலையை உண்டு பண்ணக்கடவாய்; அதிலே விசித்திர வேலையால் செய்யப்பட்ட கேரூபீன்கள் வைக்கப்படவேண்டும். சீத்தீம் மரத்தினால் செய்து, பொன்தகட்டால் மூடப்பட்ட நாலு தூண்களிலே அதைத் தொங்கவிடு; அந்தத் தூண்கள் நாலு வெள்ளிப்பாதங்கள்மேல் நிற்கவும், அவைகளின் கொக்கிகள் பொன்னினால் செய்யப்படவும் வேண்டும். கொக்கிகளின் கீழே அந்தத் திரைச் சீலையைத் தொங்கவிட்டு, சாட்சிப் பெட்டியை அங்கே திரைக்குள்ளாக வைக்கக்கடவாய்; அந்தத் திரைச்சீலை பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் பிரிவை உண்டாக்கும்" (யாத். 26:31-33).

சாலொமோன் தேவாலயத்தைக் கட்டியபோது, அவரும் இதே போன்ற

அறிவுறுத்தல்களைப் பெற்றிருக்கலாம், ஏனெனில் “[சாலொமோன்] இளநீல நூலாலும், இரத்தாம்பர நூலாலும், சிவப்பு நூலாலும், மெல்லிய நூலாலும் திரையையும் அதிலே கேருபீன்களின் உருவங்களையும் உண்டுபண்ணி னான்” (2 நாளா. 3:14). ஏரோதுவின் தேவாலயத்தில்[17] இருந்த திரைச் சீலையானது அநேகமாக அதே மாதிரியைப் பின்பற்றினதாக இருந்திருக்க லாம். பரிசுத்த ஸ்தலத்தினுள் நுழையும் ஒரு ஆசாரியருக்கு, பிரம்மாண்ட மான இந்த திரை எவ்வாறு காணப்பட்டிருக்கும் என்பதை நிக்கொல்ஸன் அவர்கள் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்:

> அது ஆர்வத்தைத் தரவழைக்கும் நெசவாக இருந்தது. “நேர்த்தியாக - முறுக்கப்பட்ட சணல் நூல்” என்ற அடித்தளத்தில் இளநீலம், இரத்தாம்பரம் மற்றும் சிவப்பு வண்ணங்கள் காட்சிப் படுத்தப் பட்டிருந்தன. அந்த மூன்று வண்ணங்களும் ... ஒரு பெரிய கேருபீனுக்குள்ளாக நெய்யப்பட்டிருந்தன. அது வாழ்வு மற்றும் வல்லமை ஆகியவற்றின் கருத்தை [பொதிந்துவைத்த] திரையாக இருந்தது, அதே வேளையில் அந்தத் திரை அழகையும் மகிமையையும் காட்சிப்படுத்திற்று ...
>
> பொன்குத்து விளக்கி[குகளி]ன்[18] வெளிச்சத்தில் அது எவ்வளவாய் மனதை ஈர்ப்பதாக இருந்திருக்க வேண்டும்! அது தனக்குப் பின்னால் இருந்த மாபெரும் மகிமையை மறைப்பதற்காக அங்கு தொங்கியதால், அது என்ன ஒரு பயபக்தியை மனதில் நிறைப்பதாக இருக்க வேண்டும். கேரூபின்களில் சித்தரிக்கப்பட்ட காவல்செய்யும் கவனிப்பு உணர்வின் வெளிப்பாட்டினால், அது “இவ்வளவு தூரமே, ஆனால் இனியும் அதிகமாய் தூரம் செல்லக்கூடாது” என்று அமைதியாக ஆனால் பரிசுத்த உறுதியுடன் எப்போதும் கூறிக்கொண்டிருந்தன.[19]

நீங்கள் திரையை விட்டு உங்கள் கண்களைத் திருப்பி, உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட கடமையைச் செய்வதற்கு ஆயத்தமாகின்றீர்கள். பீடத்தின் நெருப்பில் நீங்கள் தூபவர்க்கத்தைத் தெளிக்கையில், தேவாலயத் துத் தரையானது உங்கள் பாதங்களுக்குக் கீழ் குலுங்கத் தொடங்குவதால் நீங்கள் தரையில் முழந்தாள்படியிடுகின்றீர்கள்.[20] பின்பு, ஒத்தவகையற்ற ஒரு காரியம் நடைபெறுகிறது: நீங்கள் [துணி கிழிபடும்] சத்தத்தைக் கேட்கின்றீர் கள். உங்கள் தலைக்கு மேலே இருபது அடிகளுக்கும் கூடுதலான உயரத்தில், திரையின் உச்சியில், மையப்பகுதியில் ஒரு சிறு கிழிசல் தோன்றுவதை நீங்கள் காண்கின்றீர்கள். திடுக்கிடும் கண்களுடன் நீங்கள் கவனித்துக் கொண்டிருக்கையில், அந்தக் கிழிசலானது நேராகத் திரையின் கீழ்நோக்கி வந்து, அந்தத் துணியானது இரு துண்டுகளாகக் கிழிபடும் வரையில் - கீழே, கீழே - இறங்குகிறது, உங்களால் மகா பரிசுத்த ஸ்தலத்தின் இரகசியமான நிழல்களுக்குள் கண்ணோக்க முடிகிறது! இது நீங்கள் ஒருக்காலும் மறக்காதிருக்கும் விஷயமாக - உங்கள் பேரக்குழந்தைகளுக்கு [ம்] நீங்கள் கூறும் விஷயமாக உள்ளது!

திகைப்புக்குரிய இந்த நிகழ்ச்சியை விமர்சகர்கள் விளக்கியுரைக்க முயற்சி செய்துள்ளனர். “திரையானது பூமியதிர்ச்சியினால் கிழிக்கப் பட்டது” என்று அவர்கள் கூறுகின்றனர் - ஆனால் அவர்களின் “விளக்கம்”

இணங்க வைப்பதில் குறைவுபடுகிறது. எடுத்துக்காட்டாக, அந்த பூமியதிர்ச்சியானது தளர்வாக, அலைபாயும் வகையில் தொங்கவிடப் பட்டிருந்த திரையைப் பாதிக்கும் அளவுக்கு வல்லமையுள்ளதாக இருந்த தென்றால், அது ஏன் தேவாலயத்தைச் சேதப்படுத்தவில்லை? மற்றும், ஒரு பூமியதிர்ச்சி திடமான பொருட்களை அழிக்க முடியும் என்றிருக்கையில், அது ஒரு துணித்துண்டின்மீது சிறிதளவே செயல்விளைவு கொண்டிருக்கும். “ஓ, அந்தத் திரையானது அநேகமாக பழையதாகவும், செல்லரித்துக் கெட்டுப்போனதாகவும், விலகி விழுந்துபோகத் தயாரானதாகவும் இருந்திருக்கும்” என்று அவிசுவாசிகள் கூறுகின்றனர். விஷயம் அப்படி யிருந்தது என்றால், அந்தத் திரையானது துண்டுதுண்டாகக் கிழிந்திருக்க வேண்டும், ஆனால் இவ்வாறு நடக்கவில்லையே. இதற்குப் பதிலாக, அது “இரண்டாகக் கிழிந்தது” (லூக். 23:45). இல்லை, திரை கிழிந்துபோன நிகழ்ச்சி இயற்கைச் சக்திகளின் விளைவாக இருக்கவில்லை.

[திரை] கிழிந்துபோன நிகழ்ச்சியானது மனிதர்களின் வன்முறையின் காரணமாக ஏற்படவுமில்லை. மனிதர்கள் (கற்பனை செய்ய இயலாத சில காரணத்திற்காக) திரையைக் கிழிக்க முடிவு செய்திருந்தால், ஒருவர் அந்தத் திரையின் கீழ்ப்பகுதியில் ஒரு பக்கம் பிடித்துக்கொள்ள, இன்னொருவர் அதே கீழ்ப்பகுதியில் இன்னொரு பக்கம் பிடித்துக்கொண்டு அதைச் செய்திருப்பார்கள். அவர்கள் அவ்வாறு இழுக்கும்போது, திரையானது கீழிலிருந்து மேலாகக் கிழிபட்டிருக்கும். இருப்பினும், “தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது” என்று வேதவசனம் தெளிவாகக்கூறுகிறது (மத். 27:51அ). இது காணப்படாத சக்தி களினால், தேவனுடைய கரத்தினாலேயே கிழிக்கப்பட்டது என்பது மாத்திரமே முடிவாக உள்ளது.[21]

### இது அர்த்தப்படுத்தியது என்ன

இந்த தனி நிகழ்ச்சியிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் அல்லது பாடங்கள் என்ன? திரை கிழிதல் என்பது சிலுவைக்கான தெய்வீக நோக்கத்துடன் நேரடியாகப் பிணைவுபடுகிறது. நாம் மூன்று பாடங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போம்:

(1) திரை அழிக்கப்படுதல் என்பது பழைய உடன்படிக்கையின் (பழைய ஏற்பாட்டின்) முடிவைப் பறைசாற்றியது.[22] திரை கிழிபடுதலும், இயேசுவின் மரணமும் ஒரே வேளையில் நடைபெற்றதால் புதிய உடன்படிக்கையை (ஏற்பாட்டை) தொடங்கி வைத்தது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், “ஏனென்றால், எங்கே மரணசாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரண சாதனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே” என்று கூறினார் (எபி. 9:16, 17). இயேசுவின் மரணம் பழைய உடன்படிக்கையின் முடிவையும் (கொலோ. 2:14) புதிய உடன்படிக்கையின் தொடக்கத்தையும் பறைசாற்றியது.

(2) திரை கிழிபட்டதினால் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு வழி திறக்கப்

*பட்டது போலவே, இயேசுவின் மாம்சம் கிழிக்கப்பட்ட நிகழ்ச்சியானது அவர் பரலோகத்தில் உள்ள மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் திரும்பவும் செல்லுதலை முன்னெதிர் நோக்கியது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் பரலோகத்திற்கும், மற்றும் தேவாலயத் திரைச்சீலைக்கும் இயேசுவின் மாம்சத்திற்கும் இடையில் இணைவு ஒன்றை வரைந்தார்/கொண்டுவந்தார். அவர், "ஆகையால், சகோதரரே, … இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிற[து]" என்று எழுதினார் (எபி. 10:19, 20).*

*(3) இயேசுவின் மரணத்தின் மூலமாக, தேவனுடைய வழியானது எல்லா மக்களுக்கும் திறக்கப்பட்டது என்பதே, திரைச்சீலை கிழிந்ததினால் கிடைக்கும் செயல் வலிவுமிகுந்த பாடமாயிருக்கலாம். முன்பே குறிப்பிட்டபடி, தேவாலயத்தில், பிரதான ஆசாரியர் மாத்திரம் திரைச்சீலையைக் கடந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டார். திரைச்சீலை நீக்கப்பட்டபோது, மற்றவர்கள் அந்த இரகசியமான வட்டாரத்தினுள் எட்டிப் பார்க்கவும் ஒருவேளை அதற்குள் பிரவேசிக்கவும் முடிந்திருந்தது. நாம் சற்று முன் வாசித்த வேத வசனப் பகுதிகளில், தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் இருந்த தடைச்சுவரானது நீக்கப்பட்டிருந்தது என்பதை எழுத்தாளர் தெளிவாக்கியிருந்தார். இப்போது நீங்களும் நானும், "இயேசுவின் இரத்தத்தினாலும், அவரது மாம்சமாகிய திரையின் மூலம் அவர் தொடங்கி வைத்த புதிதும் ஜீவனுமான மார்க்கத்தினாலும் [பரலோகத்தில் உள்ள] மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கும் தைரியத்தைப் பெற்றுள்ளோம்." எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரின் சிந்தனை இதற்குப் பின்வரும் வசனங்களில் தொடருகிறது: "தேவனுடைய வீட்டின் மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், … உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் [தேவனிடத்தில்] சேரக்கடவோம்" (எபி. 10:21, 22ஆ).*

*தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் இருந்த தடைச்சுவர் நீக்கப்பட்டது மட்டுமின்றி, "விசேஷித்த" ஆசாரியர்கள் மற்றும் தேவனுடைய "சாதாரண" பிள்ளைகள் ஆகியோருக்கிடையில் இருந்த தடைச்சுவராகிய திரையும் நீக்கப்பட்டது (1 பேது. 2:5, 9ஐக் காணவும்). இது மக்களுக்கிடையில் இருந்த தடைச்சுவர்களை நீக்குவதையும் அறிவித்தது என்றும் நாம் கருத்துத் தெரிவிக்கலாம் (எபே. 2:14-16ஐக் காணவும்). அந்த "திரையை" நாம் மீண்டும் அது முன்பிருந்த இடத்திற்கு இழுத்து விடாதபடி எச்சரிக்கையாய் இருக்கக் கடவோம்![23]*

## *மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுதல்: ஒரு தெய்வீக வாக்குத்தத்தம் (மத். 27:51ஆ-53)*

***நடந்தது என்ன***

*இப்போது நாம், வேதாகமத்தின் மிகவும் அசாதாரணமான அற்புதங்களில் ஒன்றினிடத்திற்கு வருகின்றோம், ஆனால் இது சிக்கனமான வார்த்தைகளில் விவரிக்கப்பட்டுள்ளது. மத்தேயு 27ம் அதிகாரமானது, பூமியதிர்ச்சியினால் "கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது; அவர் உயிர்த்தெழுந்த பின்பு, இவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள்'' என்று கூறுகிறது (வ. 51ஆ-53). இதை நாம் இரண்டு அற்புதங்கள் என்று நினைக்க முடியும்: (1) கல்லறைகள் திறக்கப்படுதல் மற்றும் (2) மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுதல். கல்லறைகள் அநேகமாக, வெள்ளிக்கிழமை (பூமியதிர்ச்சி ஏற்பட்டபோது) தாமதமாகத் திறவுண்டிருக்கலாம், ஆனால் ஞாயிற்றுக்கிழமை காலை (ஒருவேளை இயேசு உயிர்த்தெழுந்த அதே நேரம்) வரையிலும் பரிசுத்தவான்கள் உயிர்ப்பிக்கப்படவில்லை. இருப்பினும், மத்தேயு இவ்விரு நிகழ்ச்சிகளையும் ஒன்றுகலந்தார், எனவே நாமும் அவ்வாறே செய்வோம்.*

*நடந்தது என்ன என்பதைப் பற்றி நாம் ஒரு நெருக்கமான பார்வையை மேற்கொள்ளுவோம்: பூமியதிர்ச்சியானது கன்மலைகளைப் பிளந்தபோது, அது கொல்கொதாவிலிருந்து காணக்கூடிய தொலைவுக்குள் இருந்த சில கல்லறைகளை வெடித்துத் திறக்கச் செய்தது.[24] இந்த நிகழ்ச்சியில், தேர்ந்து கொள்ளப்பட்ட சில கல்லறைகளே திறவுண்டன; இவைகளில் இருந்து "பரிசுத்தவான்கள்" மாத்திரமே பிற்பாடு உயிர்ப்பிக்கப்பட்டனர் என்பது இக்கல்லறைகளைப் பற்றிய மறைவான குறிப்பிடுதலாக உள்ளது. இந்தப் "பரிசுத்தவான்கள்" என்பவர்கள் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களாக இருந்திருப்பார்கள் (சங். 34:9ஐக் காணவும்)[25] - இவர்கள் நியாயப் பிரமாணத்தின் கீழ்த் தங்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக வாழ்ந்து மரித்தவர்களாய் இருந்திருப்பார்கள்.*

*பூமியதிர்ச்சியானது கல்லறைகளைத் திறந்தபோது, அந்தப் பரிசுத்தவான்களின் சரீரங்கள் வெளியாக்கப்பட்டிருக்கும். இருப்பினும், மரித்தவர்களின் அந்த உடல்களை தூக்கிப்போடுதல் என்பது அவர்களைத் தொடுதல் என்பதைச் சுமத்துவதாக இருக்கும். அவற்றைத் தொட்டவர்கள் சடங்காச்சார ரீதியாக அசுத்தமானவர்களாய் இருந்திருப்பார்கள் (எண். 19:11). சடங்காச்சார ரீதியாக அசுத்தமானவர்கள், ஓய்வுநாளின் விசேஷித்த உணவை உண்பதற்கு அனுமதிக்கப்படாதிருந்தனர். மற்றும் மக்கள் ஓய்வுநாளில் வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படாதிருந்தனர் (யாத். 20:8-11). ஆகையால், அந்த உடல்கள் வெள்ளிக்கிழமையின் எஞ்சிய வேளை, சனிக்கிழமை மற்றும் ஒருவேளை ஞாயிற்றுக்கிழமையின் ஒரு பகுதி ஆகிய நாட்களில் எல்லாரும் காணும்படி வெளிப்படுத்தப்பட்டுக் கிடந்*

திருக்கலாம்.

பின்பு, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு - அநேகமாக அவர் உயிர்த்தெழுந்த பின்பு உடனடியாக - இந்தப் பரிசுத்தவான்களைத் தேவன் எழுப்பினார். அவர்கள் கல்லறைகளை விட்டு வெளியேறி, "பரிசுத்த நகரத்தில் [எருசலேமில்] பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள்" (மத். 27:53). இந்த நிகழ்ச்சியைப் பற்றி நாம் அறியாதவை ஏராளமாக உள்ளன. உயிர்ப்பிக்கப்பட்டவர்கள் எருசலேம் குடிகளால் அறியப் பட்டவர்களாய் இருந்தனர்[26] என்று மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டா லும், யாரெல்லாம் உயிர்ப்பிக்கப்பட்டனர் என்று நாம் அறிவதில்லை. மத்தேயு இந்த நிகழ்ச்சிகளைப் பதிவு செய்த வழிமுறையானது, அவரது சுவிசேஷ விவரத்தினுடைய உண்மைத் தன்மையை, எருசலேமில் அப்பொழுது வாழ்ந்து கொண்டிருந்தவர்களில் பலர் சாட்சி கொடுக்கக் கூடியதை மறைமுகமாய் உணர்த்தினாலும், அவர்கள் [உயிர்ப்பிக்கப் பட்டவர்கள்] யாருக்குக் காணப்பட்டார்கள் என்பதை நாம் அறிவதில்லை. அவர்களுடைய உயிர்த்தெழுதலின் மிகச் சரியான இயல்பைக்கூட நாம் நிச்சயமாக அறிவதில்லை. பழைய ஏற்பாட்டின் காலத்திலும், கிறிஸ்துவின் ஊழியத்தின்போதும், உயிர்ப்பிக்கப்பட்டிருந்தவர்கள் போலவே இவர் களும் மாம்சத்திற்குரிய மரணத்தை மீண்டும் அனுபவிக்க வேண்டியிருந்தது என்று நாம் யூகித்துக் கொள்ளலாம்.[27]

நாம் அறியாத விஷயங்கள் இவ்வளவு இருப்பினும், இந்த நிகழ்ச்சி எவ்வளவு பெரிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருக்கும் என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். இந்த நிகழ்ச்சியை எண்ணிக்கையில் சேர்க்காமல், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் உயிர்ப்பிக்கப்பட்டவர் களை உங்கள் கை விரல்களினாலேயே எண்ணிக் கணக்கிட்டு விட முடியும்[28] - ஆனால் இவ்விடத்தில், ஒரே வேளையில், "அநேக பரிசுத்தவான்கள் ... எழுந்திருந்த[னர்]"! ஆச்சரியமான விஷயம்!

### இது அர்த்தப்படுத்தியது என்ன

இந்த நிகழ்ச்சியைப் பற்றி நாம் அறிய விரும்பும் ஒவ்வொரு விஷயத் தையும் இந்த வாழ்க்கையில் நாம் ஒருபோதும் அறியமாட்டோம். இருந்தபோதிலும், இந்தப் பரிசுத்தவான்கள், "அவர் [இயேசு] உயிர்த் தெழுந்த பின்பு" உயிர்ப்பிக்கப்பட்டனர் என்ற உண்மையானது, நாம் அவருடைய உயிர்த்தெழுதலையும் அவர்களின் உயிர்த்தெழுதலையும் தொடர்பு படுத்த வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கிறது. அவருடைய உயிர்த்தெழுதல் - நமது உயிர்த்தெழுதலைச் சாத்தியமாக்குவது போலவே - அவர்களின் உயிர்த்தெழுதலை [யும்] சாத்தியமாக்கிற்று என்பது தெளிவான முடிவாக உள்ளது. பவுல், "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரைய [மரணம]டைந்தவர்களில் முதற்பலனானார்[29]" என்று எழுதினார் (1 கொரி. 15:20). ஆகையால், இந்த அற்புதமானது ஒரு தெய்வீக வாக்குத்தத்தத்தை அறிவிக்கிறது: நாம் தேவனு டைய "பரிசுத்தவான்களாக" (அதாவது, உண்மை நிறைந்த கிறிஸ்தவர்களாக) இருந்தால், பின்பு நாமும்கூட "கடைசி நாளில்" (யோவா.

*6:40) தேவனுடைய வல்லமையினால் மகிமையில் உயிர்ப்பிக்கப்படுவோம்! பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> *... நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை [அதாவது, மரிப்பதில்லை; கிறிஸ்து வருகின்ற வேளையில் நம்மில் சிலர் உயிருடன் இருப்போம்], ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர் களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும் ... நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொரி. 15:51-57).*

*என்ன ஒரு வாக்குத்தத்தம்!*

## *முடிவுரை*

*நீங்கள் சிலுவையைக் கண்ணோக்கும்போது, உங்கள் இருதயம் தொடப்படாமல் இருந்துவிடக் கூடுமா? ஆகாயம் தொடப்படாது இருந்த தில்லை; அது அந்தகாரமாக்கப்பட்டிருந்தது. கன்மலைகள் தொடப்படாது இருந்ததில்லை; அவைகள் பிளவுபடுத்தப்பட்டிருந்தன. திரைச்சீலையானது தொடப்படாது இருந்ததில்லை; அது மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிக்கப்பட்டிருந்தது. பழைய உடன்படிக்கையின் பரிசுத்தவான்கள் சிலருடைய கல்லறைகள் தொடப்படாது இருந்ததில்லை; அவைகள் திறக்கப்பட்டிருந்தன. அந்தப் பரிசுத்தவான்களே கூடத் தொடப்படாது இருந்ததில்லை; அவர்கள் வாழும்படிக்கு உயிர்ப்பிக்கப்பட்டிருந்தனர். சிலுவையைச் சுற்றிலும் இருந்த கடினமான இருதயங்களும்கூடத் தொடப் பட்டிருந்தன. நடந்தது என்ன என்பதை மனிதர்கள் கண்டபோது, அவர்கள் "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" என்று சத்தமிட்டுக் கூறினார் கள் (மத். 27:54; மாற். 15:39; லூக். 23:47, 48ஐக் காணவும்). உங்களைப் பற்றிய விஷயம் என்ன? இந்தப் பிரசங்கத்தினால் உங்கள் இருதயம் தொடப்பட்டிருந்தால், தயவுசெய்து இன்றே [இப்பொழுதே] பதில்செயல் செய்யுங்கள்.[30]*

---

குறிப்புகள்

[1]*இந்தப் பிரசங்கத்திற்கான கருத்து,* William R. Nicholson, *The Six Miracles of Calvary* (Chicago: Moody Press, *1928) என்ற புத்தகத்திலிருந்து வந்துள்ளது. நிக்கொல்ஸனின் "ஆறு அற்புதங்களில்" வெறுமையான கல்லறையில் துணிகள்*

ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தது உள்ளடக்கப்பட்டும், மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டதில் இருந்து கல்லறைகள் திறவுண்டது தனிப்படுத்தப்பட்டும் இருந்தது. இந்தப் பிரசங்கத்தில் நான்கே நான்கு அற்புதங்கள் மாத்திரம் குறிப்பிடப்படுகின்றன: இது கல்லறைத் துணிகள் என்பதை உள்ளடக்குவதில்லை மற்றும் கல்லறைகள் திறக்கப்படுதலையும் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுதலையும் ஒன்றாக இணைத்துள்ளது. [2]உலகின் மிக உயரமான மலையான எவரெஸ்ட்டு மலைச்சிகரம், நேப்பாளம் மற்றும் திபெத் ஆகிய நாடுகளின் எல்லைப் பகுதியில், மத்திய இமயமலையில் அமைந்துள்ளது. இது இரண்டு சிகரங்களைக் கொண்டுள்ளது, அவற்றில் (வடக்குச் சிகரம் என்று அழைக்கப்படுகிற) மிக உயரமான சிகரம் *29,035* அடிகள் *(8,853.5* மீட்டர்கள்) உயரம் உள்ளது. [3]Nicholson, *17.* [4]"Portent" என்பது நடக்கவிருக்கும் நினைவுகூரத்தக்க (அல்லது அழிவிற்குரிய) ஒன்றைச் சுட்டிக்காண்பிக்கும் அடையாளமாக உள்ளது. [5]"ஃபிளெகோன் என்ற ரோம வரலாற்றாளர் இந்த அந்தகாரம் பற்றிப் பதிவு செய்துள்ளதாக ஓரிகென் மற்றும் ஈசுபியஸ் என்ற எழுத்தாளர்கள் கூறுகின்றனர்" (R. C. Foster, *Studies in the Life of Christ* [Grand Rapids, Mich.: Baker Book House, 1971], 1282). தொடக்க காலத்தில் கிறிஸ்தவத்திற்காக வாதாடிய தெர்த்துல்லியன் என்பவர், இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்ட ரோமப் பதிவேடு ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் (Tertullian *Apology* 21.20). [6]"ரோமச்சிலுவையில் ஆறுமணி நேரங்கள்" என்ற முந்திய பாடத்தில் ஏற்படுத்தப்பட்ட விவாதங்களுடன் கூடுதலாகப் பின்வரும் கருத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள்: ஒரு கிரகணம் என்பது ஒரு சில நிமிடங்களே நீடிக்கிறது, ஆனால் இந்த அந்தகாரம் மூன்று மணிநேரங்கள் நீடித்திருந்தது. [7]இந்தப் புத்தகத்தில் "ரோமச்சிலுவையில் ஆறுமணி நேரங்கள்" என்ற பாடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள "காலவேளை" பற்றிய விவாதங்களை நீங்கள் மீண்டும் கூற விரும்பலாம். [8]மூன்று மணிநேரங்கள் அந்தகாரம் பற்றி வேதவசனத்தின் அமைதியானது, அடாவடித்தனமாய் இருந்த கும்பல் அமைதிப்படுத்தப் பட்டிருந்ததைச் சுட்டிக் காண்பிக்கலாம்; மூன்று மணி நேரத்திற்கு முன்பு, கூட்டத்தினர் இகழ்ந்தனர்; மூன்று மணிநேரங்களுக்குப் பின்பு, கூட்டத்தில் இருந்தவர்கள் தங்கள் மார்பில் அடித்துக் கொண்டனர் (லூக். *23:48*). [9]இந்தப் புத்தகத்தில், "இயேசு சிலுவையில் மரிக்கவேண்டியிருந்தது ஏன்?" என்ற துணைப்பாடத்தில் காணவும். [10]"Terra firma" என்பது "உறுதியான பூமி" அல்லது "திடமான தரை" என்று அர்த்தப்படுகிற இலத்தீன் சொற்றொடராகும்.

[11]ரிக்டர் அளவுகோல் என்பது பூமியதிர்ச்சிகளின் பரிமாணத்தை (பலத்தை) மதிப்பிடுகிறது. இது, இந்தப் பரிமாண அளவீடுகளைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்த சார்லஸ் ரிக்டர் என்பவருக்கு மதிப்பளிக்கும் வகையில் அவரது பெயரால் அழைக்கப்படுகிறது. [12]இது பூமியதிர்ச்சியை உண்டாக்குகிற நிகழ்ச்சிகளின் வழக்கமான வரிசைத் தொடராக உள்ளது. இந்த இயக்கத்தைத் தேவன் பயன்படுத்தியிருக்கலாம், ஆனால் இந்த நிகழ்ச்சி நடைபெற்ற காலந்தவறாமை என்பது, இதில் உள்ளடங்கி இருப்பதைக் காட்டிலும் அதிகமானவற்றைச் சுட்டிக்காண்பிக்கிறது. தேவனே இதை நேரிடச் செய்தார். [13]"ரோமச்சிலுவையில் ஆறுமணி நேரங்கள்" என்ற பாடத்தில் "முடிந்தது" என்ற வார்த்தைக்கான குறிப்புகளைக் காணவும். [14]திரைச்சீலை கிழிந்தது பற்றிய விவரத்தை நாம் லூக்கா சுவிசேஷத்தில் மாத்திரம் கொண்டிருந்தால் (லூக். *23:44, 45*), கிழிந்த இச்செயலானது அந்தகாரமாயிருந்த மூன்றுமணி நேரங்களில் ஏதோ ஒரு வேளையில் நடந்தது என்று முடிவு செய்திருக்கலாம். லூக்காவின் விவரத்தை மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோரின் விவரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது "ஒன்பதாம் மணி நேரத்தின்" முடிவில் திரைச்சீலை கிழிந்தது என்று நாம் புரிந்துகொள்ளுகின்றோம்.

[15]இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள தேவாலயத்தின் வரைபடத்தைக் காணவும். [16]1 இராஜாக்கள் 6:20ஐக் காணவும். ஒரு முழம் என்பது ஒரு மனிதனின் முழங்கையின்மூட்டுப் பகுதியில் இருந்து அவனது நடுவிரலின் நுனி வரையுள்ள நீளமாக இருந்தது, இது ஏறக்குறைய ஒன்றை அடி நீளம் (43 முதல் 56 சென்டிமீட்டர் வரை) இருந்தது. 30 அடி உயரமும் 30 அடி அகலமும் கொண்ட திரையை உங்கள் உரையைக் கேட்பவர்கள் காட்சிப்படுத்திக் கொள்வதற்கு, தோராயமாக 30 அடி உயரம் கொண்ட ஏதாவது ஒரு பொருளையும் தோராயமாக 30 அடி அகலம் கொண்ட ஏதாவது ஒரு பொருளையும் சுட்டிக்காண்பியுங்கள். [17]பாபிலோனியர்கள் எருசலேமை அழித்தபோது, சாலொமோன் கட்டிய தேவாலயம் அழிக்கப்பட்டது. அது செருபாபேல் என்பவராலும் பின்பு ஏரோதுவினாலும் திரும்பவும் கட்டப்பட்டிருந்தது. [18]ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் ஏழு கிளைகளையுடைய விளக்குத்தண்டு ஒன்று இருந்தது (யாத். 25:31-35), ஆனால் சாலொமோனின் தேவாலயத்தில் பத்து விளக்குத் தண்டுகள் இருந்தன (1 இரா. 7:49). [19]Nicholson, 41. [20]பூமியதிர்ச்சி கொல்கொதாவுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை (அது அருகில் இருந்த கல்லறைகளுக்கும் விரிவாகிச் சென்றது மத். 27:51, 52) என்பதாலும், பூமியதிர்ச்சியும் திரைச்சீலை கிழிதலும் வேத வசனத்தில் தொடர்பு படுத்தப் பட்டுள்ளதாலும் (மத். 27:51), தேவாலயம் இருந்த பகுதியும் பூமியதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டிருக்கும் என்று யூகிக்கப்படுகிறது.

[21]திரையானது கிழிபட்ட திகைப்புக்குரிய வழியானது எல்லா ஆசாரியர் களுக்கும் அநேகமாக அறியப்பட்டிருக்கும் என்பதால், இது பல ஆசாரியர்கள் கிறிஸ்தவர்களாகும்படி (அப். 6:7) வழிநடத்திய காரணிகளில் ஒன்றாக இருந்ததோ என்று சிலர் வியப்படைகின்றனர். [22]திரைச்சீலை கிழிந்ததை நான், முடிக்கப்பட்ட ஒரு ஒப்பந்தம் (வீட்டுக் கடன் மீதான பத்திரங்கள் போன்றவை, அந்தக் கடன் செலுத்தித் தீர்க்கப்பட்டபின்பு) கிழிக்கப்படுதலுடன் ஒப்பிடுகின்றேன். அப்படிப் பட்ட ஒரு ஒப்பந்த [ப் பத்திர] த்தைக் கிழிப்பதினால் என்ன ஒரு மனநிறைவு உள்ளது! திரைச்சீலை கிழிபடுதல் என்பதை பழைய ஏற்பாடு குறித்துத் தேவனுடைய “கிழிக்கும் சடங்கு” என்று நான் கருத்துத் தெரிவிப்பதுண்டு. [23]இந்தச் சிந்தனையை, நீங்கள் பிரசங்கிக்கும் அல்லது போதிக்கும் இடத்திற்கு ஏற்றாற்போன்று விரிவாக்கிக் கொள்ளவும்: சிலர் தங்கள் அதிகாரத்திற்காகப் பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்துவதினால் “திரைச்சீலையை” உயர்த்த முயற்சி செய்கின்றனர். சிலர் வசனரீதியல்லாத ஆசாரியத்துவத்தை [குருத்துவத்தை] நிலைநாட்டுவதன் மூலம் இதைச் செய்ய முயற்சிக்கின்றனர். மற்றவர்கள் மக்களின் மாறுபட்ட குழுக்களுக்கிடையில் தடைச்சுவர்களை எழுப்புவதன் மூலம் இதைச் செய்ய முயற்சிக்கின்றனர். [24]அந்த இடத்திலிருந்து பொதுவாகக் காட்சிக்கு உட்பட்டிருந்த தூரத்திற்குள் புதைக்கும் இடங்கள் பல இருந்தன என்று புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். [25]“பரிசுத்தவான்” என்ற வார்த்தை ‘‘பிரித்து வைக்கப்பட்டவர்’’ என்று அர்த்தப்படுகிறது. நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்போது, நாம் தேவனுடைய ஊழியத்திற்கென்று பிரித்து வைக்கப்படுகின்றோம். [26]அவர்கள் யாரென்று மக்கள் அறியாதிருந்தால், அவர்கள் நகருக்குப் புறம்பேயிருந்து வந்திருந்த அந்நியர்கள் என்று அவர்கள் யூகித்திருக்கலாம். [27]வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர்களின் உயிர்த்தெழுதல் அநேகமாக, மீண்டும் ஒருபோதும் மரியாதபடி உயிர்த்தெழுந்த கிறிஸ்துவினு டையதைப் போல் இருந்திராது. [28]பழைய ஏற்பாட்டில் மூவரும் (1 இரா. 17; 2 இரா. 4; 13), கிறிஸ்துவின் ஊழியத்தின்போது மூவரும் (மத். 9; லூக். 7; யோவா. 11), அப். நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி (அப். 9; 20), அப்போஸ்தலர்களின் ஊழியத்தின்போது இருவரும் மரித்தோரில் இருந்து

*உயிர்ப்பிக்கப்பட்டதைப் பற்றி மாத்திரமே நான் நினைக்க முடிகிறது. [29]"முதற்பலன்" என்பது விளைச்சலில் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட முதல் பாகமாக இருந்தது (யாத். 23:19ஐக் காணவும்). ஒரு கருத்தில் முதற்பலன் என்பது விளைச்சலின் எஞ்சிய பகுதியை உத்தரவாதப் படுத்திற்று. [30]ஒருவர் கிறிஸ்தவராவது எப்படி (மாற். 16:15, 16) என்பதையும், தவறு செய்துள்ள கிறிஸ்தவர் மீண்டும் கட்டுவிக்கப்படுதல் எப்படி (அப். 8:22; யாக். 5:16) என்பதையும் நீங்கள் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குக் கூற விரும்புவீர்கள்.*




**தேவாலயம்**

*93*

# வரலாற்றில் மிகவும் முக்கியமான மூன்று நாட்கள்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #41*

VII. *இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).*
- H. *வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள் (தொடர்ச்சி).*
  - *10. இயேசுவின் சரீரம் அடக்கம் செய்யப்படுதல்.*
    - a. *அவரது மரணம் கண்ணோக்கப்பட்டது (மத். 27:55, 56; மாற். 15:40, 41; லூக். 23:49).*
    - b. *அவரது மரணம் உறுதிப்படுத்தப்பட்டது (யோவா. 19:31-37).*
    - c. *அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது (மத். 27:57-60; மாற். 15:42-46; லூக். 23:50-54; யோவா. 19:38-42).*
    - d. *அவரது அடக்கம் கண்ணோக்கப்பட்டது (மத். 27:61; மாற். 15:47; லூக். 23:55, 56அ).*
- I. *சனிக்கிழமை: இயேசுவின் மரணத்திற்கு அடுத்த நாள்.*
  - *1. அவரது சீஷர்கள்: பயந்திருத்தல் (லூக். 23:56ஆ; யோவா. 20:19அ-வைக் காணவும்).*
  - *2. அவரது விரோதிகள்: பரபரப்பாயிருத்தல் (மத். 27:62-66).*

VIII. *இயேசுவின் உயிர்த்தெழுதல், தரிசனங்கள் மற்றும் பரத்துக்கேறுதல்.*
- A. *ஞாயிற்றுக்கிழமை: இயேசு உயிர்த்தெழுந்த நாள்.*
  - *1. வெறுமையான கல்லறை.*
    - a. *பெண்களும் வெறுமையான கல்லறையும் (மத். 28:1-8; மாற். 16:1-9; லூக். 24:1-11; லூக். 24:22-24; யோவா. 20:1ஐக் காணவும்).*

## அறிமுகம்

*நமது முந்திய பாடம் இயேசுவின் மரணத்துடன் முடிந்தது. நமது இரட்சிப்பைச் சாத்தியமாக்குகிற (ரோமர் 5:10) - அவரது மரணம் என்பது*

*- சுவிசேஷத்தின் முதன்மையான மூன்று உண்மைகளில் ஒன்றாக உள்ளது (1 கொரி. 15:1, 3). அவரது அடக்கம் மற்றும் அவரது உயிர்த்தெழுதல் என்பவை மற்ற இரு உண்மைகளாக உள்ளன (1 கொரி. 15:4). இந்த எடுத்துரைப்பானது[1] சிலுவையில் இயேசுவைப் பற்றிய கடைசி விவரங்களுடன் தொடங்கி, ஒரு புதுக்கல்லறையில் அவர் அடக்கம் பண்ணப்பட்டது பற்றிக் கூறி, அவரது உயிர்த்தெழுதல் பற்றிய தொடக்கக் காட்சிகளுடன் முடிவடையும். இந்தப் படிப்பானது, கிறிஸ்து மரித்த வெள்ளிக்கிழமையின் முடிவு மணிநேரங்கள்; அவரது சரீரம் கல்லறைக்குள் இருந்த சனிக்கிழமை; அவர் மரித்தோரில் இருந்து உயிர்த்த ஞாயிற்றுக் கிழமையின் முதல் பகுதி ஆகியவற்றில் நடந்தவை பற்றிக் கூறிமுடிக்கும். இந்த மூன்று நாட்களும் வரலாற்றில் மிகவும் முக்கியமான நாட்களாக உள்ளன, ஏனெனில் அந்த [மூன்று] நாட்களில் நடந்த நிகழ்ச்சிகள்தாம் நமது நம்பிக்கையின் இருதயம் போன்ற மையப் பகுதியாக உள்ளன.*

## வெள்ளிக்கிழமையின் முடிவு: பெருந்துன்பத்தின் நேரம் *(மத். 27:55-61; மாற். 15:40-47; லூக். 23:49-56அ; யோவா. 19:31-42)*

**உண்மை நிறைந்த பெண்கள்**

*நமது முந்திய பாடத்தில், நான்கு பெண்கள் “இயேசுவின் சிலுவையினருகே நின்றுகொண்டிருந்ததை” நாம் கண்டோம்: அவர்கள், அவரது தாயார்; அவரது சகோதரி (அநேகமாக சலோமே); கிலெயோப்பாவின் மனைவி மரியாள்; மற்றும் மகதலேனா மரியாள் என்பவர்களாய் இருந்தனர் (யோவா. 19:25).[2] யோவான், கிறிஸ்துவின் தாயைக் காட்சியிலிருந்து அகற்றிக் கூட்டிச் சென்றபோது (யோவா. 19:27), மற்ற பெண்கள் கூட்டத்தின் முனைவரையிலும் நகர்ந்து சென்றனர். இந்தப் பாடம் தொடங்குகையில், நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:*

> மேலும், இயேசுவுக்கு ஊழியஞ்செய்யும்படி கலிலேயாவிலிருந்து அவரோடே வந்திருந்த அநேக ஸ்திரீகள் அங்கே தூரத்திலே நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள்ளே மகதலேனா மரியாளும், யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும் [கிலேயோப்பாவின் மனைவு], செபெதேயுவின் குமாரருடைய தாயும் [சலோமே] இருந்தார்கள் *(மத். 27:55, 56; மாற். 15:40, 41; லூக். 23:49ஐக் காணவும்).*

*கலிலேயாவில் கர்த்தருக்கு ஊழியம் செய்திருந்த மதிப்பு வாய்ந்த இந்தப் பெண்கள் (மாற். 15:41; லூக். 8:2, 3ஐக் காணவும்), அவரது மரணத்தில் அவரைக் கைவிட்டுவிடவில்லை. அவர்கள் அவரது சிலுவையினருகில் கடைசியாக இருந்தவர்களாகவும், அவரது கல்லறையில் முதலாவதாக*

இருந்தவர்களாகவும் ஆயினர். குறைந்தபட்சம் இருவர், அவரது மரணத்தை (மத். 27:55, 56; மாற். 15:40, 41), அவர் அடக்கம் பண்ணப்படுதல் (மத். 27:61; மாற். 15:47; லூக். 23:55), மற்றும் அவரது உயிர்த்தெழுதல் (மத். 28:1-10) ஆகியவற்றைக் கண்டனர்.

***சீர்பொருத்தமற்ற தலைவர்கள்***

இயேசு சுமார் 3:00 மணியளவில் மரித்தார் (மத். 27:45-50ஐக் காணவும்) - இது ஓய்வுநாள் தொடங்கவிருந்த சூரியன் மறைவுக்கு ஒரு சில மணிநேரம் முன்னதாக நடைபெற்றது. புதிய நாள் நெருங்குவதை எதிர்நோக்கிய நிலையில், "அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் [யூதத்தலைவர்கள்] பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்" (யோவா. 19:31). இந்த வசனம் நீண்ட ஒன்றாக, விளக்கம் தேவைப்படுவதாக உள்ளது:

*"ஆயத்த நாள்."* ஓய்வுநாளுக்கு முந்திய நாள் (அதாவது, நமது வெள்ளிக்கிழமைக்குச் சமமான ஆறாம் நாள்) என்பது ஓய்வுநாளுக்கு (அதாவது, நமது சனிக்கிழமைக்குச் சமமான ஏழாம் நாளுக்கு) ஆயத்தம் செய்யும் நாளாக இருந்தது.

*"உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு."* நியாயப்பிரமாணம் பின்வருமாறு கூறிற்று:

> "கொலைசெய்யப்பட ஒருவன்மேல் சாவுக்குப் பாத்திரமான பாவம் உண்டாயிருக்க, அவனைக் கொலைசெய்யும்படி மரத்திலே தூக்கிப்போடுவாயானால், இரவிலே அவன் பிரேதம் மரத்திலே தொங்கலாகாது; அந்நாளிலேதானே அதை அடக்கம்பண்ண வேண்டும்; தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்; ஆகையால் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தைத் தீட்டுப்படுத்தாயாக" (உபா. 21:22, 23; யோசு. 8:29; 10:26, 27ஐக் காணவும்).

இவ்வசனப் பகுதியில், "மரத்திலே தூக்கிப்போடுதல்" என்பது அநேகமாக, யாரேனும் ஒருவரைக் கழுத்தில் ஒரு கயிற்றைக் கொண்டு தொங்கவிடுதல் அல்லது ஒரு கழுமரத்தில் யாரேனும் ஒருவரைக் குத்தித் தொங்கவிடுதல் என்பதற்கான குறிப்பாக இருக்கலாம், ஆனால் இவ்வசனப்பகுதியை யூதர்கள், சிலுவையில் அறையப்பட்டவர்களுக்கும் நடைமுறைப் படுத்தினார்கள் (கலா. 3:13ஐக் காணவும்). எனவே உபாகமம் 21ன்படி, கொல்கொதாவில் அந்த வெள்ளிக்கிழமையன்று மரித்தவர்களை, சூரியன் மறைவதற்கு முன்பாக அடக்கம் செய்ய வேண்டியிருந்தது.[3]

*"அந்த நாள் பெரிய ஓய்வுநாளாயிருந்தபடியினாலே."* மூலவசனத்தில் இது, "அந்த ஓய்வுநாள் பெரிய ஓய்வுநாளாயிருந்தது" என்றுள்ளது. NIV வேதாகமம் இந்தச் சொற்றொடரை "ஒரு விசேஷித்த ஓய்வுநாள்" என்று மொழிபெயர்க்கிறது. எல்லா ஓய்வுநாட்களுமே முக்கியமானவைகளாகவே

இருந்தன, ஆனால் பஸ்கா பண்டிகையின்போது வருகிற ஓய்வுநாளானது கூடுதலாக விசேஷமானதாக இருந்தது. மேலும், இந்தக் குறிப்பிட்ட ஓய்வு நாளானது ஒருவார காலம் நடைபெறவிருந்த புளிப்பில்லாத அப்பப் பண்டிகையின் தொடக்க நாளாக இருந்தபடியால் கூடுதலாகத் தனிச்சிறப்புப் பெற்றிருந்தது.[4]

*"பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கு உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்."* தண்டனை விதிக்கப்பட்டவர்/சிலுவையில் அறையப்பட்டவர் நாள்கணக்கில் துன்புற வேண்டும் என்பதையே ரோமர்கள் விரும்பித் தேர்ந்து கொண்டனர், ஆனால் சூழ்நிலைகளின் வற்புறுத்துதல் ஏற்படுகையில், குற்றவாளிகளின் கால்களை முறிப்பதன்மூலம் அவர்களின் மரணத்தைத் துரிதப்படுத்தவும் அவர்களால் [ரோமர்களால்] முடிந்தது. சிலுவையில் தொங்குகின்றவர்கள் மூச்சுவிடுவதற்குத் தங்கள் உடலை மேல்நோக்கித் தள்ள வேண்டியிருந்த படியால்,[5] அவர்களின் கால்கள் முறிக்கப்பட்டிருக்கும்போது, அவர்கள் மூச்சுத் திணறுதலினால் விரைவிலேயே இறந்தார்கள்.

*"உடல்களை எடுத்துப் போடும்படிக்கு."* யூதத் தலைவர்கள் ரோமர் களிடத்தில், சிலுவையில் தொங்கியவர்களின் மரணத்தைத் துரிதப்படுத்தும் படி கேட்டுக்கொண்டது மட்டுமின்றி, உடல்களையும் ரோமர்கள் அப்புறப் படுத்தும்படி விரும்பினர். யூத உயரதிகார வர்க்கத்தினர், இறந்துபோன உடலைத் தொடுவதின் மூலம் தங்களைச் சடங்காச்சார ரீதியாக தீட்டுப் படுத்திக்கொள்ள மறுத்துவிட்டனர் (எண். 19:11). அடையாளமற்ற கல்லறையில் குற்றவாளிகளின் சடலங்கள் வீசியெறியப்படுவதற்கு ரோமர் கள் புதைக்கும் இடம் ஒன்றைக் கொண்டிருந்தனர் என்பதில் ஐயமில்லை.

மீண்டும் ஒருமுறை, யூதத்தலைவர்கள் தங்கள் மாய்மாலத்தையும் சீர்பொருத்தமற்ற தன்மையையும் காண்பித்தனர். அவர்கள், "ஓய்வு நாளுக்கும் ஆண்டவராயிருந்தவரை" (மத். 12:8; மாற். 2:28) சிலுவையில் அறைவதற்குத் தயங்காதிருந்திருந்தனர், ஆனால் இப்போது அவர்கள் ஓய்வுநாளைத் தீட்டுப்படுத்துதல் குறித்துக் கவலை கொண்டிருந்தனர்.

### மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட போர்ச்சேவகர்கள்

யூதர்களின் வேண்டுகோளைப் பிலாத்து அனுமதித்து, கல்வாரிக்கு உத்தரவுகளை அனுப்பினார். "அந்தப்படி போர்ச்சேவகர் வந்து, அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார் கள்" (யோவா. 19:32). இந்தப் பயங்கரமான பணிப்பொறுப்பானது ஒரு ஈட்டி அல்லது கனத்த சுத்தியலைக் கொண்டு செய்யப்பட்டது. "அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை" (யோவா. 19:33).

கிறிஸ்து மரித்திருந்தார் என்று போர்ச்சேவகர்கள் வெறும் யூகம் செய்யவில்லை. அவர் மரித்திருந்தார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, "போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்" (யோவா. 19:34அ). இது இயேசுவுக்குத் தசையிழுப்பு

உண்டாகிறதா என்று காணும்படிக்குத் தோல்மீது இலேசாகக் குத்திய செயலாக மாத்திரம் இருக்கவில்லை. ஈட்டியானது அவரது விலாவில், மார்புக்கூட்டினுள் ஆழமாய் ஊடுருவிச் சென்றது, இதன் விளைவாக ஒரு கை நுழையக்கூடிய அளவுக்கு திகைக்கச் செய்யும் காயம் ஏற்பட்டது (யோவா. 20:25, 27). குற்றவாளியைச் சிலுவையில் இருந்து அகற்றுமுன்பு அவன் இறந்துபோனானா என்பதைத் தீர்மானித்தல் பற்றிப் போர்ச்சேவகர்கள் கணக்கு ஒப்புவிக்க வேண்டியிருந்தபடியால், ஈட்டியானது அநேகமாக அவரது விலா எலும்புகளுக்கு இடையில் சென்று இருதயத்தை ஊடுருவும் வகையில் வலுவாய்க் குத்தப்பட்டிருக்கும்.[6] "சந்தேகத்தின் நிழல் எதற்கும் அப்பால், இயேசு மரித்திருந்தார் என்பதை உறுதிப்படுத்த, போர்ச்சேவகன் தனது சொந்த உயிரையே பணயமாக வைத்து நிச்சயித்துக் கொண்டான்."[7]

இயேசுவின் எலும்புகள் முறிக்கப்படவில்லை என்ற உண்மையானது பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம் ஒன்றை நிறைவேற்றியது (யோவா. 19:36; சங். 34:20).[8] அதுபோன்றே அவரது விலா ஊடுருவப்பட்ட உண்மையும் ஒரு தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது (யோவா. 19:37; சக. 12:10).

கிறிஸ்துவின் விலா திறக்கப்பட்டபோது, "உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது" (யோவா. 19:34ஆ). சடலங்களிலிருந்து இரத்தம் வெளிவருவதில்லையாததால், இந்த நிகழ்வுக்கு மருத்துவக் காரணம் ஒன்றைக் கண்டறிய விளக்கவுரையாளர்கள் பிரயாசப்பட்டுள்ளனர். இந்த இரத்த நீர்மம் வெளியான நிகழ்ச்சியானது, இயேசு இருதயம் உடைந்ததால் (சிதைந்ததால்) மரித்தார் (சங். 69:20ஐக் காணவும்) என்று சுட்டிக் காண்பிக்கிறது என்பது மிகப் புகழ்பெற்ற விளக்கமாக உள்ளது.[9] பெரும்பாலான மருத்துவ விளக்கங்கள், இயேசு மரித்தபோது, அவரது உடலானது மரணத்தினால் உண்டாகும் சிதைவின் இயற்கையான செயல்முறையைத் தொடங்கிற்று என்பதின் அடிப்படையில் அமைந்துள்ளதே அவற்றின் குறைபாடாக உள்ளது. இருப்பினும், பேதுரு, பவுல் ஆகிய இருவருமே, கிறிஸ்துவின் மாம்சம் "அழிவைக் காணவில்லை" என்று வலியுறுத்தியுள்ளனர் (அப். 2:31; 13:37ஐக் காணவும்).

தொடக்க காலத்தில் இருந்த ஏவுதல் பெற்றிராத கிறிஸ்தவ எழுத்தாளர்கள், இரத்தம் மற்றும் தண்ணீர் ஆகியவற்றில் இரகசியமான/மாயாவாதமான அடையாளத்துவத்தைக் கண்டனர். இரத்தம் மற்றும் தண்ணீர் ஆகியவற்றில், "இயேசுவினிடமிருந்து வந்த" கர்த்தருடைய பந்தி மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் சடங்குகளைப் பலர் காண்கின்றனர். சிலர், யோவான் 19:34ஐ 1 யோவான் 5:6, 8 என்ற தெளிவற்ற வேத வசனப் பகுதியுடன் இணைக்கின்றனர்.[10] இருப்பினும், யோவான் 19:34ம் வசனத்தில் இவ்வகையான உருவக விளக்கத்தை நோக்கங் கொண்டுள்ளதற்குச் சுட்டிக்காண்பித்தல் எதுவும் இருப்பதில்லை.

நாம் அநேகமாக, இந்த இரத்தம் மற்றும் தண்ணீர் ஆகியவற்றை, நமது பாவங்களுக்காக இயேசு மரித்தார் என்பதின் இரகசியத்தினுடைய பகுதியாக மாத்திரம் ஏற்றுக்கொள்ள வேண்டும் - அத்துடன் அதை விட்டுவிட வேண்டும். இரத்தம் மற்றும் தண்ணீர் விவரத்தை உறுதியாகப்

புரிந்துணர்ந்திருந்த யோவான், மனித அனுபவத்திற்கு நேரெதிராகச் சென்று, அவ்விவரத்தின் ஒப்பற்ற உறுதித்தன்மையைப் பற்றித் தமது சொந்த சாட்சியத்தைக் கூடுதலாகக் கூறினார் (யோவா. 19:35).

யோவானின் விரிவான சித்தரிப்பானது ஒரு நோக்கத்திற்குப் பயன் படுகிறது: இயேசு *உண்மையிலேயே மரித்திருந்தார்* என்று காண்பிப்பதற்கு - அதாவது, அவர் தமது சீஷர்களால் பிற்பாடு தெளிவிக்கப்படும் வகையில் மயக்கம் மாத்திரம் அடைந்திருக்கவில்லை.[11] மருத்துவப் பத்திரிகையில் வெளியான கட்டுரையொன்று பின்வரும் வார்த்தைகளுடன் முடிகிறது:

> இயேசுவின் விலாவில் அந்தக் காயத்தினால் அவர் துன்புறுத்தப் படுவதற்கு முன்பே அவர் இறந்திருந்தார் என்பதை வரலாற்று மற்றும் மருத்துவ ஆதாரத்தின் கனமானது சுட்டிக்காண்பிக்கிறது ... அதுபோலவே, சிலுவையில் இயேசு மரித்திருக்கவில்லை என்ற யூகத்தின் அடிப்படையில் அமைந்த விளக்கங்கள் நவீன மருத்துவத்தில் வினோதமானவைகளாக உள்ளன.[12]

**தைரியமான பின்பற்றாளர்கள்**

குற்றவாளிகள் மூவரும் இறந்துபோனார்கள் என்று போர்ச்சேவகர்கள் நிச்சயப்படுத்திக்கொண்ட பின்பு, அவர்களின் உடல்களை நேராய் நிற்கும் மரங்களில் இருந்து இறக்கி, சடங்கெதுவுமற்ற வகையில் தூக்கிப் போடு வதற்கு அவர்கள் தயாராயினர். இயேசுவின் சரீரத்தை எவரொருவரும் உரிமைகோராது இருந்திருந்தால் அதுவே அவருக்கும் முடிவாகியிருக்கும். இருப்பினும், யாரோ ஒருவர் - அவரது குடும்பத்தைச் சேர்ந்தவரல்ல, அவரது அப்போஸ்தலர்களில் ஒருவரல்ல, ஆனால் "யூதருக்கு [யூதத் தலைவர்களுக்கு] ப் பயந்ததினால்" (யோவா. 19:38) அவருக்கு இரகசிய சீஷராயிருந்தவர்களில் ஒருவர் - அவரது உடலை உரிமைகோரினார். அவர், கிறிஸ்துவுக்கு மரணதண்டனை விதித்த ஆலோசனைச் சங்கத்தில் உறுப்பின ராக இருந்தார் (மாற். 15:43; லூக். 23:50) என்பது திகைப்புக்குரியதாக உள்ளது!

அவர் "அரிமத்தியா ஊர் யோசேப்பு" என்று அறியப்பட்டார் (மாற். 15:43; யோவா. 19:38; மத். 27:57ஐக் காணவும்). அரிமத்தியா என்பது யூதேயாவிலிருந்த ஒரு ஊராகும் (லூக். 23:51[13]), ஒருவேளை இது எருசலேமுக்கு வடக்கில் சமாரியாவின் எல்லை அருகில் இருந்த ஒரு கிராமமாக இருக்கலாம்.[14] மத்தேயு, யோசேப்பை "ஒரு ஐசுவரியவான்" என்று விவரித்தார் (மத். 27:57). இவர் மூலமாக ஏசாயா 53:9ன் நிறைவேற்றம் வந்தது: "துன்மார்க்கரோடே [இரண்டு கள்ளர்களோடே] அவருக்குப் பிரேதக் குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே [யோசேப்போடே] இருந்தார்." யோசேப்பு நற்குணம் வாய்ந்த மனிதராயிருந்தார், மற்றும் "தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்த" வராயிருந்தார் (லூக். 23:50, 51; மாற். 15:43ஐக் காணவும்). தமது ராஜ்யத்தை நிலைநாட்டவிருந்த மேசியாவை அவர் [யோசேப்பு] எதிர்நோக்கியிருந்தார், மற்றும் இயேசுவே, கிறிஸ்துவாகிய அந்த மேசியா என்று அவர் அடையாளம் கண்டுகொண்டார் (மத். 27:57; யோவா. 19:38).

*துரதிர்ஷ்டவசமாக, யோசேப்பு இயேசுவில் தாம் கொண்டிருந்த விசுவாசத்தை அறிக்கையிடுவதில் தைரியம் குறைந்திருந்தார். "கனம் பொருந்திய ஆலோசனைக்காரனாக" இருந்த வகையில் (மாற். 15:43) அவர் தமது விசுவாசத்தை அறிக்கையிடுதல் என்பது தமது பதவியை விலையாகக் கேட்கும் என்பதை அறிந்திருந்தார். அது அவரை யூத சமுதாயத்தினின்று முற்றிலுமாக விலக்கிப்போட்டும் விடும் (யோவா. 9:22[15]). லூக்கா சுவிசேஷத்தின்படி, சனதெரீன் சங்கத்தார் இயேசுவுக்குத் தீர்ப்பிட்டபோது, யோசேப்பு "யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியா"மல் இருந்தார் (லூக். 23:51)[16] - ஆனால் இவர் கர்த்தரைத் தற்காத்து வாதிடவும் இல்லை என்பதாகக் காணப்படுகிறது.*

*இயேசுவின் உடலானது "மறைவான மற்றும் சபிக்கப்பட்ட குழியொன்றுக்கு எடுத்துச் செல்லப்படும்"[17] என்பதை யோசேப்பு உய்த்துணர்ந்தபோது, இவர் "வந்து, பிலாத்துவினிடத்தில் துணிந்துபோய்" (மாற். 15:43ஆ). எல்லாவற்றையும் பணயம் வைத்து, இவர், "இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோகும்படி" உத்தரவு கேட்டார் (யோவா. 19:38ஆ).*

*யூத உயர்நீதிமன்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்து இந்த வேண்டுகோள் வரப்பெற்றதில் பிலாத்து அநேகமாக வியப்படைந்திருக்கலாம். இயேசு ஏற்கனவே இறந்துபோயிருந்தார் என்பதை அறிந்தபோது, அவர் வியப்புற்றார் (மாற். 15:44அ). இயேசு இறந்துபோயிருந்தார் என்பதை, பொறுப்பேற்றிருந்த நூற்றுக்கு அதிபதி உறுதிப்படுத்தியபோது, பிலாத்து "[இயேசுவின்] சரீரத்தை யோசேப்பினிடத்தில் கொடுத்தான்" (மாற். 15:44ஆ, 45; மத். 27:58ஆ; யோவா. 19:38இ-ஐக் காணவும்).*

*யோசேப்பு பிலாத்துவிடத்திலிருந்து அனுமதியைப் பெற்ற வேளையில், சூரியன் மறைவு (ஓய்வுநாள் தொடங்குதல்) விரைவாக நெருங்கிக் கொண்டிருந்தது (மத். 27:57அ; மாற். 15:42; லூக். 23:54). யோசேப்பு விரைவாகச் செயல்பட வேண்டியதாயிருந்தது. அவன் போய், "மெல்லிய துப்பட்டியை வாங்கிக்கொண்டுவந்து" (மாற். 15:46) இருக்கையில், ஆலோசனைச் சங்கத்தின் இன்னொரு உறுப்பினரும் (யோவா. 7:50ஐக் காணவும்), இரகசிய விசுவாசியுமான நிக்கொதேமு என்பவர், தேவைப் பட்ட பரிமள வர்க்கங்களைச் சேகரித்தார் (யோவா. 19:39ஐக் காணவும்). நாம் நிக்கொதேமுவை யோவான் 3:1-21; 7:50-52ல் எதிர்கொண்டிருந் தோம்.[18] இவ்விருவரும் இயேசுவை அன்புடன் அடக்கம் செய்தனர் என்பதில் ஒரு எதிர்மறைக் குறிப்பு உள்ளது. "சீஷர்களாயிருப்பதற்கு அஞ்சாதிருந்தவர்கள் கர்த்தருடைய சரீரத்தை கேட்பதற்கு அஞ்சினர் என்பது வினோதமாக உள்ளது, இருப்பினும் சீஷராயிருப்பதற்கு அஞ்சிய வர் அவ்வாறு கேட்க அஞ்சாதிருந்தது அதை விட வினோதமாக உள்ளது."[19]*

*கிறிஸ்துவின் கரங்கள் மற்றும் பாதங்களில் இருந்து கொடூரமான ஆணிகளை நீக்கிப்போட்டு,[20] யோசேப்பு அவரது சரீரத்தைச் சிலுவையி லிருந்து இறக்கி, அதைத் துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றினார் (மத். 27:59; மாற். 15:46; லூக். 23:53அ). பின்பு அவர் "இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போனான்" (யோவா. 19:38).*

கொல்கொதாவுக்கு அருகில், “ஒரு தோட்டமும், அந்தத் தோட்டத்தில் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத[21] ஒரு புதிய கல்லறையும்[22] இருந்தது” (யோவா. 19:41). இது யோசேப்பு, “கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறை”[23]யாக இருந்தது (மத். 27:60).[24] யோசேப்பும் நிக்கொதேமுவும் அதிகமாக நேரம் கொண்டிருக்கவில்லை என்பதாலும், “அந்தக் கல்லறை சமீபமாயிருந்தபடியினாலும்” (யோவா. 19:42), அவர்கள் இயேசுவின் உடலை அங்கே எடுத்துச் செல்ல முடிவுசெய்தனர்.[25] கிறிஸ்துவின் உடல் அங்கே எடுத்துச் செல்லப்படுகையில், சிலுவையின் அருகில் நின்றிருந்த பெண்களில் இருவர் பின்தொடர்ந்தனர் (லூக். 23:55; மத். 27:61).

ஆலோசனைச் சங்க உறுப்பினர்கள் இயேசுவின் உடலைக் கல்லறையில் வைத்து (மத். 27:60; மாற். 15:46; லூக். 23:53; யோவா. 19:42) சடங்காச்சாரமான தயாரிப்புப் பணிகளைத் தொடங்கினர். அவர்கள் அவ்வாறு செய்துகொண்டிருக்கையில், அவர்கள் “யூதர்கள் அடக்கம்பண்ணும் முறைமையின்படியே” செய்தனர் (யோவா. 19:40ஆ); (எகிப்தியர்களுடையது போன்ற) சில கலாச்சாரங்களில் செய்யப்படுவது போல், அவர்கள் அந்த உடலின் உள்ளுறுப்புக்களை நீக்கிப்போடவில்லை.

யூதப் பழக்கத்தின்படி, அவர்கள் முதலில் உடலைக் கழுவி, உலர்ந்த இரத்தம், எச்சில், அழுக்கு மற்றும் சிராய்களை நீக்கச் செய்திருப்பார்கள். பின்பு அந்த உடலானது “சுகந்தவர்க்கங்களுடனே சீலைகளில்” சுற்றிக் கட்டப்பட்டது (யோவா. 19:40அ). முகம் தவிர உடல் முழுவதும் மூடும்படி துணிப்பட்டிகள்[26] உடலைச் சுற்றிக் கட்டப்பட்டன (யோவா. 11:44ஐக் காணவும்). பின்பு சுகந்தவர்க்கத்தின் ஒரு அடுக்கு அந்தத் துணியில் தேய்க்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இன்னொரு அடுக்கு துணி, இன்னொரு அடுக்கு சுகந்தவர்க்கம் இவ்வாறு மாற்றி மாற்றி செய்யப்பட்டது. இதைச் செய்வதற்காக நிக்கொதேமு, வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்திருந்தார் (யோவா. 19:39).[27]

இயேசுவின் உடலை ஆயத்தம் செய்வதில் இவ்விரு மனிதர்களும் அவசர அவசரமாய் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், அவர்கள் தங்களைச் சடங்காச்சார ரீதியாகத் தீட்டுப்படுத்திக்கொண்டனர் (எண். 19:11). இது அவர்களைப் புளிப்பில்லாத அப்பப் பண்டிகையின் எஞ்சிய வைபவங்களில் கலந்துகொள்ளத் தகுதியற்றவர்களாக்கிற்று, ஆனால் இது அவர்களுக்குப் பிரதான அக்கறையாக இருக்கவில்லை.

யோசேப்பும் நிக்கொதேமுவும் தாங்கள் பெற்றிருந்த நேரத்திற்குள் தங்களால் செய்ய முடிந்ததைச் சிறப்பாகச் செய்தபோது, அவர்கள் இயேசுவின் முகத்தில் ஒரு சிறிய துணியைச் சுற்றினர் (யோவா. 20:7; 11:44ஐக் காணவும்). பின்பு, இருட்டும் நேரம் நெருங்குகையில், யோசேப்பு “கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லை - ‘மிகவும் பெரிய’ ஒரு கல்லை[28] - புரட்டி வைத்துப் போனார்” (மத். 27:60ஆ; மாற். 16:4).[29]

#### திருப்தியடையாத பெண்கள்

இந்த மனிதர்கள் அநேகமாகத் தாங்கள் அறியாத வகையில் பார்வையாளர்களைக் கொண்டிருந்தனர். கொல்கொதாவில் இருந்து இவர்களைப் பின்தொடர்ந்து வந்திருந்த இரு பெண்கள், ஒருவேளை அருகில் உள்ள ஒரு சிறுகுன்றில், "கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தனர்": மகதலேனா மரியாளும் யாக்கோபு, யோசே ஆகியோரின் தாயான மரியாளும் (மத். 27:61; மாற். 15:40, 47ஐக் காணவும்).[30] யோசேப்பு மற்றும் நிக்கொதேமு ஆகியோரின் துரிதமான முயற்சிகளை அந்தப் பெண்கள் கவனித்திருந்தனர் (லூக். 23:55), ஆனால் அம்முயற்சிகள் அவர்களைப் பொறுத்தமட்டில் திருப்தியடையச் செய்யாது இருந்தன. அவர்கள் தோட்டத்தை விட்டுப் புறப்பட்டு, தாங்கள் தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பிச் சென்று, "கந்தவர்க்கங்களையும் பரிமளதைலங்களையும் ஆயத்தம்பண்ணி [னார்கள்]" (லூக். 23:56அ). அவர்கள், கர்த்தரின் சரீரத்தை அபிஷேகிக்கும் பணிப்பொறுப்பை நிறைவு செய்யும்படிக்கு ஓய்வுநாளுக்குப் பின்பு கல்லறைக்குத் திரும்பி வர நோக்கங் கொண்டிருந்தனர் (லூக். 23:56ஆ; மாற். 16:1ஐக் காணவும்).

## சனிக்கிழமை: மனக்கலக்கத்திற்கான வேளை (மத். 27:62-66; லூக். 23:56ஆ; யோவா. 20:19அ)

#### செயலற்ற நண்பர்கள்

ஓய்வுநாளன்று அந்தப் பெண்கள் "கற்பனையின்படியே ... ஓய்ந்திருந்தார்கள்" (லூக். 23:56ஆ). கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களைப் பொறுத்த மட்டில் அது, முற்றிலுமாக மனக்கலக்கத்தின் நாளாக, "யூதர்களுக்குப் பயந்ததினால்" பூட்டியிருந்த கதவுகளுக்குப் பின்னால் (யோவா. 20:19) "துக்கத்திலும் அழுகையிலும்" செலவிடப்பட்ட நாளாக இருந்தது (மாற். 16:10). அவர்களின் நம்பிக்கைகள், "யோசேப்பின் கல்லறையில் இயேசுவுடனே கூடப் புதைக்கப்பட்டிருந்தன."[31] "அவர்களுடைய துக்கம் ஒரு இரட்டைத் துக்கமாக இருந்தது. அவர்கள் தாங்கள் உண்மையிலேயே அன்புகூர்ந்திருந்த தங்கள் மிகச் சிறந்த நண்பர் துன்பகரமாகப் புறக்கணிக்கப்பட்டு மரணம் அடைந்ததினால் துக்கப்பட்டிருந்தனர். ஆனால் இதைக் காட்டிலும் அதிகமாக, அவர்களின் விசுவாசம் என்பது கிரகணமாக/மறைக்கப்பட்டதாக இருந்தது என்பதினால் அவர்கள் திகைப்புற்று இருந்தனர்."[32] கிறிஸ்து முன்னுரைத்திருந்தபடியே, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலாயினர் (மத். 26:31; மாற். 14:27).

#### செயல்பட்ட விரோதிகள்

இயேசுவின் சீஷர்கள் அந்த ஓய்வுநாளை ஒன்றும் செய்யாது செலவிட்டிருக்கலாம், ஆனால் அவரது விரோதிகள் அவ்வாறு இருக்கவில்லை. "ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து" (மத். 27:62).[33] இந்தக் கூட்டமானது அநேகமாக சூரியன் மறைந்தவுடன், ஓய்வுநாளின்

தொடக்கத்தில் நடைபெற்றிருக்கலாம். ஆலோசனைச் சங்க உறுப்பினர்கள், ஒரு இரவு வேளையிலாவது இயேசுவின் கல்லறையைக் காவல் இல்லாது விட்டிருந்தனர் என்பது பொருத்தமற்றதாக உள்ளது.

பிலாத்துவினிடத்தில் யூதத் தலைவர்கள், "ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்றுநாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது" என்று கூறினர் (மத். 27:63). அவர்களின் கூற்று குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இயேசு தமது சீஷர் களிடத்தில், தாம் மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்படுவதாகத் தெளிவாகக் கூறியிருந்தார் (மத். 16:21; 17:22, 23; லூக். 18:31-33) - ஆனால் அதை அவர்கள் புரிந்துகொண்டிருக்கவில்லை (மாற். 9:9, 10). இதற்கு மறுபுறத்தில், அவர் (தமது விரோதிகள் உட்பட) பொதுமக்களிடம் தமது உயிர்த்தெழுதல் பற்றி *மறைவான* சொற்றொடர்களில் பேசியிருந்தார் (மத். 12:39, 40; 16:4; யோவா. 2:19-21; 10:17, 18) - ஆனால் யூதத் தலைவர்கள் நிச்சயமாகவே அந்தச் செய்தியைப் பெற்றிருந்தனர்![34] அவர்கள் இயேசுவின் வார்த்தைகளை நம்பாதிருப்பினும், குறைந்தபட்சம் அவர்கள், அவர் "மூன்று நாட்களுக்குப் பின்பு" தாம் "மீண்டுமாக உயிர்த்தெழுவதாக" போதித்திருந்ததைப் புரிந்துகொண்டிருந்தனர்.

ஆகையால் அவர்கள் ஆளுநரிடம் பின்வருமாறு வேண்டுகோள் விடுத்தனர்: "ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், 'மரித்தோரிலிருந்து எழுந்தானென்று' ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப் பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்றுநாள்வரைக்கும்[35] கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும்" (மத். 27:64). ஆலோசனைச் சங்க உறுப்பினர்கள் தங்களுக்கு ஏற்புடைய வேளையில் வஞ்சகமான முறைகளைப் பயன்படுத்தத் தயங்காதிருந்தபடியால் (மத். 26:59), இயேசுவின் சீஷர்களுக்கு வாய்ப்பு கிடைத்தால் அவர்களும் அதையே செய்வார்கள் என்று அவர்கள் யூகித்துக் கொண்டனர். (நம்மில் பெரும் பான்மையானவர்கள் நாம் நினைக்கின்றபடியே மற்றவர்களும் நினைக் கின்றனர் என்று யூகிக்கின்றோம்.)

பிலாத்து, "உங்களுக்குக் காவல்சேவகர் உண்டே" என்று பதில் அளித்தார் (மத். 27:65அ). ஆளுநர், "உங்களிடம் ஏற்கனவே தேவாலயத்துக் காவல்சேவகர் இருக்கின்றார்களே; அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளுங் கள்" என்று கூறியதாகச் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இருப்பினும் வரிசையாக நடந்த நிகழ்ச்சிகள், பிலாத்து அவர்களுக்கு உதவிசெய்ய ஒப்புக்கொண்டு *ரோமக்காவல் சேவகரை* அளித்தார் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றன.[36] இவ்வாறு செய்ததினால், அவர் "போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள்" என்று அவர்களிடத்தில் கூறினார் (மத். 27:65ஆ).

ஆசாரியர்கள் "போய் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல்வைத்து கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்" (மத். 27:66) - அதாவது, அவர்களால் முடிந்த அளவுக்கு அதைப் பத்திரப்படுத்தினர். முதலாவது, அவர்கள் இயேசுவின் சரீரம் அந்தக் கல்லறையில் இருந்ததைச் சந்தேகத்

திற்கு இடமின்றி நிச்சயப்படுத்திக் கொண்டனர்.[37] பின்பு அவர்கள் [கல்லறையை மூடியிருந்த] கல்லை அதனிடத்தில் திரும்ப வைத்து அதன்மீது “முத்திரை போட் [டனர்]” (மத். 27:66அ). இது அந்தக் கல்லைச் சுற்றிலும் வைக்கப்பட்ட முத்திரை மெழுகாகவோ அல்லது களிமண்ணாகவோ இருக்கலாம், அல்லது கல்லின் குறுக்காக இழுத்துக்கட்டப்பட்டு பின்பு பாறையின் இருபுறத்திலும் முடிச்சிடப்பட்ட ஒரு கயிறாக இருக்கலாம். சிதைத்தலைத் தடுத்தல் என்பதே முத்திரையிடுதலின் நோக்கமாக இருந்தது; இதை மீறுதலுக்கு மரணம் என்பதே தண்டனையாக இருக்கும்.[38] கடைசியில், ரோமக் காவல் சேவகர்கள் கல்லறையைச் சுற்றிலும் காவல் காக்கும்படி வைக்கப்பட்டனர் (மத். 27:66ஆ).[39] பின்பு அந்தத் தலைவர்கள், மூன்று நாட்களுக்குப் பின்பு இயேசுவின் பிரேதத்தைக் காட்சிப்படுத்தி, “தொந்தரவான, ஆனால் குறுகிய காலமே இருந்த கிறிஸ்தவ இயக்கம்” என்று தாங்கள் நினைத்த செயலுக்கு மரண அடி கொடுக்கலாம் என்ற திருப்தியுடன் அவ்விடம் விட்டுச் சென்றிருப்பார்கள்.

## ஞாயிற்றுக்கிழமையின் முதல் பாகம்: அவிசுவாசத்தின் வேளை

## *(மத். 28:1-8; மாற். 16:1-9; லூக். 24:1-11)*

ஓய்வுநாளானது ஒரு பெருமூச்சுடன் முடிவுற்றது; வாரத்தின் முதல் நாளானது ஒரு பாடலுடன் தொடங்கிற்று. இருப்பினும், சீஷர்கள் மனக்கலக்கத்திலிருந்து அகமகிழ்வுக்கு நகர்ந்து செல்ல நேரம் ஆயிற்று. நாம் காணப்போகின்றபடி, மரித்தோரிலிருந்து இயேசு உண்மையிலேயே உயிர்த்தெழுந்தார் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதில் அவரது பின்பற்றாளர்கள் ஒரு கடினமான வேளையைக் கொண்டிருந்தனர்.

### அற்புதம்

“எல்லா அற்புதங்களை விடவும் மிகப்பெரிய அற்புதமான உயிர்த் தெழுதலை சுவிசேஷ எழுத்தாளர்களில் எவரும் நேரடியாக விவரிக்க வில்லை ... அந்த மகாப் பரிசுத்த காட்சியின்மீது திரையொன்று இழுக்கப் பட்டுள்ளது.”[40] இயேசு “வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையில்” உயிர்த் தெழுந்தார் என்று மாத்திரமே நாம் வாசிக்கின்றோம் (மாற். 16:9).[41] உயிர்த் தெழுதல் சூரிய உதயத்திற்கு முன்பே நடைபெற்றது என்று மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது (யோவா. 20:1). கிறிஸ்து, முதல் நாளின் தொடக்கத் திற்கு (சூரியன் மறைவுக்கு) ப் பின்பும், அடுத்த நாள் காலை சூரிய உதயத்திற்கு முன்பும் ஆன இரு வேளைகளுக்கும் இடைப்பட்ட ஒரு பொழுதில் உயிர்த்தெழுந்தார்.[42]

இயேசு மரித்தபோது, அவரது ஆவியானது பாதாள [காணப்படாத] உலகத்திற்குச் சென்றது (லூக். 23:43;[43] அப். 2:27, 31) மற்றும் அவரது சரீரம் கல்லறையில் வைக்கப்பட்டது. இரவில் ஏதோ ஒரு வேளையில் அவரது உடல் மறுரூபமடைந்தது,[44] மற்றும் அவரது ஆவி அதற்குள் [உடலுக்குள்] திரும்பி வந்தது. “ஆவியானது வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு

*பிதாவினிடத்தில் நம்பிக்கையுடன் ஒப்புவிக்கப்பட்டது ... பின்பு அது அவரது மரித்த உடலுக்குள் மறுபடியும் பிரவேசித்து அதை மீண்டும் இயக்குவித்தது."[45] அவர் "மீண்டும் மரியாதிருக்கும்படி" (ரோமர் 6:9) கல்லறையின் மூடல்களைப் புறம்பே தள்ளிவிட்டு[46] "மரித்தோரிலிருந்து எழுந்தார்" (அப். 10:41).[47] விவரிக்க இயலாத இந்தக் காட்சியை விவரிப் பதற்கு, பீட்டர் மார்ஷல் அவர்கள் பின்வரும் கற்பனைக் கவிதையைப் பயன்படுத்தினார்:*

> *... சூரியன் மறைவு மற்றும் சூரிய உதயம் ஆகிய இரண்டிற்கும் நடுவில்*
> *கொடுக்கப்பட்ட ஒரு வேளையில் திடீரென்று,*
> *அரிமத்தியாவூர் யோசேப்புக்குச் சொந்தமான அந்தப் புதிய*
> *கல்லறையில், காணப்படாத சக்திகளின் கலகலப்பு இருந்தது ...*
> *தோட்டத்தினூடே அசைவாடிய தேவனுடைய மூச்சொலி போன்ற*
> *சலசலப்பு இருந்தது.*
> *குளிர்ந்த கற்பலகைமீது அவர்கள் கிடத்தியிருந்த இறந்த உடலினுள்*
> *பலத்த அளவிட முடியாத ஜீவனானது, திரும்பவும்*
> *சுவாசித்திருந்தது;*
> *இறந்து கிடந்த இயேசு என்ற மனிதர் உயிர்த்தெழுந்தார்*
> *சவத்துணிகளை விட்டு வெளியே வந்திருந்தார்,*
> *கல்லறையின் முகப்பிற்கு நடந்து சென்றிருந்தார்,*
> *தமது காயப்பட்ட பாதத்தின்மீது சற்று நேரம் அலைவசைந்து*
> *பின்பு நின்றிருந்தார்,*
> *எப்போதும் உயிருள்ளவராயிருக்கும்படி பனிமூடிய*
> *தோட்டத்திலிருந்து வெளியேறி நடந்து சென்றிருந்தார்.[48]*

**செய்தியாளர்**

*உயிர்த்தெழுதல் நடைபெற்றுச் சற்று நேரத்திற்குப் பின்பு, இன்னும் இராவேளையாக இருக்கும் போதே (மத். 28:1; யோவா. 20:1), "பூமி மிகவும் அதிரும்படி கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து [கல்லறை யின்] வாசலிலிருந்த கல்லைப் புரட்டித்தள்ளி அதின்மேல் உட்கார்ந்தான்" (மத். 28:2). அவன் இயேசுவை கல்லறைக்கு வெளியே செல்ல அனுமதிக்கும் படி கல்லைப் புரட்டித் தள்ளவில்லை[49] - அவர் ஏற்கனவே வெளியே சென்றிருந்தார் - ஆனால் கல்லறை வெறுமையாயிருந்தது என்று மற்றவர்கள் உள்ளே சென்று காண வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்தான். ஒருவேளை அந்தக் கல்லை வேறு எவரும் திரும்பவும் மூடிவிடாதபடிக்கு அதன்மேல் அந்தத் தூதன் உட்கார்ந்திருக்கலாம்.*

*தூதனுடைய தோற்றமானது, "மின்னலைப் போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போல வெண்மையாகவும் இருந்தது" (மத். 28:3). காவல் சேவகர்கள் அவனைக் கண்டபோது, அவர்கள் "பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள்போலானார்கள்'' (மத். 28:4). அவர்கள் பயத்தினால் அசைவற்றுக்கிடந்தனர். அவர்கள் மீண்டும் பழைய நிலைக்கு வந்தபோது, அவர்கள் அநேகமாகத் தோட்டத்தில் இருந்து தலைதெறிக்க ஓடி, தங்களுக்கும் வானகத்திலிருந்து வந்திருந்த அந்தப் பார்வை யாளருக்கும் இடையில் சற்று இடைவெளி இருக்கும்படி செய்திருக்க*

வேண்டும். வெறுமையான கல்லறையைக் காவல் காப்பதில் ஒன்றும் பயன் இல்லையே![50]

***செய்தி***

*வெறுமையான கல்லறை பார்வையாளர்களுக்குத் தயாராக இருந்தது. தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளின் வரிசைமுறைமை பற்றி நாம் நிச்சயமாக எதுவும் கூற இயலாது; இந்தப் பாடத்திலும் இதற்கு அடுத்த பாடத்திலும் உள்ள வரிசைமுறைமை ஏற்பாடானது விஷயங்களை ஒருங்கமைக்கும் ஒரு வழிமுறையாக உள்ளது. மிகச் சரியான வரிசைமுறைமை என்பது சார்பளவில் முக்கியத்துவமற்றதாக உள்ளது. இயேசு மரித்தோரில் இருந்து எழுந்தார் - மற்றும் அதை அவர் நூற்றுக்கணக்கானவர்களுக்குத் தரிசனம் கொடுத்ததினால் நிரூபித்தார் என்பதே முக்கியமானதாக உள்ளது.*

*"ஓய்வுநாள் முடிந்து,[51] வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில்" மகதலேனா மரியாளும் மற்ற யோசேப்பு, யாக்கோபு ஆகியோரின் தாயாகிய மரியாளும் - இவ்விருவரும், யோசேப்பு மற்றும் நிக்கொதேமு ஆகியோரின் அடக்க முயற்சிகளைக் கவனித்திருந்தவர்கள் - கல்லறையை நோக்கிச் சென்றனர் (மத். 28:1). அவர்களுடன் சலோமே என்பவளும் யோவன்னாளும்[52] இருந்தனர், மற்றும் பிறபெண்களும் இருந்திருக்கலாம். அவர்கள் இயேசுவின் சரீரத்தை அபிஷேகம் செய்தலை நிறைவு செய்வதற்காக பரிமள வர்க்கங்களைக் கொண்டு வந்திருந்தனர் (மாற். 16:1; லூக். 24:10).[53]*

*அவர்கள் தோட்டத்தை நெருங்குகையில், "கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான்?" என்று வினவிக் கொண்டனர் (மாற். 16:3). அவர்கள் தேவையின்றிக் கவலைப்பட்டனர். அவர்கள் அங்கு வந்து சேர்ந்தபோது, "கல்லறையை அடைத்திருந்த கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண் [டனர்]" (லூக். 24:2). அவர்கள் கல்லறைக்குள் நுழைந்து, இயேசுவின் சரீரம் இருக்க வேண்டிய இடத்தில் இராததைக் கண்டு கலக்கம் அடைந்தனர் (லூக். 24:3, 4).[54]*

*பின்பு, எதிர்பாராத வகையில், "பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டு பேர் அவர்கள் அருகே நின்றார்கள்" (லூக். 24:4).[55] பெண்கள் அவர்களைக் கண்டபோது, "பயப்பட்டுத் தலைகவிழ்ந்து தரையை நோக்கி [நின்றனர்]" (லூக். 24:5அ). அந்த "மனிதர்களில்" ஒருவரான தூதன், கல்லறையின் கல்லைப் புரட்டித் தள்ளியிருந்தவராவார் (மத். 28:2, 5). அவர் அப்பெண்களிடத்தில் பின்வருமாறு கூறினார்:*

> *நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன் (மத். 28:5).*
>
> *உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? (லூக். 24:5ஆ).*
>
> *அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே[56] உயிர்த்தெழுந்தார் (மத். 28:6அ).*

> *மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப் படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம் நாளில் எழுந்திருக்க வும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள் (லூக். 24:7).*

> *கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்கு [மற்றும் பேதுருவுக்கு] ச் சொல்லுங்கள்; அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்;[57] இதோ உங்களுக்குச் சொன்னேன் (மத். 28:6ஆ, 7; மாற். 16:7ஐக் காணவும்).*

*அப்பொழுது அந்தப் பெண்கள் இயேசுவின் வாக்குத்தத்தத்தை நினைவுகூர்ந்து (லூக். 24:8) "பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்" (மத். 28:8).[58] வழியில் அவர்கள், "ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாமற் போனார்கள்" (மாற். 16:8),[59] ஆனால் அப்போஸ்தலர் கள் தங்கியிருந்த இடத்தை அடைந்தபோது, அவர்கள் "இந்த சங்கதி களெல்லாவற்றையும் பதினொருவருக்கும்[60] மற்றெல்லாருக்கும் அறிவித் தார்கள்" (லூக். 24:9; வ. 22, 23ஐக் காணவும்).*

*அந்தப் பெண்கள், பரலோகத்துச் செய்தியாளர்களைப் பற்றியும், நம்பிக்கையின் செய்தியைப் பற்றியும் கூறுகையில் அவர்களின் குரலில் இருந்த உணர்வெழுச்சியைக் கற்பனை செய்தல் கடினமானதாக இருப்ப தில்லை. ஆனால் அவர்களின் வார்த்தைகள் அப்போஸ்தலர்களுக்கு "வீண் பேச்சாகத் தோன்றினதினால், அவர்கள் இவர்களை நம்பவில்லை" (லூக். 24:10, 11) என்பது கவலைக்குரியதாக இருந்தது.[61] அவர்கள் நம்பி இணங்கு வதற்கு முன் அதிக ஆதாரம் தேவைப்பட்டது - அது விரைவில் வரும்.*

## *முடிவுரை*

*பெண்கள் அறிவித்ததை அப்போஸ்தலர்கள் "நம்பாதிருப்பார்கள்." இயேசுவின் மரணவேளையில், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவார் என்று ஒருவராகிலும் நம்பியிருக்கவில்லை. அவரை அடக்கம் செய்தவர்கள் அதை நம்பவில்லை. மூடிய கதவுகளுக்குப் பின்னிருந்த அவரது சீஷர்கள் அதை நம்பவில்லை. அவரது உடலை அபிஷேகம் செய்ய வந்த பெண்கள் அதை நம்பவில்ல. நிச்சயமாக அவரது விரோதிகள் அதை நம்பவில்லை. H. I. ஹெஸ்டர் அவர்கள், "உயிர்த்தெழுந்த கர்த்தர் தாம் மீண்டும் உயிரோடிருப்பதைத் தமது சீஷர்கள் நம்பி இணங்கச் செய்தல் என்பதே அவரது முதல் மாபெரும் பணிப்பொறுப்பாக இருந்தது"[62] என்று எழுதினார். இந்தப் பணிப்பொறுப்பை அவர் எவ்வாறு நிறைவேற்றினார் என்பதை நாம், இந்தப் பாடத்தின் இரண்டாம் பகுதியில் காண்போம்.*

குறிப்புகள்

[1]இது இரு பகுதிப் பாடத்தின் முதல் பகுதியாக உள்ளது. நேரம் ஒரு காரணியாக இருந்தால், இந்தப் பாடமும் இதற்கு அடுத்த பாடமும் ஒரே எடுத்துரைப்பில் தரப்படும்படி சுருக்கப்படலாம். [2]இப்புத்தகத்தில் காணப்படும் "ரோமச் சிலுவையில் ஆறுமணி நேரங்கள்" என்ற பாடத்தில் உள்ள கலந்துரையாடலையும், "சிலுவையின் அருகில் பெண்கள்'' என்ற துணைப்பாடத்தையும் காணவும். [3]ஓய்வுநாளில் சிலுவையில் உடல்களை விட்டுவைத்தல் என்பது ஓய்வுநாளையே தீட்டுப்படுத்தி விடும் என்று கூறிய ஏவுதல் பெற்றிராத சட்டத்தை/பாரம்பரியத்தை யூதர்கள் கொண்டிருந்தனர் என்றும் பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர். [4]வேறொரு இடத்தில் குறிப்பிடப்பட்டபடி, ஒரு நாள் பஸ்கா பண்டிகையை உடனடியாகத் தொடர்ந்து புளிப்பில்லாத அப்பப் பண்டிகையான ஏழு நாட்கள் தொடர்ந்து வந்தது. புதிய ஏற்பாட்டுக் காலகட்டத்தில், இவ்விரு பண்டிகைகளும் ஒன்றுகலந்து பஸ்கா மற்றும் புளிப்பில்லாத அப்பப்பண்டிகை என்று அறியப்பட்டிருந்தன. "பெரிய ஓய்வுநாள்" என்ற சொற்றொடரின் மீதான மற்ற கலந்துரையாடலுக்கு இப்புத்தகத்தில் இனிவரும் "இயேசு எந்த நாளில் மரித்தார்?" என்ற பாடத்தில் காணவும். [5]"ரோமச் சிலுவையில் ஆறுமணி நேரங்கள்'' என்ற பாடத்தில் உள்ள சிலுவையில் அறையப்படுதல் பற்றிய விளக்கத்தை மறுகண்ணோட்டமிடவும். [6]இது, "பெரும்பாலான ரோமப் போர்ச்சேவகர்களுக்குப் பயிற்றுவிக்கப் பட்டிருக்கக் கூடிய, மரணத்திற்கு ஏதுவான காயம் உண்டாக்குதல்" என்பதற்குக் காரணமாய் இருந்திருக்கும் (William D. Edwards, Wesley J. Gabel, and Floyd E. Hosmer, "On the Physical Death of Jesus Christ," *Journal of the American Medical Association* [21 March, 1986]: 1460). [7]R. C. Foster, *Studies in the Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1971), 1286. [8]இயேசுவின் எலும்புகள் முறிக்கப்படவில்லை என்பதும் பஸ்கா ஆட்டுக்குட்டியின் உருவகத்தை நிறைவேற்றுவதற்கு முக்கியமானதாக இருந்தது. [9]This was the conclusion reached by William Stroud in *The Physical Cause of the Death of Christ* (cited in Foster, 1285-86). Several medical possibilities are named in Edwards, Gabel, and Hosmer, 1463. [10]1 யோவான் 5:6, 8 வசனங்கள் பல்வேறு வகையான விளக்கங்களுக்கு உட்பட்டுள்ளன. இந்த வசனங்களில் உள்ள ஜலம் [தண்ணீர்] என்பது அநேகமாக இயேசுவின் ஞானஸ்நானத்தைக் குறிப்பிடுவதாயிருக்கையில், இரத்தம் என்பது அவரது மரணத்தைக் குறிப்பிடுவதாயிருக்கலாம் (J. W. Roberts, *The Letters of John*, The Living Word Commentary series, ed. Everett Ferguson [Austin, Tex.: R. B. Sweet Co., 1968], 129-33).

[11]இயேசு மயக்கமடைந்திருந்தார் என்பது, உயிர்த்தெழுதலை மறுக்கின்ற சிலரால் முன்வைக்கப்படுகிற புனைவு மிகுந்த கோட்பாடாக உள்ளது. இது வழக்கமாக "the swoon theory" [சுயநினைவை இழத்தல் என்ற கோட்பாடு] என்று அழைக்கப்படுகிறது. [12]Edwards, Gabel, and Hosmer, 1463. [13]இவ்விடத்தில் உள்ள "யூதருடைய" என்ற சொற்றொடர் பொதுவாக, "யூதேயாவின்" என்ற விளக்கம் தரப்படுகிறது. KJVயில் "Judean town" என்றுள்ளது. [14]"இயேசுவின் நாட்களில் பலஸ்தீனம்'' என்ற வரைபடத்தில் காணவும். இந்த இடத்தைப் பற்றி Alfred Edersheim, *The Life and Times of Jesus the Messiah*, New Updated Version (Peabody, Mass.: Hendrickson Publishers, 1993), 898 என்ற புத்தகத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. [15]''கிறிஸ்துவின் வாழ்வு, 4'' என்ற புத்தகத்தில் காணப்படும் ''நான் பார்வையற்றவனாக இருந்தேன், ஆனால் இப்போது பார்க்கின்றேன்'' என்ற பாடத்தில் யோவான் 9:22க்கான விளக்கங்களைக் காணவும். [16]இது, ஆலோசனைச் சங்கத்தார் இயேசுவின் மரணத்திற்காக வாக்களிக்கையில் யோசேப்பு அங்கிருக்கவில்லை என்று அர்த்தப்படுகிறதா? அவர் வேண்டுமென்றே புறம்பே

இருந்திருக்கலாம், அவர் மற்ற முக்கியமான கடமைகளைக் கொண்டிருந்து இருக்கலாம், அல்லது அவருக்குக் கூட்டம் நடப்பது பற்றித் தகவல் அறிவிக்கப்படாதிருந்து இருக்கலாம். அவர் அங்கிருந்து, வாக்களிப்பதிலிருந்து விலகியிருந்திருக்கலாம். நமக்கு இதைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை, ஆனால் அதுவரையிலும் இயேசுவின் சார்பாக யோசேப்பு பேசியிருந்ததில்லை என்பது தெளிவாகக் காணப்படுகிறது. [17]James Stalker, *The Trial and Death of Jesus Christ* (New York: A. C. Armstrong and Son, 1909), 310-11. [18]யோவான் *3:1-21*ன் மீதான விளக்கங்களுக்கு "கிறிஸ்துவின் வாழ்வு, *1*" என்ற புத்தகத்தில் "ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல்வேளை" என்ற பாடத்தில் காணவும். யோவான் *7:50-52*ன் மீதான சுருக்கமான விளக்கங்களுக்கு "கிறிஸ்துவின் வாழ்வு, *4*" என்ற புத்தகத்தில் "எருசலேமுக்குப் பயணப்படுதல்" என்ற பாடத்தில் காணவும். [19]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 734. [20]ஆணிகள் கழற்றப்படுவதற்கு முன்பு சிலுவையின் குறுக்குச் சட்டம் கீழே இறக்கப்பட்டதா அல்லது இயேசு சிலுவையில் தொங்கியபோதே ஆணிகள் கழற்றப்பட்டதா என்று நாம் அறிவதில்லை. எவ்வகையிலும், யோசேப்பு ஒரு செல்வந்தராக இருந்தபடியால், இந்தப் பணிப்பொறுப்பிலும் இதற்குப் பின் தொடர்ந்த முயற்சிகளிலும் அவருக்கு உதவுவதற்கு அவர் வேலையாட்களைக் கொண்டிருந்தார்.

[21]உயிர்ப்பிக்கப்பட்டது *யார்* என்பது பற்றிய சந்தேகத்தை நீக்குவதற்காக "ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறை" என்ற உண்மையானது, வலியுறுத்தப்பட்டுள்ளது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [22]தோட்டமும் கல்லறையும் இருந்த இடமானது கொல்கொதா இருந்த இடத்தைச் சார்ந்துள்ளது. இதைப் பற்றிய சுருக்கமான கலந்துரையாடல் ஒன்றை "கிறிஸ்துவின் வாழ்வு, *6*" என்ற புத்தகத்தில் "வெற்றியா அல்லது துன்பமா" என்ற பாடத்தில் காணவும். கல்லறை இருந்த இடம் பற்றிய வரலாற்று மற்றும் புதைபொருள் ஆராய்ச்சி ரீதியான விரிவான கலந்துரையாடல் ஒன்று John McRay, *Archaeology and the New Testament* (Grand Rapids, Mich.: Baker Book House, 1991), 206-17 என்ற புத்தகத்தில் உள்ளது. [23]இது மலையோரமாய்க் குடையப்பட்ட ஒரு சிறு குடைவறையாக இருக்கலாம். "கல்லறையானது கன்மலையில் வெட்டப்பட்டிருந்தது" என்ற உண்மையானது அதற்கு ஒரே ஒரு நுழைவாயில் மாத்திரம் இருந்தது என்று சுட்டிக் காண்பிக்கிறது. [24]யோசேப்பு "அரிமத்தியாவில் இருந்த தமது வீட்டிலிருந்து இவ்வளவு தூரத்தில்" ஒரு கல்லறையைத் தமக்காக வெட்டி வைத்திருந்தது பற்றிச் சிலர் கேள்வியெழுப்புகின்றனர், ஆனால் பின்வரும் கருத்துக்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்: *(1)* யோசேப்பு, "அரிமத்தியா ஊரைச் சேர்ந்தவர்" என்று அடையாளப்படுத்தும் சொற்றொடரானது அவர் இன்னமும் அங்கே வாழ்ந்தார் என்று அர்த்தப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. (இயேசு, நாசரேத்தூரில் தொடர்ந்து வாழ்ந்திராத காலத்திலும், "நாசரேத்தூரைச் சேர்ந்தவர்" என்ற சொற்றொடரினால் அடையாளப் படுத்தப்பட்டார்.) *(2)* எருசலேமில் புதைக்கப்படுதல் என்பது கௌரவம் தொடர்புடைய விஷயமாக இருந்திருக்கலாம். [25]யோவான் *19:42* மற்றும் *20:13* ஆகிய வசனங்கள், இந்தக் கல்லறையானது ஒரு தற்காலிக அடக்கம் செய்யும் இடமாக இருந்திருக்கலாம் மற்றும் யோசேப்பு, இயேசுவின் சரீரத்தை ஓய்வுநாளுக்குப் பின்பு இன்னும் அதிகம் தகுதிவாய்ந்த இடத்திற்கு மாற்றத் திட்டமிட்டிருக்கலாம் என்று சுட்டிக்காண்பிக்கலாம். விஷயம் இதுவாக இருந்ததென்றால், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலானது யோசேப்பின் திட்டங்களைப் பொருத்தமற்றவையாக்கிற்று. [26]யோவான் *19:40* மற்றும் *20:5* ஆகிய வசனங்கள் "சீலைகள்" ["linen wrappings"] ("strips of linen"; KJV) பற்றிப் பேசுகின்றன.

யோசேப்பினால் வாங்கப்பட்டிருந்த துப்பட்டி என்பது (மாற். 15:46) இந்த நோக்கத்திற்காகத் துண்டுகளாகக் கிழிக்கப் பட்டிருக்கலாம் அல்லது ஒருவேளை இந்தத் துண்டுத் துணிகள் இன்னொரு ஆதார மூலத்திலிருந்து வந்திருந்து, தலைத்துணி போன்ற ஒரு துப்பட்டியானது அபிஷேகம் முடிந்தபின்பு மூடப்பட்ட உடல்மீது போடப்பட்டிருக்கலாம். [27]NASBயில் மற்றும் தமிழ் வேதாகமத்தில் "ஏறக்குறைய நூறு இராத்தல்" என்றுள்ளது, ஆனால் கிரேக்க வசனத்தில், நூறு லிட்ராக்கள் [litras] என்றுள்ளது. ஒரு லிட்ரா என்பது ஏறக்குறைய பன்னிரண்டு அவுன்சுகளாக இருக்கலாம் என்று பெரும்பாலான அதிகாரத்துவம் கொண்டவர்கள் நினைக்கின்றனர். விஷயம் இதுவாக இருக்குமென்றால், நூறு லிட்ராக்கள் என்பது ஏறக்குறைய எழுபது பவுண்டுகளாக இருக்கும். NIVயில் "ஏறக்குறைய எழுபத்து ஐந்து பவுண்டுகள்" என்றுள்ளது. இந்த அளவான பரிமளப் பொருட்களின் விலை மிகவும் உயர்ந்ததாக இருக்கும், இது யோசேப்பைப் போன்று, நிக்கொதேமுவும் மிகவும் செல்வந்தராய் இருந்தார் என்று சுட்டிக்காண்பிக்கிறது. வெள்ளைப்போளம் என்பது ஞானிகளால் கொண்டு வரப்பட்ட கொடைகளில் ஒன்றாக இருந்தது. இது சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளுக்குத் தரப்படும் புளிப்பான திராட்ச ரசத்தில் ஒரு போதைப் பொருளாகவும் பயன்படுத்தப்பட்டது. கரியபோளம் என்பது கொழுத்த இலைகளையுடைய ஒரு மலர்த் தாவரமாகும். நான் வாழும் இடத்தில் அந்த இலைகளிலிருந்து எடுக்கப்படும் சாறானது அரிப்புகளைக் குணமாக்குவதற்கு அல்லது தீப்புண்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு ஒரு மென்மையான களிம்பாகச் செய்யப்படுகிறது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், இந்தத் தாவரம் காயவைக்கப்பட்டு, தூளாக அரைக்கப் பட்டது. வெள்ளைப் போளம் மற்றும் கரியபோளம் ஆகியவை மனதிற்கினிய நறுமணப்பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டது பற்றிய ஒரு உதாரணத்திற்கு சங்கீதம் 45:8ல் காணவும். [28]இந்தக் கற்கள் பெரியவைகளாக, தட்டையானவைகளாக மற்றும் வட்டமானவைகளாக (நடுவில் துளையற்ற பெரிய ஏந்திரக் கல்லைப் போன்றவையாக) இருந்தன, இவைகள் பாறையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட குழிந்த காடி வெட்டுக்களின்மீது உருட்டி மூடுவதற்கென்று ஏற்படுத்தப் பட்டன. அந்தக் காடிவெட்டுகள் பொதுவாக, வட்டக் கல்லானது புறம்பாக உருட்டப்படுவதைக் காட்டிலும் கல்லறையின் நுழைவாயிலின்மீது உருட்டப்படுவது சுலபமாயிருக்கும் வகையில் சாய்மானமாக இருக்கும் (மாற். 16:3ஐக் காணவும்). கல்லை உருட்டுவதில் யோசேப்புக்கு உதவி தேவைப்பட்டிருந்தால், அவருக்கு உதவுவதற்கு நிக்கொதேமு அங்கிருந்தார். அநேகமாகச் சில வேலையாட்களும் இருந்திருப்பார்கள். [29]இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு யோசேப்புக்கும் நிக்கொதேமுவுக்கும் என்னவாயிற்று? கிறிஸ்துவை அடக்கம் செய்வதற்கு எல்லாவற்றையும் பணயம் வைத்திருந்த இம்மனிதர்கள் கிறிஸ்தவர்களாகி, விசுவாசத்தை வெளிப்படையாகத் தற்காத்தார்கள் என்று பேசப்பட்டிருப்பதை நாம் எதிர்பார்ப்போம் - ஆனால் புதிய ஏற்பாடு அதைக் கூறுவதில்லை. இவ்விரு மனிதர்களைப் பற்றிப் பிற்பாடு புனைந்துரையான பல புராணங்களை மக்கள் கண்டுபிடித்தனர், ஆனால் இந்தக் கதைகள் யாவும் புராணங்களாக மாத்திரம் உள்ளன. [30](யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருக்குத் தாயான) சலோமே என்பவள் சிலுவையினருகில் இவ்விரு பெண்களுடன் இருந்தாள் (மாற். 15:40), ஆனால் இவள் அவர்களுடன் கல்லறைக்குச் செல்லவில்லை. ஒருவேளை இவள் இயேசுவின் தாயை ஆறுதல்படுத்துவதற்காகத் தனது மகனின் வீட்டிற்குச் சென்றிருக்கலாம்.

[31]B. S. டீன் அவர்களின், "வேதாகம வரலாற்றின் வரைக்குறிப்பு" என்ற புத்தகத்தில் காணவும். [32]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 223. [33]பிலாத்துவைப் பற்றி நாம் என்னதான் கூறினாலும், இவர் தமது

*குடிமக்கள் எப்போதும் தம்மைத் தொடர்பு கொள்ளக்கூடியவராக இருந்தார்: முதலில் அவர் யூதத்தலைவர்களை அதிகாலையில் சந்தித்தார் (மாற். 15:1), நாள் முழுதும் அவர்களுடன் இருந்தார் (யோவா. 19:21, 31; மாற். 15:43ஐக் காணவும்), மற்றும் இப்போது இருள் சூழ்ந்த பின்னர், அவர்களை அவர் சந்தித்தார். [34]யூதத் தலைவர்களால் குறிப்பிடப்பட்ட "மூன்று நாட்கள்" என்பது "யோனாவின் அடையாளம்" தொடர்பாக இயேசுவினால் குறிப்பிடப்பட்ட (மத். 12:39, 40) கூற்றையும், தேவாலயத்தை இடித்தல் பற்றிய குறிப்புக் கூற்றையும் (யோவா. 2:19) குறித்திருக்கலாம். இயேசுவின் போதனையைப் பற்றி யூதத் தலைவர்கள் அறிந்திருக்கக் கூடிய வேறு சில சாத்தியக்கூறுகளும் இருந்திருக்கக் கூடும். எடுத்துக்காட்டாக, இயேசு தமது சீஷர்களிடம் பேசியதை அவர்கள் மறைவாயிருந்து கேட்டிருக்கலாம் அல்லது அவற்றை யூதாஸ் அவர்களுக்குக் கூறியிருக்கலாம். [35]"மூன்று நாளைக்குப் பின்" என்பது "மூன்றாம் நாள்வரைக்கும்" என்று அர்த்தப்படுவதாகத் தலைவர்கள் புரிந்துகொண்டிருந்தனர் என்பதைக் கவனிக்கவும். இயேசு மூன்று முழுநாட்கள் கல்லறையில் இருப்பார் என்று அவர்கள் நினைத்திருந்தால், அவர்கள் "நான்காம் நாள் வரைக்கும்" என்று கூறியிருப்பார்கள். இதைப் பற்றிய மற்ற கலந்துரையாடல்களை "இயேசு எந்த நாளில் மரித்தார்?" என்ற இனிவரும் துணைப் பாடத்தில் காணவும். [36]உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, நடந்தது என்ன என்பது பற்றிப் பொய்யுரைக்கும்படி காவல் சேவகர்களுக்குப் பிரதான ஆசாரியர்கள் லஞ்சம் கொடுத்தபோது (மத். 28:11-13), அந்தச் சேவகர்களிடம் அவர்கள் இந்த விஷயம் "தேசாதிபதிக்குக் கேள்வியானால்" அவர்கள் [ஆசாரியர்கள்], அவர்களை [காவல் சேவகர்களை] த் "தப்புவிப்பதாக"க் கூறினர் (மத். 28:14). யூதக் காவல் சேவகர்களல்ல ஆனால் ரோமக் காவல் சேவகர்கள்தான் அப்படிப்பட்ட சூழ்நிலையில் தேசாதிபதியிடம் இடர்ப்பாட்டிற்கு உள்ளாகக் கூடும்* (Foster, 1310). [37]*இதை அவர்கள் நிச்சயப்படுத்தவில்லை என்றால், இந்த முழுச் செயல்பாட்டிற்கும் கருத்தெதுவுமிராது* (Ibid., 1311). [38]Richard Rogers, *The Life of Christ and His Teaching* (Lubbock, Tex.: Sunset International Bible Institute External Studies Department, 1995), 101. [39]*இந்தப் பணிக்கு எத்தனை காவல் சேவகர்கள் அமர்த்தப்பட்டனர் என்று நமக்குக் கூறப்படுவதில்லை. ஆனால் ஒருவர் மாத்திரம் அமர்த்தப் படவில்லை என்று நாம் அறிகின்றோம் (மத். 28:4); இருவருக்கு மேற்பட்டவர்கள் இருந்தனர் என்று கூட நாம் அறிகின்றோம் (28:11). சிலுவையில் அறையும் பணிக்கு நான்கு பேர் நியமிக்கப்பட்டிருந்தனர் (யோவா. 19:23); ஒருவேளை அத்தனை பேர் இந்தப் பணிக்கும் நியமிக்கப்பட்டிருக்கலாம். இந்தக் காவலானது ஒரு சில நாட்களுக்குத் தொடர வேண்டி இருந்ததால் - பேதுரு காவல் செய்யப்பட்டபோது (அப். 12:4) நடைபெற்றது போல் - நான்கு காவல் சேவகர்களைக் கொண்ட நான்கு குழுக்கள் பொறுப்பை மாற்றி மாற்றி நிறைவேற்றியிருக்கக் கூடிய சாத்தியக்கூறும் உள்ளது.* [40]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 342.

[41]*மாற்கு 16:9 வசனமானது பிற்பாடு கலந்துரையாடப்படவிருக்கிற, மாற்கு சுவிசேஷத்தின் வழக்கிற்குரிய முடிவின் பாகமாக உள்ளது. இருப்பினும், பெரும்பான்மையானவர்கள், மாற்கு 16:9ன் கூற்றானது, தொடக்க கால சபையினால் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது என்று ஒப்புக்கொள்ளுகின்றனர். வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பது கிறிஸ்தவ விசுவாசத்தின் மையக் கருத்தாக உள்ளது. பழைய உடன்படிக்கையின் கீழ், ஓய்வுநாளான ஏழாம் நாள்தான் "விசேஷித்த" நாளாக இருந்தது (யாத். 20:8-11). புதிய உடன் படிக்கையின் கீழ், "கர்த்தருடைய நாளான" வாரத்தின் முதல் நாள்தான் "விசேஷித்த" நாளாக இருக்கிறது (வெளி. 1:10). இந்த*

நாளில், தொடக்க கால சபையார் ஆராதிக்கக் கூடிவந்தனர் (1 கொரி. 16:1, 2; அப். 20:7). [42]மத்தேயு 28:1-8ல் உள்ள நிகழ்ச்சிகளின் வரிசைத் தொடர், பெண்கள் கல்லறைக்கு வந்துகொண்டிருக்கையில் தூதன் கல்லைப் புரட்டியிருந்தான் - கல்லறை திறக்கப்படுவதற்குச் சற்று முன்பாக இயேசு உயிர்ப்பிக்கப் பட்டிருந்தார் என்று சுட்டிக்காண்பிப்பதாகப் பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர். இந்த முடிவு சரியானதென்றால், உயிர்த்தெழுதலானது வாரத்தின் முதல் நாள் விடியற் காலத்திற்குச் சற்றே முன்னதாக நடைபெற்றது. [43]லூக்கா 23:43க்கான விளக்கங்களை "ரோமச்சிலுவையில் ஆறுமணி நேரங்கள்" என்ற பாடத்தில் காணவும். [44]கிறிஸ்துவின் மறுவருகையின்போது உயிருடன் இருக்கும் எல்லாருடைய உடல்களும் மாம்சத்திற்குரிய உடல்கள் என்பதிலிருந்து ஆவிக்குரிய உடல்கள் என்ற நிலைக்கு மாற்றப்படும் (1 கொரி. 15:50-53; வ. 42-44ஐக் காணவும்). இதைப் போன்ற ஒரு விஷயம்தான் இயேசுவின் உடலுக்கும் நடைபெற்றிருக்கும் (ஏனெனில் இப்போது அந்த உடலானது பூட்டப்பட்டிருந்த வீட்டினுள் நுழைய முடிந்தது; யோவா. 20:19). இப்புத்தகத்தில் "இயேசுவின் உயிர்த்தெழுந்த உடல்" என்ற துணைப்பாடத்தைக் காணவும். [45]Robert Duncan Culver, *The Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 267. [46]இயேசுவின் உடலில் இருந்து துணிகளை அகற்றுவதற்குக் கல்லறையினுள் ஒருவரும் இல்லையாதலால் (யோவா. 11:44ஐக் காணவும்), மாற்றப்பட்ட இயேசுவின் உடலானது பிற்பாடு பூட்டப்பட்ட கதவுகளினூடே கடந்து சென்றது போல் (யோவா. 20:19, 26), அதன் கட்டுகளினூடாகவும் கடந்திருக்கும் என்று நாம் யூகிக்கலாம். அவரது உயிர்த்தெழுதல் பற்றி நாம் அறியாதவை அதிகமாக உள்ளன! நமது கேள்விகளுக்கான பதில்கள் நமது ஆர்வத்தை நிறைவடையச் செய்யலாம், ஆனால் அவைகள் நமது விசுவாசத்தைக் கூட்டுவதில்லை - எனவேதான் தேவன் நமக்கு இவ்விதமான பதில்களைக் கொடுக்காதிருக்கின்றார். [47]உயிர்த்தெழுதல் பற்றிய பெரும்பான்மையான குறிப்புகள் "தேவன் அவரை உயிர்த்தெழுப்பினார்" (அப். 2:24) என்பதை வலியுறுத்தும் விதமாக இயேசு "உயிர்ப்பிக்கப்பட்டார்" என்று கூறுகின்றன (யோவா. 2:22; 21:14; ரோமர் 4:25; 6:4; 8:34; 1 கொரி. 15:4). இருப்பினும், இயேசு தமது சொந்த உயிர்த்தெழுதலில், தாம் செயல்படுத்தப்படுபவராக இராமல், செயல்படுபவராக இருப்பதாகவும் மறைமுகமாய்க் குறிப்பிட்டார் (யோவா. 10:17, 18). உயிர்த்தெழுதலில் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னமும் ஒரு காரணியாக இருந்ததென்று பவுல் மறைமுகமாய்க் குறிப்பிட்டார் (ரோமர் 8:11; 1:4). இந்தக் கூற்றுக்களில் முரண்பாடு எதுவும் இல்லை, ஏனெனில் தேவத்துவத்தின் ஒரு உறுப்பினர் செய்கின்றவைகளை எல்லாரும் செய்கின்றனர் என்று கூறமுடியும். [48]Peter Marshall, *The First Easter,* ed. Catherine Marshall (New York: McGraw-Hill Co., 1959), 128-29. [49]அந்த வேளையில் இயேசு கல்லறையில் இருந்து வெளியே வந்ததாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார், ஆனால் அது, அவரது முதல் தரிசனம் அவிசுவாசம் கொண்டிருந்த காவல் சேவகர்களுக்குக் கிடைத்திருக்கும் என்று அர்த்தப்படும். சுவிசேஷ விவரங்களின்படி, அவர் முதலில் மகதலேனா மரியாளுக்குத் தரிசனமானார் (மாற். 16:9; யோவா. 20:1-18ஐக் காணவும்). [50]காவல் சேவகர்கள் புறப்பட்டுச் சென்றபோது, அவர்களில் சிலர் என்ன செய்தனர் என்பது மத்தேயு 28:11-15ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வசனப் பகுதியை நாம் பிற்பாடு படிப்போம்.

[51]பழைய மொழிபெயர்ப்புகளில் "ஓய்வுநாளின் முடிவில்" என்றுள்ளது (KJVயைக் காணவும்), இது சில ஒப்பீடுகளில், ஓய்வுநாளின்போது இன்னமும் மூடப்பட்டிருந்த கல்லறைக்கு இரண்டு மரியாள்களும் இன்னொரு முறை வந்தனர் என்ற கருத்தை உள்ளடக்கக் காரணமாயிற்று. இன்றைய நாட்களில் பெரும்பாலான

*மொழிபெயர்ப்பாளர்கள், "ஓய்வுநாளுக்குப் பின்" என்பதே மிகச் சரியானது என்று நம்புகின்றனர்* (NKJV, NASB *மற்றும்* NIV *ஆகியவற்றில் காணவும்).* [52]*யோவன்னாள் என்பவள் கலிலேயாவில் இயேசுவுக்கு ஊழியம் செய்த பெண்களில் ஒருத்தியாக இருந்தாள் (லூக். 8:3).* [53]*இந்தப் பாடத்தின் இரண்டாம் பாகத்தில் நாம் காணப்போகின்றபடி, மகதலேனா மரியாள் கல்லறையை அடைந்த பின்பு, அவள் பேதுரு மற்றும் யோவான் ஆகியோரிடத்தில் ஓடிச் சென்றாள். மற்ற பெண்களிடம் தூதன் பேசிய போது, அவள் அவர்களுடன் இருக்கவில்லை.* [54]*அவர்கள் "பிணத்தைச் சுற்றியிருந்த துணிகளை'' கண்டிருக்கலாம் (யோவா. 20:5), ஆனால் உடலை அவர்கள் காணவில்லை.* [55]*சுவிசேஷ விவரங்களில் அடிக்கடி கூறப்படுவதுபோல், ஒரு விவரம் இரண்டு "மனிதர்களை"ப் பற்றிக் கூறுகிறது (லூக். 24:4), மற்றவைகள் ஒரே ஒரு மனிதனைப் பற்றிக் கூறுகின்றன (மாற். 16:5; மத். 28:5). இருவருக்காகவும் பேசுகிறவர் ஒருவராய் இருந்திருக்க வேண்டும்.* [56]*அவர் "சொல்லி" யிருந்தது பற்றி மத்தேயு 16:21; 17:23; 20:19; 26:32 ஆகியவற்றில் காணவும். இவற்றில் முதல் இரு வசனங்கள் லூக்கா 24:6, 7ல் தூதனின் கூற்றுக்கும் நடைமுறைப் படுத்தப்படலாம்.* [57]*இதற்கு முன்பே இயேசு தமது சீஷர்களைக் கலிலேயாவில் சந்திப்பதாக வாக்களித்திருந்தார் (மத். 26:32). இந்தச் சந்திப்பிற்கு அவர் ஒரு இடத்தைக் குறிப்பிட்டிருந்தார் - ஒரு குறிப்பிட்ட மலை (மத். 28:16). பிற்பாடு அவரது சீஷர்கள் அவரைக் கலிலேயாவில் சந்திப்பார்கள் என்ற உண்மையானது தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர் அதற்கு முன்பே அவரைச் சந்திக்கும் சாத்தியக்கூற்றை விலக்கிப் போடுவதில்லை.* [58]*ஏதோ ஒருவேளையில் இயேசு இந்தப் பெண்களுக்குத் தரிசனமானார் (மத். 28:9, 10), ஆனால் இந்தத் தரிசனம், அவர்கள் சீஷர்களைச் சந்திக்கச் சென்று கொண்டிருந்தபோது கிடைத்ததா அல்லது அவர்கள் புறப்பட்டபோது கிடைத்ததா என்பதை நாம் அறிவதில்லை. "விசுவாசிக்கப் போராடுதல்" என்ற இனிவரும் பாடத்தில் உள்ள கலந்துரையாடலைக் காணவும்.* [59]*தூதன் அவர்களை யாரிடத்திற்கு அனுப்பினாரோ அவர்களைத் தவிர வேறு எவருக்கும் அவர்கள் ஏதொன்றும் கூறவில்லை என்பதே, மாற்கு 16:8ன் "ஒன்றும் சொல்லாமல்'' என்பதையும் லூக்கா 24:9ன் ''அறிவித்தார்கள்'' என்பதையும் இணங்கச் செய்வதற்கான எளிய வழிமுறையாக உள்ளது.* [60]*"பன்னிருவர்" (மாற். 14:17) என்பது முன்பு "அப்போஸ்தலர்கள்'' என்று அர்த்தப்படும் பொதுவான குறிப்புப் பெயராக இருந்தது போலவே, "பதினொருவர்" என்பது (யூதாசுக்குப் பதில் வேறொருவர் நியமிக்கப்படுவதற்கு முன்பான) அந்த வேளையில் இருந்த அப்போஸ்தலர்களைக் குறிப்பிடுகிறது.*

[61]*சீஷர்களுக்குப் பெண்கள் அறிவித்தபோது அங்கிருந்திருக்கக் கூடிய கிலெயோப்பா என்பவர் (லூக். 24:22, 23), ''எங்களிலே சிலர் கல்லறையினிடத்திற்குப் போய், ஸ்திரீகள் சொன்னபடியே கண்டார்கள்; அவரையோ காணவில்லை'' என்று கூறினார் (லூக். 24:24). இது, பெண்கள் அறிவித்ததைக் கேட்டவர்களில் சிலர் புறப்பட்டு கல்லறைக்குப் போனார்கள் என்று அர்த்தப்படுத்தக்கூடும், ஆனால் இது அநேகமாக, பேதுருவும் யோவானும் கல்லறைக்குச் சென்றது பற்றிய லூக்காவின் தொகுப்புரையாக மட்டுமே இருக்கலாம் (யோவா. 20:1-10).* [62]Hester, 225.


இயேசுவின்
நாட்களில்
பலஸ்தீனம்
எர்மோன் மலை
செசரியா
கலிலேயா
கப்பர்நகூம்
ஹாட்டின்
ஹார்ன்ஸ்
கலிலேயாக்
கடல்
தாபோர் மலை
தெக்கப்போலி
யோர்தான் நதி
சமாரியா
பெருங்கடல்
அரிமத்தியா?
எம்மாவு?
ஒலிவமலை
எருசலேம்
யூதேயா
பெத்தானியா
சவக்கடல்
MILES 0 10 20
KMS 0 10 20 30

# *94*

# விசுவாசிக்கப் போராடுதல்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #42*

VIII. *இயேசுவின் உயிர்த்தெழுதல், தரிசனங்கள் மற்றும் பரத்துக்கேறுதல் (தொடர்ச்சி).*
   A. *ஞாயிற்றுக்கிழமை: இயேசு உயிர்த்தெழுந்த நாள் (தொடர்ச்சி).*
      1. *வெறுமையான கல்லறை (தொடர்ச்சி).*
         b. *இரண்டு அப்போஸ்தலர்களும் வெறுமையான கல்லறையும் (லூக். 24:12; யோவா. 20:1-10; லூக். 24:24ஐக் காணவும்).*
      2. *முதல் தரிசனம்: மகதலேனா மரியாளுக்கு (மாற். 16:9-11; யோவா. 20:11-18; லூக். 24:10ஐக் காணவும்).*
      3. *இரண்டாம் தரிசனம்: மற்ற பெண்களுக்கு (மத். 28:9-11அ; வ. 1, 5-8ஐக் காணவும்).*
      4. *ஒரு அறிக்கையும் ஒரு பொய்யும் (மத். 28:11-15).*
      5. *மூன்றாம் தரிசனம்: பேதுருவுக்கு (1 கொரி. 15:5; லூக். 24:34ஐக் காணவும்).*
      6. *நான்காம் தரிசனம்: கிலெயோப்பாவுக்கும் இன்னொருவருக்கும் (மாற். 16:12, 13; லூக். 24:13-35).*

## அறிமுகம்

*நீங்கள், தேவனுடைய வாக்குத்தத்தங்களில் ஒன்றை விசுவாசிக்க - உண்மையிலேயே விசுவாசிக்க - எப்போதாவது, போராடியிருக்கின்றீர்களா?[1] எடுத்துக்காட்டாக, உங்கள் வாழ்வில் ஒவ்வொரு விஷயமும் தவறாகிப் போவதாகக் காணப்படுகையில், நிறைவாகத் தேவன் "சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதற்கு" காரணமாக்குவார் (ரோமர் 8:28) என்று விசுவாசிப்பதைக் கடினமானதாக உணருகின்றீர்களா? தேவனுடைய வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொள்வதில் நம்மில் சிலர் கொண்டுள்ள அதே பிரச்சனையை இயேசுவின் சீஷர்களும் கொண்டிருந்தனர். கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில், தாம் மரித்தோரில் இருந்து உயிர்த்தெழப்போவதாகக் கூறியிருந்தார் (மாற். 8:31; 9:31), ஆனால் அவர்கள் அவரது வார்த்தைகளைப் புரிந்துகொள்ளவில்லை (மாற். 9:32; யோவா. 20:9ஐக் காணவும்). அவற்றை மிகவும் குறைவாகவே அவர்கள் விசுவாசித்தனர். இந்தப் பாடத்தில்[2] நாம், கர்த்தருடைய சீஷர்கள், அவர் உண்மையிலேயே மரித்தோரிலிருந்து உயிர்த்திருந்தார் என்பதை விசுவாசிக்கப் போராடியதைக் காண்போம்.*

## கல்லறையில்

## (லூக். 24:12; யோவா. 20:1-10)

*நமது முந்திய பாடத்தின் முடிவில் நாம், வாரத்தின் முதல் நாளின் அதிகாலையில் கல்லறைக்குச் சென்ற பெண்களின் வரலாற்றைக் கண்டிருந்தோம் (மத். 28:1-8; மாற். 16:1-8; லூக். 24:1-11). அவர்களில் மகதலேனா மரியாளும் இருந்தாள் (மத். 28:1; மாற். 16:1). ஏதோ ஒரு வேளையில், அவள் மற்ற பெண்களிடமிருந்து பிரிந்து சென்றாள். அவள், அவர்களுக்கு முன்பாகக் கல்லறைக்குச் சென்று, அவர்கள் வந்து சேர்வதற்கு முன்பாக அங்கிருந்து புறப்பட்டிருக்கலாம்.[3] அவர்கள் கல்லறைக்கு வந்து சேர்ந்த போது, அவள் அங்கு இருந்திருந்தால், ஒருவேளை அவள் அவர்களை அங்கேயே தங்கியிருக்கச் செய்து அவள் உதவிக்காக ஓடியிருக்கலாம்.*

*எவ்வகையிலும், அவள் அந்தப் புதைக்குமிடத்திற்குச் சென்று சேர்ந்த போது, அவள் "... கல் எடுத்துப்போடப்பட்டிருக்கக் கண்டாள்" (யோவா. 20:1). கல்லறைக்குள் சென்று பார்க்கத் தாமதியாமல், மிக மோசமானவற்றை யூகித்துக் கொண்ட அவள், பேதுருவையும் யோவானையும் காண்பதற்கு ஓடினாள் (யோவா. 20:2அ).[4] அவர்களிடத்தில் அவள், "கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை" என்று கூறினாள் (யோவா. 20:2ஆ).*

*கலக்கமடைந்த பேதுருவும் யோவானும் தோட்டத்திற்கு ஓடினார்கள் (யோவா. 20:3, 4அ; லூக். 24:12அ). ஒருவேளை இளையவராக இருந்திருக்கக் கூடிய யோவான், "பேதுருவைப் பார்க்கிலும் ... துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில் வந்து" (யோவா. 20:4ஆ; வ. 8அ-வைக் காணவும்). பெண்கள் புறப்பட்டுச் சென்ற பின்பே இவ்விரு மனிதர்களும் அங்கே வந்தனர் என்பது தெளிவு (மத். 28:8; லூக். 24:9ஐக் காணவும்).*

*யோவான் கல்லறைக்குள் குனிந்து உற்றுப் பார்த்தான் (யோவா. 20:5அ). அவன், இயேசுவின் சரீரம் இருந்த இடத்தில் "சீலைகள் கிடக்கிறதைக்" கண்டான், ஆனாலும் "அவன் உள்ளே போகவில்லை" (யோவா. 20:5ஆ). அவருக்குப் பின்னால் பேதுரு வந்து (யோவா. 20:6அ), தமது வழக்கமான கட்டுக்கடங்காத் தன்மையுடன் கல்லறைக்குள் பிரவேசித்தான். "சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான்" (யோவா. 20:6ஆ, 7; லூக். 24:12ஆ-வைக் காணவும்).[5]*

*பேதுருவின் தைரியத்தினால் ஊக்கப்படுத்தப்பட்ட யோவான், அவரைப் பின்பற்றிக் கல்லறைக்குள் சென்றான், அவன் சீலைகளைக் கண்ட போது, "விசுவாசித்தான்" (யோவா. 20:8). வெறுமையான கல்லறையில் நேர்த்தியாகச் சுருட்டி வைக்கப்பட்ட துணிகள் விசுவாசத்தை உண்டாக்கிற்று என்பதைப் பற்றிய விஷயம் என்ன? ஒருபுறத்தில், நண்பர்கள் இயேசுவின் உடலை இன்னொரு புதைக்கும் இடத்திற்கு எடுத்துச் சென்றிருந்தால், அவர்கள் பிணத்தைச் சுற்றும் துணிகளை நீக்கியிருக்க மாட்டார்கள். இன்னொரு புறத்தில், கல்லறைத் திருடர்கள் அந்த உடலைத்*

திருடிச் சென்றிருந்தால், அவர்கள் அந்தத் துணிகளை அகற்றுவதற்கு நேரம் எடுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். அந்தத் துணிகளை நேர்த்தியாக மடித்து வைப்பதற்கும் தலையில் சுற்றியிருந்த துணியைத் தனியே எடுத்து வைப்பதற்கும் அவர்களுக்கு நிச்சயமாகவே நேரம் கிடைத்திருக்காது. கல்லறைத் துணிகள் இருந்த நிலைக்கு, கிறிஸ்து தாமே ஏதோ ஒரு வகையில் அவற்றை விட்டுச் சென்றார் என்பதே தர்க்கரீதியான ஒரே விளக்கமாக இருந்தது. அவர் உயிருடன் இருக்க வேண்டும்!

பிணத்தை மூடியிருந்த துணிகள் முறையாக வைக்கப்பட்டிருந்தது யோவானின் விசுவாசத்திற்கு ஒரு காரணியாக இருந்தது என்று பல எழுத்தாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இயேசு, பூட்டியிருந்த கதவு களினூடே பிற்பாடு "கடந்து சென்றது" போல் அவர், துணிகள் மற்றும் பரிமள வர்க்கங்கள் ஆகியவற்றினூடே "கடந்து சென்றிருந்தார்" என்றால்,[6] கல்லறைத் துணிகள் பின்வருமாறு கிடந்திருக்க வேண்டும்:

> அவைகள் பட்டாம்பூச்சியானது சூரிய ஒளியில் தனது பிரகாசமான பயணத்தைத் தொடங்குகையில் விட்டுப்போன உலர்ந்து சுருங்கி, உடைந்துபோன, கூட்டுப்புழுவின் கூடுபோல் இருந்திருக்க வேண்டும் ... அல்லது, மிகச் சரியாகக் கூறுவதென்றால், கையிலிருந்து உருவப் பட்ட கையுறைபோல, இன்னமும் அதில் கையின் அடையாளமாக விரல்களின் தடம் நிலைத்திருத்தல் போல இருந்திருக்க வேண்டும்.[7]

இருப்பினும், இந்த வேளையில் இன்னமும் யோவானின் விசுவாசம் மாறுதலுக்கு உட்பட்டதாக மற்றும் முழுமையடையாததாகவே இருந்தது. இந்த விஷயத்திற்கு நாம், "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்று கதறிய (மாற். 9:24) தகப்பனின் இணைவு ஒன்றைத் தரவழைக்கலாம். பல ஆண்டுகளுக்குப் பின்பு யோவான், "அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டும் என்கிற வேத வாக்கியத்தை அவர்கள் [அவரும் பேதுருவும்] அறியாதிருந்தார்கள்" என்று எழுதினார் (யோவா. 20:9). அவ்விரு மனிதர்களும் "தங்களுடைய இடத்திற்கு" திரும்பிச் செல்லுகையில் (யோவா. 20:10), யோவான் ஓரளவுக்கு "விசுவாசித் தான்" (யோவா. 20:8), அதே வேளையில் பேதுரு "சம்பவித்ததைக் குறித்துத் தன்னில்" ஆச்சரியப்பட்டுக்கொண்டுபோனான் (லூக். 24:12இ).[8] இருந்த போதிலும், இது கர்த்தர் மீண்டும் உயிர்த்தெழுவார் என்று அவரே செய்த வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றம் என்று அவர்கள் [இந்த வேளையில்] முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை.[9]

## தோட்டத்தில் (மாற். 16:9-11; யோவா. 20:11-18; லூக். 24:10ஐக் காணவும்)

மகதலேனா மரியாள் கல்லறைக்குத் திரும்பி வந்தபோது, அவள் அநேகமாகப் பேதுரு மற்றும் யோவான் ஆகியோருடன் மற்ற பெண்களும் அங்கிருப்பார்கள் என்று எதிர்பார்த்திருக்கலாம் - ஆனால் எல்லாரும் போயிருந்தனர். அவள், "கல்லறையினருகே வெளியே நின்று அழுது

கொண்டிருந்தாள்" (யோவா. 20:11அ), தனது நண்பரின் இழப்பிற்காகவும், அவரது உடலை அபிஷேகம் செய்யத் தனக்கு வாய்ப்புக் கிடைப்பதற்கு முன்பு யாரோ ஒருவர் வந்து அதை எடுத்துக்கொண்டு போயிருந்ததற் காகவும் அவள் அழுதுகொண்டிருந்தாள்.

மரியாள், தான் கல்லறையைச் சரியாக ஆராய்ந்து பார்க்கவில்லையோ என்று நினைத்திருக்கலாம். அவள், "குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து, இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர் களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள்" (யோவா. 20:11ஆ, 12).[10] "கிறிஸ்துவின் கல்லறையானது புதிய கிருபாசனம் போலக் காட்சியளிக்கும் படி, அந்தத் தூதர்கள், உடன்படிக்கைப் பேழையின் மீதிருந்த கேருபீன் களைப்போல் வைக்கப்பட்டிருந்தனர்."[11] வானக தூதர்கள் மரியாளிடத்தில், "ஸ்திரீயே, ஏன் அழுகிறாய்?" என்று கேட்டனர் (யோவா. 20:13அ). அதற்கு அவள், "என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை" என்று பதில் அளித்தாள் (யோவா. 20:13ஆ).

அந்த வேளையில், மரியாள் "பின்னாகத்திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்" (யோவா. 20:14அ). மாற்கு 16:9ன்படி, இது இயேசு உயிர்த்தபின் கொடுத்த முதல் தரிசனமாக இருந்தது. முதலில் மரியாள், "அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்" (யோவா. 20:14ஆ). அவள் ஏன் அவரை உடனடி யாக அடையாளம் கண்டுகொள்ளவில்லை என்று நமக்கு நிச்சயமாகத் தெரிவதில்லை. ஒருவேளை அவரது உயிர்த்தெழுந்த சரீரத்தில் நுட்பமான மாற்றங்கள் இருந்திருக்கலாம்.[12] ஒருவேளை அவர் தோட்டத்தில் நிற்பதைக் காணும்படி அவள் எதிர்பார்த்திராத காரணத்தினால் அவரை அறியா திருக்கலாம்.[13]

"இயேசு அவளைப் பார்த்து: 'ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய்?' என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று[14] எண்ணி: 'ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்வேன்' என்றாள்" (யோவா. 20:15). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால் அவள், "நான் அவரது உடலைக் கண்ணியமாக அடக்கம்பண்ண விரும்பு கின்றேன்" என்று அவள் கூறினாள். அவள் அநேகமாகக் கிறிஸ்துவின் மற்ற நண்பர்களுடைய உதவியை ஈடுபடுத்தத் திட்டமிட்டிருக்கலாம்.

இயேசு அவளது பெயரைச் சொல்லி அழைத்ததின்மூலம் அவளது குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்: "மரியாளே!" (யோவா. 20:16அ). அவரது உதடுகளில் தனது பெயரைக் கேட்ட மாத்திரத்தில், அவர் யாரென்று நிறைவாக அவள் அறிந்துகொண்டாள். உணர்வுப் பெருக்குடன் அவரிடமாய்த் திரும்பிய மரியாள், "எபிரெய மொழியில் 'ரபூனி!' என்றாள்; அதற்குப் போதகர் என்று அர்த்தமாம்" (யோவா. 20:16ஆ).

ஒருவேளை அந்த வேளையில் அவள், பிற்பாடு மற்ற பெண்கள் செய்தது போலவே (மத். 28:9), அவரது பாதங்களில் வீழ்ந்திருக்கலாம். "உம்மை நான் மீண்டும் இழந்துபோகப் போவதில்லை!" என்று கூறுவது

போல் அவள் இயேசுவைப் பற்றிக்கொள்ளச் சென்றாள் என்பது தெளிவு. கிறிஸ்து அவளிடம், "என்னைத் தொடாதே,[15] நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை"[16] என்று கூறினார் (யோவா. 20:17அ). கர்த்தரை அவள் மீண்டும் அடுத்த ஒரு சில வாரங்களின்போது காண்பாள் எனவே அவள் அவரைப் பற்றிக்கொள்ள வேண்டுவதில்லை என்று அவர் அவளுக்கு உறுதிப்படுத்தியிருக்கலாம். மேலும் அவர் அவளிடத்தில், தம்மை அவள் எவ்வளவுதான் பற்றிக்கொண்டாலும், காலம் வருகிறபோது தமது பிதாவினிடத்தில் தாம் ஏறிச் செல்லுவதைத் தடை செய்ய இயலாது என்று தகவல் தெரிவித்திருக்கலாம்.[17]

அவர் அவளிடத்தில் பின்வரும் கட்டளையைக் கொடுத்தார்: "நீ என் சகோதரரிடத்திற்குப்[18] போய், 'நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்' என்று அவர்களுக்குச் சொல்லு"[19] (யோவா. 20:17ஆ). அவர், தாம் உயிரோடு இருப்பதை அவர்களுக்குக் கூறும்படி அவளிடத்தில் அறிவுறுத்தவில்லை (அதை அவள் கூறுவாள் என்பதை அவர் அறிந்திருந்தார் [யோவா. 20:18]); மாறாக, தாம் தமது பிதாவினிடத்தில் ஏறிச் செல்லத் தயாராக இருப்பதாக அவர்களிடத்தில் கூறும்படி அவர் அவளுக்குக் கூறினார். அப்போஸ்தலர்களிடம் அவர் நிகழ்த்திய கடைசி உரையின் போது, அவர் தமது பிதாவினிடத்திற்கு திரும்புதல் என்பதே பிரதானமான கருத்துப் பொருளாக இருந்தபடியால் (யோவா. 14:2-4, 12, 28; 16:5, 7, 10, 28) ஒருவேளை அவர் இவ்வார்த்தைகள் அவளது செய்தியை அதிகாரத்து வப்படுத்தும் என்று அவர் நோக்கங்கொண்டிருக்கலாம்.

மிகவும் மகிழ்ச்சியுடன், "அவள் புறப்பட்டு, அவரோடேகூட இருந்தவர்கள் துக்கப்பட்டு அழுதுகொண்டிருக்கையில், அவர்களிடத்தில் போய், அந்தச் செய்தியை அறிவித்தாள்" (மாற். 16:10; லூக். 24:10ஐக் காணவும்[20]). அவர்களிடத்தில் அவள், "நான் கர்த்தரைக் கண்டேன்" என்று சொல்லி, அவர்களிடத்தில் கூறும்படிக் கர்த்தர் அவளிடம் கொடுத்திருந்த வார்த்தைகளைத் திரும்பக் கூறியபோது (யோவா. 20:18) அவளது குரலில் உணர்வெழுச்சியை நான் ஏறக்குறையக் கேட்கமுடிகிறது. இருப்பினும் அவர்கள் அவள் கூறியதை நம்ப மறுத்துவிட்டனர் (மாற். 16:11).

## வழியில் (மத். 28:9-11அ)

மற்ற பெண்கள் "வழியில் போகையில்" அவர்களுக்குக் கிறிஸ்து இரண்டாம் முறை தரிசனமானார் (மத். 28:11). நமது முந்திய பாடம் முடிவடைந்தபோது, பெண்கள் மகா சந்தோஷத்துடன் கல்லறையை விட்டுப் புறப்பட்டுச் சென்று, தூதனுடைய வார்த்தைகளை இயேசுவின் சீஷர்களுக்கு அறிவிப்பதற்காக ஓடிச் சென்றிருந்தார்கள் (மத். 28:8; லூக். 24:9, 10, 22, 23ஐக் காணவும்). இருப்பினும் சீஷர்களுக்கு அவர்களின் செய்தியானது, "வீண்பேச்சாகத் தோன்றினதினால், அவர்கள் இவர்களை நம்பவில்லை" (லூக். 24:11).

சீஷர்களிடத்திற்கு செல்லும்போது அல்லது சீஷர்களிடத்திலிருந்து

வரும்போது அவர்களின் பயணத்தின்போது,[21] "இயேசு தாமே அவர்களுக்கு [பெண்களுக்கு] எதிர்ப்பட்டு: 'வாழ்க' என்றார்" (மத். 28:9அ). அவர்கள் கிட்டவந்து, "அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்" (மத். 28:9ஆ). இயேசு அவர்களை நோக்கி: "பயப்படாதிருங்கள்" என்றார் (மத். 28:10அ). அவருடைய சகோதரர்களை அவர் கலிலேயாவில் சந்திப்பதைப் பற்றி தூதன் சொன்னதையே அவர் மறுபடியும் சொன்னார் (மத். 28:10ஆ).[22]

## *நகரத்தில் (மத். 28:11-15)*

*கிறிஸ்து பெண்களுக்குத் தரிசனமான வேளையில், "[கல்லறையில் இருந்த] காவல்சேவகரில் சிலர் நகரத்துக்குள்ளே வந்து, நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள்" (மத். 28:11ஆ).[23] அவர்கள், "ஏய், பூமியதிர்ச்சிகள், தூதர்கள் மற்றும் மாயமாய்ப்போன ஒரு சரீரம் ஆகியவை பற்றி யாரும் எங்களை எச்சரிக்கவில்லையே!'' என்று முறையிட்டதை என்னால் ஏறக்குறையக் கேட்கமுடிகிறது.*

*இப்போதாவது யூதத் தலைவர்கள், இயேசு தாம் மேசியாவாக இருந்ததாக உரிமைகோரியதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாய் இருந்தனர் என்று நாம் நினைக்கலாம். அதற்குப் பதிலாக, (நவீனச் சொல்லாக்கத்தைப் பயன்படுத்துவதென்றால்) "சேதத்தைக் கட்டுப்படுத்துதல்" என்பதுதான் அவர்களின் ஒரே கவலையாக இருந்தது. தங்களால் இயன்ற அளவுக்குக் கல்லறையைப் பத்திரப்படுத்த அவர்கள் முயற்சி செய்திருந்தபோதிலும் (மத். 27:65), அது இப்போது வெறுமையாயிருந்தது. அப்படிப்பட்டது அவர்களுக்குச் சங்கடமானதாக இருந்தது. எவரொருவரும் அதற்குள் சென்று கண்ணோக்க முடியும். இயேசுவின் சரீரம் அங்கில்லாததற்கு அவர்களால் எந்த விளக்கம் கொடுப்பது சாத்தியமானதாக இருந்தது?[24]*

*கடைசியில் அவர்கள், இயேசுவின் சீஷர்கள் வந்து சரீரத்தைக் களவாடிக் கொண்டு சென்று விட்டதாக ஒரு வதந்தியைத் தொடங்கி வைப்பதென்று முடிவுசெய்தனர். பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் "சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து, " 'நாங்கள் நித்திரை பண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய் விட்டார்கள்' என்று சொல்லுங்கள்" ' " என்றனர் (மத். 28:12, 13). அது அன்றைக்கும் ஒரு ஏளனத்திற்குரிய கதையாக இருந்தது, அது இன்றைக்கும் ஒரு ஏளனத்திற்குரிய கதையாக உள்ளது. இராபர்ட் தாமஸ் மற்றும் ஸ்டேன்லீ குன்ட்ரீ ஆகியோர் இதனைப் பின்வருமாறு விளக்கப்படுத்தினர்:*

> *சனதெரீன் சங்கத்தாரால் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் கதையின் கோமாளித்தனமானது ... சமீபத்திய நிகழ்வுகளால் துரத்தப்பட்டிருந்த அவர்களின் ஆழ்ந்த வருத்தத்தை வெளிப்படுத்துகிறது. கனத்த கல்லை கல்லறையில் இருந்து சீஷர்கள் நீக்கிப்போட்டிருந்தால், காவல் சேவகர்களில் ஒருவரையாவது எழுப்பும் அளவுக்கு அது போதிய*

சத்தத்தை ஏற்படுத்தியிருக்கும். மற்றும், காவல் சேவகர்கள் தூங்கிக் கொண்டிருந்தால், சீஷர்கள்தான் கல்லறைத் திருடர்கள் என்று அவர்களால் எப்படி அறிய முடிந்தது?[25]

காவல் சேவகர்கள், காவல் செய்கையில் தூங்குதல் என்பது தங்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படக் கூடிய செயலாகும் என்று யூத அலுவலர் களுக்கு நினைவூட்டியிருக்கக் கூடும் (அப். 12:18, 19; 16:27ஐக் காணவும்). இருப்பினும் தலைவர்கள் அந்த மனிதர்களிடத்தில், "... இது தேசாதி பதிக்குக் கேள்வியானால், நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி, உங்களைத் தப்புவிப்போம்" என்று உறுதிப்படுத்தினார்கள் (மத். 28:14).

அந்த உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொண்ட காவல் சேவகர்கள், "பணத்தை வாங்கிக்கொண்டு தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள்" (வ. 15அ). "பாடமானது குறுகியதாக, எளியதாக இருந்தது, பலனானது பெரியதாக, விரும்பத்தக்கதாக இருந்தது."[26] ரிச்சர்டு ரோஜர்ஸ் அவர்கள், "அதே பொய்யானது இன்றைய நாட்களில் கட்டணம் எதுவும் பெற்றுக்கொள்ளாமலேயே கூறப்படுகிறது'' என்று கோணலான புன்முறுவலுடன் குறிப்பிட்டார்.[27]

"இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள் வரைக்கும் பிரசித்தமா யிருக்கிறது" என்று கூடுதலாகக் குறிப்பிட்டார் (வ. 15ஆ) - இந்தக் காலம் 60களின் முந்திய பகுதியாக இருந்திருக்கும். "ஜஸ்டின் மார்ட்டியர் அவர்கள் டைஃபோ என்பவருடன் நிகழ்த்திய உரையாடல் என்பதாக கி.பி. 170ம் ஆண்டுவாக்கில் அவரே எழுதிய குறிப்பில், யூதர்கள் இந்தக் கதையை ஒவ்வொரு நாட்டிற்கும் விசேஷித்த செய்தியாளர்களை அனுப்பிய வழிமுறையில் பரவச் செய்தனர் என்று கூறுகின்றார்."[28]

இது வெறுமையான கல்லறைக்கு "விளக்கம் தந்த" முதல் முயற்சியாக இருந்தது. "இருபது நூற்றாண்டுகளாக, வெறுமையான கல்லறைக்கு விளக்கம் தருவதற்கான முயற்சிகள் முன்வந்து கொண்டுள்ளன, இவை யாவும் இந்தத் தொடக்க காலக் கதையைப் போன்றே வீணானவை களாயின. தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதே வெறுமையான கல்லறைக்கு பொருத்தமாகத் தோன்றுகிற ஒரே விளக்கமாக உள்ளது."[29]

## அறியப்படாத ஒரு இடம்
## (1 கொரி. 15:5அ; லூக். 24:34ஐக் காணவும்)

அடுத்ததாக இயேசு, அநேகமாக - கல்லறையில் கண்டதைப் பற்றி இன்னும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த - பேதுருவுக்குத் தரிசனமானார் (லூக். 24:12). கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் கொடுத்த தரிசனங்கள் பற்றிப் பவுல் பட்டியலிட்டபோது, முதலில் "அவர் கேபாவுக்குத் தரிசனமானார்" என்று குறிப்பிட்டார் (1 கொரி. 15:5அ). இந்தப் பாடத்தின் அடுத்த பகுதியில் சீஷர்கள், "கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார்" (லூக். 24:34) என்று கூறியதைப் பற்றி நாம் கற்போம்.

இருப்பினும், இந்தத் தரிசனம் பற்றிய விவரங்கள் நமக்கு இல்லை. "இது வேதாகமத்தில் கூறப்படாத மாபெரும் வரலாறுகளில் ஒன்றாக உள்ளது: தம்மை [கிறிஸ்துவை] மறுத்தலித்திருந்தவருக்கு ஒரு விசேஷித்த தரிசனம்!"[30] ஜான் கார்ட்டர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> உயிர்த்தெழுந்த கர்த்தர் சீமோன் பேதுருவுக்கு தரிசனமானபோது என்ன நடந்தது என்பதை அவர் [பேதுரு] யாரிடமாவது கூறியிருந்தால் ..., அதைப் பற்றிய பதிவேடு ஒன்றும் நமக்கில்லை. அந்த அனுபவம் அவரைப் பொறுத்தமட்டில் அதைப் பற்றிப் பேசக் கூடாத அளவுக்கு பரிசுத்தமானதாக இருந்திருக்கலாம், மற்றும் அந்தச் சந்திப்பின்மீது மூடப்பட்டுள்ள திரையை இழுத்துவிட நாம் முயற்சி செய்யா திருப்பதே நல்லது. இருப்பினும், மனங்கசந்திருந்த அந்தச் சீஷனை அப்போஸ்தலர்களின் மத்தியில் தனது இடத்தை மீண்டும் மேற் கொள்ளும்படிக்கும், அவர்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று மற்றவர்களுடன் சேர்ந்துகொள்ளும்படிக்கும் இயேசு உற்சாக மூட்டாது இருந்திருப்பாரா என்று நான் ஆச்சரியப்படுகின்றேன். சற்றுப் பிற்பாடு அவர்களுக்கு இயேசு தரினமானபோது, அவர் களுடன் அவர் [பேதுரு] இருந்திருந்ததாகக் காணப்படுகின்றார்.[31]

## சாலையில்
## (மாற். 16:12, 13; லூக். 24:13-35)

இயேசு மரித்தோரில் இருந்து எழுந்த அந்த நாளில் குறைந்தது இன்னும் ஒரு தரிசனமாவது நிகழ்ந்திருந்தது.[32] அவர், "அன்றையத்தினமே [பெண்கள் கல்லறைக்குச் சென்றிருந்த அதே நாளில்; லூக். 24:1] ... எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டு மைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போன"[33] இரண்டு சீஷர்களுக்குத் தரிசனமானார் (லூக். 24:13; மாற். 16:12ஐக் காணவும்). அந்த சீஷர்களில் ஒருவர் பெயர் கிலெயோப்பா என்பதாகும் (லூக். 24:18); இன்னொருவரின் அடையாளம் பற்றி நாம் நிச்சயப்படுத்த முடிவதில்லை.[34] இவ்விருவருக்கும் கிறிஸ்து தரிசனமான நிகழ்ச்சி வேறு எந்தத் தரிசனத்தை விடவும் மிகவும் முழுவதுமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிலெயோப்பாவும் அவரது துணையாளியும் எருசலேமில் நடை பெற்றிருந்தவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டே சென்றதாக லூக்கா 24 நமக்குக் கூறுகிறது (வ. 14). கிறிஸ்து அவர்களுடன்கூட நடக்கத் தொடங்கினார் (வ. 15), "ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர் களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது" (வ. 16). ஒருவேளை அவர்கள் இயேசுவை அறியாதபடி தேவன் அவர்களைத் தடைசெய்திருக்கலாம்; ஒருவேளை துக்கமானது அவர்களின் கண்கள் பார்க்கக் கூடாதபடி செய்திருக்கலாம் (வ. 17ஆ).

அவர்கள் கலந்துரையாடியது என்ன என்று கிறிஸ்து கேட்டார் (வ. 17ஆ). வெறுமையான கல்லறையைக் கண்டிருந்தவர்கள் அறிவித்தது (வ. 22-24) உட்பட, கடந்த மூன்று நாட்களில் நடந்தவற்றைப் பற்றிக்

கிலெயோப்பா விமர்சித்தார் (வ. 18-20). அவர், "அவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர்[35] என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது" என்று கூறுகையில் (வ. 21) அவரது குரலில் பெரும் வருத்தம் நிறைந்திருக்க வேண்டும். நீங்களும் நானும் "மூன்று நாள்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தும்போது, இயேசு "மூன்றாம் நாளில் உயிர்ப்பிக்கப்படுவார்" என்ற அவரது வாக்குத்தத்தத்தைக் குறிப்பிடுகின் றோம் (மத். 17:23). கிலெயோப்பாவோ, "கணிசமான காலம் கடந்துள்ளது - நாங்கள் நம்பிக்கை இழந்துவிட்டோம்!" என்று மாத்திரம் அர்த்தப் படுத்தினார்.

இயேசு, "தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே! கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா?" என்று பதில் அளித்தார் (லூக். 24:25, 26). சிலுவை என்பது தேவனுடைய திட்டத்தில் அத்தியாவசியமான பாகமாயிருந்தது என்பதை - அதாவது, கிறிஸ்துவின் மரணம் தேவனுடைய நோக்கங்களை ஒன்றுமற்றதாக்காமல், உண்மையில் அவற்றை நிலைநாட்டிற்று என்பதை - அவர்கள் புரிந்து கொள்வது அவசியமாயிருந்தது.

"மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங் களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்" (வ. 27). அவர், கிலெயோப்பாவையும் அவரது துணையாளியையும், பழைய ஏற்பாட்டின் முறையான ஒரு படிப்பிற்கு எடுத்துச் சென்றார். அவர் அநேகமாக, மேசியாவை முன்னெதிர் நோக்கி யிருந்த முந்நூறுக்கும் அதிகமான தீர்க்கதரிசனங்களில் அநேகத்தைச் சுட்டிக்காண்பித்திருக்கலாம். பிற்பாடு அவ்விருவரும், "வழியிலே அவர் [அவர்களுடனே] பேசி, வேதவாக்கியங்களை [அவர்களுக்கு] விளங்கக் காட்டினபொழுது" அவர்களுடைய இருதயம் அவர்களுக்குள்ளே கொழுந்துவிட்டு எரிந்ததாகக் கூறினர் (வ. 32).

அவர்கள் எம்மாவு கிராமத்தை அடைந்தபோது, ஏறக்குறைய இருட்டி யிருந்தது (வ. 29). கிலெயோப்பாவும் அவரது துணையாளியும், தங்களுடன் தங்கும்படி இயேசுவை அழைத்தனர் (வ. 28, 29). அவர்கள் உண்பதற்கு அமர்ந்தபோது, கிறிஸ்து உணவுக்கு நன்றி செலுத்தினார் (வ. 30). அவர் அதைச் செய்கையில், "அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள்" (வ. 31அ). அவரை அறிவதில் இருந்து[36] அவர்களைத் தடை செய்தது எதுவாயிருந்த போதிலும் அது நீக்கப்பட்டது. பிற்பாடு அவர்கள் "அவர் அப்பத்தைப் பிட்கையில் தாங்கள் அவரை அறிந்துகொண்டதை" சுட்டிக்காண்பித்தனர் (வ. 35ஆ). ஒருவேளை, ஜெபித்தலில் இயேசுவின் தனிச்சிறந்த வழிமுறையானது அவர்களின் நினைவிற்கு மெதுவாக வந்திருந்திருக்கலாம். இப்போது அவர்கள் அவரை உயிர்த்தெழுந்த கர்த்தர் என்று அடையாளம் கண்டுகொண்டனர்! இருப்பினும், அவர்கள் அவரை அடையாளம் கண்டுகொண்டிருக்கையிலேயே, "அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்" (வ. 31ஆ)!

அது மிகவும் தாமதமான வேளையாக இருந்தபோதிலும், அவர்கள்

“வழியில் நடந்தவைகளை” (வ. 35) “பதினொருவர்[37] மற்றும் அவர் களோடிருந்தவர்களுக்கு” (வ. 33; மாற். 16:13அ-வைக் காணவும்) அறிவிப் பதற்காக எருசலேமுக்கு விரைவாகப் புறப்பட்டனர். அவர்கள் அங்கு வந்துசேர்ந்தபோது, ஒரு துடிப்பான உரையாடல் அங்கே வளர்ந்தது. சிலர், “கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார்” என்று கூறினர் (லூக். 24:34), ஆனால் மற்றவர்கள் நம்பிக்கையற்றவர்களாய் இருந்தனர். கிலெயோப்பாவும் அவரது துணையாளியும் தங்கள் வரலாற்றை எடுத்துரைத்தபோது, “அவர்களையும் அவர்கள் நம்பவில்லை” (மாற். 16:13).[38] கர்த்தருடைய சீஷர்கள் தங்கள் விசுவாசத்துடன் தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தனர் (மாற். 16:14).[39]

## முடிவுரை

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்படுவார் என்று அப்போஸ் தலர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை என்பது தெளிவாகியிருக்க வேண்டும், மற்றும் அவர் உயிர்த்தெழுந்த பின்பு அதை நம்பி இணங்குவதற்கு அவர்கள் கடினமான வேலையைக் கொண்டிருந்தனர். “இருந்தபோதிலும் இவர்கள் தான் உயிர்த்தெழுதல் என்ற கதையைக் கண்டுபிடித்தார்கள் என்று யூதர்கள் குற்றம்சாட்டிய மனிதர்களாய் இருந்தனர்!”[40] தாமஸ் குன்ட்ரீ அவர்கள் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

> வெறுமையான கல்லறையைப் பற்றிய வார்த்தையைப் பெற்ற பின்புகூட, இயேசுவைப் பின்பற்றியவர்களிடத்தில் இருந்த துக்கமும் மனத்தளர்ச்சியும், இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி அவர்கள் கதை கட்டினர் என்ற குற்றச்சாட்டு எவ்வளவு மதியீனமானது என்பதைக் காண்பிக்கிறது. அவர்களின் மனநிலையானது அப்படிப் பட்டவைகளைச் செய்வதற்கு நேரெதிரான நிலையில் இருந்தது.[41]

“உயிர்த்தெழுந்த கர்த்தருக்கு, தாம் மீண்டும் உயிரோடிருப்பதாகத் தமது சொந்த சீஷர்களை நம்பி இணங்க வைத்தல் என்பதே முதல் மாபெரும் பணிப் பொறுப்பாக இருந்தது.”[42] நமது அடுத்த பாடத்தில், இயேசு அப்போஸ்தலர்களுக்கு அவர்கள் குழுவாகக் கூடியிருந்த வேளை களில் கொடுத்த பல தரிசனங்களையும் - கடைசியில் அவர்களின் விசுவாசப் போராட்டத்தை அவர் தீர்த்து வைத்ததையும் - காண்போம்.

---

குறிப்புகள்

[1]ஒரு வகுப்பில் உள்ள மாணவர்கள் தேவனிடத்திலிருந்து வந்துள்ள எந்த வாக்குத்தத்தத்துடன் போராடிக்கொண்டுள்ளனரா என்று அவர்களைக் கேட்பதென்பது இந்தப் பாடத்தைத் தொடங்கும் ஒரு வழிமுறையாக இருக்கும். [2]இது இரு பகுதிப் பாடத்தின் இரண்டாம் பகுதியாக உள்ளது. [3]யோவான் 20:1, மரியாள் “... காலையில் அதிக இருட்டோடே ... கல்லறையினிடத்திற்கு வந்து”

என்றும், மாற்கு 16:2, பெண்கள், "... அதிகாலையில் சூரியன் உதயமாகின்றபோது கல்லறையினிடத்தில் வந்து" என்றும் கூறுகிறபடியால், மரியாள் மற்ற பெண்களுக்கு முன்னதாக ஓடி கல்லறையினிடத்திற்கு சென்று சேர்ந்தாள் என்று சிலர் நினைக்கின்றனர். மற்றவர்கள், "இன்னும் இருட்டாயிருந்தபோதே" பெண்கள் கல்லறைக்குச் செல்லத் தொடங்கி "சூரியன் உதயமானதற்கு" சற்றுப் பின்பு அங்கு சென்று சேர்ந்தனர் என்று நினைக்கின்றனர். இந்த விவரம் முக்கியமற்றதாக உள்ளது. [4]மீண்டும் ஒருமுறை, யோவான் "இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷன்" என்று தம்மையே குறிப்பிட்டார் என்று நாம் யூகிக்கின்றோம். அவ்விரு மனிதர்களும் கல்லறைக்குச் செல்லும் வழியில் மகதலேனா மரியாள் அவர்களைச் சந்தித்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது - ஆனாலும் இது பெரும்பாலும் நடந்திருக்காது. அவள் அநேகமாக, பேதுருவும் யோவானும் எருசலேமில் தங்கியிருந்த இடத்திற்கு அல்லது இடங்களுக்குச் சென்றிருக்கலாம் (யோவா. 20:10ஐக் காணவும்). விஷயம் இதுவாக இருந்ததென்றால், மற்ற அப்போஸ்தலர்கள் தங்கியிருந்த இடத்தில் பேதுரு இருந்திருக்க மாட்டார் (லூக். 24:12ஐக் காணவும்). பேதுரு இயேசுவை மறுதலித்த பின்பு, அநேகமாக மற்ற அப்போஸ்தலர்களைச் சந்திக்க ஆயத்தமாய் இருந்திருக்க மாட்டார். [5]பெண்களுக்குத் தரிசனமாகியிருந்து பின்பு மரியாளுக்குத் தரிசனமான தூதன் எங்கிருந்தான்? நாம் கூறமுடியாது. ஒருவேளை தேவன், பெண்களிடம் கையாண்ட வழிமுறையிலிருந்து மாறுபட்ட ஒன்றை அப்போஸ்தலர்களிடம் கையாண்டிருக்கலாம். [6]இப்புத்தகத்தில் காணப்படும் "இயேசுவின் உயிர்த்தெழுந்த உடல்" என்ற துணைப்பாடத்தையும் காணவும். [7]Peter Marshall, *Mr. Jones, Meet the Master* (New York: Fleming H. Revell Co., 1950), 110. [8]அந்த நாளின் பிற்பகுதியில், பேதுருவும் யோவானும் தாங்கள் கண்டிருந்த மற்ற சீஷர்களிடத்தில் அதைத் தெரிவித்திருக்கலாம் (லூக். 24:24ஐக் காணவும்). [9]அப்போஸ்தலர்கள் இயேசு உயிர்த்தெழுந்ததை முதலில் நம்பினார்கள், பிற்பாடு அவர்கள், இயேசு தாம் மீண்டும் உயிர்த்தெழுவதாகக் கூறியபோது எதை அர்த்தப்படுத்திற்று என்று புரிந்துகொண்டார்கள் என்று சில எழுத்தாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். எதிர்பார்ப்பு என்பது அப்போஸ்தலர்கள் உயிர்த்தெழுந்த கர்த்தரைத் தாங்கள் கண்டதாகக் கற்பனை செய்துகொள்ளக் காரணமாயிருந்ததில்லை என்று இந்த எழுத்தாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். [10]பேதுருவும் யோவானும் பிற்பாடு பார்த்த அதே கல்லறைத் துணிகளை அவளும் பார்த்தாள் என்பது உறுதி, ஆனால் அவள் அவற்றின் முக்கியத்துவத்தை உணராதிருந்திருக்க வேண்டும்.

[11]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 743. [12]"இயேசுவின் உயிர்த்தெழுந்த உடல்" என்ற துணைப்பாடத்தைக் காணவும். [13]அவள் அவரைச் சற்றே பார்த்துப் பின்பு வேறுபக்கம் கண்ணோக்கினாள் என்று வசனம் 16 மறைமுகமாக உணர்த்துகிறது. [14]அரிமத்தியாவூர் யோசேப்பு ஒரு செல்வந்தராயிருந்தபடியால், வேலைக்காரர்களைக் கொண்டிருந்திருப்பார், இவர்களில் ஒருவர் யோசேப்பின் கல்லறை இருந்த தோட்டத்தைக் கவனித்துக் கொண்டு இருந்திருக்கலாம். [15]KJVயில் "Touch me not" என்றுள்ளது, ஆனால் "[கிரேக்க] வினைச்சொல்லின் காலக்குறிப்பும் தொழிற்பெயர் விகுதியும், இப்போது செய்யப்பட்டுக் கொண்டிருத்தலைச் செய்யாது விட்டொழித்தல் என்பதை அர்த்தப்படுத்துகிறது" (Robert Duncan Culver, *The Life of Christ* [Grand Rapids, Mich.: Baker Book House, 1976], 270). [16]அவரது மரணத்தில் அவர் பாதாள உலகத்திற்கு (அப். 2:31), "பரதீசுக்கு" (லூக். 23:43) சென்றார். அவர் இன்னமும் பரலோகத்திற்குச் சென்றிருக்கவில்லை, "ரோமச் சிலுவையில் ஆறுமணி நேரங்கள்" என்ற பாடத்தில் உள்ள குறிப்பு எண் 20ஐக் காணவும். [17]இயேசு தம்மைத் தொடுவதற்கு மற்றவர்களை

*அனுமதித்திருந்தபடியால் (மத். 28:9; லூக். 24:39; யோவா. 20:27)* "Touch me not" *என்ற* KJV*யின் வார்த்தை அமைப்பானது, சில முரண்பாடுகளை உண்டாக்கியுள்ளது. மரியாளுக்கு இயேசுவின் புத்திமதியானது, அவள் அவரைத் தளரவிட விரும்பவில்லை என்ற உண்மைக்குச் சிலவற்றைச் செய்ய வேண்டியிருந்தது என்பதே ஏற்புடையதாக உள்ளது.* [18]*இயேசு இவ்விடத்தில் தமது அப்போஸ்தலர்களைக் குறிப்பிடுவதற்குப் பதிலாகத் தமது சரீரப்பிரகாரமான சகோதர்களைக் குறிப்பிட்டார் என்று சிலர் நினைக்கின்றனர். இருப்பினும் அவர் அப்போஸ்தலர்களையே அர்த்தப்படுத்தினார் என்பதை மரியாள் புரிந்துகொண்டாள்; அவர்களிடத்திற்கே அவள் சென்றாள் (யோவா. 20:18). மெக்கார்வீ அவர்கள், "இது கர்த்தருடைய சீஷர்களுக்கு அவர் 'சகோதரர்கள்' என்ற வார்த்தையைப் பயன்படுத்திய முதல் முறையாக இருந்தது" என்று எழுதினார்* (McGarvey and Pendleton, 745). *எபிரெயர் 2:11ஐக் காணவும்.* [19]*இயேசு, "நமது பிதா" என்றோ அல்லது "நமது தேவன்" என்றோ கூறவில்லை என்பதைக் கவனியுங்கள். அவர் பிதாவாகிய தேவனுடன், அப்போஸ்தலர்கள் கொண்டிருந்ததில் இருந்து மாறுபட்ட ஒரு உறவில் நிலைத்திருந்தார்.* [20]*லூக்கா 24:10ல், மரியாள் மற்றும் பிற பெண்களின் அறிவித்தலை லூக்கா இணைத்திருந்தார் என்பது உறுதி.*

[21]*பெண்களுக்குத் தூதன் கூறியிருந்தவற்றை, சீஷர்களுக்குக் கூறும்படி அவர்களைக் காண்பதற்குச் சென்று கொண்டிருந்த வேளையில், அவர்களுக்கு [பெண்களுக்கு] இயேசு தரிசனமானார் என்று மத்தேயு சுவிசேஷ விவரத்திலிருந்து காணப்படுகிறது (மத். 28:5-10). இருப்பினும், அவர்கள் சீஷர்களிடத்திற்கு வந்தது பற்றி கிலெயோப்பா அறிவிக்கையில், பெண்கள் தூதர்களைக் கண்டிருந்ததை மாத்திரமே அவர் குறிப்பிட்டார் (லூக். 24:22, 23), அவர்கள் கர்த்தரைக் கண்டனர் என்று அவர் குறிப்பிடவில்லை. இது, சீஷர்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து பெண்கள் புறப்பட்டுச் சென்றபோது இயேசு அவர்களுக்குத் தரிசனமானார் என்று சுட்டிக்காண்பிக்கலாம்.* [22]*சீஷர்களிடத்திற்குப் பெண்கள் இரண்டாம் முறை சென்றிருக்கச் சாத்தியக் கூறு உள்ளது - இவ்வேளையில் அவர்கள் உயிர்த்தெழுந்த கர்த்தரைத் தாங்கள் உண்மையிலேயே கண்டிருந்தது பற்றிய அறிக்கையுடன் சென்றிருக்கலாம்.* [23]*ஒருவேளை (பணிபற்றி கட்டளை பெற்று அதனால் பொறுப்பாளிகளாக இருந்திருக்கக் கூடிய) உயர் பதவில் இருந்த காவல் சேவகர்கள் பிரதான ஆசாரியர்களிடம் சென்று அறிவித்திருக்கலாம், அதே வேளையில் கீழ்ப்பதவியில் இருந்தவர்கள் தங்கள் குடியிருப்புக்குத் திரும்பியிருக்கலாம்.* [24]*உலகில் நான் வாழும் பகுதியில், "கல்லறை வெறுமையாயிருந்த உண்மையின் மீது அவர்கள் போடமுடிந்த உருட்டுப் புரட்டு என்ன?" என்று நாங்கள் கூறுவதுண்டு.* [25]Robert L. Thomas, ed., and Stanley N. Gundry, assoc. ed., *A Harmony of the Gospels* (Chicago: Moody Press, 1978), 256. [26]McGarvey and Pendleton, 747. [27]Richard Rogers, *The Life of Christ and His Teaching* (Lubbock, Tex.: Sunset International Bible Institute External Studies Department, 1995), 104. [28]McGarvey and Pendleton, 747. The reference is to Martyr *Dialogue with Trypho,* 108. [29]Thomas and Gundry, 256. [30]David L. Roper, "Meet the Master, 2," *Truth for Today* (September 1994): 50.

[31]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 351.[32]*இன்னொரு தரிசனமானது அந்த நாளுடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது: இயேசு கிலெயோப்பாவுக்கும் அவரது துணையாளிக்கும் தரிசனமான பின்பு உடனே பதினொருவருக்கும் முதன்முறையாகத் தந்த தரிசனம். ரோமர்களின் காலக்கணக்கைப் பயன்படுத்திய யோவான் சுவிசேஷத்தின்படி, இந்தத் தரிசனமும் ''முதல் நாளில்'' தான் நடைபெற்றது (யோவா. 20:19). இதைப் பற்றி நான் அடுத்த பாடத்தில் அதிகம்*

*கூறுவேன். [33]எம்மாவு கிராமம் இருந்திருக்கக் கூடிய சாத்தியமான இடம் ஒன்று, பக்கம் 70ல் காணப்படும் வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ளது - ஆனால் இதைப் பற்றி நாம் உறுதியாக எதுவும் கூற இயலவில்லை. [34]இது கிலெயோப்பாவின் மகனாக, அல்லது நண்பராக அல்லது மனைவியாகக்கூட இருந்திருக்கலாம்.* NASB*யில், இயேசு இவர்களை* "foolish *men*" *என்று அழைக்கின்றார் (லூக். 24:25), ஆனால் மூல வசனத்தில்* "foolish [ones]" *என்றுதான் உள்ளது* [*தமிழில் இது "மந்த இருதயமுள்ளவர்களே" என்றுள்ளது*]. *[35]இந்த வேளையில், அவர்களின் சிந்தையில், "இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர்" என்பது ரோமர்களின் அடக்குமுறையில் இருந்து நாட்டை மீட்குதல் என்று அர்த்தப்படுத்துவதாகவே இருந்தது. இந்தத் தவறான புரிந்துகொள்ளுதல் இருப்பினும், கிலெயோப்பாவின் வார்த்தைகள், இயேசுவே எதிர்பார்க்கப்பட்ட மேசியாவாக இருந்தார் என்பதை வெளிப்படுத்துகின்றன - அவர் சிலுவையில் அறையப்பட்டதால் அந்த நம்பிக்கை தகர்ந்திருந்தது. [36]இந்தப் பாடத்தில் லூக்கா 24:16, 17பற்றிய முந்திய குறிப்புகளைக் காணவும். [37]"பதினொருவர்" என்பது அப்போஸ்தலர்களைக் குறிக்கும் பொதுவான சொற்றொடராக இருந்தது. இந்த வேளையில் தோமா அங்கிராதபடியால் (யோவா. 20:24), எஞ்சியிருந்த பதினொரு அப்போஸ்தலர்களில் யாவரும் அங்கு இருந்திருக்கவில்லை. [38]நிகழ்ச்சிகளை நான் மறுகட்டுமானம் செய்துள்ள செயலானது லூக்கா 24:34 மற்றும் மாற்கு 16:13, 14 ஆகிய வசனப் பகுதிகளை ஒப்புரவாக்கும் ஒரு வழிமுறையாக உள்ளது. [39]அடுத்த பாடத்தில் நாம் காணப்போகிறபடி, இதற்குப் பின்பு உடனடியாக இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமானபோது, அவர் ஒரு ஆவி என்று அவர்கள் நினைத்தனர் (லூக். 24:37).* [40]McGarvey and Pendleton, 742.

[41]Thomas and Gundry, 256. [42]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 225.

# “உங்களை நம்பச் செய்ய எது தேவை?”

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #43*

VIII. *இயேசுவின் உயிர்த்தெழுதல், தரிசனங்கள் மற்றும் பரத்துக்கேறுதல் (தொடர்ச்சி).*

A. *ஞாயிற்றுக்கிழமை: இயேசு உயிர்த்தெழுந்த நாள் (தொடர்ச்சி).*

7. *ஐந்தாம் தரிசனம்:*[1] *அப்போஸ்தலர்களுக்கு (தோமா இன்றி) (மாற். 16:14; லூக். 24:36-43; யோவா. 20:19-25).*

B. *நாற்பது நாட்கள் (அப். 1:3ஐக் காணவும்).*

1. *ஆறாம் தரிசனம்: ஒரு வாரங்கழித்து யூதேயாவில் அப்போஸ்தலர்களுக்கு (தோமா உட்பட) (யோவா. 20:26-31; 1 கொரி. 15:5).*
2. *ஏழாம் தரிசனம்: நாற்பது நாட்களில் ஏதோ ஒரு வேளையில் கலிலேயாவில் குறைந்தது ஏழு சீஷர்களுக்கு (யோவா. 21:1-24).*

### அறிமுகம்

*நடபடிகள் புத்தகத்திற்கு லூக்காவின் அறிமுகத்தில், “இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்கு” (அப். 1:1) என்று அவர் [லூக்கா] எழுதினார். பின்பு அவர், “அவர் [இயேசு] பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும்*[2] *அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்” என்று கூறினார் (அப். 1:3). ஏன் நாற்பது நாட்கள்? கர்த்தர் தமது பரத்துக்கேறுதலுக்கு முன்பு, அப்போஸ்தலர்களுக்கும் கூடுதலான போதனைகளையும் சவால்களையும் கொடுக்கவிரும்பினார். மிகவும் முக்கியமாக, அவர் தாம் மீண்டும் உண்மையிலேயே உயிரோடிருந்தார் என்பதை அவருடைய அப்போஸ்தலர்கள் நம்பும்படி செய்வதற்குத் தேவையான கால அவகாசத்தை எடுத்துக்கொள்ள விரும்பினார். அவர்களுடைய சிந்தனையில் எந்த விதமான சந்தேகமும் இல்லாமல் இருப்பதை அவர் விரும்பினார்.*

கடைசி நாற்பது நாட்களின்போது, இயேசு தமது பின்பற்றாளர்களுக்கு அநேகமாகப் பல முறைகள் தரிசனமாயிருக்க வேண்டும். இவற்றில் பத்து தரிசனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, மற்றும் இவற்றில் ஐந்து தரிசனங்கள் அவர் உயிர்த்தெழுந்த நாளுடன் தொடர்புள்ளவைகளாய் உள்ளன. இந்த ஐந்தில் நான்கு தரிசனங்களை நாம் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளோம்: மகதலேனா மரியாளுக்கு, மற்ற பெண்களுக்கு, பேதுருவுக்கு, மற்றும் எம்மாவு செல்லும் சாலையில் இருவருக்கு அவரது தரிசனங்கள். இந்த எடுத்துரைப்பில்,[3] இயேசு உயிர்த்தெழுந்த நாளில் அவர் அளித்த ஐந்தாவது தரிசனத்தைப் பற்றி நாம் படிப்போம். பின்பு நாம் அடுத்த இரண்டு தரிசனங்களைப் பற்றிக் கலந்துரையாடுவோம். நாம் ஆழ்ந்து சிந்திக்க இருக்கின்ற இந்த மூன்று தரிசனங்கள் அடிப்படையில் அப்போஸ்தலர்களின் பிரயோஜனத்திற்கானவைகளாய் இருந்தன. அவர்களுக்குக் கிறிஸ்து, தமது உயிர்த்தெழுதல் பற்றி "நம்பத் தகுந்த ஆதாரங்களை"க் கொடுத்தார். இயேசு உயிருடன் இருந்தார் என்று பதினொருவரை நம்பச் செய்தது எது? இன்றைய நாளில் மக்களை அவ்வாறு நம்பச் செய்வது எது?

## பத்து அப்போஸ்தலர்களை நம்பச் செய்வதற்குத் தேவைப்பட்டது எது? (மாற். 16:14; லூக். 24:36-43; யோவா. 20:19-25)

இயேசு மரித்தோரிருந்து உயிர்த்தெழுந்திருந்ததை அவரது அப்போஸ்தலர்களுக்கு நிரூபிப்பதற்கு அவர் படிப்படியாக செயல்பட்டார். முதலாவது, அவரது உயிர்த்தெழுதலைத் தூதர்கள் அறிவித்தனர் என்ற வார்த்தை அவர்களுக்கு வந்தது. பின்பு உயிர்த்தெழுந்த கர்த்தரைப் பிறர் பார்த்திருந்ததாக அவர்களுக்குக் கூறினார்கள், இருப்பினும் அப்போஸ்தலர்கள் விசுவாசிக்கப் போராடிக் கொண்டிருந்தனர். கடைசியில், அவர்களுக்குக் கிறிஸ்துவே நேரடியாகத் தரிசனமாகி அவர்களின் சந்தேகங்கள் யாவற்றையும் நீக்க வேண்டிய நேரம் வந்தது.

#### அப்போஸ்தலர்கள் நம்பி இணங்கினர்

யோவான் சுவிசேஷத்தின்படி, "வாரத்தின் முதலாம் நாளாகிய அன்றைய தினம் சாயங்காலவேளை" யாகி இருந்தது (யோவா. 20:19அ). யூதர்களின் நேரக்கணக்கீட்டின்படி (சூரியன் மறைவிலிருந்து சூரியன் மறைவு வரை), இது வாரத்தின் இரண்டாம் நாளாக இருந்திருக்கும்; ஆனால் நாம் ஏற்கனவே கண்டுள்ளபடி, யோவான், ரோமர்களின் நேரக்கணக்கீட்டு முறையை(நள்ளிரவில் இருந்து நள்ளிரவு வரை)ப் பயன்படுத்தினார்.[4] இயேசு உயிர்த்தெழுந்த நாளாகிய, வாரத்தின் முதல் நாளில் நடந்த நிகழ்ச்சிகளில், அவர் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமான நிகழ்ச்சியை யோவான் உள்ளடக்குவதற்கு இது முக்கியமானதாக இருந்தது என்பது தெளிவு.[5]

அப்போஸ்தலர்கள் எங்கே தங்கியிருந்தனர் என்று உறுதியாக நாம் அறிவதில்லை;[6] ஆனால் அது எவ்விடமாக இருந்தாலும், அவர்கள் "யூதர்

*களுக்குப் பயந்ததினால்" (யோவா. 20:19ஆ) கதவுகளை மூடித் தாழிட்டிருந் தனர். மற்ற சீஷர்களும் அவர்களுடன் இருந்தனர் (லூக். 24:33, 36ஐக் காணவும்), ஆனால் அப்போஸ்தலர்கள் மாத்திரமே கிறிஸ்துவின் அடிப் படை அக்கறைக்குரியவர்களாய் இருந்தனர் (மாற். 16:14ஐக் காணவும்). அந்த மாலை வேளையில் பதினொருவரும் ஒரு குழுவாக இருந்தனர் (மாற். 16:14) - தோமா தவிர மற்ற யாவரும் அங்கிருந்தனர் (யோவா. 20:24).*

*அப்போஸ்தலர்கள் "[உணவு] மேஜையில் சாய்ந்து அமர்ந்திருந்தனர்" (மாற். 16:14அ).[7] அவர்கள் அநேகமாகத் தங்களின் மாலை உணவை உண்ணத் தொடங்கியிருக்கலாம் (லூக். 24:41, 42ஐக் காணவும்). அப்பொழுது, கிலெயோப்பாவும் அவரது துணையாளியும், சாலையில் இயேசுவைத் தாங்கள் கண்டது பற்றிக் கூறுவதற்கு உணர்வுப் பெருக்குடன் வந்தனர் (மாற். 16:12, 13; லூக். 24:33-35).*

*இயேசுவைக் கண்டிருந்தவர்களின் அறிக்கையைச் சிலர் நம்பினார்கள் (லூக். 24:34), அதே வேளையில் மற்றவர்கள் அதை நம்பாதிருந்தார்கள் (மாற். 16:13).[8] சூடான விவாதம் ஒன்று வளர்ந்துகொண்டிருக்கலாம் அப்போது - திடீரென்று - இயேசு "தாமே அவர்கள் நடுவில் நின் [றார்]" (லூக். 24:36) மற்றும் அவர், "உங்களுக்குச் சமாதானம்" என்றார் (யோவா. 20:19இ).*

*அப்போஸ்தலர்கள், "கலங்கி, பயந்து, ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள்" (லூக். 24:37).[9] அவர்கள் விசுவாசிக்கத் தயங்கியதால் கவலையுற்ற இயேசு, "உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும் இருதய கடினத்தைக் குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார்" (மாற். 16:14ஆ). அப்போஸ்தலர்கள் குறைந்தது இரண்டு ஆண்களுடைய மற்றும் அநேகமாக அரை டஜன் பெண்களுடைய சாட்சியத்தைக் கேட்டிருந் தனர்; அவர்களுக்குச் சாட்சியங்களில் குறைவு இருந்ததில்லை. அவர் களிடத்தில் அவர், "நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்? உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன?" என்று கேட்டார் (லூக். 24:38).*

*அந்த சந்தேகங்களை அழிப்பதற்காகவே அவர் அங்கிருந்தார். அவர், "நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே" என்றார் (லூக். 24:39). பின்பு, "தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்" (லூக். 24:40), அவைகள் ரோமர்களின் ஆணிகளால் ஏற்பட்ட காயச்சுவடுகளைக் கொண்டிருந்தன (யோவா. 20:25, 27ஐக் காணவும்). மேலும் அவர், "... தம்முடைய ... விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார்" (யோவா. 20:20அ), அதில் காயத்தினால் பிளவு ஏற்பட்டிருந்தது (யோவா. 20:25, 27ஐக் காணவும்).*

*"சீஷர்கள் ... சந்தோஷப்பட்டார்கள்" (யோவா. 20:20ஆ) - ஆனால் அவர்களின் உள்ளான போராட்டம் தொடர்ந்தது, ஏனென்றால் இயேசு உயிரோடிருக்கின்றார் என்பது உண்மையாயிருப்பதற்கு மிகவும்*

நல்லதாயிருந்தது. லூக்கா இதைப் பின்வருமாறு குறிப்பிட்டார்: "ஆனாலும் சந்தோஷத்தினால் அவர்கள் இன்னும் விசுவாசியாமல் ஆச்சரியப்படுகையில் ..." (லூக். 24:41அ). இயேசு அருவமல்ல ஆனால் உண்மையிலேயே இருக்கிறார் என்பதற்குக் கடைசி நிரூபணமாக, அவர் "புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா?" என்று கேட்டார் (லூக். 24:41ஆ). "அப்பொழுது பொரித்த மீன்கண்டத்தையும் தேன்கூட்டுத் துணிக்கையையும் அவருக்குக் கொடுத்தார்கள். அவைகளை அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்து" (லூக். 24:42, 43).

அதுவே அவர்களுக்குத் தேவையான கடைசி ஆதாரமாக இருந்தது. மீண்டும் இயேசு, "உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்று கூறினார் (யோவா. 20:21அ). சமாதானம் அவர்களின் இருதயங்களில் நிறைந்தது; அவர்களின் கர்த்தர் உயிருடன் இருந்தார் (யோவா. 20:25அ-வைக் காணவும்)!

**அப்போஸ்தலர்கள் ஊழியத்திற்கு அதிகாரத்துடன் அனுப்பப்பட்டனர்**

அடுத்த நாற்பது நாட்களில் இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு அதிகமானவற்றைப் போதிப்பார் (அப். 1:3ஐக் காணவும்), ஆனால் அவரது பிரதான கட்டளையே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் (மத். 28:19, 20; மாற். 16:15, 16). கிறிஸ்து உயிரோடிருந்ததை அவர் தமது அப்போஸ்தலர்கள் நம்பி இணங்கும்படி செய்தபின்பு, அவரது அடுத்த வார்த்தைகள் அந்தக் கட்டளையைக் கொடுத்தல் மற்றும் அதைச் செயல்படுத்துதல் ஆகியவற்றை முன்னெதிர் நோக்கியவையாக இருந்தன.

இந்தக் கட்டளையை நிறைவேற்ற வேண்டியதில் பின்பற்றப்பட வேண்டிய செய்முறையைக் குறித்து அவர் பேசினார்: "... பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" (யோவா. 20:21ஆ).[10] "அப்போஸ்தலர்" என்ற வார்த்தை "அனுப்பப்பட்டவர்" என்று அர்த்தப் படுகிறது. அவர்களை "அனுப்புதல்" பற்றிய விவரம் பிற்பாடு தரப்படும் (மத். 28:18-20; மாற். 16:15, 16).

அந்தக் கட்டளையைச் செயல்படுத்த அவர்கள் பெற்றுக் கொள்ளவிருந்த வல்லமையைப் பற்றி அவர் பேசினார்: "அவர்கள்மேல் ஊதி, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார்" (யோவா. 20:22). அப்போஸ்தலர்களின்மீது கிறிஸ்து ஊதிய, அந்த வேளையிலேயே அவர்களைப் பரிசுத்த ஆவியால் நிரப்பவில்லை. பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதல் என்பது இன்னமும் எதிர்காலத்தில் நடக்க வேண்டியதாக இருந்தது (லூக். 24:49; யோவா. 7:39; அப். 1:4, 5, 8; 2:4ஐக் காணவும்). இது பல வாரங்களுக்குப் பின்னர் ஆவியானவர் ஊற்றப்படுவதை முன்னெதிர் நோக்கிய காட்சிச் செயல்விளக்கமாக இருந்தது.[11] யூதர்களின் பெந்தெகொஸ்தே நாளன்று, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெற்று, உலகமுழுவதும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதற்குப் பெலனடையவிருந்தனர்.[12]

அந்தக் கட்டளை அவர்களுக்குக் கொடுக்கப்பட இருந்ததின் நோக்கத்தைப் பற்றி அவர் பேசினார். அவர்களிடத்தில் அவர், "எவர்களுடைய

*பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்" என்று கூறினார் (யோவா. 20:23).[13] இது அப்போஸ்தலர்கள் தாங்களாகவே சிலரை மன்னிக்கவும், மற்ற சிலரை மன்னியாதிருக்கவும் முடிவு செய்யக்கூடும் என்று அர்த்தப்படுத்துவது இல்லை. மாறாக, அப்போஸ்தலர்களின் அருளப்பட்ட பிரசங்கித்தலில் வலியுறுத்தப்பட விருந்த பாவமன்னிப்பைப் பற்றிக் கர்த்தர் குறிப்பிட்டார். அவர்களது போதனையை ஏற்றுக்கொண்டவர்கள் மன்னிக்கப்படுகையில், அவர்களின் போதனையை மறுக்கின்றவர்கள் மன்னிக்கப்பட மாட்டார்கள் (அப். 2:36-38, 41, 47).*

***அப்போஸ்தலர்கள் அறைகூவல் விடுத்தல்***

*முன்பே குறிப்பிட்டபடி, "இயேசு வந்திருந்தபோது, பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு[14] என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனே கூட இருக்கவில்லை" (யோவா. 20:24). அங்கிருந்திராத அப்போஸ்தலர் திரும்ப வந்தபோது, அவரிடத்தில் மற்ற சீஷர்கள், "கர்த்தரைக் கண்டோம்" என்று சொன்னார்கள் (யோவா. 20:25அ). தோமா நம்பிக்கையற்றவராக இருந்தார்: "அவருடைய கைகளில் ஆணிகளாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன்" என்று கூறினார் (யோவா. 20:25ஆ).*

## ஒரு அப்போஸ்தலரை நம்பச் செய்வதற்குத் தேவைப்பட்டது எது? *(யோவா. 20:26-31; 1 கொரி. 15:5ஆ)*

*ஒருவாரம் கடந்தது. அப்போஸ்தலர்கள் கலிலேயாவுக்குச் செல்லும்படி கூறப்பட்டிருந்தனர் (மத். 28:10), ஆனால் அவர்கள் புறப்படத் தாமதித் திருந்தனர். தோமா விசுவாசிக்காத வரைக்கும், செல்வதற்கு அவர்கள் தயாராயிருக்கவில்லை - ஏனென்றால், அவர்களின் இருதயங்கள் விசுவாசத் தில் இன்னமும் ஒருமைப்படவில்லை.[15] கர்த்தர் மீண்டும் தரிசனமாவதற்கு ஒருவாரம் காத்திருந்தது ஏன் என்று நாம் அறிவதில்லை. ஒருவேளை அவர், தமது சீஷர்கள் கண்டிருந்தவை பற்றிச் சிந்திக்கும்படி விரும்பி இருக்கலாம்.*

***"காணுதல் என்பது விசுவாசித்தலாக உள்ளது."***

*கடைசியில், "எட்டு நாளைக்குப் பின்பு[16] அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள் [அவர்கள் தங்கியிருந்த அறைக்குள்] இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனே கூட இருந்தான்" (யோவா. 20:26அ), இது இயேசு அவர்களுக்கு இரண்டாம் முறை தரிசனம் கொடுத்த வேளையாக இருந்தது (1 கொரி. 15:5ஆ-வைக் காணவும்). காட்சியமைவு ஒருவாரத்திற்கு முந்தியது போன்றே இருந்தது (கதவுகள் அடைக்கப்பட்டிருந்தன), மற்றும் கர்த்தரின் வாழ்த்தும் அதே போன்றே இருந்தது: "உங்களுக்குச் சமாதானம்" (யோவா.*

20:26ஆ).

இந்தத் தரிசனமானது குறிப்பாகத் தோமாவின் பிரயோஜனத்திற்கானதாக இருந்தது. சந்தேகம் கொண்டிருந்த அவரிடத்தில் கிறிஸ்து, "நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்றார் (யோவா. 20:27). தோமாவின் பதில்செயல், "உடனடியாக, உய்த்துணர்ந்ததாக, உண்மையிலேயே மகத்துவமானதாக இருந்தது; அவரே கிறிஸ்துவின் தெய்வீகத்துவத்தை முற்றிலும் குழப்பமற்ற சொற்றொடர்களில் அறிக்கையிட்ட முதல் நபராக இருந்தார்":[17] "என் ஆண்டவரே! என் தேவனே!"[18] (யோவா. 20:28). J. W. மெக்கார்வீ அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> தோமாவின் சந்தேகங்கள் பாரமானவைகளாக இருந்தன என்றால், அவரது விசுவாச அறிக்கை முழுமையானதாக இருந்தது என்று தோமாவின் சார்பாகக் கூறப்பட வேண்டும். உயிர்த்தெழுதல் என்பது அவருக்கு அதிகமாக அர்த்தப்பட்டிருந்த காரணத்தினால், அவர் அதில் சந்தேகம் கொண்டிருந்தார்; இயேசு தேவனேயல்லாமல் வேறொருவரேயல்ல என்று அந்த அறிக்கை அர்த்தப்பட்டது.[19]

**"விசுவாசித்தல் என்பது காணுதல் என்பதாக உள்ளது."**

தோமாவிடம் கிறிஸ்து, "நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய்" என்றார் (யோவா. 20:29அ). கடிந்துகொள்ளுதல் தோமாவை நோக்கித் திருப்பப்பட்டது, ஆனால் இது எல்லா அப்போஸ்தலர்களையும் கடிந்துகொள்ளும் நோக்கம் கொண்டிருந்தது (மாற். 16:14ஐக் காணவும்). அவர்களில் எவருமே, அவரைக் காண்பதற்கு முன்பு வரையிலும் விசுவாசம் கொண்டிருக்கவில்லை.

பின்பு கர்த்தர், "காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கூடுதலாகக் கூறினார் (யோவா. 20:29ஆ). இந்த வார்த்தைகளில் இயேசு, தம்மைக் காண்பதற்கு முன்பாகவே தமது உயிர்த்தெழுதலில் விசுவாசம் கொண்டிருந்தவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கூறினார்.[20] இதில், உயிர்த்தெழுந்த கர்த்தரை நமது உடல் ரீதியான கண்களால் காணாதிருந்தும், அவரில் விசுவாசம் கொண்டுள்ள நமக்கும் ஆசீர்வாதம் மறைபொருளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்து இந்த வார்த்தைகளைப் பேசியதைக் கேட்ட பேதுரு பிற்பாடு, "அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து" என்று எழுதினார் (1 பேது. 1:8).

நாம் பின்வரும் பழமையான கூற்று ஒன்றைக் கொண்டுள்ளோம்: "காணுதல் என்பது நம்புதலாக உள்ளது." இதற்கு எதிரிடையான கருத்தில்: "நம்புதல் என்பது காணுதலாக உள்ளது" என்பதும் உண்மையாகவே இருக்கிறது. நாம் கர்த்தரில் விசுவாசம் கொள்ளும்போது, நாம் வாழ்க்கையை ஒரு மாறுபட்ட வழியில் "காண்கின்றோம்" (உய்த்துணருகின்றோம்); நாம் வாழ்க்கை என்பது முற்றிலும் என்ன என்பதைக்

"காணுகின்றோம்" (புரிந்துகொள்ளுகின்றோம்). பின்பு நாம் "சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர் களாய்க் களிகூரமுடியும்."

நாம் நமது உடல்ரீதியான கண்களினால் இயேசுவைக் காணமுடியா திருந்தால், நாம் எப்படி அவரை விசுவாசிக்க முடியும்? அந்தக் கேள்விக்கு யோவான், ஏவுதல் பெற்ற விளக்கம் ஒன்றில் பதில் அளித்தார். அவர், "இந்தப் புஸ்தகத்தில் [அதாவது, யோவான் சுவிசேஷப் புத்தகத்தில்] எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்" (யோவா. 20:30; 21:25ஐக் காணவும்). யோவான் சுவிசேஷப் புத்தகத்தில் குறிப்பிட்டிராத "மற்ற சில அடையாளங்கள்" மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோரின் சுவிசேஷப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதை நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது இந்தக் கூற்றின் சத்தியம் உறுதியாகிறது.

தொடர்ந்து யோவான், "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார் (யோவா. 20:31).[21] யோவானின் கூற்றுப்படி, இயேசுவின் வாழ்வு பற்றி எழுதப்பட்ட பதிவேடு, இரட்சிக்கும் விசுவாசத்தை உண்டாக்கப் போதுமானதாக உள்ளது. முன்னதாகக் கிறிஸ்து, அப்போஸ்தலர்களின் உபதேசத்தினால்/வார்த்தையினால், தம்மை விசுவாசிக்கப் போகின்றவர்களைப் பற்றிப் பேசியிருந்தார் (யோவா. 17:20). பிற்பாடு பவுல், "ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று எழுதினார் (ரோமர் 10:17). இயேசுவைத் தங்கள் உடல்ரீதியான கண்களால் காணாதிருந்தும், புதிய ஏற்பாட்டின் ஏவுதல் பெற்ற சாட்சியத்தினால் அவர்மீது விசுவாசம் கொள்கின்றவர்கள் பாக்கியவான்களாய் இருக்கின்றனர்!

## ஏழு சீஷர்களை கண்டித்து உணர்த்துவதற்குத் தேவைப்பட்டது எது (யோவா. 21:1-24)

இப்போது காட்சியானது யூதேயாவில் இருந்து கலிலேயாவுக்கு மாறுகிறது. இயேசு தமது சீஷர்களைக் கலிலேயாவில் சந்திப்பதாக அவர்களுக்குக் கூறியிருந்தார் (மத். 26:32; 28:7). இயேசு, "திபேரியா கடற்கரையிலே" மறுபடியும் - "மூன்றாவது முறையாக"[22] - "சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார்" (யோவா. 21:1, 14), இது [இக்கடலின் பெயர்], கலிலேயாக் கடலுக்கு இன்னொரு பெயராக இருந்தது (யோவா. 6:1).[23] இந்த நிகழ்ச்சி எப்போது நடைபெற்றது என்று மிகச் சரியாக நாம் அறிவதில்லை. யோவான் 21:1 இந்த நிகழ்ச்சி "இவைகளுக்குப் பின்பு" - அதாவது யூதேயாவில் அப்போஸ்தலர்களுக்கு இருமுறை தரிசனம் தந்த பின்பு - நடைபெற்றது என்று மாத்திரம் கூறுகிறது. இந்த நாற்பது நாட்களில் எப்போதோ இது நடந்தது.

**சில அப்போஸ்தலர்கள் மீண்டும் நினைவுபடுத்தப்பட்டனர்**

கலிலேயாக் கடலில் ஏழு அப்போஸ்தலர்கள் ஒன்றுகூடியிருந்தனர்: "சீமோன்பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும், கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரானாகிய நாத்தான்வேலும்,[24] செபதேயுவின் குமாரரும் [யாக்கோபு மற்றும் யோவான்], அவருடைய சீஷரில் வேறு இரண்டுபேரும் ..." (யோவா. 21:2).[25] இது அப்போஸ்தலர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட இடமாக இருந்தது; இயேசுவின் வாழ்வில் குறிப்பிடத்தக்க பல நிகழ்ச்சிகள் அந்தத் தண்ணீருள்ள இடத்தின்மீது அல்லது அதற்கு அருகில் நடைபெற்றிருந்தன.[26] இது விசேஷமாக, இயேசுவின் முழு நேர சீஷர்களாவதற்கு முன்பு அங்கு மீன்பிடித்துக் கொண்டிருந்த (மத். 4:18-22) பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருக்கு நன்கு பழக்கப்பட்ட இடமாக இருந்தது.

சீஷர்கள் அவ்விடத்திற்கு வந்து சற்று நேரம் ஆகியிருக்கலாம். பேதுரு மன உளைச்சல் நிறைந்தவரானார். அவர், "மீன்பிடிக்கப் போகிறேன்" என்றார் (யோவா. 21:3அ). மற்றவர்கள், "நாங்களும் உம்முடனேகூட வருகிறோம்" என்று பதில் அளித்தனர் (வ. 3ஆ). சிலர் இதை, இம்மனிதர்கள் தங்கள் அப்போஸ்தலத்துவத்திற்கு எதிராய்ச் சென்றதை அர்த்தப்படுத்துவதாக எடுத்துக்கொள்ளுகின்றனர். அவர்கள் அநேகமாக, தங்களுக்காகக் கர்த்தர் கொண்டிருந்த எதிர்காலத் திட்டம் பற்றிக் குழப்பம் அடைந்திருக்கலாம், ஆனால் அவர்கள் தங்கள் உறுதிப்பாட்டில் இருந்து பின்வாங்கித் திரும்பியிருந்தனர் என்று நாம் முடிவு செய்யக்கூடாது. பிலிப்பு பென்டில்ட்டன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> மீன்பிடிக்க ஒருமுறை சென்றதினால் அவர்கள் தங்கள் அப்போஸ்தலத்துவத்தைக் கைவிட்டதாக அர்த்தப்படுத்தவில்லை; அவர்கள் மேம்பாடுகளுக்காகக் காத்திருக்கையில் வெறுமனே பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தனர்; ஆனால் இவ்விதமாக அவர்கள் தங்கள் பழைய தொழிலுக்குத் திரும்பியதினால் அவர்கள் தங்களை பலமான சோதனைக்குக் கீழ்ப்படுத்தியிருந்தனர் (லூக். 9:62).[27]

இம்மனிதர்கள் "புறப்பட்டுப் போய் உடனே படவேறினார்கள்.[28] அந்த இராத்திரியிலே[29] அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை" (யோவா. 21:3இ). மீன்பிடிப்பவர் எவரும் உங்களுக்குக் கூறக்கூடிய வகையில், மிகச் சிறந்த மீனவர்களும் கூட, அதுபோன்ற நாட்களை(அல்லது இரவுகளை)க் கொண்டுள்ளனர்!

உதய வேளைக்குச் சற்று முன்னதாக, "இயேசு கரையில் நின்றார்" (வ. 4அ); ஆனால் கரையில் இருந்து சுமார் ஒரு நூறு கஜங்கள்[30] தொலைவில் இருந்த (வ. 8) சீஷர்கள், அவரை அடையாளம் கண்டுகொள்ளாதிருந்தனர் (வ. 4ஆ).[31] கிறிஸ்து உரத்த குரலில் அவர்களிடம், "பிள்ளைகளே,[32] புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா?" என்று கேட்டார் (வ. 5அ). அவர்கள் "ஒன்றுமில்லை" என்று (வ. 5ஆ) சொல்வதற்குச் சங்கடப்பட்டிருக்க வேண்டும்.

இயேசு மீண்டும் உரத்த குரலில், "நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும்" என்றார் (வ. 6அ). ஒருவேளை, இந்த மீனவர்கள், ஏராளமான மீன்கள் இருப்பதைச் சுட்டிக்காண்பிக்கும் வகையில் தண்ணீர்ப் பரப்பின்மீது அதிகமான நீர்க்குமிழிகள் இருப்பது போன்ற சிலவற்றைத் தாங்கள் காணமுடியா திருந்து, அந்த அந்நியர் அதைக் கண்டிருக்கக்கூடும் என்று நினைத்திருக் கலாம். எவ்வகையிலும், அவர் அறிவுறுத்தியவாறே அவர்கள் செய்தனர். அவ்வாறு அவர்கள் செய்தபோது, அவர்களின் வலைகள் நிறைந்தன, மற்றும் "திரளான மீன்கள் அகப்பட்டதினால், அதை இழுக்க மாட்டாதிருந்தார் கள்" (வ. 6ஆ). அவர்களின் வலையானது, "நூற்றைம்பத்து மூன்று பெரிய மீன்களால்" (வ. 11[33]) திரளாய் மொய்க்கப்பட்டிருந்தது.

மற்றவர்கள் திகைப்பினால் மேற்கொள்ளப்பட்டிருக்கையில்,[34] யோவான் அநேகமாக, மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக நடந்திருந்த இதேபோன்ற ஒரு நிகழ்ச்சியை நினைத்திருக்கலாம்: மற்ற மூன்று மீனவர் களுடன் அவரை முழுநேர ஊழியத்திற்குக் கர்த்தர் அழைத்திருந்த வேளையில் கிடைத்திருந்த அற்புதமான மீன்பிடிப்பு (லூக். 5:1-11). அவர் பேதுருவிடம், "அவர் கர்த்தர்" என்று கூறுகையில் (யோவா. 21:7அ) அவரது குரலில் இருந்த உணர்வெழுச்சியை என்னால் கேட்க முடிகிறது.

"அவர் கர்த்தர் என்று சீமோன்பேதுரு கேட்டவுடனே, தான் வஸ்திர மில்லாதவனாயிருந்தபடியினால்,[35] தன் மேற்சட்டையைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான்" (வ. 7ஆ). அவர் மீன்பிடிப்பதற்காக தமது உடை களைக் கழற்றியிருந்தார்,[36] ஆனால் இப்போது அதை அவர் திரும்பவும் அணிந்துகொண்டார். சட்டையை அணிந்திருத்தல் என்பது நீந்துதலைக் கடினமானதாக்கக்கூடும், ஆனால் அவர் தமது எஜமானருக்கு மரியாதை காட்ட விரும்பினார். படவு கரைக்குத் திரும்பும் வரை அவர் காத்திருக்க வில்லை, ஆனால் "கடலிலே குதித்தார்" (வ. 7இ) மற்றும் இயேசுவை நோக்கி நீந்திச் சென்றார். மற்ற மனிதர்கள் "அந்தச் சிறிய படவில்[37] இருந்து கொண்டே மீன்களுள்ள வலையை இழுத்துக்கொண்டு வந்தார்கள்" (வ. 8).

அவர்கள் கரையை அடைந்தபோது, இயேசுவின் அருகில், "கரி நெருப்புப் போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்" (வ. 9).[38] கர்த்தர் ஏற்கனவே தாம் சமைத்துக் கொண்டிருந்த மீன்களுடன் அவர்கள் பிடித்த மீன்களில் சிலவற்றை அவர்கள் கூடுதலாக வைக்கும்படி செய்தார் (வ. 10, 11). எல்லாம் தயாரான போது அவர், "வாருங்கள், போஜனம்பண்ணுங்கள்" என்று கூறினார் (வ. 12அ), மற்றும் அவர்களுக்கு உணவைப் பரிமாறினார் (வ. 13). எல்லாரும், "அவரைக் கர்த்தர்" என்று அறிய/காண முடிந்தது (வ. 12ஆ) மற்றும் அவர் உயிரோடிருந்தார்![39]

**ஒரு அப்போஸ்தலர் புதுப்பிக்கப்படுதல்**

அப்போஸ்தலர்களுக்கு இயேசுவின் முந்திய தரிசனத்தில், தோமாவின் மீது அடிப்படைக் கவனக்குவிப்பு இருந்தது போலவே, இந்த தரிசனத்தில் பேதுருவின்மீது அடிப்படைக் கவனக்குவிப்பு இருந்தது. எல்லா அப்போஸ்

தலர்களிலும் பேதுருதான் எதிர்காலத்தைக் குறித்து மிகவும் நிச்சயமற்ற வராக இருந்தார். அவர், ''நான் கர்த்தரை மறுதலித்ததை அவர் எப்போதாவது மன்னிக்கவும் முடியுமா? அவரது திட்டங்களில் இன்னமும் அவர் எனக்கு இடம் கொண்டுள்ளாரா?'' என்று நினைப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. காலை உணவுக்குப் பின்பு (வ. 15அ), இயேசு அப்போஸ்தலர்களை மற்றவர்களிடத்திலிருந்து புறம்பே அழைத்துச் சென்றார்.[40] பின்பு உணர்வுகள் உச்சக்கட்டத்தை அடைந்த ஒரு காட்சி தொடர்ந்தது.

முதலில் கர்த்தர், "யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" என்று கேட்டார் (வ. 15ஆ). "இவர்கள்" என்பது மற்ற சீஷர்களைக் குறிப்பதாக சிலர் நினைக் கின்றனர்; பேதுரு, எஞ்சிய மற்றவர்கள் கொண்டிருந்ததைக் காட்டிலும் அதிகமான பற்றுறுதியை உரிமைகோரியிருந்தாரே (மத். 26:33). "இவர்கள்" என்பது மீன்களையும் மீன்பிடிக்கும் கருவிகளின் மேலுள்ள ஆர்வத்தையும் குறிக்கிறது என்று மற்றவர்கள் நினைக்கின்றனர்; ஒருவேளை கிறிஸ்து, பேதுரு தமது முந்திய தொழிலுக்குத் திரும்புவதை ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார் என்று கண்டிருக்கலாம். "இவர்கள்" என்பதன் அர்த்தத்தை மிகச் சரியாகக் கண்டுபிடித்தல் என்பது நமக்கு முக்கியமானதாக இருப்ப தில்லை; "வேறு எதைக்காட்டிலும் அல்லது வேறு எவரைக் காட்டிலும் நீ என்னிடத்தில் அதிகமாய் அன்புகூருகின்றாயா?" என்பதே இயேசுவின் கேள்வியினுடைய அர்த்தமாக இருந்தது. இது நாம் யாவரும் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வியாக உள்ளது.

பேதுரு, ''ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்'' என்று பதில்அளித்தார் (யோவா. 21:15இ). அந்தக் கேள்வியைக் கேட்டதில் இயேசு, "அன்பு" என்பதற்கு, *agapao* என்ற கிரேக்க வினைச் சொல்லின் மிக உயர்வான வார்த்தையின் ஒரு வடிவத்தைப் பயன்படுத்தி யிருந்தார். யோவான், "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவா. 4:8) என்று எழுதியபோது *agapao* என்பதன் ஒரு வடிவத்தைப் பயன்படுத்தினார். அன்பின் மாபெருந்தன்மை பற்றிப் பவுல் எழுதியபோது (1 கொரி. 13), இதே வார்த்தையின் ஒரு வடிவத்தையே பயன்படுத்தினார். இருப்பினும் பேதுரு, இயேசுவின் கேள்விக்குப் பதில் அளிக்கையில், அவர் "அன்பு" என்பதற்கு குறைவான ஒரு வார்த்தையான - பிரியம் மற்றும் நட்புறவு என்பதைக் குறிப்பிடும் வார்த்தையான - *phileo* என்பதைப் பயன்படுத்தியிருந்தார்.[41] ஆகவே இயேசு, "நீ என்மீது உண்மையாகவே அன்புகூருகின்றாயா?" என்று கேட்டார், அதற்கு அந்த அப்போஸ்தலர், ''ஆண்டவரே, நான் உம் நண்பனாக இருப்பதை நீர் அறிவீர்'' என்று பதில்அளித்தார்.[42] "பேதுரு ஒருமுறை விழுந்துபோன பின்பு, அவர் தம்மை *agape*[43] என்ற அவ்வார்த்தை யின் உறுதிப்பாட்டின் உயர்ந்த அளவுக்கு பண்புபடுத்திக்கொள்ள மனவிருப்பமற்று இருந்தார் என்பது உறுதி."[44] பேதுருவின் பதிலுரையைத் தொடர்ந்து, கிறிஸ்து "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" என்று கூறினார் (வ. 15ஈ).

பின்பு இயேசு மீண்டுமாக, "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ

*என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?'' என்று கேட்டார் (வ. 16அ). அப்போஸ்தலர் மீண்டும், "ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்று பதில் அளித்தார் (வ. 17ஆ). கர்த்தர், "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று கூறினார் (வ. 17இ).*

*கர்த்தர் மூன்றாம் முறையாக, "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா?" என்று கேட்டார் (வ. 17அ). இந்த வேளையில் இயேசு "அன்பு" என்பதற்குப் பேதுரு பயன்படுத்திய phileo என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். உண்மையில் அவர், "நீ உண்மையிலேயே என் நண்பனாக இருக்கின்றாயா?" என்று கேட்டார். கிறிஸ்து கேட்டிருந்தது பற்றி அந்த அப்போஸ்தலர் "துக்கப்பட்டார்." அவர், "ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கின்றேன் என்பதையும் நீர் அறிவீர்" என்று பதில் அளித்தார் (வ. 17ஆ). வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர் "நான் உமது நண்பனாக இருக்கின்றேன் என்பதை நீர் அறிவீர்'' என்று கூறினார். கிறிஸ்து, ''என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்றார் (வ. 17இ).*

*பேதுருவின் மும்முடங்கு மறுதலிப்புகளை, அவரது அன்பை மும்முறை அறிக்கையிடும்படி அழைத்ததின் மூலம் இயேசு நீக்கிப் போட்டார் என்று எழுத்தாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் - இதுவே விஷயமாகவும் இருந்திருக்கலாம். குறைந்தபட்சம், சீமோனுக்குத் தம்மைக் கர்த்தர் புறம்பே தள்ளிவிடவில்லை ஆனால் தாம் செய்வதற்கு அவர் வலிவார்ந்த ஊழியத்தை இன்னமும் கொண்டிருந்தார் என்பது தெளிவாகியிருக்கும். "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக," "என் ஆடுகளை மேய்ப்பாயாக" மற்றும் "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்ற வார்த்தைகளில் (வ. 15-17) இந்த அப்போஸ்தலருக்கான அறைகூவல் வெளிப்படுத்தப்பட்டது. சபையின் தொடக்க நாட்களில் அப்போஸ்தலர்கள், (தேவனின் மக்கள் எல்லாரும் என்ற) "மந்தை" முழுவதற்கும் விசேஷித்த "மேய்ப்பர்கள்" என்ற வகையில் ஊழியம் செய்திருந்தனர்.[45] பிற்பாடு, அப்போஸ்தலர் என்ற வகையில் பேதுருவின் விசேஷித்த பொறுப்புடன் கூடுதலாக, அவர் உள்ளூர் சபையொன்றின் மேய்ப்பர்களில் ஒருவராகவும் (ஒரு மூப்பராக அல்லது கண்காணியாக; 1 பேது. 5:1-4ஐக் காணவும்) ஊழியம் செய்திருந்தார்.*

*பேதுருவுக்கு இயேசு கொண்டிருந்த பணிப்பொறுப்பை அவர் [பேதுரு] மீண்டும் தொடங்க ஒப்புக்கொண்டால், அவர் அதற்குரிய விலையைச் செலுத்த ஆயத்தமாயிருக்க வேண்டும்: இரத்தசாட்சியாக மரித்தல் என்பதே அந்த விலையாக இருந்தது. அந்த அப்போஸ்தலரைப் பணிக்காற்றுப் படுத்துதலைக் கிறிஸ்து தொடர்ந்தார்:*

> இயேசு ... "நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

*இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப் போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார். அவர் இதைச் சொல்லியபின்பு, அவனை நோக்கி: "என்னைப் பின்பற்றி வா!"[46] என்றார் (யோவா. 21:17ஈ-19).*

*இயேசு வார்த்தைகளின் விளையாட்டு ஒன்றைப் பயன்படுத்தினார்: வசனம் 18ல் உள்ள இரண்டாவது, "அரையைக் கட்டி" என்பது, அப்போஸ் தலரின் விரோதிகள் அவரை மரணத்திற்கு வழிநடத்துகையில் அவரது கைகளைக் கட்டிவிடுவார்கள் என்பதைக் குறித்தது (மாற். 15:1ஐ ஒப்பிடவும்). ஏவுதல் பெற்றிராத பாரம்பரியக் கூற்று ஒன்றின்படி, முப்பத்து நான்கு ஆண்டுகளுக்குப் பின்பு, பேதுரு தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டார்.[47] அந்தப் பாரம்பரியக்கூற்று உண்மையாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், கர்த்தரைப் பின்பற்றுதல் என்ற அவரது அறைகூவலைப் பேதுரு ஏற்றுக்கொண்டால், அவர் தமது விசுவாசத்திற்காக ஒரு நாளில் மரிப்பார், என்பது யோவான் 21:18ல் தெளிவாயிருக்கிறது.*

*இவ்வரலாறு, யோவான் ஈடுபடும் ஒரு நிகழ்வுடன் முடிகிறது,[48] பேதுரு புதுப்பிக்கப்பட்டதைக் கண்டிருந்தார். அவர்களைப் பின் தொடர்ந்திருந்த யோவானைப் பேதுரு கவனித்து (யோவா. 21:20), இயேசுவினிடத்தில், "ஆண்டவரே, இவன் காரியம் என்ன?" என்று கேட்டார் (வ. 21). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நான் எனது விசுவாசத்திற்காக மரிப்பேன் என்று நீர் சுட்டிக்காண்பித்தீர். யோவானைப் பற்றிய விஷயம் என்ன? அவரும் இரத்தசாட்சியாக மரிப்பாரா?" என்று அவர் கேட்டார். அவருக்குக் கிறிஸ்து எதிர்பாராத வகையில் பதில் அளித்தார்: "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன? நீ என்னைப் பின்பற்றிவா" (வ. 22). பேதுருவுக்குச் சம்பந்தமற்ற விஷயங்களைப் பற்றி அவர் விசாரிக்கலாகாது என்று இயேசு கூறினார். பேதுரு, யோவானைப் பற்றிக் கவலைப்படுவதற்குப் பதிலாக, கர்த்தரைப் பின்பற்றுதல் என்ற கட்டளையைத் தாம் உண்மையுடன் பின்பற்றுவதற்குத் தீர்மானித்தல் பற்றி அக்கறையுள்ளவராக இருந்திருக்கவேண்டும்.*

*இயேசு யோவானைப் பற்றிக் கூறியவற்றைப் பேதுரு ஒருவேளை மற்றவர்களிடத்தில் திரும்பக் கூறியிருக்கலாம், ஏனென்றால் "அந்தச் சீஷன் மரிப்பதில்லையென்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று" (வ. 23அ) - இருப்பினும் இயேசு அவ்வாறு கூறியிருந்ததில்லை (வ. 23ஆ). ஏவுதல் பெற்றிராத பாரம்பரியத்தின்படி, அப்போஸ்தலர்களுக்குள்ளே யோவான் மாத்திரமே இயற்கையான மரணம் அடைந்தவராயிருந்தார். யோவான் தமது சுவிசேஷ விவரங்களை 90களில் எழுதியிருந்தாரென்றால்,[49] அவ்வேளையில் அவர் ஏறக்குறைய 90 வயதுள்ளவராக இருந்திருப்பார், இது அந்தக் கூற்றுக்கு மதிப்பைச் சேர்த்தது. ஒருவேளை இந்த வதந்தியை அடக்குவதற்காகவே வசனங்கள் 20 முதல் 23 வரையுள்ள விளக்கங்களை கூடுதலாகக் கூறம்படி யோவானை ஆவியானவர் வழிநடத்தியிருக்கலாம்.*

*வரலாற்றின் அந்தப் பாகத்தை உள்ளடக்குவதற்குத் தேவனுடைய காரணம் எதுவாக இருந்தாலும், அது பின்வரும் தனிச்சிறப்பான வசனத்*

திற்கு அறிமுகமாகப் பயன்படுகிறது: "அந்தச் சீஷனே [பேதுரு யாரைப் பற்றிப் பேசினாரோ, அவரே; அதாவது யோவானே] இவைகளைக் குறித்துச் சாட்சிகொடுத்து இவைகளை எழுதினவன்; அவனுடைய சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறோம்" (வ. 24). இந்த மொழிநடை, வழக்கத் திற்கு மாறான தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது,[50] ஆனால் செய்தி தெளிவானதாக உள்ளது: உயிர்த்தெழுந்த கர்த்தரை யோவான் கண்டிருந் தார், எனவே அவரது சாட்சி நம்பப்பட முடியும். கிறிஸ்து மரித்தோரிலிருந்து உண்மையாகவே உயிர்த்தெழுந்தார்!

## முடிவுரை

இயேசு, தாம் உயிரோடிருப்பதைத் தமது சீஷர்களுக்கு "நம்பத்தகுந்த பல ஆதாரங்களினால்" நிரூபித்திருந்தார். பின்பு, நாமும் விசுவாசிக்கத் தக்கதாக (யோவா. 20:30, 31), யோவான் (சுவிசேஷப் புத்தகங்களின் மற்ற எழுத்தாளர்களுடன்) இந்த நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்தார். நீங்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷப் புத்தகங்களை வாசித்துப் படித்தலானது உங்களுக்குள் விசுவாசத்தை உண்டாக்க வேண்டும் அல்லது உங்கள் விசுவாசத்தை வலுப்படுத்த வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன். கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய படிப்பானது உங்கள் இருதயத்தைத் தொடாதிருந்தால், வேறு எதுதான் உங்களை நம்பச் செய்யும்?[51]

## குறிப்புகள்

இது இரு பகுதிப் பாடங்களில் முதல் பகுதியாக உள்ளது. இரண்டாம் பாகத்தைத் தொடர்ந்து, இவ்விரு பாகங்களுக்கும் பின்தொடர்ச்சிப் பணியாக, பரத்துக்கேறுதலைப் பற்றிய ஒரு பிரசங்கம் உள்ளது. இவ்விரு பாகங்களையும் நீங்கள் தனித்தனிப் பாடங்களாக முன்வைக்கத் தேர்ந்து கொண்டால், இந்த முதல் பாகத்தின் பின்தொடர்ச்சிப் பணியாக உங்களுக் குக் கூடுதலாக ஒரு பிரசங்கம் தேவைப்படும். கலிலேயாக் கடலின் அருகில் இயேசுவின் தரிசனம் பற்றிப் பிரசங்கித்தல் என்பதே எனது ஆலோசனை யாக உள்ளது. இந்தப் பிரசங்கத்தை நீங்கள், "இயேசு காலை உணவைச் சமைத்த நாள்" என்று அழைக்கலாம் இதில், பேதுருவுடன் இயேசு நிகழ்த்திய உரையாடலைச் சித்தரிக்க முடியும். இதற்கான வேத வசனப்பகுதியானது இயல்பாகவே ஒரு எடுத்துரைப்புப் பிரசங்கத்தைத் தேர்ந்துகொள்ளச் செய்கிறது.

தோமாவைப் பற்றிய ஒரு பண்புப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தல் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. உலகில் பெரும்பான்மை யானவர்கள் அவரை "சந்தேகத் தோமா" என்றே அறிந்துள்ளனர், ஆனால் அவரைப் பாராட்டுவதற்கான விஷயங்கள் அவரிடத்தில் நிறைய உள்ளன.[52] மூடப்பட்ட அறைக்குள் இயேசு தமது சீஷர்களுக்குத் தரிசனமான நிகழ்ச்சிகள் பற்றிய பிரென்ட்டிஸ் மெடோர் அவர்களின் அணுகுமுறை யானது இன்னமும் ஒரு சாத்தியக் கூறாக உள்ளது: "நீங்கள் மரணத்தைப் போன்ற பீதி அடையும்போது என்ன செய்வீர்கள்?"[53]

*குறிப்புகள்*

*[1]ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற இந்த தரிசனத்தைப் பற்றி இப்பாடத்தின் பிற்பகுதியில் யோவான் 20:19ன் விளக்கங்களைக் காணவும். [2]பஸ்கா பண்டிகையானது பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு ஐம்பது நாட்களுக்கு முன்னதாக இருந்தது. இயேசு, பஸ்காவுக்குப் பின்பு நாற்பது நாட்கள் வரையிலும் தமது சீஷர்களுடன் இருந்துவிட்டுப் பின்பு பரத்திற்கேறினார்; அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு முன் பத்து நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. [3]இது இரு பகுதிப் பாடத்தின் முதல் பகுதியாக உள்ளது. இதைத் தொடர்ந்து இரண்டாம் பகுதியும் இப்புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ளது. [4]"கிறிஸ்துவின் வாழ்வு, 6" என்ற புத்தகத்தில் காணவும். உண்மையில், யோவான் 20:19ம் வசனமானது, யோவான், ரோமர்களின் காலக்கணக்கீட்டைப் பயன்படுத்தினார் என்பதற்குத் தன்னிலேயே பலத்த நிரூபணங்களில் ஒன்றாக உள்ளது. அதிகாரம் 19ல், வெறுமையான கல்லறையின் வரலாற்றையும் மகதலேனா மரியாளுக்கு [இயேசுவின்] தரிசனத்தையும் பதிவுசெய்தார் - பின்பு அப்போஸ்தலர்களுக்குத் தரிசனத்தைப் பற்றிக் கூறினார். அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமானது "வாரத்தின் முதலாம் நாள் மாலையில்" நடைபெற்றது என்பதற்கு, யோவான் ரோமர்களின் காலக்கணக்கீட்டைப் பயன்படுத்தியது மட்டுமே ஒரே வழிமுறையாக இருந்திருக்க முடியும். [5]நள்ளிரவுக்கும் சூரிய உதயத்திற்கும் இடைப்பட்ட நேரத்தில் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது ஏறக்குறைய நிச்சயமானதாகவே உள்ளது, எனவே யூதர்களின் காலக்கணக்கீடோ அல்லது ரோமர்களின் காலக் கணக்கீடோ, எது பயன்படுத்தப்பட்டிருப்பினும், அது "வாரத்தின் முதல் நாளாகவே" இருந்தது. [6]அவர்கள், இயேசு தங்களுடன் பஸ்கா உணவை உண்ட அதே மேல்வீட்டிற்குத் திரும்பி வந்திருந்தனர் என்று சிலர் நினைக்கின்றார்கள். [7]மாற்கு 16:14-19 வசனப் பகுதியானது பல நிகழ்ச்சிகளை இணைக்கிறது: அப்போஸ்தலர்களுக்குக் கிறிஸ்துவின் முதல் தரிசனம், பிரதான கட்டளை, மற்றும் பரத்துக்கேறுதல். மாற்கு சுவிசேஷ விவரத்திலிருந்து, இம்மூன்று நிகழ்ச்சிகளும் ஒன்றையொன்று துரிதமாய்ப் பின்தொடர்ந்து நடைபெற்றதாகத் தோன்றுகிறது; இருப்பினும் மற்ற சுவிசேஷ விவரங்களில் இருந்து இம்மூன்று நிகழ்ச்சிகளும் சற்றுக் கால இடைவெளியில் நடைபெற்றதை நாம் அறிகின்றோம். [8]இந்தப் புத்தகத்தில் "விசுவாசிக்கப் போராடுதல்" என்ற பாடத்தில் உள்ள கலந்துரையாடலைக் காணவும். [9]இதை மாற்கு 14:26 மற்றும் அப். 12:15 ஆகியவற்றுடன் ஒப்பிடவும். மன அழுத்தமான வேளைகளின்போது, பழைய மூடநம்பிக்கைகள் மேலெழும்பக்கூடும். [10]இந்த வேளையை முன்னெதிர் நோக்கிய யோவான் 17:18ஐக் காணவும்.*

*[11]இது நம்மைக் காட்டிலும் சீஷர்களுக்கு அதிக தெளிவாக இருந்திருக்கும், ஏனெனில் "ஆவி" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது (pneuma) "ஊதி" என்று அர்த்தப்பட முடியும். [12]அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் என்ன செய்வார் என்பது பற்றி "கிறிஸ்துவின் வாழ்வு, 6" என்ற புத்தகத்தில் "கடைசி நிமிட ஏற்பாடுகள்" என்ற பாடத்தில் காணவும். [13]யோவான் 20:23ல் உள்ள மொழிநடையானது மத்தேயு 16:19 மற்றும் 18:18ல் உள்ள மொழிநடையைப் போன்றதாகவே உள்ளது, அங்கு முதலில் பரலோகத்தில் ஒரு பரிமாற்றம் நடைபெற்று பின்பு பூமியில் அது நடைபெற்றது. [14]"தோமா" என்று நாம் பெற்றுள்ள எபிரெய வார்த்தையும் திதிமு (Didymus) என்ற கிரேக்க வார்த்தை ஆகிய, இவ்விரண்டுமே "இரட்டையர்" என்று அர்த்தப்படுகிறது. தோமாவுடன் ஒன்றாய்ப்*

*பிறந்த ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ இருந்திருக்க வேண்டும். [15]யோவான் 17ல், இயேசு தமது ஜெபத்தில் ஒருமைப்பாட்டின் அவசியத்தின் மீது கவனம் குவித்திருந்தார் (யோவா. 17:22, 23). அந்த ஜெபமானது எல்லா விசுவாசிகளுக்குமானதாக இருந்தது; ஆனால் அது அப்போஸ்தலர்களையும் உள்ளடக்கியதாகவே இருந்தது. [16]*NIV*யில்* "a week later" *என்றுள்ளது. காலத்தை யோவான் கணக்கிட்ட வகையில், இது தொடர்ந்து வந்த அடுத்த வாரத்தின் முதல்நாளாக இருந்திருக்க வேண்டும். பழைய உடன்படிக்கையில் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாளாக இருந்த ஏழாம் நாளுக்குப் பதிலாக அடிப்படையில் மாற்றியமைக்கப்படவிருந்த வாரத்தின் முதல் நாளின் முக்கியத்துவத்தை அப்போஸ்தலர்களின் மனதில் பதிய வைப்பதற்கு இயேசு விரும்பினார் என்று சிலர் யூகித்துள்ளனர். [17]*Robert Duncan Culver, *The Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 277. *பேதுரு மற்றும் மார்த்தாள் ஆகியோரின் அறிக்கைகளில் கிறிஸ்துவின் தெய்வீகத்துவம் மறைவாக உணர்த்தப்பட்டது (மத். 16:16; யோவா. 11:27), ஆனால் தோமாவின் அறிக்கையானது வெளிப்படையானதாக இருந்தது. [18]சில மதவாதிகள், இயேசு "ஒரு தேவனாக"* ["*a* god"] *இருந்தார், ஆனால் அவர் தேவன்* ["*the* God"] *அல்ல என்று உரிமைகோரி, இயேசுவின் தெய்வீகத்துவத்தை மறுதலிக்கின்றனர். மூலமொழியில், தோமா இயேசுவை "என் தேவனே"* ["*the* God of me"] *என்றே குறிப்பிட்டார். இயேசு* "the God" *என்றிருக்கவில்லையென்றால், அவர் தோமாவைக் கடிந்துகொண்டிருந்து இருப்பார். அதற்குப் பதிலாக அவர் தோமாவைப் பாராட்டினார். [19]*J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 754. *[20]இந்த எண்ணிக்கையில் கல்லறைக்குச் சென்றிருந்த பெண்களும் உள்ளடங்கியிருப்பார்கள். அவர்கள், இயேசு தங்களுக்குத் தரிசனமாவதற்கு முன்பே (மத். 28:9, 10), இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றிய தூதனின் செய்தியை நம்பினார்கள் (மத். 28:5-8; லூக். 24:22, 23).*

*[21]யோவான் 20:30, 31 வசனங்கள், யோவான் சுவிசேஷத்திற்கு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துவதால், யோவான் அந்த இடத்துடன் முடித்துக் கொண்டார் என்றும், அதிகாரம் 21 பிற்பாடு யோவானாலோ அல்லது ஒருவேளை வேறு எவராலுமோ கூடுதலாக எழுதப்பட்டிருக்கும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், யோவான் 21ம் அதிகாரமானது தொடக்கத்திலிருந்தே மூலப்பிரதியின் பாகமாக உள்ளது என்பதை கையெழுத்துப் பிரதிகளின் எல்லா ஆதாரங்களுமே சுட்டிக் காண்பிக்கின்றன. யோவான் 20:30, 31 வசனங்கள், முடிவாயிருந்திராத பவுலின் எழுத்துக்களின் தோற்றமுடிவுடன் (எடுத்துக்காட்டாக, பிலி. 3:1 மற்றும் 4:8) ஒப்பிடப்படலாம், அவைகள் முடிவாயிருப்பதில்லை. யோவான் 20:29ல் உள்ள இயேசுவின் வார்த்தைகளுக்கு யோவான் 20:30, 31 பொருத்தமான நடைமுறைப் பயன்பாடாக உள்ளது. [22]இது அப்போஸ்தலர்களின் குழுவிற்கு இயேசு தரிசனம் தந்த மூன்றாவது முறையாக இருந்தது; அவர் மற்ற தனிநபர்களுக்கும் சிறு குழுக்களுக்கும் கூட தரிசனமாகியிருந்தார். [23]"கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "கலிலேயாக் கடல்" என்ற துணைப்பாடத்தைக் காணவும். [24]நாத்தான்வேல், இயேசுவின் முதல் சீஷர்களில் ஒருவராக இருந்தார் (யோவா. 1:43-51ஐக் காணவும்). "நாத்தான்வேல்" என்பது இயேசுவின் பன்னிரு சீஷர்களில் ஒருவரான பர்தொலோமேயுவின் இன்னொரு பெயராயிருந்தது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில், அப்போஸ்தலர்கள் பலருடன் நாத்தான்வேல் பட்டியலிடப் பட்டுள்ள உண்மையானது அந்தக் கோட்பாட்டிற்கு ஆதரவளிக்கிறது. [25]"இயேசு ... தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம்" (21:14)*

*என்று யோவான் குறிப்பிட்டபடியால், கண்காணும் தொலைவில் இருந்த மற்ற அப்போஸ்தலர்களும் இந்த ஏழுபேருடன் காலை உணவை உண்பதற்குக் கூடிவந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. [26]இயேசு கடலின் அருகில் பிரசங்கித்திருந்தார்; அவர் தம்மைப் பின்பற்றி வரும்படி பலரைக் கடலின் அருகில் இருந்து அழைத்திருந்தார்; அவர் கடலை அமர்த்தியிருந்தார்; அவர் கடலின் தண்ணீர்களின்மீது நடந்திருந்தார். [27]*McGarvey and Pendleton, 755. *[28]இது யாருடைய படகாக இருந்தது? சீஷர்கள் வாடகைக்கு அமர்த்தியிருக்கலாம். இம்மனிதர்கள், முன்னாள் மீனவர்களாயிருந்தவர்களின் குடும்பங்கள் இன்னமும் தங்கள் மீன்பிடித் தளவாடங்களை வைத்திருந்த இடத்தில் இருந்திருக்கலாம், இவர்கள் பேதுரு மற்றும் அந்திரேயா குடும்பத்தாரிடமிருந்தோ அல்லது யாக்கோபு மற்றும் யோவான் குடும்பத் தாரிடமிருந்தோ படகைக் கடனாகப் பெற்றிருக்கலாம் என்பதே எனது யூகமாக உள்ளது. [29]கலிலேயாக் கடலில் மீன்பிடித்தல் என்பது சாதாரணமாக இரவு வேளையில்தான் நடத்தப்பட்டது. (லூக். 5:5ஐக் காணவும்.) [30]கிரேக்க மொழியில் [மற்றும் தமிழ் மொழி வேதாகமத்தில்] இருநூறு முழத்தூரம் என்றுள்ளது (*KJV*யைக் காணவும்). ஒரு முழம் என்பது ஏறக்குறைய ஒன்னரை அடியாக இருந்தது என்பதால், இருநூறு முழத்தூரம் என்பது சுமார் முந்நூறு அடிகள் அல்லது ஒரு நூறு கஜத் தூரமாக இருக்கும்.*

*[31]மீண்டும் ஒருமுறை, இயேசுவின் சீஷர்கள் அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. சாத்தியமான காரணிகள் பின்வருமாறு: அவர்களிடத்திலிருந்து அவர் சற்றே தூரத்தில் இருந்தார்; அவர்கள் அவரை இன்னமும் அங்கே எதிர்பாராது இருக்கலாம்; அது இன்னமும் ஓரளவு இருட்டு வேளையாகவே இருந்தது. [32]இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை, ''பிள்ளைகள்'' என்பதற்குரிய வார்த்தையாயிராமல், "பையன்கள்" என்பதற்குரிய வார்த்தையாக உள்ளது. *NIV*யில் "நண்பர்கள்" என்றுள்ளது. [33]இந்த எண்ணிக்கையின் மிகச் சரியான தன்மையானது வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது (சாதாரணமாக நமக்குத் தோராயமான எண்ணிக்கைகள்தான் தரப்படுகின்றன). ஒருவேளை யோவான், இது "மீன்பிடிப்பவர்களின் கதையல்ல" என்று நாம் அறியும்படி விரும்பியிருக்கலாம், ஆனால் பிடித்த மீன்களை அவர் உண்மையாகவே எண்ணிப் பார்த்திருந்தார். திரளான மீன்பாடு இருந்தபோதிலும் வலை கிழியாதிருந்தது என்ற கருத்து வசனம் 11ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முந்திய அற்புதமான மீன்பாட்டில் வலைகள் கிழிந்துபோயிற்று என்பதற்கு நேர்மாறானதாக உள்ளது (லூக். 5:6); ஒருவேளை வலைகள் கிழிந்து போகாதிருந்தது என்ற உண்மையானது அற்புதத்தின் ஒரு பாகமாக இருந்திருக்கலாம். [34]இதே போன்ற ஒரு முந்திய நிகழ்ச்சியில், அற்புதமான மீன்பாட்டைக் கண்டு மீனவர்கள் பிரமித்துப் போயிருந்தனர் (லூக். 5:9). [35]கிரேக்க வசனத்தில், "நிர்வாணமாயிருந்தார்" என்றுள்ளது (*KJV*யில் காணவும்); ஆனால் அடிக்கடி கூறப்படுவதுபோல், இவ்விடத்திலும் ''நிர்வாணம்'' என்பது "போதுமற்றதான உடை உடுத்தியிருத்தல்" என்றே அர்த்தப்படுகிறது. பேதுரு ஒருவேளை தளருடை அணிந்திருக்கலாம், ஆனால் இது கர்த்தரை வரவேற்கும்படி சென்றபோது போதுமான உடை என்று அவர் கருதவில்லை. [36]நான் வாழும் இடத்தில், பின்வரும் கூற்று ஒன்றை நாங்கள் கொண்டுள்ளோம்: *"Take off your coat and go to work!" *[37]''அந்தச் சிறிய படகு'' என்பது அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த படகாக இருக்கலாம்; ஆனால் அவர்கள் மீனவர்களின் பெரிய படகுக்குப் பின்னால் ஒரு சிறு படகைக் கட்டியிழுத்துக் கொண்டு வந்ததாகவும், அந்தச் சிறிய படகினுள் அவர்கள் ஏறி, கரையை நோக்கித் துடுப்பு வலித்ததாகவும் சில எழுத்தாளர்கள் நம்புகின்றனர். [38]இயேசு எங்கிருந்து மீன்களையும் அப்பங்களையும் பெற்றார் என்று நமக்குக் கூறப்படுவதில்லை. [39]"அவர்களில்*

ஒருவனும்: நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை" என்று வசனம் 12 கூறுகிறது. சந்தர்ப்பப் பொருளில் இது, அவர் யார் என்பதைக் கேட்பது அவர்களில் எவரொருவருக்கும் தேவையற்றதாக இருந்தது, ஏனெனில் பதிலானது தெளிவானதாக இருந்தது என்று அர்த்தப்படுவதாக இருக்கலாம். சிலர், யோவான் 14:9ல் தரப்பட்டது போன்ற கடிந்துகொள்ளுதலுக்குச் சீஷர்கள் பயந்திருக்கலாம் என்று யூகிக்கின்றனர். [40]வசனம் 20, யோவான் "அவர்களுக்குப் பின்னே" வந்ததாகக் கூறுகிறது, இது இயேசுவும் பேதுருவும் மற்றவர்களை விட்டுச் சற்று முன்னதாக நடந்து கொண்டிருந்தார்கள் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.

[41]"அன்பு" என்பதற்கான இந்த இரண்டு கிரேக்க வார்த்தைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடு பற்றிய கலந்துரையாடல் ஒன்று, David L. Roper, *Getting Serious About Love* (Searcy, Ark.: Resource Publications, *1992), 20-27, 34, 35* என்ற புத்தகத்தில் தரப்பட்டுள்ளது. [42]The Living Bible paraphrase has "Yes, Lord, ... you know I am your friend." [43]*Agape* என்பது *agapao* என்பதன் பெயர்ச்சொல் வடிவமாகும். [44]Roper, 35. [45]அவர்கள், "பிரதான மேய்ப்பரான" (1 பேது. 5:4) இயேசுவுக்குத் தேவனால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருந்தனர். [46]"என்னைப் பின்பற்றிவா" என்பதே பேதுருவுக்கு இயேசுவின் தொடக்க கால அறைகூவலாயிருந்தது (மத். 4:19). அது இன்னமும் "என்னைப் பின்பற்றி வா" என்பதாகவே இருந்தது (யோவா. 21:19, 22). இது ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும், கணக்கு ஒப்புவிக்க வேண்டிய ஒவ்வொரு பையனுக்கும் பெண்ணுக்கும் அறைகூவலாக நிலைத்துள்ளது. [47]பாரம்பரியத்தின்படி, பேதுரு தமது கர்த்தரைப் போலச் சிலுவையில் அறையப்படுவதற்குத் தகுதியானவரென்று தம்மை உணராதிருந்தார், எனவே அவர் தலை கீழாகச் சிலுவையில் அறையப்படுதலைத் தேர்ந்துகொண்டார். [48]மீண்டும், "இயேசுவுக்கு அன்பாயிருந்தவன்" என்று யோவான் தம்மையே குறிப்பிட்டார் என்று யூகிக்கப்படுகிறது. இருப்பினும் இவ்வசனப் பகுதியில், இந்தச் சீஷர்தான் இப்புத்தகத்தை எழுதியவர் என்பதையும் அடையாளப்படுத்துகின்றார் (யோவா. 21:24) - மற்றும் நாம், அப்போஸ்தலனாகிய யோவானே இதன் எழுத்தாளர் என்பதை உறுதியாய்க் கூறுகின்றோம். [49]"கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் "யோவான் சுவிசேஷம்: தேவகுமாரனாகிய கிறிஸ்து" என்ற பாடத்தில் காணவும். [50]இவ்வசனப் பகுதியானது படர்க்கைப் பெயர்ச்சொல்லைத் தன்மைப் பெயர்ச்சொல்லுடனும், ஒருமையைப் பன்மையுடனும் ஒன்றுகலந்து தருகிறது. இது எபேசு சபையில் இருந்த நடத்துநர்களினால் கூட்டப்பட்ட விளக்கவுரை என்று சிலர் நினைக்கின்றனர். நாம் இதை, யோவானின் ஏவுதல் பெற்ற எழுதுகோலின் வழியாகப் பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் தங்கள் அடையாள முத்திரையைத் தருகின்றனர் என்று மாத்திரம் நினைக்க வேண்டும்.

[51]இந்தப் படிப்பின் கடைசி வாக்கியமானது, உங்கள் வகுப்பில் ஒரு கலந்துரையாடலை உருவாக்கும் நோக்கங்கொண்டுள்ளது. உங்கள் வகுப்பில் எவராவது இன்னும் இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசியாதிருந்தால், அவரை அல்லது அவளைத் தடைசெய்வது எது என்பதைக் கண்டறிய - மற்றும் அந்தத் தடைக்குப் பதில் அளிக்க - இதுவே சரியான வேளையாக உள்ளது. [52]ஜட்சோனியாவில் எனது வகுப்பில் இருந்த மாணவர்களில் ஒருவர் (ஃபிரான்சிஸ் டோன்னெல்), மற்ற அப்போஸ்தலர்களை நம்பவைப்பதற்குத் தேவைப்பட்டதைப் பார்க்கிலும், தோமாவை நம்பவைப்பதற்குக் குறைவான சாட்சியமே தேவைப்பட்டது என்று கருத்துத் தெரிவித்தார். அவர் கர்த்தரைக் கண்டவுடன் நம்பினார் (யோவா. 20:27, 28), அதே வேளையில் மற்றவர்களுக்கு கூடுதல் நிரூபணம் தேவைப்பட்டது (லூக். 24:41-43). [53]Prentice A. Meador, Jr., *Sermons for Today*, vol. 2 (Abilene, Tex.: Biblical Research Press, 1981), 109-16.

# சென்று வருகிறேன் – மற்றும் ஹலோ!

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #44*

VIII. *இயேசுவின் உயிர்த்தெழுதல், தரிசனங்கள் மற்றும் பரத்துக்கேறுதல் (தொடர்ச்சி).*
- B. *நாற்பது நாட்கள் (அப். 1:3ஐக் காணவும்) (தொடர்ச்சி):*
  3. *எட்டாவது தரிசனம்: கலிலேயாவில் இருந்த ஒரு மலையில், அப்போஸ்தலர்களுக்கு (மற்றும் ஐந்நூறு சீஷர்களுக்கு) (மத். 28:16, 17; 1 கொரி. 15:6).*
  4. *மலையின்மீது பிரதான கட்டளை (மத். 28:18-20; மாற். 16:15-18; லூக். 24:46-48ஐக் காணவும்).*
  5. *ஒன்பதாவது தரிசனம்: (அறியப்படாத இடமொன்றில்) யாக்கோபுவுக்கு (1 கொரி. 15:7அ).*
  6. *கடைசி தரிசனங்கள்:[1] யூதேயாவில் எருசலேமுக்கு அருகில் எல்லா அப்போஸ்தலர்களுக்கும் (லூக். 24:44-49; அப். 1:3-8; 1 கொரி. 15:7ஆ).*
  7. *ஒலிவ மலையில் இருந்து பரத்துக்கேறுதல் (மாற். 16:19; லூக். 24:50-53; அப். 1:9-11).*
- C. *தொகுப்புக் கூற்றுக்கள்:*
  1. *கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய தொகுப்புக் கூற்றுக்கள் (யோவா. 20:30, 31; 21:25; அப். 20:35ஐக் காணவும்).*
  2. *தொடர்ந்த நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்புக் கூற்றுகள் (மாற். 16:20; லூக். 24:52, 53; அப். 1:12ஐக் காணவும்).*

### அறிமுகம்

பல ஆண்டுகளுக்கு முன்பு, கற்றறிந்த மனிதர்களின் குழு ஒன்று இலண்டன் நகரில் ஒன்றுகூடிற்று.[2] அவர்களில் ஒருவர் பின்வரும் கேள்வியை முன்வைத்தார்: "மில்ட்டன்[3] இந்த அறையில் நுழைந்தால் நாம் என்ன செய்வோம் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?" "நாம் அவருக்குப் பலத்த கையொலி எழுப்பிப் பாராட்டைத் தெரிவிப்போம்!" என்று பதில் வந்தது. இன்னொருவர், "ஷேக்ஸ்பியர்[4] இங்கு வந்தால் நாம் என்ன செய்வோம்?" "நாம் எழுந்து நின்று, அவருக்குப் பாடலின் தலைவன் என்று கிரீடம் சூட்டுவோம்." பின்பு, "இயேசு கிறிஸ்து இந்த அறைக்குள் வந்தால்

நாம் என்ன செய்வோம்?" என்ற கேள்வி வந்தது. அங்கு ஒரு நீண்ட அமைதி நிலவிற்று - கடைசியில் சார்லஸ் லேம்ப் என்ற எழுத்தாளரின் பின்வரும் வரிகளினால் அந்த அமைதி முறிக்கப்பட்டது:[5] "நாம் யாவரும் அவருக்கு முன்பாக முகங்குப்புற விழுவோம் என்று நான் நினைக்கின்றேன்!"

கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியம் பற்றிய நமது படிப்பின் முடிவுக்கு நாம் வந்துள்ள நிலையில், நீங்கள் இயேசுவுக்கு நெருக்கமாகக் கொண்டு வரப்பட்டு இருக்கின்றீர்கள் - மற்றும் கிறிஸ்து உங்களுக்கு நெருக்கமாகக் கொண்டுவரப்பட்டு இருக்கின்றார் - என்று நான் நம்புகின்றேன். விஷயம் அதுவாக இருந்தால், நீங்கள் - நேரடியாகவோ அல்லது உங்கள் இருதயத்திலோ - அவரை ஆராதிக்க, பயபக்தியில் மற்றும் கீழ்ப்படிதலில் ''அவருக்கு முன்பாக முகங்குப்புற விழவேண்டும்'' என்று நான் ஜெபிக்கின்றேன்.

முந்திய எடுத்துரைப்பில் நாம், இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவற்றிற்கு இடையில் இருந்த நாற்பது நாட்களைப் பற்றிய படிப்பு ஒன்றைத் தொடங்கினோம் (அப். 1:3ஐக் காணவும்). சுவிசேஷ விவரங்களில், நாற்பது நாட்களின் நிகழ்ச்சிகள், பல வாரங்களின் இடைவெளியில் நடந்திருந்தாலும் சிலவேளைகளில் ஒரே நாளில் நடந்தவைகளென்று நினைக்கும் அளவிற்கு ஒன்று கலந்துள்ளன.[6] ஆகையால் நாம், இந்தக் கடைசிக் காட்சிகளைப் பொறுத்தமட்டில் உபதேச ரீதியாகக் கண்டிப்பாயிருக்க முடியாது. எனது கடைசி எடுத்துரைப்பில் உள்ள வரிசைமுறைமையானது இந்த நிகழ்ச்சிகளை அடுக்கிவைக்கும் ஒரு வழியாக உள்ளது.

இயேசு தமது அப்போஸ்தலர்களை விட்டுச் சென்றபோது, அவர் "சென்று வருகிறேன்" என்று மாத்திரம் கூறாமல், மீண்டும் "ஹலோ" என்று சொல்வதற்கும் தயாராக இருந்தார் என்பதை வலியுறுத்துவதற்காக, நான் இந்தப் பாடத்தை ''சென்று வருகிறேன் - மற்றும் ஹலோ''[7] என்று அழைக்கின்றேன்.[8] பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு அவர், தாம் பூமியில் இருந்த நாட்களைவிட அதிகம் வல்லமை நிறைந்த வகையில் ''அவர் களுடன்" இருந்தார் (மத். 28:20). நமது பாடங்களின் முடிவை இயேசுவைப் பற்றிப் படித்தலின் முடிவு என்று எடுத்துக்கொள்ளக்கூடாது என்று ஒவ்வொரு வாசகரையும் உற்சாகப்படுத்துவதற்காகவும் நான் இந்தத் தலைப்பைப் பயன்படுத்துகின்றேன். மாறாக, இது நீங்கள் உங்கள் கர்த்தரை அறிந்து கொள்வதற்கு உங்கள் வாழ்நாளைச் செலவிட ஒப்புக்கொடுக்கும் படிக்கு உங்களைத் தூண்டியிருக்கும் என்று நான் ஜெபிக்கின்றேன். இப்பாடத்தொடரின் இந்தக் கடைசிப் பாடமானது அவருக்கு "சென்று வருக'' என்று கூறுவதாயிராமல், ''ஹலோ!'' என்று கூறுவதாயிருக்க வேண்டும்.

## அறைகூவல் விடுக்கும் ஊழியம்
## (மத். 28:16-20; மாற். 16:15-18; 1 கொரி. 15:6; லூக். 24:46-48; அப். 1:8ஐக் காணவும்)

**எட்டாவது தரிசனம்**

*இயேசுவின் மரணத்திற்கு முன்பு அவரது கடைசி உரையில், அவர் தமது அப்போஸ்தலர்களிடத்தில், "… நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன்" என்று கூறியிருந்தார் (மத். 26:32). இயேசுவின் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து, பெண்களிடத்தில் தூதர்கள், "சீக்கிரமாய்ப்போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார் …" என்று கூறினார்கள் (மத். 28:7). சற்றுப் பின்பு, அந்தப் பெண்களிடம் இயேசுதாமே, "பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி, அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்" என்று கூறினார் (மத். 28:10). மத்தேயு சுவிசேஷத்தின்படி, "பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள்" (28:16).[9]*

*குறிப்பிட்ட இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை இயேசு தமது உயிர்த்தெழுதலுக்கு முன்போ அல்லது பின்போ ஏதோ ஒருவேளையில் ஏற்பாடு செய்திருந்தார். குறிப்பிடப்பட்டிருந்த மலை எது என்று நாம் அறிவதில்லை. அது அவரது ஊழியத்துடன் முன்பு தொடர்புடையதாயிருக்கலாம்: எடுத்துக்காட்டாக, மறுரூபமலை அல்லது அவர் மலைப் பிரசங்கத்தைப் பிரசங்கித்திருந்த மலையுச்சி. இயேசு கலிலேயாவைத் தேர்ந்துகொண்டது ஏன்? ஒருவேளை அவர், தமது சீஷர்களுக்கும் தமது விரோதிகளுக்கும் இடையில் சற்றுத் தூரத்தை வைத்திருக்க விரும்பியிருக்கலாம். ஒருவேளை, அந்த வேளையில் அவரது சீஷர்களில் பெரும்பாலானவர்கள் கலிலேயாவிலிருந்திருக்கலாம்.[10] ஒருவேளை அவர் தமது சீஷர்களுடன் தனிமையில் இருக்கக் கூடும்படிக்குக் கலிலேயாவில் தனிமையான இடத்தைக் கண்டறிதல் என்பது சுலபமானதாக இருந்திருக்கலாம். கலிலேயாவில் இருந்த ஒரு மலைக்கு வரும்படி இயேசு தமது சீஷர்களுக்கு அறிவுறுத்தினார் என்று மாத்திரம் நாம் அறிகின்றோம் - அவர்கள் அதையே செய்தனர்.*

*அங்கு கூடியிருந்தவர்கள் அப்போஸ்தலர் மாத்திரமல்ல என்று பெரும்பாலான எழுத்தாளர்கள் நம்புகின்றனர்.[11] உயிர்த்தெழுதலுக்குப் பிந்திய தரிசனங்களைப் பவுல் பட்டியலிட்டபோது, அவர் (யூதேயாவில்) அப்போஸ்தலர்களுக்கு இயேசு தரிசனமானதைக் குறிப்பிட்ட பிறகு, "அதன் பின்பு அவர் ஐநூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள்;[12] சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள்"[13] என்று கூறினார் (1 கொரி. 15:6).*

இந்தப் பெரிய குழுவிற்குத் தரிசனமான நிகழ்ச்சி, கலிலேயாவில் "இயேசு குறித்திருந்த மலையில்" நடைபெற்றிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது (மத். 28:16). இது ஒரு மிகவும் தனிச்சிறந்த தரிசனமாக இருந்தது: இயேசு தாம் சிலுவையில் அறையப்பட்ட பின்பும் உயிரோடிருக்கின்றார் என்று சாட்சியளிக்கக் கூடிய தனித்தனியான ஐநூறு சாட்சிகள்.

சீஷர்கள் குறிக்கப்பட்ட இடத்தை அடைந்தபோது, இயேசு அங்கு ஏற்கனவே இருந்தார். மத்தேயு, "அங்கே அவர்கள் அவரைக் கண்டு பணிந்து கொண்டார்கள்; சிலரோ சந்தேகப்பட்டார்கள்" என்று எழுதினார் (மத். 28:17). மத்தேயு சுவிசேஷ விவரத்தில் சந்தேகப்பட்ட "சிலர்" என்பது, கிறிஸ்து உயிருடன் இருப்பதை யூதேயாவில் நம்பி இணங்க வைக்கப் பட்டிருந்த பதினொரு அப்போஸ்தலர்களைக் குறிப்பிடுவதாகக் காணப்படுகிறது. இவ்வசனத்தை மற்ற சுவிசேஷ வசனங்களுடன் ஒப்புரவாக்குவதற்கு பல வழிகள் உள்ளன. ஒருவேளை, மலையின் மீதோ அல்லது மலைக்கு அருகிலோ, முதன்முதலில் இயேசுவைக் கண்டபோது, அவர் சற்றுத் தூரத்தில் இருந்திருக்கலாம்,[14] முதலில் அவர்கள், அது அவர்தான் என்று நிச்சயமற்று இருந்திருக்கலாம். உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த நிகழ்ச்சிகளை, (மற்ற எழுத்தாளர்களைப் போலவே) மத்தேயு சுருக்கிக் கூறியதால், அவரது கூற்றானது அப்போஸ்தலர்களின் முந்திய அவிசுவாசத்தைக் குறித்திருக்கலாம். இருப்பினும், சந்தேகப்பட்டவர்கள் அப்போஸ்தலர்களல்ல, ஆனால் அந்த ஐநூறு பேரில் ஒரு சிலர் இயேசுவை அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அப்போதுதான் முதன்முறையாகக் கண்டவர்களில் சிலர் என்று நினைக்கின்றனர். முன்பு அப்போஸ்தலர்கள் நம்பாதிருந்தது போல் இவர்களும் நம்பாது இருந்திருப்பார்கள் என்பது நிச்சயம் - மற்றும் அது உண்மையிலேயே உயிர்த்தெழுந்த கர்த்தர்தாம் என்பதற்கு அதே போன்ற நிரூபணம் தேவைப்பட்டிருக்கும்.

**பிரதான கட்டளை**

திரளான கூட்டத்தாருடன் கிறிஸ்து அதிகம் பேசியிருப்பார் என்று நாம் எதிர்பார்ப்போம். அவர் "தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை"ப் பற்றி நிச்சயமாகவே அதிகமாய்ப் பேசினார் (அப். 1:3). ஆயினும், பிரதான கட்டளையென்று நாம் அழைக்கின்ற விஷயத்தை அவர்களுக்குக் கொடுத்தல் என்பதே அவர்களை அவர், ஒன்றுகூடிவரச் செய்திருந்ததன் நோக்கமாக இருந்தது:[15]

> ... "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக் குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத். 28:18-20).

இந்தக் கட்டளை பற்றிய மாற்கு சுவிசேஷ விவரமானது அநேகமாக இந்த வேளையைக் குறிப்பதாகவே உள்ளது:[16]

> ... "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்;[17] விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற். 16:15, 16).

லூக்கா பிற்பாடு - தமது சுவிசேஷ விவரத்தின் முடிவிலும் நடபடிகள் புத்தகத்தின் தொடக்க வார்த்தைகளிலும் - இந்தக் கட்டளையைப் பற்றிக் குறிப்பிட்டார். முழுமைத் தன்மைக்காக நாம் அந்த வசனப் பகுதிகளை இவ்விடத்தில் கண்ணோக்குவோம்:

> ... "எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவ (த்திற்கு [for][18]) மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்" (லூக். 24:46-48).

> "... எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப். 1:8).

மாறுபட்ட இந்த விவரங்கள் ஒன்றுக்கொன்று முரணானவையல்ல, ஆனால் ஒன்றுக்கொன்று கூடுதலான தகவல் அளிப்பவையாக உள்ளன. இவற்றை ஒன்றிணைப்பதின்மூலம், பிரதான கட்டளையின் அத்தியாவசிய மான தன்மையின் பகுதிகள் காணப்படக்கூடும். மத்தேயுவில் உள்ள நான்கு "சகல"[19] என்பது மூன்று எழுத்தாளர்களால் தரப்பட்ட விவரங்களை ஒழுங்கமைக்க வரைக்குறிப்பாகப் பயன்படுத்தப்பட முடியும்:

(1) *"சகல அதிகாரமும்."* புதிய ஏற்பாட்டில், "அதிகாரம்" என்ற கிரேக்க வார்த்தை (*exousia*) "அடிப்படையில் ... எல்லா வல்லமை மற்றும் சட்டபூர்வமானவற்றின் ஆதாரமூலம் என்ற வகையில் தேவனுடைய செயல்பாட்டின் முற்றான சாத்தியக்கூற்றைக் குறிக்கிறது."[20] வானத்திலும் பூமியிலும் உள்ள முற்றான அந்த அதிகாரத்துவம் பிதாவினால் அவரது குமாரனுக்குத் தரப்பட்டது (மத். 28:18). இவ்விதமாக இயேசு, ஒன்று கூட்டிச் சேர்க்கும் தமது கட்டளையை விரிவாக்க எல்லா உரிமையும் கொண்டுள்ளார். அவரது அதிகாரத்துவத்தை ஒப்புக்கொள்ளத் தவறுகின்ற யாவரும் ஒரு நாளில் அவரது கோபத்தை எதிர்கொள்ளுவார்கள்.

(2) *"சகல ஜாதிகளுக்கும்."* [இயேசு] சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, இயேசுவும் அவரது சீஷர்களும் அடிப்படையில் தங்கள் போதனையை யூதர்களுக்கு மாத்திரம் அளிக்கும்படி கட்டுப்படுத்தப் பட்டிருந்தனர் (மத். 10:5; 15:24ஐக் காணவும்). இப்போது, அந்தக் கட்டுப் பாடு நீக்கப்பட்டு விட்டது: அப்போஸ்தலர்கள் "சகல இனத்தவரிடத்திலும்"

*(மத். 28:19; லூக். 24:47), "உலகமெங்கும்" மற்றும் "சர்வ சிருஷ்டிகளிடத்திற்கும்" (மாற். 16:15), "பூமியின் கடைசி பரியந்தமும்" (அப். 1:8) செல்ல வேண்டியிருந்தது.*

*[பிரசங்கத்தைக்] கேட்பவர்களில் மாத்திரமின்றி, பிரசங்கிக்க வேண்டிய செய்தியிலும் மாற்றம் இருக்க வேண்டியதாயிற்று. இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் நாட்களில் அவராலும் அவரது சீஷர்களாலும் பிரசங்கிக்கப்பட்ட செய்தியில் "இராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்பதே முக்கிய அழுத்தம் கொண்டதாக இருந்தது (மத். 4:17; 10:7; லூக். 10:9ஐக் காணவும்). அப்போஸ்தலர்கள், இயேசுவே கிறிஸ்துவாக இருந்தார் என்று வெளிப்படையாக அறிவிக்கத் தடை செய்யப்பட்டிருந்தனர் (மத். 16:20). இந்தக் காலகட்டத்திலிருந்து இனி வரக்கூடிய நாட்களில் எல்லாம், அவர்கள் "சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க" வேண்டியிருந்தது (மாற். 16:15). அவர்கள், ராஜாவாகிய மேசியா வந்திருந்தார் என்றும் அவர் பாடுபட்டு மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்றும் (லூக். 24:46), எனவே ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட முடியும் என்றும் (1 கொரி. 15:3, 4; மாற். 16:16) நற்செய்தியைப் பகிர்ந்துகொள்வார்கள்!*

*இயேசுவின் கட்டளை, சுவிசேஷத்தைக் கேட்பவர்களிடத்தில் கேட்டுக் கொள்ளப்பட்ட அடிப்படைப் பொறுப்பையும் கூட உச்சரித்திருந்தது. பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படியும்போது, பல விஷயங்கள் நடைபெற வேண்டும்:*

- *மக்கள் இயேசுவைப் பற்றிய செய்தியால் போதிக்கப்பட வேண்டியவர்களாய் இருந்தனர் (மத். 28:19; மாற். 16:15). அவர்கள் "சீஷர்களாக" (மத். 28:19அ) அல்லது கற்பவர்களாக வேண்டும்.[21]*
- *அவர்கள் விசுவாசிக்க வேண்டியவர்களாய் இருந்தனர் (மாற். 16:16): செய்தி உண்மையானது என்று அவர்கள் விசுவாசித்து தங்களுக்காக மரித்தவரின் பலியில் நம்பிக்கை வைக்க வேண்டும்.[22]*
- *அவர்கள் மனந்திரும்ப வேண்டியவர்களாய் இருந்தனர் (லூக். 24:47): அவர்கள் தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டியவர்களாய், தங்கள் வாழ்வை மாற்றிக்கொள்ள வேண்டியவர்களாய் மற்றும் கர்த்தருக்காக வாழ்வதென்று தீர்மானிக்க வேண்டியவர்களாய் இருந்தனர்.*
- *அவர்கள் ஞானஸ்நானம் பெறவேண்டியவர்களாய் இருந்தனர் (மத். 28:19ஆ; மாற். 16:16). இந்த ஞானஸ்நானம் என்பது இரட்சிக்கப்படுவதற்காக (மாற். 16:16) பிதா குமாரன் பரிசுத்த ஆவியின்[23] நாமத்தில்[24] தண்ணீருக்குள் முழுக்காட்டப்படும்[25] ஞானஸ்நானமாயிருந்தது (மத். 28:19ஆ).*
- *மனிதர்கள் கீழ்ப்படிதலுடன் பதில்செயல் செய்கின்றபோது, அவர்களைத் தேவன் இரட்சிக்கின்றார். அவர்களின் கடந்த காலப் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன (லூக். 24:47).*

*(3) ''நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும்.''* மேலே விவரிக்கப்பட்ட பதில்செயல் முடிவானதாக இருப்பதில்லை, ஆனால் தொடக்கமாக மாத்திரம் இருக்கிறது. ஒரு நபர் ஞானஸ்நானம் பெற்ற வுடன், கூடுதலான உபதேசம் அவசியமாக உள்ளது. இயேசு தமது சீஷர் களுக்குக் *கட்டளையிட்ட யாவற்றையும்* ஞானஸ்நானம் பெற்றவர் களுக்குப் போதிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

சந்தர்ப்பப் பொருளில், இது "போய், ... *சகல ஜாதிகளையும் சீஷராக்கி, ... ஞானஸ்நானம் கொடுத்தல்''* என்ற அறைகூவலை உள்ளடக்கும், ஏனெனில் அதுவே அவர்களுக்கு அவர் அவ்வேளையில் கட்டளையிட்டதாக இருந்தது. இவ்விதமாக, பிரதான கட்டளையானது "தன்னிலே என்றென்றைக்கும்"[26] உள்ளதாக இருக்கிறது. வால்ட்டர் விங்க் அவர்கள், "இயேசுவைக் கொலைசெய்ததென்பது ... டேன்டெலியன் விதைக் கொண்டை ஒன்றின்மீது ஊதி அதை அழியச் செய்ய முயற்சிப்பது போலிருந்தது" என்று கூறினார்.[27]

இயேசு கட்டளையிட்ட யாவையும் போதித்தல் என்ற கட்டளை யானது இன்னும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது. சிலர், சுவிசேஷத் தைப் பரப்புகின்ற தங்களது பேராவலில், யாரையேனும் ஞானஸ்நானப் படுத்தியபின்பு, அந்தப் புதிய கிறிஸ்தவரை விசுவாசத்தில் வேரூன்றச் செய்யாமலேயே அடுத்த நபருக்குப் போதிக்க அவசரமாய்ச் சென்று விடுகின்றனர். பாவியை விசுவாசத்திற்குள் கொண்டு வந்து ஞானஸ்நானப் படுத்துதல் மட்டுமின்றி, அவர் "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளரு[வதற்கு]" *(2 பேது. 3:18அ)* உதவுதலும் நமது பொறுப்பாக உள்ளது.

*(4) ''சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்.''* இயேசு பிறப்பதற்கு முன்பே, அவருக்கு "இம்மானுவேல்" என்று பெயர் இருக்கும் என்பதாக முன்னுரைக்கப்பட்டது, இந்தப் பெயர் "தேவன் நம்மோடிருக் கிறார்" என்று அர்த்தப்பட்டது (மத். 1:23). தேவகுமாரன் மனிதர்கள் மத்தியில் நடந்தபோது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று, ஆனால் இயேசு தமது சீஷர்களுடன் ஆவிக்குரிய முறையில் தொடர்ந்து இருப்பார் என்பதை அவர்கள் அறியவேண்டும் என்று விரும்பினார். J. W. மெக்கார்வீ அவர்கள், "இது வெறும் துணையிருப்பிற்கான வாக்குத்தத்தமாயிராமல், முழுமையான பரிவிரக்கம் மற்றும் ஆதரவு என்பவற்றிற்கான வாக்குத் தத்தமாயிருக்கிறது ..." என்று கூறினார்.[28]

இந்த வாக்குத்தத்தத்தின் காலவேளையானது அந்த வாக்குத்தத்தம் மற்றும் பொதுவாக இந்தக் கட்டளையானது அப்போஸ்தலர்களுக்காக மாத்திரம் அல்ல என்று நாம் அறிந்துகொள்ள அனுமதிக்கிறது. கர்த்தருடைய கட்டளையானது "உலகத்தின் முடிவு பரியந்தம்"[29] (மத். 28:20) - அதாவது [அவரது] இரண்டாம் வருகை வரையிலும் அமலில் இருக்கும் என்று அவர் வலியுறுத்தினார். D. W. ஃபோர்டு அவர்கள், "உயிர்த்த கிறிஸ்து தமது சீஷர்களுடன் கலிலேயாவிலும் யூதேயாவிலும் சரீரப் பிரகாரமான கருத்தில் இருந்ததுபோல் நம்முடன் ஆவிக்குரிய கருத்தில் இருக்கின்றார் - இது நமக்கு ஒரு முக்கியமான பாடமாக உள்ளது" என்று

| பிரதான கட்டளை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல்/ போதித்தல் | விசுவாசித்தல் | மனந்திரும்புதல் | ஞானஸ்நானம் பெறுதல் | இரட்சிப்பு/ பாவமன்னிப்பு | தொடருதல் |
| மத்தேயு | ✓ | | | ✓ | | ✓ |
| மாற்கு | ✓ | ✓ | | ✓ | ✓ | |
| லூக்கா | ✓ | | ✓ | | ✓ | |

*எழுதினார்.*[30] *என்ன ஒரு உணர்வெழுச்சியும் ஆறுதலும் மிகுந்த சிந்தனை!*

*மாற்கு சுவிசேஷ விவரம், இயேசு அப்போஸ்தலர்களுக்கு ஒரு விசேஷித்த வாக்குத்தத்தத்தைக் கூடுதலாக்கினார் என்று கூறுகிறது.*[31] *அவர்களின் அவிசுவாசத்தினிமித்தம் அவர்களைக் கடிந்து கொண்டபின்பு (மாற். 16:14), அவர்கள் தங்கள் சந்தேகங்களை வெற்றி கொண்டால் பெற்றுக்கொள்ளவிருந்த வல்லமையைப் பற்றி அவர் கூறினார்:*

> *விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களை சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் (மாற். 16:17, 18).*

*அப்போஸ்தலர்களுடன் சென்ற இந்த "அடையாளங்களில்" பெரும் பாலானவற்றிற்கு நடபடிகளின் புத்தகம் உதாரணங்களைத் தருகிறது.*[32]

*மத்தேயு 28:18-20; மாற்கு 16:15, 16 மற்றும் லூக்கா 24:46-48 ஆகிய வசனப் பகுதிகளைக் கவனமாய்ப் படியுங்கள். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக, இந்த வார்த்தைகள் உலகளாவிய சுவிசேஷத்துவ ஊழியத் திற்கு அதிகாரத்துவமுடையவைகளாக இருந்துள்ளன. இவைகள் பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னதாக அப்போஸ்தலர்களுக்குச் செய்திருந்தது போலவே இன்றைய நாட்களிலும் சபைக்கு அணிவகுத்து முன்செல்வதற்கான கட்டளைகளைக் கொண்டுள்ளன.*

## கவனிக்கத்தக்க கணிசமான குழப்பம்
## *(லூக். 24:44-49; அப். 1:3-8; 1 கொரி. 15:7)*

**ஒன்பதாவது தரிசனம்**

*கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு அளித்த தரிசனங்களைப் பவுல் பட்டியலிட்டபோது, ஐநூறு பேருக்கு அவருடைய தரிசனத்தைப் பற்றிக் கூறியபின் "பின்பு யாக்கோபுக்கு … தரிசனமானார்" என்று அவர் கூறினார் (1 கொரி. 15:7அ). இது அநேகமாக இயேசுவின் அரைசகோதரரான யாக்கோபுவாக இருக்கலாம், இவர் நிறைவாக எருசலேமில் இருந்த சபையின் மதிப்புக்குரிய ஒரு நடத்துநரானார் (அப். 12:17; 15:13; 21:18; கலா. 1:19; 2:9).*

*இயேசு தமது அரைசகோதரருக்கு எங்கே அல்லது எப்போது தரிசன மானார் என்று நாம் அறிவது இல்லை, ஆனால் அந்த சந்திப்பு நினைவு கூரத்தக்க ஒன்றாக இருந்திருக்க வேண்டும். இயேசு தாமே மேசியா என்பதை யாக்கோபு நம்பி இணங்கச் செய்வதற்காக இந்த விசேஷித்த தரிசனத்தை அருளினார் என்பதில் சந்தேகம் இல்லை. அவரது சகோதரர்கள் அவரில் விசுவாசம் வைத்திருந்ததில்லை (யோவா. 7:5). ஒருவேளை*

யாக்கோபு கர்த்தருடைய உடன் பிறந்தவர்களில் மூத்தவர்[33] என்ற வகையில், மற்றவர்களை அவரால் இணங்க வைக்க முடியும் என்று கர்த்தர் அறிந்தபடியால் குறிப்பாக இவருக்குத் தரிசனமாகி இருக்கலாம். எவ்வகையிலும், இயேசுவின் சகோதரர்கள், அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவரில் விசுவாசம் கொண்டவர்களாகி, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் வருகைக்காக எருசலேமில் காத்திருக்கையில் அவர்களுடன் அங்கிருந்தனர் (அப். 1:12-14). அந்த சகோதரர்களில் இருவர் நமது புதிய ஏற்பாட்டில் பின்வரும் நிருபங்களை எழுதினர்: யாக்கோபு (யாக். 1:1) மற்றும் யூதா (யூதா 1).[34]

**கடைசி தரிசன(ங்கள்)[35]**

நாற்பது நாட்கள் முடிவை நெருங்குகையில், இயேசு மீண்டும் யூதேயாவுக்கு - எருசலேம் கண்ணுக்கு எட்டிய தொலைவில் இருக்கும் இடத்திற்கு - சென்றார் (லூக். 24:50, 52; அப். 1:4, 12). எருசலேமில் சபை நிலைநாட்டப்படுவதற்கும், முதலாவது அந்த உள்ளூர்ப் பகுதியில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதற்கும் கடைசித் தயாரிப்புகளைச் செய்தல் என்பதே அவரது நோக்கமாக இருந்தது (அப். 1:8ஐக் காணவும்). "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" (லூக். 24:47) என்று பழைய ஏற்பாட்டு வேத வசனங்களில் எழுதப்பட்டிருந்ததாக இயேசு கூறினார். "கர்த்தருடைய வீடு" ("சபை"; 1 தீமோ. 3:15) நிலைநாட்டப்படுதல் பற்றியும் "சகல ஜாதிகளும்" அதற்குள் ஓடிவருதல் பற்றியும், "எருசலேமில் இருந்து கர்த்தருடைய வசனம் புறப்படுதல் [மற்றும் எல்லா இடங்களுக்கும் செல்லுதல்] பற்றியும் ஏசாயா முன்னுரைத்திருந்தார்" (ஏசா. 2:2, 3).

இயேசு தாம் பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்னதாக, "எல்லா அப்போஸ்தலர்களுக்கும்" (1 கொரி. 15:7ஆ) கடைசியாகத் தரிசனமானார். அவர்களிடத்தில் அவர், "தேவனுடைய ராஜ்யத்திற்குரியவைகளைப்" பற்றிப் பேசி (அப். 1:3) "மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று நான் உங்களோடிருந்தபோது[36] உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே" என்றார் (லூக். 24:44).[37] யூதர்கள் தங்கள் வேத வசனங்களை மூன்று பகுதிகளாகப் பிரித்திருந்தனர்: மோசேயின் நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள் மற்றும் எழுத்துக்கள். "எழுத்துக்கள்" என்பவைகளில் அதிகமானவை சங்கீதப் புத்தகங்களைக்கொண்டிருந்தபடியால், "சங்கீதங்கள்" என்ற சொற்றொடர் சிலவேளைகளில் இந்த மூன்றாம் பிரிவைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. ஆகையால் கிறிஸ்து, தம்மைப் பற்றிய போதனைகள் பழைய ஏற்பாடு முழுவதிலும் ஊடுருவிச் செல்கின்றன என்று உறுதிப்படுத்தினார்.

பின்பு இயேசு, "வேத வாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய [அப்போஸ்தலர்களுடைய] மனதைத் திறந் [தார்]" (லூக். 24:45).

இதை அவர் அற்புதவிதமாகச் செய்திருக்கலாம், ஆனால் தொடர்ந்து வரும் வசனங்கள், இதை அவர் பின்னும் கூறிய உரையினால் செய்தார் என்ற கருத்தைத் தெரிவிக்கின்றன. முன்னதாக அவர் எம்மாவு சீஷர்களுக்கு "வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவை களை" விவரித்து (லூக். 24:27) "அவர்களின் மனங்களைத் திறந்தது" போலவே செய்திருக்கலாம். அவர் தமது அப்போஸ்தலர்களிடத்தில் பின்வருமாறு கூறினார்:

> எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும்[38] பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப் புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப் படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் (லூக். 24:46-49).

பிதாவின் "வாக்குத்தத்தமும்" "உன்னதத்திலிருந்து வரும் பெலனும்," பத்து நாட்களுக்குப் பின்பு இயேசு அப்போஸ்தலர்கள்மீது அனுப்பவிருந்த பரிசுத்த ஆவியைப் பற்றிய குறிப்புகளாயிருந்தது. அவர்கள் "எருசலேம் நகரத்தை விட்டுப் போகாதிருக்கும்படி" அவர் அறிவுறுத்தினார். "பிதா வாக்குத்தத்தம் பண்ணினதற்காக அவர்கள் காத்திருக்க வேண்டியிருந்தது" - அவர் "இதை என்னிடத்தில் நீங்கள் கேள்விப்பட்டீர்கள் என்று கூறினார்;[39] யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" (அப். 1:4, 5).

**புரிந்துகொள்ளப் போராடுதல்**

குறிப்பிட்டபடி, இயேசு தமது அப்போஸ்தலர்களுடன் இருந்த கடைசி வேளைகளின்போது, அவர்களிடத்தில், "தேவனுடைய ராஜ்யத்துக் குரியவைகளைப் பற்றி" (அப். 1:3) பேசினார். அவர்களின் பதில், அவர்கள் ராஜ்யத்தின் உண்மையான இயல்பைப் புரிந்துகொள்ள இன்னமும் போராடிக்கொண்டு இருந்ததைக் காண்பித்தது: "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?" (அப். 1:6). இயேசு தமது ஆவிக்குரிய ராஜ்யத்தை எப்போது அமைப்பார் என்று அறிய மாத்திரமே அப்போஸ்தலர்கள் விரும்பினர் என்று சில எழுத்தாளர் கள் நினைக்கின்றனர். இருப்பினும், "ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுத்தல்" என்ற சொற்றொடராக்கம், அவர்கள் தங்கள் சிந்தையில் உலகப் பிரகாரமான ராஜ்யத்தை [நினைத்துக்] கொண்டிருந்ததையே கருத்தாகத் தெரிவிக்கிறது. The Living Bible மொழிப்புரையில், "Lord, are you going to free Israel [from Rome] and restore us as an independent nation?" என்றுள்ளது. குறைந்தபட்சமாய்க் கூறுவதென்றால், இவ்வேளையில் அப்போஸ்தலர்கள் குழப்பமான நிலையிலேயே நிலைத்திருந்தனர்.

*மொத்தத்தில் இயேசு அவர்களிடம், கர்த்தர் ராஜ்யத்தை எப்போது ஏற்படுத்துவார் என்பது பற்றி கவலைப்படாது இருக்கும்படி கூறினார் (அப். 1:7). "ராஜ்யம் வல்லமையுடன் வரும்" (மாற். 9:1) என்று முன்னதாக அவர் கூறியிருந்தார். அவர்கள்மீது பரிசுத்த ஆவி வரும்போது, அவர்கள் பலனடைவார்கள் (அப். 1:8அ) என்று இப்போது அவர் கூறினார். அது நடக்கும்போது ஆவியானவர், அவர்களின் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வந்து எல்லா விஷயங்களையும் அவர்களுக்குத் தெளிவாக்குவார் (யோவா. 14:26; 16:13ஐக் காணவும்).*

## தொடரும் ஆறுதல் (மாற். 16:19, 20; லூக். 24:50-53; யோவா. 20:30; 21:25; அப். 1:9-12)

**பரத்துக்கேறுதல்**

*இயேசுவின் கடைசி வார்த்தைகள் ஒலிவமலையின்மீது அல்லது அதற்கு அருகில் பேசப்பட்டன ("ஒலிவ மலை"; அப். 1:12). "இவைகளை அவர் சொன்ன பின்பு" (அப். 1:9அ),[40] அவர் "பெத்தானியா வரைக்கும்" அப்போஸ்தலர்களை அழைத்துக்கொண்டு போனார் (லூக். 24:50அ). இது மலையின் தென்கிழக்குப் பகுதியில் - இரட்சகருக்குப் பல நினைவுகளை வைத்திருந்த ஒரு நகரான, பெத்தானியாவில் இருந்து காணக்கூடிய வகையில் இருந்த - யாவராலும் நன்கு அறியப்பட்ட ஒரு இடமாக இருந்திருக்க வேண்டும். பின்பு அவர், "தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார்" (லூக். 24:50ஆ). அவரது கடைசி செய்கையானது ஆசீர்வதித்தலாய் இருந்தது என்பது தனிச்சிறப்பானதாக உள்ளது.*

*அவர் பரத்துக்கேறிய நிகழ்ச்சியானது ஒரு சில வார்த்தைகளில் விவரிக்கப்பட்டுள்ளது:[41] "அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப்பிரிந்து" (லூக். 24:51அ). "அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்" (அப். 1:9ஆ). அவர் "பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்" (லூக். 24:51ஆ), அங்கு அவர் "எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்" (மாற். 16:19). அங்கே அவர் தமது ராஜ்யத்தின்/சபையின்மீது தமது ஆளுகையைத் தொடங்கினார். தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பிய பின்பு, அவர் ...*

> *... எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத் தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபே. 1:20-23).*

... என்று பவுல் எழுதினார்.

**உறுதிப்பாடு**

அப்போஸ்தலர்கள், தங்கள் அன்பார்ந்த எஜமானர் மேகங்களினூடே மறைவதைக் கவனிக்கையில், அவர்களின் உணர்வெழுச்சிகளைக் கற்பனை மட்டுமே செய்ய முடியும். “அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிரு [ந்தனர்]” (அப். 1:10அ) என்று லூக்கா எழுதினார். The Living Bible பொழிப்புரை, “they were straining their eyes for another glimpse” என்று கூறுகிறது.

பின்பு அவர்கள், “வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே” நிற்பதை அறிந்தார்கள் (அப். 1:10ஆ). அந்த “இரண்டு பேர்” தூதர்களாய் இருந்தனர், அவர்கள் அப்போஸ்தலர்களிடத்தில், “கலிலேய ராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர் கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்'' என்று கூறினார்கள் (அப். 1:11; வெளி. 1:7ஐக் காணவும்). அவர்களின் வார்த்தை யானது, கர்த்தர் மீண்டும் வருவதாகக் கூறிய அவரது வாக்குத்தத்தத்தை (யோவா. 14:3) மறுஉறுதிப்படுத்திற்று. கிறிஸ்து தமக்குச் சொந்தமானவர் களை ஏற்றுக்கொண்டு, துன்மார்க்கரைத் தண்டிக்க ஒரு நாளிலே வருவார் என்ற உண்மையானது தொடக்க காலக் கிறிஸ்தவர்களுக்கு மாபெரும் ஆறுதலின் ஆதாரமூலமாக இருந்தது (1 தெச. 4:16-18; வெளி. 22:20).

அப்போஸ்தலர்கள் இயேசுவைப் பணிந்துகொண்டு, பின்பு “மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்து, நாடோறும் தேவாலயத் திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள்” (லூக். 24:52, 53; அப். 1:12ஐக் காணவும்), அவ்வேளையில் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வருகை மற்றும் ராஜ்யம்/சபை நிலைநாட்டப்படுதல் ஆகியவற்றிற்காகக் காத்திருந்தனர். நடபடிகள் புத்தகத்தில் உள்ள நிகழ்ச்சிகள் நடந்த பின்பு சுவிசேஷ விவரத்தை எழுதிய மாற்கு,[42] அப்போஸ்தலர்கள் பிரதான கட்டளையை செயல்படுத்துவதையும் கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறுதலையும் கண்டார். அவர் தமது புத்தகத்தை, “அவர்கள் [அப்போஸ்தலர்கள்] புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்[43]” என்று கூறிமுடித்தார் (16:20).[44] “இவ்வரலாற்றின் எஞ்சிய பகுதியை” அறிய நடபடிகளின் புத்தகத்தை வாசியுங்கள்.

## முடிவுரை

மாற்கு எழுதிய தொகுப்புரைக் கூற்றுடன், நாம் கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய நமது படிப்பின் முடிவிற்கு - அதாவது, இந்த பூமியில் அவர் வாழ்ந்த வாழ்வின் முடிவிற்கு - வருகின்றோம். கர்த்தர் இன்னமும் பரலோகத்தில் உயிருடன் இருந்துகொண்டு நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருப்

பதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துகின்றோம் (எபி. 7:25)! அவரது பூமிக்குரிய ஊழியத்தின் வரலாற்றைப் பற்றி எடுத்துரைக்க நான் ஆறுக்கும் அதிகமான புத்தகங்களை எழுத வேண்டியதாயிருந்தது, ஆனால் இன்னும் "அதில் பாதியளவுகூடக் கூறிமுடிக்கப்படவில்லை."[45] யோவான் பின்வருமாறு எழுதினார்,

> இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவா. 20:30, 31).

> இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன் (யோவா. 21:25).

கிறிஸ்து அவ்வளவு அதிகமானவற்றைச் செய்தார் - அவற்றை அவர் மூன்று அல்லது அதற்குச் சற்று அதிகமான ஆண்டுகளில்[46] செய்தார்! அவர் மரித்தபோது முப்பத்துமூன்றே வயதுடையவராய் இருந்தார், ஆனால் மனிதக்குலத்தின்மீது அவர் கொண்டுள்ள செயல்தாக்கம் எவ்வளவாக உள்ளது! *The Narrated Bible in Chronological Order* என்ற புத்தகத்தில், F. லாகார்டு ஸ்மித் அவர்கள், சுவிசேஷ விவரங்கள் பற்றிய தமது பகுதியைப் பின்வருமாறு கூறிமுடித்தார்,

> இயேசுவின் வாழ்வு பற்றிய சுருக்கமான இந்த நான்கு புத்தகங் களுடன்கூட, அவரது வரலாறு நூற்றாண்டுகளினூடே ஒவ்வொரு தலைமுறைக்கும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது, இது பூமியின் ஒவ்வொரு மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, மற்றும் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக கீழ்ப்படித லுள்ள விசுவாசத்துடன் தேவனுக்குக் கீழ்ப்படிதலில் பதில்செயல் செய்கின்ற பல இலட்சக்கணக்கான மனிதர்களால் விசுவாசிக்கப் படுகிறது.[47]

எனது குடும்பத்துடன் நான் ஆஸ்திரேலியாவுக்கு சென்றபோது, நான் முப்பதுமூன்று வயதுடையவனாக இருந்தேன், அப்போது நான் "இயேசு மரித்தபோது மற்றும் அவர் நிறைவேற்றியிருந்த யாவற்றையும் கண்ணோக்கியபோது, அவர் மூப்பத்துமூன்று வயதுடையவராக இருந்தார். நான் என்ன செய்திருக்கின்றேன்?" என்று நினைத்ததை நினைவு கூருகின்றேன். நாம் இயேசுவின் வாழ்வை அப்படியே வாழ இயலாது என்ற உண்மையில் நீங்களும் நானும் ஒப்புரவாக வேண்டும், ஆனால் அதைப் போலச் செய்ய நம்மால் முயற்சி செய்ய முடியும். அதை நீங்கள் செய்யும் படி, நமது பாடங்களின் வரிசைத் தொடரானது உங்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன். முன்பே குறிப்பிட்டபடி, இந்தப்

பாடத்தொடரானது உங்களை, கர்த்தரைப் பற்றிய உங்கள் படிப்பைத் தொடரும்படியும், அவரை இன்னும் அதிகமாய் அறிந்துகொள்ளும்படியும் உற்சாகப்படுத்தும் என்றும் நான் நம்புகிறேன். இந்தப் படிப்பின் முடிவானது இயேசுவுக்கு "சென்று வருகிறேன்" என்று கூறுவதாயிராமல், அவருக்கு "ஹலோ!" என்று கூறுவதாக இருக்கவேண்டும்.

---

குறிப்புகள்

[1]அப். 1:4 மற்றும் 1:6 ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளவை இரண்டு தனித்தனித் தரிசனங்களா அல்லது ஒரே தரிசனமா என்பது - மற்றும் லூக்கா 24:44-49 அதே தரிசனமா என்பதும் - தெளிவற்றதாக உள்ளது. [2]This illustration was adapted from Alice M. Knight, *1001 Stories for Children and Children's Workers* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1952), 148-49. [3]ஆங்கிலக் கவிஞரான ஜான் மில்ட்டன் (1608-74), மேற்கத்திய இலக்கிய உலகில் முக்கியத்துவம் வாய்ந்த நபர்களில் ஒருவராக இருந்தார். [4]ஆங்கில நாடக ஆசிரியரும் கவிஞருமான வில்லியம் ஷேக்ஸ்பியர் (1564-1616) என்பவர் மேற்கத்திய நாகரீகத்தின் வரலாற்றில் மிகவும் பரவலாகப் பாராட்டப்பட்டு செல்வாக்குச் செலுத்திய இலக்கியங்களை எழுதினார். [5]சார்லஸ் லேம்ப் (1775-1834) என்பவர் நன்கு அறியப்பட்ட ஆங்கில எழுத்தாளராயிருந்தார். [6]எடுத்துக்காட்டாக, நமக்கு மாற்கு சுவிசேஷம் மாத்திரமே இருந்ததென்றால், எம்மாவு செல்லும் சாலையில் சீஷர்களுக்கு இயேசுவின் தரிசனத்தை (மாற். 16:12, 13) தொடர்ந்து அதே நாளில் அவர் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமாகி (வ. 14) அவர்களுக்குப் பிரதான கட்டளையைக் கொடுத்தார் (வ. 15-17) என்று நினைத்திருப்போம். மற்றும் நாம், இதைத் தொடர்ந்து அதே நாளில் பரத்துக்கேறுதலும் நடந்தது (வ. 19) என்றும் நினைப்போம். இருப்பினும் மற்ற பதிவேடுகளில் இருந்து, இந்த நிகழ்ச்சிகள் ஒரு நாற்பது நாட்கள் கால அளவில் நடைபெற்றிருந்தன என்று நாம் அறிகின்றோம். [7]நீங்கள் அநேகமாக, "சென்று வருகிறேன்" மற்றும் "ஹலோ" என்ற வார்த்தைகளை நன்கு அறிந்திருக்கலாம். முதல் வார்த்தையானது நாம் யாரிடத்திலிருந்தாவது புறப்படும்போதும், இரண்டாம் வார்த்தையானது நாம் யாரையாவது சந்திக்கும் போதும் பயன்படுத்தப்படுகிறது. நீங்கள் வாழுமிடத்தில் இதே கருத்துக்களைப் பயன்படுத்த நீங்கள் வேறு சொற்றொடர்களைக் கொண்டிருக்கலாம்; அந்தச் சொற்றொடர்களை இவ்விடத்தில் நீங்கள் பயன்படுத்த விரும்பலாம். [8]ஹவாய்த் தீவில் உள்ள மக்கள் "சென்று வருகிறேன்" மற்றும் "ஹலோ" என்பவற்றை உணர்த்த - "அலோஹா" என்ற - ஒரே வார்த்தையைக் கொண்டுள்ளனர். உங்கள் உரையைக் கேட்பவர்கள் அலோஹா என்ற வார்த்தையை அறிந்தவர்களாய் இருந்தால், ஒருவர் மொத்தத்தில் ஒரே வேளையில் "சென்று வருகிறேன்" என்றும் மற்றும் "ஹலோ" என்றும் எவ்வாறு கூறமுடியும் என்பதற்கு ஒரு விவரிப்பாக அந்த வார்த்தையைப் பயன்படுத்த விரும்பலாம். [9]முந்திய எடுத்துரைப்பில், இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு, யூதேயாவில் இருமுறையும் பின்பு தமது சீஷர்களில் பலருக்கு கலிலேயாக் கடலருகிலும் தரிசனமானதைப் பற்றிப் படித்தோம். மலையின்மீதான இந்தத் தரிசனம் முன்னேற்பாடு செய்யப்பட்ட தரிசனமாக இருந்தது என்பது உறுதி. [10]கலிலேயாவில் வாழ்ந்தவர்கள் பஸ்கா பண்டிகை முடிந்தபின் தங்கள் வீடுகளுக்குத் திரும்பியிருப்பார்கள்.

[11]முன்தீர்மானம் செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தைப் பற்றி மத்தேயு கூறும் விவரத்தில் பதினொருவரை மாத்திரம் குறிப்பிடுகின்றார். இருப்பினும், யோவான்

20:19-26 வசனப் பகுதியானது, இயேசு மேல்வீட்டில் தரிசனமானபோது பதினொருவர் மாத்திரம் அங்கிருந்ததாகக் கருத்தை ஏற்படுத்துகிறது - மற்றும் லூக்கா 24:33ல் இருந்து, அங்கு மற்றவர்களும் இருந்தனர் என்று நாம் அறிகின்றோம். [12]கொரிந்தியருக்கு முதல் நிருபம், உயிர்த்தெழுதல் நடைபெற்று இருபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்குப் பின்பு, கி.பி. 57ம் ஆண்டுவாக்கில் எழுதப்பட்டது, ஆனால் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவரைக் கண்டவர்களில் பலர் அதைப் பற்றிக் கூறக்கூடிய வகையில் அப்போதும் உயிருடன் இருந்தனர். [13]இந்த வசனப்பகுதியில், "நித்திரையடைந்தார்கள்" என்பது "மரித்தார்கள்" என்பதை நயம்பட உரைத்தலாக உள்ளது. [14]அடுத்த வசனமான மத்தேயு 28:18, "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி" என்று கூறுகிறது. இது, அவர்கள் முதலில் அவரைக் கண்ட போது, அவர் சற்றுத் தூரத்தில் இருந்தார் என்று சுட்டிக்காண்பிக்கலாம். [15]யூதேயாவில் இயேசு அப்போஸ்தலர்களுடன் பூட்டப்பட்ட அறைக்குள் இருந்தபோது, இந்தக் கட்டளை பற்றிய குறிப்புகள் தரப்பட்டிருந்தன. இந்தப் புத்தகத்தில் உள்ள "உங்களை நம்பச்செய்ய எது தேவை?" என்ற பாடத்தில் யோவான் 20:21-23க்கான குறிப்புகளைக் காணவும். [16]முன்பே குறிப்பிடப்பட்டபடி, மாற்கு சுவிசேஷ விவரத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டால், யூதேயாவில் பூட்டப்பட்ட அறைக்குள் இயேசு தரிசனமானது, பிரதான கட்டளை மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவை ஒன்று மற்றொன்றைத் துரிதமாய்ப் பின்பற்றி நடந்ததாகக் காணப்படும். பூட்டப்பட்ட அறைக்குள்ளாக இயேசு தரிசனமாகி நாற்பது நாட்களுக்குப் பின்பு அவர் பரத்துக்கேறினார் என்று நாம் அறிந்திருப்பதால், பிரதான கட்டளை பற்றிய மாற்கு சுவிசேஷ விவரமானது பூட்டப்பட்ட அறைக்குள் தரிசனத்திற்குப் பிந்தியதாக அதில் கூறப்படும் வேளைக்கும் சற்றுப் பின்பே வந்திருக்கும் என்பது சாத்தியமானதும் நிகழ்தகவுள்ளதாகவும் கூட இருக்கிறது. மாற்கு 16:15, 16ல் உள்ளவற்றை இயேசு மத்தேயு 28:18-20ல் கூறியதிலிருந்து ஒரு மாறுபட்ட வேளையில் கூறியிருக்கவும் சாத்தியக்கூறுள்ளது; ஆனால் இவ்வார்த்தைகள் ஒன்றாகக் கூட்டிப் படிக்கப் படுமளவுக்கு ஒரே மாதிரியானவைகளாக உள்ளன. [17]ஞானஸ்நானத்தின் அவசியம் பற்றிய இவ்வசனத்தின் எளிய போதனையானது சிலரைக் கவலையடையச் செய்கிறது. அவர்கள், "இது, 'ஞானஸ்நானம் பெறாதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்' என்று கூறுவதில்லையே" என்று மறுக்கின்றனர். [18]The KJV has "and" instead of "for," but the manuscript evidence favors the word "for." [19]One of the "alls" is imbedded in the word "always." [20]Geoffrey W. Bromiley, ed., *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 239.

[21]"சீஷன்" என்ற வார்த்தை பற்றிய கலந்துரையாடல் ஒன்றை "கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "சீஷத்துவத்திற்கு அழைப்பு" என்ற பாடத்தில் காணவும். [22]பிரதான கட்டளையில் விசுவாசத்தை அறிக்கையிடுதல் பற்றிக் குறிப்பிடப்படவில்லையென்றாலும், இது புரிந்துகொள்ளப்பட வேண்டும். [23]யாரேனும் ஒருவரை ஞானஸ்நானப்படுத்தும்போது (அங்கிருக்கும் யாவரும் நடப்பதென்ன என்பதை அறிந்துகொள்ளும்படிக்கு) இவ்வார்த்தைகளைக் கூறுவதில் மதிப்புள்ளது, ஆனால் இவ்வார்த்தைகள், நாம் ஞானஸ்நானம் பெறுகையில் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோருடன் ஒரு புதிய உறவில் பிரவேசிக்கின்றோம் என்ற மனப்பதிவை ஏற்படுத்துவதை நோக்கங் கொண்டுள்ளனவே தவிர, இவைகள் ஞானஸ்நானச் சூத்திரம் என்பதை நோக்கங் கொண்டிருப்பதில்லை. தற்செயலாக, இது தேவத்துவத்தில் உள்ள மூன்று நபர்களைப் பற்றி வேத வசனங்களில் உள்ள தெளிவான கூற்றுகளில் ஒன்றாக உள்ளது. [24]நான் வாழும் சமூகத்தில், "நாமத்தினாலே" என்ற சொற்றொடர்,

“அதிகாரத்தினாலே” என்று அர்த்தப்பட முடியும். எடுத்துக்காட்டாக, ஒரு காவலர் “சட்டத்தின் பெயராலே அதைத் திறந்து காண்பி” என்று கூறும்போது, அவர் ‘‘சட்டத்தின் அதிகாரத்தை’’ அர்த்தப்படுத்துகின்றார். மத்தேயு 28:19ல் “நாமத்தினாலே” என்பது “அதிகாரத்தினாலே” என்பதை விட அதிகமானவற்றை அர்த்தப்படுத்துகிறது, ஆனால் அந்தக் கருத்து உள்ளடக்கப்படும். [25]தண்ணீருக்குள் முழுகாட்டப்படுதலே ஞானஸ்நானமாக உள்ளது என்பது பற்றி “கிறிஸ்துவின் வாழ்வு, 1” என்ற புத்தகத்தில் “சமீபித்து இருக்கிறது” என்ற பாடத்தில் காணவும். [26]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 357. [27]Quoted in Philip Yancey, *The Jesus I Never Knew* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1995), 226. டேன்டெலியன் என்ற தாவரம் ஐரோப்பாவில் இருந்து வந்ததாகும். இதன் மஞ்சள் நிற மலர்களைத் தொடர்ந்து, ஒரு மங்கிய வெள்ளை நிறமான பந்துபோன்ற விதைத் தலை இருக்கும். காற்று (அல்லது ஒரு சுவாசம்) இந்தப் பந்தை மென்மயிர் போன்ற நூற்றுக்கணக்கான விதைகளைப் பிரிக்கச் செய்து, அதைக் காற்றானது தூரத்தில் பரவலாகச் சிதறச் செய்யும். நமது தமிழ் நாட்டில் உள்ள எருக்களம் செடியின் விதைகள் பரவுவதை நாம் இவ்விடத்தில் பயன்படுத்தலாம். [28]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 764. [29]‘‘நாட்கள்’’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது (*aion* என்பதன் ஒரு வடிவம்) “காலத்தின் ஒருவேளை” என்று சுட்டிக் காண்பிக்கிறது, மற்றும் இது பல்வேறு அர்த்தத்தின் நிழல்களைக் கொண்டிருக்கக் கூடும். பிரதான கட்டளையின் சந்தர்ப்பப் பொருளில், இது கிறிஸ்தவ யுகத்தைக் குறிக்கிறது. KJVயில் “unto the end of the world” என்று தரவழைக்கப்பட்டுள்ளது இதே விஷயத்தையே அடிப்படையில் அர்த்தப்படுத்துகிறது. [30]D. W. Cleverley Ford, *Preaching the Risen Christ* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1988), 83.

[31]சந்தர்ப்பப் பொருளில், இயேசு இந்த வார்த்தைகளைப் (மாற். 16:14) பேசியபோது, ‘‘பதினொருவரிடத்தில்’’ இவற்றைப் பேசினார், மற்றும் அதே சந்தர்ப்பப் பொருளில், பிற்பாடு அந்தப் பதினொருவர் (அப்போஸ்தலர்கள்) தான் இந்த அடையாளங்களைச் செய்யக் கூடியவர்களாய் இருந்தனர் (மாற். 16:20). சிலர், மாற்கு 16:17, 18ஐ ஒவ்வொரு விசுவாசிக்கும் நடைமுறைப்படுத்தி இவ்வசனப் பகுதிக்கு அவமதிப்பை [disservice] செய்துள்ளனர் (இதன் ஒரு விளைவாக, வினோத மான வகையில் பாம்புகளைக் கையாளும் மதப்பிரிவொன்று ஏற்பட்டுள்ளது). மாற்கு 16:17, 18ஐப் பற்றிய சுருக்கமான விளக்கங்களுக்கு, இந்தப் பாடத்தின் முடிவில் உள்ள குறிப்புகளைக் காணவும். [32]இங்கு தனி வகைப்பட்ட சில உதாரணங்கள் தரப்படுகின்றன: பிசாசுகளைத் துரத்துதல் பற்றி, அப். 16:16-18ஐக் காணவும்; நவமான (அவர்கள் படித்து அறிந்திராத) பாஷைகளில் பேசுதல் பற்றி அப். 2:1-8ஐக் காணவும். பாம்புகளை கைகளில் எடுத்தலைக் குறித்து அப். 28:2-5 வசனங்களைக் காணவும். வியாதியஸ்தர்களை குணமாக்குதலைக் குறித்து அப். 3:1-8 வசனங்களைக் காணவும். எந்த ஒரு அப்போஸ்தலரும் சாவுக்கேதுவானதை (விஷத்தை) குடித்தல் பற்றிய குறிப்பிட்ட உதாரணம் எதையும் நாம் கொண்டிருப்பதில்லை, ஆனால் தனிநபர்களை விஷம் குடிக்கச் செய்து மரணதண்டனை நிறைவேற்றுதல் என்பது பொதுவான பழக்கமாய் இருந்தது என்று நாம் வரலாற்றிலிருந்து அறிகின்றோம். [33]இயேசுவுடன் பிறந்தவர்களில் யாக்கோபு முதல்வர் என்பதால் (மத். 13:55; மாற். 6:3), இவர் மரியாளின் இரண்டாவது மகன் என்று யூகிக்கப்படுகின்றார். [34]“யூதா’’ என்பது அநேகமாக “யூதாஸ்’’ என்பதின் சுருக்கமான வடிவமாக இருக்கலாம் (மத். 13:55ஐக் காணவும்). [35]குறிப்பு எண் 1ஐக் காணவும். நமது படிப்பின் நோக்கத்திற்காக, நான் லூக்கா 24:44-49ன்

*வார்த்தைகளை அப். 1:3-8ல் உள்ள லூக்காவின் விவரத்துடன் ஒன்று கலப்பேன். 1 கொரிந்தியர் 15:8ல் உள்ள உயிர்த்தெழுதலுக்குப் பின்னான தரிசனங்களின் பட்டியல், தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் சவுல் அல்லது பவுலுக்குத் தரப்பட்ட தரிசனத்துடன் முடிகிறது. இது இயேசு பரத்துக்கேறிப் பல ஆண்டுகளுக்குப் பின்பு நடைபெற்றதால், இது நாற்பது நாட்களில் நடைபெற்ற தரிசனங்களில் உள்ளடக்கப்படவில்லை. [36]கடந்த கால வினைச் சொல்லின் பயன்பாடு ஆர்வத்திற்குரியதாக உள்ளது. இது, "எனது மரணத்திற்கு முன்பு நான் உங்களுடன் இருந்த நாட்களில்'' என்று அர்த்தப்பட முடியும், ஆனால் இயேசுவின் புறப்பாட்டிற்கான வேளையானது நெருங்கியிருந்தபடியால், அவர் கடந்த கால வினைச் சொல்லைப் பயன்படுத்தியிருக்கலாம். நடைமுறை நோக்கங்கள் யாவற்றிற்காகவும் அவர் ஏற்கனவே சென்றிருந்தார். [37]சுவிசேஷ விவரங்களின் மற்ற எழுத்தாளர்களைப் போலவே லூக்காவும், இயேசுவின் வாழ்வின் கடைசியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஒன்றுகலந்திருந்தார். இவ்விதமாக, லூக்கா 24:44-49ன் உரையானது, அவர் உயிர்த்தெழுந்த நாளில் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமானபோது நடைபெற்றதுபோல் தோன்றலாம். இருப்பினும், அடுத்து வரும் 50ம் வசனமானது, "பின்பு'' என்று தொடங்குவதைக் கவனியுங்கள், இது இந்த உரையானது பரத்துக்கேறுவதற்குச் சற்றே முன்பு நடைபெற்றதைச் சுட்டிக்காண்பிக்கிறது. அவ்விடத்தில்தான் நாம் இதை வைத்துள்ளோம். [38]''விசுவாசம் என்பது சிலவேளைகளில் வாழ்வின் முழுமையான ஒப்புக் கொடுத்தலை உள்ளடக்கப் பயன்படுத்தப்படுவதுபோலவே, இங்கு மனந்திரும்புதல் என்பது எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது … இவ்விடத்தில் மனந்திரும்புதல் என்பது தனிநபர் தேவனிடத்தில் முற்றிலுமாகத் திரும்புதல் என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது"* (R. C. Foster, *Studies in the Life of Christ* [Grand Rapids, Mich.: Baker Book House, 1971], 1359). *[39]யோவான் 14:17, 26; 15:26; 16:15 ஆகிய வசனங்களைக் காணவும். [40]மாற்கு 16:19அ-வைக் காணவும்.*

*[41]பரத்துக்கேறுதல் பற்றிய பொதுவான ஒரு கலந்துரையாடலை, இந்தப் புத்தகத்தில் "மகிமையில் எடுத்துக் கொள்ளப்படுதல்" என்ற பிரசங்கத்தில் காணவும். [42]மாற்கு தமது சுவிசேஷ விவரத்தை எழுதிய தேதி பற்றி, "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் "மாற்கு சுவிசேஷம்: சேவகராகிய கிறிஸ்து'' என்ற பாடத்தில் காணவும். லூக்கா அப். நடபடிகள் புத்தகத்தை எழுதிய தேதி பற்றி அதே புத்தகத்தில் "லூக்கா சுவிஷேசம்: மனிதகுமாரனாகிய கிறிஸ்து'' என்ற பாடத்தில் காணவும். [43]வசனத்தை உறுதிப்படுத்துதல் என்பது அற்புதங்களின் ஒரு நோக்கமாக இருந்தது (எபி 2:3, 4 வசனங்களைக் காணவும்) வசனத்தை ஒருமுறை உறுதிப்படுத்திய பின்பு மறுபடி உறுதிப்படுத்தத் தேவையில்லை. இவ்விதமாக, அற்புதங்களுக்கான குறிப்பிட்ட இந்தத் தேவை முடிவு பெற்று விட்டது. [44]மாற்கு 16:17, 18ல் குறிப்பிட்ட அற்புத அடையாளங்கள் பற்றிய இயேசுவின் வாக்குத்தத்தம் அடங்கியுள்ளது. மாற்கு 16:20ம் வசனம், இந்த வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட்டதாகக் கூறுகிறது. இது, இன்றைய நாட்களிலும் நாம் இன்னமும் அந்த அடையாளங்களைக் கொண்டுள்ளோம் என்று "நிரூபிப்பது'' இல்லை. [45]இந்தச் சொற்றொடரமைப்பு, சாலொமோன் அரசரைச் சந்தித்தபோது, சேபாவின் இராஜஸ்திரீ கூறிய வார்த்தைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது (1 இரா. 10:7ஐக் காணவும்). [46]"மூன்று அல்லது அதற்குச் சற்று அதிகமான ஆண்டுகளில்" என்ற சொற்றொடர் கள் பற்றி, லூக்கா 3:23ஐயும் "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் தொடங்கும் "கிறிஸ்துவின் சொந்த ஊழியம் எவ்வளவு நாட்கள் நடைபெற்றது?" என்ற துணைப் பாடத்தையும் காணவும்.* [47]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1484.

# மாற்கு சுவிசேஷத்தின் வழக்கேற்படுத்தும் முடிவு

*மாற்கு 16ன் முடிவைப் பற்றி - குறிப்பாக, வசனம் 9 முதல் 20 வரையுள்ள பகுதியைப் பற்றி - சில கேள்விகள் நிலவுகின்றன என்பதை நீங்கள் அறிந்தோ அல்லது அறியாமலோ இருக்கலாம். KJV மற்றும் NKJV என்ற வேதாகமங்கள் (பெரும்பான்மையான வேத வசனம் என்று அழைக்கப்படுபவற்றின் அடிப்படையில் அமைந்தவை) இவ்வசனங்களை வேத வசனப் பகுதியின் ஒரு பாகமாக தக்க வைத்துள்ளன. இருப்பினும் பெரும்பாலான நவீன மொழிபெயர்ப்புகள் (வெஸ்ட்காட்-ஹோர்ட் மற்றும் அதன் தொடர்புடைய வேத வசனங்கள்), ஒரு பிரச்சனை நிலவுவதைச் சுட்டிக்காண்பிக்கின்றன. எடுத்துக்காட்டாக, NASB வேதாகமம் (இன்றைக்கான சத்தியம் பத்திரிக்கைக்கு இதுவே அடிப்படை வேத வசனமாகப் பயன்படுத்தப் படுகிறது), மாற்கு 16:9-20ஐ அடைப்புக் குறிகளுக்குள் கொண்டுள்ளது, இதைத் தொடர்ந்து "குறுகிய முடிவு" என்று அழைக்கப்படும் பகுதி வருகிறது. எனது NASB வேதாகமப் பிரதியில் வசனம் 9 முதல் 20வரை உள்ள பகுதிக்குப் பின்வரும் மைய-பத்திக் குறிப்பு காணப்படுகிறது: "பழைய கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் வசனம் 9-20 வரையுள்ள பகுதி இருப்பதில்லை"; "ஒரு சில பிந்திய கையெழுத்துப் பிரதிகள் மற்றும் பதிப்புகள் இந்தப் பத்தியைக் கொண்டுள்ளன."*

*ஒருவேளை, இந்தப் பிரச்சனையானது உங்கள் பிரசங்கித்தலிலும் போதித்தலிலும் ஒரு பிரதான கவலைக்குரிய விஷயமாயிராமல் போகலாம் என்பதே இதைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய முதல் விஷயமாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் இணைவைக் கண்டறியக் கூடாத வகையில் அடிப்படை உபதேசம் எதுவும் மாற்கு 16:9-20ல் இருப்பதில்லை. மாற்கு 16ன் முடிவைப் பற்றி அறைகூவல் விடுக்கும் யாருடனாவது நீங்கள் வேதாகமத்தைப் படிக்க வேண்டும் என்றால், கலந்துரையாடலின்கீழ் உள்ள பாடக்கருத்தைப் பற்றிப் போதிக்கிற, வழக்கிற்கு உட்படாத வசனப் பகுதிகளை மாத்திரம் பயன்படுத்துங்கள்.*

*மற்றும், உண்மை நடைமுறையில், மாற்கு 16:9-20ன் உண்மைத் தன்மை என்பது, வேதாகமத்தை மும்முரமாகப் படிக்கும் எந்தப் படிப்பிற்கும் பாகமாயிருத்தல் என்பது அவசியமற்றதாக உள்ளது. நான் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பிரசங்கித்துக் கொண்டுள்ளேன், நான் எப்போதாவது வசனத்தின் அதிகாரத்துவத்தைத் தற்காக்க வேண்டி யிருந்ததா என்பதைக் குறித்து என்னால் நினைவுகூர இயலவில்லை. விசுவாசத்தினால் மட்டுமே மீட்பு கிடைத்துவிடும் என்று போதிப்பவர் களுடனோ அல்லது இன்றைய நாட்களில் நாம் அற்புதங்களைக் கொண்டுள்ளோம் என்று போதிப்பவர்களுடனோ நாம் வேதாகமத்தைப் படிக்கும்போது, இவ்வசனங்கள், கலந்துரையாடலின் பாகமாக இருக்கப்*

*பெரும்பாலும் வாய்ப்புள்ளது. இந்த இரு குழுக்களிலுமே, மாற்கு 16:9-20 வசனங்கள், தேவனால் ஏவுதல் பெற்ற வேதவசனங்களின் பகுதியா யிருப்பதை விசுவாசியாத எவரொருவரையும் நான் ஒருக்காலும் சந்தித்தது இல்லை.*

*இருந்தபோதிலும், உங்கள் ஊழியத்தில் கேள்விகள் எழும்பலாம், எனவே சில விளக்கங்கள் அவசியமானவைகளாக உள்ளன. பழைய கையெழுத்துப் பிரதிகள், பதிப்புகள் மற்றும் தொடக்க காலக் கிறிஸ்தவர் களின் எழுத்தாக்கங்கள் ஆகியவற்றில் உள்ள ஆதாரத்தின் விவரமான கலந்துரையாடலுக்கு, நீங்கள் வேறு எவ்விடத்திற்காவது செல்ல வேண்டி யிருக்கும், ஆனால் பின்வரும் குறிப்புகள் இப்போதைக்கு போதுமான வையாக இருக்கும். எளிமையாயிருத்தல் என்ற இடர்ப்பாட்டில், நான் எனது கலந்தரையாடலை, மாற்கு சுவிசேஷத்தின் முடிவைப் பற்றிய நான்கு சாத்தியக்கூறுகளுடன் மட்டுப்படுத்துவேன்.*

*சாத்தியக்கூறு #1: மாற்கு, ஏவுதல் பெற்ற தமது விவரத்தை வசனம் 8 உடன் முடித்துக்கொண்டார். இது மிகவும் ஏற்பில்லாததாக உள்ளது. அதிகாரம் 16ஐ வாசியுங்கள், அதன் முதல் வாசகர்களின் இடத்தில் உங்களை இடுங்கள், மற்றும் வசனம் 8ல் நிறுத்துங்கள். பதிவேடு முழுமை யடையாததாகக் காணப்படவில்லையா? சில விஷயங்கள் கூட்டப்படுதல் அவசியம் என்று காணப்படவில்லையா? இந்தப் பாடக் கருத்து தொடர் பான ஒரு கட்டுரையில், தாமஸ் பூமெர்ஷைன் அவர்கள், சாதாரணமாக மாற்கு, "முன்னுரைத்தல் மற்றும் நிறைவேற்றம் என்ற நுணுக்கத்தை" பயன்படுத்தினார் என்று குறிப்பிட்டு, வசனம் 8 உடன் நின்றுவிடுதல் என்பது குறைந்தபட்சம் "[மாற்கு சுவிசேஷப் புத்தகத்தின்] வாசகரை ஏமாற்றம்/சலிப்பு அடைந்தவராக" விட்டுவிடும் என்று கருத்துத் தெரிவித்தார்.[1]*

*சாத்தியக்கூறு #2: மாற்கு சுவிசேஷத்தின் தோற்றக் கால முடிவு, தொடக்க கால கையெழுத்துப் பிரதிகளில் ஒன்று அல்லது அதற்கு அதிகமானவற்றிலிருந்து காணாமற் போயிருந்தது,[2] மற்றும் எந்த முடிவு இருக்க வேண்டும் என்பது பற்றி நாம் கருத்து எதையும் கொண்டிருப்ப தில்லை. மேற்கூறப்பட்ட கூற்றின் முதல்பகுதியானது ஒரு தனிச்சிறந்த சாத்தியக்கூறாக உள்ளது. தோல் சுருளாகவோ அல்லது (புத்தக) வடிவிலோ இருந்த கையெழுத்துப் பிரதியின் கடைசிப் பக்கம் எவ்வாறு கிழிந்து அல்லது தொலைந்து போயிருக்கும் என்பதைக் காணுதல் கடினமானதாக இருப்ப தில்லை. (எனது நூலகத்தில் பல புத்தகங்களில் ஒரு சில பக்கங்கள் தொலைந்து போயிருப்பதை நான் கண்டுள்ளேன்.) இது, மிகப் பழைய "முழுமையான" இரு கையெழுத்துப் பிரதிகள் (இவை நான்காம் நூற்றாண்டில் இருந்ததாகத் தேதியிடப்பட்டவை) இந்த முடிவைக் கொண்டிராதது ஏன் என்பதற்கு மிகவும் தர்க்கப் பொருத்தமான விளக்கமாக உள்ளது. இருப்பினும், முடிவுப் பகுதி தொலைந்து போயிற்று, எனவே அதை அறிய இயலாது என்ற கருத்தானது நம்மில் சிலருக்கு ஒப்பேறக்கூடிய தெரிவாக இருப்பதில்லை. தேவன் தமது ஏவுதல் பெற்ற வசனத்தை அருளிரக்கத்துடன் பாதுகாத்து, அதை அழிவினின்று காக்கின்*

றார் என்றே நான் நம்புகின்றேன் (1 பேது. 1:23-25).

*சாத்தியக்கூறு #3:* "குறுகிய முடிவு" என்று அழைக்கப்படும் முடிவானது ஆவியானவரால் ஏவுதல் பெற்ற மாற்கு சுவிசேஷத்தின் முடிவாக உள்ளது. இந்த முடிவு உங்கள் வேதாகமத்தில் இல்லையென்றால், அது எனது NASB வேதாகமத்தில் உள்ளதுபோல் பின்வருமாறு வாசிக்கப்படும்:

> And they [the women] promptly reported all these instructions to Peter and his companions. And after that, Jesus Himself sent out through them from east to west the sacred and imperishable proclamation of eternal salvation.

பிந்திய ஒரு சில கையெழுத்துப் பிரதிகள் மற்றும் பதிப்புகளில் இந்த முடிவு உள்ளது, ஆனால் ஜேக் லூயிஸ் அவர்கள், ''குறுகிய முடிவிற்கான ஆதாரமானது, இந்த முடிவை மாற்கு எழுதினார் என்று எந்த ஒரு கல்வியாளரும் வாதிடக்கூடாதபடி மிகவும் சிறுமையானதாக உள்ளது" என்று சுட்டிக்காண்பித்தார்.[3] மைலோ கோன்னிக் அவர்கள், "பயிற்சியற்ற ஒரு வாசகரும்கூட, இந்த பாணியும் வார்த்தையமைப்பும் மாற்கு சுவிசேஷத்தின் மூலநடையிலிருப்பவையல்ல என்று கூறமுடியும்" என்று நம்பினார்.[4] முடிவைப் பற்றிய ஒவ்வொரு விஷயமும், இது, திருப்தியற்ற வேதபாரகர் ஒருவர் வசனம் 8உடன் முடிவடைந்த கையெழுத்துப் பிரதியை நகல் எடுக்கையில் ''இணைத்துச் சேர்த்த'' முடிவாக உள்ளது என்று அடையாளப்படுத்துகிறது.

*சாத்தியக்கூறு #4:* மாற்கு 16:9-20 வசனப் பகுதியானது இப்புத்தகத்தின் தோற்றக்கால முடிவாக உள்ளது. இது, ஆவியானவரால் ஏவுதல் பெற்றது மற்றும் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்துதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் "பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோ. 3:16) என்ற வகையில் உள்ளது. நான் ஏற்கனவே, கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய நமது படிப்பின் கடைசிப் பாடங்கள் மற்றும் பிரசங்கங்களில் இவ்வசனங்களை உள்ளடக்கியதினால் இந்தச் சாத்தியக்கூற்றை நான் தேர்ந்து கொண்டதைச் சுட்டிக் காண்பித்தேன்.

இந்த விஷயம் பற்றி உங்கள் சொந்த மனதை நீங்கள் சரிசெய்து கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. முன்பே சுட்டிக்காண்பிக்கப் பட்டபடி, மாற்கு 16:9-20ல், புதிய ஏற்பாட்டில் வேறெவ்விடத்திலும் காணப்படக்கூடாத அத்தியாவசியமான உபதேசம் எதுவும் இல்லை, நான் கொண்டுள்ள அதே நிலைப்பாட்டை நீங்களும் கொண்டிருக்க வேண்டும் என்பது அவசியமற்றதாக உள்ளது. பழமைவாதக் கல்வியாளர்கள் பலர், இந்தக் கேள்வியை தீர்க்கப்படாத ஒரு இரகசியமாக விட்டு வைப்பதைத் தேர்ந்துகொள்கின்றனர்.[5]

இங்கு ஆழ்ந்து சிந்திக்கச் சில சிந்தனைகள் உள்ளன. "நீண்ட முடிவு" என்று அழைக்கப்படுவது (மாற். 16:9-20) மிகவும் பழையதாக உள்ளது. ஜான் F. கார்ட்டர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> ... இவ்வசனப்பகுதியானது மாறுபாடுகளுடன் இருப்பினும்கூட,

[இதைக் கொண்டிராத] மற்ற இரு கையெழுத்துப் பிரதிகள், மற்றும் கிரேக்க மொழி பேசாத மக்களின் மொழியில் மொழிபெயர்க்கப் பட்ட மிகப் பழமையான புதிய ஏற்பாடு ஆகியவற்றில் காணப் படுகிறது. இதன் ஒரு பகுதி, இரேனியுஸ் அவர்களால் மேற்கோள் காண்பிக்கப்பட்டு, மாற்குவினால் எழுதப்பட்டதென்று அவரால் குறிப்பிடப்பட்டது, இந்த இரேனியுஸ் அவர்கள் கி.பி. 130-200ல் வாழ்ந்தவரும் அநேகமாக, இங்கு குறிப்பிடப்பட்ட புதிய ஏற்பாட்டின் பழைய பிரதிகள் தயாரிக்கப்படுவதற்கு 150 ஆண்டு களுக்கு முன்னதாக இதை எழுதியவருமாக இருந்தார்.[6]

"பழைய மொழிபெயர்ப்புகள்" பற்றி R. C. ஃபாஸ்ட்டர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

[மற்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட] பதிப்புகளில் இருந்து கிடைக்கிற ஆதாரம் இவ்வசனப்பகுதியை நடைமுறையில் தனிச்சிறந்த வகையில் ஆதரிப்பதாக உள்ளது என்ற உண்மை மிக முக்கியமானதாக உள்ளது ... இந்தப் பதிப்புகள் மிகத் தொடக்க காலத்திலேயே, அதாவது இன்று நமக்குக் கிடைக்கக் கூடிய ஏராளமான கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளின் திரளான எண்ணிக்கையை விடப் பழமையானவைகளாக உள்ளன.[7]

"நீண்ட முடிவு"க்கு எதிராக மறுப்புகள் பலவற்றைக் கூற முடியும்,[8] ஆனால் அவற்றில் எதுவும் தீர்மானமானதாக இருப்பதில்லை. எடுத்துக் காட்டாக, மாற்கு 16:9-20ல் காணப்படுகிற பதினேழு வார்த்தைகளும் சொற்றொடர்களும் புதிய ஏற்பாட்டில் வேறு எவ்விடத்திலும் காணப் படுவதில்லை என்பது ஒரு மறுப்புரையாக உள்ளது. இந்த மறுப்பைப் பற்றி ஃபாஸ்டர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

புரோடஸ் அவர்கள், மாற்கு சுவிசேஷத்தில் இப்பகுதிக்கு முந்தியதும் ஒருக்காலும் கேள்வி எழுப்பப்படாததுமான இருபது வசனங்களை எடுத்துக் கொண்டு, அதிலும் புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் காணப்படாத, மிகச் சரியாகப் பதினேழு வார்த்தைகளைக் கண்டறிந்தார். மெக்கார்வி அவர்கள் லூக்கா சுவிசேஷத்தில் கேள்விக்கு அப்பாற்பட்டதாக உள்ள கடைசி பன்னிரண்டு வசனங் களை எடுத்துக்கொண்டு அதில் ஒன்பது புதிய வார்த்தைகளைக் கண்டார்.[9]

கார்ட்டர் அவர்களிடமிருந்து தழுவப்பட்ட ஒரு மேற்கோளுடன் நமது பாடத்தை முடிக்க என்னை அனுமதியுங்கள்:

என்னால் எல்லா சிரமங்களையும் உணர்ந்தறிய முடிகிறது ... ; ஆனால் ஏவுதல் பெற்ற பரிசுத்த ஆவியானவர், தொடக்க நாட்களில் இருந்தே புதிய ஏற்பாட்டைப் பயன்படுத்தியிருப்பதால், இந்த விஷயத்தைக் கிறிஸ்தவர்களின் வேதாகமங்களில் உள்ளடக்குவதற்கு அனுமதித்தார், எனவே இது ஏவுதல் பெற்றதாகவும் அதிகாரத்துவம் உடையதாகவும்

*எனக்குக் காணப்படுகிறது [இது தோற்றக் கால முடிவாக இருப்பினும் இல்லாதிருப்பினும்], மாற்கு தமது வாழ்வின் பிற்பகுதியில் இதைத் தமது தோற்றக் கால எழுத்துப் பணியுடன் சேர்த்திருப்பினும் அல்லது அப்போஸ்தலர்களின் காலத்தில் வேறு யாரோ இதைச் சேர்த்திருப்பினும் ... ஆவியானவர் மற்றவற்றை ஏவியுள்ளதுபோலவே இந்தக் கூடுதலான தகவல்களையும் (இது அவ்வாறு இருந்ததென்றால்) ஏவியுள்ளார்.*[10]

---

*குறிப்புகள்*

[1]Thomas E. Boomershine, "Mark 16:8 and the Apostolic Commision," *Journal of Biblical Literature* 100 (June 1981): 225-39. Quoted in Jack P. Lewis, "The Ending of Mark," *Harding University Lectures* (1988), 600. [2]*மூலக் கையெழுத்துப் பிரதிகளை ("சுய எழுத்துப்'' பிரதிகளை) நமக்காகப் பத்திரப்படுத்தி வைப்பதைப் பரிசுத்த ஆவியானவர் பொருத்தமானதாகக் காணவில்லை.* [3]Lewis, 598. [4]C. Milo Connick, *Jesus: The Man, the Mission and the Message*, 2d. ed. (Englewood Cliffs, N.J.: Prentice-Hall, 1974), 405. [5]*இது ஹார்டிங் பல்கலைக்கழகத்தில் ஜேக் P. லூயிஸ் அவர்களால் 1988ல் தரப்பட்ட ஒரு விரிவுரையில் பெறப்பட்ட முடிவாக உள்ளது* (Lewis, 597-603). [6]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 347. [7]R. C. Foster, *Studies in the Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1971), 1358. [8]*இந்த முடிவு மிகப் பழைய முழுமையான கையெழுத்துப் பிரதிகள் இரண்டில் காணப்படுவதில்லை என்ற உண்மையுடன் கூடுதலாக, இது தொடக்க காலக் கிறிஸ்தவ எழுத்தாளர்களில் முக்கியமான பலருக்கு அறியப்படாததாக இருந்தது. நான் சந்தேகப்படுகிறபடி, தோற்ற கால முடிவுப் பகுதியானது மிகத் தொடக்க காலக் கையெழுத்துப் பிரதிகள் ஒன்று அல்லது அதற்கு அதிகமானவற்றில் இருந்து தொலைந்து போயிருந்தால், சில எழுத்தாளர்கள் அதை அறியாதது ஏன் என்பதற்கு இது விளக்கம் தரக்கூடும்.* [9]Foster, 1358. [10]*அறியப்படாத ஆனால் ஏவுதல் பெற்ற எழுத்தாளர் ஒருவர் ஒரு எழுத்துப் பணியில் கூடுதல் தகவலைச் சேர்த்தது பற்றிய பழைய ஏற்பாட்டு உதாரணம் ஒன்றிற்கு, உபாகமத்தின் முடிவுப் பகுதியைக் காணவும். இதில் அந்தப் புத்தகத்தின் அடிப்படை எழுத்தாளரான மோசேயின் மரணம் பற்றிக் கூறப்படுகிறது (விசேஷமாக, 34:5, 6ஐக் கவனிக்கவும்). மோசே தமது மரணத்தைக் குறித்து ஏவுதலினால் எழுதியிருக்கக் கூடும், ஆனால் இன்னொரு எழுத்தாளர் (அநேகமாக யோசுவா) இந்தக் கடைசி வரிகளை எழுதினார் என்பதே ஏற்புடையதாக உள்ளது.*

## 97

# “மகிமையில் எடுத்துக் கொள்ளப்படுதல்”[1]

## மாற். 16:19; லூக். 24:50-53; அப். 1:9-12, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*நாம் கிறிஸ்துவின் [பூமிக்குரிய] வாழ்வினுடைய இயல்பான முடிவுக்கு வந்து சேர்ந்துள்ளோம்: அவர் பரத்துக்கேறுதல். இயேசு தமது சீஷர்களுக்குக் கூறிய கடைசி வார்த்தைகளில், அவரது பாடுகளைத் தொடர்ந்து அவர் மகிமைப்படுதல் வரும் என்று கூறியிருந்தார் - இது அவர் பரத்துக்கேறிய போது நடைபெற்றது: “கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா?” (லூக். 24:26). “கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி ..... அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி” செய்ததில் தேவனுடைய வல்லமையின் மாபெரும் வெளிப்பாடு இருந்தது என்று பவுல் எழுதினார் (எபே. 1:19-21).*

*கிறிஸ்து பரலோகத்திலிருந்து வந்தார் என்பதால் அவர் திரும்பி செல்லவேண்டும் என்பது சரியானதாகக் காணப்படுவதால் பரத்துக்கேறுதல் என்பதே அவரது [பூமிக்குரிய] வாழ்வின் இயல்பான முடிவாக உள்ளது. தேவன், “நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக” என்று கூறியபோது (ஆதி. 1:26அ) எதை அர்த்தப் படுத்தினாரோ, அதை இயேசுவின் வாழ்வு செயல்விளக்கப் படுத்தியபடி யால், இது இயல்பான முடிவாக உள்ளது. விஷயம் அப்படியிருக்கும் என்றால், ஏதேன் தோட்டத்தில் ஒரு காலத்தில் மனிதன் மகிழ்வுடன் அனு பவித்திருந்த தேவனுடன் முழுமையான ஐக்கியம் கொள்ளுதல் என்பதைக் கொண்டிருக்க இயேசு மீண்டும் [பரலோகம்] திரும்புவார் என்பது கருத்தை ஏற்படுத்துகிறது.*

*பரத்துக்கேறுதலைப் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை நாம் படிக்கையில், அதை முற்றிலுமாக நம்மால் புரிந்துகொள்ள இயலாது என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். எடுத்துக்காட்டாக, பரலோக வாயில்களில் நுழையும்படிக்கு இயேசுவின் உயிர்த்தெழுந்த (“மாம்சமும் எலும்புகளும்” கொண்ட[2]) உடலானது வேறு எவ்வகையில் மாற்றப் பட்டது? இந்தக் கேள்விக்கோ அல்லது இதைப் போன்று கேட்கப்படும் மற்ற கேள்விகளுக்கோ புதிய ஏற்பாடு எந்தப் பதிலும் தருவதில்லை. புதிய ஏற்பாடு, பரத்துக்கேறுதலை விவரிப்பதைத் தவிர, அதை விளக்கப்படுத்த*

எவ்வித முயற்சியையும் மேற்கொள்வதில்லை. நடந்த நிகழ்ச்சியை மூன்று வேத வசனப் பகுதிகள் எடுத்துரைக்கின்றன:

> பின்பு அவர் பெத்தானியாவரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டுபோய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக் குத் திரும்பி வந்[தனர்] (லூக். 24:50-52).

> இவைகளை அவர் சொன்ன பின்பு, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று: "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத் தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்றார்கள்.
>
> அப்பொழுது அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய் ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரத்திலிருக்கிற ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள் (அப். 1:9-12).

> இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார் (மாற். 16:19).

இந்தச் சுருக்கமான விவரங்களுடன் கூடுதலாக, இந்த நிகழ்ச்சியைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் பெருக்கப்பட்ட - நேரடியான மற்றும் மறைமுகமான - குறிப்புகள் உள்ளன. இங்கு சில மாதிரிகள் உள்ளன:

- முதல் சுவிசேஷப் பிரசங்கத்தில் பேதுரு, "அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டார்" என்று கூறினார் (அப். 2:33).
- பேதுரு, கிறிஸ்துவைப் பற்றிய தமது இரண்டாவது பிரசங்கத்தில், "... தேவன் ... உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கிறிஸ்துவைப் பற்றிப் பேசினார்[3] (அப். 3:21).
- பிசீதியாவின் அந்தியோகியாவிலுள்ள ஜெப ஆலயத்தில் பவுல் தமது பிரசங்கத்தில், "இனி அவர் [இயேசு] அழிவுக்குட்படாதபடிக்கு அவரை மரித்தோரிலிருந்து

எழுப்பினார்" (அப். 13:34) என்று கூறினார்.

- எபேசுவில் இருந்த சபைக்குப் பவுல் எழுதிய நிருபத்தில், பரத்துக்கேறுதல் பற்றிய பின்வரும் விரிவாக்கப்பட்ட குறிப்பை உள்ளடக்கினார்: "ஆதலால், 'அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி,[4] மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார்'[5] என்று சொல்லியிருக்கிறார். ('ஏறினார்' என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா?[6] இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்)" (எபே. 4:8-10).
- வெளி. புத்தகத்தின் 12ம் அதிகாரத்தில், பெண் மற்றும் சிவப்பான பெரிய வலுசர்ப்பம் ஆகியோரைப் பற்றிய தரிசனத்தை நாம் கொண்டுள்ளோம். வசனம் 5ல், இயேசுவின் பிறப்பு மற்றும் அவரது பரத்துக்கேறுதல் ஆகியவற்றின் குறிப்பு தரப்பட்டுள்ளது: "சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும்[7] ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்திடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது."

பரத்துக்கேறுதல் இரண்டு நோக்கங்களை நிறைவேற்றியது: இது கடந்த காலத்தை உச்சக்கட்டத்திற்கு கொண்டு வந்து, எதிர்காலத்திற்காக வழியை ஆயத்தப்படுத்திற்று. இதை இன்னொரு வழியில் கூறுவதென்றால், பரத்துக்கேறுதல் என்பது, இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் உச்சக் கட்டமாகவும், அவரது சீஷர்களின் ஊழியத்திற்கு வழியை ஆயத்தப் படுத்தும் அடுத்த படிநிலையாகவும் இருந்தது. பரத்துக்கேறுதல் இல்லை யென்றால், இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கும், அதன்பின் ஏறக்குறைய ஐம்பது நாட்களுக்குப் பின்பு பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவரின் வருகைக்கும் இடையில் ஒரு இணைப்பு தவறி இருக்கும்.[8] பரத்துக்கேறுதல் என்பது இயேசுவின் பூமிக்குரிய ஊழியம் மற்றும் அதைத் தொடர்ந்த அவரது அப்போஸ்தலர்களின் ஊழியம் ஆகியவற்றிற்கிடையில் தீர்மான மான பிரிநிலையாக உள்ளது.

## கிறிஸ்து மகிமைப்படுதல்

பரத்துக்கேறுதல், இயேசு மகிமையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, கடந்த காலத்தை உச்சக்கட்டப்படுத்திற்று. இயேசு, "கிறிஸ்து ... தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா?" (லூக். 24:26) என்று கூறினார். இயேசு "மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்" என்று பவுல் கூறினார் (1 தீமோ. 3:16). "... தேவன் ... அவருக்கு மகிமையைக்

கொடுத்தார்” என்று கூறினார் (1 பேது. 1:21).

பரத்துக்கேறுதல் என்பது முதலில் திகைப்புக்குரியதாக ஒலித்தாலும், இதுவே கிறிஸ்துவின் ஊழியத்தில் உயர்ந்தபட்ச நிலையாக உள்ளது. இதைப்பற்றி சற்று நேரம் நினைத்துப் பாருங்கள். எது அதிகம் மெய்சிலிர்க்கச் செய்வதாக உள்ளது: குறிப்பிட்ட சில நிபந்தனைகளைச் சந்திப்பதா அல்லது அந்த நிபந்தனைகளைச் சந்திப்பதற்காக செயல்படுவதா?[9] இந்த வேளை வரைக்கும் இரட்சகர், பிரதான ஆசாரியராக மற்றும் ராஜாவாக தாம் செய்யவிருந்த ஊழியத்திற்காகத் தம்மையே ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். பரத்துக்கேறுதல் அந்த ஆயத்தத்திற்கு முடிசூட்டிற்று. பிலிப் யான்சீ அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> [உயிர்த்தெழுதல்] ஞாயிறு சீஷர்களின் வாழ்வில் உணர்வெழுச்சிமிக்க நாளாயிருந்தது என்றால், பரத்துக்கேறுதலின் நாள் இயேசுவின் வாழ்வில் அவ்விதமானதாக இருந்திருக்கலாம். இவ்வளவாக இறங்கி வந்திருந்து இவ்வளவாக விட்டுக்கொடுத்திருந்த சிருஷ்டிகர் இப்போது இல்லம் திரும்பிக் கொண்டிருந்தார். இது, நீண்ட மற்றும் இரத்தம் சிந்திய யுத்தத்திலிருந்து சமுத்திர வழியாக இல்லம் திரும்பும் ஒரு போர்வீரனைப் போல், விண்வெளி வீரர் ஒருவர் தனக்கு நன்கு பழக்கப்பட்ட பூமியின் வான்வெளியை சுவாசிக்கும்படி தனது விண்வெளிக்கலத்தை விடுத்து,[10] கடைசியில் இல்லம் திரும்புவது போல இருந்தது.[11]

**மகிமைப்படுதல்**

இயேசு பரலோகம் திரும்பியபோது எப்படியிருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். பரலோக வட்டாரத்தில் எதிரொலித்திருக்கக் கூடிய சந்தோஷத்தின் ஆரவாரங்களை உங்கள் சிந்தையில் உங்களால் கேட்க முடிகிறதா?

சங்கீதம் 24, மாபெரும் ராஜா ஒருவர் இல்லம் திரும்புகையில் பாடும் வெற்றிப்பாடலாக உள்ளது. இதன் வார்த்தைகள், கர்த்தர் பரலோகம் திரும்புதலுக்கு நடைமுறைப் படுத்தப்படக்கூடும் என்று யாரோ ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். அந்த வசனப்பகுதியைப் பயன்படுத்தி, இயேசு பரத்துக்கேறுகையில் எவ்வாறு இருந்திருக்கலாம் என்பதை காட்சிப் படுத்துங்கள்.

அவர் பரத்துக்கேறுகையில், தூதர்கள் அவரைச் சந்தித்து அவரை அழைத்துச் சென்றிருக்க வேண்டும். அவர் பரலோக நகரத்தை நெருங்கிய வேளையில், அவர்கள் பின்வருமாறு உரத்த குரலில் கூறியிருக்க வேண்டும்: “வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்!” (வ. 7). நகரத்தில் உள்ளவர்கள், “யார் இந்த மகிமையின் ராஜா?” என்று கேட்டிருக்கலாம் (வ. 8அ). இயேசுவுடன் இருந்த தூதர்கள் “அவர் வல்லமையும் பராக்கிரமமு முள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பாராக்கிறமமுமுள்ள கர்த்தராமே” என்று உரத்துக் கூறியிருப்பார்கள் (வ. 8ஆ). பின்பு அவர்கள் மீண்டும், “வாசல்களே உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்,

மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்!" என்று உரத்துக் கூறியிருப்பார்கள் (வ. 9). நகரத்தினுள் இருப்பவர்கள் மீண்டும் ஒருமுறை, "யார் இந்த மகிமையின் ராஜா?" என்று கேட்டிருப்பார்கள் (வ. 10அ). இவ்வேளையில் இயேசுவுடன் இருந்தவர்கள் பின்வரும் கீதத்தைப் பாடியிருப்பார்கள்: "அவர் சேனைகளின் கர்த்தரானவர், அவரே மகிமையின் ராஜா" (வ. 10ஆ).

இயேசு பரலோகத்தின் நுழைவாயில்களில் பிரவேசித்தபோது, அவர் "உலகம் உண்டாவதற்கு முன்" (யோவா. 17:5) பிதாவோடு தாம் பகிர்ந்து கொண்டிருந்த மகிமையைத் திரும்பவும் பெற்றார்.

> ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும்[12] மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலி. 2:9-11).

பரலோகத்தின் எல்லா சேனைகளும் அவரை, மனித குலத்தின் பாவங்களுக்காக அடிக்கப்பட்ட குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி என்று துதிக்கத் தொடங்கினர் (1 பேது. 1:18, 19ஐக் காணவும்). யோவான் பின்வருமாறு எழுதினார்:

> பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்; அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாக வும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது. அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத் தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள் (வெளி. 5:11, 12).

பின்பு தேவன் "அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்தார்" (எபே. 1:20).

### பிரதான ஆசாரியராக

இயேசு பரத்துக்கேறியபோது, அவர் நமது பிரதான ஆசாரியரானார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "வானங்களின்[13] வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால்" என்று எழுதினார் (எபி. 4:14).

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், ஆண்டிற்கு ஒருமுறை - பாவநிவிர்த்தி யின் நாளில் - பிரதான ஆசாரியர், தமது பாவங்களையும் மக்களின் பாவங்களையும் நிவிர்த்தி செய்வதற்காக, மிருகங்களின் இரத்தத்துடன் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பார் (லேவி. 16:2-34ஐக் காணவும்). நமது பிரதான ஆசாரியர் என்ற வகையில் இயேசு பரலோகத்திற்குத்

திரும்புகையில், அவர் நமது பாவங்களுக்கு நிவிர்த்தி செய்வதற்குத் தமது சொந்த இரத்தத்துடன் சென்றார். இதைப் பற்றி எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, ... வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார் (9:11, 12).
>
> அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்து வானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார் (9:24).
>
> இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக் கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து (10:12).

இயேசு நமது மத்தியஸ்தராக இருக்கின்றார் என்பது அவரது பிரதான ஆசாரியத்துவத்தின் இன்னொரு அம்சமாக உள்ளது. பவுல், "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே; ... மனு ஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே" என்று எழுதினார் (1 தீமோ. 2:5, 6). இயேசு இந்தப் பரிவிரக்கமுள்ள பணிப் பொறுப்பில் இருக்கின்றார் என்பது இந்த ஏற்பாட்டின் வியப்பிற்குரிய அம்சமாக உள்ளது:

> நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (எபி. 4:15, 16).

ஒருவேளை இதுவே, இயேசு பரலோகத்திற்குச் சரீர ரீதியாக ஏறிச் செல்வதற்குக் காரணமாக இருக்கலாம். மனிதராக இருக்கும் பாகம் ஒன்று இயேசுவிடத்தில் எப்போதும் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. 1 தீமோத்தேயு 2:6ல் உள்ள "மனுஷர்" என்ற வார்த்தையைக் கவனிக்கவும்: "... ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே ..." பவுல், "மார்ஸ் மேடைப் பிரசங்கத்தில்" இதே விதமான சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்தினார்: தேவன், "ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார், அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" (அப். 17:31). வெளிப்படுத்தின விசேஷம் 4, 5ன் அரியணைக் காட்சியில்,

ஆட்டுக்குட்டியானவர் (இயேசு) "அடிக்கப்பட்டவராக" அரியணைக்கு முன்பு நிற்கின்றார் (வெளி. 5:6) - இது சில வழிமுறையில், அவர் சிலுவையில் அறையப்பட்டதன் அடையாளத்தைப் பரலோகத்திலும் தக்க வைத்திருக்கிறார் என்று சில எழுத்தாளர்களுக்குக் கருத்தைத் தெரிவிக்கிறது.

இயேசு பரத்துக்கேறிய பின்பு, மாம்சமானது எவ்வளவு பலவீனமானது என்பதையோ அல்லது நீங்களும் நானும் இந்த உலகப்பிரகாரமான சரீரங்களில் எவ்வளவாகப் போராடுகின்றோம் என்பதையோ மறந்துவிடவில்லை. நமது பிரதான ஆசாரியர் என்ற வகையில், அவர் நினைவுகூருகின்றார் மற்றும் புரிந்துகொள்ளுகின்றார்![14]

*ராஜாவாக*

இயேசு நமது பிரதான ஆசாரியரானார்; ஆயினும் நாம் "மகிமைப் படுதல்" என்ற வார்த்தையைக் கேட்கும்போது, அநேகமாக நாம், அவர் ராஜாவாக முடிசூட்டப்பட்ட உண்மையை நினைக்கலாம். ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி, "கர்த்தர் [இயேசு] ... பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்" (மாற். 16:19). கிறிஸ்து இப்போது தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கின்றார் என்று வேத வசனங்கள் மீண்டும் மீண்டும் அறிவிக்கின்றன. ஸ்தேவான் மரித்துக் கொண்டிருந்தபோது, "... வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு; அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷ குமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்" (அப். 7:55, 56).[15] எல்லாக் கிறிஸ்தவர்களும், "கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் [தேடவேண்டும்]" என்று பவுல் வேண்டுகோள் விடுத்தார் (கொலோ. 3:1). பேதுரு, "அவர் [இயேசு] பரலோகத்திற்குப் போய்த் தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" என்று எழுதினார் (1 பேது. 3:21, 22).

பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு, அந்த நாளில் ஏற்பட்ட அற்புதமான காட்சிகள் மற்றும் ஒலிகளை, இயேசு தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்திருப்பதால் அவர் கர்த்தராக முடிசூட்டப்பட்டார் என்பதற்கு ஆதாரமாகப் பயன்படுத்தினார்:

> அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும், கேட்கிறதுமாகிய[16] இதைப் பொழிந் தருளினார். தாவீது பரலோகத்திற்கு எழுந்துபோகவில்லையே. நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும், நீர் என் வலதுபாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார் என்று அவனே சொல்லியிருக்கிறான். ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல்

குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் (அப். 2:33-36).

தேவன் இயேசுவை மரித்தோரினின்று உயிர்ப்பித்தார் என்று பவுல் எழுதினார் ...

> ... எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத் தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபே. 1:20-23).

கிறிஸ்து ராஜாவாக முடிசூட்டப்பட்டுத் தமது பிதாவுடன் இணை ஆட்சியாளராக அமர்ந்தபோது அது எவ்வளவு அற்புதமான வேளையாக இருந்திருக்க வேண்டும்! தானியேல் 7ல் தீர்க்கதரிசியின் இராத்தரிசனமானது இயேசு முடிசூட்டப்படுதலைச் சித்தரித்தது என்று பலர் நினைக்கின்றனர்:

> இராத்தரிசனங்களில் நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும் (தானி. 7:13, 14).[17]

இயேசு தாம் பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்பாக, “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும்” தமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதாக உரிமை கோரினார் (மத். 28:18). எல்லாருக்கும் மேலாக “ஒரே கர்த்தர்” இருக்கின்றார் (எபே. 4:5), அவர் இயேசுவாக[18] உள்ளார். இந்த மாபெரும் சத்தியத்தைப் பரத்துக்கேறுதல் நமக்கு நிச்சயப்படுத்துகிறது!

## சீஷர்களை ஆயத்தம் செய்தல்

பரத்துக்கேறுதல் என்பது இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தைப் பொறுத்தமட்டில் ஏறக்குறைய மிகவும் உணர்வெழுச்சியான நாளாக இருந்திருக்கும் என்று நான் முன்பே கருத்துத் தெரிவித்திருந்தேன். இருப்பினும், பரத்துக்கேறுதல் என்பது அவரது பயனுக்காக மாத்திரமின்றி, அது அவரது சீஷர்களுக்கு விசேஷித்த தனிச்சிறப்பையும் கொண்டிருந்தது. மாபெரும் பிரியாவிடை உரையின்போது கிறிஸ்து அவர்களிடத்தில், “... நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்” என்று கூறியிருந்தார் (யோவா. 16:7அ).

*பொறுப்பு மாற்றப்பட்டது*

இயேசு தமது அப்போஸ்தலர்களை விட்டுச் செல்லவிருந்ததாக - மற்றும் அவர்கள் அவரது ஊழியத்தை செயல்படுத்துபவர்களாய் இருக்க வேண்டும் என்பதாக - அவர்களிடம் கூறினார். அவர்களிடத்தில் அவர், "... பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்று கூறினார் (யோவா. 20:21). மேலும் அவர்களிடம், "பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" என்று கூறினார் (அப். 1:8).

ஒரு கணத்திற்கு உங்களை நீங்கள் அப்போஸ்தலர்களின் இடத்தில் வைத்துப் பாருங்கள். கர்த்தர் அவர்களை விட்டுச் செல்வதாக அவர்களிடத்தில் கூறினார், ஆனால் அது எப்போது எங்கேஅல்லது எவ்வாறு நடைபெறும் என்பதை அவர்கள் அறியாதிருந்தனர். நாற்பது நாட்களில் அவருடன் அவர்கள் இருந்த ஒவ்வொரு வேளையிலும், அவர்கள் அநேகமாக, "இதுதான் அந்த வேளையா? இதுதான் அந்த இடமா?" என்று வியந்திருப்பார்கள். ஆயினும் கடைசியில் அவர் பரலோகத்திற்கு எழுந்தருளியதை அவர்கள் மூச்சின்றிக் கவனித்தனர். அவர் மேகங்களில் மறைந்தபோது, இனியும் கேள்வி எதுவும் இருந்திருக்க முடியாது. அவர் சென்றுவிட்டார், உண்மையிலேயே சென்றுவிட்டார்.[19] பொறுப்பு அவர்களிடத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

ஒப்புவமைகள் சிந்தைக்கு வருகின்றன. அவற்றில் ஒன்று இயற்கையில் இருந்து வருகிறது: பரத்துக்கேறுதல் என்பது, ஒரு தாய்ப் பறவை தனது இளம் குஞ்சுகளை கூட்டிலிருந்து தள்ளிவிட்டு, உண்மையில், "நீங்கள் உங்கள் சொந்த வேலையைச் செய்வதற்குரிய காலம் வந்துவிட்டது!" என்று கூறுவதைப் போன்றதாக இருந்தது. இன்னொரு விவரிப்பு சபையிலிருந்தே வருகிறது: பரத்துக்கேறுதல் என்பது, ஒரு ஊழியக்காரர் சபையிடம் , "நான் வீடு திரும்ப வேண்டும்; இப்போது இவ்விடத்தில் உள்ள சபையின் ஊழியம் உங்களைப் பொறுத்ததாக உள்ளது!"

***ஆவியானவர் அருளப்பட்டார்***

பரத்துக்கேறுதல், அப்போஸ்தலர்கள்மீது கர்த்தர் வைத்த மாபெரும் பொறுப்பை அறிவித்தது மட்டுமின்றி, அது அவர்கள் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்குத் தெய்வீகத்துவ உதவியைப் பெறுவதற்கு ஒரு முன்நிபந்தனையாகவும் இருந்தது. தாம் சென்றால் அது அவர்களுக்கு அனுகூலமாயிருக்கும் என்று கூறியபின்பு, தாம் ஏன் செல்ல வேண்டும் என்பதை இயேசு அவர்களுக்குக் கூறியிருந்தார்: "நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்" (யோவா. 16:7ஆ). அவர் "தேற்றரவாளன்" என்று குறிப்பிட்டவர் பரிசுத்த ஆவியானவராக இருந்தார். அவர் ஆளுகை செய்யத் தொடங்காத வரையிலும் அவரால் ஆவியானவரை அனுப்ப முடியாதிருந்தது, மற்றும் அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் அமரத் தொடங்காத வரையிலும் அவரால் ஆளுகை செய்ய முடியாதிருந்தது. அவர், "நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" என்றும் (யோவா. 16:7இ), "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோவா. 16:13அ) என்றும் கூறினார்.

இயேசு தாம் பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்பு தமது சீஷர்களிடத்தில், "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன்; நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்று கூறினார் (லூக். 24:49). அவர்கள் தவறாகப் புரிந்துகொள்ளாதபடி, அவர் கூடுதலாக "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடை [வீர்கள்]" என்றும் கூறினார் (அப். 1:8). அவர்கள் எருசலேமில் பத்துநாட்கள் காத்திருந்தனர், அதன் பின்பு பெந்தெகொஸ்தே என்ற யூதர்களின் பண்டிகை நாளில், பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மீது பலத்தோடே வந்தார்:

> பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள் (அப். 2:1-4).

முன்பே குறிப்பிட்டபடி, பேதுரு, அந்த நாளின் அற்புதமான வெளிப்பாடுகளை, இயேசு ராஜாவாக முடி சூட்டப்பட்டிருந்தார் என்பதற்கு ஆதாரங்களாகப் பயன்படுத்தினார்: "அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" (அப். 2:33). இயேசு, பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பிதாவிடமிருந்து பெற்று, பின்பு அவர் தமது அப்போஸ்தலர்களுக்கு ஆவியானவரை அனுப்பிய வரிசை முறையைக் கவனியுங்கள்.




இவ்விதமாகக் கர்த்தர், அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்திருந்த கனத்த பொறுப்பை அவர்கள் நிறைவேற்றும்படி அவர்களை ஆயத்தம் செய்தார். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி, பேதுரு முதன்முறையாக, சுவிசேஷத்தை அதன் முழு நிறைவுடன் பிரசங்கித்தார் (அப். 2:14-36). ஆவியானவரின் வழிநடத்துதலின்படி பேதுரு, மக்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்குக் கூறினார் (அப். 2:37, 38). மூவாயிரம் பேர் கேள்விப்பட்டு, விசுவாசித்து,

*கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டனர் (அப். 2:41, 47)!*

*இன்றைய நாட்களில் நாம், ஆவியானவரால் ஏவுதல் பெற்ற அதே சுவிசேஷத்தைக் கேள்விப்பட முடியும், ஆவியானவரால் ஏவுதல் பெற்ற அதே சத்தியங்களை விசுவாசிக்க முடியும், ஆவியானவரால் ஏவுதல் பெற்ற அதே கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய முடியும், மற்றும் ஆவியானவரால் ஏவுதல் பெற்ற வசனத்தில் வாசிக்கின்ற அதே ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியும். இவை யாவையுமே, இயேசு "மகிமையில் எடுத்துக்கொள்ளப்பட்ட" காரணத்தினால் விளைந்தன!*

## *முடிவுரை*

*பரத்துக்கேறுதலைப் பற்றி நாம் கூறியிருக்க வேண்டிய யாவற்றையும் உரைத்திருக்கவில்லை, ஆனால் கிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்வின் முடிவின்போது இதன் உச்சகட்ட நிலைப்பாட்டினுடைய மாபெரும் மதிப்பிற்கு நம் ஒவ்வொருவரையும் கொண்டுவருவதற்குப் போதிய அளவு கூறப்பட்டது என்று நான் நம்புகின்றேன். இயேசு இப்போது பரலோகத்தில், தேவனுடைய வலது பாரிசத்தில் இருந்துகொண்டு, தமது ராஜ்யமாகிய சபையில் ஆளுகை செய்துகொண்டு நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கின்றார். விசுவாசிகள் யாவரும் ஆகாயத்தில் இயேசுவைச் சந்திக்கும் நிகழ்ச்சி நடைபெறவிருக்கும் அவரது இரண்டாம் வருகை என்பது அவருக்கு - மற்றும் நமக்கு - இரண்டாவது உச்சபட்ச நிகழ்ச்சியாக இருக்கும். நமது பாடங்களின் முடிவுக்கு நாம் வந்திருக்கையில், நாம் நம்மையே பின்வரும் கேள்வியைக் கேட்டுக்கொள்ள வேண்டும்: "இரண்டாவது வருகைக்கு நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா?"*

*இயேசு ராஜாவாக முடிசூட்டப்படும்படிக்குப் பரலோகம் திரும்பினார். நீங்கள் உங்கள் சொந்த இருதயத்தில் அவரை ராஜாவாக முடிசூட்டியிருக்கின்றீர்களா? நீங்கள் உங்கள் வாழ்வின் கர்த்தரென்று அவரை அறிக்கையிட்டு தாழ்மையான கீழ்ப்படிதலில் உங்கள் வாழ்வை அவருக்கு ஒப்புவித்து இருக்கின்றீர்களா (மாற். 16:15, 16; அப். 2:37, 38)?[20] இதை நீங்கள் செய்திருக்கவில்லையென்றால், இன்றே கூட நீங்கள் இதைச் செய்ய வேண்டும் என்று உங்களுக்காக நான் ஜெபிக்கின்றேன். ஒரே ஒரு ஆத்துமாவாவது கீழ்ப்படிதலுடன் பதில்செயல் செய்தால், இந்தப் பாடங்கள் மற்றும் பிரசங்கங்கள் ஆகியவற்றை தயார் செய்யத் தேவைப் பட்ட நேரம் யாவும் மதிப்புள்ளதாயிருக்கும். ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக!*

## குறிப்புகள்

*இந்தப் பிரசங்கத்தைத் தயார் செய்வதற்குப் பல ஆதாரமூலங்களில் ஆலோசனை பெறப்பட்டது, ஆனால் எனது மூலக்குறிப்புகள் The Crises of the Christ என்ற புத்தகத்தில் பரத்துக்கேறுதல் பற்றிய அத்தியாயங்களின் மற்றும் அந்தத் தொகுப்பின் முடிவு அதிகாரங்களின் அடிப்படையில் அமைந்தன.[21] உரிய இடத்தில் உரியவருக்கு மதிப்பளிக்காதிருந்தால்*

*மீண்டும் ஒருமுறை நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.*

*இந்தப் பாடத்துடன் நான் ஒரு ஃபிளானல் கிராப் எடுத்துரைப்பைப் பயன்படுத்துவதுண்டு, பிரசங்கம் வளர வளர அதில் நான் படத்துண்டுகளை ஒட்டிவைப்பேன். போர்டின் இடது பகுதியானது பரத்துக்கேறுதலில் கவனம் செலுத்தும், வலது பகுதியானது சீஷர்களின்மீது செயல்விளைவு களைச் சித்தரிக்கும். இந்த எடுத்துரைப்பு முழுமையடையும்போது எப்படியிருக்கும் என்பதை ''கிறிஸ்து பரத்துக்கேறுதல்'' என்ற வரைவட்டவணை காண்பிக்கிறது. வர்த்தக ரீதியான ஃபிளானல் கிராப் பைகளில் இருந்து துண்டுப்படங்கள் (1/4 கருப்புக் கரைக் கட்டங்களுடன்) இந்த விவரிப்புகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. இருப்பினும் நீங்கள் (வரைவட்டவணையில் இருப்பதுபோல்) எளிய படங்களை, ஸ்யூட் ஒட்டப்பட்ட காகிதத்தில் வரைந்து கொள்ளவும் முடியும்.*

*இந்தப் பிரசங்கத்தின் அணுகுமுறை பெரும்பாலும் தலைப்பு ரீதியானதாக உள்ளது. பரத்துக்கேறுதல் பற்றிய திறவுகோல் வசனக் குறிப்புகளைக் கொண்டு இதை நீங்கள் ஒரு பொருள்விளக்கப் பிரசங்கமாகப் பிரசங்கிக்க விரும்பலாம்.*

---

*குறிப்புகள்*

*[1]இந்தத் தலைப்பு 1 தீமோத்தேயு 3:16ல் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. [2]லூக்கா 24:39. இந்தப் புத்தகத்தில் "இயேசுவின் உயிர்த்தெழுந்த உடல்" என்ற பாடத்தில் காணவும். [3]"எல்லாம் நிறைவேறித்தீருங்காலம்" என்ற சொற்றொடர், இயேசு திரும்ப வரும்போது - சரீரப் பிரகாரமானவற்றையல்ல ஆனால் ஆவிக்குரிய வகையில் - எல்லாவற்றையும் சரியாக்குதலைக் குறிப்பிடுகிறது. [4]இயேசுவின் பரத்துக்கேறுதல் மற்றும் புதிய ஏற்பாட்டு காலத்தில் இருந்த வெற்றிபெற்ற நாயகர்களின் வெற்றி ஊர்வலங்கள் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு ஒப்பீடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எபேசியர் 4:8ன் மீதான சுருக்கமான விளக்கங்களுக்கு இந்தப் புத்தகத்தில் "நீதிமானுக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற இனிவரும் பாடத்தில் காணவும். [5]இது சங்கீதம் 68:18ல் இருந்து பெறப்பட்ட ஒரு மேற்கோளாக உள்ளது. [6]இது காணப்படாத உலகத்தைக் குறிக்கிற உருவக மொழிநடையாக உள்ளது. இயேசு மரித்தவர்களின் வட்டாரத்தில் இருந்தபோது, அவர் எவ்விடத்தில் இருந்தார் என்பதற்கான ஒரு கலந்துரையாடலை இந்தப் புத்தகத்தில் "ரோமச் சிலுவையில் ஆறு மணிநேரங்கள்" மற்றும் "வரலாற்றில் மிகவும் முக்கியமான மூன்று நாட்கள்" என்ற பாடங்களில் காணவும். "மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்'' என்ற இனிவரும் பாடத்திலும் காணவும். [7]இந்தச் சொற்றொடராக்கம் மேசியாத்துவ (அதாவது கிறிஸ்துவைக் குறிப்பிடுகிற ஒரு) சங்கீதமான, சங்கீதம் 2:9ல் இருந்து வருகிறது. [8]யூதர்களின் (சூரியன் மறைவிலிருந்து சூரியன் மறைவு வரை ஒரு நாளைக் கணக்கிடுதல் என்ற) காலக் கணக்கீட்டின்படி, இயேசு தாம் பஸ்கா உணவை உண்ட அதே நாளில் மரித்தார். பஸ்காவுக்கும் பெந்தெகொஸ்தே நாளுக்கும் இடையில் ஐம்பது நாட்கள் கடந்து சென்றிருந்தன. (லேவி. 23:15, 16 மற்றும் உபா. 16:9 ஆகிய வசனங்களைக் காணவும்.) [9]உங்கள் உரையைக் கேட்பவர்கள் ஒலிம்பிக் விளையாட்டுகள் பற்றி அறிந்திருந்தால், அவர்களிடம் நீங்கள், "எது அதிகம் மெய்சிலிர்ப்புள்ளது: பந்தயத்தில் ஜெயிப்பதா அல்லது வெற்றியாளரின் மேடையில் நின்று தங்கப்பதக்கத்தைப் பெறுவதா?" என்று*

*கேட்க முடியும். [10]இல்லம் திரும்புவதில் உள்ள மகிழ்ச்சியைப் பற்றி உங்கள் உரையைக் கேட்பவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு விவரிப்பைப் பயன்படுத்தவும்.*

[11]Philip Yancey, *The Jesus I Never Knew* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1995), 226. [12]*அந்த நாமம் என்னவாக இருந்தது? இவ்வசனத்தின் அடுத்த பகுதி, "இயேசு" என்பதே அந்தப் பெயர் என்று சுட்டிக்காண்பிக்கிறது. இயேசுவிற்கு இந்தப் பெயர் முன்னதாகவே கொடுக்கப்பட்டது என்று கூறி (மத். 1:21) யாரேனும் மறுத்துரைப்பார்களென்றால், அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை முன் எதிர்பார்த்து அந்தப் பெயரானது அவர் பிறந்தபோதே கொடுக்கப்பட்டது என்பதே விளக்கமாக உள்ளது. இப்போது அது உண்மை நிலையில் கொடுக்கப்பட முடிந்திருந்தது - ஏனெனில் அவர் மீட்பின் ஊழியத்தை நிறைவேற்றியிருந்தார். [13]இது, பறவைகள் இருக்கும் ஆகாயத்தையும், நட்சத்திரங்கள் இருக்கும் ஆகாயத்தையும் கடந்த இயேசு தேவன் இருக்கும் பரலோகத்திற்குச் சென்று சேர்ந்தார் என்பதற்கு ஒரு உருவக மொழிநடையாக இருக்கலாம். [14]இது, இயேசு நமது பாவங்களை தாமாகவே மன்னித்து விடுகின்றார் என்று அர்த்தப்படுத்துவதில்லை, ஆனால் இது, நன்மை செய்தலுக்கு நமது போராட்டங் களை இயேசு அறிந்தவராக நமக்காகப் பரிதபிக்கின்றார் என்று ஆறுதல் படுத்துகிறது. [15]நான் அறிந்த வரையில், இந்த ஒரு வேளையில் மாத்திரமே இயேசு தேவனுடைய வலதுபாரிசத்தில், ''அமர்ந்திருப்பதற்கு'' பதிலாக ''நின்றிருந்தார்'' என்று சித்தரிக்கப்படுகின்றார். இது முதல் கிறிஸ்தவ இரத்த சாட்சியின் மரணத்திற்கு இயேசுவின் [மதிப்புமிக்க] மரியாதையைச் சுட்டிக்காண்பிக்கிறது என்று சிலர் நினைக்கின்றனர். [16]உங்கள் உரையைக் கேட்பவர்கள் இன்றைய நாட்களில் முடிசூட்டுதல்கள் பற்றி அறிந்திருந்தால், அவர்கள் ஒருவேளை (தொலைக்காட்சி வருவதற்கு முந்திய) கடந்த நாட்களில் இருந்து வருகிற இந்த ஒப்பீட்டைப் புரிந்துகொள்வார்கள்: பெரும்பாலான குடிமக்கள், ஒரு புதிய அரசர் முடிசூட்டப்படுவதைக் காண இயலாதிருந்தது; ஆனால் முடிசூட்டப்பட்ட பின்பு, கூட்டத்திலிருந்து யாரேனும் ஒருவர் முன்வந்து, அந்த நிகழ்ச்சி நடைபெற்றுவிட்டது என்று அறிவிப்பார். பின்பு மக்கள் உரத்து சத்தமிட்டு அகமகிழ்வார்கள். அதுபோன்றே, பேதுரு உண்மையில், ஆவியானவரின் வருகையானது, இயேசு ராஜாவாக முடிசூட்டப்பட்டிருந்ததைப் பற்றிய பரலோகத்தின் "அறிவிப்பாக" இருந்தது என்றே கூறினார். [17]தானியேல் 7ல், விவரிக்கப்பட்ட ராஜ்யம் "அழிவடையாது" என்பது மேசியாத்துவ ராஜ்யம்/சபையின் நிலைநாட்டுதல் பற்றிய தானியேல் 2:44ன் தீர்க்கதரிசனத்தைப் போன்றே ஒலிக்கிறது. இந்த வாக்குத்தத்தமானது, மத்தேயு 16:18, 19ல் உள்ள சபை/ராஜ்யத்தின் அழிவுறாத தன்மை பற்றிய வாக்குத்தத்தத்தைப்போன்றும் ஒலிக்கிறது. [18]இயேசுவை "ஆண்டவர்" ("கர்த்தர்") என்று குறிப்பிடுகிற புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகள் எல்லாவற்றையும் நான் பட்டியலிட இயலாது. இங்கு ஒரு சில மாதிரி வசனப்பகுதிகள் தரப்படுகின்றன: அப். 2:36; ரோமர் 1:4; 1 கொரி. 8:5, 6; யாக். 2:1; யூதா 4. [19]அவர்களின் சிந்தைகளில் ஏதேனும் கேள்வி எஞ்சியிருந்ததென்றால், அது ''வெண்வஸ்திரம் தரித்திருந்த இரண்டு மனிதர்களினால்'' அகற்றிப் போடப்பட்டது (அப். 1:10, 11). [20]நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும்போது, கிறிஸ்தவரல்லாதவர்களை ஞானஸ்நானம் பெறும்படி அழைப்பதுடன், உண்மையற்றுப்போயிருக்கும் கிறிஸ்தவர்களை மீளக்கட்டுவிக்கப்படுதலுக்கு உட்படும்படி உற்சாகப்படுத்தவும் செய்யலாம் (அப். 8:22; யாக். 5:16).*

[21]G. Campbell Morgan, *The Crises of the Christ* (New York.: Fleming H. Revell Co., 1936), 385-449.


கிறிஸ்து பரத்துக்கேறுதல்
அப். 1:6-11; 2:1-4
ஆவியானவர்
கிறிஸ்து மகிமைப்படுதல்
பிரதான ஆசாரியராக
ராஜாவாக
சீஷர்கள்
ஆயத்தம்பண்ணப்படுதல்
பொறுப்பு மாற்றப்பட்டது
ஆவி அருளப்பட்டது

98

# ராஜா வருகின்றார்!

## அப். 1:10, 11

## ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*"ராஜா வருகின்றார்!" என்ற ஆய்வுக்கருத்து பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் முழுவதிலும் எதிரொலிக்கிறது. பழைய ஏற்பாட்டில், "ராஜா வருகின்றார்!" என்பது சிந்தனையாக இருந்தது. சுவிசேஷ விவரங்களில், "ராஜா இங்கு இருக்கின்ரூர்!" என்பது செய்தியாக இருந்தது. புதிய ஏற்பாட்டில் எஞ்சிய பகுதியில், "ராஜா மீண்டும் வருகின்றார்!" என்பது ஆய்வுக்கருத்தாக உள்ளது.*[1]

### பழைய ஏற்பாடு: "ராஜா வருகின்றார்!"

**முன்னெதிர்பார்ப்பு பற்றியெறிதல்**

பழைய ஏற்பாட்டில், மனிதன் பாவம் செய்தபின்பு, வரவிருந்த ஒரு இரட்சகரைப் பற்றிய வாக்குத்தத்தங்களின் வரிசைத் தொடர் ஒன்றைத் தேவன் ஏற்படுத்தினார். "கிறிஸ்து ... மனிதர்களை இரட்சிக்க வருவார் என்பது பற்றிப் பழைய ஏற்பாடு சுமார் 380 தீர்க்கதரிசனங்களைக் கொண்டுள்ளது."[2] *சந்ததி/வித்து* பற்றியதே வாக்குத்தத்தங்களில் முதலாவ தாக இருந்தது (எடுத்துக்காட்டாக, ஆதி. 3:15; 22:18). இருப்பினும் கடைசி யில், இரட்சகர் வரவிருந்த இனமாகத் தேவன் இஸ்ரவேல் இனத்தைப் பெயரிட்டுக் குறிப்பிட்டார். அந்த நாட்டை ஆளுவதற்கு ஒரு ராஜா ஏற்படுத்தப்பட்டவுடன், அந்த வாக்குத்தத்தம் ஒரு *ராஜ்யத்திற்குரிய* வாக்குத்தத்தமாயிற்று.

எடுத்துக்காட்டாக, சங்கீதம் 2 வரவிருந்த ஒரு மாபெரும் ராஜாவைக் குறிப்பிட்டதென்று யூதர்களால் கருதப்பட்டது.[3] வசனம் 2ல் "கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனை பண்ணி" என்று நாம் வாசிக்கின்றோம். "அபிஷேகம் பண்ணினவர்" என்று மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தையானது "மேசியா" என்பதாக உள்ளது; "கிறிஸ்து" என்பதே இதற்குச் சமமான கிரேக்க வார்த்தையாக உள்ளது. ஆவிக்குரிய பல ஊழியர்கள் எண்ணெயைக் கொண்டு அபிஷேகம் செய்விக்கப்பட்டிருந்தனர்,[4] ஆனால் ஒரு சராசரி யூதர், "அபிஷேகம் பண்ணினவர்" என்ற வார்த்தையைக் கேட்கும்போது, அவர் ஒரு *ராஜாவைப்* பற்றித்தான் நினைப்பார். முதல் அரசராயிருந்த சவுல், "கர்த்தர் அபிஷேகம் பண்ணினவர்" என்று அறியப்பட்டார் (1 சாமு. 24:6, 10; 26:9,

11, 16, 23). சங்கீதம் 2ல் அபிஷேகம் பண்ணப்பட்டவரைக் குறித்துக் கர்த்தர், "நீ என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்" என்று கூறினார் (வ. 7). ஒரு ராஜா வந்துகொண்டிருந்தார்!

மீண்டுமாக, தானியேல் 2:44ல், நாம் பின்வரும் வாக்குத்தத்தத்தைக் காண்கின்றோம்: "அந்த ராஜாக்களின் நாட்களிலே அதாவது, ரோமப் பேரரசின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்துவார்." இந்த மற்றும் பிற வாக்குத்தத்தங்கள், இஸ்ரவேலர்களைப் பல இருளான நாட்களிலும் இரவுகளிலும் தாக்குப் பிடித்து உயிர்வாழச் செய்திருந்தது. ராஜா தம்முடைய ராஜ்யத்தை நிலை நாட்டுவதற்காக வந்து கொண்டிருந்தார்!

**முன்னெதிர்பார்ப்பு தேய்ந்து மறைதல்**

நாட்கள் கடந்து சென்ற நிலையில், ராஜா இன்னமும் தோன்றா திருக்கையில், இஸ்ரவேலர்களின் முன்னெதிர்பார்த்தல் குறையலாயிற்று. கிறிஸ்துவின் நாட்களில் அவர்களின் நிலை பற்றி லேண்டன் சான்டெர்ஸ் அவர்கள் பின்வரும் விவரிப்பைக் கொடுத்தார்:

> ரோமாபுரியின் உயர்நிலையும் அதிகாரமும் எங்கும் தெளிவா யிருந்தது. பணிநிலைப் படைத்துருப்புகள் அவர்களின் [இஸ்ரவேலர் களின்] தெருக்களில் அணிவகுத்துச் சென்றனர், அவர்களின் குன்றுகளில் காவல் இருந்தனர், பரிசுத்த தேவாலயத்தையும்கூட மேற்பார்வையிட்டனர், இவை யாவையும் வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட நாடு புறதெய்வ வணக்கத்தாரின் ஆளுகையின் கீழ் இருந்தது என்பதற்கு நிலையான மற்றும் எரிச்சல் ஏற்படுத்தும் நினைவூட்டுதலை அளித்தன.[5]

படிப்படியாக, நாட்டின் கவனமானது பூமிக்குரிய விஷயங்களுக்குத் திரும்பிற்று - மதரீதியானவர்களாக உரிமைகோரிக் கொண்டவர்கள் மத்தியிலும்கூட இவ்வாறு நடைபெற்றது. சில இருதயங்களில் நம்பிக்கை யின் தீப்பொறியானது தாழ்வாக எரிந்துகொண்டிருந்தது.

இருப்பினும், இது மற்றவர்களில் பிரகாசமாகப் பற்றியெரியத் தொடர்ந்தது. எடுத்துக்காட்டாக, மரியாளும் யோசேப்பும், பச்சிளம் குழந்தையாக இருந்த இயேசுவைத் தேவாலயத்திற்குத் தூக்கிச் சென்ற வேளையில், பல ஆண்டுகளாக "இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருந்தவ ரான" சிமியோன் என்ற பெயர்கொண்ட ஒரு முதிர்வயதான மனிதர் அங்கிருந்தார் (லூக். 2:25) - இது ராஜா மாத்திரமே தரக்கூடிய ஆறுதலாக இருந்தது. இம்மனிதர் இயேசுவைத் தமது கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனைத் துதித்தார்: "ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்; … உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது" (லூக் 2:29-32). சில வேளைகளில் இந்த நம்பிக்கையானது எதிர்பாராத இடங்களில் பற்றியெரிந்தது. ஒழுக்கவீனமான சமாரியப் பெண்ணிடம், யாக்கோபின் கிணற்றருகில் இயேசு பேசிக்கொண்டிருந்தபோது, அவள் "கிறிஸ்து

*என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்" என்று கூறினாள் (யோவா. 4:25).*

## *சுவிசேஷ விவரங்கள்: "ராஜா இங்கு இருக்கின்றார்!"*

***முன் எதிர்பார்ப்பு பற்றியெறிதல்***

*ஆயினும் பின்பு, இஸ்ரவேலின் நம்பிக்கையின் சுடரை மீண்டும் எரியூட்டியதும் அதை ஒரு நெருப்பு கொழுந்தாக்கும்படி விசிறிவிட்டது மான ஒரு சில விஷயங்கள் நடைபெற்றன. யோவான் என்ற பெயர் கொண்ட ஒரு மனிதர் யூதேயாவின் வனாந்தரத்தில் பிரசங்கிக்கத் தொடங் கினார்: "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத். 3:2). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "ராஜா வருகின்றார் - நீங்கள் ஆயத்தமாயிருப்பது அவசியம்!" என்று அவர் கூறினார். கூட்டத்தார் யோவானிடத்தில்,: "அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள் (லூக். 3:10). "இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக் கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன்" என்பதே அவரது பதிலாயிருந்தது (லூக். 3:11). ஆயக்காரரிடத்தில் அவர், "உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள்" என்று கூறினார் (லூக். 3:13). போர் சேவகர்களிடத்தில் அவர், "நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும் பொய்யாய்க் குற்றஞ்சாட்டாமலும், உங்கள் சம்பளமே போதுமென்றும் இருங்கள்" என்று கூறினார் (லூக். 3:14). வரவிருந்த ராஜாவை முன்எதிர்பார்த்தலானது யோவானின் உரையைக் கேட்டவர்களிடம் செயல்தாக்கத்தை ஏற்படுத்தியது!*

*நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருக்கப்பட்ட ராஜா இயேசுவாக இருந்தார் (மத். 2:2; யோவா. 1:49). இருப்பினும் அவர் வந்த போது, ஒரு அரண்மனையில் அவர் பிறக்கவில்லை, ஒரு ராஜ அங்கிகளை அவர் அணியவில்லை, ஒரு பலம்வாய்ந்த படையை அவர் கட்டளையிட்டு நடத்தவில்லை.[6] இந்த உண்மைகள், அவர் ராஜாவாயிருத்தல் பற்றி ஒரு சிலர் சந்தேகம் கொள்ளக் காரணமாயிருக்கையில், அவரது சிந்தையிலும் உதடுகளிலும்அவர் தம் ராஜ்யத்தை நிலைநாட்டுதலே நிலையான கருத்தாக இருந்தது. யோவானைப் போலவே இவரும், "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கித்தார் (மத். 4:17). அவரது பல உவமைகள், "பரலோக ராஜ்யம் ... போன்றதாயிருக்கிறது" என்ற வார்த்தைகளுடன் தொடங்கின (மத். 13:31, 33, 44, 45, 47, 52; 20:1). அவர் பேதுருவிடம், "ராஜ்யத்தின் திறவுகோல்களை" தருவதாக வாக்களித்தார் (மத். 16:19). அவர் தமது அப்போஸ்தலர்களின் வாழ்நாள் காலத்திலேயே தேவனுடைய ராஜ்யம் "பெலத்தோடே" வரும் என்று கூறினார் (மாற். 9:1).*

**முன்னெதிர்பார்ப்பு தேய்ந்து மறைதல்**

*துரதிர்ஷ்டவசமாக மக்கள், ராஜா மற்றும் அவரது ராஜ்யம் பற்றி, தவறான கருத்துக் கொண்டிருந்தனர்: அவர்கள் தங்கள் விரோதிகளைத் தோல்வியுறச் செய்வதற்கு அரசியல் ரீதியான ராஜ்யத்தை ஆளுகை செய்யும் ஒரு பூமிக்குரிய ராஜாவை எதிர்பார்த்திருந்தனர். ஒருநாள், ஒரு கூட்டமானது இயேசுவை அவ்வகையான ராஜாவாக முடிசூட்ட முயற்சி செய்தது, ஆனால் அவர் அதை அனுமதிக்கவில்லை (யோவா. 6:15). பிற்பாடு, ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று, கிறிஸ்து கழுதைக்குட்டியின்மீது ஏறியவராய் எருசலேமுக்குள் நுழைகையில், மக்கள் "ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்; கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக ... !" என்று ஆர்ப்பரித்தார்கள் (மாற். 11:9, 10). அவர்கள் அங்கே அப்போதே இயேசு தமது ராஜ்யத்தை அமைப்பார் என்று எதிர்பார்த்தனர் என்பது தெளிவு - ஆனால் அவர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.*

*இயேசுவின் ஒரு சில கூற்றுக்கள் மிகவும் அரசத்துவம் போலிராதவை களாக மக்களால் உய்த்துணரப்பட்டன. அவர், "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" (யோவா. 18:36அ) என்று கூறினார். அவர் மரிப்பது பற்றியும், சிலுவையில் அறையப்படுதல் பற்றியும் பேசினார் (மத். 16:21; 17:23; 20:19 ஆகிய வசனங்களைக் காணவும்) - இது மிகவும் அரசத்துவமற்ற முடிவாயிருந்தது! அவர் இந்த உலகத்தை விட்டு நீங்குதல் பற்றியும் கூடப் பேசினார் (யோவா. 16:28ஐக் காணவும்).*

*இருப்பினும், அவர் மீண்டும் வருதல் பற்றியும் பேசினார்.[7] அதுவே இந்த எடுத்துரைப்பில் உள்ள செய்தியின் மையப் பகுதியாக உள்ளது. மத்தேயு 24 மற்றும் 25ல் உள்ள அவரது விரிவான உரையில், நாம் பின்வரும் வார்த்தைகளைக் காண்கின்றோம்:*

> *"நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷ குமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப் பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக் கும் நாள் வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷ குமாரன் வருங்காலத்திலும் நடக்கும்" (மத். 24:37-39).*

> *"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையில் வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்" (மத். 24:42).*

> *"அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத்*

> தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார் ... அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்" (மத். 25:31-46).

மேல்வீட்டில், இயேசுவின் இணையற்ற பிரியாவிடை உரையில் அவர் தமது அப்போஸ்தலர்களிடம் பின்வருமாறு கூறினார்:

> உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் (யோவா. 14:1-3).

இருப்பினும், கிறிஸ்து இந்த வார்த்தைகளைப் பேசியதற்குப் பின்பு வந்த காலைப் பொழுதில், அவர் ஒரு ரோமச்சிலுவையில் அறையப்பட்டார் - அவரது சீஷர்களின் கனவுகளும் நம்பிக்கைகளும் நசுக்கப்பட்டன.

## நடபடிகளும் நிருபங்களும்:
## "ராஜா மீண்டும் வருகின்றார்!"

**முன் எதிர்பார்ப்பு பற்றியெரிதல்**

இயேசு மூன்றாம் நாளில் மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தபோது, நம்பிக்கை உயிர்ப்பிக்கப்பட்டது. பின்பு அவர் தமது சீஷர்களுடன் நாற்பது நாட்கள் இருந்து, பரலோகத்திற்கு தாம் திரும்பிச் செல்லுதலுக்கு அவர்களைத் தயார் செய்தார். கடைசியில், அவர்களை விட்டுச் செல்வதற்கு அவருக்கு நேரம் நெருங்கிற்று. அவர்களை அவர், ஒலிவ மலையின் கிழக்குச் சரிவில் இருந்த ஒரு இடத்திற்கு வழிநடத்திச் சென்றார், அங்கு அவர் தமது கரங்களை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார், மற்றும் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அப்போஸ்தலர்கள் "அவர் போகிறபோது ... வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு" இருந்தனர், அப்போது இரண்டு தூதர்கள் "அவர்களருகே நின்றனர்" (அப். 1:10). அந்தத் தூதர்கள் அவரிடத்தில், "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்திலின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்றார்கள் (அப். 1:11). கிறிஸ்துவின் பின்பற்றாளர்கள் ஒரு புதிய செய்தியைக் கொண்டிருந்தனர்: "ராஜா மீண்டும் வருகின்றார்!"

"ராஜா வருகின்றார்!" என்ற உறுதிப்பாடு இஸ்ரவேல் மக்களை உற்சாகப் படுத்தியிருந்தது போலவே, "ராஜா, மீண்டும் வருகின்றார்!" என்ற

சிந்தனையானது தொடக்க காலக் கிறிஸ்தவர்களுக்குத் தைரியமூட்டியது. ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் இந்தத் தலைப்பை மறைமுகமாகத் தொடர்ந்து குறிப்பிட்டனர். ஒரு எழுத்தாளரின் கூற்றுப்படி, "புதிய ஏற்பாட்டில் குறைந்தபட்சம் 370 வசனங்கள், அவர் மனிதர்களை நியாயந்தீர்ப்பதற்காக இரண்டாம்முறை வருதல் பற்றிக் குறிப்பிடுகின்றன. புதிய ஏற்பாட்டின் 7,959 வசனங்களில், 25ல் ஒரு வசனம் கிறிஸ்துவின் மறுவருகை பற்றிய ஆய்வுக்கருத்தைத் தொடுவதாக உள்ளது." புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களில், 23ல் இந்தப்போதனை போதிக்கப்படுகிறது.[8] இந்தப் பாடக்கருத்து தொடர்பாக உள்ள சில வசனப்பகுதிகள் பின்வருமாறு.

பவுல் பின்வருமாறு எழுதினார்,

> நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலி. 3:20, 21).

ராஜா திரும்பி வருகின்றபோது, இற்றுப்போன இந்த சரீரமானது தனது எல்லா பலவீனத்தோடும்கூட மாற்றப்பட்டு, ஒரு புதிய சரீரம் கொடுக்கப் படும். நமக்கு ஆவிக்குரிய சரீரங்கள் கொடுக்கப்படும் - அது "அவரது மகிமையுள்ள சரீரத்திற்கு" ஒப்பானதாக இருக்கும்!

தெசலோனிக்கேயில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் பின்வருமாறு கூறினார்:

> கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.[9] பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1 தெச. 4:15-17).

வரவிருந்த நாட்களில், தெசலோனிக்கேயில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்களுக்கு அன்பான பலரைப் பூமியில் ஓய்வெடுக்கும்படி கிடத்துவார்கள். அவர்கள் கவலைப்படாதிருக்கும்படி பவுல் கூறினார். நீதிமான்கள் தங்கள் பலன்களை இழந்துபோக மாட்டார்கள் - ஏனெனில், ராஜா திரும்பி வருகையில், அவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று அவர் [பவுல்] விளக்கப்படுத்தினார். மேலும் அவர், "ஆகையால் இந்த வார்த்தை

*களினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" என்றும் கூறினார் (1 தெச. 4:18).*

*வரவிருக்கும் ராஜா என்ற ஆய்வுப்பொருளை யோவான் எதிரொலித் தார்: "இப்படியிருக்க, பிள்ளைகளே அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ள வர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்" (1 யோவா. 2:28). ராஜா வருகின்றபோது, நாம் ஆயத்தமாயிருந்தால் தைரியத்தினால் நிரப்பப்படக் கூடும் - அல்லது நாம் ஆயத்தமாய் இராதிருந்தால் வெட்கத்தினால் நிரப்பப்படக்கூடும். 1 யோவான் 3:2ம் வசனம், "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமா யிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப் படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" என்று கூறுகிறது.*

*மற்ற வசனப்பகுதிகளையும் குறிப்பிடமுடியும், ஆனால் கிறிஸ்துவின் மறுவருகை என்பது மீண்டும் மீண்டும் வருகிற ஆய்வுப்பொருளாக உள்ளது என்பதைச் செயல்விளக்கப்படுத்துவதற்கு இவைகள் போதுமானவைகளாய் உள்ளன. இப்போது நாம், புதிய ஏற்பாட்டின் முடிவுப் பகுதிக்குச் செல்வோம். இங்கு இயேசுவினால் கொடுக்கப்பட்ட ஒரு நிறைவு வாக்குத் தத்தம் உள்ளது: "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியை களின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது" (வெளி. 22:12). "நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்ற வார்த்தை கள் சிலருக்கு வினோதமானதாக ஒலிக்கலாம், ஏனெனில் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆனபின்பும்கூட அவர் இன்னமும் திரும்பி வரவில்லை.[10] பில் பனொஸ்கி அவர்கள் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்:*

> *வேதாகமத்தின் முடிவுப்பத்திகளில் உள்ள இந்த "சீக்கிரமாய்" என்ற வார்த்தையானது, பூமிக்குரிய வாழ்வின் முடிவுபெறும் அம்சத்தி லிருந்து கண்ணோக்கப்படக் கூடாது, ஆனால் காலம்கடந்த தேவனு டைய வாழ்வின் அம்சத்திலிருந்து கண்ணோக்கப்பட வேண்டும். நமது கணக்கீட்டின்படி இரண்டாயிரம் ஆண்டுகள் வந்து சென்றுள்ளன, ஆனால் அவரைப் பொறுத்தமட்டில் ஆயிரம் ஆண்டுகள் என்பது ஒரு நாளைப் போன்று உள்ளது. தேவன் ஒரு கைக்கடிகாரத்தை அணிவதில்லை.[11]*

*மேலும் இயேசுவின் வார்த்தைகள், அவரது வருகை "உடனடியான தாக" இருக்கும் என்று கருத்துத் தெரிவிப்பதில்லை, அதற்குப் பதிலாக, அது* "imminent" *ஆக இருந்தது என்ற கருத்தையே தெரிவிக்கிறது என்றும் பனொஸ்கி கருத்துத் தெரிவித்தார்.[12]* "Imminent" *என்றால் அது எந்த வேளையிலும் நடக்கலாம் என்று அர்த்தப்படுகிறது. இது உண்மையாக இருக்கவேண்டும் என்று தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் நம்பினர், நாமும்கூட இதை நம்ப வேண்டியவர்களாக இருக்கின்றோம். வேதாகமத் தின் கடைசி வசனத்திற்கு முந்திய வசனத்தில், இயேசுவின் வாக்குத் தத்தத்தை யோவான் திரும்பக் கூறினார்: "இவைகளைச் சாட்சியாக*

அறிவிக்கிறவர்: மெய்யாகவே சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார்” (யோவா. 22:20அ). பின்பு அந்த அப்போஸ்தலர், “ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்” என்று கூறினார் (வெளி. 22:20ஆ).

ராஜா காணக்கூடிய வகையில்,[13] கேட்கக்கூடிய வகையில், எச்சரிக்கை எதுவுமின்றி,[14] வல்லமையுடனும் மகிமையுடனும் ராஜா வருவதாக இருந்தார் என்று புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் போதித்தனர். அவர் மரித்தோரை உயிரோடெழுப்பவும், எல்லா மனிதர்களையும் நியாயத் தீர்த்து, பலன்களையும் தண்டனையையும் வழங்கவும் வருவார் என்று அவர்கள் போதித்தனர்.[15] அநீதி நிறைந்த உலகத்தில், எல்லாவற்றையும் சரிசெய்வதற்காக ராஜா வருவார் என்ற செய்தியை அவர்கள் பகிர்ந்தளித்தனர்!

ராஜாவுடைய *முதலாம்* வருகையின் முன் எதிர்பார்ப்பு இஸ்ரவேல் ஜனங்களின் வாழ்வில் செயல்தாக்கத்தை ஏற்படுத்திற்று. அதுபோலவே, இரண்டாம் வருகையின் முன் எதிர்பார்ப்பு தொடக்க காலக் கிறிஸ்தவர்களைப் பாதித்தது:

- அது அவர்களை *மாற்றியது.* அது அவர்களின் [வாழ்வு பற்றிய] கண்ணோட்டங்களை மாற்றியது. “ராஜா மீண்டும் வருகின்றார்!” என்ற உண்மை அவர்களின் சிந்தனைக்கு மையமாக இருந்தபோது, அவர்கள் வாழ்வை மாறுபட்ட வகையில் கண்டனர்.
- அது அவர்களுக்கு *அறைகூவல் விடுத்தது.* இரண்டாம் வருகையைப் பற்றிப் பேசியபோது, பேதுரு பின்வருமாறு எழுதினார்:

> கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தி யும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள் ... (2 பேது. 3:10-12).

“ராஜா வருகின்றார்!” என்று யூதர்களிடத்தில் யோவான் [ஸ்நானன்] கூறியபோது, அவர்கள் மனந்திரும்பி தங்கள் வாழ்வை மாற்றிக் கொண்டனர். “ராஜா மீண்டும் வருகின்றார்!” என்ற உண்மையைப் பேதுரு கூறுகின்ற போது, இது நாமும் நமது வாழ்வை மாற்றிக்கொள்ளக் காரணமாக வேண்டும். இந்திய ஜனாதிபதி[16] உங்களுடன் உணவு உண்பதற்கு உங்கள் வீட்டிற்கு வரத் திட்டமிட்டிருந்தால் எப்படியிருக்கும்? நீங்கள்

*உங்களையே, "நான் எதை அவருக்குப் பரிமாறுவேன்? நான் எந்த உடையை அணிவேன்? எனது வீட்டின் தோற்றத்தில் என்னென்ன மாற்றத்தைச் செய்ய வேண்டியது அவசியமாயிருக்கும்?" என்று கேட்டுக்கொள்ள மாட்டீர்களா? ராஜா வருகின்றார் என்ற உண்மையை நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, பின்வரும் கேள்விகள் நமது சிந்தையில் மேலான இடங்கொண்டிருக்க வேண்டும் என்று பேதுரு கூறினார்: "நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்?"*

- *அது அவர்களை உறுதிப்படுத்தியது. ராஜா மறுபடியும் வருவார் என்ற உண்மையில் அவர்கள் பெலத்தைக் கண்டறிந்தனர். அவர்கள் வாழ்வில் என்ன நடந்தாலும், ராஜா வருவார் என்பதையும் அவர்கள் நியாயப்படுத்தப் படுவார்கள் என்பதையும் அறிந்திருந்தனர். யோவானைப் போல் அவர்கள், "ஆண்டவராகிய இயேசுவே வாரும்!" என்று ஜெபித்தனர். அவர்கள், "ஓ ஆண்டவரே வாரும்!" என்று அடிப்படையில் அர்த்தப்படுகிற "மாரநாதா" என்ற அரமாயிக் சொல்விளக்கத்தைக் கொண்டிருந்தனர் (1 கொரி. 16:22ஆ). இது, அவர் வருவார் என்பதன் மீதுள்ள விசுவாசத்தின் வெளிப்பாடாகவும் அவரது வருகையைத் துரிதமாக்கும்படி ஜெபித்தலாகவும் இருந்தது. பேதுருவின் வார்த்தையைப் பயன்படுத்துவதென்றால், அவர்கள், "தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருந்தனர்" (2 பேது. 3:12). மேஸ்ஸில்லோன் அவர்களின் கூற்றுப்படி, "ஆண்டவருடைய மறுவருகைக்காக ஏங்காதிருத்தல் என்பது ஒரு வகையான விசுவாச விலக்கம் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது."[17]*
- *அது அவர்களை ஆறுதல்படுத்தியது. ராஜா திரும்பவும் வருகின்றார் என்று பவுல் தெசலோனிக்கேயர்களுக்கு உறுதிப்படுத்தியபோது, அவர் "ஆகையால் இந்த வார்த்தை களினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" என்று எழுதினார் (1 தெச. 4:18). அவர்கள் தங்கள் விசுவாசத்திற் காக மரிக்க நேர்ந்தாலும், ராஜா மீண்டும் வந்து அவர்களை எழுப்புவார், மற்றும் அவர்கள் நித்தியத்திற்கும் என்றென் றைக்கும் அவருடன் இருக்கும்படி செல்லுவார்கள்!*

**முன்னெதிர்பார்ப்பு தேய்ந்து மறைதல்**

வேதாகமத்தில், [கிறிஸ்துவின்] இரண்டாம் வருகை பற்றிய கடைசி வசனமானது பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது. நூற்றாண்டுகள் கடந்து சென்றுள்ளன, ஆயினும் ராஜா இன்னும் திரும்பி

வரவில்லை. நாம் பூமியால் கட்டப்பட்டவர்களாகி விட்டோம், நமது கண்கள் இனியும் வானத்தை நோக்கிக் கவனம் குவித்திருப்பதில்லை. உணர்வை எழுப்பிவிடும் குணமுடையவர்கள் பரவச நிலை என்று தாங்கள் அழைக்கும் நிகழ்ச்சி, துன்பங்கள் மற்றும் பூமியில் கிறிஸ்துவின் ஆளுகை என்ற நிகழ்ச்சிகளைப் பற்றித் தாங்களே கட்டியெழுப்பிய கதைகளைக் கொண்டு மக்களை உணர்வெழுச்சிக்கு உட்படுத்துதல் என்பது மாத்திரமே இப்போது இரண்டாம் வருகை பற்றிய போதனை மற்றும் பிரசங்கமாக உள்ளது. நம்மில் பெரும்பான்மையானவர்கள் இந்த உலகத்திற்கு உரியவர்கள் ஆகிவிட்டோம்; நாம் இந்த வாழ்வில் பொருந்தி அமைந்து விட்டோம். ராஜாவின் மறுவருகை பற்றிய உண்மையானது நமது சிந்தைகளில் நீர்த்துப் போய்விட்டதால், சபையின் தொடக்க நூற்றாண்டுகளில் இருந்த கிறிஸ்தவர்களைப்போல் அந்த உண்மையால் செயல்தாக்கம் அடைவதில்லை.

- அதினால் நாம் *மாற்றப்படுவதில்லை*. நம்மைச் சுற்றிலும் இருக்கின்ற கிறிஸ்தவரல்லாதவர்களைப் போலவே, நமது சிந்தனைகளும் இந்த வாழ்வுக்குரியவற்றினால் நிறைக்கப் பட்டுள்ளது.
- அதினால் நாம் *அறைகூவல் விடப்படுவதில்லை*. எல்லா வேளைகளிலும் தயாராக இருப்பதன் அவசரத்தை பலர் இனியும் உணர்வதில்லை.
- உலகப் பிரகாரமானவற்றின்மீது கொண்டுள்ள கவனக் குவிப்பால் நாம், இந்த சத்தியம் கொண்டு வரக்கூடிய *உறுதிப்பாட்டுடன் - பலத்துடன் -* இருப்பதில்லை. நாம் வாழ்வின் அற்பமான விஷயங்களினால் கட்டப்பட்டவர் களாய்க் கிடக்கின்றோம்.
- "ராஜா வருகின்றார்!" என்று நம்பியதால் தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் பெற்றுக்கொண்ட ஆறுதலை இனியும் நாம் மகிழ்வுடன் அனுபவிப்பதில்லை. நமக்கு இந்த ஆறுதல் *அவசியமானதாக* உள்ளது. நாம் அடித்து வீழ்த்தப்படும் போது, இந்த உலகம் தனியே வீழ்வதாகத் தோன்றும்போது, பொல்லாங்கானது யுத்தத்தில் வெற்றி பெறுவதாகக் காணப்படும்போது, சபைகளும் சபை உறுப்பினர்களும் கூட நம்மை ஊக்கமிழக்கச் செய்யும்போது, "ராஜா வருகின்றார்! எல்லாம் கடைசியில் நேராகும்!" என்பதை உய்த்துணருவதல் என்ன ஒரு ஆறுதலாக இருக்கும்!

கர்த்தருடைய உடனடியான வருகையைப் பொறுத்தமட்டில் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த உணர்வெழுச்சியை நாம் மீளக்கட்டியெழுப்பிக் கொள்ளாத வரையில், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை மீளக்கட்டியெழுப்பும் பணிப்பொறுப்பு முழுமையடையாது என்று யாரோ ஒருவர் கூறினார். நாம் என்ன செய்ய

வேண்டும்? நாம் இரண்டாம் வருகையைப் பற்றி அதிகமாய்ப் போதிக்கவும் பிரசங்கிக்கவும் முடியும். மாபெரும் பாடல்கள் பல இந்த ஆய்வுக் கருத்துடன் தொடர்புடையவைகளாக உள்ளன;[18] நாம் இவற்றை அதிகமாய்ப் பாடமுடியும். இருப்பினும், தனித் தனிக் கிறிஸ்தவர் என்ற முறையில் நாம் யாவரும், என்ன நடந்தாலும் நாம், "ராஜா வருகின்றார்! அவர் அடுத்த ஐந்து நிமிடங்களுக்குள் வரலாம் அல்லது வராதிருக்கலாம், ஆனால் *அவரால்* அது முடியும். ராஜா வருகின்றார் - அது ஒவ்வொன்றையும் மாற்றும்!" என்ற கண்ணோக்கிலேயே வாழ்வைக் காண்போம் என்ற வகையில் இந்த சத்தியத்தை நமது இருதயங்களில் ஆழப்பதியச் செய்வது என்பது மாபெரும் தேவையாக உள்ளது.

## முடிவுரை

ராஜா இப்போதே திரும்பி வருவாரென்றால், உங்கள் பதில்செயல் என்னவாக இருக்கும்? நாம் திடீரென்று எக்காளங்களின் சத்தத்தைக் கேட்க நேர்ந்து இந்தக் கட்டிடத்தின் மேற்கூரையானது நடுவில் பிரிந்து போவதைக் காணநேர்ந்தால் எப்படியிருக்கும்? நாம் மேல்நோக்கிப் பார்த்து, இயேசுவின் மகிமையையும் அவரது தூதர்களையும் காணநேர்ந்தால் எப்படியிருக்கும்? இங்கும் அங்கும் கூட்டத்திலும் உள்ள மக்கள் ஆகாயத்தில் உயர எழும்பத் தொடங்கினால் எப்படியிருக்கும்? (1 தெச. 4:16, 17ஐக் காணவும்.) அவரது மறுவருகையைக் காண்பது உங்களுக்கு மெய்சிலிர்ப்பாய் இருக்குமா அல்லது நீங்கள் பயம் அடைவீர்களா? நீங்கள் யோவானுடன் சேர்ந்து "ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று கூறி உண்மையிலேயே அதை அர்த்தப்படுத்த இயலுமா? (வெளி. 22:20ஆ). ராஜா வருகின்றார்! அவர் வருகின்றார் என்பதை நீங்கள் நம்ப முடியும்! அவரது மறுவருகைக்கு நீங்கள் ஆயத்தமாயிராவிட்டால், இன்றே நீங்கள் ஆயத்தமாக வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கின்றேன்.[19]

## குறிப்புகள்

நான் பிரசங்க மேடையில் முதன் முதலில் அடியெடுத்து வைத்ததில் இருந்து இரண்டாம் வருகை பற்றிப் பிரசங்கித்துள்ளேன். இந்த மாபெரும் ஆய்வுக்கருத்தின்மீது எனக்கு முன் பேசிய மற்றும் எழுதிய யாவருக்கும் நான் கடன்பட்டுள்ளேன். "ராஜா வருகின்றார்!" என்ற இந்தப் பிரசங்கத் திற்குப் பல ஆதாரமூலங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன, ஆனால் இந்தத் தலைப்பும் பொதுவான அணுகுமுறையும் லேன்டன் B. சான்டெர்ஸ் அவர்கள் *அபிலேன் கிறிஸ்தவப் பல்கலைக்கழகத்தின் விரிவுரை முகாம்கள்* ஒன்றில் நிகழ்த்திய ஒரு விரிவுரையில் இருந்து எடுக்கப்பட்டன.

இரண்டாம் வருகை பற்றி நாம் பிரசங்கிக்க வேண்டிய வகையில் அதிகமாகப் பிரசங்கிக்காது இருந்தாலும், பெரும்பாலான பாடல் புத்தகங்கள் அந்தத் தலைப்பின்மீது அமைந்த பாடல்களால் நிறைந்துள்ளன. பாடல் நடத்துநரிடம் நீங்கள் இந்த பாடக்கருத்துப் பற்றிய பாடல்களைத் தேர்ந்தெடுக்கும்படி நீங்கள் கேட்டுக்கொள்ள விரும்பலாம்.

*குறிப்புகள்*

[1]*இது பெரும்பாலும் பயன்படுத்தப்படும் வேதாகமத்தின் பின்வரும் பிரிவு களாக உள்ளது: "கிறிஸ்து வருகின்றார்" "கிறிஸ்து இங்கிருக்கின்றார்"; "கிறிஸ்து மீண்டும் வருகின்றார்."* [2]William S. Banowsky, *Sermons of William S. Banowsky,* Great Preachers of Today series, vol. 11, ed. J. D. Thomas (Abilene, Tex.: Biblical Research Press, 1965), 211. *பழைய ஏற்பாட்டு மேசியாத்துவத் தீர்க்கதரிசனங்களின் மிகச் சரியான எண்ணிக்கையானது எழுத்தாளருக்கு எழுத்தாளர் மாறுபடுகிறது. மிகச் சரியான எண்ணிக்கை முக்கியமானதல்ல.* [3]*2ம் சங்கீதம் ஒரு "இராஜரீக சங்கீதமாக" இருந்தது. இது இஸ்ரவேலின் பூமிக்குரிய அரசர்களுக்கு நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்தது, ஆனால் பெரும்பாலான யூதர்கள், இந்த சங்கீதம் மேசியா வரும்வரை முழுமையாக நிறைவேறாது என்று புரிந்துகொண்டிருந்தனர். புதிய ஏற்பாட்டுப் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் இந்த சங்கீதத்தின் பகுதிகளை இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தினர் (அப். 13:33; எபி. 1:5; 5:5; வெளி. 12:5).* [4]*எடுத்துக்காட்டாக, ஆசாரியர்கள் தங்கள் நியமனத்தின் ஒரு பகுதியாக எண்ணெயினால் அபிஷேகம் பண்ணப்பட்டனர், மற்றும் சில வேளைகளில் தீர்க்கதரிசிகளும் எண்ணெயினால் அபிஷேகம் செய்விக்கப்பட்டனர்.* [5]Landon B. Saunders, "The King Is Coming!" *Abilene Christian University Lectures* (1980), 104. [6]*தேவனுடைய வழிகள் நமது வழிகள் அல்ல (ஏசா. 55:8, 9).* [7]*தொடர்புடைய வேத வசனப்பகுதிகள் பலவற்றைப் பட்டியலிட முடியும். எடுத்துக்காட்டாக, மத்தேயு 16:27; 26:64ஐக் காணவும்.* [8]Banowsky, 211. [9]*இந்த வசனப்பகுதியானது, "பரவச நிலை" என்று அழைக்கப்படும் மனிதரால் கண்டுபிடிக்கப்பட்ட போதனையைப் போதிப்பதற்கு ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கைகாரர்களால் பயன்படுத்தப்படுகிறது. அவர்கள் ''முதலாவது'' என்ற வார்த்தையின்மீது வலியுறுத்தம் வைக்கின்றனர், நீதிமான்கள் ''முதலாவது'' - அதாவது நீதியற்றவர்களுக்கு முன்பு - உயிர்ப்பிக்கப்படுவார்கள் (அவர்களின் போதனையின்படி) நீதியற்றவர்கள் ஏழு வருடங்கள் வரை உயிர்ப்பிக்கப் படுவதில்லை என்று கூறுகின்றனர். அவ்வகையில் "முதலாவது" என்ற வார்த்தை இந்த வசனப்பகுதியில் பயன்படுத்தப்படவில்லை. "முதலாவது" என்ற வார்த்தையில் மறைமுகமாய் உணர்த்தப்படும் நேர்மாறானது நீதிமான்கள் மற்றும் நீதியற்றவர்களுக்கு இடையிலானது அல்ல, ஆனால் மரித்தவர்களுக்கும் உயிருடன் இருப்பர்களுக்கும் இடையில் உள்ளதாகும். வேத வசனமானது, "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்'' ''முதலாவது'' எழுந்திருப்பார்கள், மற்றும் அதன் பின்பு "கிறிஸ்துவுக்குள்'' உயிருடன் இருக்கும் யாவரும் கர்த்தரைச் சந்திப்பதற்காக ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். மரித்த யாவரும் - நல்லவர்கள் மற்றும் தீயவர்கள் யாவரும் - ஒரே வேளையில் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று வேதாகமம் போதிக்கிறது (யோவா. 5:28, 29).* [10]*இவ்வசனப்பகுதி இரண்டாம் வருகையை அல்ல, ஆனால் அதற்கு மாறாக சபையின் தொடக்க நாட்களில் தீய மனிதர்கள்மேல் ஒரு தற்காலிக நியாயத்தீர்ப்பைக் குறித்ததாக உள்ளது என்பதைச் சிலர் நம்புவதில்லை. இருப்பினும், வெளிப்படுத்தின புத்தகத்தின் முடிவில், இரண்டாம் வருகையே கலந்துரையாடலின் கீழ் உள்ள பாடக்கருத்தாக இருப்பதாகக் காணப்படுகிறது.*

[11]Banowsky, 213-14. [12]Ibid., 213. [13]*கிறிஸ்துவின் மறுவருகைக்கான காலத்தைக் குறிப்பதற்குப் பலர் முயற்சி செய்துள்ளனர். (அவர்கள்) முன்னுரைத்தபடி அவர் வராதபோது, சிலர் தங்கள் நற்பெயர்களை மீட்டுக்கொள்வதற்காக, "அவர் வந்தார், ஆனால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலர் மாத்திரம் காணும்படி வந்தார், நேரம் சரியானதல்ல என்று முடிவு செய்துவிட்டார் - எனவே அவர் பிற்பாடு மீண்டும் வருவார்" என்று கூறினார்கள். கிறிஸ்து மறுபடியும் வரும்போது, "கண்கள்யாவும்*

*அவரைக் காணும்" (வெளி. 1:7) என்று வேதாகமம் போதிக்கிறது.* [14]*அவரது வருகைக்கு நேரத்தை அமைக்க முயற்சி செய்கின்றவர்கள், ராஜா, "இரவில் திருடன் வருகிற விதமாய் வருவார்" என்ற புதிய ஏற்பாட்டின் போதனைக்குச் சிறிதளவே கவனம் தருகின்றனர் என்பது உறுதி (1 தெச. 5:2; மத். 24:42-44; 1 தெச. 5:4; 2 பேது. 3:10; வெளி. 3:3; 16:15ஐக் காணவும்).* [15]*இரண்டாவது வருகையைப் பற்றிய சில சத்தியங்களை வலியுறுத்துவதற்கு நீங்கள் இவ்விடத்தில் சற்றே நிதானிக்க விரும்பலாம். எடுத்துக்காட்டாக, அவர் ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் போதிப்பதுபோல், தமது ராஜ்யத்தை நிலைநாட்டுவதற்காக வரப்போவதில்லை. ராஜ்யம்/சபை என்பது ஏற்கனவே நிலைநாட்டப்பட்டுள்ளது.* [16]*இவ்விடத்தில் ஆங்கில மூலப்பாடத்தில் இதன் எழுத்தாளர், "அமெரிக்க ஜனாதிபதி" என்று குறிப்பிட்டிருந்தார். இதை நமது நாட்டு வாசகர்களுக்கேற்ப இதன் மொழிபெயர்ப்பாளர், "இந்திய ஜனாதிபதி" என்று மாற்றிக்கொடுத்துள்ளார்.* [17]Quoted in Banowsky, 214. *ஜீன் பேப்டிஸ்ட் மேஸ்ஸில்லோன், "கிளேயர்மான்ட் என்ற இடத்தின் ஆயர்" என்று அழைக்கப்பட்டார், மற்றும் இவர் ஃபிரான்ஸ் நாட்டின் நான்காம் லூயி மன்னரின் அரண்மனைப் பிரசங்கியாராக ஊழியம் செய்தார்.* [18]*இந்தப் பாடக் கருத்துக்கொண்ட பாடல்கள் உங்கள் பிரசங்கத்திற்கு முன்னதாகப் பாடப்பட்டிருந்தால், ஆய்வுக்கருத்தின் வார்த்தைகளை நீங்கள் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.* [19]*நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும்போது, மக்கள் என்ன செய்ய வேண்டியது அவசியம் என்பதை நீங்கள் அவர்களுக்குக் கூற விரும்புவீர்கள்: மக்கள் தங்கள் சொந்த நற்செயல்களுக்குப் பதில் இயேசுவின் பலியின்மீது நம்பிக்கை கொண்டு, அன்பிலும் கீழ்ப்படிதலிலும் அவரிடமாய்த் திரும்ப வேண்டும் (மாற். 16:15, 16; அப். 2:38). உண்மையற்றுப் போன கிறிஸ்தவர்கள் தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்போதே மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டும் (அப். 8:22; யாக். 5:16).*

# இயேசு சிலுவையில் மரிக்கவேண்டியிருந்தது ஏன்?

இயேசுவின் மரணத்தினுடைய நோக்கம் நமது படிப்புகளில் சுருக்கமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்தத் தலைப்பைக் கூறிமுடிப்பதற்கு நூறு தொகுதிகளும்கூடப் போதாது; கேட்கப்படும் ஒவ்வொரு கேள்விக்கும் பதில் அளிக்க ஆயிரக்கணக்கான தொகுதிகளாலும் கூட முடியாது. இருப்பினும் ஒரு சில கூடுதலான குறிப்புகள் இந்தக் கணத்திற்குப் போதுமானதாக இருக்கும்.[1]

"எல்லாரும் பாவம் செய்து[ள்ளோம்]" (ரோமர் 3:23) மற்றும் "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). பாவிகள் ஆவிக்குரிய மரணத்தினால் - அதாவது தேவனை விட்டுப் பிரிதலினால் - இவ்வாழ்வில் துன்புறுகின்றனர் (எபே. 2:1, 12). மற்றும், அவர்கள் "இரண்டாம் மரணத்தை எதிர்கொள்ளுகின்றனர்," இது இனிவரும் வாழ்வில் தேவனை விட்டு நித்தியத்திற்கும் பிரிதலாக உள்ளது (வெளி. 20:14; 21:8).

பாவம் என்பது பரிசுத்தமான தேவனுக்கு ஒரு அவமானமாக உள்ளது (ரோமர் 3:23ஆ; ஏசா. 5:16; எபி. 10:29ஐக் காணவும்). செய்துள்ள எந்த ஒரு பாவத்தின் குற்றத்தையும், நற்செயல்கள் எதைக்கொண்டும் அழித்துப் போட இயலாது; நாம் நமது கிரியைகளினால் இரட்சிக்கப்பட இயலாது (எபே. 2:8, 9ஐக் காணவும்) நம்மாலான மட்டும் நல்லவைகளைச் செய்தாலும் கூட, அது போதுமானதாய் இருப்பதில்லை (ஏசா. 64:6; ரோமர் 3:12). நீதியின் தேவன் என்ற வகையில் (ஏசா. 30:18), கர்த்தர் பாவத்திற்காக [நம்மை] தண்டியாமல் விட இயலாது (ரோமர் 1:18ஐக் காணவும்). நாம் யாவரும் பாவத்தின் குற்றத்தை நீக்கத் திறனற்றவர்களாக விடப்பட்ட [மற்றும் விடப்படுகின்ற]படியால், மனித குலத்தின் நெருக்கடியான நிலையானது பரிதபிக்கத்தக்க குரல் எழுப்புவதாகக் காணப்படுகிறது.

தேவன் நீதியின் தேவனாக மாத்திரம் இன்றி அன்பின் தேவனாகவும் (1 யோவா. 4:8) இருப்பதற்காகக் கர்த்தருக்கு நன்றி! அவர் அன்பான தேவன் என்ற வகையில், ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்று விரும்பினார் (மற்றும் விரும்புகின்றார்) (2 பேது. 3:9ஐக் காணவும்). தேவனுடைய இந்த இரண்டு பண்புகளும் ஒரு இக்கட்டான நிலையை முன்னிறுத்திற்று. அவர், நியாயமுள்ளவராயிருந்து பாவத்தை தண்டிக்கவும் அதே வேளையில் பாவிகளை நீதிமான்களாக்குகின்றவராக இருக்கவும் முடிவது எப்படி (ரோமர் 3:26ஐக் காணவும்)? இந்த இக்கட்டான நிலைக்கு, "நானே அதற்கு

*விலைசெலுத்துவேன்; மனிதகுலத்தின் பாவங்களுக்கான தண்டனையை அனுபவிக்கும்படி எனது குமாரனை அனுப்புவேன்" என்பதே தேவனுடைய பதிலாக இருந்தது (யோவா. 3:16ஐக் காணவும்). 1 யோவான் 4:10ல் நாம், "அவர் ... நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பி[னார்]" என்று வாசிக்கின்றோம். "கிருபாதார பலி" என்ற வார்த்தையானது "தேவனுடைய நீதியினிடத்தில் [பாவங்களுக்காக] நிவிர்த்தி செய்தல், அவருடைய நீதியை சாந்தப்படுத்துதல் அல்லது திருப்திப்படுத்துதல்" என்று அர்த்தப்படுகிறது.*

*கிருபாதார பலியாகும் பாடுகள் மேற்கொள்ள வேண்டிய வடிவம் என்ன? முன்னதாக, மனிதகுலத்துடன் தேவனுடைய செயல்பாட்டில், பலியின் கொள்கை - இன்னொருவருக்காக ஒரு உயிர் கொடுக்கப்பட வேண்டும் என்ற கொள்கை - ஏற்படுத்தப்பட்டிருந்தது (ஆதி. 4:4; 8:20; 31:54; 12:7ஐக் காணவும்). இந்தச் செறிவான கருத்து நிலைநாட்டப்பட்டது: "... இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது" (எபி. 9:22). தேவனுடைய அறிவுறுத்துதலின்படி ஆண்டுகளினூடே, பல்லாயிரக்கணக்கான மிருக பலிகள் செலுத்தப்பட்டன. "காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே" (எபி. 10:4) என்பதே பிரச்சனையாக இருந்தது. ஒரே ஒரு பலி மாத்திரமே அதைச் செய்யக்கூடும்: அதாவது, பூரணத்துவம் வாய்ந்த தேவகுமாரன் (1 பேது. 1:18, 19ஐக் காணவும்) பலியாக வேண்டும். அவரது இரத்தம் மட்டுமே நம்மை "தேவ கோபாக்கினை"யில் இருந்து இரட்சிக்க முடியும் (ரோமர் 5:9). "பாவமன்னிப்பை" சாத்தியமாக்குவதற்கு கிறிஸ்துவினுடைய விலைமதிப்பற்ற இரத்தம் "சிந்தப்பட வேண்டியதாயிற்று" (மத். 26:28).*

*சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம் மேற்கொள்ள வேண்டிய சாயல் என்ன? தேவனுடைய நித்திய நோக்கத்தில் (எபே. 3:11), சிலுவையில் அறையப்பட்டு மரணமடைதல் என்பது முன்தீர்மானமானதாக இருந்தது. பாடுபடவிருந்த ஊழியரின் கைகளும் கால்களும் "உருவக் குத்தப்படும்" என்று சங்கீதக்காரர் கூறினார் (சங். 22:16). கிறிஸ்துவே கூட, தாம் சிலுவையில் அறையப்படவிருந்ததை முன்னுரைத்தார் (மத். 20:17-19; லூக். 24:6-8ஐக் காணவும்) - இது, அவரது கைகளையும் கால்களையும் ஊடுருவுவதை உள்ளடக்கும்.[2] ரோமச் சிலுவையில் இயேசு மரித்தபோது, ஊடுருவப்பட்ட அவரது கரங்கள் மற்றும் பாதங்களில் இருந்தும், கிழிக்கப்பட்ட முன்நெற்றி மற்றும் சிதைக்கப்பட்ட முதுகு ஆகியவற்றில் இருந்து இரத்தம் ஊற்றியது. அவரது மரணத்திற்குப் பின்பு, அவரது விலாவிலிருந்து இரத்தம் வடிந்தது (யோவா. 19:34). வேதாகமத்தின்படி, நாம் அந்த இரத்தத்தின்மூலம் நீதிமான்களாக்கப்பட்டு, தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டு, தெய்வீக கோபத்திலிருந்து காக்கப்படுகின்றோம் (ரோமர் 5:9, 10).*

*இயேசுவின் இரத்தம் நமது இரட்சிப்பை எவ்வாறு சாத்தியமாக்குகிறது என்பதை நாம் மிகச் சரியாகப் புரிந்துகொள்ள முடியுமா? இல்லை - ஆனால் நாம் பின்வருவதைப் புரிந்துகொள்ள முடியும்: அவரது இரத்தம் தேவனுடைய நீதியைத் திருப்தி செய்தது (ரோமர் 3:25; எபி. 2:17; 1 யோவா. 2:2).*

*ஆகையால், அவரது அன்பிற்குப் பதில் செய்ய மனவிருப்பமுமுள்ள (யோவா. 14:15; 1 யோவா. 4:19), இரட்சிப்புக்கான அவரது நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுகின்ற (மாற். 16:15, 16; அப். 2:37, 38) எவரும் இரட்சிக்கப்பட முடியும்! தேவன் நமக்குச் செய்துள்ளவற்றை நாம் முற்றிலுமாகப் புரிந்துகொள்ள இயலாது, ஆனால் அவர் செய்துள்ளவற்றிற்காக நாம் அவரைத் துதிக்கின்றோம். "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" (2 கொரி. 9:15).*

---

*குறிப்புகள்*

[1]*இன்னும் அதிகம் முழுமையான கலந்துரையாடல் ஒன்று* "The Center of God's Love" in David Roper, *Jesus Christ and Him Crucified* (Arvada, Colo.: Christian Communications, 1976) *என்ற பாடத்தில் தரப்பட்டுள்ளது.* [2]*மேசியாவை "ஊடுருவும்" வேறுபட்ட வகையொன்று சகரியா 12:10ல் சித்தரிக்கப்பட்டிருந்தது (யோவா. 19:34, 37ஐக் காணவும்).*

# பிரசங்கக் குறிப்புகள்: "நீங்கள் அங்கிருந்தீர்களா?"

*ஆவிக்குரிய பழைய பாடல் ஒன்று பின்வரும் கேள்விகளைக் கேட்கிறது: "அவர்கள் எனது கர்த்தரைச் சிலுவையில் அறைந்தபோது நீங்கள் அங்கிருந்தீர்களா?"; "அவர்கள் அவரை மரத்தில் ஆணியடித்தபோது நீங்கள் அங்கிருந்தீர்களா?"; "சூரியன் ஒளிதர மறுத்தபோது நீங்கள் அங்கிருந்தீர்களா?" அந்தப் பாடல் முழுவதிலும், "இது சிலவேளைகளில் என்னை நடுங்கச் செய்கிறது, நடுங்கச் செய்கிறது, நடுங்க செய்கிறது" என்ற சொற்றொடர் மீண்டும் மீண்டும் வருகிறது.*[1]

*இந்தப் பாடலுக்கு, "என்ன ஒரு நகைக்கத்தக்க கேள்வி! இயேசு நான் பிறப்பதற்குச் சுமார் பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு மரித்தாரே. நான் எப்படி அங்கே இருந்திருக்க முடியும்" என்பது நமது தொடக்க நிலைப் பதிலாக இருக்கலாம். இருப்பினும், இந்தப் பாடலானது, நீண்ட காலத்திற்கு முன்பு கிறிஸ்துவின் மரணத்தைக் கண்டிருந்த மக்களின் கருத்தை நாம் பிரதிபலிக்கும்படி அறைகூவல் விடுக்கிறது. கொல்கொதாவில் நின்றிருந்தவர்களுடன் நமது வாழ்வை நாம் ஒப்பிடுவதில் நேர்மையாக இருந்தால், அது நம்மை "நடுங்க செய்வதற்கு, நடுங்க செய்வதற்கு, நடுங்க செய்வதற்கு" காரணமாயிருக்க வேண்டும்.*

*சிலுவையின் அருகில் நின்றிருந்த சிலரைப் பற்றி இங்கு விவரிக்கப்படுகிறது. இவர்களில் யாரிலாவது நீங்கள் உங்களைக் காணுகின்றீர்களா? "எனது கர்த்தரைச் சிலுவையில் அறைந்தபோது நீங்கள் அங்கிருந்தீர்களா?"*

***அலட்சியமாயிருந்த போர்ச்சேவகர்கள்***[2]

*இவர்களைப் பேதுரு, "அக்கிரமக்காரர்" என்று அழைத்தார் (அப். 2:23). இவர்கள் தொழில்நுட்பமானவர்களாக, வேதனை மற்றும் மரணம் ஆகியவற்றிற்கு இருதயங்களைக் கடினப்படுத்தியவர்களாக, கொடுக்கப்பட்ட பணிப்பொறுப்பை நிகழ்த்துபவர்களாக இருந்தனர். இவர்கள் கிறிஸ்துவைச் சிலுவையில் உயர்த்திய வேளையில், அவரைக் குறித்துத் தங்கள் உணர்வுகளை ஏதாவது ஒரு வகையில் வெளிப்படுத்தாது இருந்தனர். இன்றைய நாட்களில் பலர் இயேசுவைக் குறித்தும் அவரது தியாகத்தைக் குறித்தும் அலட்சியமாய் இருக்கின்றனர்.*

***பயபக்தியற்ற கும்பல்***
***(யூத உயரதிகார வர்க்கத்தினால் வழிநடத்தப்பட்டவர்கள்)***

*சிலர் வெறுப்பினாலும் சிலர் அறியாமையினாலும் இயேசுவைப் பரிகசித்தனர். எவ்வகையிலும் அவர்கள், பாவமற்ற தேவகுமாரனுக்கு*

அவமரியாதையைக் காண்பித்தனர். மக்கள் இன்னமும் நமது கர்த்தரை மதிக்கத் தவறுகின்றனர் - இவர்களில் சிலர் வெறுப்பினாலும், பெரும் பான்மையானவர்கள் அறியாமையினாலும் இவ்வாறு செய்கின்றனர்.

**மனஸ்தாபப்படாத மற்றும் மனஸ்தாபப்பட்ட கள்ளர்கள்**

சிலர் (மனஸ்தாபப்படாத கள்ளனைப்போல்) தங்கள் வாழ்வில் துன்பம் நடைபெறும் போதும்கூட, சிலுவையினால் தொடப்படாதவர்களாக உள்ளனர். சிலர் (மனஸ்தாபப்பட்ட கள்ளனைப் போல்) துன்ப வேளைகளில் அவரிடமாய்த் திரும்புவதற்காக தேவனுக்கு நன்றி.

**ஈடுசெய்யமுடியாத வகையில் புலம்பியவர்கள்**

இன்னமும் விசேஷித்த வகையிலான சிலர் தங்கள் கண்களில் கண்ணீர் இன்றி சிலுவையைப் புரிந்து உணரக்கூடாதவர்களாக உள்ளனர்.

**கல்வியறிவற்ற கூட்டத்தார்**

இயேசு, "ஏலீ" என்று கூறியபோது, அவர் "எலியாவை" கூப்பிட்டார் என்று இவர்கள் நினைத்து - எலியா வருவாரா என்று பார்க்க அமர்ந்தனர். மக்கள் இறையியலில் குழப்பம் அடையும்போது, அவர்கள் நடைமுறையிலும் குழப்பம் அடைவார்கள்.

**மனம் ஈர்க்கப்பட்ட கவனிப்பாளர்கள்**

நூற்றுக்கு அதிபதியும் போர்ச்சேவகர்களும் இயேசுவின் மரணம் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பூமியதிர்ச்சி ஆகியவற்றினால் தொடப்பட்டனர். கூட்டத்தில் இருந்த மக்கள் தங்கள் மார்பில் அடித்துக் கொண்டனர். நீங்கள் சிலுவையை உற்றுநோக்கி, மனம் தொடப்படாது இருக்க முடியுமா?

இயேசு கொல்கொதாவுக்கு வந்தபோது
அவர்கள் அவரை ஒரு மரத்தில் தொங்கவிட்டனர்.
அவர்கள் கல்வாரியில் அவரது கரங்களிலும் பாதங்களிலும்
ஆணிகளால் துளைத்தார்கள்.
அவர்கள் முள்ளுகளால் ஆன ஒரு கிரீடத்தை அவருக்குச்
சூட்டினார்கள்,
அவரது காயங்கள் சிவந்து ஆழமாய் இருந்தன
ஏனெனில் அவைகள் அநாகரிகமான கொடூரமான நாட்களாயிருந்தன
மனித மாம்சம் மலிவானதாக இருந்தது.

இயேசு எங்கள் நகரத்திற்கு வந்தபோது
அவர்கள் அவரைக் கடந்து சென்றார்கள்,
அவர்கள் அவரது ஒரு முடிக்காவது தீங்கிழைக்கவில்லை,
அவர்கள் அவரை மரிக்கமாத்திரம் அனுமதித்தார்கள்.
ஏனெனில் மனிதர்கள் அதிக மென்மையாக வளர்ந்திருந்தார்கள்
அவர்கள் அவருக்கு வேதனையளிக்க மாட்டார்கள்.

*அவர்கள் தெருக்களில் கடந்து சென்று*
*அவரை மழையில் விட்டுச் சென்றார்கள்.*

*இயேசு இன்னமும், "இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது*
*இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று கதறினார்*
*மற்றும் இன்னமும் மழை பெய்தது, அது குளிர்கால மழையாயிருந்தது.*
*அது அவரை முற்றிலும் முற்றிலும் நனைத்தது.*
*கூட்டத்தினர் தெருக்களை விட்டு இல்லம் சென்றார்கள்*
*காண்பதற்கு ஒரு ஆத்துமாவும் இல்லை,*
*இயேசு சுவருக்கு நேராகக் கூனிப்போய் அமர்ந்தார்*
*அவர் கல்வாரிக்காக அழுதார்.*

G. A. ஸ்டட்டர் - கென்னடி[3]

---

குறிப்புகள்

[1]Barton's *Old Plantation Hymns,* 1899, quoted in *Praise for the Lord,* ed. John P. Wiegand (Nashville: Praise Press, 1997). [2]*நீங்கள் சில வகைகளின் வார்த்தைச் சித்தரிப்பை முன்வைக்க விரும்பலாம்: ரோமப் போர்ச் சேவகர்கள் தங்களது வண்ணமிகுந்த சீருடையில் இருத்தல், மற்றும் யூதத்துவத் தலைவர்கள் தங்கள் மனமீர்க்கும் உடையில் இருத்தல்.* [3]Quoted in Mack Lyon, Program Transcripts from *In Search of the Lord's Way* (October 1999), 18-19.

# இயேசு எந்த நாளில் மரித்தார்?

"கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில், "மூன்று பகல்களும் மூன்று இரவுகளும்" (மத். 12:40) என்று அழைக்கப்பட்ட ஒரு பாடத்தையும் அத்துடன் இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றிய படிப்பில் அந்தத் தலைப்பு பற்றி அதிக நீளமாய் ஆழ்ந்து சிந்திக்கப்படும் என்ற வாக்குத்தத்தத்தையும் உள்ளடக்கியிருந்தது. மற்ற இடங்களிலும் கூட நாம், கடைசி வாரத்தின் - விசேஷமாய் இயேசு எந்த நாளில் மரித்தார் மற்றும் எவ்வளவு நாள் கல்லறையில் இருந்தார் என்பதின் - நாள்வரிசைக் கணக்கை முன்னெதிர் நோக்கியிருந்தோம். முந்திய படிப்புக்களில் நாம், இயேசு கல்லறையில் இருந்த வேளையை எடுத்துரைக்கும் பெரும்பாலான வசனப் பகுதிகளைக் கண்ணோக்கியுள்ளோம், ஆனால் இது இந்தப் பாடக்கருத்தை முழுமையாக ஆராய்ந்து பார்க்க வேண்டிய வேளையாக உள்ளது.

இயேசு வாரத்தின் முதல் நாளிலே உயிர்த்தெழுந்தார் என்ற உண்மை நமது கலந்துரையாடலுக்குத் தொடக்க இடமாக உள்ளது. "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தார்" என்று மாற்கு எழுதினார் (மாற். 16:9)[1] - மற்றும் பிற சுவிசேஷ விவரங்களும் இதையே கூறுகின்றன.[2] நாம் மேலும் தொடர்ந்து படிப்பதற்கு முன், இந்த அடிப்படையான சத்தியத்தை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

அவர் உயிர்த்தெழுந்த நாளை நாம் ஒப்புக்கொண்டுள்ளோம் என்ற யூகத்தின் அடிப்படையில், நமது தொடக்கக் கேள்வி அப்படியே நிலைத்துள்ளது: "இயேசு எந்த நாளில் மரித்தார்?" ஆண்டுகளினூடே பெரும்பான்மையானவர்கள், இயேசு யூதர்களின் வாரத்தின் ஆறாம் நாளில் - தோராயமாக நமது வெள்ளிக்கிழமைக்குச் சரியான நாளில் - மரித்தார் என்று நம்பியிருந்துள்ளனர்.[3] இராபர்ட் தாமஸ் மற்றும் ஸ்டேன்லீ குன்ட்ரீ ஆகியோர், "சபையானது வெள்ளிக்கிழமையை இயேசு மரித்த நாளாகப் பாரம்பரியமாய்க் கண்ணோக்குகிறது … வேதாகமத்தின் மிகச் சிறந்த ஆதாரம், வெள்ளிக்கிழமையில் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை ஆதரிக்கிறது" என்று எழுதினார்கள்.[4] கிறிஸ்துவின் ஊழியத்தின் கடைசி வாரம் பற்றி எனது ஒப்பீடு இந்த முடிவின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

இருப்பினும், ஆண்டுகளினூடே, மாறுபாடான கண்ணோட்டங்கள் எழும்பியுள்ளன. எடுத்துக்காட்டாக, இரண்டாம் நூற்றாண்டில், சபையின் ஒரு பிரிவானது கிறிஸ்து பஸ்கா உணவை உட்கொண்ட நாளை நினைவு கூரும் வகையில் மனித ரீதியாக ஒரு வைபவத்தைக் கண்டுபிடித்தது. இந்த நடைமுறைக்கெதிராகச் சிலர், இயேசு பஸ்கா உணவை உண்மையிலேயே

உண்டார் என்பதை மறுத்தனர். இயேசு உணவை (அது என்னவாக இருப்பினும்) உண்ட அதே நாளிலேயே மரித்தார் என்ற உண்மையானது, கிறிஸ்து மரித்த நாள் பற்றிய அவர்களின் போதனையைப் பாதித்ததென்பது அவசியமாயிருந்தது.

இன்னும் சிலர், இயேசு வெள்ளிக்கிழமையன்று மரிக்கவில்லை என்று போதிக்கின்றனர். கிரேக்கக் கல்வியாளரான B. F. வெஸ்ட்காட் அவர்கள், கிறிஸ்து வியாழக்கிழமையன்று சிலுவையில் அறையப்பட்டதாக வாதிட்டார்.[5] புகழ்பெற்ற *Narrated Bible* என்ற வேதாகமம், இயேசு அநேகமாக வியாழக்கிழமையன்று இறந்திருக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கிறது.[6] வெளிநாட்டிலுள்ள ஒரு சகோதரர் எனக்கு அனுப்பி வைத்து, நான் எனது கோப்புகளில் சேர்த்து வைத்துள்ள ஒரு சிறு கைப் புத்தகம், கர்த்தர் புதன்கிழமையன்று மரித்தார் என்று வலியுறுத்துகிறது.

இந்தக் கேள்விக்கு நாம் அடைகின்ற முடிவு என்பது விசுவாசத்தின் விஷயமாக இருப்பதில்லை. [வாரத்தின்] முதல் நாளிலே இயேசு உயிர்த் தெழுந்தார் என்று நாம் ஒப்புக்கொள்ளுகின்ற வரையிலும், நமது ஐக்கியம் பாதிக்கப்படாதபடி, அவர் எந்த நாளில் மரித்தார் என்பது பற்றி நாம் கருத்து வேற்றுமை கொள்ளக்கூடும். அடிப்படையில், இந்தக் கேள்வியானது, இயேசுவின் வெளியரங்கமான ஊழியத்தின் கடைசி வாரத்தை நாம் எவ்வாறு ஒழுங்கமைத்து ஏற்பாடு செய்கின்றோம் என்பதைப் பற்றியதாக உள்ளது. இருந்தபோதிலும், இது சிலரைக் கவலைப்படுத்துவதால், இதைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு நாம் நேரத்தை எடுத்துக்கொள்வோம்.

## அவர் வெள்ளிக்கிழமையன்று மரித்தார் என்று நம்புவதற்குக் காரணங்கள்

முதலாவது, கிறிஸ்து வெள்ளிக்கிழமையன்று மரித்தார் என்று நான் ஏன் நம்புகின்றேன் என்பதற்கு உங்களுக்கு இரண்டு காரணங்களைக் கொடுக்க அனுமதியுங்கள். (இந்தப் பாடத்தில் உள்ள அடிக்குறிப்புகள், கூடுதல் தகவல்களுக்காக முந்திய படிப்புகளின் விவரங்களை உங்களுக்குக் குறிப்பிடும்.)

(1) இயேசு, "பஸ்கா உணவு போன்ற ஆனால் பஸ்கா உணவாயிராத" உணவை அல்ல, ஆனால் பஸ்கா உணவையே உண்டார் என்று நான் நம்புகின்றேன்.[7] இயேசு உண்மையிலேயே பஸ்கா உணவை உண்டாரா இல்லையா என்பது, இந்தக் கலந்துரையாடலுக்கு அத்தியாவசியமான பகுதியாக உள்ளது. லூக்கா, "பஸ்காவைப் பலியிட வேண்டிய புளிப் பில்லாத அப்பப் பண்டிகை நாள் வந்தது" என்று எழுதினார் (லூக். 22:7). மத்தேயு, "புளிப்பில்லாத அப்பப் பண்டிகையின் முதல் நாளிலே, சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: 'பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே உமக்கு ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர்' என்று கேட்டார்கள்" என்று எழுதினார் (மத். 26:17). சீஷர்களிடத்தில் இயேசு, "நீங்கள் நகரத்திலே இன்னானிடத்திற்குப் போய், ' "என்வேளை சமீபமாயிருக்கிறது, உன் வீட்டிலே என் சீஷரோடேகூடப் பஸ்காவை ஆசரிப்பேன்" என்று போதகர்

சொல்லுகிறார்' என்று அவனுக்குச் சொல்லுங்கள்" என்றார் (மத். 26:18). பின்பு, "இயேசு கற்பித்தபடி சீஷர்கள்போய், பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்" (மத். 26:19). "சாயங்காலமானபோது [பஸ்காவானது ஆயத்தம் செய்யப்பட்ட பின்பு சூரியன் மறைவின் போது தொடங்கிற்று], பன்னிருவரோடுங்கூட அவர் பந்தியிருந்தார்" (மத். 26:20). அவர் தமது சீஷர்களுடன் பந்தியமர்ந்திருந்தபோது, "அவர் அவர்களை நோக்கி: 'நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்' என்று கூறினார்" (லூக். 22:15). இவ்வசனப் பகுதிகளில் இருந்து, இயேசு பஸ்காவைப் புசித்தார் என்று நான் முடிவுசெய்கின்றேன்.[8] இயேசு அவ்வுணவை உண்ட அதே நாளில் மரித்த படியாலும், அந்த ஆண்டில் பஸ்கா பண்டிகை வெள்ளிக்கிழமையன்று வந்தது என்பதில் பொதுவான கருத்தொருமைப்பாடு இருப்பதாலும், இது இயேசுவின் மரணத்தை வெள்ளிக்கிழமையன்று நிகழ்ந்ததாக்குகிறது.

(2) இயேசு ஓய்வுநாளான ஏழாம் நாளுக்கு முந்திய நாளில் மரித்தார் என்று நான் நம்புகின்றேன். இயேசு "ஆயத்த நாளான்று மரித்தார்" என்பதை சுவிசேஷ விவரங்கள் யாவும் சுட்டிக்காண்பிக்கின்றன (யோவா. 19:31; மாற். 15:42; லூக். 23:54; மத். 27:62ஐக் காணவும்). இது ஓய்வுநாளுக்கு ஆயத்த நாளாக இருந்தது. மாற்கு, "ஓய்வுநாளுக்கு முந்தின நாள் ஆயத்த நாளாயிருந்தபடியால்" என்று எழுதினார் (மாற். 15:42; லூக். 23:54; யோவா. 19:31ஐக் காணவும்). சிலர் இந்த "ஓய்வுநாளை" ஏழாம்நாளைக் காட்டிலும் விசேஷித்த "ஓய்வுநாள்" என்றாக்க முயற்சி செய்துள்ளனர், ஆனால் கல்லறையின் அருகில் வந்த இரண்டு பெண்களைப் பற்றிய லூக்காவின் நாள் வரிசை முறைமையானது அப்படிப்பட்ட எந்த முடிவையும் நீக்கிப் போடுகிறது.

- யோசேப்பு மற்றும் நிக்கொதேமு ஆகியோரால் இயேசு அடக்கம் பண்ணப்படுதல் பற்றி, லூக்கா "அந்த நாள் ஆயத்தநாளாயிருந்தது; ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று" என்று எழுதினார் (லூக். 23:54). அந்த இரண்டு மனிதர்களும் இயேசுவின் உடலை அடக்கம் செய்யத் தயார் செய்து கொண்டிருந்தபோது, இரண்டு பெண்கள் கவனித்துக் கொண்டிருந்தனர் (லூக். 23:55).
- சூரியன் மறைந்து ஓய்வுநாள் தொடங்கியபோது, அந்த இரண்டு பெண்களும் "[தாங்கள் தங்கியிருந்த இடத்திற்குத்] திரும்பிப்போய், கந்தவர்க்கங்களையும் பரிமளத் தைலங்களையும் ஆயத்தம்பண்ணி" (லூக். 23:56அ). பின்பு அவர்கள் "கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்" (லூக். 23:56ஆ).
- "வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக் கொண்டு ... கல்லறையினிடத்தில் வந்தார்கள்" (லூக். 24:1).

*வேத வசனத்தில் லூக்கா 23:56ஐத் தொடர்ந்து லூக்கா 24:1 வருகிறது. "வாரத்தின் முதல் நாள்" என்பது அவர்கள் ஓய்ந்திருந்த ஓய்வுநாளுக்குப் பின் உடனடியாக வந்தது என்பதே இதன் மறைகருத்தாக உள்ளது (மத். 28:1ஐக் காணவும்), இது அந்த ஓய்வுநாளை வழக்கமான ஏழாம் நாள் ஓய்வு என்பதாக்குகிறது. இது ஓய்வுநாளுக்கு முந்தியநாள் (கிறிஸ்து மரித்தநாள்) என்பது வழக்கமான வாரத்தின் ஆறாம் நாள் - அதாவது வெள்ளிக்கிழமை என்பதாக்குகிறது.*

## மறுப்பு #1: மூன்று இரவுகள் என்பது "72 மணிநேரம்" என்று அர்த்தப்படுத்துகிறது

*கிறிஸ்து வெள்ளிக்கிழமையன்று மரித்தார் என்ற நிலைப்பாட்டிற்கு மத்தேயு 12:40ல் உள்ள அவரது கூற்றுதான் அடிப்படையான மறுப்பாக உள்ளது: "யோனா இரவும் பகலும் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷ குமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்" (மத். 12:40). "இரவும் பகலும் மூன்று நாள்" என்ற வார்த்தைகளைச் சிலர், நேரடி அர்த்தமாக எடுத்துக்கொண்டு, கிறிஸ்து உயிர்த்த வாரத்தின் முதலாம் நாளில் இருந்து பின்னோக்கிக் கணக்கிட்டு, அவர் மரித்த நாளைத் தீர்மானிக்க முயற்சி செய்கின்றனர். பின்பு அவர்கள் தங்கள் முடிவுக்கு ஏற்ப வேத வசனத்தின் மற்ற விவரங்களை வளைக்கின்றனர்.*

*"இரவும் பகலும் மூன்று நாள்" என்பதை இயேசு, நேர்ப்பொருளில் இருபத்துநான்கு மணிநேரம் கொண்ட மூன்று நாட்களை அர்த்தப்படுத்தப் பயன்படுத்தினாரா இல்லையா என்பதே கேள்வியாக உள்ளது.[9] அவர் அவ்வாறு கூறவில்லை என்பது, அவர் "மூன்றாம் நாளில்" உயிர்ப்பிக்கப் படுதல் பற்றிப் பேசியிருந்த (மத். 16:21; 17:23; 20:19; லூக். 24:7, 21, 46) உண்மையின் அடிப்படையில் தெளிவாகக் காணப்படுகிறது. பவுல் ஏவுதலினால், இயேசு "மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்" என்று கூறிய போது (1 கொரி. 15:4) தொடக்க கால சபையின் விசுவாசத்தை வெளிப் படுத்தினார். நேரடியாக "இரவும் பகலும் மூன்று நாட்களுக்குப்" பின்பு உயிர்த்தெழுதல் என்பது "மூன்றாம் நாளாயிராமல் நான்காம் நாளாக இருக்கும்."[10]*

*பழைய ஏற்பாட்டில் இதைப் போன்ற வார்த்தையமைப்பிற்கு, எஸ்தர் 4:16 மற்றும் 5:1 ஆகிய வசனங்களைக் காணவும்: 4:16ல், எஸ்தர், மொர்தெகாயையும் மற்ற யூதர்களையும் "மூன்று நாட்களுக்கு" உபவாசிக்கும்படி கேட்டுக்கொண்டாள், மற்றும் தானும் தனது தோழிமார் களும் அவ்வாறே செய்வதாகவும் கூறினாள். மூன்று நாட்களுக்குப் பின்பு அவள் அரசரிடம் செல்லுவாள். இருப்பினும், 5:1ம் வசனம், "மூன்றாம் நாளிலே" எஸ்தர் அரசரிடம் சென்றதாகக் குறிப்பிடுகிறது. "மூன்றாம் நாளிலே" என்பதை அடிக்கோடிடவும்.*

*மத்தேயு 12 மற்றும் எஸ்தர் 4, 5ம் அத்தியாயங்களில் உள்ள "மூன்று நாட்கள்" என்ற வார்த்தைகளை ஏதோ ஒரு வகையில் தளர்வாகப் பயன்*

படுத்துவதாகத் தோன்றுதலை நாம் எவ்வாறு விளக்கப்படுத்த முடியும்? பெரும்பாலான கல்வியாளர்கள், "நிகழ்ச்சிகளின் வரிசைத் தொடர் ஒன்றில் ஒரு நாளின் பகுதியாக உள்ளதை யூதர்கள் முழு நாளாகக் கணக்கிட்டனர்" என்று ஒப்புக்கொள்ளுகின்றனர்.[11] இவ்வாறு காலத்தை நீர்த்துப்போன வகையில் பயன்படுத்துதல் என்பது, தற்போதைய கலந்துரையாடலில் உள்ள திறவுகோல் வசனங்களில் காணப்பட முடியும்:

- சிலவேளைகளில் வேத வசனமானது, இயேசு மூன்றாம் நாளுக்குப் *பின்பு* (கிரேக்கம்: *meta*) உயிர்ப்பிக்கப்படுதல் பற்றிப் பேசுகிறது (மத். 27:63; மாற். 8:31; மாற். 9:31; 10:34[12]ஐக் காணவும்).
- இதற்கு மறுபுறத்தில், வேத வசனங்கள், இயேசு மூன்றாம் நாளில் உயிர்ப்பிக்கப்படுவார் என்றும் சுட்டிக் காண்பிக்கின்றன (மத். 16:21; 17:23; 20:19; லூக். 9:22; 18:33; 24:7, 46; 1 கொரி. 15:4ஐக் காணவும்).
- சிலவேளைகளில், உயிர்த்தெழுதல் பற்றிய இணைவசனப் பகுதிகளில், "பின்பு" மற்றும் "இல்" என்ற சொற்றொடர்கள் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மாற்கு சுவிசேஷத்தில் நல்ல அறிக்கைக்குப் *பின்பு* உடனடியாக, இயேசு "மூன்று நாளைக்குப் பின்பு," "மீண்டும் உயிர்த்தெழுவதாகக்" கூறினார் என்று மாற்கு எழுதினார் (மாற். 8:31) ஆனால், மத்தேயு மற்றும் லூக்காவின்படி, "மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்திருக்க வேண்டும்" என்று அவர் கூறினார் (மத். 16:21; லூக். 9:22).
- கிறிஸ்துவின் விரோதிகள், இயேசு "மூன்று நாளைக்குப் பின் எழுந்திருப்பேன்" என்று கூறியதாக மேற்கோள் காண்பித்தனர் (மத். 27:63), ஆனால் அவர்கள் "மூன்று நாள்" என்பது எழுபத்து இரண்டு மணிநேரங்கள் கொண்ட கால அளவு என்று புரிந்துகொண்டிருக்கவில்லை. மாறாக, அவர்கள் "மூன்று நாள் வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்துவதில்" தான் அக்கறையுள்ளவர்களாக இருந்தனர் (மத். 27:64).[13]

இயேசுவின் மரணம் நடைபெற்றதாக ஒருவர் தேர்ந்துகொள்ளும் நாள் எதுவாக இருப்பினும், "எழுபத்து இரண்டு மணிநேரம் என்பதே 'இரவும் பலும் மூன்று நாள்' என்பதை அர்த்தப்படுத்துகிறது என்ற அழுத்தமான விளக்கமானது சுவிசேஷ எடுத்துரைப்புகளில் இருந்து பெறப்பட முடியாது."[14] மத்தேயு 12:40ல் இயேசு, "நாள் வரிசை முறைமையில் கணக்கீடு ரீதியான மிகச் சரியான தன்மையைப் பெற முயற்சி செய்திருக்கவில்லை,"[15] ஆனால் அவர் பெரிய மீனின் வயிற்றினுள் யோனாவின் "அடக்கத்தை," தாம் கல்லறையில் இருக்கப்போகும் நிகழ்ச்சிக்கு ஒரு உருவகமாக மாத்திரம்

பயன்படுத்தினார் என்பதே அவ்வசனத்தைப் புரிந்துகொள்ளும் மிகச் சிறந்த வழிமுறையாக இருக்கும்.

## மறுப்பு #2: யோவான் சுவிசேஷத்தில் உள்ள வரிசை முறைமை ஒப்பீட்டு சுவிசேஷங்களின் வரிசைமுறைமையிலிருந்து மாறுபடுகிறது

மத்தேயு 12:40க்குப் பிறகு, வெள்ளிக்கிழமையன்று சிலுவையில் அறையப்பட்டதற்கு, யோவான் சுவிசேஷ விவரத்தில் உள்ள ஐந்து வசனப் பகுதிகள் கிறிஸ்துவின் வாழ்வின் கடைசி நிகழ்ச்சிகளை ஒப்பீட்டு சுவிசேஷ விவரங்களில் இருந்து மாறுபட்ட கால அமைவில் இடுகின்றன என்பது பொதுவான மறுப்பாக உள்ளது. A. T. இராபர்ட்ஸன் அவர்கள் இந்த வசனப் பகுதிகளைக் குறித்து விரிவான கலந்துரையாடல் ஒன்றைக் கொண்டுள்ளார், அதற்கு முகவுரையாகப் பின்வரும் குறிப்புகளை அவர் கொடுத்தார்: "இந்த வசனப் பகுதிகள் ஒவ்வொன்றையும் கவனமாகப் பரிசீலனை செய்து பார்த்தல் என்பது ... இயேசு பஸ்கா உணவை அதற்கென்று குறிக்கப்பட்ட வேளைக்கு முன்பு உண்டார் என்று கூறுவதில்லை, ஆனால் அதற்கு நேர்மாறானதையே கூறுவதாகக் காணப்படுகிறது."[16] இங்குள்ள இடமானது கேள்வியின் கீழ் உள்ள வசனப் பகுதிகளைப் பட்டியலிடுவதற்கும், அத்துடன் ஒரு சில சுருக்கமான குறிப்புகளை அளிப்பதற்கும் மாத்திரம் என்னை அனுமதிக்கிறது.[17]

- யோவான் 13:1 வசனமானது, "பஸ்கா பண்டிகைக்கு முன்னே" என்றுள்ளது, அதே வேளையில் அடுத்த வசனங்கள் "போஜனம் பண்ணிக் கொண்டிருக்கையில்" என்று குறிப்பிடுகின்றன. வெள்ளிக்கிழமையன்று [இயேசு] சிலுவையில் அறையப்பட்டதை மறுக்கின்றவர்கள், யோவான் 13:1, 2 வசனங்களில் கூறப்படும், மேல்வீட்டில் உண்ணப்பட்ட உணவு பஸ்கா உணவாயிராது என்று தவறாக நிரூபிக்கின்றனர். இருப்பினும், யோவானின் சுவிசேஷ விவரத்தை ஒப்பீட்டு சுவிசேஷ விவரங்களுடன் ஒப்பிடும்போது, யோவான் 13:1 வசனமானது பஸ்கா விருந்திற்குச் சற்றே முன்பான காலகட்டத்தைக் குறிப்பிடுகிறது என்று காணப்படுகிறது, ஏனெனில் வசனம் 2ல் பஸ்கா உணவைப் பற்றியே பேசப்படுகிறது.
- மேல்வீட்டில் உணவின்போது, இயேசு யூதாஸிடம் "நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்" என்று கூறினார் (யோவா. 13:27). மற்ற அப்போஸ்தலர்கள், அவனிடத்தில் இயேசு, "பண்டிகைக்குத் தேவையானவற்றைக் கொள்ளும்படிக்கு" கூறுவதாக நினைத்தனர் (யோவா. 13:29). வெள்ளிக்கிழமையில் இயேசு சிலுவையில் அறையப்பட்டதை மறுக்கின்றவர்கள், "பண்டிகை" என்பது

பஸ்காவைக் குறிக்கிறது, எனவே இயேசுவும் அப்போஸ்தலர்களும் அவ்வேளையில் பஸ்கா உணவை உண்டிருக்க முடியாது என்று யூகிக்கின்றனர். இது ஒரு தேவையற்ற முடிவாக உள்ளது. ஒரு நாள் பஸ்காவைத் தொடர்ந்து ஏழு நாட்கள் புளிப்பில்லாத அப்பப் பண்டிகை வந்தது. மற்ற அப்போஸ்தலர்கள், யூதாஸ் பிந்திய பண்டிகைக்கு ஆயத்தம் செய்யவிருந்ததாக நினைத்திருக்கக் கூடும்.

- யூதத் தலைவர்கள் இயேசுவைப் பிலாத்துவினிடத்தில் கூட்டிக்கொண்டு வந்தபோது, "தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள்" (யோவா. 18:28). வெள்ளிக்கிழமையில் [இயேசு] சிலுவையில் அறையப்பட்டதை மறுக்கின்றவர்கள், இந்தக் கூற்றானது மேல்வீட்டில் உணவு உட்கொள்ளப்பட்ட பின்பு வருகிறதால், முந்திய உணவு பஸ்கா உணவாக இருந்திராது என்று முடிவு செய்கின்றனர். இராபர்ட்ஸன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> முதல் பார்வையில் இது ஒரு முரண்பாடுபோல் தோன்றுகிறது ... ஆனால் "பஸ்கா" என்ற வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் மூன்று கருத்துக்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது, அதாவது பஸ்கா இராவிருந்து, பஸ்கா ஆட்டுக்குட்டி அல்லது பஸ்கா பண்டிகை. இவ்வார்த்தையானது, யோவான் சுவிசேஷத்தில் இந்த நிகழ்ச்சியின் போது பயன்படுத்தப்பட்டது தவிர இன்னும் எட்டு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது, அவை ஒவ்வொன்றிலும் பஸ்கா பண்டிகையே அர்த்தப் படுத்தப்பட்டது.[18]

ஒப்பீட்டு சுவிசேஷ எழுத்தாளர்களின் தெளிவான கூற்றுக்களின்படி, பஸ்கா உணவு என்பது முந்திய மாலை வேளையில் உண்ணப்பட்டது என்பதால் (மத். 26:17-19; மாற். 14:12, 14, 16; லூக். 22:8, 11, 13, 15), சனதெரீன் சங்கத்தின் பிரதிநிதிகள், எட்டுநாள் பண்டிகையின் தொடர்பாக உண்ணப்பட்ட இன்னொரு உணவை (அல்லது உணவுகளை)த்தான் சிந்தையில் கொண்டிருந்தனர் என்பது தெளிவு.[19]

- இயேசு விசாரிக்கப்பட்ட நேரத்தை, "அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்த நாளும்" என்று யோவான் அடையாளப்படுத்தினார் (யோவா. 19:14). வெள்ளிக்கிழமையன்று இயேசு சிலுவையில் அறையப்பட்டதை மறுக்கின்றவர்கள், "ஆயத்த நாள்" என்ற

சொற்றொடர் பஸ்கா உணவுக்கென்று ஆயத்தம் செய்வதைக் குறிப்பிடுகிறது என்று யூகிக்கின்றனர், ஆனால் இந்தச் சொற்றொடரானது ஓய்வுநாளுக்கென்று ஆயத்தம் செய்வதைக் குறிப்பிடுவதற்கு யூதர்களால் பயன்படுத்தப்பட்டது (மத். 27:62; மாற். 15:42; லூக். 23:54; யோவா. 19:31, 42 ஆகிய வசனங்களைக் காணவும்).[20] இவ்வசனப் பகுதியில், "பஸ்கா" என்ற வார்த்தை யோவான் 18:28ல் உள்ளது போலவே உணவையல்ல ஆனால் பண்டிகையையே குறிப்பிடுகிறது. NIV வேதாகமத்தில் "day of Preparation of Passover Week" என்றுள்ளது. வேறு வார்த்தைகளில் குறிப்பிடுவதென்றால், அது "பஸ்கா [வாரத்தின்போது] வந்த [ஓய்வுநாளுக்கு] ஆயத்த நாளாயிருந்தது."

- யோவான் 19:31, இயேசு மரித்ததற்கு அடுத்தநாள் "ஓய்வுநாளாயிருந்தது" என்று சுட்டிக்காண்பிக்கிறது, ஆனால் அதை "பெரிய நாள்" என்று அழைக்கிறது. வெள்ளிக்கிழமையன்று [இயேசு] சிலுவையில் அறையப்பட்டதை மறுக்கின்றவர்கள், இது சாதாரண (ஏழாம் நாள்) ஓய்வு என்று அர்த்தப்படுத்துவதில்லை, ஆனால் இது பஸ்காவின்போது கடைப்பிடிக்கப்பட்ட மற்ற ஓய்வுநாட்களில் ஒன்றாக இருந்தது என்று முடிவுசெய்கின்றனர். ஏற்கனவே குறிப்பிட்டபடி, இது வழக்கமான ஏழாம் நாள் ஓய்வு என்பதாகவே உள்ளது, சந்தர்ப்பப் பொருளில் வேறு எவ்விதமாகவும் சுட்டிக்காட்டுதல் எதுவும் இருப்பதில்லை. எட்டுநாள் பண்டிகையின் வேளையில் இந்த ஓய்வுநாள் வந்தது என்பது இதை "கூடுதலான விசேஷம்" கொண்டதாக்குகிறது.[21]

## விசுவாச விஷயம்?

வெள்ளிக்கிழமையில் [இயேசு] சிலுவையில் அறையப்பட்டதற்கான மற்ற மறுப்புகளும் குறிப்பிடப்பட முடியும்,[22] ஆனால் நான் இவ்விஷயம் அவசியமானதைக் காட்டிலும் அதிக காலத்தையும் இடத்தையும் ஏற்கனவே எடுத்துக்கொண்டுள்ளேன். "கூறப்பட்ட எல்லா உண்மைகளின் கண்ணோக்கிலும் [இயேசு] வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரையில் கல்லறையில் இருந்தார் என்ற கருத்தைப் பற்றிக்கொள்ளுதல் என்பது தர்க்கரீதியாகச் சரியானதாக உள்ளது. இந்தக் கண்ணோட்டமானது சுவிசேஷப் புத்தகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா நிபந்தனைகளையும் சந்திக்கிறது"[23] என்ற ஹெஸ்டர் அவர்களின் கூற்றுடன் நான் கருத்தொருமைப்படுகின்றேன். இருப்பினும், ஆதாரத்தை அளந்துபார்த்து உங்கள் சொந்த முடிவுகளை ஏற்படுத்தும்படி நான் இந்த விஷயத்தை உங்களிடம் விட்டுவிடுகின்றேன்.

*இது ஒரு விசுவாச விஷயமே அல்ல என்பது மாத்திரமே நினைவில் கொள்ளும்படி நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். என்னுடையதிலிருந்து மாறுபட்ட ஒரு முடிவை நீங்கள் அடைந்தால் - நீங்களும் என்னைக் குறித்து இதே விதமான அக்கறை கொள்ளுவீர்கள் என்று நான் நம்புகின்றேன்.*

---

*குறிப்புகள்*

[1]*மாற்கு 16:9ம் வசனம், மாற்கு சுவிசேஷத்தின் வழக்கிற்குட்படும் முடிவின் பகுதியாக உள்ளது. இந்த வழக்கிற்குரிய முடிவு பற்றி இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் காணவும்.* [2]*"வரலாற்றில் மிகவும் முக்கியமான மூன்று நாட்கள்" என்ற முற்பகுதியில் உள்ள பாடத்தில் உள்ள உயிர்த்தெழுதல் பற்றிய கலந்துரையாடலைக் காணவும்.* [3]*யூதர்களின் நாள் என்பது சூரியன் மறைவிலிருந்து சூரியன் மறைவுவரை சென்றது என்பதை மனதில் வைக்கவும்.* [4]Robert L. Thomas, ed., and Stanley N. Gundry, assoc. ed., *A Harmony of the Gospels* (Chicago: Moody Press, 1978), 320. [5]R. C. Foster, *Studies in the Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1971), 187. [6]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg: Harvest House Publishers, 1984), 1454-56. [7]*"கிறிஸ்துவின் வாழ்வு, 6" என்ற புத்தகத்தில் "ஆயத்தமாகுதல்" என்ற பாடத்தில் காணவும்.* [8]*"யோவானின் சீஷரான போலிகார்ப் அவர்கள், இயேசு பஸ்கா உணவை உண்டார் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார்"* (A. T. Robertson, *A Harmony of the Gospels for Students of the Life of Christ* [New York: Harper & Row, 1950], 280). [9]*இவ்வசனப்பகுதி பற்றிய கூடுதல் கலந்துரையாடலுக்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "மூன்று பகல்கள் மற்றும் மூன்று இரவுகள்" என்ற பாடத்தில் காணவும்.* [10]Foster, 192.

[11]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 306. *உதாரணத்திற்கு, ஆதி. 42:17, 18; 1 சாமு. 30:12, 13; 1 இரா. 20:29; 2 நாளா. 10:5, 12 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும். மேலும் எபி. 11:30ஐ யோசு. 6:15உடன் ஒப்பிடவும்.* [12]*மூலவசனப்பகுதியில், மாற்கு 9:31 மற்றும் 10:34 ஆகிய வசனங்களில் "மூன்று நாளைக்குப் பின்பு* (after) [Gk.: *meta*] *என்றுள்ளது"; ஆனால்* NASB*யில், இது* "three days later" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மத்தேயு 26:61 மற்றும் மாற்கு 14:58 ஆகிய வசனங்களில்,* "after" *என்று மறைமுகமாக உணர்த்துகிற இன்னொரு முன்னிடைச் சொல் (dia) பயன்படுத்தப்பட்டுள்ளது.* [13]*இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள "வரலாற்றில் மிகவும் முக்கியமான மூன்று நாட்கள்" என்ற பாடத்தில் காணவும்.* [14]*சிலுவையில் அறையப்பட்டது புதன்கிழமையன்று நடைபெற்றதாகக் கூறுதலானது எழுபத்தியிரண்டு மணி நேரங்களுக்கு அதிகமான கால அளவை உண்டாக்குகிறது; அதை வியாழக்கிழமையன்று நடைபெற்றதாகக் கூறுவது மூன்று நாட்கள் மற்றும் மூன்று இரவுகளின் பாகங்களை உண்டாக்குகிறது, ஆனால் முழுமையான எழுபத்தி இரண்டு மணி நேரம் என்ற கால அளவை உண்டாக்குவதில்லை.* [15]Ibid. [16]Robertson, 281-84. [17]*இராபர்ட்ஸன் அவர்கள் அதிகம் முழுமையான கலந்துரையாடல் ஒன்றை உள்ளடக்கினார். கிறிஸ்து வெள்ளிக்கிழமையன்று மரித்தார் என்று கூறிய தாமஸ் மற்றும் குன்ட்ரீ அவர்களால், மாறுபட்ட அணுகுமுறையையொன்று மேற்கொள்ளப்பட்டது. அவர்கள், காலம் மற்றும் நாட்களைக் குறிப்பதற்கு எழுத்தாளர்கள் மாறுபட்ட முறைமைகளைப்*

பயன்படுத்தினர் என்று கருத்துத் தெரிவிப்பதன் மூலம், யோவான் சுவிசேஷத்தையும் ஒப்பீட்டு சுவிசேஷ விவரங்களையும் ஒப்புரவாக்கினார் (Thomas and Gundry, 321-22). [18]Robertson, 282-83. ஒப்பீட்டு சுவிசேஷ எழுத்தாளர்கள், பஸ்கா உணவைக் குறிப்பதற்கு ‘‘பஸ்கா’’ என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள், ஆனால் யோவான் இந்த வார்த்தையை எவ்வாறு பயன்படுத்தினார் என்பதே நமது அக்கறையாக உள்ளது. [19]இவ்வசனத்தில் “பஸ்கா” என்ற வார்த்தை பஸ்கா உணவைக் குறிப்பதில்லை என்பதை நிலைநாட்டுவதற்கு இங்கு இன்னொரு வழிமுறை உள்ளது: அரமனைக்குள் பிரவேசித்தல் என்பது அநேகமாக, அந்தத் தலைவர்களை சூரியன் மறையும் நேரம் வரையில் மாத்திரமே தீட்டானவர்களாக்கியிருக்கும். (சூரியன் மறையும் நேரத்தில் முடிந்துபோன சடங்காச்சார ரீதியான தீட்டுகளின் உதாரணங்களுக்கு, லேவி. 15:1-24; 17:15, 16 ஆகிய வசனங்களைக் காணவும்.) [20]இயேசு வெள்ளிக்கிழமையன்று மரித்தார் என்று நான் நம்புவதற்கு (இந்தப் பாடத்தின் முன்பகுதியில் நான் கொடுத்துள்ள) எனது இரண்டாவது காரணத்தைக் காணவும். மேலும், “கிறிஸ்துவின் வாழ்வு, 6” என்ற புத்தகத்தில் காணவும்.

[21]இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள “வரலாற்றில் மிகவும் முக்கியமான மூன்று நாட்கள்” என்ற பாடத்தில் காணவும். [22]எடுத்துக்காட்டாக, பஸ்காவைப் பற்றிப் பழைய ஏற்பாடு எதைப் போதிக்கிறது என்பதற்கு பொருளறி வேதவசன ரீதியான விவாதம் ஒன்றுள்ளது. கருத்தறி விவாதம் ஒன்று, வியாழக்கிழமையன்று பஸ்கா ஆட்டுக்குட்டியானது தேவாலயத்தில் பலிசெலுத்தப்படும் அதே நேரத்தில் கிறிஸ்து சிலுவையில் பலிசெலுத்தப்பட்டது என்பது பொருத்தமானதாக இருந்திருக்கும் என்று கருத்துத் தெரிவிக்கிறது. [23]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 224.

# சிலுவையின் அருகில் பெண்கள்

*சிலுவையில் கிறிஸ்துவின் முதல் மூன்று மணி நேரங்களில், யோவானின் பட்டியல்களின்படி, பின்வரும் பெண்கள், "சிலுவை யினருகே" நின்றிருந்தனர்: "அவருடைய தாயும் [மரியாளும்], அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும்" (யோவா. 19:25). "கிலெயோப்பா மரியாள்" என்பவள் இயேசுவின் தாயினு டைய சகோதரியாயிருக்கச் சாத்தியக்கூறுள்ளது, ஆனால் அநேகமாக நாம், இவ்விருவரும் [கூடப்பிறந்திராத] தனித்தனி நபர்கள் என்று புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. J. W. மெக்கார்வீ அவர்கள், பின்வருவன உட்பட இந்த முடிவிற்குப் பல்வேறு காரணங்களைப் பட்டியலிடுகின்றார்:*[1] *(1) இரு சகோதரிகளுக்கு - மரியாள் என்ற - ஒரே பெயர் இருத்தல் என்பது சாத்திய மானதல்ல. (2) "யோவான் இரு ஜோடிப் பெண்களின் பெயர்களைத் தருகின்றார், ஒவ்வொரு ஜோடியும் 'and' என்ற சொல்லுடன் இணைக்கப் பட்டுள்ளன. முதல் ஜோடி இயேசுவின் நெருங்கிய உறவினர்களாயிருந் தனர், இந்த ஜோடி பெயரின்றி குறிப்பிடப்பட்டுள்ளது, இது பெயர்கள் தரப்பட்டுள்ளதும் இயேசுவுக்கு உறவினரல்லாததுமான இன்னொரு ஜோடிக்கு இணையாக உள்ளது."*[2] *(3) மரியாளின் சகோதரியைப் பெயர் கூறாது விட்டுவிடுதல் என்பது, தமது குடும்பத்தில் யாரையும் பெயர் கூறாது விட்டுவிடும் யோவானின் பழக்கத்திற்கு இசைந்ததாக உள்ளது. (யோவான் தம்மையோ, தமது சகோதரர் யாக்கோபையோ அல்லது தமது தாயையோ ஒருக்காலும் பெயர் குறிப்பிட்டதில்லை; அவர் தமது சித்தியாக இருந்திருக்கக் கூடிய இயேசுவின் தாயையும் ஒருக்காலும் பெயர் குறிப்பிட்டதில்லை.) யோவான் நான்கு பெண்களைக் குறிப்பிட்டார் என்று நாம் முடிவு செய்கின்றோம்.*

*சிலுவையில் இயேசுவின் கடைசி மூன்று மணி நேரங்களில் - அதாவது, இயேசுவின் தாயார் அவ்விடத்தை விட்டு வழிநடத்திச் செல்லப்பட்ட பின்பு (யோவா. 19:26, 27) - மூன்று பெண்கள் கொண்ட ஒரு குழுவானது இன்னமும் சிலுவையை "தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்" (மத். 27:55; மாற். 15:40). இந்தப் பெண்களைப் பற்றி மத்தேயுவின் பட்டியலானது பின்வருமாறு உள்ளது: "அவர்களுக்குள்ளே மகதலேனா மரியாளும், யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், செபெதேயுவின் குமாரருடைய தாயும் இருந்தார்கள்" (மத். 27:56). மாற்கு, "மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும்" என்று பட்டியலிட்டார் (மாற். 15:40). மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோரின் பட்டியலில் உள்ளவற்றில் இரு*

பெயர்கள் ஒன்றுபோலுள்ளது: மகதலேனா மரியாள் மற்றும் (சின்ன) யாக்கோபு, யோசேப்பு (யோசே) ஆகியோரின் தாயாகிய மரியாள். இது, மாற்குவின் பட்டியலில் உள்ள "சலோமே" என்பவள், மத்தேயுவின் பட்டியலில் உள்ள "செபதேயுவின் குமாரருடைய தாய்" என்று குறிப்பிடப் படும் அதே பெண்தான் என்று சுட்டிக்காட்டும். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், சலோமே என்பவள் யாக்கோபுவுக்கும் யோவானுக் கும் தாயாக இருந்தாள்.

மகதலேனா மரியாள், யோவானின் முந்திய பட்டியலிலும், மத்தேயு மாற்கு ஆகியோரின் பிந்திய பட்டியலிலும் தோன்றுகிறதினால், இந்தப் பட்டியல்கள் அதே பெண்களைக் குறிப்பதாகப் பல கல்வியாளர்கள் நம்பு கின்றனர். விஷயம் இதுவாக இருந்தால், முந்திய இரு பத்திகளில் அடையப் பெற்ற முடிவை மனதில் வைத்துப் பார்க்கையில், இப்பட்டியல்களின் ஒப்பீடு ஒன்று பின்வருமாறு:

| யோவானின் பட்டியல் | மத்தேயு & மாற்குவின் பட்டியல் |
|---|---|
| இயேசுவின் தாயான மரியாள் | (காட்சியில் இருந்து கடந்துவிட்டார்) |
| இயேசுவின் தாயினுடைய சகோதரி | செபதேயுவின் மனைவியான சலோமே |
| மரியாள் கிலெயோப்பாவின் மனைவி | யாக்கோபு மற்றும் யோசேப்பு ஆகியோரின் தாயான மரியாள் |
| மகதலேனா மரியாள் | மகதலேனா மரியாள் |

"வேறே அநேக ஸ்திரீகளும்" அங்கு இருந்ததினால் (மாற். 15:41), சலோமே என்பவள் இயேசுவின் தாயான மரியாளுடைய சகோதரியா யிருந்தாள் என்ற கருத்துப் பற்றி ஒருவர் உபதேச ரீதியாக இருக்க முடியாது; ஆனால் விஷயம் இதுவாக இருந்தது என்பதற்குப் பலத்த சாத்தியக்கூறும், நிகழ்தகவும் கூட உள்ளது. வேறு ஓரிடத்தில் குறிப்பிடப்பட்டபடி, இது யாக்கோபு மற்றும் யோவான் என்ற அப்போஸ்தலர்களை இயேசுவுக்கு இனத்தாராக்கும்.

குறிப்புகள்

[1]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 225. [2]Ibid.

# பிரசங்கக் குறிப்புகள்: "அவர் . . . அடக்கம்பண்ணப்பட்டார்"

*கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்பவைகளே சுவிசேஷத்தின் முதன்மையான உண்மைகளாக உள்ளன. இயேசு தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி அடிக்கடி முன்னுரைத்திருந்தார் (மத். 16:21; 17:22, 23; லூக். 18:31-33). அவர் தமது சரீரம் அடக்கம் பண்ணப்படுவதைப் பற்றியும் அறிவித்திருந்தார். அவர் யோனா "மீனின் வயிற்றினுள் இருந்தது" பற்றிய விவரிப்பைப் பயன்படுத்தியபோது, "அதுபோல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தினுள் இருப்பார்" என்று கூறி (மத். 12:40) அதை [அடக்கம் பண்ணப்படுதலை] மறைமுகமாய் உணர்த்தினார். பெத்தானியாவில் அவர் மரியாளினால் அபிஷேகம் பண்ணப்பட்டபோது, அவர் தமது சரீரம் அடக்கம் பண்ணப்படுதல் குறித்துத் தெளிவாய்ப் பேசினார். அவர், "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்; நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள்" என்று கூறினார் (மாற். 14:8; மத். 26:12; யோவா. 12:7ஐக் காணவும்).*

*அடக்கம்பண்ணப்படுதலானது அதற்கே உரிய வழியில் மற்ற இரண்டு மைய உண்மைகளைப் போன்றே முக்கியமானதாக உள்ளது, ஆனால் இயேசுவின் சரீரம் அடக்கம்பண்ணப்படுதல் என்பது அதற்கு முந்திய (அவரது மரணம் என்ற) நினைவுகூரத்தக்க நிகழ்ச்சியினாலும், அதற்குப் பிந்திய (அவரது உயிர்த்தெழுதல் என்ற) எழுச்சிமிக்க நிகழ்ச்சியினாலும் நிழலிடப்படுகிறது. இயேசுவின் சரீரம் அடக்கம்பண்ணப்பட்ட நிகழ்ச்சியின் தனிச்சிறப்பு என்ன? சுவிசேஷ வரலாற்றில் இது நிறைவேற்றும் பணிப் பொறுப்பு என்ன? அவரது சரீரம் அடக்கம்பண்ணப்பட்ட நிகழ்ச்சியானது நமது வாழ்வில் ஏற்படுத்தும் செயல்தாக்கம் என்ன? இந்தக் கேள்விகளை ஆராய்வதற்கு நாம் சற்று நேரம் எடுத்துக் கொள்வோம்.*

## கடந்த காலத்தில் அவரது சரீர அடக்கம்

இயேசு மரித்தார் என்று அறிவிக்கப்பட்டபோது, அவரது சரீரத்தை எடுத்துக்கொள்வதற்கு, அரிமத்தியாவூர் யோசேப்பு, பிலாத்துவினிடத்தில் அனுமதி கேட்டார். நிக்கொதேமுவின் உதவியுடன், யோசேப்பு இயேசுவின் சரீரத்தைத் துப்பட்டியில் போர்த்தி தமக்குச் சொந்தமான புதிய கல்லறையில் கிடத்தினார் (மத். 27:59, 60; மாற். 15:46; லூக். 23:50-53;

யோவா. 19:38-40).

அடக்கம்பண்ணப்படுதல் ஒரு அன்பு நிறைந்த செயலாயிருந்தது. யோசேப்பு இயேசுவின் உடலை மீட்டுக் கொள்ளாதிருந்தால், அது குற்ற வாளிகளுக்கென்று இருந்த அடையாளமற்ற கல்லறையில் வீசியெறிந் திருக்கப்படும்.[1]

அது ஒரு தைரியமான செயலாயிருந்தது. இயேசுவின் உடலை உரிமைகோரி அடக்கம் செய்ததில் யோசேப்பும் நிக்கொதேமுவும் அதிக மான இடர்ப்பாட்டிற்கு உட்பட்டிருந்தனர்.

அது ஒரு அவசியமான செயலாயிருந்தது. நியாயப்பிரமாணத்தின்படி இயேசுவின் உடல், சூரியன் மறைவதற்கு முன்னர் புதைக்கப்பட வேண்டிய தாக இருந்தது. மிக முக்கியமாக, இயேசு உண்மையிலேயே மரித்திருந்தார் எனவே உண்மையாகவே மீண்டும் உயிரோடு வந்தார் என்பதை நிலை நாட்டுவதில் அது ஒரு அவசியமான பகுதியாகவும் இருந்தது.

அது ஒரு ஏற்புடைய செயலாயிருந்தது. பல இலட்சக்கணக்கான மக்கள் மரித்திருக்கின்றனர், பின்பு அவர்களின் உடல்கள் பூமியில் வைக்கப் படுகின்றன. "எல்லா விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக" இருந்தவர் என்ற வகையில் (எபி. 2:17), கிறிஸ்துவின் உடலும் "பூமியின் இருதயத்தில்" வைக்கப்பட வேண்டியதாயிற்று (மத். 12:40). காலங்களில் நடந்தவற்றிலேயே மாபெரும் அற்புதத்தை வினோதப் பிரியமான கண்கள் காணாதிருக்க வேண்டும் என்பதும் ஏற்புடையதாகவே உள்ளது.

அது ஒரு எதிர்பார்க்கப்பட்ட செயலாக இருந்தது. யோசேப்பும் நிக்கொதேமுவும், அதை உணர்ந்தறியாதிருந்தனர், ஆனால் இயேசுவின் உடல் அடக்கமானது மூன்று படிநிலைத் திட்டத்தில் இரண்டாவது படிநிலையாக மாத்திரம் இருந்தது. அது முடிவாக இருக்கவில்லை; அதற்கு நேர்மாறாக, அது ஒரு தொடக்கத்தை எதிர்நோக்கிற்று.

## நிகழ்காலத்தில் நமது அடக்கம்

நம்முடைய அடக்கத்தைப் பற்றிப் பேசுகையில் நான், உடல்ரீதியாக இறந்தவர்களின் அடக்கம் பற்றிக் குறிப்பிடுவதில்லை, ஆனால் ஞானஸ் நானத்தில் கிறிஸ்துவுடன் நாம் அடக்கம் செய்யப்படுதலைப் பற்றிக் குறிப்பிடுகின்றேன். புதிய ஏற்பாடு, ஞானஸ்நானம் மற்றும் கிறிஸ்துவின் தியாகம் ஆகியவற்றிற்கு இடையிலான உறவை வலியுறுத்துகிறது (ரோமர் 6:3, 4; கொலோ. 2:12).

அது ஒரு அன்பான செயலாயிருக்க வேண்டியதாக உள்ளது. நாம் இயேசுவில் அன்புகூருகின்றோம் என்றால், நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்ற அவரது கட்டளைக்கு கீழ்ப்படிவோம் (யோவா. 14:15).

அது ஒரு தைரியமான செயலாயிருக்க வேண்டியதாக உள்ளது. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி முடிவெடுத்தலுக்குத் தைரியம் தேவைப்படுகிறது, சிலவேளைகளில் மாபெரும் அளவிலான தைரியம் தேவைப்படுகிறது.

அது ஒரு அவசியமான செயலாயிருக்கிறது. ஞானஸ்நானம் என்பது,

கர்த்தருக்குக் கீழ்ப்படிதல் மற்றும் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பெறுதல் ஆகியவற்றிற்கு, நமது பகுதியில் செய்யப்பட வேண்டிய அவசிய மான பகுதியாக உள்ளது என்று வேதாகமம் போதிக்கிறது (மாற். 16:15, 16; அப். 2:38; கலா. 3:26, 27).

*அது ஒரு ஏற்புடைய செயலாயிருக்கிறது.* நாம் இயேசுவைப் போல் நமது சிலுவையை எடுத்துக் கொள்ள வேண்டியிருப்பது போலவே (மத். 16:24), நாம் "அவருக்குள் அடக்கம்பண்ணப்பட[வும்]" வேண்டும் (ரோமர் 6:4). நாம், தலையின்மீது தண்ணீர் தெளித்தல் அல்லது ஊற்றப்படுதல் என்ற மேலோட்டமான செயலை அல்ல, ஆனால் தண்ணீருக்குள் உண்மையான அடக்கம்பண்ணப்படுதலை (முழுக்காட்டப்படுதலை) அனுபவித்தலும் நமக்கு ஏற்புடையதாகவே உள்ளது.

*அது ஒரு எதிர்பார்க்கப்பட்ட செயலாக இருக்கிறது.* தண்ணீருக்குள் நாம் அடக்கம் பண்ணப்படுதல் என்பது இரண்டாவது படிநிலையாக மட்டுமே உள்ளது.[2] அந்தத் தண்ணீர்க் கல்லறையில் இருந்து "புதிய ஜீவனுள்ள வர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு" உயிர்ப்பிக்கப்பட்டு எழுதல் என்பதே (ரோமர் 6:4) மூன்றாவது படிநிலையாக உள்ளது. நாம் கிறிஸ்தவ வாழ்வை நடத்தினால், பூமிக்குள் நமது உடல் புதைக்கப்படுதல் என்பது முடிவாயிராது என்ற மெய்சிலிர்ப்பான அனுபவத்தை நாம் பெற்றுக் கொள்வோம். ஒருநாளில், நாமும்கூட, மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்படுவோம் (1 கொரி. 15:20, 23)!

---

குறிப்புகள்

[1]கூடுதல் குறிப்புகளுக்கு "வரலாற்றில் மிகவும் முக்கியமான மூன்று நாட்கள்" என்ற பாடத்தில் காணவும். [2]"சுயத்திற்கு" மரித்தல் என்பது முதலாவது படிநிலையாக உள்ளது (ரோமர் 6:6ஐக் காணவும்).

# இயேசுவின் உயிர்த்தெழுந்த உடல்

*உயிர்த்தெழுதலைச் சுற்றிலும் பல இரகசியங்கள்/அறிய இயலாத விஷயங்கள் உள்ளன. இயேசுவின் உயிர்த்தெழுந்த உடல் என்பது ஒரு சிறிய இரகசியமாக உள்ளது.*

*முதலாவதாக, அது ஒரு உடலாக இருந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உயிர்த்தெழுந்த கர்த்தர் என்பவர் அப்போஸ்தலர்களின் கற்பனையில் ஏற்பட்ட புனைசுருட்டாக இருந்ததில்லை என்று ஒவ்வொருவரும் அறியவேண்டும் என்று அவர்கள் விரும்பினர். அவர்கள் கனவோ அல்லது தரிசனமோ கண்டிருக்கவில்லை. அவர்கள் ஒரு ஆவியையோ அல்லது ஆவேசத்தையோ கண்டிருக்கவில்லை. இயேசு தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, காணக்கூடிய உடல் ஒன்றைக் கொண்டிருந்தார் (யோவா. 20:14, 20; அப். 10:40). அவர் "மாம்சமும் எலும்புகளும்" உடைய உடல் ஒன்றைக் கொண்டிருந்தார் (லூக். 24:39). அவர் பூமியின்மீது நடந்த (லூக். 24:15), தொடக்கூடிய (மத். 28:9; லூக். 24:39) ஒரு உடலைக் கொண்டிருந்தார். அவர் பேசக்கூடிய (லூக். 24:17), உணவு உண்ணக்கூடிய (லூக். 24:41-43; அப். 10:41) ஒரு உடலைக் கொண்டிருந்தார். சிலுவையில் அவர் பட்ட பாடுகளின் காயங்களைத் தக்க வைத்திருந்த ஒரு உடலைக் கொண்டிருந்தார் (யோவா. 20:20, 25, 27).*

*அதே வேளையில், அது வழக்கத்திற்கு மாறான ஒரு உடலாக இருந்தது. மூடப்பட்டு, பூட்டப்பட்டிருந்த கதவுகளுக்குப் பின்னால் அப்போஸ்தலர்கள் ஒளிந்திருந்தபோது, இயேசு திடீரென்று "அவர்கள் நடுவிலே" நின்றார் (யோவா. 20:19, 26). அவரது உடல், திடமான மரத்தினூடே நடந்து செல்லக் கூடியதாயிருந்தது என்பதே மறை கருத்தாக உள்ளது![1] ஹோமர் ஹெய்லி என்பவர் பின்வருமாறு எழுதினார்:*

> *[யோவா. 20:19, 26ல்] உள்ள மூடிய என்ற வார்த்தையானது kleio என்ற வார்த்தையில் இருந்து வருகிறது, இது "மூடிய, பூட்டிய, தாழிடப்பட்ட" என்று அர்த்தப்படுகிறது* (Arndt and Gingrich[2]). *புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தையின் வழக்கமான பயன்பாடு, மூடப்பட்ட மற்றும் திறக்கப்பட முடியாத, எனவே பூட்டப்பட்ட அல்லது தாழிடப்பட்ட சிலவற்றைப் பற்றிய கருத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது (மத். 25:10; லூக். 11:7; அப். 21:30; வெளி. 3:7, 8; 20:3; 21:25ஐக் காணவும்). இந்த விவரமானது, இயேசு கதவுகளினூடே பிரவேசிக்காதிருந்தும், அறைக்குள் அவர் திடீரென்று தோன்றியதைச் சுட்டிக் காண்பிக்கிறது.*[3]

கிலெயோப்பாவும் அவரது துணையாளியும் இயேசுவை அடையாளம் கண்டுகொண்ட வேளையில், "அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்" (லூக். 24:31). ஜான் F. கார்ட்டர் அவர்கள், "இயேசுவின் உயிர்த்தெழுதலுக் குப் பின்பு, அவரது உடலானது, அவரது மரணத்திற்கு முன்பு கொண்டிராத அல்லது வல்லமைகளை செயல்முறைப்படுத்தாத தன்மைகளை கொண்டிருந்து அவற்றைச் செயல்முறைப்படுத்தியது" என்று எழுதினார்.[4] கொடுக்கப்பட்ட உதாரணங்களுடன் கூடுதலாக, கார்ட்டர் அவர்கள், "தனிநபர்கள் அல்லது குழுக்களுக்கு குறுகிய நேரங்கள் அவர் தரிசனமான வழிமுறை மற்றும் யாரேனும் ஒருவருக்குத் தரிசனமாகும் முன் சில நாட்களுக்குச் சாத்தியமான வகையில் காணப்பட முடியாதிருந்த வழிமுறை" என்பவற்றை உள்ளடக்கினார்.[5]

இயேசுவின் உடலானது தோற்றத்தில் ஏதோ ஒரு வகையில் மாறுபட்ட தாயிருந்தது அல்லது அவர் தமது தோற்றத்தைத் தமது நோக்கத்திற்குப் பயன்படும் வகையில் மாற்ற முடிந்திருந்தது என்பதற்கும் சாத்தியக் கூறுள்ளது.[6] மாற்கு 16:12ன்-படி, அவர் எம்மாவு செல்லும் வழியில் இரண்டு பேருக்கு "மறுரூபமாய்த் தரிசனமானார்." சில மொழிபெயர்ப்புக்களில் இது "இன்னொரு வடிவில்" என்றுள்ளது (RSV). The New Century Version என்ற வேதாகமம், "அவர் முன்புபோல் காணப்படவில்லை" என்று கூறுகிறது. The New Living Translation என்ற வேதாகமத்தில், "அவர் தமது தோற்றத்தை மாற்றிக் கொண்டார்" என்றுள்ளது. எவ்வகையிலும், இயேசுவின் மரணத் திற்கு முன்பு அவரை அறிந்திருந்தவர்கள் அவர் உயிர்ப்பிக்கப்பட்ட பின்பு முதலில் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை (லூக். 24:16; யோவா. 20:14).

கார்ட்டர் அவர்கள், "அதில் [கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரத்தில்] அவர் இவ்வாழ்வில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரைப் பண்பு படுத்தக் கூடிய - அவரே கூட தமது மரணத்திற்கு முன்பு பண்புபடுத்தப் பட்டிருந்த - வரைமுறைகளுக்குக் கீழ்ப்பட்டிருக்கவில்லை" என்று முடிவு செய்தார்.[7] இராபர்ட் கல்வெர் அவர்கள், "அவரது உடலானது பரவச நிலையியலானதாக [*eschatological*[8]], அதாவது, மகிமைப்படுத்தப்பட்ட உடலாக மாற்றப்பட்டது" என்று எழுதினார்.[9] கல்வெரின் சொற்றொட ராக்கம் "தம்முடைய மகிமையான சரீரத்திற்கு" என்று பேசுகிற பிலிப்பியர் 3:21ல் இருந்து வந்திருக்கலாம். "கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த உடலின் புதிய குணங்கள் மற்றும் வல்லமைகள், ஆவிக்குரிய சரீரம் என்று பவுல் அழைத்ததை (1 கொரி. 15:44) சந்தேகமின்றி குறிக்கின்றன"[10] என்று கார்ட்டர் அவர்கள் நம்பினார்.

இயேசுவின் உயிர்த்தெழுந்த உடலுக்கும், நமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு நாம் பெறவிருக்கும் ஆவிக்குரிய உடல்களுக்கும் இடையில் ஒரு நெருங்கிய உறவு நிலவலாம். இங்கு, ஆவிக்குரிய உடல் பற்றி பவுல் போதித் தவற்றின் தொகுப்புரையொன்று தரப்படுகிறது: நாம் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்படும்போது, உருவமற்ற ஆவிகளாயிருக்க மாட்டோம், ஆனால் புதிய உடல்களைப் பெற்றுக்கொள்ளுவோம் (2 கொரி. 4:16-5:4ஐக் காணவும்).[11] உயிர்த்தெழும் சரீரத்தைப் பவுல் 1 கொரிந்தியர் 15ல் (வ. 35ஐக்

காணவும்) விவரித்தார். புதியதான, “ஆவிக்குரிய” சரீரமானது ஏதோ ஒரு வகையில் பழைய ‘‘இயல்பான’’ சரீரத்துடன் தொடர்புபடுத்தப் பட்டிருக்கும் (வ. 38-41). விதையை விதைத்தல் என்ற ஒப்புவமையைப் பயன்படுத்திய பவுல் பின்வருமாறு எழுதினார்:

> மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும்; அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு; ஆவிக்குரிய சரீரமுமுண்டு (வ. 42-44).

கிறிஸ்து திரும்ப வரும்போது, நாம் மரித்திருந்தாலும் அல்லது இன்னமும் உயிருடன் இருந்தாலும் நமது உடல்கள் “மாற்றப்படும்” (வ. 51-54). அதாவது, நீங்களும் நானும் நமது உயிர்த்தெழுந்த உடல்களைப் பெற்றுக்கொள்வோம்.

நாம் பெற்றுக் கொள்ளவிருக்கும் ஆவிக்குரிய உடல்களுக்கும், இயேசுவின் உயிர்த்தெழுந்த உடலுக்கும் இடையில் இணைவுகளைக் காணமுடியும் - ஆனால் தெளிவாகத் தோன்றும் ஒரு வித்தியாசத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். இயேசுவின் உயிர்த்தெழுந்த உடலானது “மாம்சமும் எலும்புகளும்” உடையதாக இருந்ததென்று அவரே வலியுறுத்தினார் (லூக். 24:39), அதே வேளையில் பவுல், “மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது’’ (அதாவது, பரலோகத்தில் பிரவேசித்தல்) என்று எழுதினார் (1 கொரி. 15:50). ஒருவேளை இயேசு, “மாம்சமும் எலும்புகளும்” என்ற வார்த்தைகளை, “உடல்” என்பதைக் குறிப்பதற்காக மட்டும் வளைந்து கொடுக்கும் வகையில் பயன்படுத்தியிருக்கலாம்.[12] அந்த நாற்பது நாட்களில் இயேசு பயன் படுத்தியிருந்த உடல் என்பது அவரது நிறைவான மகிமையுள்ள உடலின் தழுவப்பட்ட பதிப்பாக - அவர் தாம் பரலோகத்திற்கு ஏறிச் செல்லும் செயலுக்குத் தமது சீஷர்களைத் தயார் செய்கையில், அவர்களுடன் உரையாடி உறவாடுவதற்காகத் தழுவப்பட்ட உடலாக - இருந்திருக்கக் கூடிய இன்னொரு சாத்தியக்கூறும் உள்ளது. அப்படியென்றால், மகிமைப் படுத்தப்பட்ட அவரது உடலின் கடைசியான மற்றும் முழுமையான மாற்றங்கள், அவர் தமது பிதாவினிடத்தில் ஏறிச் சென்றபோது வந்திருக்க வேண்டும்.[13]

அதைக் கூறியுள்ள நிலையில், நாம் உயிர்த்தெழுந்த இயேசுவின் உடலைப் பற்றி அறியக்கூடியது என்ன? அது வழக்கத்திற்கு மாறான ஒரு உடலாக இருந்தது, ஆனால் அது ஒரு மெய்யான உடலாய் இருந்தது. அவர் மரித்தோரிலிருந்து உண்மையாகவே உயிர்ப்பிக்கப்பட்டார் என்று நாம் விசுவாசத்தினால் அறிகின்றோம். அதுவே பொருட்படுத்தப்படக் கூடியதாக உள்ளது.

குறிப்புகள்

[1]இயேசு கதவைத் தட்டினார் என்றும் யாரோ ஒருவர் அவரை உள்ளே அனுமதித்தார் என்றும் சிலர் நம்புகின்றனர். அப்படிப்பட்ட உலகம் சார்ந்த/இகபோக பிரவேசமானது, லூக்கா 24:36, 37ல் குறிப்பிடப்பட்ட பதில்செயலை மிக அரிதாகவே உண்டாக்கியிருக்கும். [2]Hailey's reference is to Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957). [3]Homer Hailey, *That You May Believe: Studies in the Gospel of John* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 145. [4]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 341. [5]Ibid. [6]சில வேளைகளில், அவரது தெய்வீகத்துவமானது மறுரூபத்தின்போது போல் "காண்பிக்கப்பட்டதா"? [7]Carter, 341. [8]"Eschatology" என்பது "கடைசி (*eschatos*) விஷயங்களைப் பற்றிய படிப்பு (*logos*)" என்பதாக உள்ளது (அதாவது, உலகத்தின் முடிவு, நியாயத்தீர்ப்பு, பரலோகம் மற்றும் நரகம் முதலியவற்றின் படிப்பாக உள்ளது). "Eschatological" என்ற வார்த்தையின் முடிவானது "அதற்குரிய" என்று அர்த்தப்படுகிறது. "Eschatological" உடல் என்பது, "கடைசியில்" கிறிஸ்து வரும்போது நாம் பெற்றுக்கொள்ளவிருக்கும் உடலின் வகையாக உள்ளது. [9]Robert Duncan Culver, *The Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 267. [10]Carter, 341.

[11]ஆவிக்கும் ஆவிக்குரிய உடலுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை நான் அறிவதில்லை, ஆனால் நமது ஆவிகள் முழுமையாகச் செயல்படவும் தங்கள் நித்திய அடைவிடத்தின் பணிகளை நிறைவேற்றவும் உடல்களைக் கொண்டு "உடுத்துவிக்கப்பட" வேண்டியது அவசியம் என்பது உறுதி. [12]The Living Bible என்ற வேதாகமப் பொழிப்புரையில் லூக்கா 24:39, "... Touch me an make sure that I am not a ghost! For Ghosts on't have bodies, as you see that I o!" என்று கூறப்படுகிறது. [13]பரத்துக்கேறுதல் பற்றி அதிகமான கருத்துக்களை இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள, "சென்று வருகிறோம் மற்றும் ஹலோ" மற்றும் "மகிமையில் எடுத்துக் கொள்ளப்படுதல்" என்ற பாடங்களில் காணவும்.

# உயிர்த்தெழுதல் எதை அறிவிக்கிறது?

இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்பவை நமது விசுவாசம் மற்றும் தேவனுடனான நமது உறவு ஆகியவற்றிற்கு இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளன (1 கொரி. 15:1-4). ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள்தோறும், நாம் கர்த்தருடைய பந்தியைச் சுற்றிக் கூடிவருகையில்,[1] நாம் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை ஆசரிக்கின்றோம்/கொண்டாடுகின்றோம். இப்போது நாம், இவற்றில் மூன்றாவது கருத்தான உயிர்த்தெழுதல் என்பதன்மீது நமது சிந்தனைகளை மையப்படுத்துவோம். ‘‘உயிர்த்தெழுதலின் தனிச்சிறப்பு என்ன?’’ மற்றும் “இந்த மாபெரும் நிகழ்ச்சி எதை அறிவிக்கிறது?’’ என்பவை போன்ற கேள்விகளுக்குப் பதில் அளிக்க விரும்புகின்றோம். இங்கு இதன் அடிப்படைச் செய்திகள் சில உள்ளன.

## இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார்

உயிர்த்தெழுதல் என்பது முதலாவது, இயேசுவின் தெய்வீகத்துவத்தை அறிவிக்கிறது. ரோமர் 1:5ல் பவுல், “... பரிசுத்தமுள்ள ஆவியின்படி, தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்’’ என்று அவரைப் பற்றிக் கூறினார். உயிர்த்தெழுதல் என்பது இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று நிரூபிக்கிறது.

உயிர்த்தெழுதலின் காலையில் கல்லறைக்கு முதலில் வந்தவர்களில், கிறிஸ்துவின் உடலுக்கு அபிஷேகம் செய்வதை முடித்துவைக்க வந்திருந்த பெண்கள் இருந்தனர். மகதலேனா மரியாள் மற்ற பெண்களை விட்டுப் புறப்பட்டு, பேதுருவையும் யோவானையும் எதிர்கொண்டாள் என்று காணப்படுகிறது. மரியாளின் பயத்தைக் கேட்ட அந்த இரண்டு அப்போஸ்தலர்களும் ஆராய்ந்து பார்ப்பதற்காகக் கல்லறையினிடத்திற்கு ஓடினர். கல்லறைக்குள் கண்ணோக்கியபோது விசுவாசித்ததாகப் பிற்பாடு யோவான் கூறினார். முன்னதாக, அவர் எதை விசுவாசிப்பது என்று அறியாதவராகப் பேதுருவுடன் தோட்டத்திற்குள் பிரவேசித்தார். பின்பு கல்லறைக்குள் இருந்தது என்ன என்பதை அவர் கண்டார். இங்கு யோவானின் விவரம் தரப்படுகிறது:

> *சீமோன் பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக்குள்ளே பிரவேசித்து, சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில்*

சுற்றியிருந்த சீலை மற்றச்சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான். முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்த மற்றச் சீஷனும் [அதாவது, யோவானும்[2]] அப்பொழுது உள்ளே பிரவேசித்து, கண்டு[3] விசுவாசித்தான் (யோவா. 20:6-8).

*விசுவாசத்தை உண்டாக்கிய எதனை யோவான் கண்டார்? அவர், "பிணத்தைச் சுற்றியிருந்த துணிகள் அங்கு கிடந்ததைக் கண்டார், மற்றும் தலையில் இருந்த முகத்தை மூடிய துணியானது ... தனியே ஒரு இடத்தில் சுருண்டுகிடந்தது." இயேசுவின் உடலை மனிதர்கள் அவசரமாக எடுத்துக் கொண்டு போயிருந்தால்,[4] அவர்களுக்குத் துணிகளை அகற்றுவதற்கும், முகத்துணியை நேர்த்தியாக மடித்து வைப்பதற்கும் நேரம் கிடைத்திருக் காது. யோவான் கண்ட விஷயமானது, மனித முயற்சிகளுக்கு ஒத்துவராத தாக இருந்தது, ஆனால் தெய்வீக இடையீட்டுடன் ஒத்துப் போவதாக இருந்தது. அது, இயேசுவால் அடிக்கடி முன்னுரைக்கப்பட்டிருந்த உயிர்த் தெழுதலுடன் சீர்பொருந்தியதாக இருந்தது (மத். 16:21; 17:23; 20:19; மாற். 8:31; 9:31; 10:34; லூக். 9:22; யோவா. 2:19).*

*ஆதாரத்தைக் கவனத்துடன் உற்றுநோக்க நீங்களும் நானும் நேரம் எடுத்துக்கொண்டால், யோவானுக்குள் உண்டானது போலவே நமக்குள்ளும் விசுவாசம் உண்டாகும். இயேசு மரித்தோரில் இருந்து உயிர்ப் பிக்கப்பட்டார் என்பதை விசுவாசிப்பதற்குக் காரணங்கள் ஏராளமாக உள்ளன. எடுத்துக்காட்டாக, அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவரைக் கண்டிருந்த நூற்றுக்கணக்கானவர்களின் சாட்சியங்களை நாம் கொண்டிருக்கின்றோம் (1 கொரி. 15:4-8).*

*இயேசுவின் சீஷர்களுக்குள் ஏற்பட்டிருந்த மாற்றம் என்பது ஒரு நிரூபணமாக உள்ளது. கிறிஸ்து கைது செய்யப்பட்ட மற்றும் விசாரிக்கப் பட்ட வேளைகளில் அவரது பின்பற்றாளர்களின் நடக்கை பற்றி எவரொரு வரும் மனப்பதிவைக் கொண்டிருக்க மாட்டார். அவர்கள் தைரியமா யிருப்பதைத் தவிர வேறு எப்படியும் இருந்தனர். ஒன்று, அவர்கள் தங்கள் உயிருக்குப் பயந்து ஓடியிருந்தனர் அல்லது அபாயத்திலிருந்து விலகியிருக்க முயற்சி செய்தனர். பேதுரு, இயேசுவை அறிந்திருந்ததை மறுதலிக்கவும் செய்திருந்தார். இருப்பினும், உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, அதே மனிதர்கள் இயேசுவை வெளியரங்கமாகவும் தைரியமாகவும் பிரசங்கித்த னர். அவர்களின் உறுதிப்பாடு புதிய ஏற்பாட்டின் பக்கங்கள் யாவற்றிலும் ரீங்காரமிடுகிறது.*

*எதைப் பற்றி அவர்கள் நிச்சயமாயிருந்தனர்? இயேசு உயிருடன் இருந்தார் என்பதே அவர்களின் நிச்சயமாயிருந்தது. இந்த நிச்சயமே அப்போஸ்தலர்களின் வாழ்வை மாற்றியிருந்தது. அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டபோதும், அடிக்கப்பட்டபோதும், கல்லெறியப்பட்ட போதும், கொல்லப்பட்டபோதும்கூட அவர்களின் விசுவாசம் அசைக்கப் படக் கூடாததாக இருந்தது. பலவீனமான, நிலையற்ற மனங்கொண்ட, விசுவாசமற்ற தனிநபர்கள், உலகம் கண்டவர்களிலேயே மிகவும் இயக்கம் வாய்ந்த ஆளுமைத் தன்மை உடையவர்களாயினர். அவர்களின் போதனை*

யானது ரோம அரசு தள்ளாடி, விழும் வரையிலும் அதை அசைத்தது. இந்த மனிதர்களில் ஏற்பட்டிருந்த மாற்றம், உயிர்த்தெழுதல் இன்றி விளக்கப்பட முடியாததாக உள்ளது. அவர்கள் உயிர்த்தெழுந்த கர்த்தரைக் கண்டனர், அது அவர்களின் வாழ்வை என்றென்றைக்குமாக மாற்றியது.

உயிர்த்தெழுதல் என்பது, இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின் றார் என்று நீண்ட காலத்திற்கு முன்பாகவே நிரூபித்தது, மற்றும் இது இன்றைய நாட்களிலும் அந்த மாபெரும் சத்தியத்தை இன்னமும் அறிவிக்கிறது.

## இயேசுவின் பலி ஏற்றுக்கொள்ளப்பட்டது

உயிர்த்தெழுதல் என்பது, சிலுவையில் இயேசுவின் பலியைத் தேவன் ஏற்றுக்கொண்டார் என்று அறிவிக்கிறது. கிறிஸ்தவம் சிலுவையை மையங்கொண்டுள்ளது. நாம் "சிலுவையின் மூலமாகத் தேவனுடன்" ஒப்புரவாக்கப்படுகின்றோம் (எபே. 2:16). இயேசுவின் பலியின் மூலமாக, நீதியின் தேவன் திருப்தியாக்கப்பட்டார்,[5] நாம் என்றென்றைக்குமான ஜீவியத்தின் நம்பிக்கையைக் கொண்டுள்ளோம். ஆகவே பவுல், "இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றை யும் ... அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று கூறினார் (1 கொரி. 2:2). ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும், நாம் கர்த்தருடைய பந்தியைச் சுற்றிக் கூடிவரும்போது, அது "கர்த்தருடைய மரணத்தை அறிவிப்பதற்கா" னதாக உள்ளது (1 கொரி. 11:26).

இருப்பினும், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்படாதிருந்தால், சிலுவை தனது நோக்கத்தை நிறைவேற்றியதா இல்லையா என்பதைப் பற்றி நாம் நிச்சயமற்றவர்களாக இருப்போம். நமது பாவங்களுக்கான இயேசுவின் பலியைத் தேவன் நிச்சயமாகவே ஏற்றுக்கொண்டார் என்பதை உயிர்த்தெழுதல் அறிவிக்கிறது. இந்தக் கருத்தில், நாம் இயேசுவின் மரணத்தினால் மாத்திரமல்ல, ஆனால் அவரது உயிர்த்தெழுதலினாலும் இரட்சிக்கப்பட்டுள்ளோம். இவ்விதமாக இயேசுவைப் பற்றி, "அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்படும், நாம் நீதிமான் களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" என்று பவுல் கூறினார் (ரோமர் 4:25).

## நாம் இரட்சிக்கப்பட முடியும்

நீங்களும் நானும் இரட்சிக்கப்பட முடியும் என்பது, இயேசுவின் பலியைத் தேவன் ஏற்றுக்கொண்டதன் உணர்வெழுச்சிமிக்க விளைவாக உள்ளது! உயிர்த்தெழுதல் என்பது, நாம் பாவ மரணத்திலிருந்து புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு உயிர்ப்பிக்கப்பட முடியும் என்று அறிவிக்கிறது.

ஒருமுறை இயேசு, ஆவிக்குரிய வகையில் குணமாக்கும் வல்லமை தமக்குள்ளது என்று நிரூபிப்பதற்காக உடல் ரீதியான குணமாக்குதலைப் பயன்படுத்தினார் (மத். 9:6ஐக் காணவும்). அதுபோலவே, இயேசுவின் உடல்

ரீதியான உயிர்த்தெழுதலுக்கும், புதிய ஜீவனுக்கென்று நமது ஆவிக்குரிய உயிர்த்தெழுதலுக்கும் உள்ள உறவை வேதாகமம் வலியுறுத்துகிறது. ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் பின்வருமாறு எழுதினார்:

> மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப் பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 6:4-6).

பவுல் எபேசியருக்கு எழுதியபோது, அவர்களின் மனமாற்றத்தைப் பின்வரும் வார்த்தைகளில் தொகுத்துரைத்தார்: "அக்கிரமங்களில் மரித்தவர் களாயிருந்த நம்மை [தேவன்] கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்" (எபே. 2:5). தேவனுடைய ஆசீர்வாதங்கள் "தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே" உள்ளன (எபே. 1:19அ).

## நாம் ஜீவனுள்ள ஒரு இரட்சகரைக் கொண்டுள்ளோம்

நாம் நமது பாவங்களில் இருந்து இரட்சிக்கப்பட்ட பின்பு, கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதில் நமக்கு உதவி தேவைப்படுகிறது. உயிர்த்தெழுதல் என்பது, நமக்காக "வேண்டுதல் செய்யும்படிக்கு ... உயிரோடிருக்கிற" (எபி. 7:25) இரட்சகரை நாம் கொண்டுள்ளோம் என்று அறிவிக்கிறது. மரித்துப்போன கொள்கையினிடத்தில் அல்ல, ஆனால் ஜீவனுள்ள ஒரு ஆளுமைத்தன்மையிடத்திலேயே நமது பற்றுறுதி உள்ளது.

இயேசு எப்போதும் நம்முடன் இருப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார் (மத். 28:20). நாம் கூடிவருகிறபோது அவர் அங்கிருப்பதாக நமக்கு உறுதியளித்துள்ளார் (மத். 18:20). எபிரெயருக்கு எழுதிய நிருப மானது, அவர் "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடிய" மற்றும் நாம் சோதிக்கப்படுகின்றபோது நமக்கு உதவக்கூடிய "கிருபையும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராக" இருக்கின்றார் என்று நமக்குக் கூறுகிறது (2:17; 4:15; 2:18). அவர் மூலமாக, நாம் "இரக்கத்தையும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையையும் அடைகின்றோம்" (எபி. 4:16).

நாம் இயேசுவின் "மரணத்தின் மூலம், தேவனுடன் ஒப்புரவாக்கப் படுவது" மட்டுமின்றி, நாம் "அவருடைய ஜீவனாலே இரட்சிக்க [வும்] படுகின்றோம்" (ரோமர் 5:10). ஜீவனுள்ள மற்றும் அக்கறையுள்ள ஒரு இரட்சகருக்காகத் தேவனுக்கு நன்றி!

## ஒரு நாளானது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது

உயிர்த்தெழுதல் என்பது, ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக ஒரு நாளானது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கிறது. நான், "ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக ஒரு நாளானது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிடும்போது, தனிப்பட்ட கிறிஸ்தவக் கொண்டாட்டத்திற்காக ஒரு ஆண்டின்போது ஒன்று அல்லது இரண்டு நாட்கள் ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளன என்று அர்த்தப்படுத்துவதில்லை (கலா. 4:10ஐக் கவனிக்கவும்). அல்லது நான், பழைய ஏற்பாட்டில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த வாரத்தின் ஏழாம் நாளை (ஓய்வு நாளை) மனதில் கொண்டிருப்பதுமில்லை (யாத். 20:8-11; உபா. 5:12-15).

மாறாக நான், ''ஞாயிற்றுக்கிழமை'' என்று நாம் அழைக்கின்ற, வாரத்தின் முதல் நாளைக் குறிப்பிடுகின்றேன். தொடக்க கால சபையார் ஆராதிப்பதற்கென்று - கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடிக்கவும் (அப். 20:7), தங்கள் வருமானத்திலிருந்து [காணிக்கை] கொடுக்கவும் (1 கொரி. 16:2) - வாரத்தின் முதல் நாளிலே ஒன்றுகூடினார்கள். இந்த முதல் நாளை "கர்த்தருடைய நாள்" என்று யோவான் அழைத்தார் (வெளி. 1:10).

வாரத்தின் முதல் நாள் கிறிஸ்தவர்களுக்கு விசேஷ நாளாக இருந்தது (மற்றும் இருப்பது) ஏன்? ஏனென்றால், அந்த முதல் நாளில்தான் கர்த்தர் உயிர்த்தெழுந்தார். மாற்கு, "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது [பெண்கள்] கல்லறையினிடத்தில் வந்து" என்று நமக்குக் கூறுகின்றார் (மாற். 16:2). அங்கே அவர்களிடம் ஒரு தூதன், "சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை; இதோ, அவரை வைத்த இடம்" என்று கூறினான் (மாற். 16:6). கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில், உதயமாகும் ஒவ்வொரு [வாரத்தின்] முதல் நாளும் "உயிர்த்தெழுதலின் காலை வேளையாக" உள்ளது.

## நாமும் கூட உயிர்ப்பிக்கப்படுவோம்

அடுத்ததாக நாம், உயிர்த்தெழுதல் பற்றிய மிகவும் மெய்சிலிர்க்கச் செய்யும் செய்திகளில் ஒன்றிற்கு வருகின்றோம்: ஒரு நாளிலே நமது உடல்களும் கூட, மரித்தோரிலிருந்து எழுப்பப்படும் என்று இது அறிவிக்கிறது! நீண்ட காலத்திற்கு முன்பாக யோபு, "மனுஷன் செத்தபின் பிழைப்பானோ?" என்று கேட்டார் (யோபு 14:14). "ஆம் - ஏனென்றால் இயேசு உயிர்ப்பிக்கப்பட்டார்!" என்பதே தேவனுடைய பதிலாக உள்ளது. இந்த சத்தியம் 1 கொரிந்தியர் 15ல் உறுதிப்படுத்தப்படுகிறது:

> கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களின் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப் பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில்

*அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் ... பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம் (வ. 20-26).*

*நாம் "நன்மை" செய்திருந்தால், "ஜீவனை அடையும்படி எழுந்திருப் போம்"; நாம் "தீமை" செய்திருந்தால், "ஆக்கினை அடையும்படியான நியாயத்தீர்ப்புக்காக எழுந்திருப்போம்" (யோவா. 5:29) - ஆனால் நாம் யாவருமே உயிர்ப்பிக்கப்படுவோம். மரணம் என்பது இனியும் ஒரு சுவராக இருப்பதில்லை, ஆனால் அது ஒரு கதவாகவே இருக்கிறது. இது அவ்வாறு உள்ளது என்பதை உயிர்த்தெழுதல் நமக்கு உறுதிப்படுத்துகிறது!*

## தேவன் தமது வார்த்தையின்படி நிலைநிற்கின்றார்

*எல்லா மனிதர்களும் கற்றுக்கொள்ள வேண்டிய, இன்னும் ஒரு பொதுவான சத்தியம் குறிப்பிடப்பட வேண்டும்: உயிர்த்தெழுதல் என்பது, தேவன் தமது வார்த்தையின்படி நிலைநிற்கின்றார் என்று அறிவிக்கிறது. பிரசங்கியார்கள் வழக்கமாகக் கூறுவதுபோல், "தேவன் தாம் அர்த்தப் படுத்துவதைக் கூறுகின்றார், தாம் கூறுவதை அர்த்தப்படுத்துகின்றார்!"*

*இயேசுவின் உயிர்த்தெழுதல் குறித்து அவரது அறிவித்தல்கள், விசேஷ மாக தேவாலயம் குறித்த அவரது மறைபொருளான கூற்றுகள், அவரது உரையைக் கேட்டவர்களின் மனங்களில் ஒரு பதிவை ஏற்படுத்தின: "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: 'இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்' என்றார்"; "அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்" (யோவா. 2:19, 21). இயேசு, காய்பாவின் முன் விசாரணைக்கு நின்றபோது, பொய்ச்சாட்சி சொல்ல வந்த ஒருவன் அந்த முன்னுரைத்தலை மேற்கோள் காண்பித்தான் (மத். 26:61). இயேசு சிலுவையில் தொங்கியபோது, தேவபக்தியற்றவர்கள், "தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக் கொள்" என்று கொக்கரித்தனர் (மத். 27:40அ).[6]*

*இயேசுவின் முன்னுரைத்தலை அவரது விரோதிகள் நம்பவில்லை; இருந்தபோதிலும், அது நடைபெற்றது. அவரது உடல் - அவரது பூமிக்குரிய ஆலயம் - சிலுவையில் மரித்தது, மற்றும் மூன்றாம் நாளில் அந்த உடல் மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்பட்டது. கர்த்தர் ஒரு விஷயம் இப்படியிருக்கிறது என்று கூறுகின்றபோது, அது அப்படியே இருக்கிறது. நீங்கள் அதை விசுவாசிக்க முடியும்!*

## முடிவுரை

*சிலர், உயிர்த்தெழுதலைத் தாங்கள் விசுவாசிப்பதாகக் கூறுகின்றனர் - ஆனால் ஆண்டுக்கு ஒருமுறை அதன்மீது பிரதானமான வலியுறுத்தம் வைக்கின்றனர். அதே வேளையில் அவர்கள், உயிர்த்தெழுதலினால் அறிவிக்கப்பட்ட பின்வரும் சத்தியங்களை மறுதலிக்கின்றனர்:*

- *உயிர்த்தெழுதல் என்பது, இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று அறிவிக்கிறது - ஆனால் பலர், அவரது தெய்வீகத்துவத்தை மறுதலிக்கின்றனர்.*
- *உயிர்த்தெழுதல் என்பது, சிலுவையானது தேவனுடைய கோபத்தைத் தணித்தது என்று அறிவிக்கிறது - ஆனால் பலர், பாவத்தின் உண்மை நிலையையும் தேவன் பாவிகளைத் தண்டிக்க வேண்டும் என்ற உண்மையையும் மறுதலிக்கின்றனர்.*
- *உயிர்த்தெழுதல் என்பது, நாம் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் சாயலுக்கு ஒப்பான ஞானஸ்நானத்தில் நமது விசுவாசத்தினால் வழிநடத்தப்படுகையில், நாம் இரட்சிக்கப்பட முடியும் என்று அறிவிக்கிறது (கலா. 3:26, 27) - ஆனால் சிலர் ஞானஸ் நானத்தின் அவசியத்தை மறுதலித்திருக்கையில், மற்றவர்கள் ஞானஸ்நானத்தில் இயேசுவை தரித்துக்கொள்ள மறுக்கின்றனர்.*
- *உயிர்த்தெழுதல் என்பது, நமக்காக வேண்டுதல் செய்கின்ற ஒரு ஜீவனுள்ள இரட்சகரை நாம் பெற்றிருக்கின்றோம் என்று அறிவிக்கிறது - ஆனால், தேவன் நமது வாழ்வில் தனிப்பட்ட வகையில் பலப்படுத்துதலை அளிக்கின்றார் என்ற கருத்தைப் பலர் இகழுகின்றனர்.*
- *உயிர்த்தெழுதல் என்பது, ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளானது ஆராதனைக்கென்று ஒதுக்கப்பட்ட விசேஷித்த நாளாக உள்ளது என்று அறிவிக்கிறது - ஆனால் பலர், ஆண்டின் ஒரு சில நாட்களுக்கு சபைக்கு வருவதுடன் தங்கள் வருகையை மட்டுப்படுத்திக் கொள்ளுகின்றனர்.*
- *உயிர்த்தெழுதல் என்பது, ஒரு நாளிலே நாமும் உயிர்ப்பிக்கப்படுவோம் என்று அறிவிக்கிறது - ஆனால் பலர், உடல் ரீதியான உயிர்த்தெழுதலை மறுதலிக்கின்றனர்.*
- *உயிர்த்தெழுதல் என்பது, தேவன் தமது வார்த்தையின் பின்னால் நிலைநிற்கின்றார் என்று அறிவிக்கிறது - ஆனால் பலர், அந்த வார்த்தையின் போதனைகளை ஏளனம் செய்கின்றனர்.*

*பல ஆண்டுகளுக்கு முன்பு, பிரிட்டனில், யார்க் மின்ஸ்டர் என்ற இடத்தில் இருந்த, 760 ஆண்டுகள் பழமையான கோத்திக் பாணியில் கட்டப்பட்ட மாபெரும் பேராலயத்தின் பழைய விதானம் ஒன்று தீயினால் பேரழிவுக்கு உட்பட்டபோது, இங்கிலாந்து முழுவதும் கவலையில் ஆழ்ந்தது. பழமையான அந்தப் பேராலயம் ஒவ்வொரு ஆண்டிலும் ஏராளமான எண்ணிக்கையிலான பயணிகளைக் கவர்கிறது. தீ விபத்து எவ்வளவு துன்பகரமாயிருந்ததோ அதைவிட, அதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி இன்னும் அதிக துன்பகரமானதாக இருந்தது:*

*‘‘ரெவரெண்டு. டேவிட் ஜென்கின்ஸ்’’ என்ற மனிதர், கன்னிப் பெண்ணிடமிருந்து இயேசு பிறந்ததைத் தாம் நம்பவில்லை என்றும், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று தாம் நம்பவில்லை என்றும் வெளிப்படையாகக் கூறியிருந்தும், அவர் “துர்ஹாம் என்ற இடத்தின் ஆயராக” திருநிலைப் படுத்தப்பட்டார்!*[7]

*நீங்கள் உயிர்த்தெழுதலை விசுவாசிக்கின்றீர்களா? அப்படியானால் அதை அறிவியுங்கள்! பின்பு அதைப் போன்று வாழுங்கள்!*

*நீங்கள் உயிர்த்தெழுதலில் விசுவாசம் கொண்டிருந்து, நீங்கள் ஞானஸ் நானம் பெறவேண்டியிருந்தால், நீங்கள் தயங்காதிருப்பீர்கள்.*[8] *தேவனு டைய வல்லமையானது, அவரது குமாரனின் உயிரற்ற உடலை அடைந்து, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பியது போலவே, நீங்கள் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய மனவிருப்பத்துடன் இருந்தால், அவரது வல்லமை யும் அன்பும் உங்களுக்குப் புதிய ஜீவனைக் கொடுக்க முடியும்.*

---

*குறிப்புகள்:*

[1]*கர்த்தருடைய இராப்போஜனத்தை இயேசு ஏற்படுத்தியபோது, அது தமது மரணத்தை அறிவித்ததென்று அவர் வலியுறுத்தினார் (1 கொரி. 11:23-26); ஆனாலும், இராப்போஜனத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. வாரத்தின் முதல் நாளில் இயேசு உயிர்த்தெழுந்தபடியால் (மத். 28:1-6), சபையானது - கர்த்தருடைய பந்தியில் கலந்துகொள்ள வேண்டும் என்ற திட்டவட்டமான நோக்கத்துடன் - வாரத்தின் முதல் நாளில் கூடிவருகிறது (அப். 20:7; 1 கொரி. 16:1, 2ஐக் காணவும்).* [2]*பேதுருவுடன் இருந்தவர் “இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷன்” என்று அடையாளப்படுத்தப்படுகின்றார் (யோவா. 20:2), இது யோவான், தம்மைக் குறிப்பிடப் பயன்படுத்திய வழிமுறை என்று பெரும்பாலானவர்கள் நம்புகின்றனர் (யோவா. 13:23; 19:26; 21:7, 20ஐயும் காணவும்).* [3]*“கண்டு” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது வெறும் கவனித்தல் என்பதை விட அதிகமானதை அர்த்தப்படுத்துகிறது; இது புரிந்து உணருதலைச் சுட்டிக்காண்பிக்கிறது.* [4]*சிலர் இந்த உரிமைகோருதலை ஏற்படுத்தியுள்ளனர். யோவான் 20:2 மற்றும் மத்தேயு 28:11-15ஐ வாசிக்கவும்.* [5]*வேத வாக்கியங்கள் இதைச் சுட்டிக்காண்பிக்கும் ஒரு வழிமுறையானது பலருக்குப் பழக்கமற்ற “கிருபாதார பலி” என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது (1 யோவா. 2:2; 4:10). இப்புத்தகத்தில் இவ்வார்த்தை பற்றிய ஒரு சுருக்கமான விளக்கத்திற்கு, “இயேசு சிலுவையில் மரிக்க வேண்டியிருந்தது ஏன்?’’ என்ற துணைப் பாடத்தைக் காணவும்.* [6]*அப். 6:14ல் சனதெரீன் சங்கத்தாரின் கூற்றையும் காணவும்.* [7]This illustration was adapted from Dick Marcear, “It’s Time to Take a Stand,” *Hilltop Reflections*, church bulletin of the Central church of Christ in Amarillo, Texas, 13 April 1986. [8]*ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம் பற்றிய வசனப் பகுதியொன்று முன்னதாக மேற்கோள் காண்பிக்கப்பட்டது. ஒருவர் கர்த்தரிடத்திலிருந்து விலகிச் சென்றிருந்தால் அவர் மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தவும் நீங்கள் விரும்பலாம் (யாக். 5:16; அப். 8:22).*

# இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின்போது எருசலேம்

*"எல்லாச் சாலைகளும் ரோமாபுரிக்கே செல்லுகின்றன," என்றோ அல்லது இதைப் போன்றோ கூற்று வழங்கப்பட்டது. ரோமாபுரியானது ரோமப் பேரரசின் மையப்பகுதியாக இருந்தது- ஆனால் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் காலத்தில், யூதர்களின் கவனக்குவிப்பு வேறிடத்தில் இருந்தது. யூதர்கள் ''வானத்தின் கீழிருந்த சகல தேசங்களிலுமிருந்து'' பஸ்காவுக்காக எருசலேமில் கூடியிருந்தனர்: பார்த்தியா, மேதியா, எலாமீத்தா, மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து, லீபியா (சிரேனே), ரோமாபுரி, கிரேத்தா, அரபு (அப். 2:9-11ஐக் காணவும்). திரளான இந்த எண்ணிக்கையில் இருந்தவர்களில் பலர் "சிலுவையில் அறையும்!" என்று கூக்குரலிட்ட கூட்டத்தில் இருந்தனர்.*

*பஸ்காவுக்கு ஐம்பது நாட்களுக்குப் பின்பு, பெந்தெகொஸ்தே நாளன்று இன்னொரு திரள் கூட்டம் கூடிற்று, இதில் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின்போது இருந்தவர்கள் பலர் உள்ளடங்கியிருந்தனர். பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தபோது, இந்த யூதர்களுக்கு, " ... நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்" என்று கூறப்பட்டது (அப். 2:36). "இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, ... சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்றார்கள்'' (அப். 2:37). அவர்களுக்கு, ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்று கூறப்பட்டது (அப். 2:38). அந்தக் கட்டளைகளுக்குச் சுமார் மூவாயிரம்பேர் கீழ்ப்படிந்தனர், சபையானது நிலைநாட்டப்பட்டது.*

*இந்த நாளில், வரலாற்றின் கவனக்குவிப்பிடம் எருசலேமாக இருந்தது. சபை தொடங்குகையில், புதிய கிறிஸ்தவர்களில் பலர் வெளியேறும்படி பலவந்தம் பண்ணப்பட்ட வரையிலும் எருசலேமில் தங்கியிருந்தனர். பிற்பாடு, சிலர் பல்வேறு தேசங்களுக்குத் தங்களுடன் சுவிசேஷத்தை எடுத்துச் சென்றனர்.*




அநேக நாடுகளிலிருந்து யூதர்கள் எருசலேமில் கூடிவந்தனர்

# மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?

## லூக்கா 16:19-31

*"மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?" என்ற கேள்வியானது மக்கள் பலரின் ஆர்வத்திற்கு உரிய ஒரு கேள்வியாக உள்ளது. இதைப் பற்றி நாம் அறிய வேண்டியவைகள் ஏராளமாக உள்ளன: நாம் மரணத்திற்குப் பின் உடனடியாக எங்கு செல்லுவோம்? பிரிந்து சென்ற நமது நண்பர்கள் உணர்வு நிலையில் இருக்கின்றனரா அல்லவா? நமக்கு அன்பானவர்கள், அவர்களின் மரணம் குறித்து நாம் துக்கப்படுவதை அறிகின்றார்களா அல்லவா?[1] இன்னும் பிற. இந்தக் கேள்விகளில் சிலவற்றிற்கு நாம் பதில் அளிக்க இயலாது. அடுத்து வரும் வாழ்வைப் பற்றிய சில விஷயங்களை நம்மிடத்திலிருந்து மறைத்து வைத்தல் என்பது தேவனுடைய சித்தமாக உள்ளது.*

*மரணத்திற்குப் பிந்திய வாழ்வு பற்றிய நமது அறிவை மட்டுப்படுத்துவதில் தேவன் கிருபையுள்ள ஒரு நோக்கம் கொண்டுள்ளார் என்பதில் நான் நிச்சயமாயிருக்கின்றேன். நம்மை விட்டுச் சென்றுள்ள நமக்கு அன்பானவர்கள் நமக்கு அருகில் இருந்து நாம் சொல்வதை அல்லது செய்வதைக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை நம்புவது சங்கடமானதாக இராதா? தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம்: விஷயம் இதுவென்று நான் கூறவில்லை. விஷயம் இதுவாக இருந்தால், நாம் கவனிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்று அறிவது நம்மை சங்கடமடையச் செய்யும் என்றே நான் கூறுகின்றேன்.*

*நாம் ஒரு வேளையில் ஒரு உலகத்தில் வாழவேண்டும் என்றே கர்த்தர் அடிப்படையில் விரும்புகின்றார். அடுத்தவரும் வாழ்வின் விவரங்களின்மீது மிக அதிகமாக நாம் வாசம் செய்தால் அது அநேகமாக இந்த வாழ்வின் நடைமுறை விஷயங்களில் நம்மைத் தகுதியற்றவர்களாக்கிவிடும். வரவிருக்கும் உலகம் பற்றிய சில விவரங்களை நம்மிடத்திலிருந்து மறைத்தல் என்பது பிதாவின் சித்தமாயிருக்கிறபடியால் (உபா. 29:29ஐக் காணவும்), நாம் திருப்தியடைந்தவர்களாய், "உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று கூறவேண்டும் (மத். 26:42).*

*இருப்பினும், இந்தப் பாடக்கருத்துப் பற்றித் தேவன் வெளிப்படுத்தியுள்ளது என்ன என்பதை அறிந்து கொள்ள நாம் உரிமைகொண்டுள்ளோம். "மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?" என்ற கேள்விக்கு வேதாகம ரீதியான பதிலைக் கண்டறிய நாம், இயேசு கூறிய ஒரு உவமையைப் படிப்போம்:*

*ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு[2] என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப் படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப் படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய்; லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான்: அதை நினைத்துக்கொள். இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான்; நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல் இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்; அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரர் உண்டு; அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டு; அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும் நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார் (லூக். 16:19-31).*

இவ்வசனப்பகுதியிலிருந்து பல பாடங்களைப் பெறமுடியும்,[3] ஆனால் இந்தப் பிரசங்கத்தில் ஒரே ஒரு கேள்வியை மாத்திரம் ஆழ்ந்து சிந்திப்போம்: மரித்தவர்களின் நிலைபற்றி இவ்வசனப்பகுதி போதிப்பதென்ன?

சிலர், "ஆனால், இது ஒரு உவமையாக இருப்பதாலும் இது மரணத்திற்குப் பிந்திய வாழ்வு பற்றி மிகச் சரியான சித்தரிப்பைக் கொடுக்காதிருப்பதாலும், நீங்கள் இவ்வசனங்களில் இருந்து எந்த முடிவையும் கொண்டுவர இயலாது" என்று மறுத்துரைக்கலாம். இது ஒரு உவமையாக இருந்தால், இது உவமைகள் பற்றிய பொதுவான மாதிரிக்குப்

பொருந்துவதாக இருப்பதில்லை.[4] எடுத்துக்காட்டாக, இந்தக் கதையில் வரும் பாத்திரங்களில் ஒருவரை இயேசு பெயரிட்டு அழைத்தார்: "லாசரு." நான் அறிந்தவரை, இதை அவர் வேறு எந்த உவமையிலும் செய்யவில்லை. மற்றும், ஒரு ஆவிக்குரிய பாடத்தைப் போதிப்பதற்காக எல்லாருக்கும் பழக்கமான நிகழ்ச்சியைப் பயன்படுத்துதல் என்பதே உவமையின் அடிப்படைக் கருத்தாயிருந்தது. இந்த "உவமையைக்" கேட்டவர்களில் சராசரித் தரமானவர்கள் மரித்தவர்களின் நிலைபற்றி நன்கு அறிந்திருந்தார்களா என்பதில் நான் ஐயப்படுகின்றேன். கிடைக்கின்ற உண்மைகள், இது உவமையாக இருப்பதில்லை, ஆனால் இயேசு தமது செய்தியை விளக்குவதற்காக அவரால் கூறப்பட்ட ஒரு உண்மையான வாழ்க்கை வரலாறாக உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கும்.[5]

இதற்கு மறுபுறத்தில், இது ஒரு உவமையாக இருக்கிறது என்று நாம் ஒப்புக்கொண்டால் என்னவாகும்? இது, இதன் சத்தியங்களைப் பொறுத்த மட்டில் சிறிதளவு வேறுபாட்டையே ஏற்படுத்தும். "உவமை" என்ற வார்த்தை "கற்பனைக் கதை" என்று அர்த்தப்படுவதில்லை. ஒரு உவமை என்பது உண்மையான வாழ்க்கைச் சூழ்நிலையில் நடைபெற்றதாகவும் அதை ஒரு ஆவிக்குரிய நடைமுறைப் பயன்பாட்டுடன் இணைத்துக் காண்பதாகவும் இருந்தது.[6] லூக்கா 16:19-31 வசனப் பகுதி ஒரு உவமையாக இருக்கிறது என்று நான் நம்புவதில்லை - ஆனால், அது ஒரு உவமையாக இருந்தபோதும், உருவமற்றுப் போகும் ஆவிகளுக்கு என்ன நடக்கிறது என்பதை அது இன்னமும் மிகச் சரியாக விவரிப்பதாக உள்ளது.

ஆகையால், ஐசுவரியவான் மற்றும் லாசரு ஆகியோரின் வரலாற்றை, "மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?" என்ற கேள்விக்குத் தேவனுடைய பதிலில் ஒரு அடிப்படைக் குறிப்பு என்ற வகையில் நாம் பயன்படுத்த முடியும் என்று நான் நம்புகின்றேன்.[7] இவ்வசனப் பகுதியை நாம் ஆராய்கையில், நாம் பல முடிவுகளை அடைவோம்.

## மரித்தவர்கள் ஏதோ ஒரு இடத்தில் இருக்கின்றனர் - மற்றும் உணர்வுடன் இருக்கின்றனர்

"மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?" என்ற கேள்விக்குப் பதில் அளிப்பதற்குச் சிலர், "எங்கும் இல்லை" என்று பதில் அளிப்பார்கள்.[8] இவர்கள், இந்த வாழ்வுக்கு அப்பால் வேறு வாழ்வு எதுவும் இல்லை என்று நம்புகின்றனர். இவர்கள், வாழ்வு என்பது இறுதியான முடிவைக்கொண்ட ஒருவழித் தெரு என்று நம்புகின்றனர். இருப்பினும் லூக்கா 16ம் அதிகாரம் எதையேனும் போதிக்கிறதென்றால், அது மனிதன் கல்லறைக்கு அப்பாலும் வாழ்கின்றான் என்றே போதிக்கிறது.

இந்த வாழ்வுக்கு அப்பால் ஒரு வாழ்வு உள்ளது என்று நம்புகின்ற மற்றவர்கள், மரணத்தில் தனிநபர்கள் இருப்பதிலிருந்து ஒழிகின்றனர் (தேவனுடைய நினைவில் மாத்திரம் "இருக்கின்றனர்") - மற்றும் ஒரு நாளில் ஒரு "உயிர்த்தெழுதல்" இருக்கும் (உண்மையில், ஒரு மறுபிறப்பு எனப்படுகிறது), அந்த வேளையில் நீதிமான்கள் அழியாமையைப்

பெறுவார்கள், மற்றும் துன்மார்க்கர் நிர்மூலமாவார்கள் என்று போதிக்கின்றனர். ஐசுவரியவானும் லாசருவும் மரணத்தின் வேளையில், இருப்பதிலிருந்து ஒழியவில்லை. இருவருமே வாழ்ந்து கொண்டும் உணர்வுடனும் இருந்தனர்.

இங்கு குறிப்பிடப்பட்ட இரு போதனைகளையும் போதிப்பவர்களுடன் நான் கலந்துரையாடியபோது, சில வேளைகளில் "மரணம்" என்ற வார்த்தையைக் கொண்டு ஒரு விளையாட்டு மேற்கொள்ளப்பட்டது. அவர்கள், "மரணத்திற்குப் பின்பு ஆவி வாழ்கிறது என்றால், அங்கு மரணம் நிகழவில்லை என்றாகிறது" என்று கூறுகின்றனர். "மரணம்" என்பதை விளக்கப்படுத்தும்படி நான் அவர்களைக் கேட்கிறேன். அவர்களின் சிந்தைகளில், "மரணம்" என்பது "இல்லாதொழிதல்" என்று அர்த்தப்படுகிறது, ஆனால் அந்த விளக்கத்தைக் கொண்டு பின்வருவதுபோன்ற வசனப்பகுதிகளை ஒப்புரவாக்குவது கடினமாகிறது:

- *ரோமர் 7:9.* பவுல், "முன்னே நான் நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன்" என்று கூறினார். அந்த அப்போஸ்தலர் இருப்பிலிருந்து ஒழிந்துபோனாரா?
- *கொலோ. 3:3.* பவுல், "ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" என்றும் எழுதினார். அவரது வாசகர்கள் இல்லாது ஒழிந்தார்களா?
- *1 தீமோ. 5:6.* மேலும் அவர், "சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்" என்றும் கூறினார். அப்படிப்பட்ட ஒரு பெண் இல்லாது ஒழிவதில்லை.

"மரணம்" என்ற வார்த்தையானது அடிப்படையில் ஒரு "பிரிதல்"[9] என்பதை - ஒரு நிலை அல்லது சூழ்நிலையின் முடிவை - குறிக்கிறது மற்றும் இது இல்லாது ஒழிதலைக் குறிப்பிடுவதில்லை.

சட்டப்படி, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கண்ணோட்டங்களைப் பற்றிக்கொண்டிருப்பவர்கள், ஆத்துமா அல்லது ஆவி என்று அழைக்கப்படக்கூடிய, மனிதனின் அழிவற்ற பாகத்தின் இருப்பை மறுப்பவர்களாக உள்ளனர். "ஆத்துமா என்பது நமக்குள்ளாக இருக்கிற உடல்சார்ந்த வாழ்வைத்தான் குறிக்கிறது" என்று அவர்கள் கூறுகின்றனர். "ஆவி என்பது நமக்குள் தேவன் அருளியுள்ள சுவாசமே தவிர வேறு ஒன்றுமல்ல" என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். "ஆத்துமா" என்பதற்குரிய கிரேக்க வார்த்தை (psuche), சுவாசம், உணர்வுகளின் இருப்பிடம் அல்லது ஒரு உயிருள்ள ஜீவி என்பதைக் கூடக் குறிக்கக்கூடும்; ஆனால் அது, "உடலில் இருந்து வேறுபடுகிற மற்றும் மரணத்தினால் கரைக்கப்படக்கூடாத ஒரு சாராம்சம்" என்றும் குறிப்பிடப்படக்கூடும்.[10] அதுபோலவே, "ஆவி" என்பதற்குரிய கிரேக்க வார்த்தை (pneuma) காற்று, சுவாசம் அல்லது உடலை இயங்கச் செய்யும் இன்றியமையாத கொள்கை என்பவற்றைக் குறிக்கக்

*கூடும், ஆனால் "ஒரு ஆவி என்பது ... ஒரு எளிய சாராம்சமாக, எல்லா அல்லது குறைந்தபட்சம் எல்லா நுண்மையான விஷயத்தையும் தவிர்த்த தாகவும், அறிதல், விரும்புதல், முடிவு செய்தல், மற்றும் செயல்படுதல் ஆகியவற்றிற்கான வல்லமை கொண்டதாகவும் உள்ளது; ... இது உடலை விட்டுப் பிரிந்துள்ள மனித ஆத்துமாவாக உள்ளது."*[11]

*மனிதன் என்பவன் ஒரு இரண்டு மடங்கு ஜீவியாக இருக்கின்றான், உடலானது இருப்பிலிருந்து ஒழியும்போது, ஆத்துமா அல்லது ஆவி தொடர்ந்து வாழ்கிறது என்று பல வேத வசனங்கள் சுட்டிக் காண்பிக்கின்றன. இங்கு ஒரு சில மாதிரி வசனங்கள் தரப்படுகின்றன:*

> *மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போ[கிறது] (பிர. 12:7).*
>
> *இயேசு அவனை [மனஸ்தாபப்பட்ட கள்ளனை] நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக். 23:43).*
>
> *இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக் கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார். இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார் (லூக். 23:46).*
>
> *அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள் (அப். 7:59).*
>
> *ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது ...*
>
> *பூமிக்குரிய கூடாராகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம் ... இந்தத் தேகத்திலே குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக் கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம் (2 கொரி. 4:16-5:8).*

*நாம் நமது ஆவிகளை எங்கே பெற்றோம்? தேவனை "ஆவிகளின் பிதா" என்று வேதாகமம் குறிப்பிடுகிறது (எபி. 12:9). கர்த்தர் "மனுஷனுடைய ஆவியை அவனுக்குள் உண்டாக்குகிற கர்த்தர்" என்று தீர்க்கதரிசியான சகரியா கூறினார் (சக. 12:1).*

*"மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?" என்ற கேள்விக்கு, நாம் முதலில் "அவர்கள் ஏதோ ஒரு இடத்தில் இருக்கின்றனர், மற்றும் அவர்கள் உணர்வுடன் இருக்கின்றனர்" என்று பதில் அளிக்கின்றோம், இருப்பினும் நமது வேத வசனப்பகுதியில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை இன்னும் அதிகமாக உள்ளன.*

## மரித்தவர்கள் இந்த பூமியில், புதிய உடல்களில் மறு அவதாரம் எடுப்பதில்லை

மறு அவதாரம் பற்றிய உபதேசமானது, மரித்தவர்களின் ஆத்துமாக்கள் பூமியில் அடுத்தடுத்துப் புதிய வடிவங்களில் அல்லது உடல்களில் திரும்புகின்றன என்ற நம்பிக்கையாக உள்ளது. இது இந்து மதம் மற்றும் பல கிழக்கத்திய மதங்களின் நம்பிக்கையாக உள்ளது. இது போதிக்கப்படுகிற இடங்களில், சிலவேளைகளில், பசுக்கள், குரங்குகள் அல்லது பாம்புகள் என்பவை பரிசுத்தமானவைகள் என்று கருதப் படுகின்றன. இந்த விலங்குகள், மக்களின் முன்னோர்களின் மறு அவதாரங் களாக இருக்கக் கூடும் என்று அவர்கள் நம்புகின்றனர். யூதர்களில் சிலர், மறு அவதாரத்தின் மாறுபட்ட கருத்தைப் பற்றிக் கொண்டிருந்தனர் (மத். 16:13, 14ஐக் காணவும்) - மற்றும், அவ்வப்போது, இந்தக் கருத்தானது மேற்கத்திய உலகத்தில் ஆர்வத்தை உயிர்ப்பித்துள்ளது.

ஆயினும், லூக்கா 16ல், ஐசுவரியவானும் லாசருவும் இவ்வுலகத்தில் புதிய வடிவங்களிலோ அல்லது புதிய உடல்களிலோ திரும்பி வந்ததில்லை. அவர்கள் இன்னமும் அவர்களாகவே இருந்தனர், மற்றும் அவர்களின் சூழ்நிலைகள் நிலைவரமானவையாக இருந்தன என்று வேத வசனப்பகுதி வலியுறுத்துகிறது. வசனம் 26, “அதுவுமல்லாமல் இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது” என்று கூறுகிறது. உண்மையில், அவர்களில் எவரும், எந்த வடிவத்திற்கும் திரும்ப இயலாது என்று ஆபிரகாம் மறைமுகமாய்க் கூறினார்.

மறு அவதாரம் பற்றிய யூகம் செய்யப்பட்ட விஷயங்களின் கதைகளை உணர்வுப்பூர்வமாகப் பத்திரிகைகள் கூறும்போது, நான் அதிகம் உணர் வெழுச்சி அடைவதில்லை. என் வாழ்வில் நான் வேதாகமம் என்ற உரை கல்லைக் கொண்டிருக்கின்றேன் என்பதே இதற்குக் காரணமாக உள்ளது. புதிய கருத்துக்கள் ஆர்வமுள்ளவைகளாக இருக்கக்கூடும், ஆனால் அவற்றிற்கு நான் பின்வரும் சோதனையையே நடைமுறைப் படுத்து கின்றேன்: இது வசனத்தின் போதனையுடன் எவ்வாறு ஒத்திருக்கிறது? மறு அவதாரம் என்பதின் போதனை, வேதாகமத்தில் போதிக்கப்படுவதில்லை என்பதே எளிய சத்தியமாக உள்ளது. சில அடிப்படைக் கொள்கைகளைக் கவனியுங்கள்:

- பிர. 3:2. “... இறக்க ஒரு காலமுண்டு [ஒருமைச் சொல்] ...”
- எபி. 9:27. “... ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட் [டுள்ளது].”
- பிர. 12:7. பின்பு, “ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் செல் [லுகிறது]” இது இன்னொரு உடலுக்குள் செல்லுவதில்லை.
- 2 கொரி. 5:10. “ஏனென்றால், சரீரத்தில் [ஒருமைச்சொல்]

*அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்."*

*வேதாகமம் மறு அவதாரம் உபதேசத்தைப் போதிப்பதில்லை. ஆகையால், அது விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது (ரோமர் 10:17ஐக் காணவும்). இந்த உபதேசம் தவறானது என்று லூக்கா 16 தெளிவாக்குகிறது.*

## மரித்தவர்கள் தங்கள் கடைசிப் பலனை அடைவதற்கு நேரடியாகச் சென்றிருக்கவில்லை

*மரணத்தின்போது மக்கள் நேரடியாக பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ செல்லுவதாகச் சிலர் நினைக்கின்றனர். ஐசுவரியவானும் லாசருவும் (நமது இந்தப் படிப்பில் பிற்பாடு குறிப்பிடப்படவிருக்கிறபடி) அந்த இறுதி நிலைகளை அடைந்திருக்கவில்லை.[12]*

*மரணத்தின்போது மக்கள் தங்கள் கடைசிப் பலன்களுக்கு நேரடியாகச் சென்று விட்டால், இது நியாயத்தீர்ப்பு நாள் பற்றிய வேதாகம போதனையைப் பெருமளவில் செல்லாததாக்கிவிடும். நல்லவர் பொல்லாதவர் யாவரும் நியாயந்தீர்க்கப்படும் நாள் ஒன்று உள்ளது என்று வேதாகமம் போதிக்கிறது (மத். 25:31, 32; யோவா. 16:8; அப். 17:31; எபி. 6:2; 9:27; அப். 24:25ஐக் காணவும்). இந்த நியாயத்தீர்ப்பு கர்த்தருடைய மறுவருகைக்கு முன்னதாக மரிப்பவர்களையும் உள்ளடக்குகிறது (மத். 12:41, 42ஐக் காணவும்). பேதுரு, "கர்த்தர் ... அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" என்று எழுதினார் (2 பேது. 2:9). கர்த்தர் மீண்டும் வருகின்றபோது நியாயத்தீர்ப்பு நடைபெறும் என்பதே நியாயத்தீர்ப்பு பற்றி வேதாகம போதனையின் பொதுவான ஒழுங்காயிருக்கிறது, அந்த வேளையில் உயிருடன் இருப்பவர்களும் மரித்தவர்களும் தேவனுக்கு முன்பாக நிற்பார்கள். மரணத்தின்போதே பரலோகத்திலும் நரகத்திலும் வைக்கப்பட்ட மக்கள் நியாயத்தீர்ப்பு நாளன்று தாங்கள் முன்பிருந்த இடத்திற்கே திருப்பி அனுப்பப்படுவதற்காக மாத்திரமே வெளியே கொண்டு வரப்படுவார்கள் என்பது மிகமிக ஏற்பில்லாத கூற்றாக உள்ளது.[13]*

*நீதிமான்கள் தங்கள் பலனை அடைவதற்கு உடனடியாகச் செல்லுகின்றனர் என்று இரண்டு வேத வசனப்பகுதிகள் சுட்டிக்காண்பிக்கின்றன என்பது உண்மையே: கொரிந்தியர்களிடத்தில் பவுல், "நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்" என்று கூறினார் (2 கொரி. 5:8). மீண்டுமாக அந்த அப்போஸ்தலர், "தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு" என்று பிலிப்பியருக்கு எழுதினார் (பிலி. 1:23). இருப்பினும், மரணத்தின் முடிவான நிலையைப் பற்றிப் போதிப்பதல்ல ஆனால் அதற்கு மாறாக, மரணம் என்பது*

ஆயத்தமாக இருப்பவர்களுக்கு ஒரு வெற்றியே என்று போதிப்பதே இவ்விரு வசனப்பகுதிகளின் நோக்கமாகும் என்று நான் கருத்துத் தெரிவிக்க விரும்புகின்றேன். மரித்த நீதிமான்கள் கிறிஸ்துவின் அன்பினால் சூழப்பட்டிருப்பார்கள் என்ற கருத்தில் அவர்கள் ''கிறிஸ்துவுடன்'' இருப்பார்கள், ஆனால் இது அவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுவார்கள் என்ற கருத்தில் அமைவதில்லை.[14]

மேலும், பவுல் மரித்தபோது, அவர் "கர்த்தருடன்" இருக்கும்படி கடந்து சென்றார், ஆனால் அவர் இன்னும் பரலோகத்தில் தமது கிரீடத்தைப் பெற்றிருக்கவில்லை. மற்றவர்களுக்கு அன்பை வெளிப்படுத்துகின்றவர்கள் (லூக். 14:12, 13) தாங்கள் மரிக்கின்ற நாளில் அல்ல, ஆனால் உயிர்த்தெழுதலின் நாளில் "பதில் செய்யப்படுவார்கள்" (லூக். 14:14) என்று இயேசு போதித்தார். இயேசு, "... நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்" என்று கூறியபோது (யோவா. 14:3) அவர் தமது இரண்டாம் வருகையை குறிப்பிட்டார் என்ற பெரும்பான்மையான கல்வியாளர்கள் நம்புகின்றனர். பவுல் தமக்கு வைக்கப்பட்டிருந்த நீதியின் கிரீடம் பற்றி, "... நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்று எழுதினார் (2 தீமோ. 4:8). "அந்நாளிலே" என்ற சொற்றொடரையும் கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலை விரும்புகின்ற யாவரும் அதே கிரீடத்தை அதே "நாளிலே" பெறுவார்கள் என்ற உண்மையையும் கவனிக்கவும். சந்தர்ப்பப் பொருளில், இந்தக் குறிப்பு நியாயத்தீர்ப்பு நாளைப் பற்றியதாக இருக்கவேண்டும்.

பாடத்தின் இந்தப் பகுதி வரையிலும் நான், லூக்கா 16ன் வரலாற்றைப் பற்றிய எனது அணுகுமுறையில் பெரும்பாலும் எதிர்மறையாகவே இருந்துள்ளேன். மரித்தவர்கள் எங்கும் இல்லை, அவர்கள் மாறுபட்ட உடல்களில் பூமிக்குத் திரும்ப வருகின்றனர், மற்றும் அவர்கள் ஏற்கனவே பரலோகத்தில் அல்லது நரகத்தில் இருக்கின்றனர் என்ற பல்வேறுபட்ட கருத்துக்களைப் புறக்கணித்துள்ளோம். "அப்படியானால் மரித்தவர்கள் எங்குதான் இருக்கின்றார்கள்?" என்ற கேள்வி இன்னமும் நிலைத்துள்ளது. நாம் லூக்கா 16ஐப் பற்றிய அதிகம் நேர்மறையான ஒரு ஆய்வுக்குக் கடந்து செல்லுவோம்.

## மரித்தவர்கள் நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருப்பவர்களாய் ஒரு இடைப்பட்ட நிலையில் உள்ளனர்

ஆண்டுகளினூடே, சுவிசேஷப் பிரசங்கியார்கள், லூக்கா 16ல் விவரிக்கப்பட்டுள்ள வகையில் காணப்படாத உலகத்தைக் காட்சிப்படுத்துவதற்கு பல்வேறு வகையான வரைபடங்களைப் பயன்படுத்தியுள்ளனர். அப்படிப்பட்ட வரைபடங்கள் யாவும் அவற்றிற்குள்ளேயே கட்டியமைக்கப்பட்ட பலவீனத்தைக் கொண்டுள்ளன, ஏனெனில் அவைகள், காணப்படாத

உலகம் என்பது புவியியல் ரீதியான ஒரு அமைவிடத்தைக் கொண்டுள்ளது என்ற ஒரு தவறான மனப்பதிவை விட்டுச் செல்லுவதாயிருக்கின்றன. காணப்படாத உலகம் அல்லது பாதாளம் என்பது இடம் என்பதை விட அதிகமாக இருப்பு நிலை என்பதாக உள்ளது. இருந்தபோதிலும், இவ்வரலாற்றைச் சித்தரிப்பதற்கு இதை விட மாறுபட்ட சூழ்நிலை எதையும் கவனக்குவிப்பிற்குக் கொண்டுவர எனக்குத் தெரியவில்லை. ஆகையால், லூக்கா 16ல் காணப்படுகிற குறிப்பிடத்தைப் பயன்படுத்துகிற பாதாளம் (காணப்படாத உலகம்) என்ற ஒரு வரைபடத்தைப் பகிர்ந்து கொள்ள என்னை அனுமதியுங்கள்.

இவ்வரைபடத்தின் பல்வேறு பகுதிகளைக் கண்ணோக்குங்கள். முதலாவது மேல் பகுதியில் உள்ள தலைப்பைக் கவனியுங்கள்: "**பாதாளம்** (காணப்படாத உலகம்)." ஐசுவரியவான் "பாதாளத்திலே ... தன் கண்களை ஏறெடுத்து ... கண்டான்" (லூக். 16:23). மரித்தவர்கள் இருக்கும் நிலையை வேதாகமம் "பாதாளம்" என்று குறிப்பிடுகிறது. பாதாளம் என்பதற்குரிய கிரேக்க வார்த்தையான Hades என்பது பழைய ஏற்பாட்டில் உள்ள Sheol என்ற எபிரெய வார்த்தைக்கு ஏறக்குறைய இணையானதாக உள்ளது.[15] Hades என்ற வார்த்தை அடிப்படையில், "காணப்படாத"[16] என்று அர்த்தப் படுகிறது மற்றும் இது மரித்தவர்கள் இருக்கும் "காணப்படாத [உலகத்தை]" நிலையைக் குறிக்கிறது. லூக்கா 16ல் பயன்படுத்தப்பட்ட வகையில் இந்த வார்த்தைக்கான பின்வரும் விளக்கத்தைத் தாயெர் அவர்கள் தருகின்றார்: "உறவினின்று நீங்கிய ஆவிகள் ஏற்றுக்கொள்ளப்படும் பொதுவான நிலை."[17] இன்றைய நாட்களில் "பாதாளம்" என்பது அடிக்கடி "நரகம்"[18] என்பதற்கு மறைமுகமான குறிப்பாகப் பயன்படுத்தப்படுகிறது, ஆனால் நரகம் (gehenna) என்பது மரித்த துன்மார்க்கரின் நித்தியமான நிலையாக உள்ளது, அதே வேளையில் பாதாளம் என்பது (நாம் காணப் போகின்றபடி) மரித்த நல்லவர்கள் மற்றும் தீயவர்கள் யாவரும் இருக்கும் இடைநிலையாக உள்ளது.

பாதாளம்
(காணப்படாத உலகம்)



*வரைபடத்தை மீண்டும் கண்ணோக்குங்கள். காணப்படாத உலகத்தில் இரண்டு வித்தியாசப்பட்ட பகுதிகள் இருப்பதைக் கவனியுங்கள். ஐசுவரியவான் இவற்றில் ஒரு பகுதியில் இருந்தான்; லாசரு இன்னொரு பகுதியில் இருந்தான். **"பெரும் பிளப்பு"**[19] என்று பெயரிடப்பட்டுள்ள ஒரு பிரிவையும் நீங்கள் கவனிப்பீர்கள். நாம், ஐசுவரியவானின் நிலையிலிருந்து தொடங்கி, ஒவ்வொரு அம்சத்தையும் பெரும் விவரத்துடன் ஆழ்ந்து சிந்திப் போம். "பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து" (லூக். 16:23அ). ஐசுவரியவான் இருந்த நிலையை நான் **"வேதனை"** என்று பெயரிட்டுள்ளேன்.*

***"வேதனை"** என்ற வார்த்தைக்குக் கீழ் நீங்கள் "அல்லது சித்திரவதை" என்ற வார்த்தைகளைக் கவனிப்பீர்கள். இந்தச் சொற்றொடராக்கம் இதே வார்த்தையாக இல்லாவிட்டாலும் இதைப் போன்ற ஒரு நிலையை விவரிக்கிற 2 பேதுரு 2:4ல் இருந்து வருகிறது, இதில் ஐசுவரியவான் தான் இருப்பதைக் கண்டான்: "பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்ப விடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத் தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து." 2 பேதுரு 2:4ல் "நரகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது நித்திய தண்டனையைக் குறிக்கும் gehenna என்ற வார்த்தையல்ல, ஆனால் tartarus*[20] *என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. Tartarus என்ற வார்த்தையானது, "பாதாளத்தில் துன்மார்க்கர் அடைக்கப்பட்டு சித்திர வதைப்படுகின்ற பகுதி"யைக் குறிப்பதற்குக் கிரேக்கர்களால் பயன்படுத்தப் பட்டது.*[21] NIV *வேதாகமம், கீழ்ப்படியாத தூதர்கள் "நியாயத்தீர்ப்புக் கென்று வைக்கப்படுவதற்காக அடைக்கப்பட்ட இருளான குகைகள்" என்று இதைக் கூறுகிறது. "நியாயத்தீர்ப்பு" இன்னமும் நடைபெறவில்லை, எனவே இது நியாயத்தீர்ப்பு நாளுக்கு முந்திய ஒரு இடைநிலை என்பதைக் கவனியுங்கள். நான் கூறியபடி, இந்த சூழ்நிலையானது ஐசுவரியவான் அடைக்கப்பட்டிருந்த அதே சூழ்நிலையாக இராவிட்டாலும், அதைப் போன்றதாக உள்ளது.*

*இப்பொழுது லாசருவின் நிலையை நோக்கித் திரும்புவதற்கு என்னை அனுமதியுங்கள்: அவரது நிலையை நான் **"ஆபிரகாமின் மடி"** என்று பெயரிட்டுள்ளேன், ஏனென்றால் ஐசுவரியவான், "தூரத்திலே ஆபிரகாமை யும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்" (லூக். 16:23). "ஒருவருடைய மடியில்" இருத்தல் என்பது, நெருங்கிய ஐக்கியத்தையும் உறவையும் மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு மிகவும் அருகாமையில் இருத்தலாக உள்ளது.*[22] *நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருக்கும் நீதிமான்களின் நிலை இப்படிப்பட்டதாகவே உள்ளது.*

***"ஆபிரகாமின் மடி"** என்ற வார்த்தைகளுக்குக் கீழ் நான் "அல்லது பரதீசு" என்ற வார்த்தைகளைக் கொடுத்துள்ளேன். இந்தக் குறிப்புப் பெயரானது காணப்படாத உலகத்தினுள் இயேசு தாமே சென்ற பயணத் திலிருந்து வருகிறது. கள்ளனிடம் அவர், "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" என்று கூறினார் (லூக். 23:43). "பரதீசு" என்பது "சந்தோஷத்தின் இடம் அல்லது சந்தோஷத்தின் தோட்டம்" என்று*

அர்த்தப்படுகிற ஒரு பெர்ஸிய வார்த்தையாக உள்ளது.[23] வேதாகமத்தில் இவ்வார்த்தை சிலவேளைகளில் பரலோகத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப் பட்டுள்ளது (வெளி. 2:7ஐக் காணவும்) - ஆனால் இவ்விடத்தில் விஷயம் அப்படியிருக்க இயலாது, ஏனென்றால் பரதீசில் இயேசு குறுகிய காலம் தங்கியிருந்த பின்பு அவர், தாம் "இன்னும் பிதாவினிடத்திற்கு ஏறிச் செல்ல வில்லை" என்று கூறினார் (யோவா. 20:17). பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு தமது பிரசங்கத்தில், இயேசுவின் உடல் கல்லறையில் இருந்தபோது, அவரது ஆவி "பாதாளத்தில்" இருந்தது என்று சுட்டிக்காண்பித்தார் (அப். 2:31).[24] லுக்கா 23:43ஐயும் அப். 2:31ஐயும் ஒன்றாக வைத்துப் பார்க்கையில், இயேசுவின் ஆவியானது காணப்படாத உலகத்தில், "பரதீசு" என்று குறிப்பிடப்படக்கூடிய பகுதியில் இருந்தது என்று நாம் முடிவு செய்கின் றோம். "பரதீசு" என்பது "ஆபிரகாமின் மடியில் இருத்தல்" என்பதற்கு சமமானதாக உள்ளது என்று யூகிப்பது நியாயமானதாக உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இவ்விரு சொற்றொடர்களுமே மரித்த நீதிமான்களின் நிலையை - நியாயத்தீர்ப்புக்குக் காத்திருக்கும் நிலையை - குறிக்கின்றன, ஆனால் இது சமாதானம், சந்தோஷம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒரு சூழ்நிலையாக உள்ளது.

நியாயத்தீர்ப்புக்கு ஒருவர் காத்திருக்கக் கூடியதில் - சமாதானம் மற்றும் பாதுகாப்புடன் ஒன்றும், பயம் மற்றும் பெருந்துக்கத்துடன் ஒன்றும் என்ற - இரு நிலைகள் உள்ளன என்று கண்டுள்ள நிலையில், நாம் பின்வரும் கேள்வியை எழுப்பலாம்: "ஆனால் நீதிமான்கள் ஏற்கனவே சந்தோஷமாக வும் துன்மார்க்கர் ஏற்கனவே வதைபட்ட நிலையிலும் உள்ளனர் என்றால், நியாயத்தீர்ப்பு நாளின் நோக்கம் என்ன?"[25] இந்த உலகத்திற்கு அப்பால் உள்ள வாழ்க்கை பற்றிய கலந்துரையாடலுக்கான நமது முயற்சியை, இன்னும் பிறவாத இரு குழந்தைகள், கர்ப்பப் பைக்கு வெளியே வாழ்வு எவ்வாறு இருக்கும் என்பதை யூகித்தறியும் விஷயத்துடன் ஒப்பிடப் படுவதை ஒத்துக்கொள்வதில் எனக்கு சம்மதமே. நமது பதில்கள் எப்போதுமே நம்முடைய அறியாமையை வெளிப்படுத்தும். இருப்பினும், இந்தக் கேள்வியின் மீதான சில விளக்கங்கள் இங்கு முறையானவைகளாக உள்ளன. இதற்கு ஒரு பதில் என்பது நியாயத்தீர்ப்பின் நாள் என்பது நியாயத்தீர்ப்பை விதிக்கும் நாளாக இருக்குமே ஒழிய குற்றத்தையும் குற்றமின்மையையும் தீர்மானிக்கும் நாளாக இராது - அந்த நாளில் தேவனு டைய இரக்கமும் நீதியும் முழுமையாகச் செயல்விளக்கப்படுத்தப்படும் என்பதாக இருக்கக் கூடும்.

இருப்பினும் நிறைவான பதில் என்பது, நாம் "வதைப்படுதல்" மற்றும் "ஆபிரகாமின் மடி" என்பவற்றைப் பற்றிப் பேசும்போது, நாம் இடங் களைப் பற்றியல்ல ஆனால் இருத்தலின் நிலைகளைப் பற்றியே பேசுகின் றோம் என்று புரிந்துகொள்வதிலேயே காணக்கிடக்கிறது. அநீதியான ஆத்துமா எங்கிருந்த போதிலும், நியாயத்தீர்ப்பு நாள் அன்று தான் குறைவு படுவதாகக் காணப்படப் போவதை அறியும்போது, காத்திருக்கும்போது அவரை பரிதபிக்கப்படத்தக்கவராக்கும். நீதியுள்ள ஆத்துமா எங்கிருந்த போதிலும், நியாயத்தீர்ப்பு நாளில் அவரைப் பார்த்துத் தேவன், "நல்லது

உண்மையும் உத்தமுமுள்ள ஊழியக்காரனே" என்று கூறுவார் என்பதை அவர் அறிந்திருப்பார் (மத். 25:21அ, 23அ), மற்றும் அவர் காத்திருப்பதில் சந்தோஷமாயிருப்பார்.

பின்வரும் விவரிப்பு உதவிகரமாக இருக்கலாம் அல்லது இல்லாதிருக்க லாம். நீங்கள் ஒரு பயங்கரமான குற்றம் சாட்டப்பட்டு, சந்தேகத்தின் நிழல் எதுவுமின்றி சரியான தீர்ப்பு தரவழைக்கப்படும் என்று அறிந்த நிலையில், விசாரணைக்காகக் காத்திருக்கின்றீர்கள் என்று கற்பனை செய்து கொள்ளுங் கள். நீங்கள் குற்றமற்றவராக இருந்தால், நீங்கள் முற்றிலுமாகத் தெளிவா யிருப்பீர்கள். இந்த நம்பிக்கையுடன் நீங்கள் முழுமையான சந்தோஷம் மற்றும் சமாதானத்தோடு விசாரணைக்காகக் காத்திருப்பீர்கள். இருப்பினும், நீங்கள் குற்றவாளியாக இருந்தால், உங்களுக்கு முன்னால் காத்திருப்பது என்ன என்பதை முழுமையாக அறிந்த நிலையில் பயத்தினால் நிரப்பப் பட்டிருப்பீர்கள். இந்த விவரிப்பு முழுமைத்தன்மையில் இருந்து தூரத்தில் உள்ளது, ஆனால் குறைந்தபட்சமாக இது, கடைசி நியாயத்தீர்ப்புக்கு முன்னதாகவே கூட, மனதின் மாறுபட்ட இரு எண்ணப் போக்குகள் எப்படியிருக்கும் என்பதைக் காண்பிக்கிறது.

எனது வரைபடத்தைச் சிலர் உற்றுப்பார்த்து, ''இது உத்தரிக்கிற ஸ்தலத்தின் கருத்துப் போன்றதாக உள்ளதல்லவா?" என்று கேட்கலாம். இல்லவே இல்லை. உத்தரிக்கிற ஸ்தலத்தின் கருத்து என்பது வேத வசனங் களுக்கு முற்றிலும் அந்நியமானதாக உள்ளது. அவ்வார்த்தை முதலாய் வேதாகமத்தில் காணப்படுவதில்லை.[26] துன்புறுதலின் நிலையில் (உத்தரிப்பு ஸ்தலத்தில்) உள்ள ஆத்துமா ஆசீர்வாதத்தின் நிலைக்குள் (பரலோகத்தினுள்) செல்ல முடியும் என்ற கருத்து உத்தரிப்பு ஸ்தலம் என்ற போதனைக்குள் மறைந்துள்ளது. இதை வேறு விதமாகக் கூறுவதென்றால், மனிதன் தனது மரணத்திற்குப் பின்பும் கூட ''இரண்டாவது வாய்ப்பு'' ஒன்றைப் பெறமுடியும் என்று இந்த உபதேசம் போதிக்கிறது. வரைபடத்தை மீண்டும் கண்ணோக்கி, **"பெரும் பிளப்பு"** என்பதைக் கவனியுங்கள். ஐசுவரிய வானிடத்தில் ஆபிரகாம் "அதுவுமல்லாமல் இவ்விடத்திலிருந்து உங்களிடத் திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார் (லூக். 16:26). மரணத்திற்குப் பின் "இரண்டாவது வாய்ப்பு" என்று ஒன்றுமில்லை என்பதாகவே வேதாகமம் போதிக்கிறது:

- வெளி. 2:10. ஒருவர் "மரண பரியந்தம் உண்மையா யிருந்தால்," அவருக்குக் கர்த்தர் "ஜீவ கிரீடத்தைத்" தருவார்.
- 2 கொரி. 5:10. "ஏனெனில் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" - அவர் தமது சரீரத்தை விட்டு வெளியேறிய பின்பு அவருக்காக வேறு யாரேனும் செய்கின்ற செயல்களின்படி அவர் இதை அடைய

*மாட்டார்.*

- *யோவா. 8:21. ஒருவர் தமது பாவங்களில் மரித்தால், அவர் கிறிஸ்து இருக்கும் இடத்திற்குச் செல்ல முடியாது.*

## முடிவுரை

*"மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?"* என்ற கேள்விக்கு வேதாகமத்தின் பதில் என்று நான் நம்புகின்றதைப் பகிர்ந்து கொள்வதற்கு நான் முயற்சி செய்துள்ளேன். தேவன் நமக்கு இவற்றையே வெளிப்படுத்தத் தேர்ந்து கொண்டுள்ளார். இத்துடன், நாம் நிறைவடைய வேண்டும். நான் இந்தப் பாடத்தை முடிக்கையில், அதிகம் நடைமுறையான மற்றும் அதிகம் தனிப்பட்ட வகையிலான பின்வரும் கேள்வியைக் கேட்க என்னை அனுமதியுங்கள்: *அடுத்த ஐந்து நிமிடங்களில் நீங்கள் மரிக்க நேர்ந்தால், நீங்கள் எங்கே இருப்பீர்கள்? அதுவே உங்களை உண்மையில் அக்கறை கொள்ளச் செய்ய வேண்டும்.*

கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளவேண்டும் (யோவா. 8:24), நமது பாவங்களில் இருந்து மனந்திரும்பவேண்டும் (லூக். 13:3), அவரில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிடவேண்டும் (மத். 10:32), மற்றும் நமது பாவங்களிலிருந்து மீட்கப்படுவதற்காக தண்ணீருக்குள் முழுக் காட்டப்பட வேண்டும் (மாற். 16:16; அப். 2:38; ரோமர் 6:3-6) என்று கிறிஸ்து நமக்குக் கூறுகின்றார். பின்பு நாம் நமது வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் அவருடன் நடக்க வேண்டும் (வெளி. 2:10). இவைகளை நீங்கள் செய்துள்ளீர்களா? நீங்கள் நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல் உள்ள வாழ்வை வாழ்கின்றீர்களா? "இல்லை" என்பது உங்கள் பதிலாய் இருந்தால், நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலை உடனடியாகத் தரவழைக்க வேண்டும் என்று நான் உங்களுக்காக ஜெபிக்கின்றேன். இதை விட முக்கியமானது வேறு ஒன்றுமில்லை!

## குறிப்புகள்

இந்த எடுத்துரைப்பில் ஒரு மூல சிந்தனை உள்ளது என்பதில் நான் ஐயப்படுகின்றேன். நான் நினைவுபடுத்திக் கொள்ளக்கூடிய வரையில், நீண்ட காலமாக இது சற்றே மாறுபாடுகளுடன் விசுவாசமுள்ள சுவிசேஷப் பிரசங்கியார்களால் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. எனது ஆதாரமூலங்களை நான் நினைவுபடுத்த முடியவில்லையாதலால், இந்தத் தலைப்பின்மீது பிரசங்கித்துள்ள மற்றும் எழுதியுள்ள யாவருக்கும் நான் "நன்றிகளை" தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பிரசங்கிக்கும் பல சூழ்நிலைகளுக்கு இந்தப் பிரசங்கம் நீண்டதாக உள்ளது என்றாலும், இது, உத்தரிப்பு ஸ்தலம் போன்ற தலைப்புகளை விட்டு விடுவதன்மூலம் இந்தப் பிரசங்கத்தைச் சுருக்க முடியும். இந்த பாடக் கருத்துக்களை ஒரு இரு பகுதிப் பிரசங்கமாக்குவதன்மூலம் அல்லது வகுப்பறைச் சூழலில் எடுத்துரைப்பதன் மூலம் இதை விவரிக்கக்கூடும்.

சமீப காலம் வரை, இந்தப் பிரசங்கத்தின் முடிவு பற்றி சகோதரர்கள்

*சிலரின் மத்தியில் கருத்து ஒருமைப்பாடு இல்லாமை நிலவுவதைப் பற்றி நான் அறியாதிருந்தேன். அவர்கள் - கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவை நடைபெற்றதிலிருந்து - மரித்த நீதிமான்கள் யாவரும் நேரடியாகப் பரலோகத்திற்குச் செல்லுவதாக நம்புகின்றனர். அவர்கள் மீதான மரியாதையினிமித்தமாக, "நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற துணைப் பாடத்தை நான் உள்ளடக்கியிருக்கின்றேன். லூக்கா 16:19-31ல் சித்தரிக்கப்பட்டுள்ள சூழ்நிலை இன்றளவும் உண்மையாக உள்ளது என்று நம்புபவர்கள், இந்தப் புத்தகத்தின் மதிப்புமிக்க இந்தப் பக்கங்கள் வீணடிக்கப்பட்டுள்ளதாக நினைப்பார்கள். இவ்வசனப்பகுதி இன்றைய நாட்களுக்கு நடைமுறைப் படுத்தப்படுவதில்லை என்று நம்புபவர்கள், நான் அவர்களின் விவாதங்களுக்குப் போதுமான அளவு எடுத்துரைத்து பதில் அளிக்கவில்லை என்று நினைப்பார்கள். பிலாத்துவின் வார்த்தைகளைக் கடன் வாங்குவதென்றால், "நான் எழுதினது எழுதினதே" (யோவா. 19:22).*

---

குறிப்புகள்

[1]மரித்தவர்களின் ஆத்துமாக்களால் நாம் சூழப்பட்டிருக்கின்றோம் என்று போதிப்பதற்குச் சிலர் எபி. 12:1ஐப் பயன்படுத்துகின்றனர். எபி. 12:1-4 வசனப்பகுதி, கிறிஸ்தவ வாழ்வில் நிலைத்திருப்பதற்கு ஒரு ஓட்டப் பந்தயத்தின் ஒப்புவமையைப் பயன்படுத்துகிறது. ஒரு விவரிப்பின் விவரங்களை எடுத்துக்கொண்டு அவற்றில் உள்ள உபதேச நிலைப்பாடுகளை விரிவாக்க அவற்றைக் கருவியாகப் பயன்படுத்தக் கூடாது. [2]லூக்கா 16ன் லாசரு என்பவர் பெத்தானியாவில் வாழ்ந்தவரும் இயேசுவின் நண்பருமாயிருந்த அதே லாசரு அல்ல (யோவா. 11). [3]"கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் "நரகத்திலிருந்து ஒரு கடிதம்" என்ற பிரசங்கத்தைக் காணவும். [4]லூக்கா 16:19-31 ஒரு உவமையா அல்லவா என்பது பற்றிய கலந்துரையாடலை "கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் காணவும். [5]இயேசுவின் கருத்தைப் பற்றி, "கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் "எனக்கு ஒரு கதை சொல்லுங்கள்" என்ற பாடத்தில் காணப்படும் சந்தர்ப்பப்பொருளின் கருத்தைக் காணவும். [6]"உவமை" என்ற வார்த்தை பற்றிய ஒரு கலந்துரையாடலை "கிறிஸ்துவின் வாழ்வு, 3" என்ற புத்தகத்தில் "அவர் அநேக விஷயங்களை உவமைகளாக ... சொன்னார்" என்ற பாடத்தில் காணவும். [7]லூக்கா 16, கிறிஸ்துவின் மரணத்திற்குப் *பின்பு* அல்ல ஆனால் அவரது மரணத்திற்கு *முன்பு* மரித்தவர்களின் நிலையை மிகச் சரியாக விவரிக்கிறது என்று நம்புகின்றவர்கள் உள்ளனர். இந்தக் கருத்து நிலைப்பாடு அடுத்து தொடங்குகின்ற "நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற துணைப்பாடத்தில் கலந்துரையாடப்படுகிறது. [8]இவர்கள், "கல்லறையில்" என்று கூறலாம் - ஆனால் உடலானது சிதையுற்று அதைச் சுற்றியுள்ள மண்ணின் பாகமாவதால், அவர்களின் நிறைவான பதில் "எங்குமில்லை" என்பதாகவே உள்ளது. [9]நமது பாவங்கள் நம்மைத் தேவனிடத்தில் இருந்து பிரிக்கிறபோது (ஏசா. 59:1, 2), நாம் பாவத்தில் மரித்தவர்களாய் இருக்கின்றோம் (எபே. 2:1). ஆவியானது உடலில் இருந்து பிரிகிறபோது நாம் உடல்ரீதியாக மரித்தவர்களாய் இருக்கின்றோம் (யாக். 2:26). மனிதர்கள் நித்தியத்திற்கும் (2 தெச. 1:9) தேவனிடத்தில் இருந்து பிரிக்கப்படுகின்றபோது "இரண்டாம் மரணம்" (வெளி.

*20:14)* *நேரிடுகிறது.* [10]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint; Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 677.

[11]Thayer, 520. [12]*கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது சூழ்நிலை மாறிற்று - ஆகையால், லூக்கா 16 இன்றைய நாட்களுக்கு நடைமுறைப்படுவதில்லை - என்ற நிலைப்பாடு, அடுத்து தொடங்குகின்ற "நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாக பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற துணைப் பாடத்தில் ஆழ்ந்து சிந்திக்கப்பட்டுள்ளது.* [13]*காணப்படாத உலகம் என்ற கருத்தைப் பற்றி இதே போன்றதொரு மறுப்பு முன் வைக்கப்பட்டுள்ளது. இது இந்தப் பிரசங்கத்தின் பிற்பகுதியிலும் அடுத்து தொடங்குகின்ற "நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற துணைப் பாடத்திலும் ஆழ்ந்து சிந்திக்கப்படும்.* [14]*இந்தக் கருத்துக்களை நான், அடுத்து தொடங்குகின்ற "நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற துணைப் பாடத்தில் ஆழ்ந்து ஆராய்வேன்.* [15]*மரித்தவர்கள் நிலைபற்றிப் புதிய ஏற்பாட்டைக்காட்டிலும் குறைவானவைகளே பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. Sheol என்ற எபிரெய வார்த்தையானது Hades என்ற கிரேக்க வார்த்தையைக் காட்டிலும் அதிகம் பொதுவான (மற்றும் தெளிவற்ற) வார்த்தையாக உள்ளது. Sheol என்பது பெரும்பாலும் கல்லறையை மாத்திரம் குறிக்கிறது.* [16]Thayer's lexicon has "not to be seen," 11. [17]Thayer, 11. [18]*குழப்பத்தின் ஒரு பகுதியானது அநேகமாக,* KJV *வேதாகமம் Hades என்ற கிரேக்க வார்த்தையை மொழிபெயர்ப்பதற்கு* "hell" *என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதினால் வந்திருக்கலாம். லூக்கா 16:23ல் விஷயம் இதுவாகவே உள்ளது.* [19]The KJV has "a great gulf" (Luke 16:26). [20]*என்னிடத்தில் உள்ள* Interlinear Bible*ல் உள்ளபடி,* "cast them into hell" *என்ற முழுச் சொற்றொடரும், "[அவர்களை] உபத்திரவத்திற்குள் நியமித்தல்" என்ற நேரடி அர்த்தம் தருகிற ஒரு தனித்த கிரேக்க வினைச் சொல்லில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

[21]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons Ltd., 1971), 398. [22]*இந்தப் பேச்சுருவகம் அநேகமாக, அந்த நாட்களில் இருந்த உண்ணும் பழக்கத்திலிருந்து தரவழைக்கப்பட்டிருக்கலாம்: விருந்தளிப்பவரின் வலது புறம் (உயர் மதிப்புள்ள இடத்தில்) அமர்ந்திருப்பவர், "அவரது மடியின்"மீது அல்லது மடியில் அமர்ந்திருப்பதாகக் கூறப்பட்டது (யோவா. 13:23, 25; 21:20; யோவா. 1:18ஐக் காணவும்). அமெரிக்காவில், நாங்கள் இந்த உருவகத்தை,* "bosom buddies" *மற்றும்* "in the bosom of friends" *என்ற சொற்றொடர்களைக் கொண்டு இன்னமும் தக்க வைத்துள்ளோம்.* [23]*"பரதீசு" என்ற வார்த்தையை நாம் எவ்வார்த்தையிலிருந்து பெற்றுள்ளோமோ, அவ்வார்த்தை செப்துவஜிந்த் வேதாகமத்தில், ஏதேன் தோட்டத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது.* [24]KJV *வேதாகமத்தில்* "hell" *என்றுள்ளது, ஆனால் அப். 2:31ல் Hades என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [25]*இதைப் பற்றி அதிகமான விஷயங்களை நான், "நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற துணைப்பாடத்தில் கூறுவேன். இது நம்மில், மரித்தவர்களுக்கு இடைநிலையான ஒரு நிலைப்பாடு உள்ளது என்று நம்பிக்கை கொண்டுள்ளவர்களிடத்தில் கையாளப்பட வேண்டிய பிரச்சனையாக உள்ளது, ஆனால் (நான் வலியுறுத்தப் போகிறபடி) இது, நீதிமான்கள் மரித்தவுடன் பரலோகம் செல்லுகின்றனர் என்று போதிப்பவர்களிடத்தில் இருப்பது போல் நமக்கு இது பெரிய பிரச்சனையாக இருப்பதில்லை.* [26]*உத்தரிப்பு ஸ்தலம் (இது "சுத்திகரித்தல்" என்பதற்கான இலத்தீன் வார்த்தையில் இருந்து வந்ததாகும்) என்பது ரோமன் கத்தோலிக்க உபதேசமாக*

உள்ளது. ஆக்கினைக்குட்பட்டவர்கள் நேரடியாக நரகத்திற்குச் செல்லுகின்றனர் என்றும், ஆனால் விசுவாசித்து "கிருபையின் நிலையில்" மரித்தும் இன்னமும் மன்னிக்கப்படாத பாவங்களுடன் இருப்பவர்கள் உத்தரிப்பு ஸ்தலத்திற்குச் செல்லுகின்றனர் என்றும் அவர்கள் போதிக்கின்றனர். துன்புறுதலின் மூலம் ஆத்துமாக்களைச் "சுத்திகரித்தல்" என்பதே உத்தரிப்பு ஸ்தலத்தின் நோக்கமாக உள்ளது. உயிருடன் இருப்பவர்கள், உத்தரிப்பு ஸ்தலத்தில் இருப்பவர்களின் சார்பாக திருப்பலிகள், ஜெபங்கள், மற்றும் தர்மங்கள் ஆகியவற்றை ஏறெடுக்கும்படி உற்சாகப் படுத்தப் படுகின்றனர் - இவைகள் அவர்களுக்கு அன்பானவர்கள் அந்த பயங்கரமான இடத்தில் இருக்கும் காலத்தைக் குறுகச் செய்யும் என்று கூறப்படுகிறது. இந்த உபதேசமானது ரோமன் கத்தோலிக்க சபைக்கு வருமானத்திற்கான ஒரு சீரான ஆதாரமூலமாக உள்ளது.

# நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?

*ஒரு சிறுகுழந்தை கண்ணீர் வழிந்தோடும் முகத்துடன், "என் அம்மா எங்கே?" என்று கேட்கிறது. அவனை நீங்கள் உங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு அமிழ்ந்துபோன குரலில், "அவள் பரலோகத்தில் இருக்கின்றாள்" என்று கூறுகின்றீர்கள். நீங்கள், சமீபத்தில் விதவையான ஒரு நரைமுடியைக் கொண்ட பரிசுத்தவாளிடம் செல்லுகின்றீர்கள். அந்தப் பெண்மணியின் கணவருடைய வாழ்வின் முடிவில் அவர் உடல்ரீதியில் பெற்றிருந்த பயங்கரமான போராட்டத்தைப் பற்றிக் கலந்துரையாடுகின்றீர்கள். நீங்கள் அந்தப் பெண்மணியின் கரங்களில் மெதுவாகத் தட்டிக்கொடுத்து, "அவர் இப்போது நன்றாக இருக்கின்றார். அவர் தேவனுடன் இருக்கின்றார்" என்று கூறுகின்றீர்கள். அப்படிப்பட்ட வார்த்தைகள் மரித்தவர்களின் நிலைமை பற்றிய இறையியல் சார்ந்த கூற்றுக்களாக உள்ளனவா? இல்லை, இவைகள் இந்த வாழ்க்கையே எல்லாமும் அல்ல மற்றும் தேவன் தம்முடையவர் களைப் பராமரிக்கின்றார் என்பதில் நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் பிரதிபலிப்பவைகளாக மாத்திரம் உள்ளன.*

*கொரிந்தியர்களுக்கு எழுதுகையில் பவுல், "நாம் தைரியமாகவேயிருந்து இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்" என்று கூறினார் (2 கொரி. 5:8). அந்த அப்போஸ்தலர் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் அவர், "ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையா யிருக்கும்" என்று கூறினார் (பிலி. 1:23). பவுலின் இந்த இரண்டு வார்த்தை களை நாம், இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதலுக்குப் பின் நீதிமான்கள் பரலோகத்திற்கு நேரடியாகச் செல்லுகின்றனர் என்று அறிவிக்கின்றவை களாக எடுத்துக் கொள்ள வேண்டுமா? ஒருவேளை அதற்குப் பதிலாக நாம், இவ்வசனங்களை இணக்கமான மொழிநடையாக[1] - இன்றைய நாட்களில் நாம் பயன்படுத்துகின்ற அதே மொழிநடையாகக் கண்ணோக்க வேண்டும்.*

*மரித்தவர்களின் நிலை பற்றிய ஒரு புதிய போதனையை அறிமுகப் படுத்துதல் என்பதே இவ்விரு வசனப்பகுதிகளின் நோக்கமாக உள்ளது என்று நம்புகின்ற போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் பற்றி நான் சமீபத்தில்தான் அறிந்தேன். அவர்களின் நிலைப்பாடு பற்றிய எனது அறிவு மட்டுப்பட்டதாக உள்ளது என்று நான் அறிக்கையிடுகின்றேன். நீங்கள்*

இடர்ப்பாடுள்ளது என்று கருதுகிற பாடக்கருத்தின் சில அம்சங்களை நான் கையாளத் தவறினால், நான் அதை வேண்டுமென்றே செய்யவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

எனக்குக் கிடைத்துள்ள கருத்துக்களில் நான், என்னால் காணமுடிந்த அளவுக்கு இந்தக் கலந்துரையாடலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு வசனப்பகுதிகள் நாம் கையாளும் தலைப்பிற்கு ஏதொன்றும் செய்யக் கூடாதவைகளாக உள்ளன. இங்கு மாதிரிகள் தரப்படுகின்றன.

• *எபிரெயர் 2:14.* இயேசு மரிப்பதற்கு முன்பு, சாத்தான் காணப்படாத உலகத்தின்மீது அதிகாரம் கொண்டிருந்தான் என்று கூறப்பட்டுள்ளது. எபிரெயர் 2:14 இதற்கு ஆதார வசனமாக உள்ளது, இது சாத்தான் "மரணத்திற்கு அதிகாரி" என்று உரைக்கிறது. இருப்பினும், இவ்வசனம் பிசாசானவன் பாதாளத்தின்மீது அதிகாரம் கொண்டுள்ளான் என்பது பற்றி ஏதொன்றும் கூறுவதில்லை. அதற்குப் பதிலாக, இது சாத்தான் மக்களை (மனித முகவர்களின் மூலமாக) கொலை செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருந்தான் (மற்றும் கொண்டுள்ளான்) என்று கூறுகிறது. (சாத்தான்) ஒரு சரீரத்தைக் கொன்ற பின்பு உருவமற்ற ஆவி செல்லும் இடத்தில் பிசாசானவன் அதன்மீது எவ்விதக் கட்டுப் பாட்டையும் கொண்டிருப்பதில்லை.

• *மத்தேயு 12:24-29.* இயேசு பெயல்செபூலின் அதிகாரத்தினாலே அசுத்த ஆவிகளைத் துரத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டபோது, கர்த்தர் தமது பதிலுரையின் ஒரு பாகமாக, "அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக் கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம்" என்று கூறினார் (மத். 12:29). இது இயேசு மரித்து, மரித்த நீதிமான்களின் ஆத்துமாக்களை (சாத்தானின் "உடைமை களை") எடுத்துக்கொண்டபோது அவர் பாதாளத்தினுள் ("பலவானுடைய வீட்டுக்குள்") பிரவேசித்ததற்கான குறிப்பு என்று உரிமைகோரப்படுகிறது. கற்பனையான இந்த விளக்கமானது சந்தர்ப்பப் பொருளுக்கு எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டதல்ல. இவ்வசனம், உயிருள்ள மக்களிலிருந்து அசுத்த ஆவிகளைத் துரத்துதலைக் குறிக்கிறது[2] (மத். 12:24-29).

• *எபேசியர் 4:8.* சங்கீதம் 68:18ல் இருந்து மேற்கோள் காண்பிக்கிற எபேசியர் 4:8 என்பது பயன்படுத்தப்படுகிற இன்னொரு வசனமாக உள்ளது: "ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்." "சிறைப்பட்டவர்கள்" என்பது பாதாளத்தில் சாத்தானால் பிடித்து வைக்கப்பட்டு, ஆனால் இயேசு பரத்துக்கேறிய போது பாதாளத்திலிருந்து வெளியே வழிநடத்தப்பட்டுள்ள மரித்த நீதிமான்களைக் குறிக்கிறது என்று சிலர் உறுதிப்படுத்தியுள்ளனர். இருப்பினும், இப்படிப்பட்ட விளக்கம் நோக்கங்கொண்டுள்ளதாக வசனத்திலோ அல்லது சந்தர்ப்பப் பொருளிலோ சுட்டிக்காட்டுதல் எதுவும் இருப்பதில்லை. அரசர் ஒருவர் மாபெரும் வெற்றிக்குப் பின்பு தமது

இல்லிட நகருக்குத் திரும்புதல் என்பதே விவரிப்பதாக உள்ளது (2 கொரி. 2:14-16 உடன் ஒப்பிடவும்). அப்படிப்பட்ட ஒரு அணிவகுப்பில் அரசரால் தோற்கடிக்கப்பட்ட விரோதிகள்தான் இவ்வாறு இழுத்துச் செல்லப்படுவார்கள். இவ்வசனம், சிலுவையில் இயேசு தமது விரோதிகளைத் தோல்வியடையச் செய்தார் என்பதை ஒரு நாடகபாணியில் எடுத்துரைக்கிறது. இவ்விதமாக அவர் தமது மக்களுக்கு "வரங்களை" அளிக்கத் தகுதி வாய்ந்தவரானார். சந்தர்ப்பப் பொருளில், இவைகள் வாழ்கின்ற கிறிஸ்தவர்களுக்குப் பொழியப்பட்ட ஆவிக்குரிய வரங்களாயிருந்தன (எபே. 4:7-13).

கடைசி ஆய்வில், இரண்டு முக்கிய ஆதார வசனங்கள் முதலில் குறிப்பிடப்பட்டவைகளாகத் தோன்றுகின்றன: 2 கொரிந்தியர் 5:8 மற்றும் பிலிப்பியர் 1:23.[3] மரணத்திற்குப் பின்பு "கர்த்தருடன் இருத்தல்" மற்றும் "கிறிஸ்துவுடன் இருத்தல்" என்ற பவுலின் கூற்றுக்களை மரித்தவர்களின் இடைப்பட்ட நிலை என்ற கருத்துடன் நாம் ஒப்புரவாக்குவதற்கு வழி எதுவும் இல்லையா?[4] இந்த வாழ்விலேயேகூட கிறிஸ்தவர்கள் "கிறிஸ்து வுடன் இருக்கின்றனர்" என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. எங்கே இரண்டு பேராவது மூன்று பேராவது இயேசுவின் நாமத்தினாலே கூடியிருக்கின்றார் களோ அங்கே அவர்கள் நடுவில் தாம் இருப்பதாக இயேசு கூறினார் (மத். 18:20). அவர், "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்று வாக்குத்தத்தம் செய்தார் (மத். 28:20). உயிரோடிருந்த கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டிலேயே பவுல், "கர்த்தர் உங்களனைவரோடுகூட இருப்பாராக" என்று ஜெபித்தார் (2 தெச. 3:16ஆ)! கர்த்தர் "நம்முடன் இருப்பது" நாம் மரிக்கும்போது முடிந்து போகும் விஷயமல்ல என்பது உறுதி. உண்மையில் நாம் "கர்த்தருக்குள் மரித்தால்" (வெளி. 14:13) அவருடனான நமது உறவு இன்னும் அதிக நெருக்கமானதாகவும் அதிகம் அந்நியோந்நியமானதாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: மரித்த நீதிமான்கள் இப்போது நேரடியாகப் பரலோகம் செல்லுவதாக நம்புகின்ற எல்லாரும் இல்லை யென்றாலும், பெரும்பான்மையானவர்களும் லூக்கா 16:19-31 வசனங்கள் சிலுவைக்கு முன்பு மரித்தவர்களின் நிலையை மிகச் சரியாகச் சித்தரிப்ப தாகவும் நம்புகின்றனர். இதை மனதில் கொண்டு, பிரசங்கி 12:7ஐக் கண்ணோக்குங்கள், அதில் சாலொமோன், "மண்ணானது [இயல்பான இவ்வுடலானது] தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகிறது" என்று கூறினார். 2 கொரிந்தியர் 5:8 மற்றும் பிலிப்பியர் 1:23ல் நடைமுறைப்படுத்தப்பட்ட காரண அறிவை பயன்படுத்துகிறபோது, சிலுவையில் இயேசு மரிப்பதற்கு முன்பேகூட, உருவமற்ற ஆவிகள் (தேவன் இருக்கும் இடமான) பரலோகத்திற்கு நேரடியாகச் சென்றன என்று நாம் முடிவு செய்ய இயலும். ஏற்றுக் கொள்ளக்கூடிய மொழிநடை பிரசங்கி 12:7ல் பயன்படுத்தப்பட்டதென்று நாம் முடிவு செய்தால், அதே வகையான மொழிநடை பவுலினால் 2 கொரிந்தியர் 5:8 மற்றும் பிலிப்பியர் 1:23ல் பயன்படுத்தப்பட்டது என்று

*நாம் முடிவு செய்ய இயலாதா?*

*“மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?” என்ற பிரசங்கத்தில் குறிப்பிட்டபடி, நீதிமான்கள் மரிக்கின்றபோது நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றனர் என்ற கருத்து, பெருமளவில் நியாயத்தீர்ப்பு நாள் பற்றிய வேதாகம போதனையைச் செல்லாததாக்குகிறது என்பதே அதற்கு பிரதான மறுப்புரையாயிருக்கிறது. கிறிஸ்து திரும்பி வருகிறபோது ஒரு நியாயத் தீர்ப்பு நாள் இருக்கும் என்பதற்குப் பதில், ஒவ்வொரு மனிதரும் தாம் மரிக்கின்ற அக்கணத்திலேயே தனது “நியாயத்தீர்ப்பு நாளை” எதிர் கொள்ளுகின்றார் என்று கருத்துத் தெரிவிப்பதன்மூலம் ஒரு தனிநபர் இப்பிரச்சனையைத் தவிர்க்க முயற்சி செய்தார். நியாயத்தீர்ப்பு நாள் பற்றிய விரிவான படிப்பிற்கு இப்புத்தகத்தில் உள்ள இடம் [பற்றாக்குறை] என்னை அனுமதிப்பதில்லை, ஆனால் ஆழ்ந்து சிந்திப்பதற்குச் சில மாதிரி வசனங்கள் இங்கு தரப்படுகின்றன:*

*(1) “நியாயத்தீர்ப்பு நாள்” பற்றியும் (மத். 10:15; 11:22, 24; 12:36; 2 பேது. 2:9; 3:7; 1 யோவா. 4:17), “மகா நாளின் நியாயத்தீர்ப்பு” (யூதா 6) பற்றியும் வேதாகமம் அடிக்கடி பேசுகிறது. தேவன் “ஒரு நாளைக் குறித்திருக் கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்” என்று பவுல் கூறினார் (அப். 17:31). இந்த விசேஷித்த நாளை “கடைசி நாள்” என்று இயேசு அழைத்தார் (யோவா. 6:39, 40, 44, 54; 11:24; 12:48).*

*(2) நியாயத்தீர்ப்பின் நாளானது, “மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங் கூட” வரும் நிகழ்ச்சியுடன் தொடங்கும் (மத். 25:31அ). அப்போது அவர், “தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்” (மத். 25:31ஆ). மரித்த நீதிமான்களும் அநீதிமான்களும் உயிரோடே எழுப்பப்படுவார்கள் (யோவா. 5:28, 29; வெளி. 20:13அ-வைக் காணவும்).*

*(3) எல்லாரும் அரியணையின் முன்பாக நிற்பார்கள் (வெளி. 20:11, 12; மத். 25:32அ-வைக் காணவும்[5]), மற்றும் எல்லாரும் நியாயந்தீர்க்கப் படுவார்கள் (வெளி. 20:12, 13). இது நீதிமான்களையும் உள்ளடக்குகிறது. கிறிஸ்தவர்களுக்கு எழுதியதில் பவுல், “நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே” என்று கூறினார் (ரோமர் 14:10). மீண்டுமாக அவர், “ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக் காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்” என்றும் எழுதினார் (2 கொரி. 5:10).*

*(4) மனிதர்கள் இயேசுவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும்போது, அவர் ...*

> *... மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது, ராஜா தமது*

வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் … என்பார் … அப்பொழுது, இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் … என்பார் … அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார் (மத். 25:32-46; வெளி. 20:15; 21:1-4ஐக் காணவும்).

நீங்களும் நானும் மரித்தவர்களின் தற்போதைய நிலை பற்றி கருத்து வேறுபடலாம், ஆனால் நியாயத்தீர்ப்பின் மகாநாள் ஒன்று இருக்கும் என்பதில் நாம் கருத்து ஒருமைப்பட முடியும் என்று நான் நம்புகின்றேன். “இந்த பூமியில் வாழ்வு என்பது அந்த உச்சபட்ச நிகழ்ச்சியை நோக்கி ஒலியெழுப்பிச் செல்லுகிறது.”[6]

இங்கு முன்னிருத்தப்பட்ட கண்ணோட்டம் பற்றி, “மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?” என்ற பிரசங்கத்தில், பின்வரும் கேள்வியைக் கேட்க முடியும் என்று நான் ஒப்புக்கொண்டிருந்தேன்: “லூக்கா 16, இரட்சிக்கப்பட்டவர்கள் மற்றும் இழந்துபோகப்பட்டவர்கள் ஆகியோருக்கு இடையில் ஒரு பிரிவை நியாயத்தீர்ப்புக்கு முந்திய நிலையில் சித்தரிப்பதால், நியாயத்தீர்ப்பு நாளின் நோக்கம் என்ன?” அந்தப் பிரசங்கத்திலும் வேறு ஒரு இடத்திலும் நான் பின்வரும் இரண்டு சாத்தியக் கூறுகள் உட்படப் பல சாத்தியக்கூறுகளைக் கருத்தாகத் தெரிவித்திருந்தேன்: “நீதி மற்றும் தண்டனை அளித்தல் என்பதே குற்றமற்றவர் மற்றும் குற்றமுள்ளவர் என்று தீர்மானிப்பதைக் காட்டிலும் அதிகமாக முக்கியத்துவம் பெறும்” என்பதே நியாயத்தீர்ப்பு நாளின் அடிப்படை நோக்கமாக இருக்கும்.[7] உருவமற்ற ஆவிகளின் சந்தோஷமான அல்லது கவலையான நிலை என்பது தெய்வீக நியமத்தின் விளைவாக இராமல், ஒருவர் தமது அழிவுக்குரிய உடலின் கட்டுப்படுத்தும் நிலையில் இருந்து விடுவிக்கப்படும்போது தமது ஆவிக்குரிய நிலை பற்றி [முன்னதாக] ஆதாயப்படுத்திக்கொள்ளும் நிச்சயமான அறிவின் விளைவாகவே உள்ளது என்பதும் சாத்தியமே. இடைப்பட்ட நிலை பற்றிய நம்பிக்கை குறித்து என்ன விதமான சிரமங்கள் முன்னிறுத்தப்பட்டாலும், அவைகள் பரலோகத்திற்கு நேரடியாகச் செல்லுதல் என்ற கருத்தினால் எதிர்கொள்ளப்படும் சிரமங்களுடன் ஒப்பிடுகையில் அற்பமானவைகளே என்று நான் நம்புகின்றேன். அந்த நிலைப்பாட்டைப் பற்றி நான் புரிந்துகொண்டபடி, ஆத்துமாக்கள் பரலோகத்திற்குச் செல்லும், பிற்பாடு அவைகள் நியாயத்தீர்ப்பின் அரியணைக்கு[8] முன்பாகக் கொண்டுவரப்படும்படி பரலோகத்திலிருந்து வெளிவரும், பின்பு அவைகள் ஏற்கனவே இருந்த அந்த இடத்திற்குத் திரும்புவார்கள் என்று அது கூறுகிறது.

இந்தப் பிரசங்கத்தை நான் முடிக்கின்ற இவ்வேளையில், இது நாம் மாம்சத்தில் வாழும் நாட்களில் நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள

*இயலாத பாடக் கருத்துக்களில் ஒன்றாக உள்ளது என்று அறிக்கை இடுகின்றேன். உண்மையில், இது என்னைப் பெரிதும் கவலைப்படுத்துகிற தலைப்பாக இருப்பதில்லை. நான் மரணத்தில் என் கண்களை மூடுகிற போது, பரதீசில் ஆபிரகாமின் மடியில் இருப்பவனாக என்னைக் காணும் படிக்கு அவற்றை [மீண்டும்] திறந்தால், நான் மெய்சிலிர்த்துப்போவேன். பரலோகத்தில் இயேசுவின் கைகளில் இருப்பவனாக என்னைக் காணும் படிக்கு நான் அவற்றைத் திறந்தால், நான் ஏமாற்றம் அடையமாட்டேன். உண்மையில், எனது நன்றி நிறைந்த துதியை நீங்கள் [உங்கள் காதுகளால்] கேட்பீர்கள்! நீங்களும் நானும் நமது ஆவிகள் எங்கே சென்றாலும், "கர்த்தருடன் இருக்கும்படி" மரணத்திற்கு ஆயத்தமாய் இருப்பதே முக்கியமான விஷயமாக உள்ளது! ஆமென் ஆமென்.*

---

*குறிப்புகள்*

[1]*"இணக்கமான மொழிநடை" என்பதற்கு "அனுசரித்துச் செல்லுதல்" என்று ஒரு அர்த்தம் உள்ளது. இணக்கமான மொழிநடை என்பது தற்போது பயன்பாட்டில் உள்ள சொற்றொடராக்கத்தை அனுசரித்துச் செல்லுகிறது.* [2]*"கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் காணப்படும் "ஒரு மும்முரமான நாள்" என்ற பாடத்தில் மத்தேயு 12:29 பற்றிய சுருக்கமான விளக்கத்தைக் காணவும்.* [3]*இந்த மற்றும் "மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?" என்ற இரு பிரசங்கங்களுக்கும் இடையில் கூறப்பட்டவை மீண்டும் கூறப்படுதல் என்பவை சில உள்ளன, ஆனால் இவற்றில் ஒன்றில் ஏற்படுத்தப்படாத விவாதம் இன்னொன்றில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இப்பாடக் கருத்தின் மீதான முழுமையான கலந்துரையாடலுக்கு, இரு ஆதாரமூலங்களையும் ஆய்வு செய்யவும்.* [4]*ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் கூறியுள்ளவை சிலவேளைகளில் மேம்போக்கில் முரண்பாடாகத் தோன்றக் கூடும். அவர்கள் இந்தக் கூற்றுகளை ஒப்புரவாக்குவதற்குச் சிறிதளவு முயற்சி மேற்கொண்டனர் அல்லது முயற்சியே மேற்கொள்ளாதிருந்தனர். இவ்விரு கூற்றுக்களுமே உண்மையானவைகளாயிருந்தன, மற்றும் அவர்கள் இதை அப்படியே விட்டுவிட்டனர். சில காரணங்களினால், மேற்கத்திய சிந்தையானது இப்படிப்பட்ட கூற்றுக்களை ஒப்புரவாக்கும் வரைக்கும் ஓய்ந்திருப்பதில்லை.* [5]*மத்தேயு 25 மற்றும் வெளி. 20 ஆகியவற்றின் போதனையை, இவைகள் தற்காலிக நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றன என்று கூறி குறைத்து மதிப்பிடச் சிலர் முயற்சி செய்கின்றனர்.* [6]David Roper, "Revelation, 10," *Truth for Today*. [7]David Roper, "When the Books Were Opened" (tract) (Pasadena, Tex.: Haun Publishing Co., n.d.), 9. [8]*முன்னதாகக் குறிப்பிட்டபடி, மக்களில் சிலர், எல்லாரும் நியாயந்தீர்க்கப்படும் மகாநாள் ஒன்றுள்ளது என்ற கருத்தை மறுப்பதன்மூலம் இந்தக் காட்சியமைவைத் தட்டிக்கழிக்க முயற்சி செய்கின்றனர், ஆனால் நியாயத்தீர்ப்பின் நாள் என்ற பாடக் கருத்தைப்பற்றி வேதாகமம் தெளிவாக எடுத்துரைக்கிறது என்று நான் நம்புகின்றேன்.*

# "நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல"[1]

## மாற்கு 12:28-34

*அது கேள்விகளின் மாபெரும் நாளாக, இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி வாரத்தின்போது வந்த செவ்வாய்க்கிழமையாக இருந்தது.[2] ஒருவர் பின் இன்னொருவராக, அவரது விரோதிகள் கேள்விகளுடன் வந்து அவரை அகப்படுத்த முயற்சி செய்தனர். இந்தப் பிரசங்கமானது, அந்த நாளில் அவரது எதிராளிகளால் கேட்கப்பட்ட கடைசிக் கேள்வியைப் பற்றியதாக உள்ளது.*

*அந்தக் கேள்விக்குப் பின்னால், கர்த்தரைச் சிக்கவைக்கலாம் என்ற நம்பிக்கையுடன் பரிசேயர்கள் இருந்ததை மத்தேயு சுவிசேஷ விவரம் (மத். 22:34-40) தெளிவாக்குகிறது. அவர்கள் மறைவாக ஒன்றுகூடி, அடுத்த என்ன கேட்கலாம் என்று திட்டமிட முயற்சிப்பதை நான் காணமுடிகிறது. ஒரு கேள்வியுடன் அவர்கள் வந்த பின்பு, அதை யார் கேட்க வேண்டும் என்பதை அவர்கள் ஆழ்ந்து சிந்தித்தனர். ஒரு புறமாக நின்று, இயேசுவைக் கவனிக்கையில் நான் எருசலேமில் இருந்த கூர்மதி வாய்ந்த வேதபாரகர் ஒருவரைச் சித்தரித்துப் பார்க்கின்றேன். மற்றவர்கள், "அவர் நமது மிகச் சிறந்த மனிதர். இந்தக் கேள்வியை அவரே கேட்கட்டும்"[3] என்று கூறியிருக்கலாம். இந்த மனிதர், முன்னதாக இயேசு சதுசேயருக்கு அளித்திருந்த பதிலில் மனம் ஈர்க்கப்பட்டு இருந்தார் என்பது அவர்கள் உய்த்துணராத விஷயமாக இருந்தது (மாற். 12:28அ; லூக். 20:39ஐக் காணவும்).*

### *அன்று - ராஜ்யத்திற்குத் தூரமாக இராத நிலை*

**வேதபாரகரின் கேள்வி**

இந்த நிகழ்ச்சி பற்றிய மாற்கு சுவிசேஷ விவரம், இந்த மனிதரைப் பற்றிய ஒரு விசேஷித்த குணத்தை கிறிஸ்து பாராட்டிய ஒரு குணத்தை - வெளிப்படுத்துகிறது. "வேதபாரகரில் ஒருவன் அவர்கள் [இயேசுவும் சதுசேயர்களும்] தர்க்கம் பண்ணுகிறதைக்கேட்டு, அவர்களுக்கு நன்றாய் உத்தரவு சொன்னாரென்று அறிந்து, அவரிடத்தில் வந்து: கற்பனை

களிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்று கேட்டான்" (மாற். 12:28).

பழைய ஏற்பாட்டு வேத வசனங்களில் உள்ள கட்டளைகளை எண்ணிப் பார்த்த ரபீக்கள், அவை மொத்தம் 613 என்று கூறியிருந்தனர். இவற்றில் ஐந்தில் மூன்று பங்கு எதிர்மறையானவைகளாகவும், ஐந்தில் இரண்டு பங்கு நேர்மறையானவைகளாகவும் இருந்தன. சிந்தையில் வைத்துக் கொள்வதற்கு இவ்வளவு அதிகமான கட்டளைகள் இருந்தபடியால், அவர்கள் ஒரு சில திறவுகோல் கட்டளைகளின்மீது கவனம் செலுத்தி இவற்றுடன் எஞ்சிய மற்ற கட்டளைகளைத் தொடர்புபடுத்த முடிவு செய்தனர். அது, சரி மற்றும் தவறு என்பவற்றின்மீதான கேள்விகளைத் தீர்மானிப்பதைச் சுலபமாக்கும். ஆகையால் அவர்கள், "கற்பனை களிலெல்லாம் பிரதான கற்பனை எது?" என்ற கேள்வியின்மீது விவாதம் செய்துகொண்டிருந்தனர்.

**இயேசுவின் பதில்**

இயேசு இதற்கு முன்பே இந்தக் கேள்வியைக் கையாண்டிருந்தார் (லூக். 10:25-28) - மற்றும் இதற்கான பதிலானது மாற்றப்பட்டு இருந்ததில்லை. அவர், "கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: 'இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை' " என்று கூறினார் (மாற். 12:29, 30). கிறிஸ்து, உபாகமம் 6:4, 5ல் இருந்து மேற்கோள் காண்பித்தார்.

கேள்விகேட்டவர்கள் இரண்டாவது பிரதான கற்பனையைப் பற்றிக் கேட்டிருக்கவில்லை, ஆனால் இயேசு அதையும் கூடக் கொடுத்தார்: "இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: 'உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்பதே" (மாற். 12:31அ). இந்த மேற்கோள் லேவியராகமம் 19:18ல் இருந்து வந்தது. பின்பு கர்த்தர், "இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றும் இல்லை" என்று கூறிமுடித்தார் (மாற். 12:31ஆ).

**வேதபாரகரின் பதிலுரை**

நாம் இயேசுவின் பதிலைத் தொடர்ந்து வந்த கருத்துப் பரிமாற்றத்தின் மீது கவனம் செலுத்த விரும்புகின்றோம். இதுவரைக்கும், அந்த செவ்வாய்க் கிழமையில், கிறிஸ்து தமது விரோதிகளின் கேள்விகளுக்கு பதில் அளித்த பின்பு, ஒன்று அவர்கள் தங்களைத் தற்காக்க முயற்சித்து இருந்தார்கள் அல்லது ஒன்றும் பேசாமல் அங்கிருந்து நடந்து சென்றிருந்தார்கள். இந்தக் கேள்வியைக் கேட்ட மனிதரோ அந்த இரண்டில் எதையும் செய்யவில்லை:

> அதற்கு வேதபாரகன்: "சரிதான், போதகரே, நீர் சொன்னது சத்தியம்; ஒரே தேவன் உண்டு, அவரைத் தவிர வேறொரு தேவன் இல்லை. முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப் பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூருகிறதும், தன்னிடத்தில்

*அன்புகூருகிறதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருகிறதுமே சர்வாங்க தகனம் முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது" என்றான் (வ. 32, 33).*

*சில வேளைகளில் நாம், பழைய ஏற்பாடு முழுவதும் புறம்பான விஷயங்கள் தொடர்பான கட்டளைகளைப் பற்றியதாகவே உள்ளது என்ற மனப்பதிவை விட்டுவிடுகின்றோம். பழைய ஏற்பாட்டில் அப்படிப்பட்ட ஒழுங்குமுறையின்மீது ஒரு வலியுறுத்தம் இருந்தது. இருப்பினும், பழைய பிரமாணம் இருதயம் பற்றிய விஷயங்களையும் வலியுறுத்திற்று (1 சாமு. 16:7; நீதி. 23:7; எசே. 18:31ஐக் காணவும்). தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது இருதயத்திலிருந்து வரவேண்டியதாக இருந்தது, அப்படியிராவிட்டால் அது ஏற்றுக்கொள்ளப் படாததாக இருந்தது (உபா. 30:2ஐக் காணவும்). இது இஸ்ரவேலர்கள் தரும்படிக் கட்டளையிடப்பட்டிருந்த பலிகளை உள்ளடக்கிற்று. சவுல் அரசர் தேவனுக்குக் கீழ்ப்படியாமல்போய், பின்பு ஒரு பலியைச் செலுத்துவதினால், "அதைச் சரிசெய்ய" முயற்சி செய்தபோது, அவரிடத்தில் சாமுவேல், "பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" என்று கூறினார் (1 சாமு. 15:22ஆ). இந்த வேதபாரகர், வேத வாக்கியங்கள் பற்றிய தமது படிப்பில், இந்த மாபெரும் சத்தியம் பற்றிய ஒரு சிறிய குறிப்பைப் பற்றிப்பிடித்திருந்தார். "அவன் விவேகமாய் உத்தரவு சொன்னதை இயேசு கண்டு" என்று மாற்கு எழுதினார் (மாற். 12:34அ).*

***இயேசுவின் மதிப்பீடு***

*கர்த்தர், கேள்விகேட்டவரின் இருதயத்தை ஆராய்ந்து பார்த்து, தாம் கண்டதை விரும்பினார் - இது அவர் இதற்குமுன் இதே போன்ற கேள்வியைக் கேட்டிருந்த செல்வந்தனான இளம் அதிகாரியிடம் கண்டிருந்ததைப் போன்றதாகவே இருந்தது (மாற். 10:21). பின்பு இயேசு, பின்வரும் ஒளிவுமறைவான கூற்றை ஏற்படுத்தினார்: "நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல" (மாற். 12:34ஆ). கிறிஸ்து "... பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கித்திருந்தார் (மத். 4:17), ஆனால் அவர் இந்த வேதபாரகர் ராஜ்யத்தின் நிலைநாட்டுவித்தலுக்குச் சமீபித்திருந்தார் என்று அர்த்தப்படுத்தவில்லை. மாறாக, அவர் இந்த மனிதர் மேசியாத்துவ ராஜ்யத்தின் இயல்பு பற்றி ஏற்கனவே சில புரிந்துகொள்ளுதல்களைக் கொண்டிருந்தார் என்றே அர்த்தப்படுத்தினார் என்பது தெளிவு. ஒருவேளை இந்த மனிதர் கிறிஸ்துவை மேசியா என்று ஏற்றுக்கொள்வதற்கு நெருங்கியும் இருக்கலாம். வில்லியம் பார்க்ளே என்பவர், "இயேசுவின் கண்களில் ஒரு அன்பின் நோக்கு இருந்திருக்க வேண்டும், அது இம்மனிதரிடத்தில் அவர், 'நீ இவ்வளவு தூரம் கடந்துவிட்டாய். எனது வழியை ஏற்றுக்கொள்வதற்கு இன்னும் சற்று முன்வர மாட்டாயா?' என்று வேண்டுகோள் விடுக்கும் நோக்காக இருந்தது" என்று எழுதினார்.[4]*

*இவ்வரலாறு பின்வரும் வார்த்தைகளுடன் முடிகிறது: "அதன் பின்பு ஒருவரும் அவரிடத்தில் யாதொரு கேள்வியுங் கேட்கத் துணியவில்லை[5]"*

*(மாற். 12:34இ).* இருப்பினும், நான், ***"நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல"*** என்ற இயேசுவின் கூற்றின்மீது சற்று நேரத்தைச் செலவிட விரும்புகின்றேன்.

## இன்று - ராஜ்யத்திற்குத் தூரமாக இராத நிலை

இந்த வேதபாரகர், ***ராஜ்யம்***[6] நிலைநாட்டப்படுவதற்கு முந்திய காலகட்டத்தில் வாழ்ந்தார், நாம் அதன் நிலைநாட்டத்திற்குப்[7] பிந்திய கால கட்டத்தில் வாழ்கின்றோம் - ஆனால் இயேசுவின் வார்த்தைகள் இன்றைக்குச் சிலவற்றை விவரிப்பதில்லையா? ஆவிக்குரிய வகையில் பேசும்போது மக்கள் இருக்கக் கூடிய மூன்று இடங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்: சிலர் "ராஜ்யத்திலிருந்து தூரமாக இருப்பதில்லை"; "ராஜ்யத்திற்கு ***அண்மையில்***[8]" இருக்கின்றனர் என்பது இவர்களின் சூழ்நிலையை விவரிக்கும் வேறொரு வழிமுறையாக உள்ளது. சிலர் அண்மையில் இருக்கின்றனர் என்றால், மற்றவர்கள், ராஜ்யத்திலிருந்து ***தூரத்தில்***[9] இருந்தாக வேண்டும். இவ்விரு சொற்றொடர்களுமே, சிலர் ராஜ்யத்திற்கு ***உள்ளாக***[10] இருப்பதை மறைமுகமாய்ச் சுட்டிக் காண்பிக்கின்றன.

"***தூரத்தில்***" இருக்கும் வகையைச் சேர்ந்தவர்களில் ஒரு சிலர் இங்குள்ளனர் என்று நாம் யூகித்துக் கொள்ளுதல் பாதுகாப்பானதாகவே உள்ளது. விதிப்படி, ராஜ்யத்திலிருந்து தூரத்தில் இருப்பவர்கள் ஆவிக்குரிய விஷயங்களில் ஆர்வம் கொண்டிருப்பதில்லை. உண்மையில், இந்தக் கூட்டத்தில் உள்ளவர்களில் பெரும்பான்மையானவர்கள் அநேகமாக ***ராஜ்யத்திற்குள்*** இருக்கலாம்.[11] இருப்பினும், கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி வருகின்ற எந்த நேரத்திலும், அங்கிருப்பவர்களில் ஒரு சிலர் ***அண்மையில்*** இருக்கின்றனர் என்பதில் எவ்வித மாறுதலும் இல்லை. ஒருவேளை அவர்கள் ஞானஸ்நானம் பெறும்படிக்கு முடிவு செய்வதில் போராடிக் கொண்டிருக்க லாம். இப்போது, சமீபத்தில் இருப்பவர்களைக் குறித்தே நான் அக்கறை கொண்டுள்ளேன்.

### ராஜ்யத்தின் இயல்பு

மேலும் நாம் கடந்து செல்லுமுன்பு, **ராஜ்யம்** என்று பேசுகையில் நாம் மிகச் சரியாக எதை அர்த்தப்படுத்துகின்றோம் என்பதை நிலைநாட்ட வேண்டியது அவசியமாக உள்ளது. "ராஜ்யம்" என்ற சொற்றொடர், கிறிஸ்துவை ராஜாவாக ஏற்றுக்கொண்ட மக்களின் அமைப்பை, அவரது அதிகாரத்துவத்திற்குத் தங்களை ஒப்புவித்துக் கீழ்ப்படிந்த தனிநபர்களைக் குறிக்கிறது.[12] நாம் கிறிஸ்தவர்கள் ஆகின்றபோது, நம்மைத் தேவன் "தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்துக்கு உட்படுத்துகின்றார்" என்று பவுல் எழுதினார் (கொலோ. 1:13). யோவான், "தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கி[ னர்]" என்று எழுதினார் (வெளி. 1:6).

ராஜ்யத்தில் இருக்கக் கூடிய மக்களின் கூட்டம் புதிய ஏற்பாட்டில் வேறு சொற்றொடர்களினாலும் அடையாளப்படுத்தப்படுகிறது. நம்மில்

பலருக்கு நன்கு பழக்கமான ஒரு சொற்றொடர் மத்தேயு 16ல் காணப் படுகிறது. பேதுரு நல்ல அறிக்கை செய்த பின்பு, இயேசு அவரைப் பாராட்டி னார், அதன்பின்பு அவர், "... இந்தக் கல்லின்மேல் [பேதுரு அறிக்கை செய்திருந்த சத்தியத்தின்மேல்] *என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை"* (வ. 18).[13] கட்டிடம் கட்டுதல் என்ற ஒப்பீட்டை இயேசு பயன்படுத்தினார்.[14] அடுத்த வசனத்தில் அவர், ஒரு திறவுகோலினால் திறக்கப்பட வேண்டியதாயிருந்த மூடப்பட்ட கதவு ஒன்றை மறைமுகமாய் உணர்த்துவதன் மூலம் இந்த விவரிப்பைப் பயன்படுத்தத் தொடர்ந்தார். பேதுருவிடம் அவர், *"பரலோக ராஜ்யத்தின்* திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்" என்று கூறினார் (வ. 19). இது அந்த அப்போஸ்தலருக்கு முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும் சிலாக்கியமும், இவ்விதமாய்ப் பாவிகள் சபைக்குள் வருவதற்கு "கதவைத் திறக்கும்" சிலாக்கியமும் தரப்படும் என்பதற்கான வாக்குத்தத்தமாக இருந்தது.[15] இருப்பினும், இயேசு "சபை" மற்றும் "ராஜ்யம்" என்ற வார்த்தைகளை ஒன்றுக்குப் பதில் இன்னொன்றைப் பயன்படுத்தினார் என்பதே இந்த வசனப்பகுதியில் நீங்கள் காணவேண்டிய சத்தியமாக நான் விரும்புகின்றேன். ***ராஜ்யத்திற்குள்*** இருத்தல் என்றால் ***சபைக்குள்*** இருத்தல் என்பதாக உள்ளது.[16]

"சபை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *ekklesia* என்ற கிரேக்க வார்த்தையானது "வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. இந்தச் சொற்றொடர், இயேசு கிறிஸ்துவுடன் ஒரு புதிய உறவு கொண்டிருக்கும்படி உலகத்திலிருந்து வெளியே அழைக்கப் பட்டவர்களைக் குறிப்பிடுகிறது. இது ஒரு விசேஷித்த குழுவைச் சேர்ந்த மக்களைக் குறிப்பிட நடபடிகள் மற்றும் நிருபங்களில் பயன்படுத்தப்பட்ட பொதுவான ஒரு வார்த்தையாக உள்ளது (எடுத்துக்காட்டாக, அப். 5:11; 8:1, 3; 9:31; ரோமர் 16:1; 1 கொரி. 1:2 ஆகிய வசனங்களைக் காணவும்).

"சரீரம்" என்பது மக்களின் இதே குழுவைக் குறிப்பிடப் பயன்படுத்தப் பட்ட இன்னொரு சொற்றொடராக உள்ளது. எபேசியர் 1:22, 23ல் பவுல், "எல்லாவற்றையும் அவருடைய [இயேசுவினுடைய] பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" என்று எழுதினார். "சபை" மற்றும் "சரீரம்" என்ற வார்த்தைகளைப் பவுல் ஒன்றிற்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தி னார்: "சரீரமான சபைக்கு." கொலோசெயர் 1:18ல், அவர் இவ்வார்த்தை களைத் திருப்பிப் பயன்படுத்தினார்: "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்." ஆகையால் ***சபைக்குள்*** இருத்தல் என்பது ***சரீரத்துக்குள்*** இருத்தல் என்றாகிறது.[17]

ராஜ்யம்/சபை என்பதற்குள் இருப்பவர்கள் எவ்வாறு ஒரு அலகாகப் பணியாற்ற இயலும் என்பதை வலியுறுத்துவதற்கு "சரீரம்" என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. நமது இயல்பான உடலானது (புயங்கள், கால்கள், கைகள், மற்றும் பாதங்கள் முதலிய) உறுப்புக்களைக் கொண்டுள்ளது போலவே, கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் (செயல்

படும்) உறுப்புக்களாக இருக்கின்றோம் (1 கொரி. 12:27) - இந்த உடலுக்குக் கிறிஸ்து தாமே நமது "தலையாக" இருக்கின்றார் (கொலோ. 1:18).

கடைசியாக ஒரு சொற்றொடரை, **ராஜ்யத்தில்** ராஜாவுடன், **சபையைக்** கட்டிய ஒருவருடன், **சரீரத்தின்** தலையானவருடன் நாம் கொண்டுள்ள உறவை வலியுறுத்தும் ஒரு சொற்றொடரைக் குறிப்பிட என்னை அனுமதியுங்கள்: "**கிறிஸ்துவுக்குள்**."[18] "கிறிஸ்துவுக்குள்" என்ற சொற்றொடர், இரட்சகருடன் நமக்குள்ள நெருங்கிய பிணைப்பை வெளிப்படுத்தப் பவுலுக்குப் பிரியமான சொற்றொடராக இருந்தது. இங்கு பிரதிநிதித்துவப் படுத்தும் இரண்டு வசனப்பகுதிகள் தரப்படுகின்றன: "... நீங்கள் அவராலே [தேவனாலே] கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்" (1 கொரி. 1:30அ); "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து, ... நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை" (ரோமர் 8:1).[19] ஒருவர் கிறிஸ்தவராகும்போது, அவர் "கிறிஸ்துவை அணிந்துகொள்கின்றார்" (ரோமர் 13:14; கலா. 3:27ஐக் காணவும்).

"கிறிஸ்துவுக்குள்" இருத்தல் என்பது ராஜ்யத்திற்குள், சபைக்குள், சரீரத்திற்குள் இருத்தல் என்பதற்குச் சமமானதாக உள்ளது. சவுல் **சபையைத்** துன்புறுத்திக் கொண்டிருந்தபோது (அப். 8:1-3; பிலி. 3:6), அவர் **கிறிஸ்துவை**யும் துன்புறுத்திக் கொண்டிருந்தார் (அப். 22:8). **கிறிஸ்துவை** அவரது **சரீரத்தில்** இருந்து பிரித்தல் என்பது சாத்தியமற்றதாக உள்ளது. ஒரு எளிய (மற்றும் இலேசாக நகைக்கத்தக்க வகையிலான) விவரிப்பைப் பயன் படுத்துவதென்றால், நான் ஒரு மாத்திரையை விழுங்கியிருந்தால், அந்த மாத்திரை எனக்குள் இருந்தது என்றோ அல்லது என் உடலுக்குள் இருந்தது என்றோ நான் கூறமுடியும்.

### ராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள்

**ராஜ்யத்திற்குள்/சபைக்குள்/சரீரத்திற்குள்/கிறிஸ்துவுக்குள்** இருத்தல் என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? எபேசியர் 1:3ஐ வாசியுங்கள்: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்." பவுல், "ஆவிக்குரிய பெரும்பாலான ஆசீர்வாதத்தினாலும்" அல்லது "ஏறக் குறைய ஆவிக்குரிய ஒவ்வொரு ஆசீர்வாதத்தினாலும்" என்ற சொற்றொடர் களைப் பயன்படுத்தவில்லை, ஆனால் "**ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தி னாலும்**"[20] என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். மற்றும் அவர் இந்த ஆசீர்வாதங்கள் "கிறிஸ்துவுக்குள்" இருக்கின்றன என்றும் கூறினார். ஆகையால், அவைகள் **சபைக்குள், ராஜ்யத்திற்குள், சரீரத்திற்குள்ளும்** காணப்படுகின்றன.

கிறிஸ்துவுக்குள் நாம் கொண்டுள்ள ஆச்சரியமான சகல ஆசீர்வாதங் களைப் பற்றியும் கலந்துரையாடுவதற்கு நேரம் அனுமதிக்காது. ஜோ லேய்ர்டு அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> பாவங்களுக்கு மன்னிப்பு, கிறிஸ்துவின் இரத்தம், இயேசுவை நமது

*பிரதான ஆசாரியராகக் கொண்டிருத்தல், ஜெபம் மற்றும் கர்த்தருடைய இராப்போஜன சிலாக்கியம், தேவனுடைய சுதந்திரர் களாக மற்றும் கிறிஸ்துவோடு உடன் சுதந்திரர்களாக இருத்தல், பரிசுத்த ஆவியானவர் [நமக்கு] உள்ளாக வாசம்பண்ணுதல், [மற்றும்] தேவனுடன் நித்திய ஜீவன் ... போன்றவை ஆவிக்குரிய அவரது சகல ஆசீர்வாதங்களின் சில உதாரணங்களாக இருக்கின்றன ...*[21]

*நாம் பட்டியலிட்டுள்ள சொற்றொடர்கள் தொடர்பான இரண்டு அல்லது மூன்று ஆசீர்வாதங்களை முக்கியத்துவப்படுத்தி உரைக்க என்னை அனுமதியுங்கள்: கிறிஸ்துவுக்குள் நாம் நமது கடந்த காலப் பாவங்களில் இருந்து* ***மீட்பைக்***[22] *கொண்டுள்ளோம் என்பது ஒரு ஆசீர்வாதமாக உள்ளது. கொலோசெயர் 1:13ஐ மீண்டும் கண்ணோக்குங்கள், இம்முறை வசனம் 14ஐயும் சேர்த்துக்கொள்ளுங்கள்: "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம். குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது." இந்த மீட்பு, கிறிஸ்துவுக்குள் -* ***சரீரத்திற்குள், சபைக்குள், ராஜ்யத்திற்குள்*** *காணப்படுகிறது.*

*நமது கடந்த காலப் பாவங்களில் இருந்து மீட்கப்பட்டிருக்கின்றோம் என்பதைக் கூறுவதற்கு, நாம் அந்த பாவங்களில் இருந்து இரட்சிக்கப் பட்டிருக்கின்றோம் என்பது இன்னொரு வழிமுறையாக உள்ளது.* ***சரீரத்திற்குள், சபைக்குள்****, நாம் இயேசுவின் இரத்தத்தின் மூலம்* ***இரட்சிப்பைக்***[23] *கொண்டுள்ளோம். எபேசியர் 5க்குத் திரும்புங்கள், அதில் பவுல், கிறிஸ்துவுக்கும் அவரது சபைக்கும் இடையில் உள்ள உறவை ஒரு மனிதனுக்கும் அவனது மனைவிக்கும் இடையில் உள்ள உறவுக்கு ஒப்பிட்டார். விசேஷமாக வசனங்கள் 23 மற்றும் 25, 27ஐக் கவனியுங்கள்:*

*கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக் குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக் கிறார் (வ. 23).*

*புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, ... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (வ. 25, 27).*

*நாம் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்பினால், நாம்* ***சரீரத்திற்குள்*** *இருக்க வேண்டும்; நாம் இயேசுவின் பலியினுடைய பலன்களைப் பெற்றுக்கொள்ள விரும்பினால், நாம்* ***சபையாராக*** *இருக்க வேண்டும்.*

*மீட்கப்பட்டு மற்றும் இரட்சிக்கப்பட்டு இருத்தல் என்பதைப் பற்றிப் பேசுவதற்கு, நாம்* ***தேவனுடைய பிள்ளைகளாயிருக்கின்றோம்*** *என்று கூறுதல் இன்னொரு வழிமுறையாக உள்ளது.*[24] *கலாத்தியர் 3:26, 27 வசனங்கள், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத் தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில்*

கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" என்று கூறுகிறது. நாம் "கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று" மற்றும் "கிறிஸ்துவைத் தரித்துக் கொண்ட"போது "தேவனுடைய புத்திரராகின்றோம்" - அல்லது KJVயின் சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்துவதென்றால், நாம் "தேவனுடைய பிள்ளைகளாகின்றோம்." கொரிந்தியர்களுக்குப் பவுல், "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக் கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்று கூறினார் (2 கொரி. 5:17).

ராஜ்யத்திற்குள்/சபைக்குள்/சரீரத்திற்குள்/கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதன் அர்த்தம் என்ன? இது, நாம் **ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங் களையும்** பெற்றுக் கொண்டுள்ளோம் என்று அர்த்தப்படுகிறது.[25] இது கடந்த காலப் பாவங்களில் இருந்து நாம் மீட்பைப் பெற்றுக்கொண்டுள் ளோம்; நாம் **இரட்சிப்பைப்** பெற்றுக்கொண்டுள்ளோம் என்று அர்த்தப்படுகிறது. இது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கின்றோம் என்று அர்த்தப்படுகிறது. ராஜ்யத்திற்குள்/சபைக்குள்/சரீரத்திற்குள்/ கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கின்றவர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப் படுகிற ஆசீர்வாதங்களின் நல்லதொரு தொகுப்புரை எபேசியர் 2:12, 13ல் காணப்படுகிறது:

> அக்காலத்திலே[26] கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன் படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத் தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங் கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள்[27] கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.

இதற்கு மறுபுறத்தில், ராஜ்யத்தில்/சபையில்/கிறிஸ்துவின் சரீரத்தில் இருந்து **தூரமாயிருத்தல்** என்பதன் அர்த்தம் என்ன? நீங்கள் அந்த நிலையில் இருந்தால், நீங்கள் உங்கள் கடந்த காலப் பாவங்களிலிருந்து **மீட்பு** என்பதிலிருந்து தூரமாயிருக்கின்றீர்கள், நீங்கள் **இரட்சிப்பில்** இருந்து தூரமாயிருக்கின்றீர்கள் என்று அர்த்தமாகிறது. நீங்கள் **தேவனுடைய பிள்ளையாக** இருப்பதினின்று தூரமாயிருக்கின்றீர்கள்.

ராஜ்யத்திற்கு/சபைக்கு/சரீரத்திற்கு/கிறிஸ்துவுக்குள் சமீபமாயிருத்தல் என்பதன் அர்த்தம் என்ன? நீங்கள் அந்நிலையில் இருந்தால், நீங்கள் உங்கள் கடந்த காலப் பாவங்களில் இருந்து **மீட்பு** என்பதற்குச் சமீபமாயிருக்கின்றீர் கள், நீங்கள் **இரட்சிப்பு** என்பதற்குச் சமீபமாயிருக்கின்றீர்கள் என்று அர்த்தமாகிறது. நீங்கள் **தேவனுடைய பிள்ளையாவதற்கு** மிகவும் சமீபமாயிருக்கின்றீர்கள்[28] - ஆனால் இந்த ஆசீர்வாதங்களில் எதுவும் இன்னமும் உண்மையில் உங்களுடையவைகள் ஆகவில்லை.

**ராஜ்யத்திற்கு நமது உறவுமுறை**

இது உங்கள் சிந்தையில் சில கேள்விகளை எழுப்பலாம், ஆனால்

*அவற்றிற்கு நான் பதில் அளிப்பதற்கு முன்பு, **சமீபத்தில்** இருப்பவர்கள் மற்றும் **தூரத்தில்** இருப்பவர்களை நேரெதிராக ஒப்பிட சில நிமிடங்களைச் செலவிடுவதற்கு என்னை அனுமதியுங்கள். எந்த இரண்டு மனிதர்களும் மிகச் சரியாக ஒரே மாதிரி இருப்பதில்லை என்பதால், நான் பொதுவான சொற்றொடர்களில் பேசவேண்டியிருக்கும்; ஆனால் இந்த இரண்டு சூழ்நிலைகளில் உள்ள சாத்தியமான வேறுபாடுகளை நான் கருத்தாகத் தெரிவிப்பதற்கு என்னை அனுமதியுங்கள்.*

*ராஜ்யத்திற்குத் **தூரமாய்** இருப்பவர்களில் பலர் **தப்பெண்ணத்தினால்**[29] நிறைந்துள்ளனர். அவர்கள் ஆவிக்குரிய விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பதற்கு விரும்புவதில்லை. அவர்கள், நான் ஒருமுறை வாசித்த விளம்பரப் பலகைக்கு ஒப்பாயிருக்கின்றனர்: "எனது மனம் சரிசெய்யப்பட்ட நிலையில் உள்ளது; உண்மைகளைக் கொண்டு என்னைக் குழப்பாதீர்கள்." இருப்பினும், சட்டப்படி ராஜ்யத்திற்கு **சமீபமாய்** இருப்பவர்கள் **நேர்மையான இருதயம்**[30] ஒன்றைக் கொண்டுள்ளனர். இது அநேகமாக, இயேசு வேதபாரகரின் இருதயத்தினுள் கண்ணோக்கியபோது அவர் பாராட்டிய பண்பாக இருக்கலாம்: அம்மனிதர், பெரும்பாலான பரிசேயர்களின் இருதயங்களைக் கடினப்படுத்தியிருந்த தப்பெண்ணத்தினால் பட்சிக்கப் படாதிருந்தார்.*

*சிலர் **பொல்லாங்கின்**[31] காரணமாக ராஜ்யத்திலிருந்து **தூரத்தில்** இருக்கின்றனர். இவர்கள் இந்த உலகத்தின் ஒழுக்கத் தராதரத்தைத் தழுவிக்கொண்டுள்ளனர், மற்றும் இவர்கள் இதைப் பற்றி மீண்டும் நினைவூட்டப்படுதலை வெறுக்கின்றனர். மற்றவர்கள், சரி மற்றும் தவறு என்பது பற்றிய கருத்துணர்வைக் கொண்டுள்ளதாலும், **நல்ல, ஒழுக்கமான வாழ்வைக்**[32] கைக்கொள்ளப் பிரயாசப்படுவதாலும் **சமீபமாய்** இருக்கின்றனர்.*

*சிலர், தேவனுடைய சித்தம் குறித்துப் **போதிக்கப்படுவதில் குறைவு படுவதால்**[33] தூரமாய் இருக்கின்றனர். இவர்கள் கற்றுக்கொள்ள வாய்ப்புப் பெறாதிருக்கலாம் அல்லது ஒருவேளை இவர்கள் வாய்ப்புப் பெற்றிருந்தும் அதை அனுகூலப்படுத்திக் கொள்வதைத் தேர்ந்து கொள்ளாதிருக்கலாம். இதற்கு நேர்மாறாக, **சமீபமாய்** இருக்கின்றவர்கள் பொதுவாகக் **கற்றுக் கொள்ள ஆர்வமாய் இருக்கின்றனர்**,[34] இவர்கள் தேவனுடைய வசனத்தைப் பற்றி அறிய விரும்புகின்றனர். ஒருவேளை இவர்கள் தங்கள் சொந்த முயற்சியிலேயே படித்துக்கொண்டிருக்கலாம்; ஒருவேளை இவர்கள் தங்கள் ஆத்துமாக்கள் குறித்து அக்கறைப்படுகின்ற மற்றவர்களுடன் படித்துக் கொண்டிருக்கலாம்.*

***சுயநிறைவுடன் இருத்தல்**[35] என்பது **தூரமாய்** இருப்பவர்களின் பொதுவான பண்பாக உள்ளது: "நான் இருக்கும் வழிமுறையில் நன்றாகவே இருக்கின்றேன்; என்னைத் தனியே விட்டுவிடுங்கள்!" பல ஆண்டுகளுக்கு முன்பு, டெக்ஸாஸின் குவின்லேன் என்ற இடத்தில் பிரசங்கங்களின் தொடர் ஒன்றை உரைக்கும்படி நான் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தேன். நான் அங்கு சென்று சேருவதற்கு முன், அங்கிருந்த உள்ளூர்ப் பிரசங்கியார், பதில்செயல் செய்வார் என்று தாம் நம்பிக்கை கொண்டிருந்த ஒரு*

*மனிதரைக் காணச் சென்றார். மனிதனின் ஆவிக்குரிய நிலை என்ற பாடக் கருத்துடன் இந்த சுவிசேஷ ஊழியர் அணுகியபோது, இவரிடத்தில், "பிரசங்கியாரே ஒரு நிமிடம் பொறுங்கள்! நீங்கள் உங்கள் வருகையைப் பாழாக்கவிருக்கின்றீர்கள்! நீங்கள் இங்கு வந்து சற்று நேரம் தங்கியிருக்க விரும்பினால் மதத்தைப் பற்றிப் பேசாதீர்கள், அதோ கதவு இருக்கிறது!" என்று கூறினார். இதற்கு நேர்மாறாக,* ***சமீபமாய்*** *இருக்கின்றவர்கள் பொதுவாகத் தங்கள் ஆவிக்குரிய* ***தேவைகளைப்***[36] *பற்றி* ***விழிப்புணர்வுடன்*** *இருக்கின்றனர். சிலவேளைகளில் அவர்கள் தாங்கள் இழந்துபோகப் பட்டிருப்பதையும் இரட்சிப்புக்குக் கர்த்தரிடத்தில் வரவேண்டியதன் அவசியத்தையும் அறிந்துள்ளனர்.*

*நான் ஒரு மறுப்பைக் கேள்விப்படுகின்றேன்: "அங்கே நில்லுங்கள்! நீங்கள்,* ***நேர்மையான இருதயம்*** *கொண்ட,* ***நல்ல, ஒழுக்கமான வாழ்வை*** *வாழ்கின்ற,* ***கற்றுக்கொள்ள ஆர்வமாய் இருக்கின்ற****, ஆவிக்குரிய* ***தேவைகள்*** *பற்றி* ***விழிப்புணர்வுடன்*** *இருக்கின்ற ஒருவரைப் பற்றி விவரித்தீர்கள். அப்படிப்பட்ட ஒரு நபர் இழந்துபோகப்பட்டிருக்கக்கூடும் என்று கருத்துத் தெரிவிக்க நீங்கள் தைரியம் கொண்டுள்ளீர்களா?"*

*நான் அப்படிக் கருத்துத் தெரிவிக்காமல் இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றேன். இதை நான் என் முழு இருதயத்தோடும் விரும்பு கின்றேன் - ஆனால் வேறு விதமாய்ப் போதித்தால் நான் வேதாகமத்திற்கு உண்மையுள்ளவனாக இருக்க முடியாது. ராஜ்யத்திற்குச்* ***சமீபமாய்*** *இருந்தும் ஒரு நபர் இழந்து போகப்பட்டிருப்பது ஏன்? ஏனென்றால் அவர்* ***ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும்*** *காணப்படக்கூடிய இடமான* ***கிறிஸ்துவுக்குள்*** *இருப்பதில்லை. அவர் தமது கடந்த காலப் பாவங்களில் இருந்து* ***மீட்கப்படும்படிக்கு*** *இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப் பட்டிருப்பதில்லை. சமீபத்தில் இருந்தவர் பற்றிய வேதாகம உதாரணம் ஒன்றை நீங்கள் விரும்பினால், கொர்நேலியு என்னும் பெயர்கொண்ட ரோம நூற்றுக்கு அதிபதியின் விஷயத்தை நீங்கள் கண்ணோக்குங்கள். ஏவுதல் பெற்ற இந்த விவரிப்பைக் கவனியுங்கள்:*

> *இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான் (அப். 10:1, 2).*

*இந்த மனிதனைப் பற்றி நீங்கள் படிக்கையில், இவர் ஒரு* ***நேர்மையான இருதயம்*** *கொண்டிருந்ததையும்,* ***நல்ல, ஒழுக்கமான வாழ்வை*** *வாழ்ந்து கொண்டிருந்ததையும்,* ***கற்றுக்கொள்ள ஆர்வமாய்*** *இருந்ததையும் மற்றும் ஆவிக்குரிய* ***தேவைகள்*** *பற்றிய* ***விழிப்புணர்வுடனும்*** *கூட இருந்ததையும் நீங்கள் கண்டறிவீர்கள். இவர் இரட்சிக்கப்பட்டிருந்தாரா? இவரிடத்தில் ஒரு தூதன், "யோப்பா பட்டணத்திலிருக்கிற பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைக்கும்படி மனுஷரை அவ்விடத்திற்கு அனுப்பு;*

நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான்" என்று கூறினார் (அப். 11:13, 14). கொர்நேலியு **சமீபமாய்** - மிகவும் சமீபமாய் - இருந்தார் ஆனால் அவர் இரட்சிக்கப்படாதிருந்தார். இந்த நூற்றுக்கு அதிபதியினிடத்தில் பாராட்டத் தக்கவைகள் பல இருந்தன, ஆனாலும் அவர் இன்னும் இழந்து போகப்பட்ட நிலையிலேயே இருந்தார்.

ராஜ்யத்திற்குள் பிரவேசித்தல்

"நாம் எவ்வாறு ராஜ்யத்திற்குள் வருகின்றோம்?" என்பது அடுத்த கேள்வியாக உள்ளது. **ராஜ்யத்திற்குள்/சபைக்குள்/சரீரத்திற்குள்/கிறிஸ்துவுக்குள் பிரவேசிப்பதற்கு**[37] என்ன நடைபெற வேண்டும்? இந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பதற்கு, மீண்டுமாக நான், ஏற்கனவே நாம் கலந்துரையாடிய சொற்றொடர்கள் தொடர்பான வசனப்பகுதிகளின்மீது கவனம் செலுத்த விரும்புகின்றேன்.

மத்தேயு 18:3 வசனம், "ராஜ்யம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது. இயேசு, "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால்,[38] பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார். **ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு, மனந்திரும்புதல்**[39] ஒன்று நடைபெற வேண்டும். "மனந்திரும்புதல்" என்ற வார்த்தை அடிப்படையில் "மாற்றம்" என்று அர்த்தப்படுகிறது. மனந்திரும்புதலின் செய்முறை மும்மடங்கானதாக உள்ளது:

(1) எண்ணப்போக்கில் ஒரு மாற்றம் இருக்கவேண்டும், இது விசுவாசத்தினால் கொண்டுவரப்படக்கூடியதாக உள்ளது. இயேசு, "நானே அவர் [தேவகுமாரனாகிய மேசியா] என்று விசுவாசியாவிட்டால், நீங்கள் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்று கூறினார் (யோவா. 8:24).

(2) வாழ்வில் ஒரு மாற்றம் இருக்கவேண்டும், இது மனந்திரும்புதலினால் கொண்டு வரப்படக்கூடியதாக உள்ளது. அவர், "நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" என்றார் (லூக். 13:3).

(3) உறவுமுறையில் - கர்த்தருடனான நமது உறவுமுறையில் - ஒரு மாற்றம் இருக்கவேண்டும், இது ஞானஸ்நானத்தினால் கொண்டு வரப்படக்கூடியதாக உள்ளது. இயேசு, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்று கூறினார் (மாற். 16:16அ).

இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ள, தேவபக்தியுள்ள பெரும்பாலான மக்கள் மனமாற்றத்தின் செயல்முறைக்கு விசுவாசமும் மனந்திரும்புதலும் அத்தியாவசியமாக உள்ளன என்று புரிந்துகொள்கின்றனர், ஆனால் **ஞானஸ்நானத்தின்**[40] அவசியம் பற்றிச் சிலர் அறைகூவல் விடுக்கின்றனர். ஆகையால் ராஜ்யத்திற்குள் நமது பிரவேசத்தின் இந்த அம்சத்தின்மீது சற்று நேரத்தைச் செலவிட என்னை அனுமதியுங்கள். ராஜ்யத்தை விவரிப்பதற்கு நாம் எந்தச் சொற்றொடரைத் தேர்ந்துகொண்டாலும், நமது பிரவேசத்திற்கு ஞானஸ்நானம் என்ற தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுதல்

*இன்றியமையாதது என்று கூறப்பட்டுள்ளது:*

- ***"இராஜ்யம்"*** *என்ற சொற்றொடர் குறித்து, யோவான் 3:5ஐக் கவனியுங்கள், இதில் இயேசு, "... ஒருவன் ஜலத்தினாலும்*[41] *ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" என்று கூறினார்.*
- ***"சபை"*** *என்ற சொற்றொடர் குறித்து, அப். 2க்குச் செல்லுங்கள். பேதுரு மக்களிடத்தில், "மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (வ. 38). பின்பு நாம், "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்; அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்" என்று வாசிக்கின்றோம் (வ. 41). "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" என்று வசனம் 47 கூறுகிறது. ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள், இரட்சிக்கப்பட்டவர்களின் - கூட்டத்தில் கர்த்தரால் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இது "சபை" என்பதை கூறுவதற்கான இன்னொரு வழிமுறையாக மாத்திரம் உள்ளது (எபே. 5:23, 25).* KJV *வேதாகமம், பேதுருவின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றவர்களைப் பற்றி,* "the Lord added to the *church* daily such as should be saved" *என்று கூறுகிறது (அப். 2:47).*
- ***"சரீரம்"*** *என்ற சொற்றொடர் குறித்து, 1 கொரிந்தியர் 12:13அ-வை ஆழ்ந்து சிந்தியுங்கள்: "எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்."*[42]
- ***"கிறிஸ்துவுக்குள்"*** *என்ற சொற்றொடர் குறித்து, கலாத்தியர் 3:26, 27ஐத் திருப்பிக் கூற என்னை அனுமதியுங்கள்: "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக* ***ஞானஸ்நானம்*** *பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே." அடிப்படையில் இதே சத்தியத்தைப் போதிக்கும் இன்னொரு வசனப்பகுதி ரோமர் 6:3, 4 ஆகும்:*

> கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ள

*வர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.*

*நமது இருதயங்கள், வாழ்வுகள் மற்றும் உறவுமுறைகள் ஆகியவை, கர்த்தர்மீதான நம்பிக்கை, நமது பாவங்களில் இருந்து மனந்திரும்புதல், மற்றும் ஞானஸ்நானத்தில் முழுக்காட்டப்படுதல் ஆகியவற்றின் மூலம் மாற்றப்படுகிறபோது, விளைவு என்னவாக உள்ளது? அப்போது ஒரு தெய்வீக* ***உட்படுத்தப்படுதல்***[43] *நடைபெறுகிறது: தேவன் "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்துகின்றார்" (கொலோ. 1:13)! நாம்* ***சபையுடன்*** *சேர்த்துக் கொள்ளப்படுகின்றோம். நாம்* ***சரீரத்தின்*** *உறுப்புக்கள் ஆகின்றோம். நாம்* ***கிறிஸ்துவை*** *அணிந்துகொள்கின்றோம்!*

*இப்பொழுது நாம்,* ***"ராஜ்யத்திற்குள்"*** *இருத்தல் என்ற சொற்றொடரின் மூலம் எதனை அர்த்தப்படுத்துகின்றோம் - மற்றும்,* ***"சமீபமாய்," "தூரத்தில்"*** *என்ற சொற்றொடர்களினால் மறைமுகமாய் உணர்த்தப்படுவது என்ன - என்பதைப் பற்றித் தெளிவான புரிந்துகொள்ளுதலைக் கொண்டுள்ளோம். ராஜ்யத்திற்கு வெளியே இருப்பவர்கள்* ***தூரத்தில்*** *இருப்பினும் அல்லது* ***சமீபமாய்*** *இருப்பினும், அவர்கள் இன்னமும் மாற்றப்படாமல் இருக்கின்றனர். அவர்கள் இன்னமும் வேத வசன ரீதியாக ஞானஸ்நானம் பெறாமல் இருக்கின்றபடியால், அவர்கள்* ***ராஜ்யத்திற்கு/சபைக்கு/சரீரத்திற்கு/கிறிஸ்துவுக்கு*** *உட்படுத்தப்படாமல் இருக்கின்றனர். இதுவே, கடந்த காலப் பாவங்களில் இருந்து* ***மீட்பு*** *மற்றும்* ***இரட்சிப்பு****, மற்றும்* ***தேவனுடைய பிள்ளைகளாக*** *எண்ணப்படுதல் ஆகியவை உட்பட,* ***ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும்*** *உள்ள இடமாக இருக்கிறது.*

## *முடிவுரை*

*சிலர் ராஜ்யத்திற்கு* ***சமீபமாய்*** *வந்தும் அதற்கு* ***உள்ளே*** *வராதிருப்பது ஏன் என்பதை என்னால் நிச்சயத்துக் கூற இயலாது. சிலர் அதைப் பிற்பாடு செய்யத் திட்டமிடுகின்றனர். ஒருவேளை சிலர், தாங்கள் போதுமான அளவு அறியவில்லை என்று நினைக்கலாம். அவர்கள் இன்னமும் கேள்விகளைக் கொண்டிருக்கலாம். ஒருவேளை மற்றவர்கள், தாங்கள் மிகவும் இளையவர்கள் அல்லது மிகவும் முதியவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கலாம்.*

*வேத வசனங்களில் இருந்தும் மக்களுடன் பல ஆண்டுகள் பழகிய பழக்கத்தில் இருந்தும், நான் பின்வருவதை உங்களுக்குக் கூற முடியும்: எவரொருவரும்* ***சமீபமாய்*** *தங்கியிருப்பதில்லை. நான் கூறுவதை கேளுங்கள்: எவரொருவரும் சமீபமாய் தங்கியிருப்பதில்லை. சமீபமாய் இருப்பவர், ஒன்று ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கின்றார் அல்லது புறம்பே சென்று விடுகின்றார். வாய்ப்பை மறுக்கும் ஒவ்வொரு வேளையிலும் அவரது இருதயம் கடினப்படுகிறது. ஒருமுறை இந்தக் குறிப்பிட்ட தனிநபர் ராஜ்யத்திற்குத் தூரமாக சென்றுவிட்டால், ஆர்வத்தின் தொடக்கப்*

*பொறிகளை அவருக்குள் உயிர்ப்பித்தல் என்பது ஏறக்குறைய சாத்திய மற்றதாகிறது. ஒருவர், தேவனை நோக்கிச் செல்லுதலிலும் ராஜ்யத்திற்குள் வருதலிலும் தொடர்ந்திராவிட்டால்,* ***சமீபமாய்*** *இருத்தல் என்பது அபாயகரமான நிலையாக உள்ளது!*

*மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டிய நிலையில் உள்ள தவறு செய்துள்ள கிறிஸ்தவர்கள் மற்றும் பிற காரணங்களுக்காக ஜெபங்களை விரும்புகின்றவர்கள் உட்பட, கர்த்தருக்குப் பதில்செயல் செய்ய வேண்டியுள்ள எவருக்கும் ஒரு அழைப்பை விடுக்க நான் விரும்புவேன்.*[44] *விசேஷமாக நான், ராஜ்யத்திற்கு சமீபமாய் இருக்கக் கூடிய எவருக்கும் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். நீங்கள் அந்த இடத்தில் நீண்ட காலம் தங்கியிருக்க மாட்டீர்கள் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். பேலிக்ஸுடன் பவுல், "நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும்'' பற்றிக் கலந்துரையாடியபோது, அந்த ஆளுநர் "பயமடைந்தார்" (அப். 24:25அ). அவர் ராஜ்யத்திற்குச் சற்றே நெருங்கினார் - ஆனால் அதன் பின்பு அவர் புறம்பே கடந்து சென்றுவிட்டார். அப்போஸ் தலரிடத்தில் அவர், "இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன்" என்று கூறினார் (அப். 24:25ஆ). அகிரிப்பா விடம் பவுல் பிரசங்கித்தபோது, அவரிடம் அந்த அரசர், ''நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்" என்று கூறினார் (அப். 26:28); ஆனால் அவரது இருதயம் தொடப்பட்டிருந்தால், அவர் அதைப் பற்றி ஒருக்காலும் ஏதொன்றும் செய்யவில்லை.*

***சமீபமாய்*** *வருகின்ற எல்லாருமே* **தூரமாக** *இருக்கும் நிலைக்குப் பின்வாங்கிச் செல்வதில்லை என்பதற்காகத் தேவனுக்கு நன்றி.* **சமீபமாய்** *இருந்தும் இழந்துபோகப்பட்ட நிலையில் இருந்தவருக்கு உதாரணமாக நான் முன்னதாகக் கொர்நேலியு என்பவரைக் குறிப்பிட்டேன். அவரது மனமாற்றத்தைப் பற்றிய வரலாற்றை அப். 10:1-11:18 பகுதி கூறுகிறது, அவர் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு (10:43) ஞானஸ்நானம் பெற்றார் (10:48). எத்தியோப்பிய மந்திரியின் வரலாறு என்பது மெய்சிலிர்க்கச் செய்யும் இன்னொரு வரலாறாக உள்ளது, இது அப். 8:26-39ல் கூறப்படுகிறது.* **சமீபமாய்** *இருத்தல் என்பதற்கு நாம் பயன்படுத்திய ஒவ்வொரு சொற்றொடரும் இவருக்கு நடைமுறைப்படுவதாயிருக்கும்: இவர்* **நேர்மையான இருதயம்** *கொண்டிருந்தார்; இவர் ஒரு* **நல்ல, ஒழுக்கமான வாழ்வை** *வாழ்ந்தார் என்று நாம் யூகிக்க முடியும்; இவர்* **கற்றுக்கொள்ள ஆர்வமாய்** *இருந்தார்; மற்றும் இவர்* **ஆவிக்குரிய தேவைகள்** *பற்றிய* **விழிப்புணர்வுடன்** *இருந்தார். இவருக்குப் பிலிப்பு போதித்தபின் (வ. 35), இவர் "இதோ தண்ணீர் இருக்கிறதே! நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன?" என்று கேட்டார் (வ. 36). அதற்குச் சுவிசேஷகர், "நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை" என்றார் (வ. 37அ). அந்த வேளையில், இந்த அதிகாரி முன்னதாகவோ அல்லது பின்னாகவோ நகர வேண்டியிருந்தது; அவர் இருந்த இடத்தில் அவரால் நிலைத்திருக்க முடியாதிருந்தது. அவர் இயேசுவில் தாம் கொண்டிருந்த விசுவாசத்தை*

அறிக்கையிட்டு (வ. 37ஆ), ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார் (வ. 38) என்பதை உங்களுக்குக் கூறுகையில் எனக்கு மெய்சிலிர்க்கிறது. கொர்நேலியுவும் இந்த மந்திரியும் தங்கள் முடிவுகளை ஏற்படுத்தியபோது, அவர்கள் **ராஜ்யத்தில், சபையில், சரீரத்தில், கிறிஸ்துவுக்குள்** இருந்தனர், மற்றும் அவர்கள் **ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும்** மகிழ்வுடன் அனுபவிக்கக்கூடியவர்களாய் இருந்தனர்.

சமீபமாய் வந்த வேதபாரகரைப் பற்றிய விஷயம் என்ன? அவர் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொண்டாரா? பெந்தெகொஸ்தே நாளன்று அவர் மனந்திரும்பினாரா? அவர் ஞானஸ்நானம் பெற்றாரா? எனக்குத் தெரியாது, ஆனால் இங்கு அதை விட அதிகம் முக்கியமான கேள்வியொன்று உள்ளது: ''உங்களைப் பற்றிய விஷயம் என்ன?'' ஒருவேளை நீங்கள் **சமீபமாய்** இருக்கலாம். அவ்வாறிருந்தால், அந்த மந்திரியைப் போல் சந்தோஷமாய்ப் போகும்படி கர்த்தருக்காக அந்த இன்றியமையாத முடிவை மேற்கொள்ள நீங்கள் தயாராக இருக்கின்றீர்களா? முடிவு உங்களுடையதாக உள்ளது.

## குறிப்புகள்

பல ஆதாரமூலங்கள் பரிசீலனை செய்யப்பட்டன, ஆனால் இந்த எடுத்துரைப்பானது, "நீங்கள் ராஜ்யத்திற்குச் சமீபமாய் இருக்கின்றீர்களா?" என்று தலைப்பிடப்பட்ட ஜோ லேய்ர்டு அவர்களின் பிரசங்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. அவரது இந்தப் பிரசங்கம் *Oft-Asked Questions* (Oklahoma City, Okla.: Joe W. Laird & Hoyt Huffines, 1960), 173-87 என்ற புத்தகத்தில் உள்ளது. ஜோ அவர்கள் கரும்பலகையில் வரைந்த வரைபடத்தில் அடிப்படையில் நான் பின்வரும் வரைபடத்தைப் பயன்படுத்துகின்றேன்.

நான் இந்த வரைவட்டவணைக்கு ஒரு ஃபிளானல்போர்டு காட்சியமைப்பைத் தயாரித்தேன், இது பிரசங்கம் படிப்படியாக வளருகையில் தகவல்களைச் சேர்க்க எனக்கு உதவிற்று. இந்த வரைவட்டவணையை ஒரு கரும்பலகையிலோ அல்லது அட்டையிலோ வரையவும் முடியும் அல்லது இது ஓவர்ஹெட் புரொஜெக்டர் காட்சியமைப்பில் காண்பிக்கப்பட முடியும். சமீபத்தில் நான் இந்த வரைவட்டவணையை ஒரு பவர் பாயின்ட் எடுத்துரைப்பில் பயன்படுத்தினேன்.

பிரசங்க மேடையைச் சுற்றியுள்ள மாறுபட்ட பகுதிகளை "தூரமாய்," ''சமீபமாய்'' மற்றும் ''உள்'' என்று அடையாளப்படுத்துதல் இந்தப் பாடத்தைக் காட்சிப்படுத்தும் இன்னொரு வழிமுறையாக உள்ளது. "உள்" என்பது பேசுபவரின் தாங்கிக்கு நேர்பின்னால் இருக்கக்கூடும். "சமீபமாய்" என்பது தாங்கியின் ஒரு புறமாக இருக்கக் கூடும். "தூரமாக'' என்பது பேசுபவரின் தாங்கியில் இருந்து முற்றிலும் புறம்பாக இருக்கக் கூடும், நீங்கள் உயரமான மேடையிலிருந்து பேசினுல், ''தூரமாக'' என்பது மேடையிலிருந்து புறம்பே இருக்கக்கூடும். இது அறையின் தரையாகவும் இருக்கலாம். பின்பு, பல்வேறு நிலைகள் பற்றி நீங்கள் கலந்துரையா

டுகையில், இந்தப் பகுதிகளுக்கு இடையில் முன்னும் பின்னும் கடந்து செல்லக்கூடும்.

---

குறிப்புகள்

[1]*"நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல" என்ற வரைவட்டவனை இந்த எடுத்துரைப்புடன் பயன்படுத்தப்பட முடியும். வரைவட்டவணையைப் பயன்படுத்துவதைத் தேர்ந்துகொள்பவர்களுக்கு உதவுவதற்காக, அந்த வரைவட்டவணையில் புதிய வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் எப்போது சேர்த்துக்கொள்வது என்று சுட்டிக்காண்பிப்பதற்காகப் பிரசங்கத்தில் அவ்வார்த்தைகள் பெரிய அழுத்தமான எழுத்துக்களில் தரப்பட்டுள்ளன. ஒரு வார்த்தையோ அல்லது சொற்றொடரோ வரைவட்டவணையில் எப்போது சேர்க்கப்பட வேண்டும் என்பதைப் பின்வரும் குறிப்புகள் சுட்டிக்காண்பிக்கும். குறிப்பு இல்லையென்றால், பெரிய மற்றும் அழுத்தமான எழுத்துக்கள், வரைவட்டவணையில் [ஏற்கனவே] உள்ள வார்த்தைகளைக் குறிப்பிடுகின்றன என்று அர்த்தமாகிறது. பாடம் தொடங்குகையில் தலைப்பானது ஏற்கனவே கரும்பலகையில் எழுதப்பட்டிருக்க வேண்டும், அத்துடன் கரும்பலகையின் வலது புறத்தில் ஒரு சதுரக் கட்டமும் வரையப்பட்டிருக்க வேண்டும். [2]கேள்விகளின் மாபெரும் நாள் பற்றிய பின்னணிக்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 5" என்ற புத்தகத்தில் "என்ன ஒரு நாள்" என்ற பாடத்தில் காணவும். இந்தக் கலந்துரையாடலின்கீழ் உள்ள குறிப்பிட்ட நிகழ்ச்சி பற்றிய பின்னணிக்கு அதே புத்தகத்தில் "வெற்றியாளர் … மற்றும் இன்னும் திறமைசாலி" என்ற பாடத்தில் காணவும். [3]அவர் தாமாக முன்வந்திருக்கலாம். [4]*William Barclay, *The Gospel of Mark*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 296-97. [5]KJV *வேதாகமம், "durst" என்ற பழைய ஆங்கில வார்த்தையொன்றைப் பயன்படுத்துகிறது, இது "dared" [துணிதல்] என்று அர்த்தப்படுகிறது (NKJVயில் காணவும்). [6]வரைவட்டவணையில் **"ராஜ்யம்"** என்ற வார்த்தையை சதுரக் கட்டத்தினுள், உச்சிப் பகுதிக்கு அருகில் எழுதவும். [7]இயேசு, தமது சீஷர்களில் சிலர் உயிருடன் இருக்கும்போதே ராஜ்யம் பெலத்தோடே வரும் என்று கூறியிருந்தார் (மாற். 9:1). அவர், பரிசுத்த ஆவியானவர் வரும்போது அந்த வல்லமை வரும் என்று கூறினார் (அப். 1:8). கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்தார் (அப். 2:1-4). அந்த வேளையில் வல்லமை வந்தது மற்றும் ராஜ்யம் நிலைநாட்டப்பட்டது. [8]**"சமீபமாய் இருத்தல்"** என்ற வார்த்தைகளை வரைவட்டவணையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட இடத்தில் வைக்கவும். [9]**"தூரமாக இருத்தல்"** என்ற வார்த்தையை வரைவட்டவணையில் வைக்கவும். [10]சதுரத்தில் உச்சிப்பகுதியில் உள்ள **"ராஜ்யம்"** என்ற வார்த்தைக்குப் பின்பு **"உள்"** என்ற வார்த்தையைச் சேர்க்கவும். [தமிழில் இது ராஜ்யத்திற்குள் என்று சேர்த்து எழுதப்பட வேண்டும்.]*

*[11]இந்தப் பிரசங்கத்தின் பிற்பகுதியில் நாம் காணப்போகிறபடி, நான் கர்த்தரின் சபையில் உறுப்பினர்களாக உள்ள கிறிஸ்தவர்களைக் குறிப்பிடுகின்றேன். [12]"ராஜ்யம்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் பல்வேறு வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது - இது பரலோகத்தில் தேவனுடைய ஆளுகையை அல்லது பூமி முழுவதிலும் தேவனுடைய அதிகாரத்தையும் கூடக் குறிப்பிடுகிறது. நாம் பயன்படுத்துகின்ற வசனப்பகுதிகள், பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு "சபை" என்று பொதுவாக அழைக்கப்பட்ட மக்கள் கூட்டத்தைக் குறிப்பிடுவதாயிருக்கும்.*

[13]மத்தேயு 16:13-20ன் மீதான சுருக்கமான விளக்கங்களுக்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 3" என்ற புத்தகத்தில் "மலை உச்சிகள் மற்றும் பள்ளத்தாக்குகள்" என்ற பாடத்தில் காணவும். [14]சபை என்பது ஒரு கட்டிடம் அல்ல, ஆனால் மக்களே என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இது இயேசு பயன்படுத்திய ஒரு ஒப்புவமை - அல்லது விவரிப்பு - என்பதாக உள்ளது. [15]இது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று நடைபெற்றது (அப். 2:14-40). [16]"**ராஜ்யத்திற்குள்**" என்ற வார்த்தைக்குக் கீழ் "**சபைக்குள்**" என்ற வார்த்தையைச் சேர்க்கவும். [17]"**சபைக்குள்**" என்ற வார்த்தைக்குக் கீழ் "**சரீரத்திற்குள்**" என்ற வார்த்தையைச் சேர்க்கவும். [18]"**சரீரத்திற்குள்**" என்ற வார்த்தைக்குக் கீழ் "**கிறிஸ்துவுக்குள்**" என்ற வார்த்தையைச் சேர்க்கவும். [19]மற்ற உதாரணங்களுக்கு, ஒரு ஒத்தவாக்கிய அட்டவணைப் புத்தகத்தில், "கிறிஸ்துவுக்குள்," "இயேசுவுக்குள்" மற்றும் "கிறிஸ்து இயேசுவுக்குள்" என்ற சொற்றொடர்களின் கீழ் கண்ணோக்க நீங்கள் விரும்பலாம். [20]வரைவட்டவணையில் "**ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்கள்**" என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும்.

[21]Joe Laird, *Oft-Asked Questions* (Oklahoma City: Joe W. Laird & Hoyt Huffines, 1960), 176-77. [22]அட்டவணையில் "**மீட்பு**" என்ற வார்த்தையைச் சேர்க்கவும். [23]அட்டவணையில் "**இரட்சிப்பு**" என்ற வார்த்தையைச் சேர்க்கவும். [24]அட்டவணையில் "**தேவனுடைய பிள்ளைகள்**" என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும். (KJVயின் இந்தச் சொற்றொடரானது, ஒரே மாதிரியாக அர்த்தப் படுகிறது என்றாலும், இது NASBயில் உள்ள "தேவனுடைய புத்திரர்" என்பதைக் காட்டிலும் அதிகமான அர்த்தத்தை உள்ளடக்குவதாக இருக்கிறது.) [25]இந்தப் பிரசங்கத்தில் ஒரு கருத்தை மறுபடி மறுபடி கூறுதல் என்பது வேண்டுமென்றே செய்யப்பட்டதாக உள்ளது. "மறுபடி மறுபடி கூறுதல் என்பது கற்றுக் கொள்ளுதலுக்குத் திறவுகோலாக உள்ளது." [26]சதுரக் கட்டத்திற்கு வெளியே உள்ள பகுதியைச் சுட்டிக்காண்பிக்கவும். [27]"**கிறிஸ்துவுக்குள்**" என்ற வார்த்தையையும் சதுரக் கட்டத்தினுள் இருக்கும் பகுதியைப் பொதுவாகவும் சுட்டிக்காண்பிக்கவும். [28]"**தேவனுடைய பிள்ளைகள்**" என்ற வார்த்தைகளைச் சுட்டிக்காண்பிக்கவும். [29]வரைவட்டவணையில் "**தப்பெண்ணம்**" என்ற வார்த்தையைச் சேர்க்கவும். நேர்மாறுகளின் இந்தக் கருத்துக்களை நான் நியாயமான அளவு விரைவாகக் கூறிமுடித்துள்ளேன். இவற்றின்மீது நீங்கள் அதிக நேரத்தைச் செலவிட விரும்பலாம். 2 தெச. 2:10, தப்பெண்ணம் (சத்தியத்தின்மேல் அன்பின்மை) தொடர்பான ஒரு வசனப்பகுதியாக உள்ளது. [30]வரைவட்டவணையில் "**நேர்மையான இருதயம்**" என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும். நேர்மையான இருதயத்தைக் கொண்டிருத்தல் தொடர்பான வசனப் பகுதிகளில் மத்தேயு 5:6; யோவான் 7:17; அப். 10:33; 1 சாமுவேல் 3:9 ஆகியவை உள்ளடங்குகின்றன.

[31]வரைவட்டவணையில் "**பொல்லாங்கான செய்கை**" என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும். [32]வரைவட்டவணையில் "**நல்ல, ஒழுக்கமான வாழ்வு**" என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும். [33]வரைவட்டவணையில் "**போதிக்கப்படுதலில் குறைவு**" என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும். [34]வரைவட்டவணையில் "**கற்றுக்கொள்ள ஆர்வம்**" என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும். [35]வரைவட்டவணையில் "**சுய-நிறைவு**" என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும். [36]வரைவட்டவணையில் "**தேவைகளை பற்றிய விழிப்புணர்வு**" என்ற வார்த்தை களைச் சேர்க்கவும். லூக்கா 18:9-14 வசனப்பகுதியானது, ஒரு மனிதன் சுயநிறைவுடன் இருந்ததையும் இன்னொருவர் ஆவிக்குரிய தேவைகள் பற்றி விழிப்புணர்வுடன் இருந்ததையும் பற்றிக் கூறுகிறது. [37]வரைவட்டணையில் சதுரக் கட்டத்தினுள் **ராஜ்யத்திற்குள்** என்ற வார்த்தையைச் சுட்டிக்காண்பிக்கும் அம்புக்குறியுடன்

“**பிரவேசிப்பதற்கு**” என்ற சொற்றொடரைச் சேர்க்கவும். [38]“பிள்ளைகளைப் போலாகுதல்” என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பது பற்றி, “கிறிஸ்துவின் வாழ்வு, 4” என்ற புத்தகத்தில் “சீஷத்துவத்தின் அடையாளங்கள்” என்ற பாடத்தில் மறுகண்ணோட்டமிடவும். [39]வரைவட்டணையில் “**மனமாற்றம்**” என்ற வார்த்தையைச் சேர்க்கவும். [40]வரைவட்டணையில் “**ஞானஸ்நானம்**” என்ற வார்த்தையைச் சேர்க்கவும்.

[41]“ஜலத்தினால் பிறத்தல்” என்பது ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது என்ற உண்மையின்மீதான ஒரு சுருக்கமான கலந்துரையாடலுக்கு, “கிறிஸ்துவின் வாழ்வு, 1” என்ற புத்தகத்தில் “ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல்வேளை” என்ற பாடத்தில் காணவும். [42]1 கொரிந்தியர் 12:13ன் ஞானஸ்நானம், பிரதான கட்டளையின் ஞானஸ்நானமாக, எபேசியர் 4:5ன் “ஒரே ஞானஸ்நானமாக” உள்ளது, இது தண்ணீர் ஞானஸ்நானமாக உள்ளது. நாம் (ஏவுதல் பெற்ற வசனத்தின் மூலமாக) ஆவியானவரால் இயக்கப்பட்ட நிலையில், நாம் ஒரே சரீரமான சபையில் ஞானஸ்நானப்படுத்தப் பட்டுள்ளோம். [43]வரைவட்டவணையில் “**உட்படுத்தப்படுதல்**” என்ற வார்த்தையைச் சேர்க்கவும். [44]உங்கள் உரையைக் கேட்பவர்களின் தேவைக்கேற்றாற்போல் இதை விரிவாக்கிக் கொள்ளுங்கள்.



# மனந்திரும்புங்கள் அல்லது கெட்டுப்போங்கள்!

## லூக்கா 13:1-5

ஒரு நாள், இயேசு போதித்துக் கொண்டிருக்கையில், "பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந் தான்" (லூக். 13:1) என்பது பற்றிய அறிக்கை வந்தது. இந்த கலிலேயர்கள் யார் என்பது பற்றி நாம் உறுதியாக எதுவும் கூற இயலாது,[1] ஆனால் அவர்கள் வழக்கத்திற்கு மாறான பொல்லாங்கானவர்களாய் இருந்த காரணத்தினால் தான், அப்படிப்பட்ட வகையில் கொல்லப்பட்டனர் என்று கிறிஸ்துவின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் நினைத்தனர் என்பது தெளிவு. அவர்களிடத்தில் இயேசு, "அந்த கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால், எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்று உங்களுக்குச் சொல்லு கிறேன்'' என்ருர் (வசனங்கள் 2, 3). பின்பு கர்த்தர், இதே கருத்தை வலியுறுத்துவதற்கு இரண்டாவது விவரிப்பு ஒன்றைப் பயன்படுத்தினார்: "சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப் பேரைக் கொன்றதே, எருசலேமிலே குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும், அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கின்றீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால், எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" என்றார் (வசனங்கள் 4, 5).[2]

வேதாகமத்தில் ஒரு சில வசனங்களே வார்த்தைக்கு வார்த்தை பிரதி யெடுத்தாற்போன்று காணப்படுகின்றன, ஆனால் இங்கு லூக்கா 13ல் அப்படிப்பட்ட இரு வசனங்கள் உள்ளன.[3] வசனம் 3, "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால், எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்று உங்களுக்குச் சொல்லு கிறேன்" என்று கூறுகிறது. வசனம் 5ம் கூட, "அப்படியல்லவென்று உங்களுக் குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால், எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றே உள்ளது. இப்படிப்பட்ட பிரதியெடுத்தாற் போன்று காணப்படும் விஷயமானது, நாம் அந்தச் செய்தியைத் தவற விட்டுவிடக்கூடாது என்று நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் விரும்பினார் என்று கருத்துத் தெரிவிக்கிறது: மனந்திரும்புங்கள் அல்லது

## "நீங்கள் மனந்திரும்பாமற் போனால் ..."

**மனந்திரும்புதல் வற்புறுத்தப்பட்டது**

*பழைய ஏற்பாட்டிலும்[4] புதிய ஏற்பாட்டிலும் மனந்திரும்புதலுக்கான அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. யோவான் ஸ்நானன், ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்க வந்தபோது, அவர் தமது உரையைக் கேட்டவர்களிடத்தில் மனந்திரும்பும்படி வற்புறுத்தினார் (மத். 3:2). இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் அதே அறிவுறுத்தலைக் கொடுத்தனர் (மத். 4:17; மாற். 6:12). பிரதான கட்டளையைக் கர்த்தர் கொடுத்தபோது, மனந்திரும்புதல் என்பது பிரசங்கிக்கப்பட வேண்டிய செய்தியின் ஒரு பாகமாக இருந்தது (லூக். 24:47).[5] சுவிசேஷமானது அதன் முழுமைத் தன்மையுடன் பிரசங்கிக்கப்படத் தொடங்கியபோது, மனந்திரும்பும்படி பாவிகளுக்குக் கூறப்பட்டது (அப். 2:38; 3:19, 26; 17:30, 31).*

*தேவனுடைய கட்டளைகளில், மனந்திரும்புதல் என்பதே கீழ்ப்படிவதற்கு மிகவும் கடினமானதாக இருப்பதாக மக்கள் காண்பதால் மனந்திரும்புதலின்மீது மாபெரும் வலியுறுத்தத்தை வேதாகமம் வைக்கிறது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலானவர்கள், ஆதாரத்தைப் புரிந்துணர்ந்து கொண்டவுடன், விசுவாசிப்பதில் எவ்வித இடர்ப்பாடும் கொண்டிருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, அமெரிக்கக் குடிமக்களில், 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்டவர்கள் தேவன்மீது விசுவாசம் கொண்டுள்ளனர் என்பதை வாக்கெடுப்புகள் சுட்டிக்காண்பிக்கின்றன - அவர்களில் பெரும்பான்மையானவர்கள் இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளனர்.[6] மேலும், மக்கள் ஒருமுறை உண்மையிலேயே மனந்திரும்பிவிட்டால், அவர்கள் தேவனுடைய மற்ற கட்டளைகளில் பெரிய இடர்ப்பாடு எதையும் கொண்டிருப்பதில்லை. இருப்பினும், மனந்திரும்புதல் என்பது தன்னிலே கடினமானதாக - மிகவும் கடினமானதாக - உள்ளது!*

*மனந்திரும்புதல் என்பது, குறைந்தது இரண்டு காரணங்களினால் கடினமானதாக உள்ளது. முதலாவது, மனந்திரும்புதலுக்கான அவசியம் நமது மேட்டிமையைத் தாக்குகிறது - மக்கள் மேட்டிமை நிறைந்தவர்களாய் இருக்கின்றனர்.[7] இரண்டாவது, நாம் காணப்போகின்றபடி, உண்மையான மனந்திரும்புதலுக்கு ஒருவரின் வாழ்வுப் பாணியில் மாற்றம் அவசியமாகிறது - நாம் மாறுவதற்கு விரும்புவதில்லை. ஆகையால், நம்மில் பெரும்பான்மையானவர்கள், மனந்திரும்புதல் என்பதைக் கடினமானதாகக் காண்கின்றோம். "மனிதர்களின் இரட்சிப்புக்கு மாபெரும் தடையாக இருப்பது மனித சித்தத்தின் பிடிவாதம் என்பதாகவே உள்ளது" என்று J. W. மெக்கார்வீ அவர்கள் எழுதினார்.[8]*

**மனந்திரும்புதல் விளக்கப்பட்டது**

*நாம் மேலும் செல்லுவதற்கு முன்னால், மனந்திரும்புதல் என்றால் என்ன என்று நாம் தீர்மானித்தாக வேண்டும். "நான் பாவம் செய்தேன்*

என்று வருத்தத்துடன் இருத்தல்'' என்பதே ''மனந்திரும்புதல்'' என்று தேவபக்தியுள்ள மக்கள்[9] அடிக்கடி விளக்கப்படுத்துகின்றனர். ஒருவர், கடந்த காலப் பாவங்களுக்காக வருத்தப்படாமல் மனந்திரும்ப இயலாது என்பது உண்மையே, ஆனாலும் பாவங்களுக்காக மனம்வருந்துதல் என்பது மிகச் சரியாக மனந்திரும்புதலைப் போன்று இருப்பதில்லை. உண்மையான மனந்திரும்புதல் இன்றியே மனம்வருந்துதல் என்பது சாத்தியமானதாகவே உள்ளது.

பின்வரும் காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள். (உங்களில் சிலர் இதனுடன் உங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுவீர்கள்!) ஒரு தாய், விருந்தினர்களுக்காக சமையல் செய்து, சூடான உணவைத் தட்டுகளில் எடுத்து வைக்கின்றார். அவர் தமது இளைய மகனிடம், "இவற்றைத் தொடாதே!" என்று எச்சரிக்கை செய்கின்றார். புதிதாய்ச் சமைக்கப்பட்ட உணவின் நறுமணம் அதிகமாய்ச் சோதிக்கக் கூடியதாக இருக்கிறது. தாய் சமையலறைக்குத் திரும்புகின்றார். தட்டைக் கையில் எடுத்த பையன் அதில் இருந்த உணவில் பாதியை உண்டுவிடுகின்றான், மீதி உணவுடன் தட்டு அவன் கையில் இருக்கிறது, அவன் முகத்தில் ஒரு குற்ற உணர்வு காணப் படுகிறது. அந்தப் பையன் வருத்தப்படுகின்றானா? ஆம். அவன் பிடிபட்டு விட்டதற்காக வருத்தப்படுகின்றான். அவன் தனது தாய்க்குக் கீழ்ப்படியா மல் போனதால் நடக்கப்போவதற்காக வருத்தப்படுகின்றான். அடுத்த நாளில் தாய் இன்னும் அதிக உணவைச் சமைத்தால் எப்படி இருக்கும்? இந்த வரிசைத் தொடர் மீண்டும் செய்யப்பட வாய்ப்புள்ளதா? அநேகமாக உள்ளது என்றே கூறலாம். ஏன்? ஏனென்றால் அந்தப் பையன் வருத்தப்பட்டான், ஆனால் அவன் மனந்திரும்பவில்லை.

என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். ஒருவர் பாவம் செய்ததற்கு வருத்தப்படுதல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. உண்மையில் இது, நான் "மனந்திரும்புதலின் செய்முறை" என்று அழைக்கும் விஷயத்திற்கு இன்றியமையாததாக உள்ளது. இருப்பினும், வருத்தம் என்பது, பயன்மிக்க விளைவை உண்டாக்க வேண்டுமென்றால், அது ஒரு குறிப்பிட்ட வகையிலான வருத்தமாக இருக்கவேண்டும். 2 கொரிந்தியர் 7:9, 10 இதற்கு ஏற்புடைய ஒரு வசனப்பகுதியாக உள்ளது. பவுல் தமது முந்திய நிருபத்தில் எழுதிய ஒரு கடிந்துகொள்ளுதலைக் குறிப்பிட்டுப் பின்வருமாறு எழுதினார்,

> இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாத படிக்கு, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே. தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக் கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது.

சிலவேளைகளில் மக்கள், தாங்கள் பாவம் செய்ததற்காக வருத்தப்படு கின்றனர், ஆனால் அவர்களின் வருத்தம் "உலகத்திற்கு ஏற்ற வருத்தமாக"

உள்ளது. ஒருவேளை அவர்கள் பிடிபட்டதற்காக அல்லது தங்களது செய்கைகளின் விளைவுகளை அனுபவிப்பதற்காக வருத்தப்படலாம். இருப்பினும், அவர்கள் உண்மையிலேயே மனந்திரும்பவில்லை.[10] "தேவனுக்கேற்ற துக்கம்" என்பது இதற்கு நேரெதிரானதாக உள்ளது. இதை KJV வேதாகமம், "godly sorrow" என்று அழைக்கிறது. "தேவனுக்கேற்ற துக்கம்" என்றால் என்ன? ஜிம்மி ஆலென் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> நான் இதைப் பற்றிச் சரியாகப் புரிந்துகொண்டிருந்தால், இது நாம் தேவனை மனம் புண்படுத்திய காரணத்தால், நமது இருதயங்களுக்குள் வருகிற வருத்தமும் துக்கமுமாக உள்ளது. இதற்காக நாம் தண்டிக்கப்பட்டாலும் இல்லையென்றாலும், நாம் இதற்காக வருந்துகின்றோம். நாம் தேவனுடைய மாபெரும் இருதயத்தை நமது பாதங்களின்கீழ் நசுக்கியுள்ளோம். நாம் அவரைத் தவறாக நடத்தி, அவரது மனதைப் புண்படுத்தினோம் என்று அறிவது நமது இருதயங்களை உடைக்கிறது.[11]

இவ்வகையான துக்கம் "மனந்திரும்புதலை உண்டாக்குகிறது" என்று பவுல் கூறினார் - இது மனந்திரும்புதலாக இருப்பதில்லை, ஆனால் இது மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. பெந்தெகொஸ்தே நாள் அன்று இயேசுவைப் பற்றிப் பேதுரு பிரசங்கித்தபோது (அப். 2:14-36), அவரது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் பலர், "இருதயத்தில் குத்தப்பட்டவர்கள்" ஆயினர் (அப். 2:37); அவர்கள் தங்கள் பாவங்களினால் குற்ற உணர்வடைந்திருந்தனர். அவர்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்ததற்காகத் துக்கப்பட்டனர் என்று நாம் பாதுகாப்பாகக் கூறமுடியும். இருந்தபோதிலும், அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது (அப். 2:38). பாவத்திற்காகத் துக்கப்படுதல் என்பது தன்னிலேயே மனந்திரும்புதலாக இருப்பதில்லை.

"நீங்கள் பாவம் செய்திருப்பதற்காகத் துக்கப்பட்டிருத்தல்" என்று மனந்திரும்புதலை விளக்கப்படுத்தாத, தேவபக்தியுள்ள மக்கள் அநேகமாகப் பின்வரும் விளக்கத்தைக் கருத்தாகத் தெரிவிக்கலாம்: "இது, நீங்கள் தவறாக உள்ளவற்றைச் செய்வதை நிறுத்தி, சரியாக உள்ளவற்றைச் செய்யத் தொடங்குதல் என்று அர்த்தப்படுகிறது."[12] "மனந்திரும்புதலின் செய்முறையில்" வாழ்வில் மாற்றம் என்பது இன்னும் ஒரு அத்தியாவசியமான காரணியாக உள்ளது, ஆனால் வாழ்வில் மாற்றம் என்பது மாத்திரமே மனந்திரும்புதல் ஆகிவிடாது. ஒருவர் தனது வாழ்வை மாற்றியிருந்தும் ஒருக்காலும் மனந்திரும்பாமல் இருந்துவிடச் சாத்தியக்கூறு உள்ளது. தனிநபர் ஒருவர், தனது வாழ்வுப் பாணி சங்கடமுள்ளதாகவும் கனவீனமானதாகவும் உள்ளது என்ற உணர்ந்தறிதலுக்கு வரக்கூடும் - எனவே அவர் தமது வாழ்வை மாற்றிக் கொள்ளத் தீர்மானிக்கக் கூடும் - இது மனந்திரும்புதல் இன்றியே நடைபெறக்கூடும். அவர் தமது தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருந்ததற்காக இருதயத்தில் உணரப்பட்ட துக்கம் என்பதல்ல, ஆனால் மேட்டிமை என்பதே அவரது மாற்றத்திற்கான நோக்கமாக இருக்கிறது.

மீண்டும் என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். வாழ்வில் ஒரு மாற்றம் என்பது முக்கியமானதாக, அத்தியாவசியமானதாகக்கூட உள்ளது. இப்படிப்பட்ட மாற்றம் என்பது உண்மையான மனந்திரும்புதலின் விளைவாக உள்ளது என்று வேதாகமம் போதிக்கிறது. யோவான் ஸ்நானன் தமது உரையைக் கேட்டவர்களிடத்தில், "மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்" என்று கூறினார் (லூக். 3:8அ). அவர்களின் வாழ்வில் மாற்றங்கள் என்பதே அவரது சிந்தையில் இருந்த "கனிகளாக" இருந்தது (லூக். 3:10-14ஐக் காணவும்). இயேசு, "யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள் …" என்று கூறினார் (மத். 12:41). அவர்கள் மனந்திரும்பினார்கள் என்று நாம் எவ்வாறு அறிகின்றோம்? ஏனென்றால் "அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்கள்" (யோனா 3:10).[13] ஒருவர் தமது பாவம் நிறைந்த வழிகளிலிருந்து மனந்திரும்பிவிட்டதாகக் கூறியும் அவர் தமது வாழ்வின் வழிமுறையை மாற்றாதிருக்கிறார் என்பது தெளிவானால், அவர் உண்மையிலேயே மனந்திரும்பினாரா இல்லையா என்று மக்கள் ஆச்சரியப்படுவார்கள்.

ஆம், வாழ்வில் ஒரு மாற்றம் என்பது "மனந்திரும்புதலின் செய்முறைக்கு" அத்தியாவசியமானதாக உள்ளது. உண்மையான மனந்திரும்புதல்தான் அப்படிப்பட்ட ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும்.[14] இருப்பினும், வாழ்வில் ஒரு சீர்திருத்தம் என்பது தன்னிலேயே மனந்திரும்புதலாக இருப்பதில்லை.

எனவே, "மனந்திரும்புதல் என்பது, பாவத்திற்காகத் துக்கப்படுதல் அல்ல மற்றும் அது தவறு செய்தலில் இருந்து திரும்புதலும் அல்ல என்றால், பின் மனந்திரும்புதல் என்றால் என்ன?" சுருக்கமான வார்த்தைப் படிப்பு ஒன்றை இடைச் செருக என்னை அனுமதியுங்கள்:

> "மனந்திரும்புங்கள்" என்பது (metanoeo என்ற) கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டதாக உள்ளது, இவ்வார்த்தையானது "பின்பு" என்பதற்குரிய வார்த்தை (meta) யுடன் "சிந்தனை" என்பதற்குரிய (noema) வார்த்தையை இணைத்துப் பெறப்பட்டதாக உள்ளது. இது "பிந்திய-சிந்தனை" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது மற்றும் இது ஒருவரின் சிந்தித்தலில் மாறுதலைக் குறிக்கிறது. இது மனிதருக்கு நடைமுறைப்படுத்தும்போது, மனந்திரும்புதல் என்பது பொதுவாக, "பாவத்தைப் பற்றி சிந்தையில் ஏற்படும் ஒரு மாற்றம்" - பொதுவாக, பாவம் செய்தலை நிறுத்த முடிவு செய்தல் மற்றும்/அல்லது குறிப்பிட்ட ஒரு பாவத்தைச் செய்தலை நிறுத்துதல் என்பதைக் குறிக்கிறது.[15]

நாம், "மனந்திரும்புதலின் செய்முறையை" மறுகண்ணோட்டமிடுவோம். தேவனுக்கேற்ற துக்கம் மனந்திரும்புதலை உண்டாக்குகிறது, இது மனதில் அல்லது எண்ணப்போக்கில் ஏற்படும் மாற்றமாக உள்ளது. மனதில் ஏற்படும் அந்த மாற்றம் என்பது, வாழ்வில் ஏற்படும் மாற்றமாக வேண்டியது அவசியமாகிறது.[16] இந்தச் செய்முறையை விவரிக்கும் உவமை

யொன்றை இயேசு ஒருமுறை கூறினார்.[17] மத்தேயு 21ல், தனது மகன்களிடத்தில் சென்று, "மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலை செய்" என்று கேட்டுக்கொண்ட ஒரு தந்தையைப் பற்றி இயேசு கூறினார் (வ. 28). அந்த மகன், "மாட்டேன்" என்றான் (வ. 29அ) - ஆனால் பின்பு, "அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்" (வ. 29). KJV வேதாகமம், "afterward he repented, and went" என்று கூறுகிறது. NIV வேதாகமத்தில், "later *he changed his mind* and went" என்றுள்ளது.[18] (சாய்வெழுத்து நான் வலியுறுத்துவது.)[19]

ஆலென் அவர்கள், "கீழ்ப்படிதல்" [அல்லது] "சரணடைதல்" என்பதே மனந்திரும்புதலை மிகச் சிறப்பாகத் தொகுத்துரைக்கும் வார்த்தையாக உள்ளது என்று கருத்துத் தெரிவித்தார்:

> நீங்கள், வாழ்வில் உங்கள் சுயநலமான பேராவல்களுக்கு, விருப்பங்களுக்கு மற்றும் குறிக்கோள்களுக்கு மரிக்கின்றீர்கள். நீங்களாக இருக்கும் ஒவ்வொன்றையும், நீங்கள் உடைமையாகக் கொண்டுள்ள ஒவ்வொன்றையும் மற்றும் எதிர்காலத்தில் எப்போதாவது நீங்களாக இருக்கின்ற ஒவ்வொன்றையும் எடுத்து பலிபீடத்தில் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு ஒப்புக்கொடுக்கின்றீர்கள். நீங்கள், கலகத்திற்கான உங்கள் ஆயுதங்களான கைகளைக் குறுக்காகக் கட்டிக் கொள்கின்றீர்கள். நீங்கள் கர்த்தரிடத்தில் சரணடைகின்றீர்கள்.[20]

## "... எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்"

**உலகளாவிய விளைவுகள்**

நாம் கர்த்தருக்கு சரணடைகின்றோமா என்பது உண்மையிலேயே பொருட்படுத்தப்படுகிறதா? நாம் நமது பாவங்களில் இருந்து மனந்திரும்பாமற்போனால் என்ன நடக்கும்? இயேசுவின் கூற்றில் கடைசிப் பகுதியைக் கண்ணோக்குங்கள்: "நீங்கள் மனந்திரும்பாமற்போனால், எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக். 13:3). "எல்லாரும்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். இயேசுவின் உரையைக் கேட்டவர்கள், தங்களின் பாவங்கள், பிலாத்து கொலை செய்வித்திருந்த கலிலேயர்களின் பாவங்களைப் போல் அவ்வளவு மோசமாயிருந்ததில்லை என்று நினைத்தனர். இருப்பினும் அவர்கள், பாவம் என்பது பாவமாகவே உள்ளது, எல்லாப் பாவமும் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு அவமதிப்பாகவே உள்ளது என்பதை அறிய வேண்டும் என்று இயேசு விரும்பினார்.[21]

"எல்லாரும் பாவம் செய்துள்ளோம்" (ரோமர் 3:23); ஆகையால் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்புதல் என்பது கிறிஸ்தவராகுதலின் இன்றியமையாத ஒரு பகுதியாக உள்ளது (அப். 2:38; 3:19), மற்றும் இது உண்மை நிறைந்த கிறிஸ்தவராக நிலைத்திருத்தலின் இன்றியமையாத ஒரு பகுதியாக உள்ளது (அப். 8:22; 2 கொரி. 7:9, 10; எபி. 6:6).[22] பவுல், "இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" என்று கூறினார் (அப். 17:30).

**ஒழிந்துபோகாத விளைவுகள்**

ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிய மனமின்றி இருந்தால் என்னவாகும்? இயேசு, "நீங்கள் மனந்திரும்பாமற்போனால், எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" என்று தெளிவாகக் கூறினார் (லூக். 13:3, 5). அவர் தமது உரையைக் கேட்டவர்கள்மீது ஒரு கோபுரம் இடிந்து விழும் அல்லது அவர்கள் மனந்திரும்பாமற்போனால் அவர்களைப் பிலாத்து கொலை செய்விப்பான் என்று அவர் கூறினார் என்பதில் நான் சந்தேகப்படுகின்றேன். மனஸ்தாபப்படாதிருத்தலின் ஆவிக்குரிய விளைவுகளையே கர்த்தர் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது நிச்சயம். வேறொரிடத்தில், கிறிஸ்து, "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" என்று கூறினார் (மத். 10:28).

கடந்த காலங்களில், பிரபலமான போதனையொன்று, தேவன் மக்களின் இருதயங்களுக்குள் எதிர்க்க இயலாத ஆவிக்குரிய தூண்டுதல் ஒன்றை அனுப்பி அவர்கள் மனந்திரும்பும்படி கட்டாயப்படுத்துகின்றார் என்று உரிமைகோரியது.[23] இது உண்மையாயிருந்தால், எல்லாரும் மனந் திரும்புவார்கள், ஏனெனில் "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" (அப். 10:34). "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று" அவர் விரும்புகின்றார் (2 பேது. 3:9). எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார், ஆனால் அவ்வாறு செய்வதற்கு முடிவெடுத்தல் நம்முடையதாக உள்ளது. மனந்திரும்புதலில் நம்மை உற்சாகமூட்டுவதற்குக் கர்த்தர் அடிப்படையான இரண்டு ஊக்குவித்தல்களைப் பயன்படுத்துகின்றார்.

முதலாவது, அவரது நற்தன்மை பற்றிய மகிழ்வான வரலாறாக உள்ளது. பவுல், "அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு, பொறுமை, நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ?" என்று எழுதினார் (ரோமர் 2:4). மெக்கார்வீ அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> தேவனை அறிகின்ற, புதிய ஏற்பாட்டின் வெளிப்படுத்துதல்களுக்கு … பழக்கப்பட்ட பாவியொருவர், எப்போதாவது உட்கார்ந்து, தன்னைப் படைத்த தேவனின் நற்தன்மையைக் குறித்து, தமது சிந்தனைத் தொடங்கிய நாள் முதற்கொண்டு தேவன் தன்மீது பொழிந்துள்ள தயாளமான இரக்கங்கள் யாவற்றையும் குறித்து, தனது இரட்சிப்புக்குத் தேவன் ஒரு வழியை அளித்துள்ளார் என்பது குறித்து, தனது பாவங்களை விட்டு திரும்பி கிறிஸ்துவுக்குள் சமாதானம் மற்றும் இளைப்பாறுதல் ஆகியவற்றிற்கு வரும்படி அவர் நித்தமும் வேண்டுகோள் விடுத்தலைக் குறித்து, அவர் நித்தியத்தின் கதவுகளை, நித்தியத்திற்கும் மகிமை, ஆசீர்வாதம் மற்றும் கனம் ஆகியவற்றைத் திறந்து வைத்துள்ளார் என்பதைக் குறித்துச் சிந்தித்துப் பார்த்திருக்கின்றாரா? ஒருவர் தாம் பாவியாயிருப்பதினால் தம்மையே புறக்கணியாமல் எப்போதாவது இவ்விதமாய் சிந்தித்துப்

பார்த்திருக்கின்றாரா?[24]

இருப்பினும், மனிதர்களை மனந்திரும்புதலுக்குக் கொண்டுவர தேவன் தமது கோபாக்கினை என்ற கவலையான சத்தியத்தையும் பயன்படுத்து கின்றார். "தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறது" என்பதைப் பவுல் ரோமர்களுக்குக் கூறியபின்பு, அவர் பின்வருமாறு எழுதினார்,

> உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளுகிறாயே. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார் (ரோமர் 2:5, 6).

இதுவே, கெட்டுப்போவது குறித்து இயேசு தமது உரையைக் கேட்டவர்களுக்கு எச்சரிக்கை செய்தபோது அவர் பயன்படுத்திய ஊக்கு வித்தலாக உள்ளது. சிலர், நரகம் பற்றிப் பேசுவதினால் நமது உரையைக் கேட்பவர்களைக் கீழ்ப்படிதலுக்குள்ளாக்கும்படி "அச்சுறுத்துவதற்கு" நாம் ஒருக்காலும் முயற்சி செய்யக்கூடாது என்று நினைக்கின்றனர். நீங்கள் அவ்வாறு உணர்ந்தால், பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: இயேசு, ஏவுதல் பெற்ற எந்த ஒரு பேச்சாளர் அல்லது எழுத்தாளரையும் விட அதிகமாக நரகத்தைப் பற்றிக் கூறவேண்டியிருந்தது. நமது கீழ்ப்படியாமையின் விளைவுகள் பற்றி நினைப்பதற்கு நாம் விரும்புவதில்லை, ஆனால் நாம் அவற்றை நினைத்தாக வேண்டும்!

## முடிவுரை

பரலோகம் என்பது ஆயத்தமான மக்களுக்கு ஆயத்தமாக்கப்பட்ட இடமாக[25] உள்ளது, நரகமும் அது போன்றதாகவே உள்ளது.[26] சரியாக இப்பொழுதே, நீங்கள் அந்த இரண்டில் ஒரு இடத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் பரலோகத்திற்குச் செல்ல ஆயத்தமாயிருக் கின்றீர்களா? அல்லது உங்கள் இருதயத்திலும் வாழ்விலும் உள்ள பாவங்களி லிருந்து மனந்திரும்ப வேண்டியது அவசியமாக உள்ளதா?

ஒருமுறை இயேசு, ஒரு குறிப்பிட்ட நகரத்தின் மக்களைக் கடிந்துரைத்து, "நியாயத்தீர்ப்பு நாளிலே உனக்கு நேரிடுவதைப் பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்" என்று கூறினார் (மத். 11:24). ஏன்? ஏனென்றால், இயேசுவினால் போதிக்கப்பட்டிருந்தவர்கள் சோதோம் நகரத்தில் இருந்தவர்களைக் காட்டிலும் மாபெரும் வாய்ப்பு களைக் கொண்டிருந்தனர் - இருந்தபோதிலும், அவர்கள் அந்த வாய்ப்புக் களைப் புறக்கணித்திருந்தனர். நீங்கள் உணர்ந்தறியாதிருப்பினும், இன்றைய நாளில் நீங்கள் ஒரு அபாயகரமான இடத்தில் அமர்ந்து இருக்கின்றீர்கள். மனந்திரும்புங்கள் அல்லது கெட்டுப்போங்கள் என்று இயேசு கொடுத்த தெரிந்து கொள்ளுதல்களைக் கற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கின்றீர்கள். நீங்கள் மனந்திரும்பத் தவறினால்

- நீங்கள் கெட்டுப்போனால் - நீங்கள் எவ்வித சாக்குப்போக்கும் இல்லாதிருப்பீர்கள்.

குறிப்பிட்ட ஒரு தனிநபரைக் குறித்து கர்த்தர், "அவள் மனந்திரும்பும் படியாய் அவளுக்குத் தவணை கொடுத்தேன்; தன் வேசிமார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை" என்று கூறினார் (வெளி. 2:21). இப்பொழுதே, தேவன் உங்களுக்கு "மனந்திரும்பத் தவணை" கொடுத்துக் கொண்டிருக்கின்றார். "மனந்திரும்ப விருப்பமில்லாதவன் [ள்]" என்று உங்களைக் குறித்துக் கூறப்படக்கூடாது என்று நான் ஜெபிக்கின்றேன். நீங்கள் பதில் அளிக்க வேண்டியது அவசியமென்றால், இன்றே அதைச் செய்யுங்கள்.[27]

---

குறிப்புகள்

[1]இந்த கலிலேயர்கள் யாராயிருந்தனர் என்ற சாத்தியக்கூறுகளுக்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 6" என்ற புத்தகத்தில் "பொந்தியு பிலாத்து (மற்றும் இயேசுவின் மரணம்)" என்ற பாடத்தில் காணவும். [2]லூக்கா 13:1-5ன் மீதான பொதுவான கலந்துரையாடல் ஒன்றை "கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் "புதிய மற்றும் பழைய விஷயங்கள்" என்ற பாடத்தில் காணவும். [3]இங்கு வேறு இரண்டு வசனங்கள் தரப்படுகின்றன: நீதி. 14:12 மற்றும் 16:25. [4]எடுத்துக்காட்டாக, 1 இரா. 8:47; எசே. 14:6; 18:30ஐக் காணவும். மற்ற உதாரணங்களை ஒரு ஒத்த வாக்கிய அட்டவணைப் புத்தகம் பட்டியலிடும். [5]பிரதான கட்டளையில் லூக். 24:47ன் இடத்திற்கு இப்புத்தகத்தில் "சென்று வருகிறேன்-மற்றும் ஹலோ" என்ற முன்புள்ள பாடத்தை மறு கண்ணோட்டமிடவும். [6]இது, இவர்கள் யாவரும் தேவன் மற்றும் இயேசுவைப் பொறுத்தமட்டில் *சரியான* விசுவாசம் கொண்டுள்ளனர் என்று கூறுவதாக இருப்பதில்லை - ஆனால் குறைந்தபட்சமாக, இவர்கள் தேவன் இருக்கின்றார் என்றும் இயேசு ஏதோ ஒரு வழியில் தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்றும் நம்புகின்றனர். [7]மேட்டிமையின் பாவம் மீதான ஒரு சில வசனப்பகுதிகள் இங்கு தரப்படுகின்றன: நீதி. 16:18; 29:23; 1 யோவா. 2:16. [8]J. W. McGarvey, *Sermons* (Cincinnati: Standard Publishing Co., 1893; reprint, n.d.), 97. [9]"மனந்திரும்புதலை" விளக்கப்படுத்தும்படி தேவபக்தியில்லாத மனிதர்களிடத்தில் நீங்கள் கேட்டால், பலர் எந்த பதிலும் கொண்டிருக்க மாட்டார்கள். [10]பல்வேறு வகையான விவரிப்புகள் பயன்படுத்தப்பட முடியும்: பிடிபட்டதற்காக வருத்தப்படும் மக்களால் சிறைச்சாலைகள் நிறைந்துள்ளன; ஆனால் அவர்கள் வெளியே வரும்போது, அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் குற்ற நடவடிக்கைகளைத் திரும்பவும் செய்வார்கள். மதுபானம் அருந்துபவர்கள் போதையில் தள்ளாடியதற்கு மறுநாள் காலையில் அதற்காகவும் அதன் விளைவான தங்களின் மற்ற செயல்களுக்காகவும் வருத்தப்படுவார்கள் - ஆனால் வாய்ப்பு தானாக வரும்போது அவர்களில் பலர் மீண்டும் மதுபானம் அருந்தத் தொடங்கி விடுவார்கள்.

[11]Jimmy Allen, "Repentance," *What Is Hell Like? and Other Sermons* (Dallas: Christian Publishing Co., 1965), 164. [12]ஒரு சிலர், இவ்விரு விளக்கங்களையும் ஒன்றிணைப்பார்கள்: "மனந்திரும்புதல் என்பது நீங்கள் பாவம் செய்துள்ளதற்காக வருந்துதல், அதன் மூலம் நீங்கள் பாவம் செய்வதை நிறுத்தி சரியாக வாழத்தொடங்குதல் என்று அர்த்தப்படுகிறது." [13]மனந்திரும்புதலைத் தங்கள் நடவடிக்கைகளினால் செயல்விளக்கப்படுத்தும் மக்களைப் பற்றிய மற்ற

உதாரணங்கள் தரப்பட முடியும் - இவ்வுதாரணங்களில் சகேயு, பிலிப்பியச் சிறையதிகாரி ஆகியோர் உள்ளடங்குவர். [14]வாழ்வில் அவசியமான மாற்றத்தின் ஒரு பகுதியாக, இழப்பீடு செய்தல் என்பது கேட்டுக் கொள்ளப்படலாம் என்பதை நீங்கள் வலியுறுத்த விரும்பலாம். எடுத்துக்காட்டாக, ஒரு மனிதர் ஒரு பன்றியைத் திருடிவிட்டு, பின்பு மனந்திரும்பினார் என்றால், அவர் அந்தப் பன்றியை அதன் உரிமையாளரிடம் எடுத்துச் செல்லுவார். அந்தப் பன்றியானது ஏற்கனவே உண்ணப்பட்டிருந்தால், அவர் அந்தப் பன்றியின் உரிமையாளருக்குத் திருப்பிச் செலுத்துவதற்கு ஏதாவது ஒரு வழி வகையைக் கண்டறிவார். [15]"அப். நடபடிகள், 1" என்ற இன்றைக்கான சத்தியம் புத்தகத்தின் சொற்பொருள் அகராதியில் இருந்து தழுவியமைக்கப்பட்டது. அந்தச் சொற்பொருள் அகராதியில் "மனந்திரும்புதல்" என்ற பகுதி முழுவதையும் ஆராய்ந்து பார்க்க நீங்கள் விரும்பலாம். [16]சட்டப்படி, வாழ்வின் ஒரு *முழுமாற்றம்* மனந்திரும்புதலின் வேளையில் நடைபெறுவதில்லை, ஆனால் சில மாற்றங்கள் தெளிவாக இருக்கவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். ஒருவர் தம் வாழ்நாள் முழுவதிலும் கர்த்தருக்குள் வளர வேண்டும். [17]வேதாகமத்தில் உள்ள மற்ற விவரிப்புகளும் பயன்படுத்தப்படக்கூடும் (உதாரணமாக, ஊதாரி மகன் பற்றிய உவமை [லூக். 15:17, 18ஐக் காணவும்]). [18]"Regretted" (NASB), "repented" (KJV) மற்றும் "changed his mind" (NIV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ''மனந்திரும்புதல்'' என்பதற்கான வழக்கமான வார்த்தையாக இராமல் அது தொடர்பான ஒரு வார்த்தையாக உள்ளது. [19]சில பிரசங்கியார்கள் மனந்திரும்புதல் என்பதைப் பின்வருமாறு விவரிக்கின்றனர்: அவர்கள் ஒரு வழியில் நடந்து, "எங்கள் வாழ்வின் தொடக்கத்தில், நாம் 'கணக்கு ஒப்புவிக்கும் வயதை' அடைவதற்கு முன்பாக, நாம் தேவனை நோக்கி நடக்கின்றோம்" என்று கூறுகின்றனர். பின்பு அவர்கள் நின்று, 180 பாகைகள் திரும்பி, "ஆனால் பின்பு நாம் பாவம் செய்யத் தொடங்கி, தேவனை விட்டுத் திரும்பிய வயதை அடைந்தோம்" என்று கூறுகின்றனர். அவர்கள் அந்த மறுதிசையில் சற்று தூரம் நடந்து, பொதுவாக மக்களின் வாழ்வில் உள்ள பாவத்தைப் பற்றிப் பேசுகின்றனர். அவர்கள் நின்று, "ஆனால் நம்மில் சிலர் நமது பாவங்களில் இருந்து மனந்திரும்புகின்றோம் என்முர்கள். அது, நாம் நமது வழிகளில் உள்ள தவறைக் கண்டு மாற்றிக் கொள்வது என்று தீர்மானிக்கின்றோம் என்பதாக அர்த்தப்படுகிறது. எனவே நாம் முற்றிலுமாக முகத்தைத் திருப்பி - தேவனிடம் திரும்புகின்றோம் என்றாகிறது" எனக் கூறுகின்றனர். அவர்கள் சுற்றித் திரும்பி முதலில் சென்று கொண்டிருந்த திசையில் முன்னோக்கி நடக்கத் தொடங்குகின்றனர். [20]Allen, 168.

[21]பூமிக்குரிய விளைவுகளில், பாவங்கள் மாறுபடுகின்றன, மற்றும் அவற்றை உண்டாக்குகின்ற உந்துதல்கள் குறித்தும் அவை வேறுபடுகின்றன; ஆனால் "பாவம் என்பது பாவமாகவே உள்ளது" என்ற அடிப்படை சத்தியம் நிலைநிற்கிறது. [22]இது கிறிஸ்தவராவதற்குரிய நிபந்தனை பற்றியும் மீளக்கட்டியெழுப்பப் படுதல் பற்றிய நிபந்தனை பற்றியும் - இவை ஒவ்வொன்றிலும் மனந்திரும்புதல் செயல்படும் இடம் பற்றியும் - பேசுவதற்கான ஒரு நல்ல இடமாக உள்ளது. [23]இந்த உபதேசமானது, தேவன் மனந்திரும்புதலை அருளுதல் அல்லது கொடுத்தல் பற்றிப் பேசுகிற இரண்டு வேத வசனப்பகுதிகளின் அடிப்படையில் அமைந்துள்ளது (அப். 5:30, 31; 11:18). தேவன் மனந்திரும்புதலைக் "கொடுக்கின் றார்" அதில் (1) அவர் நமக்கு மனந்திரும்ப வாய்ப்பளிக்கின்றார் மற்றும் (2) அவர் நமக்கு மனந்திரும்புவதற்கான ஊக்கத்தையும் அளிக்கின்றார். [24]McGarvey, 103. [25]இயேசு தமது சீஷர்களிடம், அவர்களுக்கு ஒரு இடத்தை ஆயத்தம் செய்வதற்குத் தாம் செல்லுவதாகக் கூறினார் (யோவா. 14:2). [26]நரகம் என்பது பிசாசுக்காகவும் அவனது தூதர்களுக்காகவும் ''ஆயத்தம்

*பண்ணப்பட்டு'' இருக்கிறது, ஆனால் பிசாசைப் பின்பற்றுகின்ற மக்களும் அங்கு செல்லுவார்கள் (மத். 25:41). [27]கிறிஸ்தவராவது எப்படி (அப். 2:38) மற்றும் தேவனுடைய பிள்ளையாயிருந்தும் தவறு செய்கின்றவர் மீளக்கட்டியெழுப்பப்படக்கூடுவது எப்படி (அப். 8:22) என்பவற்றைப் பற்றிய விவரத்தை இந்தப் பிரசங்கத்தில் இதற்குமுன் நீங்கள் தராதிருந்தால், இப்போது அதைச் செய்யலாம். மனந்திரும்புதல் மாத்திரமே போதுமானதல்ல - அது தேவனுடைய சித்தத்தைச் செய்யும்படி செயல்பட காரணமாக வேண்டும் என்பதைச் சுட்டிக்காண்பிக்க நீங்கள் விரும்பலாம்* (Allen, 169-70).